
# நிஜமாகும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள்



# நிஜமாகும்

# தேவனுடைய வாக்குத்தத்தங்கள்

# நிஜமாகும்
# தேவனுடைய
# வாக்குத்தத்தங்கள்



# முன்னுரை

பாவத்தினால் ஜீவனை இழந்த மனித இனத்தை மரணத்திலிருந்து விடுவிப்பதற்கான தேவனுடைய திட்டத்தின் வெளிப்பாடே **வேதாகமம்.** சிருஷ்டிகரின் சொந்த ஜனத்திற்கு ஒரு அடிப்படை வழிகாட்டியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. பொதுவான உலகத்தின் மனுக்குலத்திற்கு இது ஒரு சாட்சியாகவும் தேவனால் பயன்படுத்தப்படுகிறது. இதன் நீதியுள்ள நிலையை எந்தளவு ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிகிறார்களோ, அந்தளவு வல்லமையுள்ள நன்மையான காரியங்களைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

வேதாகமத்தைக் கற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு சிறுபிராயமே ஏற்றது என்று வேதாகமம் போதித்தாலும், சிறுவர்கள் அதிலுள்ள செய்திகளை முழுமையாகப் புரிந்துகொள்ளுவதற்கு வேதாகமம் எளிமையாக எழுதப்படவில்லை. வேதாகமத்திலுள்ள போதனைகளையும், கதைகளையும் புரிந்துகொள்ளும்படியாக அவைகளை எளிய நடையில் கொடுப்பதே, "நிஜமாகும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள்" என்ற புத்தகத்தின் அடிப்படை நோக்கமாகும்.

மேலும், இந்த புத்தகம் குழந்தைகளுக்கான மற்ற வேதாகம கதை புத்தகங்களைக்காட்டிலும் மிக அருமையானது என்பதை நிச்சயமாக நிரூபிக்கும் என்றும் வெளியீட்டாளர்கள் நம்புகிறார்கள். மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டதற்கு முன்னிருந்த காலம் துவங்கி, பத்மு தீவில் அப்போஸ்தலர் யோவான் கண்ட தரிசனம்வரைக்கும், வேதாகமத்திலுள்ள எல்லா கதைகளையும் இந்த புத்தகம் கொண்டுள்ளது. ஆனால், ஒரு முக்கியமான நோக்கத்திற்காக இந்த கதைகள் வேதாகமத்தில் காணப்படுகிறது. அவைகளுக்குள் மிகப்பெரிய அளவில் தொலைந்துபோன மனுக்குலத்தின் சிறப்பமைப்புக்காக தேவனுடைய மிக முக்கியமான இரட்சிப்பின் திட்டத்தின் கதை பின்னிப்பிணையப்பட்டுள்ளது. ஆகவே, நாம் வசனங்களில் காணப்படும் சம்பவங்களை இக்கருத்துக்களோடு முடிந்தவரையில் தொடர்புபடுத்தியுள்ளோம்.

"நிஜமாகும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள்" என்ற புத்தகத்திற்கு அதன் பெயரை தேர்வு செய்வதற்கான காரணத்தை இது விவரிக்கிறது. இந்த வாக்குத்தத்தங்களில் தேவன் அவருடைய திட்டங்களை வெளிப்படுத்தி, குழந்தைகளுக்கு வேதாகமத்தின் உண்மையான மதிப்பையும், அதின் திட்டத்தைப் புரிந்துகொள்வதற்கான வழிகளையும் வெளிப்படுத்துகிறார். மேலும், இதில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேற்றப்படும் என்று உறுதியளிக்கப்படுகிறது. பயமும், வேதனைகளுமுள்ள இந்நாட்களில், மனித இனத்தை அழிப்பதற்கு பயமுறுத்தும் அழிவுக்குரிய கருவிகளை வடிவமைக்கக்கூடிய சிறந்த மனித ஞானத்தைக்காட்டிலும் தேவன் முழுமனுக்குலத்தைப் பாதுகாத்து ஆசீர்வதிப்பதற்கான அவருடைய தோல்வியடையாத அன்பின் திட்டத்தை பிள்ளைகள் கற்றுக்கொள்வது எப்படிப்பட்ட உத்தரவாதமாய் இருக்கும்?

வேதாகமத்தில் சொல்லப்பட்ட கதையே இந்த புத்தகத்தின் முக்கிய அம்சமாகும் - பகுதி 1, பழைய ஏற்பாட்டைப்பற்றியும்; பகுதி 2, புதிய ஏற்பாட்டைப்பற்றியும் பேசுகிறது. தேவைப்படும்வகையில் வேதாகமத்தைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு கதைகளும் சுருக்கமாய் கொடுக்கப்பட்டுள்ளது. பிஞ்சு மனதில் அதிகமான வரலாற்றை திணிக்காமலும், வேதாகமத்தின் பல புத்தகங்களின் சாராம்சத்தின் அதிகமான விவரங்களைக் கொடுக்கவில்லையென்றாலும், இந்த புத்தகத்தில் சொல்லப்பட்ட கதைகள் வசனங்களின் பொதுவான கருத்துக்களை குழந்தைகள் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும் என நம்புகிறோம். மேலும், சில வருஷங்களுக்குப்பின் பரிசுத்தமான வார்த்தைகளின் ஆழமான விவரங்களைப் புரிந்துகொள்ளுவதற்கு இது ஒரு படியாக இருக்கும் என்றும் நம்புகிறோம்.

தேவனுடைய வார்த்தைகளை தங்களுடைய பிள்ளைகளுக்குக் கற்பிக்கக்கூடிய ஒரு சிறப்புரிமையை கிறிஸ்தவ பெற்றோருக்கு நாம் நினைவுபடுத்த வேண்டிய அவசியமில்லை. பொறுப்புகளையும், இப்படிப்பட்ட உரிமைகளையும் தட்டிக்கழிப்பது, "நிஜமாகும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள்" என்ற இப்புத்தகத்தின் நோக்கமல்ல. மாறாக வேதாகமத்தையும், அதின் தெய்வீக ஆசிரியரையும் நேசிக்கவும், அவரைக்குறித்து அறிந்துகொள்ளவும் இந்த புத்தகம் குழந்தைகளை அதிகமாக ஊக்குவிக்க உதவி செய்யும்.

"நிஜமாகும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள்" என்ற புத்தகத்தை ஆயத்தம்செய்து வெளியிடுவதற்கு பங்குபெற்ற ஒவ்வொருவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியாய் இருந்தது. இது, அநேக கரங்களும், இருதயங்களும் ஒன்றுகூடி எடுக்கப்பட்ட முயற்சியாகும். இவ்வனைத்து முயற்சிகளோடும் தேவனுடைய நாமம் மகிமைக்கென்று அவருடைய ஆசீர்வாதங்களுக்காக ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது. நம்முடைய குழந்தைகளுக்கும் அல்லது மற்ற குழந்தைகளுக்கும் மேலும், இப்புத்தகத்தைப் பயன்படுத்தி சில கட்டளைகளைக்கொடுக்க விரும்பும் யாவருக்கும் இதே ஜெபத்தோடு இப்புத்தகத்தை அனுப்புகிறோம்.

# பொருளடக்கம்



1. நம்மை சிருஷ்டித்த தேவன் ........................................ 1
2. தோட்டத்தில் ஒரு வீட்டில் ........................................ 5
3. முதலில் பிறந்த இரண்டு சகோதரர்கள் ........................ 9
4. முதலில் கப்பல் கட்டியவர் ........................................ 14
5. பாபேலின் கோபுரம் ............................................... 18
6. ஆபிரகாம், தேவனுடைய சிநேகிதர் ............................ 20
7. ஒரு மணவாட்டி தேர்வு செய்யப்பட்டாள் ........................ 26
8. ரெபெக்காளின் இரட்டை பிள்ளைகள் ............................ 30
9. சொப்பனம் கண்ட ஒரு சிறுவன் .................................. 33
10. ஒரு அடிமை ஆளுநர் ஆனார் .................................... 36
11. சொப்பனங்கள் நிஜமாகும்பொழுது ................................ 40
12. ஒரு பெட்டகத்தில் காணப்பட்ட ஒரு சிறு குழந்தை .......... 45
13. தேவன் மோசேயோடு பேசினார் .................................. 48
14. தேவன் தம்முடைய ஜனங்களை விடுவித்தார் .................. 52
15. எகிப்திலிருந்த கடைசி இரவு ..................................... 57
16. சிவந்த சமுத்திரத்தை கடந்து செல்லுதல் ...................... 60
17. தேவன் தம்முடைய ஜனங்களுக்கு பிரமாணங்களைக் கொடுத்தார் ....... 63
18. தேவனுக்காக ஒரு வீட்டைக் கட்டுதல் ........................... 66
19. தேசத்தை வேவு பார்த்தல் ........................................ 72
20. யோர்தான் நதியை கடந்து செல்லுதல் ........................... 75
21. மிகப் பெரியதாக இருந்த சேனை ................................. 79
22. தேவனுக்காக கொடுக்கப்பட்ட ஒரு சிறுவன் .................... 83
23. சிறுவனாகிய ஒரு மேய்ப்பன் இராஜாவாக்கப்பட்டான் .......... 87
24. ஒரு இராஜா மதியீனன் ஆனார் ................................... 93
25. ஞானமுள்ள மனுஷன் மற்றும் ஒரு இராஜா ........................ 96
26. பதிலளிக்கப்பட்ட ஒரு தீர்க்கதரிசியின் ஜெபங்கள் ............ 100
27. மீண்டும் ஜீவனுக்குக் கொண்டு வரப்பட்ட ஒரு குழந்தை ........ 105
28. புல்லை புசித்த ஒரு இராஜா ....................................... 108
29. ஒரு அக்கினி சூளை ................................................ 111
30. சிங்கங்களின் கெபியில் ............................................ 115
31. ஒரு மீனின் வயிற்றில் .............................................. 118

தேவனுடைய புத்தகத்தின் கதை - பகுதி 1 ........................ 121

32. மிக முக்கியமான குழந்தை . . . . . . . . . . 133
33. இயேசுவுக்கு வழியை ஆயத்தம் செய்தல் . . . . . . . . . . 137
34. இயேசு தவறு செய்யார் . . . . . . . . . . 139
35. இயேசுவின் வல்லமையுள்ள கிரியைகள் . . . . . . . . . . 141
36. தேவ ஆட்டுக்குட்டி . . . . . . . . . . 144
37. மிகப்பெரிய வெற்றி . . . . . . . . . . 149
38. வருகிற தேவனுடைய வல்லமை . . . . . . . . . . 153
39. ஒரு முடவன் சொஸ்தமாக்கப்பட்டான் . . . . . . . . . . 155
40. பொய் என்ற பாவம் . . . . . . . . . . 157
41. இளைஞனான ஒரு விசுவாசி கல்லெறியப்பட்டார் . . . . . . . . . . 160
42. ஒரு பரிசேயன் தன்னுடைய மனதை மாற்றிக் கொண்டார் . . . . . . . . . . 162
43. பேதுருவின் விநோதமான சொப்பனம் . . . . . . . . . . 165
44. மார்ஸ் மேடையில் பிரசங்கித்த பவுல் . . . . . . . . . . 168
45. எருசலேமிலிருந்து ரோமாபுரிவரைக்கும் . . . . . . . . . . 171
46. ஜீவ விருட்சங்களை யோவான் காண்கிறார் . . . . . . . . . . 178
தேவனுடைய புத்தகத்தின் கதை - பகுதி 2 . . . . . . . . . . 184

# பழைய ஏற்பாட்டு கதைகள்

# பழைய ஏற்பாட்டின் தேசங்கள்



# 1. நம்மை சிருஷ்டித்த தேவன்



**தங்களுக்குத்** தெரியாத ஏராளமான காரியங்களுண்டு என்ற ஒரு விஷயத்தை எல்லா பிள்ளைகளும் அறிந்திருக்க வேண்டும். சில வளர்ச்சியடைந்தவர்களின் விஷயத்திலும், இது உண்மையாகக் காணப்படுகிறது. ஆனால், குழந்தைகளானாலும் சரி, வளர்ச்சியடைந்தவர்களானாலும் சரி, தாங்கள் சில விஷயத்தைப் புரிந்துகொள்ளவில்லை என்பதால், அவைகள் உண்மையல்லவென்று விட்டுவிடக்கூடாது. வானொலி பெட்டியிலுள்ள ஒரு நுணுக்கமான காரியத்தை எடுத்துக்கொள்ளலாம் - இங்கிலாந்தில், வானொலி பெட்டியை, கம்பியில்லாத் தந்தி (**wireless**) என்று அழைக்கிறார்கள். இது ஒரு நல்ல பெயராகும். ஏனெனில், வீட்டிலிருக்கும் வானொலி பெட்டிக்கும், தகவல்களைத் தொகுத்து வழங்கும் மையங்களுக்கும் இடையில் எந்தவிதமான தொடர்புடைய கம்பிகளும் காணப்படாததினால் இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது.

நாம் அறிந்திருக்கிறபடி, நம்முடைய வீடுகளில் அமர்ந்து, விதவிதமான நிகழ்ச்சிகளைக் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். குழந்தைகளின் நிகழ்ச்சிகளில் அவர்கள் பாடுவதையும், இசைக்கருவிகளை வாசிப்பதையும் கேட்கிறோம். வானொலி பெட்டியிலிருந்து வரும் இந்த அருமையான இசையைக் கேட்கும்பொழுது, யாரோ ஒருவர் நம்முடைய வீட்டில் அமர்ந்து பாடுவதைப்போல் தோன்றும். அதைபோல, தொலைக்காட்சி பெட்டிகளில் பாடுபவர்களை நேரடியாக தரிசிக்கலாம். இது எவ்வளவு அற்புதமானது! வெகுதொலைவில் உள்ளவர்கள் மிகச் சத்தமாகப் பாடுவதினால் நம்முடைய வீட்டில் அவைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்று எண்ணிவிடக்கூடாது. அவர்கள் மிகச் சத்தமாகப் பாடுவதில்லை. மாறாக, பல மைல்களுக்கு அப்பாற்பட்டு பாடக்கூடிய பாடல்கள், காற்றின் வழியாக நம்மை வந்து சேருகிறது.

"இவைகள் எவ்வாறு நடக்கின்றது? காற்றின் வழியாக இசைகளும், பாடல்களும் எப்படி வருகிறது? எனக்கு விவரமாகச் சொல்லுங்கள்" என்று நீங்கள் என்னைக் கேட்பதாக கற்பனை செய்துகொள்ளுகிறேன்.

ஆம், இதைக்குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது. ஆகவே, இவைகளை நான் விவரிக்க முடியாது. நம்முடைய வீடுகளிலுள்ள வானொலி பெட்டியை தயாரித்தவர்களும், அதின் தொலைதொடர்பு மையங்களை உருவாக்கினவர்கள் மட்டுமே மிகத் தெளிவாக இவைகளை விவரிக்க முடியும். தொலைக்காட்சி பெட்டியும், வானொலி பெட்டியும் உண்மையான காரியங்களாக நம்மை மகிழ்வித்தாலும், அவைகளைக்குறித்து விவரம் சொல்ல முடியவில்லை. ஆனாலும், யாரோ ஒருவர் இவைகளை உருவாக்கக் காரணமாயிருக்கிறார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம்.

அதுபோல, நம்மால் விவரிக்கமுடியாத பல காரியங்கள் உண்டு. இரவில் வானத்தை அண்ணார்ந்து பார்க்கும்பொழுது, நூற்றுக்கணக்கான அழகான நட்சத்திரங்கள் மின்னுவதைப் பார்க்கலாம். இவைகள் மிகப் பிரகாசமாய் மின்னுவதைப் பார்க்கும்பொழுது, அவைகளை எட்டி நாம் பிடித்துவிடுவதற்கு ஆசைப்பட்டாலும், அது நம்மால் கூடாதென்பதை நாம் அறிந்திருக்கிறோம். சில நேரங்களில் வானத்தில் பறக்கும் விமானங்களைப் பார்க்கும்பொழுது, அவைகள் பறவைகள்போல தோன்றும். அதைவிட தொலைவில் நட்சத்திரங்கள் காணப்படுகின்றது.

இந்த நட்சத்திரங்கள் ஒரு தீப்பொறி போல் தோன்றினாலும், நாம் வாழக்கூடிய பூமியைக்காட்டிலும் பலமடங்கு பெரிதான உலகங்களாய் இருக்கின்றது. அவைகள், வெகுதூரத்தில் இருப்பதினால் மிகச் சிறியதாக தோற்றமளிக்கிறது. இப்பொழுது, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று எனக்கு தெரியும்! இந்த வானத்தில், இந்த நட்சத்திரங்களை அற்புதமாக வைத்தவர் யார்? ஒருவேளை, உயரமான ஒரு மனிதன் ஒரு நீண்ட ஏணியின் உதவியினால் இவைகளை வைத்திருப்பானோ என்று நீங்கள் சிந்திக்கலாம். ஆனால், அது உண்மையல்ல. இந்த பூமியில் ஒருவராலும் நட்சத்திரங்களிடம் கிட்டிச்சேர முடியாது, அல்லது வானத்தில் அவைகளைப் பொருத்தவும் முடியாது. "இப்படியிருக்க, இந்த நட்சத்திரங்கள் எப்படி வந்தது என்று கேட்கலாம்?"

அன்பான பிள்ளைகளே, இந்த கேள்விக்கான சரியான விடையை அறிந்துகொள்வது மிக அவசியம். இவை அனைத்தும் தேவனால் ஏற்படுத்தப்பட்டது!

"யார் இந்த தேவன்? அவர் எப்படி இருப்பார்?" என்று நீங்கள் என்னை கேட்கலாம்.

தேவன் யார் என்று வேதாகமம் கூறுகிறது. நட்சத்திரங்கள் மட்டுமல்ல, இந்த பூமியையும், அதிலுள்ள அற்புதமான காரியங்களையும், நம்மைச் சுற்றி காணப்படும் இயற்கையையும் சிருஷ்டித்தவர் அவரே. வேதாகமம் அவரை சிருஷ்டிகர் என்று அழைக்கிறது. ஆனால், தேவன் எப்படி இருப்பார் என்று வேதாகமம் நமக்கு கூறுவதில்லை. மேலும், இந்த பூமியில் ஒருவரும் அவரை கண்டதுமில்லை.

ஒரு வானொலி பெட்டியை நம்மால் உருவாக்க முடியாததுபோல, இந்த நட்சத்திரங்களையும் நம்மால் உருவாக்க முடியாதென்று அறிந்திருக்கிறோம். ஆனால், வானொலி பெட்டியைப்பற்றி அறிந்தவர் அவைகளை உருவாக்குவதுபோல, இந்த பூமியின்மேல் ஒருவராலும் உருவாக்கமுடியாத நட்சத்திரங்களை ஒருவர் உருவாக்கியிருக்க வேண்டும். அவர், தேவன் என்று வேதாகமம் கூறுகின்றது. மேலும், இந்த வேதாகமம் உண்மை என்று நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே, நாம் இரண்டு முக்கியமான காரியங்களை இப்பொழுது நினைவில்கொள்ள வேண்டும்.

நாம் அறிந்துகொண்டு நினைவில் வைப்பதற்கு அநேக காரியங்கள் உண்டு. அற்புதமான கண்களைப் பெற்றிருந்தாலும் அனைத்தையும் நாம் காணமுடிவதில்லை. அழகான படங்களைக்கொண்ட ஒரு புத்தகத்தை நீங்கள் கையில் வைத்திருக்கலாம். அவைகளிலுள்ள பக்கங்களை ஒவ்வொன்றாக திருப்பிப் பார்க்கையில், அதிலுள்ள படங்களைக் கண்டு மகிழலாம். ஆனால், ஒருவர் அந்த புத்தகத்தை திறந்தபடியே வீதிக்கு எடுத்துச் சென்றால், நீங்கள் இருக்கும் இடத்திலிருந்து அந்த படங்களைக் காண முயற்சித்தாலும் அவைகளை உங்களால் காணமுடியாது. தொலை தூரத்திலுள்ள அதே படங்களைக் காணும்படியாக உங்கள் கண்கள் வடிவமைக்கப்படவில்லை. ஆனால், அந்த படங்கள் உங்கள் கையில் இருந்தாலும் சரி, வீதிகளில் இருந்தாலும் சரி, அவைகள் மிக அழகானவைகள். அந்த படங்கள் உங்கள் கரங்களில் இருந்தால்மட்டுமே நீங்கள் அதை கண்டு மகிழலாம்.

ஆம், நம்முடைய கண்கள் தேவனைக் காண முடியாது. நம்முடைய கண்கள் அதற்காக வடிவமைக்கப்படவில்லை. தேவன் நம்மைக்காட்டிலும் வேறுபட்டவராய் (வித்தியாசமாக) இருக்கிறார். நாம் அவர் அருகாமையில் இருந்தாலும்கூட, அவரை நாம் காணமுடியாத அளவிற்கு வித்தியாசமானவராய் இருக்கிறார். அவர் இப்படிப்பட்டவராய் இருப்பதினால், அவரால் நட்சத்திரங்கள்போன்ற காரியங்களை சிருஷ்டிக்க முடிந்தது. ஆனால், தேவன் உண்மையானவர். இதுவரைக்கும் ஒருவரும் காணக்கூடாத மிகுந்த வல்லமையும், அற்புதமும் நிறைந்தவராய் இருக்கிறார்.

வேதாகமத்தில் தூதர்கள் என்று அழைக்கப்படும் அற்புதமான ஜீவிகளையும் அவர் சிருஷ்டித்திருக்கிறார். அவர்களும் நம்மைக்காட்டிலும் வேறுபட்டவர்கள். அவர்கள் பரலோக ஜீவிகளானதால் நம்முடைய கண்களுக்கு அவர்கள் புலப்படுவதில்லை.

இந்த பரலோக ஜீவிகளில் தேவன் பிரதானமாக ஒரு தூதனை சிருஷ்டித்தார். அந்த தூதன் எவ்வளவு முக்கியமானவர் என்று, இந்த பெயர் குறிப்பிடுகின்றது. அவரை, "தேவனுடைய குமாரன்" என்று வேதாகமம் அழைக்கிறது. தேவனுடைய அன்பான இந்த குமாரன், "தேவனுடைய சர்வ சிருஷ்டிக்கும் துவக்கமானவர்" என்று வேதாகமம் விவரிக்கின்றது. இவரே சிருஷ்டிக்கப்பட்ட முதலாவது பரலோக ஜீவி என்று பொருள்படுகிறது. அதற்குபின் இந்த அற்புதமான பரலோக குமாரன் தம்முடைய தேவனோடு இணைந்து செயல்பட்டார் என்று வேதாகமம் கற்பிக்கிறது. உண்மையில், சகலமும் இந்த குமாரனால் செய்யப்பட்டது. ஆயினும், சகலத்தையும் தேவனுக்காக அவர் செய்திருந்தபோதிலும், இவைகளை செய்வதற்கான வல்லமையையும், ஞானத்தையும் தேவன் அவருக்குக் கொடுத்திருந்தார்.

ஒரு வீட்டைக்கட்டுவதற்கு நான் அறியாதபோதிலும், நான் ஒருவரிடம் வீட்டைக்கட்டுவதற்காக உதவி வேண்டினால், நான் எவ்வாறு கட்ட வேண்டுமென்பதை அவர் எனக்கு கற்பிப்பார். மேலும், வீட்டைக்கட்டுவதற்குத் தேவையான பொருட்களைப்பற்றியும் அவர் கூறுவார். அதற்குப் பின்பே, என்னால் இந்த வீட்டைக்கட்ட முடியும். அதுபோலவே, தேவனுடைய அற்புதமான குமாரனும் இந்த காரியங்களைச் செய்தார். சிருஷ்டிப்புக்குத் தேவையான சகல காரியங்களையும், கிரியை செய்வதற்கு தேவையான ஞானத்தையும் தேவன் தம்முடைய குமாரனுக்குக் கொடுத்தார்.

உண்மையில் தேவனுடைய குமாரன் இவைகளைக்கொண்டு அநேக காரியங்களை நடப்பித்தார்! சகல நட்சத்திரங்களையும், தூதர்களையும் அவரே சிருஷ்டித்தார். இந்த தூதர்களின் மத்தியில் பேரழகுகொண்ட லூசிபர் என்ற தூதனையும் சிருஷ்டித்தார். தேவனுடைய குமாரனோடு இந்த லூசிபர் மற்றும் எல்லா தூதர்களும் தேவனுடைய அற்புதமான கிரியைகளைக் கண்டு மகிழ்ந்தார்கள் என்று வேதாகமம் கூறுகின்றது. இதுவரைக்கும் நாம் ஒருபோதும் கேட்டிராத அளவுக்கு மிக அற்புதமான இசைகள் மீட்டிருக்க வேண்டும்.

ஆனால், இந்த கதைக்கு ஒரு சோகமானபகுதி இருப்பதை அறியீர்களா? லூசிபர் என்ற தூதன் தனக்குள் பொறாமைகொண்டு பெருமை நிறைந்தவனானான். பொறாமையும், பெருமையும் ஒரு கொடூரமான காரியமல்லவா! ஒருபோதும் நீங்கள் யாவரும் அவ்வழியில் செல்லமாட்டீர்கள் என்று நம்புகிறேன். உங்களைக்காட்டிலும் மற்ற பிள்ளைகளிடத்தில் அதிகமான நன்மைகளைக் காண்பீர்களானால் சந்தோஷப்படுங்கள். "அவர்களிடம் நல்ல காரியங்கள் உண்டென்றெண்ணி மகிழுகிறேன்" என்று உங்களுக்குள் சொல்லிக்கொள்ளுங்கள். இதை சரியானமுறையில் சிந்திப்பீர்களானால், அவர்களைப்போல் நீங்களும் மகிழ்ச்சியாயிருக்கலாம்.

நான் சரியாக சொல்லியிருக்கிறேனா என்பதை தயவுசெய்து முயற்சித்துப்பாருங்கள்!

ஆனால், லூசிபர் அவ்வழியில் சிந்திக்கவில்லை. தேவனுடைய குமாரன் பெற்றிருந்த பல கிருபைகளை அவன் பெறவில்லை. ஆகவே, தேவன் அவனிடம் பட்சபாதமுள்ளவராக நடந்து கொண்டார் என்ற முடிவுக்கு வந்தான். இதற்காக அவன் தேவன்மேல் பழி சுமத்தி அவரை எதிர்க்கத்துவங்கினான். அதுபோல, பிள்ளைகளும் பொறாமைகொண்டால் அவர்கள் துக்கிப்பார்கள். மேலும், அதன்விளைவாக அதிகமாகக் கோபப்பட்டு அழுவார்கள்.

ஆம், லூசிபர் தேவனுக்கு எதிராக செயல்பட்டு, இந்நாள்வரைக்கும் அவருடைய எதிரியாகக் காணப்படுகின்றான். இவனைக்குறித்து வேதாகமம் அநேக காரியங்களைக் கூறுவதினால், இவனைக்குறித்து நீங்களும் அறிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்த பூமியின்மேல் இந்நாள்வரைக்கும் அதிகமதிகமான உபத்திரவங்களுக்கு

இவன் காரணமானவன். ஆனால், அவனைக்குறித்தும், அவன் கிரியைகளைக்குறித்தும் நாம் அறிந்துகொண்டால், நமக்குள் அதிகமான உபத்திரவங்களை அவன் கொடுக்க முடியாது. தேவனுக்கு எதிராக லூசிபர் கிரியை செய்ய துவங்கினபோது, அவன் பெயர் மாற்றப்பட்டது. அவன் சாத்தான் என்று அழைக்கப்பட்டான். மேலும், வேதாகமம் அவனை பிசாசு என்றும் அழைக்கின்றது.

எல்லா தூதர்களும், சகல நட்சத்திரங்களும், சூரிய சந்திரனும் சிருஷ்டிக்கப்பட்ட பின்பு, பூமியிலுள்ள மற்றகாரியங்களை சிருஷ்டிப்பதற்கு தேவகுமாரன் ஆயத்தப்பட்டார். நம்முடைய மகிழ்ச்சிக்காக சிருஷ்டிக்கப்பட்ட அற்புதமான காரியங்களைச் சற்று சிந்தித்துப்பாருங்கள்! மலைகளும், ஆறுகளும், மரங்களும், பூக்களும், கனிகளும் இன்னும் பற்பல காரியங்கள்... அதற்குபின் மிருகங்களும், பறவைகளும், நீர்வாழ் மச்சங்களும் - இந்த பூமியின்மேல் ஜீவித்து மகிழ்வதற்காக தேவகுமாரனால் சிருஷ்டிக்கப்பட்டது.

ஆனால், இந்த பூமியின்மேல் மிக அற்புதமாக சிருஷ்டிக்கப்பட்ட ஒரு காரியத்தை இன்னும் நான் குறிப்பிடவில்லை. அது முழுமையாக சொல்லுமளவுக்கு அது மிக அற்புதமானது. இதுவே நம்முடைய அடுத்த கதையாக இருக்கிறது - முதல் மனிதன் மற்றும் முதல் மனுஷியாகிய ஆதாம் மற்றும் ஏவாளின் கதை.

## கேள்விகள்:-

1. பிள்ளைகளும், சில வளர்ந்த பெரியவர்களும் புரிந்துகொள்ள முடியாத சில காரியங்கள் என்ன?

2. நட்சத்திரங்களை சிருஷ்டித்தவர் யார்? அவைகள் தீப்பொறிகளைப்போல சிறிய அளவில் காட்சியளிப்பது ஏன்?

3. நம்மை சிருஷ்டித்த நம்முடைய தேவனை நாம் ஏன் காணமுடிவதில்லை?

4. பூமியில் வாழும் ஜனங்களைத்தவிர தேவன் வேறு யார் யாரை சிருஷ்டித்தார்?



## 2. தோட்டத்தில் ஒரு வீட்டில்

**பல வருடங்களுக்கு** முன், பரந்து விரிந்த இந்த உலகத்தில் ஒரு மனுஷன் மட்டுமே இருந்தார். அவருக்கு ஆதாம் என்ற மிகச் சுருக்கமான பெயர் இருந்தது. எந்தவிதமான போக்குவரத்து வாகனங்களும், தொலைபேசிகளும், வானொலி பெட்டிகளும், தொலைக்காட்சி பெட்டிகளும் இருப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன், இவர் வாழ்ந்துவந்தார். எந்தவிதமான வீடுகளும் கட்டுவதற்கு முன் இவர் வாழ்ந்தார். உண்மையில் வீடு கட்டுவதற்கோ, அதில் வசிப்பதற்கோ ஒருவரும் இல்லை. ஆதாம் நித்திரை செய்வதற்கு ஒரு படுக்கைக்கூட இல்லாதிருந்தது. ஆதாம் எவ்வளவு நாட்கள் தனித்து வாழ்ந்தார் என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். அவர் கிட்டதட்ட 6000 வருடங்களுக்கு முன் வாழ்ந்தார். இது ஒரு நீண்டகாலமல்லவா!

குடியிருப்பதற்கு வீடில்லாமல் இருந்ததால், அவர் வாழ்வதற்கு நல்ல இடம் இல்லை என்று நாம் எண்ணிவிடக்கூடாது. ஆதாமை சிருஷ்டிக்கும் முன்னே, தேவன் ஏதேன் என்று அழைக்கப்படும் அழகான ஒரு தோட்டத்தை உருவாக்கியிருந்தார். அதில் அற்புதமான மலர்களும், கனிமரங்களும் நாட்டப்பட்டிருந்தது. ஒருவரும் இதுவரையில் கண்டிராத அழகான மலர்களும், மரங்களும் அதிலிருந்தது. சகலவிதமான கனிகளும், காய்களும் மிகுதியாய் நிறைந்திருந்தது.

அந்த பரிபூரணமான தோட்டத்தை பராமரிப்பதற்கும், அதில் நித்தியமாக வாழ்வதற்கும் தேவன் ஆதாமை அதில் வைத்தார்.

ஆதாமோடு எந்தவிதமான மனிதர்களும், குழந்தைகளும் இல்லாதிருந்தபோதிலும் அவர் தனித்திருக்கவில்லை. ஏதேனில் அநேகவிதமான மிருகங்களும், பறவைகளும் இருந்ததாக வேதாகமம் கூறுகிறது. ஆதாமை சிருஷ்டித்த தேவன், அவரிடம், அனைத்து மிருகங்களுக்கும் பெயரிடும்படி கேட்டுக்கொண்டார்.

இது எப்படிப்பட்ட வேலையாக இருந்திருக்கக்கூடும்!

அடுத்தமுறை நீங்கள் ஒரு சர்க்கஸ் அல்லது மிருகசாலைக்குச் செல்லும்பொழுது, அங்குள்ள மிருகங்களுக்குப் பெயர் இல்லாததுபோல் எண்ணி, அவைகளுக்குப் பெயரிட்டு அழைத்துப்பாருங்கள். எவ்வளவு கடினமான காரியம் என்று உணரலாம். இப்படியாக, ஆதாம்

தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள பணியிலமர்ந்து, எல்லா மிருகங்களுக்கும் நல்ல பெயர்களை சிந்திக்கத்துவங்கினார். மிக நேர்த்தியாக அவ்வேலையைச் செய்துமுடித்தார்.

நிச்சயமாக எல்லா மிருகங்களுக்கும் பெயர் வைப்பதற்கு அவர் ஒவ்வொரு மிருகத்திற்கும் பின்னால் செல்லவில்லை. ஏனெனில், இந்த பூமியின்மேல் ஆதாம் ஒரு இராஜாவாக முடி சூட்டப்பட்டார் என்று வேதாகமம் கூறுகிறது. ஆகவே, தோட்டத்திலுள்ள அனைத்து ஜீவன்களும், அவருடைய அழைப்புக்குக் கீழ்ப்படிந்து அவரிடத்தில் வந்திருக்க வேண்டும். நம்முடைய வீடுகளில் வளர்க்கப்படும் நாயை அழைத்தவுடன் வருவதைப்போல அவைகள் வந்திருக்க வேண்டும்.

இக்காலங்களில் பழக்கமில்லாத நாய்கள்கூட நாம் விரட்டினால் ஓடிப்போகும். அல்லது, அடுத்தமுறை நம்மை பார்க்கும்போது கடிக்க முயற்சிக்கும்.

ஆம், ஆதாம் எல்லா மிருகங்களோடும் அன்பாக மட்டும் இருக்கவில்லை, இன்று நாம் காணக்கூடிய காட்டு மிருகங்களோடுகூட அவர் அன்பாக இருந்தார். நம்முடைய வீட்டில் செல்லப்பிராணிகளை வளர்ப்பதுப்போல, அவர் எல்லா மிருகங்களோடும் பழகினார். அநேகர், மிருகங்களிடம் கொடூரமாக நடந்துகொண்டதினால் அவைகள் பயந்து மிகவும் கோபமடைந்து விடுகிறது.

ஆதாம் மிருகங்களுக்கு பெயர்வைத்து, அவைகளோடு கூடியிருந்தபின் ஒரு முக்கியமான காரியத்தைக் கண்டுபிடித்தார். நாம் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வதுபோல, மிருகங்களோடு பேசிக்கொள்ள முடிவதில்லை என்பதைக் கண்டுபிடித்தார். அந்த மிருகங்கள் அவரோடு அந்த தோட்டத்தில் மகிழ்ச்சியோடு இருந்தன. ஆயினும், அவரைப்போல அவரோடு இருப்பதற்கு ஒரு துணை அவருக்கு அவசியமாகத் தேவைப்பட்டது. உங்களைச்சுற்றி ஒருவருமில்லாத ஒரு சூழ்நிலையை சற்று கற்பனை செய்துபாருங்கள்.

சிறப்பான ஒரு நாய், ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரியின் இடத்தைப் பிடிக்கமுடியுமா?

ஆம், இதை தான் ஆதாமும் கண்டுபிடித்தார். தேவன், இதை முன்னதாக அறிந்திருந்தபோதிலும், ஆதாம் தாமே இதை கண்டுபிடிக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். ஏதேன் தோட்டத்தில் ஆதாம் நிச்சயமாக தனித்திருப்பது தேவனுடைய நோக்கமும், சித்தமுமல்ல. ஆனால், ஒரு நல்ல துணை எவ்வளவு அவசியம் என்பதை ஆதாம் புரிந்துகொள்ள வேண்டும் என்பதை தேவன் விரும்பினார். இவ்வழியில் நீங்கள் காணும்பொழுது, தேவன் ஆதாமுக்கு ஏற்ற துணையைக் கொடுப்பதற்கு அவன் மிகுந்த நன்றியோடு இருந்திருக்க வேண்டும்.

தேவன் என்ன செய்தார்?

நீங்கள் முன்னதாக யூகித்திருப்பீர்கள்! ஆம், அவர் ஆதாமுக்கு ஒரு உண்மையான துணையாக ஏவாளை சிருஷ்டித்தார். அவள் அவருக்கு மனைவியாய் இருந்தாள். அவள் முதல் மனுஷியாக இருந்ததினிமித்தம் அவள் ஜீவனுள்ளோருக்குத் தாய் என்ற பொருளில், ஏவாள் என்ற பெயர் அவளுக்குக் கொடுக்கப்பட்டது. ஆதாமை போல, ஏவாள் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பி அவளையும் அற்புதமான முறையில் சிருஷ்டித்தார். ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணி, அவருடைய விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து ஏவாளை சிருஷ்டித்தார். ஏவாளும் ஆதாமைபோல் இருந்தாள்.

எவ்வளவு அற்புதமான காரியம் அல்லவா!

ஆனாலும், அவனுடைய மற்றொருபகுதியாக தனித்திருந்தாள். இவர்கள் இருவரும் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு உண்மையான நண்பர்களாக இருந்தனர். இன்னமும் தேவன் அற்புதமான காரியங்களைச் செய்வதற்கு ஞானமுள்ளவராக இருந்தார்.

தேவன் இவ்வளவு அற்புதமான காரியங்களை எப்படி செய்தார் என்று தெரிந்துகொள்ளும்படி முயற்சி செய்வதில் எந்த பயனுமில்லை. ஏனெனில், நாம் புரிந்துகொள்ள முடியாத அநேக உண்மையான காரியங்களை அவர் செய்திருக்கிறார். நம்மை வளர்ச்சிக்குள்ளாக்குவது என்ன என்பதையும்கூட நம்மால் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. "சத்துள்ள உணவுகளைப் புசிப்பதன் மூலம் என்று நீங்கள் பதிலளிக்கலாம்." ஆனால், இதுமட்டுமே நமக்கு காரியமல்ல, நம்முடைய வயிறு, சரியாக வேலை செய்யாவிட்டால்,

நாம் உண்ணக்கூடிய சத்துள்ள உணவுகள் பயனற்றுப்போகும். ஒருவேளை நம்மால் புசிக்க முடியாதபடிக்கு, நம்முடைய வயிறு எப்பொழுதும் கோளாறாக இருந்துவிட்டால் என்ன செய்திருக்கக்கூடும்?

ஆம், தேவன் நமக்கு நல்ல வயிறுகளையும், கண்களையும், காதுகளையும் எப்படி சிருஷ்டித்தார் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், அவர் சகலத்தையும் நேர்த்தியாக சிருஷ்டித்திருக்கிறார் - அதேபோல் ஏவாளையும் அவர் சிருஷ்டித்தார். மேலும், ஏவாளை தன்னுடைய துணையாகப் பெற்றுக்கொள்வதில் ஆதாம் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்.

ஆனால், நம் அனைவரையும்காட்டிலும் ஆதாம் மற்றும் ஏவாள், ஒரு விஷயத்தில் வேறுபட்டவர்களாக இருந்தார்கள். அவர்கள் ஒருபோதும் குழந்தைகளாக இருந்ததில்லை. உங்களால் கற்பனைசெய்து பார்க்கமுடிகிறதா? நாம் குழந்தைகளாக இருந்து வளரும்போது, அநேக காரியங்களை கற்றுக்கொள்ளுகிறோம் அல்லவா? சில காரியங்கள் சரியென்றும், மற்ற காரியங்கள் தவறென்றும் நாம் அறிந்துகொள்ளுகிறோம். தவறான காரியங்களைக்காட்டிலும் நன்மையான காரியங்களைமட்டுமே செய்தால் எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருப்போம் என்பதைக் கற்றுக்கொண்டிருக்கிறோம் அல்லவா.

ஆம், ஆதாம் மற்றும் ஏவாளும் வளர்ந்திருந்தபோதிலும், இந்த பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது. இந்த பாடத்தை அவர்கள் கட்டாயமாகக் கற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்ததினால், தேவன் அந்த தோட்டத்தில், "நன்மை தீமை அறியத்தக்க விருட்சம்" என்று அழைக்கப்படும் மரத்தின் கனியை மட்டும் புசிக்க வேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தார். இந்த மரத்தின் கனியைப் புசிப்பது உண்மையில் தவறு என்பது தெளிவாக ஆதாமுக்கும் ஏவாளுக்கும் அறிவித்திருந்தார். அதை புசிக்கும் நாளிலே சாகவே சாவீர்கள் என்றும் முன்னறிவித்திருந்தார்.

இப்பொழுதும், அந்த தோட்டத்தில் ஒரு சர்ப்பம் இருந்தது. அது நன்கு பழக்கி வசப்படுத்தப்பட்டிருந்தபடியினால், ஏவாள் அதனை பார்க்கத்தக்க இடத்தில் அது அநேகமாக விளையாடியிருக்க வேண்டும். புசிக்க வேண்டாம் என்று விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்தால் ஒருவரும் மரித்துப்போவதில்லை என்பதை ஏதோ ஒருவகையில் அந்த சர்ப்பம் ஏவாளை நம்ப வைத்தது.

தேவன் ஏவாளிடம் உண்மையைச் சொல்லவில்லை என்பதை நிரூபிப்பதற்காக அதிலுள்ள கனிகளைப் பறித்து சர்ப்பம் புசித்திருக்கலாம்.

உண்மையில் இக்காரியங்கள் அனைத்தையும் தனித்துசெய்வதற்கு அந்த சர்ப்பம் அவ்வளவு சாதுரியமாக (smart) இருக்கவில்லை. மாறாக, சர்ப்பம் இவ்விதமாக நடந்துகொள்ள வேண்டும் என்று சாத்தான் அதைத் தூண்டியது. நாம் முன்னதாகப்பார்த்தபடி, சாத்தான் தேவனுடைய எதிராளியாக இருந்ததினிமித்தம் அவன் சர்ப்பத்தைக்கொண்டு ஏவாளை வஞ்சித்தான்.

ஆம், ஏவாள் சர்ப்பத்தினால் வஞ்சிக்கப்பட்டு புசிக்க வேண்டாம் என்று விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாள். மேலும், ஆதாமுக்கும் புசிக்கக்கொடுத்து காரியங்களை இன்னும் மோசமடையச் செய்தாள். இப்படியாக, தேவன் விரும்பாதகாரியத்தை இருவரும் செய்தார்கள்.

தேவனுக்குக் கீழ்ப்படியாதபட்சத்தில், அவர்கள் மரித்துப்போவார்கள் என்பதை தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் சொல்லியிருந்தார். அதாவது, ஏதேன் தோட்டத்திலுள்ள அற்புதமான காரியங்களை இனி அவர்கள் நித்தியமாக வாழ்ந்து அனுபவிக்கமுடியாது என்பது பொருளாகும். அதற்குப்பதிலாக நாட்கள் செல்லச்செல்ல, இவர்கள் பலம் குன்றிபோய், இறுதியில் மரித்துவிடுவார்கள்.

மரணம் கொடூரமான காரியம் அல்லவா?

சற்று சிந்தித்துப்பாருங்கள். ஆதாமும் ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படியாததினால், உலகத்திலுள்ள அனைவரும் மரித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கீழ்ப்படிந்திருந்தால் இந்த உலகத்தில் வியாதியஸ்தர்களை நாம் கண்டிருக்க முடியாது.

ஆம், இவைகளின் வழியாக ஆதாமும் ஏவாளும் அநேக பாடங்களைக் கற்றுக்கொண்டார்கள். உங்கள் தகப்பன் அல்லது தாய் உங்கள் கரங்களை எரியும் அடுப்பில்

நீட்ட வேண்டாம் என்று சொல்லும் வார்த்தைக்கு நீங்கள் கீழ்ப்படியாமற்போனால், நிச்சயமாக அந்த நெருப்பு உங்களைச் சுட்டுவிடும். ஆனால், நெருப்பு மிக கொடூரமானது என்ற பாடத்தை நீங்கள் கற்றுக்கொள்ளும்பொழுது, ஒருபோதும் அந்த தவறை செய்யமாட்டீர்கள். இதற்காகவே, ஆதாமும் ஏவாளும் செய்த காரியங்களை தேவன் அனுமதித்தார். இவர்கள் படும்பாடுகள் வழியாக அநேக பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார்.

தேவன் அவருடைய மிகுந்த வல்லமையைப் பயன்படுத்தி, ஆதாமையும் ஏவாளையும் மீண்டும் ஜீவனோடு கொண்டுவருவார் என்று வேதாகமம் கூறுகிறது. அவர்கள் கற்றறிந்த பாடங்கள் அப்பொழுது அவர்களுக்கு பயனுள்ளதாய் இருக்கும் அல்லவா. இதற்கும்மேலாக, மரித்துப்போன ஆதாமின் பிள்ளைகள் அனைவரும், மீண்டுமாக உயிர்த்து எழுப்பப்படுவார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. அப்பொழுது இந்த முழு பூமியும், ஏதேனைப்போல மாறிவிடும். இதையே தேவன், உண்மையாக நடப்பிக்கத் திட்டமிட்டுள்ளார். ஆதாமின் குடும்பம், பூமி முழுவதிலும் இந்த தோட்டத்தை விரிவாக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

தேவன் அவருடைய மனதை எப்போதும் மாற்றிக்கொள்வதில்லை. அவர் செய்ய விரும்பும் காரியங்கள் அனைத்தையும் செய்வதற்கு அதிகமான வல்லமை பெற்றிருக்கிறார். ஆகவே, ஒருநாளில் இந்த முழு பூமியும் ஏதேனைப்போல் இருக்கும். அப்பொழுது, வீடில்லாமல் இரவு நேரங்களில் அவர்கள் எங்கு உறங்கினார்கள்? போன்ற பதில் தெரியாத அநேக கேள்விகளை நீங்கள் ஆதாமையும் ஏவாளையும் சந்தித்துக் கேட்கலாம்.

**கேள்விகள்:-**

1. இந்த உலகத்தின் முதல் மனிதன் யார்? அவர் எங்கு வசித்தார்?

2. விலங்குகளுக்கு முதலில் பெயர் வைத்தவர் யார்?

3. முதல் மனிதனுக்கு மனைவியாக வந்தவர் யார்? அவள் எங்கிருந்து வந்தாள்?

4. ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தை விட்டுச் செல்லவேண்டிய காரணம் என்ன? அவர்கள் எப்பொழுது திரும்பி வருவார்கள்?



## 3. முதலில் பிறந்த இரண்டு சகோதரர்கள்

**இந்த** முழு உலகத்தில் இரண்டு குமாரர்கள் மட்டுமே இருப்பதை உங்களால் கற்பனை செய்துபார்க்க முடிகிறதா? பள்ளிக்குச் செல்வதற்கு இது எவ்வாறு சாத்தியம் என்று சற்று யோசித்துப்பாருங்கள். பள்ளிக்குச் செல்வதற்கோ, கூட விளையாடுவதற்கோ எந்த பிள்ளைகளும் இல்லை. இந்த முழு உலகத்தில் இரண்டு பிள்ளைகள்மட்டுமே இருந்தார்கள். முதல் மனுஷன் மற்றும் முதல் மனுஷி ஆகிய ஆதாமும் ஏவாளும் இந்த இருவருக்கும் தாய் தந்தை ஆனார்கள்.

முதலில் ஒரு மகன் பிறந்தான். அவன் பிறந்தபொழுது, அவனுடைய தாய் அவனுக்கு காயீன் என்று பெயரிட்டாள். தேவனால் ஒரு குமாரனைப் பெற்றாள் என்று பொருள்படும்படி தாயாகிய ஏவாள், அவனுக்கு காயீன் என்று பெயரிட்டாள். இது அவளுக்கு மிகுந்த சந்தோஷத்தை தந்தது.

நாம் அறிந்திருக்கிறபடி தேவன் செய்ய வேண்டாம் என்ற காரியத்தை ஆதாமும் ஏவாளும் செய்ததினால் அவர்களுக்காக தேவன் ஆயத்தப்படுத்தியிருந்த அழகான தோட்டத்தைவிட்டு வெளியே அனுப்பப்பட்டார்கள். தோட்டத்திற்கு வெளியே எந்த நன்மையான காரியங்களையும் அவர்களால் காணமுடியவில்லை. பழங்கள், காய்கறிகள், மற்ற உணவுகள் கிடைக்க அரிதாக இருந்தது. மேலும், அவைகளை விளைவிப்பது கடினமான காரியமாகக் காணப்பட்டது. தோட்டத்திற்கு வெளியே இருந்த நிலப்பரப்பு ஒரு வனாந்தரத்தைப்போலிருந்தது. பசியைப் போக்குவதற்குப் போதுமானஉணவை அந்த வறட்சியான நிலத்தில் பயிரிடுவது மிகக் கடினமான காரியமாக இருந்தது. ஆதாமும் ஏவாளும் பலமுறை பசியினால் சோர்ந்திருக்க வேண்டும். இது அவர்களுடைய சொந்தத்தவறாக இருந்தது. அவர்கள் தேவனுக்கு

கீழ்ப்படிந்திருந்தால், சகல நன்மையான காரியங்களோடும் நிச்சயமாக அந்த தோட்டத்தில் வாழ்ந்திருக்கக்கூடும்.

ஆம்! தோட்டத்திலிருந்து வெளியே சென்றபின், அநேக வருத்தமான நாட்களை அவர்கள் கடத்தியிருக்க வேண்டும். மேலும், தேவன் அவர்களை முற்றிலும் மறந்துவிட்டாரென்று எண்ணியிருக்க வேண்டும். ஆனால், அவர் மறக்கவில்லை. அவர்கள் தண்டிக்கப்பட்டாலும், தேவன் அவர்களை நினைவுகூர்ந்ததினால் - காயீன் பிறந்தபோது, கர்த்தரால் ஒரு குமாரனைப் பெற்றேன் என்று தாயாகிய ஏவாள் சரியாகச் சிந்தித்தாள்.

அவள் மகிழ்ச்சியாய் இருந்தது ஆச்சரியமில்லை!

வெகு சீக்கிரத்தில் தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் மற்றொரு குமாரனைத் தந்தார். அவனுக்கு ஆபேல் என்று பெயரிட்டாள். இந்த உலகத்தில் தனிமையாயிருந்த காயீனுக்கு ஒரு இளைய சகோதரன் பிறந்தான். காயீன் எவ்வளவு சந்தோஷமாக இருந்திருக்க வேண்டும்!

இன்றைய தினத்தில் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லுவதுபோல, காயீனும் ஆபேலும் பள்ளிக்குச் சென்றிருப்பார்கள் என்று எண்ணுகிறீர்களா? அவர்கள் செய்த எல்லாவற்றையும்குறித்து வேதாகமம் முழுமையாகச் சொல்லுவதில்லை. ஆனால், அவர்கள் நிச்சயமாக பள்ளிக்குச் சென்றிருக்க வாய்ப்பில்லை.

இதை நான் எவ்வாறு அறிந்து கொண்டேன்?

பிள்ளைகள் இல்லாமல் பள்ளிக்கூடங்கள் எவ்வாறு நடத்தப்பட்டிருக்கக்கூடும்? இந்த உலகத்தில் காயீன் மற்றும் ஆபேல் முதல் குழந்தைகளாக இருந்ததினால் நிச்சயமாக அவர்கள் பள்ளிக்குச் செல்வதற்கு வாய்ப்பில்லை.

ஆனால், பள்ளிக்குச் செல்லாத காயீன் மற்றும் ஆபேலை போலிருக்க வேண்டும் என்று தயவு செய்து விருப்பம் கொள்ளாதீர்கள். இருவரும் வளர்ச்சியடைந்தபோது, காயீன் பயிரிடுகிற தோட்டக்காரனாகவும், ஆபேல் மந்தைகளைப் பராமரிக்கிற மேய்ப்பனாகவும் இருந்தார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. இவைகளைச் செய்வதற்கு அவர்கள் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று காரியங்களைக் கற்றறிய வேண்டும் என்ற அவசியமில்லை. ஆயினும், இன்றைக்குப் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று காரியங்களைக் கற்றுக்கொள்வதற்கு ஒப்பாக அவர்களும் வளர்ச்சியடையும்போது, சில காரியங்களைக் கற்றுக்கொண்டிருந்திருக்க வேண்டும்.

ஆம்! அநேக காரியங்களை அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியதாய் இருந்தது.

தந்தையாகிய ஆதாம் இந்த இரண்டு பிள்ளைகளுக்கும் பள்ளி ஆசிரியராக இருப்பதை சற்று கற்பனைசெய்து பார்க்கலாம். வளர்ச்சியடையும்போது, காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக பிள்ளைகள் பள்ளிக்குச் செல்வது வழக்கம். தோட்டத்தைப் பயிரிடுவதற்கும், மந்தைகளை உருவாக்குவதற்கும் காயீனும் ஆபேலும் சில காரியங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியதாய் இருந்ததாம். ஆம்! இவர்களின் தந்தை இக்காரியங்களைச் செய்யும்போது, அவருக்கு உதவி செய்யும்பொருட்டு, இவர்கள் இருவரும் தங்களுக்குரிய காரியங்களைக் கற்றுக்கொண்டிருந்திருக்க வேண்டும். செடிகளை நடுவதற்கு தந்தையாகிய ஆதாம் நிலத்தில் குழி தோண்டுவதற்கு காயீன் உதவி செய்திருக்க வேண்டும். அதற்குப் பின் வளர்ந்த செடிகளைப் பராமரிப்பதற்கு சுற்றியிருந்த களைகளை அவர் பிடுங்கி எரிந்திருக்க வேண்டும். இப்படியாக காயீன் பயிர் வளர்ப்பதைக் குறித்து கற்றறிந்திருப்பார்.

அங்கு களைகளும் இருந்தன! தேவதாகமம் அவைகளை முள்ளுகள் மற்றும் குறுக்குகள் என்று அழைக்கிறது. இவைகள் மோசமான களைகளாகும். ஏதேன் தோட்டத்தில் எந்தவிதமான களைகளும் காணப்படவில்லை. ஆனால், தோட்டத்திற்கு வெளியே களைகள் மட்டுமே காணப்பட்டது. நிச்சயமாக இவைகள் ஆதாமுக்கு அதிக உபத்திரவங்களைக் கொடுத்திருக்கும்.

இந்த களைகளினால் காயீனும் உபத்திரவப்படுவார் என்பதை ஆதாம் அறிந்து, அவைகளை எவ்வாறு களைய வேண்டுமென்றும், தன்னுடைய குடும்பத்திற்கு தேவையான உணவை பயிர் செய்வதற்கு அந்த செடிகளை எவ்வாறு களைகளிடமிருந்து பாதுகாக்க வேண்டும் என்பதையும் அவர் காயீனுக்கு கற்றுக்கொடுத்திருக்க வேண்டும். இப்படியாக, நிலத்தை பண்படுத்துவதற்கும், களைகளைப் பிடுங்கி எரிவதற்கும் காயீன் ஆதாமிடமிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டிருக்க வேண்டும். இது உண்மையில் அவருக்கு நன்மையாக

இருந்தது. வேலைகள் செய்வதினால் சிறு பிள்ளைகள் துன்பங்களை அனுபவிப்பதைக்காட்டிலும் அவைகளினால் அவர்கள் பலமும், ஆரோக்கியமும் அடைவார்கள்.

மேலும், இது அவர்களுக்கு ஒரு விளையாட்டாக இருந்திருக்க வேண்டும்.

உங்கள் பெற்றோரின் வேலைகளுக்கு நீங்கள் செய்யக்கூடிய உதவிகளை விளையாட்டாக எடுத்துக்கொண்டால், அதற்குள் உண்மையில் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம். மாறாக, "நான் வேலை செய்வது என் தலை எழுத்து" என்று சொல்வீர்களானால், நீங்கள் அதிகமான நன்மையைப் பெறுவதற்கான வாய்ப்பையும் இழந்து ஒரு துளி சந்தோஷத்தையும் பெறமாட்டீர்கள்.

இப்படியாக ஆபேலும் அநேக காரியங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியதாய் இருந்தது. அவர் வளர்ந்து வாலிபனாக இருக்கும்போது மிகப் பெரிய மந்தையை மேய்க்க வேண்டும் என்று முடிவு செய்தார். ஓரிடத்தில் அமர்ந்து மந்தையை கவனித்தால் மட்டும்போதாது. அவைகளுக்கான ஏற்ற பராமரிப்புகளுக்குரிய வேலைகளைச் செய்ய வேண்டும் - சுத்தமான தண்ணீரையும், பசுமையான புல்வெளியையும் அவைகளுக்காக தேட வேண்டும். நம்முடைய வீட்டில் குழந்தைகள் வியாதிப்படும்பொழுது அவர்களை சுகப்படுத்துவதுபோல, அவைகள் காயப்பட்டு வியாதிப்படும்போது, அவைகளை சொஸ்தப்படுத்துவதற்கு அறிந்திருக்க வேண்டும்.

நீங்கள் வியாதிப்பட்டிருக்கும்போது, நீங்கள் மற்றவர்களால் பராமரிக்கப்படும்போது எவ்வளவு மகிழ்ச்சியடைவீர்கள்?

ஆம், அதேபோல ஆடுகளும் இப்படியாக உணரக்கூடும். இப்படியிருக்க, ஆபேல் ஒரு நல்ல மேய்ப்பராக இருப்பதற்கு இவ்வனைத்து காரியங்களையும் கற்றறிந்திருக்க வேண்டும். ஆகவே, நாம் பார்த்தபடி மிகப் பெரிய கட்டிடங்களாலான பள்ளிக்கு இவர் செல்லாமல், ஆடுகளை கவனித்து அவைகளுக்குத் தேவையான காரியங்களை அறிந்துகொள்வதற்காக அவர் பாடங்களைக் கற்றிருக்க வேண்டும்.

இறுதியாக காயீனும், ஆபேலும் அவர்களுடைய பள்ளிப்பாடங்களைக் கற்று முடித்தார்கள். இனி இவர்கள் சிறுவர்கள் அல்ல, வாலிபர்களாக வளர்ந்தார்கள். உடனே அவர்கள் நீண்ட கால்சட்டைகளை அணிந்தவர்களாக இருப்பார்கள் என்று நீங்கள் கற்பனைசெய்ய வேண்டாம். ஏனெனில், அக்காலத்தில் அவர்கள் எந்தவிதமான கால்சட்டைகளையும் அணியவில்லை. சிறியவர்களும் பெரியவர்களும் தங்களுடைய சரீரத்தை துணியினால் சுற்றிக்கொண்டிருந்திருப்பார்கள். ஆனால், வஸ்திரங்களைக் குறித்து அவர்கள் சிந்தித்திருப்பார்களா என்று சந்தேகமாக இருக்கிறது. ஏனென்றால், தங்களுக்கு வேண்டிய உணவை பயிரிடுவதற்கே நேரம் சரியாக இருந்திருக்கும். நம்மைபோல தேவையான காய்கறிகளை வாங்கிக்கொள்வதற்கு அவர்கள் மளிகை கடைக்கோ, காய்கறி கடைக்கோ செல்லவில்லை. ஏனென்றால், அப்படிப்பட்ட கடைகள் அன்று இல்லை. அவர்களுக்குத் தேவையான உணவை தாங்கள் பயிரிடவில்லை என்றால், அவர்கள் புசிப்பதற்கு ஒன்றுமில்லை.

இப்பாடங்கள் அனைத்தையும் ஆபேல் மற்றும் காயீன் நன்கு கற்றறிந்திருக்க வேண்டும். ஏனெனில், அவர்கள் செய்த வேலைகளில் வெற்றியடைந்தார்கள். இருவரும் கடினமான உழைப்பாளிகளாக இருந்திருக்கக்கூடும். ஏனெனில், வெற்றி பெறுவதற்கு இது மிக அவசியம்.

காயீன் மற்றும் ஆபேல் கடின வேலைகள் செய்திருந்தாலும், அவர்கள் தேவனிடத்தில் நன்றி உள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். ஏனெனில், தேவன் அவர்களுக்குப் பாராட்டின இரக்கத்தை தாங்கள் புரிந்துகொண்ட வகையில், தாங்கள் பெற்றவைகளிலிருந்து சிலவற்றை தேவனுக்கு பரிசாகக் கொடுத்தார்கள். தேவனுக்கு அளிக்கப்படும் பரிசுகள் சில இடங்களில் காணிக்கைகள் என்றும், சில நேரங்களில் பலிகள் என்றும் அழைக்கப்படுகிறது. அந்நாட்களிலே தேவனுக்குக் கொடுக்கப்படும் காணிக்கைகளை அடுக்கடுக்கான கல்லுகளினால் செய்யப்பட்ட பலிபீடத்தின்மேல் வைக்கப்பட்டது. தேவன் இவைகளினால் மகிழ்ச்சியடையும்போது, பலிபீடத்தின் மேலுள்ள பொருட்கள் தானாகவே அக்கினியினால் பட்சிக்கப்படும்.

ஆம், காயீன் தேவனுக்கு, தான் பயிரிட்ட காய்கறிகளையும், கனிகளையும் காணிக்கையாக செலுத்தினான். ஆபேல், தன் மந்தையிலிருந்து ஒரு ஆட்டுக்குட்டியை காணிக்கையாக செலுத்தினார். தேவன் ஆபேலின் காணிக்கையின் பேரில் பிரியமாய் இருந்தார். ஆனால், காயீனின் காணிக்கையையோ அவர் அங்கீகரிக்கவில்லை. இது விசித்திரமாகத் தோன்றினாலும், தேவன் அவருக்கு நல்ல காரணங்களை வைத்திருந்தார். தேவன் நடப்பிக்கும் எல்லா கிரியைகளுக்கும் நியாயமான காரணமுண்டு. அவர் நம்மிடம் எப்பொழுதும்

காரணங்களைச் சொல்லுவதில்லை. மேலும், பல நேரங்களில் அவை தேவைப்படுகிறதும் இல்லை. ஆனால், எது சிறந்தது என்பதை தேவன் மட்டுமே அறிந்திருக்கிறார். வேதாகமமும் இதையே கூறுகிறது. வேதாகமம் உண்மை என்பதை நாம் அறிந்திருக்கிறோம்!

காரியங்களை தேவன் விரும்பும்படி நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஏனெனில், அவர் நம்மைகாட்டிலும் ஞானமுள்ளவர். மேலும், அவருடைய வழிகளே சிறந்தவைகள். அதுபோல, நம்முடைய பெற்றோர்களும் நாம் சில காரியங்களைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். நமக்கு அது சரியாக தோன்றப்படாமல் இருந்தாலும், சிறந்தவைகள் என்னவென்று அவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஒரு தாய் பாத்திரங்களை கழுவும்படி தன்னுடைய மகளிடம் கூறலாம். ஆனால், அந்த மகளோ அந்நேரத்தில் படுக்கைகளை விரிப்பது நலம் என்று சிந்திக்கலாம். ஆம், படுக்கையை விரிப்பதும் தவறான காரியமல்ல, ஆயினும், அந்த தாய் ஏதோ ஒரு காரணத்திற்காக பாத்திரங்களை முதலில் கழுவச் சொல்லியிருக்க வேண்டும். சூழ்நிலையின் காரணமாக அந்த தாய் மகளிடம் காரணத்தைச் சொல்லாமல் இருந்திருப்பார்கள். அந்த மகள் கீழ்ப்படிதலுள்ள ஒரு பிள்ளையாயிருந்தால், காரணத்தை அறிய விரும்பாமல், தன் தாய் சொன்ன வேலைகளை உடனே செய்வாள்.

இப்படியாகவே, காயீனும் சிந்தித்திருக்க வேண்டும். தேவன் ஆபேலின் காணிக்கையை ஏற்றுக்கொண்டதை காயீன் கண்டபோது, அவர் ஆபேலிடம் வந்து ஒரு ஆட்டுக்குட்டியைக் கேட்டிருக்கலாம். அப்பொழுது தேவனுக்கு பிரியமான ஒரு பலியைச் செலுத்தியிருக்கக் கூடும். ஆனால், அதற்குபதிலாக காயீன் ஆபேல்மேல் பொறாமைக்கொண்டான். இது எவ்வளவு பயங்கரமானது!

இருவரும் ஒருமித்து வளர்ந்தார்கள், ஒருமித்து விளையாடினார்கள், ஒருமித்து வேலை செய்தார்கள். இப்பொழுது காயீன் தன் சொந்த சகோதரன்மேல் பொறாமைகொண்டான். இவைகளை சற்று சிந்தித்துப் பாருங்கள். இதை மனதில்கொண்டவனாய், ஒருநாள் காயீன் ஆபேலிடம் வாக்குவாதம் செய்ய துவங்கி, மிகவும் கோபங்கொண்டான் - ஆம், அதை சொல்லுவதற்கே வேதனையாய் உள்ளது. அவன் ஆபேலை கொன்று விட்டான்.

முன்னதாக பொறாமை கொண்ட லூசிபரைக்குறித்து நாம் பார்த்தோம். பொறாமை ஒரு பயங்கரமான காரியம். நீங்கள் ஒருபோதும் உங்களுக்குள் இந்த பொறாமையை அனுமதிக்க வேண்டாம். அனுமதிப்பீர்களானால், நீங்கள் துக்கமடைந்து இறுதிவரைக்கும் நீங்கள் மன்னிப்பு கேட்கும்படி அநேக காரியங்களைச் செய்துவிடுவீர்கள்.

தேவன் காயீனிடம் கோபப்பட்டார். காயீனோ அவரைவிட்டு ஓடினான். அவன் இதற்காக தண்டனையையும் பெற்றான். அவனை காணக்கூடிய யாவரும் அவன் தவறு செய்தான் என்பதை புரிந்துகொள்ளும் அளவுக்கு ஒரு அடையாளம் கொடுக்கப்பட்டது. நாமும் தவறு செய்தால் ஜனங்கள் எளிதில் கண்டுபிடிப்பார்கள் என்று அறிந்திருக்கிறோம். நாம் தேவனை கூடுமான அளவுக்கு பிரியப்படுத்துவதே, நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்கான ஒரே வழியாகும்.

ஆபேலின் பெற்றோராகிய ஆதாமுக்கும், ஏவாளுக்கும் இது மிகப் பெரிய இழப்பாக இருந்திருக்கும். ஆனால், தேவன் மிக நல்லவராக இருந்ததினால் ஆபேலுக்குப் பதிலாக அவர் வேறொரு குமாரனைக் கொடுத்தார். இதை ஏவாள் நன்கு உணர்ந்திருந்தாள். ஆதாமும் ஏவாளும் தேவனுடைய சொல்லுக்குக் கீழ்ப்படியாமல் போனபோது, சாத்தானை தண்டிக்கும்படியாக தேவன் ஒருவரை அனுப்புவேன் என்று வாக்களித்தார். அந்த நபர் தன்னுடைய பிள்ளைகளாக இருக்கக்கூடும் என்று ஏவாள் எண்ணியிருக்க வேண்டும். உண்மையில் ஆபேல் சாத்தானை தண்டிப்பார் என்று ஏவாள் எதிர்பார்த்திருக்க வேண்டும். ஆனால், இப்பொழுதோ, ஆபேல் மரித்துப்போனாலும், தேவன் அதற்கு பதிலாக ஒரு குமாரனைக் கொடுத்ததினால் நிச்சயமாக இந்த குமாரன் சாத்தானை தண்டித்துவிடுவான் என்று ஏவாள் நம்பினாள்.

சாத்தானை தண்டிப்பதற்கு ஒரு "வித்தை" குறித்து தேவன் பேசினார். இதற்கு குமாரன் என்று பொருள். ஏவாள் தன் குமாரனை பெற்றெடுத்தபொழுது, "தேவன் ஆபேலுக்குப் பதிலாக, இந்த வித்தை கொடுத்தார் என்று சொல்லி, அவனுக்கு சேத் என்று பெயரிட்டாள்."

ஆம், ஏவாள் இன்னும் தேவனை நேசித்தாள். அவளுடைய குடும்பத்திற்காக தேவன் செய்யும் காரியங்களை எண்ணி மகிழ்ந்தாள். ஆயினும், சேத் தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்தாக இருக்கவில்லை. பல வருடங்களுக்குப்பின் இந்த வித்தை அனுப்ப அவர் சித்தம் கொண்டிருந்தார். ஆனால், தேவனோ இவ்வாக்குத்தத்தத்தை ஒருபோதும் மறக்கவில்லை. உண்மையில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அந்த குமாரனை அவர் அனுப்பினார்

என்பதை இனிவரும் கதைகளில் நாம் கற்றறியலாம். தேவன் ஆபேலின் காணிக்கைகளில் பிரியமாயிருந்த காரணத்தைக் காட்டும்படியாக நான் இதை குறிப்பிட்டேன். ஆபேலின் ஆட்டின் இரத்தம் சிந்தப்பட்டது. ஆயிரக்கணக்கான வருடங்களுக்குப் பின் தேவனுக்கு பிரியமான பலியை தம்முடைய ஒரேபேரான குமாரன் இயேசு செலுத்தக்கூடிய அற்புதமான பலிக்கு இது ஒப்பாகக் காணப்பட்டது.

இந்த முழு உலகம் அழகான ஏதேனாக மாற்றப்பட்டு, அது ஆதாம் மற்றும் ஏவாளும் அவருக்கு பிறந்த இந்த முழு மனுக்குலமும் ஜீவனோடு வருவதற்காக தன்னுடைய சொந்த இரத்தத்தை தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசு சிந்தினார்.

**கேள்விகள்:-**

1. இந்த உலகத்தில் முதல் வாழ்ந்த இரண்டு பிள்ளைகளின் பெயர் என்ன? அவர்களின் பெற்றோர் யாவர்?
2. இந்த இரு சகோதரர்களும் பள்ளிக்குச் சென்றார்களா?
3. ஆபேல் செலுத்தின காணிக்கைகளின்மேல் தேவன் பிரியமாயிருந்த காரணம் என்ன?



## 4. முதலில் கப்பல் கட்டியவர்

**தண்ணீரற்ற** இடத்தில் வயலுக்கு மத்தியில் ஒரு மிகப்பெரிய படகை கட்டின மனுஷனைக்குறித்து நீங்கள் என்ன சிந்திப்பீர்கள்? "அவர் ஒரு விநோதமான மனுஷனாக இருக்கக்கூடும்" என்று நீங்கள் பதிலளிப்பீர்கள் என்று நான் எண்ணுகிறேன். உண்மையில் நீண்ட காலங்களுக்கு முன் இப்படிப்பட்ட ஒரு காரியத்தை ஒரு மனுஷன் செய்தார். தேவன் சொல்லியதால், அவர் இக்காரியத்தைச் செய்தார். தண்ணீரற்ற அந்த நிலத்தில், தண்ணீர் நிரப்பப்படும் என்று அறிந்த தேவன், அந்த தண்ணீரிலிருந்து மனுஷனை மீட்பதற்காக இந்த படகை கட்டச்சொன்னார். யார் அந்த மனுஷன்? அவருக்கு நோவா என்று பெயர்!

இது வெகு நாட்களுக்கு முன் நடந்த சம்பவமாகும். இன்று இருப்பதுபோல் இந்த பூமியின்மேல் அநேகர் குடியிருக்கவில்லை. இருந்தபோதிலும், அங்கு வாழ்ந்த ஜனங்கள் பெரும்பாலானோர் துன்மார்க்கராய் இருந்தார்கள். நாம் பார்த்தபடி ஆதாம் மற்றும் ஏவாளை தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமைக்கு வழிநடத்தின பழைய சாத்தானே இந்த ஜனங்களையும் தேவனுக்கு விரோதமாக வழி நடத்தியது. ஆகவே, ஜனங்கள் பூமியின்மேல் பெருக பெருக அதிகமான துன்மார்க்கமும் பெருகியது. ஆகவே, இந்த துன்மார்க்கமான ஜனங்களை பூமியிலிருந்து அழிப்பதற்கு முழு உலகத்தையும் ஜலத்தினால் மூடுவது சிறந்த காரியம் என்று தேவன் அறிந்திருந்தார்.

ஆனால், அனைவரும் துன்மார்க்கராக இருக்கவில்லை. நோவா ஒரு நல்ல மனுஷனாக வாழ்ந்தார். அவர் தேவனை நேசித்து தேவனை பிரியப்படுத்தும் எல்லா காரியங்களையும் செய்ய விரும்பினார். தேவனும் நோவாவை நேசித்தார். இந்த உலகத்தின் மேல்வரும் ஜலப்பிரளயத்தினால் நோவா அழிவதை அவர் விரும்பவில்லை. அதற்காக ஒரு மிகப்பெரிய படகை கட்டச் சொன்னார். இதை ஒரு பேழை என்று வேதாகமம் அழைக்கிறது.

இதுவரைக்கும் நோவா எந்தவிதமான படகையும் பார்த்ததில்லை. ஏனெனில், அவர் சமுத்திரத்தின் அருகில் குடியிருக்கவில்லை. மேலும், அக்காலத்தில் சமுத்திரங்களிலும் படகுகள் இருக்கவில்லை. உலகத்திலுள்ள வெவ்வேறு இடங்களில் வாழ்ந்த ஜனங்கள் பொருட்களை இடமாற்றுவதற்காக படகுகளைப் பயன்படுத்தினார்கள். ஆனால், இந்த பூமியின்மேல் நோவா வாழ்ந்தபோது, ஜனங்கள் ஒரே இடத்தில் குடியிருந்ததினால் அவர்கள் படகுகளைப் பயன்படுத்தவில்லை.

ஆம், இதுவரைக்கும் ஒரு படகையும் கூட காணாத நோவா, எவ்வாறு அந்த பேழையை கட்டியிருப்பார் என்று நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்! தேவன் அவருக்கு கற்பித்ததினால் அவரால் அந்த பேழையை கட்டமுடிந்தது. அந்த பேழை எவ்வளவு நீளம், உயரம் மற்றும் அகலமாக இருக்க வேண்டும் என்பதை தேவன் அவருக்கு சொல்லியிருந்தார். அந்த பேழை எவ்வளவு நீளமாக இருந்தது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? அது கிட்டத்தட்ட 500 அடி நீளமாய் இருந்தது! நிச்சயமாக ஒரு மிகப்பெரிய பேழையாக இருந்திருக்க வேண்டும். இன்று கடலின்மேல் பயணிக்கும் பல கப்பல்களைக்காட்டிலும் இது பெரிதாக இருந்திருக்க வேண்டும்.

ஆம், ஜோடி ஜோடியான பல மிருகங்களையும், பல பறவைகளையும் அந்த பேழைக்குள் காக்கப்பட வேண்டும் என்ற தேவனுடைய நோக்கத்தினால் இவ்வளவு பெரிய பேழையை நோவா கட்டும்படி கட்டளை பெற்றார். இந்த பூமி முழுவதும் ஜலத்தினால் நிரப்பப்படும் என்று தேவன் அறிந்திருந்ததினால் பூமியின்மேல் ஜலம் வற்றிப்போன பின்பு அங்கு உயிர் வாழ்வதற்கு மிருகங்களையும், பறவைகளையும் மீண்டும் இந்த பூமியில் குடியேற்றுவதற்காக தேவன் இவைகளை அந்த பேழைக்குள் பத்திரமாகக் காக்கும்படி கட்டளையிட்டார். இதற்காகவே இந்த பேழை மிகப்பெரியதாகக் கட்டப்பட்டது.

ஆயினும், ஒவ்வொரு ஜாதியிலுள்ள சகல மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் இடமில்லாதிருந்தது. ஆகவே, ஒவ்வொரு மிருகங்கள் மற்றும் பறவைகளில் ஜோடி ஜோடியாக அந்த பேழைக்குள் காக்கப்பட்டது. சில முக்கியமான மிருகங்களாகிய ஆடு மாடுகளை ஏழு ஜோடிகளாக அந்த பேழைக்குள் வைப்பதற்கு தேவன் நோவாவிடம் கூறியிருந்தார்.

அடுத்தமுறை நீங்கள் ஒரு மிருகசாலைக்குச் செல்லும்போது, அங்குள்ள மிருகங்களை எண்ணிப் பாருங்கள். அப்பொழுது, இவ்வளவு பெரிய பேழையை நோவா கட்டினதற்கான காரணம் புரியும். இந்த பேழைக்குள் மட்டுமே பிரவேசிக்க வேண்டும் என்று தேவன் விரும்பினாரா என்பதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படலாம். அப்படியல்ல, ஆயினும், அதில் அநேகர் பிரவேசிக்கவில்லை. தேவனை நேசித்த நோவாவின் மூன்று குமாரர்களையும் மீட்பதற்கு தேவன் விரும்பினார். இவர்கள் சேம், காம், யாப்பேத் என்பவர்கள்.

மேலும், நோவாவுக்கு அருமையான மனைவி இருந்தாள். அவளும் தேவனை நேசித்தாள். ஆகவே, அந்த ஜலத்திலிருந்து அவளையும் மீட்க தேவன் விரும்பினார்.

நோவாவின் மூன்று குமாரர்களுக்கு அருமையான மனைவிகள் இருந்தார்கள். ஆகவே, நோவா தன் முழு குடும்பத்தையும் பேழைக்குள் அழைத்து செல்லும்படி தேவன் கூறினார். மொத்தத்தில் - நோவா, அவருடைய மனைவி, அவருடைய மூன்று குமாரர்கள் மற்றும் அவருடைய மனைவிகள் - ஆகிய எட்டு பேர் பேழைக்குள் பிரவேசித்தார்கள்.

இப்பொழுது, நோவா அந்த பேழையை எப்படி கட்டினார் என்றும், அது எவ்வளவு காலம் சென்றது என்றும் அறிந்துகொள்ள விரும்புவீர்கள் என்று எண்ணுகிறேன். ஆம், இது ஒரு நீண்ட வேலையாக இருந்தது. இன்றைய தினத்தில் கப்பல்களைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் அருமையான கருவிகள் நோவாவிடம் இல்லை என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். ஆயினும், அவர்களிடம் சில கருவிகள் இருந்திருக்கக்கூடும். அக்காலத்தில் ஜனங்கள் இசைக்கருவிகளை வைத்திருந்ததாக வேதாகமம் கூறுகிறது. இவைகளைச் செய்வதற்கு கருவிகள் நிச்சயமாகத் தேவைப்பட்டிருக்கும் அல்லவா? அதைபோல, இந்த பேழையை உருவாக்குவதற்கும் ஏற்ற கருவிகளை வைத்திருக்க வேண்டும்.

ஆயினும், இந்நாட்களில் படகுகளை வேகமாக கட்டுவதுபோல அவரால் கட்ட முடியவில்லை. அவருக்கு உதவி செய்யும்படி அநேகர் அவரோடு இல்லை. ஒரு சில வாரங்களில் நோவா கட்டியிருக்க வேண்டும் என்று நீங்கள் எண்ணலாம். ஆனால், அந்த பேழையை கட்டுவதற்கு நீண்ட காலம் எடுத்துக் கொண்டார். ஆயினும், அந்த கால அளவை குறித்து வேதாகமம் குறிப்பிடவில்லை.

ஜலப்பிரளயத்தின்போது நோவா வயது முதிர்ந்தவராக இருந்திருக்க வேண்டும். ஆம், அவர் வயது சென்றவராய் இருந்தார். அக்காலத்தில் ஜனங்கள் மிக வயது சென்றிருந்தாலும் வாழ்ந்துக் கொண்டிருந்தனர். இந்த பேழையை கட்டுவதற்கு முன் நோவா ஐந்நூறு வயது நிரம்பியவராய் இருந்ததை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? ஜலப்பிரளயம் வந்தபோது, நோவா அறுநூறு வயதுள்ளவராய் இருந்தார். ஜலப்பிரளயத்திற்கு பின் அவர் முந்நூறு வருடங்கள் உயிரோடு வாழ்ந்தார். அவர் எவ்வளவு வயதானவராக இருந்திருக்க வேண்டும்! ஆயினும், இந்த உலகத்தில் அதிகமான வருடங்கள் வாழ்ந்தவர் நோவா அல்ல.

இந்த உலகத்தில் நீண்ட காலம் வாழ்ந்தவர் மெத்தூசலா. மெத்தூசலா மரிக்கும்பொழுது என்ன வயதாக இருந்திருப்பார் என்று உங்களால் யூகிக்க முடிந்ததா? அவர் தொள்ளாயிரத்து அறுபத்து ஒன்பது வருடங்கள் உயிரோடிருந்தார். அதாவது, இக்காலத்தில் வாழும் ஜனங்களில் பத்துமடங்கான ஆயுசு நாட்களாகும். நீங்கள் தொள்ளாயிரம் வருடங்களுக்கு மேலாக வாழ்வதற்கு விருப்பம் உடையவர்களா?

ஆம், நாட்கள் செல்லச்செல்ல மீண்டும் ஜனங்கள் நீண்ட காலமாக வாழ்வதற்கு வாய்ப்பைப் பெறுவார்கள். மேலும், ஜனங்கள் மரிக்காமல் நித்தியமாக ஜீவனோடு இருப்பதற்கு காலம் சமீபித்திருக்கிறது என்று வேதம் கூறுகிறது எவ்வளவு ஆச்சரியமான காரியம்! இனி எந்த உபத்திரவமும் வியாதியும் இராது.

நோவாவின் பேழைக்கு திரும்பவரலாம். அதை கட்டுவதற்கு, ஒரு நீண்ட காலப்பகுதி அவர் எடுத்துக்கொண்டார். ஆனால், ஜலப்பிரளயத்தின்பொழுது அந்த பேழை மூழ்கிவிடாமல் இருப்பதற்கு ஏற்றவாறு தேவன் அதை கட்டும்படி ஆலோசனை கூறினார். அந்த பேழைக்குள் ஆங்காங்கே தண்ணீர் வரக்கூடியதாய் இருந்தால், நோவாவுக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் எவ்வளவு இடைஞ்சலாக இருந்திருக்கும். ஆகவே, எந்த குறைபாடுமின்றி பேழையைக் கட்டுவதற்கு தேவன் கற்பித்தார். இறுதியாக அந்த பேழைக்குள் தண்ணீர் பிரவேசியாதபடிக்கு, அதற்கு நோவா கீல் பூசினார். அது சாலைகளுக்குப் பயன்படுத்தும் தார்போல இருந்திருக்கும் என்று நாம் யூகிக்கலாம்.

இறுதியாக, அந்த பேழை கட்டப்பட்டது. எல்லா மிருகங்களும் அந்த பேழைக்குள் இருப்பதற்கான ஏற்பாடுகளை நோவா செய்து முடித்தார். அதற்குப் பின் அவருடைய மனைவி, மூன்று குமாரர்கள் மற்றும் அவர்களுடைய மனைவிகளோடு அந்த பேழைக்குள் பிரவேசித்தார். அந்த பேழைக்கு மிகப் பெரிய கதவை வைத்திருந்தார். அனைவரும் பிரவேசித்த பின் தேவன் அந்த கதவை மூடினார். அந்த பேழைக்குள் அனைவரும் ஏழு நாட்கள் தங்கினார்கள். அவர்களுக்கு அது நிச்சயமாக ஒரு நீண்ட காலமாக இருந்திருக்கும்!

இறுதியாக மழை பெய்யத் துவங்கியது. மழை பெய்தது, பெய்தது, பெய்தது, பெய்து கொண்டே இருந்தது.

இந்த மழை எவ்வளவு நாட்கள் பெய்தது என்று அறிவீர்களா? இன்றைய நாட்களில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் மழை பெய்தால் நாம் எவ்வளவு சோர்ந்து போகிறோம்? மழை நின்று எப்பொழுது சூரியனைக் காணலாம் என்று நாம் விரும்புகிறோம் அல்லவா! ஆனால், நோவாவின் நாட்களிலோ இரண்டு மூன்று நாட்களுக்குமேல் அதிகமாக மழை பெய்தது. கிட்டதட்ட நாற்பது நாட்கள் முழுமையாக மழை பெய்துகொண்டே இருந்தது. சற்று சிந்தித்து பாருங்கள்! முழுமையாக ஆறு வாரங்கள் மழை பெய்துகொண்டே இருந்தது! இவ்வளவு மழை பெய்த தண்ணீர் எவ்வளவாய் இருந்திருக்க வேண்டும்!

தேவன் இப்படிப்பட்ட ஒரு பேழையை கட்டச் சொன்னதற்கான காரணத்தை இப்பொழுது நோவா உணர்ந்தார். பேழை கட்டப்பட்ட வெட்டாந்தரையும்கூட தண்ணீரினால் மூடப்பட்டது. இப்பொழுது ஜலம் பூமியை மூடினதால், அந்த பேழை மிதக்க துவங்கியது. இப்படி மிதப்பதற்காகவே இப்பேழை வடிவமைக்கப்பட்டது. இந்த பேழையினிமித்தம் நோவா தம்முடைய குடும்பத்தோடு. அந்த ஜலப்பிரளயத்தில் மூழ்காதபடி தப்பித்துக் கொண்டார். தேவன் சொல்லியபடி நோவா அந்த பேழையைக் கட்டினதினால், அந்த பேழை மிக அருமையானதாக இருந்தது. இந்த முழு உலகத்தையும் ஜலம் மூடினாலும், நோவா தம்முடைய குடும்பத்தோடு பாதுகாப்பாய் இருந்தார்.

நாம் இன்று காணக்கூடிய மிகப்பெரிய படகுகளோடு ஒப்பிட்டுப்பார்க்கையில், நோவா கட்டின பேழை சற்று வேறுபட்டது. மிக உயரமான புகைபோக்கிகள் அதற்கில்லை, அதை செலுத்துவதற்கு இயந்திரங்கள் (இன்ஜின்கள்) பொறுத்தப்படவில்லை. ஏனெனில், அந்த பேழை எங்கும் செல்ல வேண்டிய அவசியம் இல்லாதிருந்தது. அது மிதந்தால் மட்டுமே போதுமானதாய் இருந்தது. நாற்பது நாட்கள் மழை பெய்தபின், பூமியெங்கும் ஜலம் மூடி பேழை அதின்மேல் மிதந்து கொண்டிருந்தது. நோவாவும் அவர் குடும்பத்தினரும் ஜலம் வற்றிப்போவதற்குக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் இருநூற்று இருபத்து நான்கு நாட்கள் காத்திருந்த பின், அந்த பேழைக்குமேல் கட்டப்பட்டிருந்த ஒரு ஜன்னலை திறந்து நோவா வெளியே பார்த்தார். அவர்கள் என்ன பார்த்திருக்கக்கூடும்? தண்ணீருக்குமேல் மலை உச்சிகள் காணப்பட்டது. அப்பொழுது ஜலம் வற்றிக்கொண்டிருந்ததை அறிந்துகொண்டார்கள். ஆனால், எவ்வளவு தண்ணீர் குறைந்தது

என்பதை நோவா அறியாதிருந்தார். அப்பொழுது எந்தவிதமான விமானங்களும் இராததினால், மேலே பறந்து சென்று நிலம் காய்ந்திருந்ததா என்று பார்க்க வழியில்லாதிருந்தது.

மேலும், நாற்பது நாட்கள் காத்திருந்த பின், நோவா ஒரு காகத்தை அந்த ஜன்னலின் வழியாக வெளியே அனுப்பினார். ஜலம் வடியும்வரை அந்த காகம் போக்கும் வரத்துமாய் இருந்தது. ஆனாலும், எந்தளவிற்கு நிலம் காய்ந்திருந்தது என்பதை நோவா அறியாததினால், அவர் ஒரு புறாவை வெளியே அனுப்பினார். அந்த புறா மீண்டும் அவரிடத்திற்கு வந்தது. ஏழு நாட்களுக்குப் பின் அதே புறாவை அவர் மீண்டும் அனுப்பினார். அது பறந்து சென்று துளிர்விட்ட ஒரு கொழுந்தை எடுத்து வந்தது. அதினால் நிலம் காய்ந்திருந்தது என நோவா அறிந்துகொண்டார்.

நோவா எவ்வளவு (smart) சாதுரியமான மனிதனாக இருந்தார்! அதற்குப் பின் ஏழு நாட்கள் அவர் காத்திருந்து, ஜலம் வற்றிப்போன பின் மீண்டும் அந்த புறாவை வெளியே அனுப்பினார். அந்த புறாவோ இந்தமுறை பேழைக்கு வரவில்லை. அப்பொழுது, இந்த பூமியின்மேல் அதிகமான நிலப்பரப்பு காய்ந்திருந்ததை நோவா உணர்ந்தார். இப்பொழுது நிலம் காய்ந்திருந்ததினால், அந்த பேழை ஒரு மலையின்மேல் கரை தட்டியது. வேதாகமம் அதை அரராத் மலை என்று அழைக்கிறது.

நிலம் காய்ந்திருப்பதை உறுதிபடுத்திக்கொண்ட நோவா, பேழையின் கதவை திறந்தார். அனைவரும் வெளியே வந்தனர். அவருடைய மனைவி, அவருடைய மூன்று குமாரர்கள், அவர்களுடைய மனைவிகள் மற்றும் சகல மிருகங்களும், பறவைகளும், இவ்வளவு நாட்களுக்குப் பின் அந்த பேழையிலிருந்து மகிழ்ச்சியோடு அனைவரும் வெளியே வந்தார்கள். தேவன் நோவாவையும், அவர் குடும்பத்தினரையும் இவ்வளவு பெரிய அழிவிலிருந்து இரட்சித்ததினிமித்தம் நோவா மிகவும் மகிழ்ச்சியடைந்து, ஆபேலைப்போல கற்களினால் ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதின்மேல் தேவனுக்குக் காணிக்கைகளைச் செலுத்தினார். இதினிமித்தம் தேவனும் மகிழ்ச்சியடைந்தார். இந்த பூமியை இனி ஒருபோதும் இப்படிப்பட்ட ஜலப்பிரளயத்தினால் அழிப்பதில்லை என்று தேவன் நோவாவிடம் வாக்களித்தார்.

இதை நோவா உண்மையில் நம்ப வேண்டும் என்று தேவன் விரும்பி என்ன செய்தார் தெரியுமா? ஒரு அழகான வானவில்லை வானத்தில் வைத்து, இனி இந்த உலகத்தை ஜலம் அழிக்கப்போவதில்லை என்பதற்கு இது ஒரு அடையாளம் என்று நோவாவிடம் கூறினார். இது எவ்வளவு அற்புதமான காரியம்?

இந்நாட்களிலும், இந்த வானவில்லை நாம் அடிக்கடி பார்த்துக் கொண்டிருக்கின்றோம் அல்லவா? ஆம், நாம் எப்பொழுதெல்லாம் இந்த வானவில்லை காண்கின்றோமோ, நடந்த ஜலப்பிரளயம் எவ்வளவு கடுமையாக இருந்தாலும், இனி அப்படிப்பட்ட ஒரு ஜலப்பிரளயம் வரப்போவதில்லை என்று நாம் உறுதி கொள்ளலாம்.

மீண்டுமாக இந்த உலகத்தை ஜலம் மூடிப்போடாமல் இருப்பதற்கு, தேவன் ஒரு நியாயமான காரணத்தை வைத்திருக்கிறார். மனுஷனுடைய குடியிருப்புக்காக இந்த பூமியை சிருஷ்டித்தார் என்று நாம் பார்த்தோம். நாம் முன்பு பார்த்தபடி இந்த முழு உலகமும் ஏதேனைபோல் மாறப்போகிறது. அப்பொழுது நோவாவும், அவர் குடும்பத்தினரும் இந்த பூமியின்மேல் மனுஷராக வாழ்ந்த யாவரும் தங்களுடைய கல்லறைகளிலிருந்து திரும்பிவந்து இந்த அழகான தோட்டத்தில் மீண்டும் நித்தியமாகக் குடியிருப்பார்கள்.

### கேள்விகள்:-

1. கப்பலைக் கட்டின முதல் மனிதன் யார்? அவர் வெட்டாந்தரையில் கப்பலைக் கட்டின காரணம் என்ன?

2. அநேக மிருகங்களை வைத்துக்கொள்ளும்படியாக அந்த கப்பல் மிகப் பெரியதாக கட்டப்பட்டதின் நோக்கம் என்ன?

3. அந்த பேழை வெட்டாந்தரையில் கட்டப்பட்டாலும் அது தண்ணீரில் மிதப்பதற்கு என்ன காரணம்?

4. நோவா கட்டின கப்பலுக்குள் இயந்திரங்கள் (engine) ஏன் பொறுத்தப்படவில்லை?



## 5. பாபேல் கோபுரம்

**நீங்கள்** விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது, ஒரு சிறுவன் உங்களிடம் வந்து, "வாட்டன்" ("Vattun") என்று கூறினால், நீங்கள் என்ன சொல்லுவீர்கள்? "ஐயோ, அந்த சிறுவனுக்குப் பேச தெரியவில்லை" என்று சொல்வீர்களல்லவா? அப்படி நினைத்தால் அது தவறாகிவிடும். ஏனெனில், அந்த சிறுவனுக்கு நன்கு பேசத்தெரியும்.

நீங்கள் அறியாத வேறொரு மொழியில் அவன் பேசுகிறான் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவன் பேசின வார்த்தை வித்தியாசமானதாக இருந்தாலும், அவன் உங்களிடம் குடிக்க தண்ணீர் கேட்டான். அவன் சுவீடன் மொழியைப் பேசக்கூடிய சிறுவனாக இருக்கிறான். நீங்களும் சுவீடன் மொழியை பேசுவீர்களானால், அவனோடுகூட நீங்களும் பேசியிருப்பீர்கள். பேசுவதினால் நீங்கள் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொண்டிருப்பீர்கள். ஆனால், நீங்கள் அந்த வார்த்தையைப் புரிந்து கொள்ளாததினிமித்தம் அந்த சிறுவன் பயந்து போனதையும் உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

பல வருடங்களுக்கு முன் இந்த உலகத்தில் ஜனங்கள் ஒரேவிதமான மொழியைப் பேசி ஒருவரையொருவர் புரிந்து கொண்டார்கள். இப்பொழுது இருப்பதைபோல, அப்பொழுது இந்த உலகத்தில் அநேக ஜனங்கள் இல்லை. ஏனெனில், நாம் முன்னதாக பார்த்தபடி, இந்த பூமியின் மேலிருந்த பெரும்பாலான ஜனங்கள் ஜலப்பிரளயத்தினால் அழிக்கப்பட்டபின், சில வருடங்கள் கழித்து இச்சம்பவம் நடந்தது.

ஜலப்பிரளயம் முடிந்தபின், இந்த உலகத்தில் நோவா மற்றும் அவரது குடும்பத்தினர் உட்பட எட்டு பேர் மட்டுமே இந்த பூமியில் வாழ்ந்து வந்தனர். நோவாவுக்கு மூன்று குமாரர்களும், அவர்களுக்கு மூன்று மனைவிகள் இருந்ததாகவும் பார்த்தோம். இந்த ஜலப்பிரளயத்திற்குப் பின் இவர்கள் பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்கள். இந்த பிள்ளைகள் பெரியவர்களானபோது,

அவர்களுக்கும் குழந்தைகள் பிறந்தது. இப்படியாக இந்த உலகத்தில் வெகு சில ஜனங்களே இருந்தார்கள்.

நோவாவின் குமாரர்களில் ஒருவருக்கு காம் என்று பெயர். காமின் ஒரு குமாரர் கூஷ் என்று அழைக்கப்பட்டார். கூஷ்-க்கு நிம்ரோத் என்னும் குமாரன் இருந்தான். இப்படியாக நிம்ரோத் என்று அழைக்கப்பட்ட மனுஷனுக்கு நோவா கொள்ளு தாத்தாவாக இருந்தார். நிம்ரோத் வேட்டையாடுவதில் வல்லவன் என்று வேதம் கூறுகிறது. அவன் மிக தைரியமாக காட்டு மிருகங்களை வேட்டையாடினதினால், அவன் ஒரு அற்புதமான மனுஷன் என்று அனைவரும் எண்ணினார்கள். இவன் ஒரு இராஜாவாக அவர்கள்மேல் ஆட்சி புரிவது நலமாயிருக்கும் என்று அவர்களுக்குத் தோன்றியது.

ஒரு மிகப்பெரிய நகரத்தைக் கட்டுவதற்கும், அதில் மிக உயரமான ஒரு கோபுரத்தை எழுப்புவதற்கும் ஜனங்கள் அனைவரும் ஒன்றுகூடி முடிவுசெய்து அதற்கான வேலையைத் துவங்கினார்கள். அவர்கள் வானளாவிய ஒரு கோபுரத்தைக்கட்ட மனதாயிருந்து, அதற்கான திட்டங்களை வகுத்தார்கள். இந்த உயரமான கோபுரம் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதபடிக்கு, ஒருமித்து வாசம்செய்வதற்காக அது கட்டப்பட்டது என்று வேதாகமம் கூறுகிறது.

அந்த கோபுரம் மிக உறுதியாக இருக்க வேண்டும் என்று திட்டமிட்டு அவர்கள் செங்கல்களை அறுத்து, அவைகளை ஒன்றோடொன்று ஒட்டி, அந்த கோபுரத்தைக் கட்டத்தொடங்கினார்கள். இன்றைய தினத்தில் நாம் ஒரு வீட்டை கட்டுவதற்கு, செங்கல்களையும், சிமெண்ட்டையும் பயன்படுத்துவதற்கு ஒப்பாகவே அந்த கோபுரமும் கட்டப்பட்டது.

ஆனால், இப்படிப்பட்ட கோபுரத்தை ஜனங்கள் கட்டுவதைப் பார்ப்பதற்கு தேவன் பிரியப்படவில்லை. இந்த உலகத்தில் எல்லா ஜனங்களும் இந்த கோபுரத்தைக் காணும்படியாக ஒரே இடத்தில் தரித்திருப்பதை தேவன் விரும்பவில்லை. அவர்கள் இந்த பூமியில் மற்ற பகுதிகளிலும் பிரிந்து வாழ வேண்டும் என்று அவர் விரும்பினார். இதற்காக, அவர் என்ன செய்திருப்பார் என்று எண்ணுகிறீர்கள்? அவர்கள் ஒருவரோடொருவர் பேசுவதை புரிந்துகொள்ளாத வண்ணம் அங்கு தேவன் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தினார்.

இதை, கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? அனைவரும் ஒரே மொழியில் பேசி, அந்த கோபுரத்தை மேலும் உயரமாகக் கட்டுவதற்கு திட்டங்களைப் போடுவதற்குப்பதிலாக, அவர்கள் ஒவ்வொருவரும் பேசிக்கொண்டது மற்றவர்களுக்குப் புரியாமல் போனது!

ஒருவர் பேசுவது மற்றவருக்குப் புரியாமல் போனதினால், அவர்கள் அனைவரும் ஒரே இடத்தில் இருப்பதற்கு சாத்தியமில்லாமற்போனது. ஆகவே, இவர்கள் சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்து சென்றனர். ஒரு சிலர் ஒரு திசையிலும், மற்ற சிலர் வேறு திசையிலும் சென்றனர். ஒருவரோடு ஒருவர் பேசுவதைப் புரிந்துகொண்டவர்கள், ஒரு குழுவாகப் பிரிந்துசென்றனர். இப்படியாக வெவ்வேறு மொழிகளைப் பேசினவர்கள், வெவ்வேறு குழுவாக, வெவ்வேறு பக்கம் சென்றார்கள்.


இதினிமித்தமாக இந்த உலகத்தில் அநேக மொழிகளை நாம் காணலாம். ஆயினும், நாளுக்கு நாள் பரந்து விரிந்த இந்த முழு உலகத்திலிருக்கக்கூடிய அனைவரும் ஒரே மொழியில் பேசுவார்கள். ஸ்வீடன், பிரான்ஸ், துருக்கி, சீனா - ஆகிய எந்த இடங்களிலிருந்து ஜனங்கள் வந்தாலும் கவலையில்லை. இந்த உலகத்தில் எந்த மொழியில் ஜனங்கள் இருந்தாலும், அவர்கள் புரிந்துகொள்ளும்படி எப்படி பேசவேண்டும் என்று அனைவரும் அறிந்திருப்பார்கள். எவ்வளவு மேன்மையான காரியம்!

இந்த பூமியிலுள்ள எல்லா ஜனங்களும் ஒருவர் பேசுவதை மற்றவர் புரிந்துகொள்ளும் காலம் வரும்பொழுது, அவர்கள் தேவனைப்பற்றி கற்றுக்கொள்வார்கள். தேவன் எவ்வளவு அற்புதமானவர் என்றும், நமக்காக அவர் செய்திருக்கும் மிகப்பெரிய காரியங்களைப்பற்றியும், அவர் விரும்பக்கூடிய காரியங்கள் செய்தால், நமக்களிக்கக்கூடிய நன்மைகளையும் கற்றுக்கொள்வார்கள்.

**கேள்விகள்:-**

1. இன்றைய உலகத்தில் அனைவரும் ஒரே மொழியை பேசாமல் இருப்பதன் காரணம் என்ன?

2. சகல ஜனங்களும் ஒரேவிதமான மொழியை பேசுவதற்கு இனி காலம் வருமா?



## 6. ஆபிரகாம், தேவனுடைய சிநேகிதர்

சிநேகிதர்களைக் கொண்டிருப்பது அற்புதமான காரியமல்லவா! மேலும், நாம் நம்முடைய சிறந்த நண்பர்களாக பிதாவாகிய தேவனையும், இயேசுவையும் கொண்டிருக்கலாம். ஆனால், தேவனுக்கும் சிநேகிதர்கள் உண்டு என்பதை நீங்கள் அறிவீர்களா? ஆம், இந்த பூமியின்மேல் தேவனுக்கு பிரியமாக நடக்கக்கூடிய யாவரும் அவருக்கு நண்பர்களாக இருக்கிறார்கள். நாமும் அவருக்குப் பிரியமான காரியங்களைச் செய்ய முயற்சிக்கிறோம். ஆகவே, நாமும் அவருக்கு நண்பர்களாக இருக்கலாம்.

நீண்ட நாட்களுக்கு முன் ஆபிரகாம் என்னும் விசேஷித்த நண்பரை தேவன் கொண்டிருந்தார். எவ்வளவு அற்புதமான பெயர்! இந்த பெயருக்கு உண்மையில் ஏதோ பொருள் இருக்க வேண்டும். இதற்கு, "திரளான ஜாதிகளுக்குத் தகப்பன்" என்று பொருள். ஆனாலும், ஆபிரகாமுக்குச் சொந்தமான பிள்ளைகள் அநேகர் இல்லை. ஆனால், தேவனை விசுவாசித்து அவருக்குப் பிரியமாக வாழக்கூடிய எல்லா ஜனங்களும் ஆபிரகாமின் குடும்பத்தாரைச் சேர்ந்தவர்கள் என்று வேதாகமம் கூறுகிறது. ஆகவே, ஆபிரகாம் ஜனக்கூட்டத்தின் தந்தை என்று அழைக்கப்பட்டார்.

நோவா அந்த மிகப்பெரிய பேழையைக் கட்டி, எல்லா ஜலமும் இந்த பூமியின்மேல் வந்ததற்குப் பின், ஆபிரகாம் ஒரு சிறுவனாக இருந்தார். அவர் வளர்ந்து, திருமணம் செய்துகொண்டு ஒரு பட்டணத்தில் வாழ்ந்தார். இன்றைக்கு இருக்கும் நியூயார்க் பட்டணம்போலவும், லண்டனைப்போலவும் அது இருக்கவில்லை. கல்தேயரின் நாட்டிலுள்ள ஊர் என்னும் பட்டணத்தில் அவர் குடியிருந்தார். அக்காலத்தில், இப்படியாகத்தான் பட்டணங்கள் அழைக்கப்பட்டது.

கல்தேயா தேசத்தில் தேவனை நம்புவதற்கு ஒருவரும் இல்லை. அந்த ஜனங்கள் சந்திரனை தேவன் என்று எண்ணி அதை ஆராதித்தார்கள். எவ்வளவு விநோதமாய் இருக்கிறது! நாம் சந்திரனிடத்தில் ஜெபிக்க முடியுமா? நிச்சயமாக இல்லை. சந்திரன் நமக்கு எதுவும் செய்ய முடியாது என்று நாம் அறிந்திருக்கிறோம்.

நீண்ட நாட்களுக்கு முன் வாழ்ந்த ஜனங்கள் அறியாமையில் இருந்தார்கள். ஆனால், ஆபிரகாம் சில காரியங்களை அறிந்திருந்தார். நோவா மரித்து இரண்டு வருடங்களுக்குப் பின் ஆபிரகாம் பிறந்தார். ஆகவே, தேவன் நோவாவையும், அவருடைய குடும்பத்தையும் எவ்வளவு நேசித்தார் என்பதை ஆபிரகாம் அறிந்திருந்தார். ஆகவே, ஆபிரகாமும் தேவனை நேசித்து அவரை தொழுதுகொண்டார். தேவன் சொன்ன சகல காரியங்களையும், ஆபிரகாம் விசுவாசித்ததினால், அவர் தேவனுடைய மனிதர் ஆனார்.

ஆபிரகாம் எழுபத்தைந்து வயதானபோது, தேவன் ஒரு விசேஷித்த செய்தியை அவருக்கு அனுப்பினார். அது என்னவாக இருக்கும் என்று எண்ணுகிறீர்கள்? ஆபிரகாம் வசித்துக் கொண்டிருந்த ஊர் என்ற பட்டணத்திலிருந்து புறப்பட்டு பல மைல்களுக்கு அப்பால் இருந்த வேறொரு தேசத்திற்குப் போகும்படி ஒரு வார்த்தையைச் சொன்னார்.

இது ஆபிரகாமுக்கு எளிதான காரியமாக இருக்கவில்லை. அக்காலத்தில் பிரயாணம் செய்ய நான்கு சக்கர வாகனங்களோ, இரயில் வண்டிகளோ, விமானங்களோ இருக்கவில்லை. ஆபிரகாம் பயணிக்க இரண்டே வழிகள் இருந்தது. ஒன்று அவர் நடந்து செல்ல வேண்டும், அல்லது ஒட்டகத்தின் மேலாவது கழுதையின் மேலாவது ஏறிச்செல்ல வேண்டும். ஆனால், நீண்ட தூரம் பயணிப்பதற்கு இந்த மிருகங்கள் சோர்வடைந்துவிடும்.

மைல் கணக்காக இடம் விட்டு இடம் செல்வது மிகக்கடினமான காரியம். ஆனால், தேவன் சிறந்த காரியங்களை மட்டுமே சொல்வார் என்பதை ஆபிரகாம் விசுவாசித்தார். ஆபிரகாம் தேவனுக்கு சிநேகிதனாயிருந்ததற்கு இதுவும் ஒரு காரணம். ஆபிரகாம் தன்னை விசுவாசித்தார் என்று தேவனும் அறிந்திருந்தார். இதுவே, "நண்பர்கள்" என்பதற்கு சரியான பொருள்.

ஆபிரகாமுக்கு சாராள் என்கிற மனைவி இருந்தாள். சாராளும், ஆபிரகாமோடு செல்ல வேண்டும் என்று தேவன் விரும்பினார். ஆகவே, தேவன் அற்புதமான ஒரு வாக்குத்தத்தத்தை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களுக்கு பிள்ளைகள் இல்லாதிருந்தது. தேவன் ஆபிரகாமுக்கு ஒரு குழந்தையை வாக்களித்தார். மேலும், ஆபிரகாமின் பிள்ளைகள் இந்த முழு உலகத்தின் ஜனத்துக்கும் நன்மைகளைச் செய்வதற்குப் பயன்படுத்தப்படுவார்கள் என்றும் தேவன் வாக்களித்தார். ஆபிரகாமின் சகோதரனுக்கு லோத் என்ற குமாரன் இருந்தார். லோத், ஆபிரகாமுடைய தந்தையோடு வாழ்ந்தார். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஆபிரகாமோடுகூட செல்வதற்கு லோத்தும் முடிவெடுத்தார். இப்படியாக இறுதியில் அவர்கள் ஊர் என்னும் பட்டணத்தைவிட்டு புறப்பட்டபோது, ஒரு குடும்பமாகப் புறப்பட்டார்கள். ஆபிரகாம், சாராள், ஆபிரகாமின் தந்தை மற்றும் லோத்.

இவர்கள் மட்டும் அல்ல!

ஆபிரகாம் ஒரு பட்டணத்தில் வாழ்ந்தாலும், அவருக்கு அநேக கால்நடைகள் இருந்ததினால் பட்டணத்திற்கு வெளியே மிகப்பெரிய பண்ணையும் அவருக்கு இருந்தது. இப்பொழுது அனைவரும் நடக்கத் தொடங்கினார்கள். ஆம், அவர் குடும்பமும், அவருக்கு பின்னாக சகல கால்நடைகள் யாவும் தேவன் காண்பித்த இடத்திற்குப் பயணித்ததை சற்று கற்பனை செய்து பாருங்கள்.

நாம் முன்னதாக பார்த்தபடி, அக்காலத்தில் வாகனங்கள் ஏதும் இல்லாததினால் சரியான சாலைகளும் இல்லாதிருந்தது. தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த தேசத்திற்குப் பயணிக்கையில், அவர்கள் அதிகமான சாலைகளின் வழியாக சென்றிருப்பதற்கு வாய்ப்பில்லை.

இரவு நேரங்களில் தங்குவதற்கு வழியில் எந்தவிதமான விடுதிகளும் இல்லை. ஒவ்வொரு நாளின் முடிவிலும் வெகுதூரம் பயணித்தார்கள். அந்த நாள் முடியும்போது, அவர்கள் இரவு நேரங்களில் தங்குவதற்கு கூடாரங்கள் போடுவதற்கு இடம் தேடியிருக்க வேண்டும். இப்படியாக இது ஒரு கடுமையான பிரயாணமாக இருந்திருக்க வேண்டும். ஆனாலும், இந்த பயணத்தில் அனைவரும் மகிழ்ச்சியடைந்திருக்க வேண்டும்.

ஆபிரகாமும், அவருடைய குடும்பங்களும் அவர்களுடைய கூடாரங்களில் தங்கியிருப்பதை சற்று கற்பனை செய்து பாருங்கள். கூடாரங்களுக்கு வெளியே அதிக எண்ணிக்கையிலுள்ள கால்நடைகள் சத்தம் போட்டுக்கொண்டிருக்க வேண்டும்.

நிச்சயமாக முழு குடும்பத்திற்கும் போஜனம் தேவைப்பட்டிருக்கும். சாராள் மற்றும் லோத்தின் மனைவி, குடும்பங்களுக்குத் தேவையான உணவை சமைத்திருக்க வேண்டும். இதனால் கூடாரங்களுக்கு மத்தியில் புகை கிளம்பியிருக்கக்கூடும். மாலை நேரங்களில் சூரியன் மறைந்து குளிர்ச்சியான தென்றல் வீசிக்கொண்டிருப்பது எவ்வளவு இரம்மியமாக இருந்திருக்கக்கூடும்.

ஆனால், ஆபிரகாம் இப்பயணத்தை ஒரு விடுமுறையைக் கழிப்பதுபோல பயணிக்கவில்லை. உண்மையில் அவர் செல்ல வேண்டிய இடத்தைக்குறித்து அறியாதிருந்தார். தேவன் வாக்களித்த இடத்திற்கு அவர் வழிநடத்துவார் என்று தேவனை விசுவாசித்தார். நிச்சயமாக ஒரு நல்ல இடத்திற்கு வழிநடத்துவார் என்று ஆபிரகாம் எதிர்பார்த்தார். தேவனும் அப்படியே செய்தார்.

அவர்கள் பல நாட்களாகவும், பல வாரங்களாகவும் பயணித்துக் கொண்டிருந்தார்கள். நித்தமும் அவர்கள் வெகுதூரம் பயணிக்கவில்லை. இதன் காரணத்தை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. இறுதியாக அவர்கள் ஆரான் என்ற இடத்தை வந்தடைந்தார்கள். ஏதேன் தோட்டம் இருந்ததாக கூறப்படும் மெசொப்பொத்தாமியா என்ற தேசத்தில் ஆரான் இருந்தது. ஆபிரகாம் பயணித்தபோது, மெசொப்பொத்தாமியா என்று அழைக்கப்பட்ட அந்த தேசம், இப்பொழுது ஈராக் என்று அழைக்கப்படுகிறது. பாருங்கள், பூமியில் இந்நாள்வரைக்கும் காணப்படும் உண்மையான தேசமாகும். ஆனால், இப்பொழுது அதற்கு வேறுபெயர் வழங்கப்பட்டுள்ளது.

ஆபிரகாம், அவருடைய தந்தை மற்றும் மீதியுள்ள அவருடைய குடும்பத்தினர் ஆரானுக்கு வந்தபோது, ஒரு சம்பவம் நிகழ்ந்தது. என்னவாக இருக்கும் என்று எண்ணுகிறீர்கள்? ஆபிரகாமின் தந்தை மரித்தார். அவர் மிகவும் வயது சென்றவராக இருந்ததினால் மரித்தார். அதற்குமேல் பயணிப்பதற்கு அவருக்குள் இருந்த பலம் குன்றிப்போய்விட்டது. ஆனால், ஆபிரகாமின் தந்தை மரித்தபின், அவர்கள் மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தார்கள். இறுதியாக, தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த தேசத்தில் வந்து சேர்ந்தார்கள்.

ஆபிரகாம் ஆச்சரியப்படுமளவுக்கு தேவன் மற்றொரு வாக்குத்தத்தத்தையும் கொடுத்திருந்தார். ஆபிரகாமுக்கும், சாராளுக்கும் ஒரு குமாரனை வாக்களித்திருந்தாலும், அவர்களுக்கு இன்னமும் குழந்தைகள் பிறக்கவில்லை. ஆபிரகாமுக்கு மட்டுமல்ல, நமக்கும் ஒரு நல்ல பாடம் இதிலுள்ளது. எப்பொழுதும் தேவன் வாக்களித்ததை உடனடியாக நமக்கு அவர் கொடுப்பதில்லை. ஆனால், தேவன் நமக்கு வாக்களித்த எந்த காரியத்தையும், உரிய காலங்களில் நிச்சயமாகக் கொடுப்பார் என்பதை நாம் உறுதியாக நம்ப வேண்டும். அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை!

இந்த பூமியிலுள்ள எல்லா ஜனங்களுக்கும் பல அற்புதமான காரியங்களைச் செய்வதாக தேவன் வாக்களித்திருக்கிறார். மரித்துப்போன எல்லா ஜனங்களுக்கும் மீண்டும் ஜீவனைக் கொடுப்பார் என்று தேவன் வாக்களித்திருக்கிறார். இது எவ்வளவு அற்புதமான காரியம்?

நீண்ட காலத்திற்கு முன் தேவன் இவைகளை வாக்களித்தார். ஆனால், இந்நாள்வரைக்கும் அவைகள் நிறைவேறாததினால், தேவன் வாக்களித்ததை நிறைவேற்றமாட்டார் என்பது பொருளல்ல. எல்லா காரியங்களையும் செய்வதற்கு தேவன் காலங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, காலங்கள் நிறைவேறும்போது, அவர் வாக்களித்த எல்லா வாக்குத்தத்தங்களும் உண்மையில் நிறைவேறும். ஆம், ஆபிரகாமுக்கும், சாராளுக்கும் ஒரு குமாரனை தேவன் வாக்களித்தாலும், குறித்த காலம் வராததினால், அவர்கள் காத்திருக்க வேண்டியதாய் இருந்தது.

ஒருநாள் மூன்று தூதர்கள் ஆபிரகாமை சந்தித்தார்கள். ஆயினும், அவர்கள் மனுஷரைப்போல் இருந்ததினால், அவர்கள் தூதர்கள் என்று அறியாதிருந்தார். தம்முடைய கூடாரத்தைக் கடந்துசெல்லும் வழிபோக்கர்கள் என்று எண்ணினார். ஆபிரகாமின் காலத்தில் எந்தவிதமான உணவு விடுதிகளும் இல்லாததினால் அவர்கள் பசியாக இருப்பார்கள் என்றெண்ணி, அவர்களை தம் கூடாரத்திற்கு வரும்படி வேண்டினார். நீண்ட பயணத்திற்குப் பின் இவர்கள் சோர்வடைந்திருக்கலாம் என்று ஆபிரகாம் எண்ணியிருக்கலாம்.

ஆபிரகாம் எவ்வளவு நல்ல மனுஷனாக இருந்தார். அவர் தேவனை மட்டும் நேசியாமல், தேவன் செய்ய வேண்டும் என்று விரும்பும் சகலகாரியங்களையும் செயல்படுத்த விரும்பினார். தேவன் அனைவருக்கும் உணவளித்து ருசிகரமான பழங்களையும், காய்கறிகளையும் இம்மண்ணிலிருந்து விளைவிக்கிறார் என்பதை ஆபிரகாம் அறிந்திருந்தார். தனக்காக தேவன் இவ்வளவு நன்மையான காரியங்களைச் செய்திருக்கும்போது, சோர்ந்துபோன வழிபோக்கருக்கு உணவு கொடுப்பது நலமாயிருக்கும் என்று ஆபிரகாம் தனக்குள் சிந்தித்தார். அவ்வகையில் நாம் பார்க்கும்பொழுது, ஆபிரகாம் தேவனைபோல, தயாளகுணமுள்ளவராக இருந்தார்.

அந்த வழிப்போக்கரை ஆபிரகாம் தம்முடைய கூடாரத்திற்கு அழைத்து வந்தார். பகலில் உஷ்ணமான வேளையாயிருந்ததால் அவர்களை கூடாரத்திற்குள் அழைத்துச் செல்லாமல், அருகாமையிலிருந்த பெரிய மரத்தின் கீழ் அமரச்செய்தார். அவர்களுக்குத் தேவையான உணவை சமைக்கும்படி தன் மனைவியிடம் கேட்டுக்கொண்டார். போஜனம் ஆயத்தமானபோது, அந்த மரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. அனைவரும் அமர்ந்து புசித்தார்கள்.

ஜனங்கள் சாப்பிடும்பொழுது பொதுவாக பேசுவது வழக்கம். இப்படியாக இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, ஆபிரகாமுக்கு ஒரு குமாரன் பிறப்பார் என்று அந்த மூன்று தூதர்கள் கூறினார்கள். இந்த மூவரை குறித்து ஆபிரகாமின் மனைவியாகிய சாராள்

அறியாதிருந்தாள். அந்நாட்களில் குடும்பமாக அனைவரும் அமர்ந்து போஜனங்களை புசிக்கையில், மனைவிகள் அந்த கூட்டத்தில் அமராமல் தனித்து நிற்பதுபோல, சாராளும் அவர்கள் புசித்து தீரும்வரைக்கும் கூடாரவாசலில் காத்திருந்தாள்.

ஆனால், அவர்கள் பேசிக் கொண்டிருப்பதை அவள் கேட்டுக் கொண்டிருந்தாள். அப்பொழுது ஆபிரகாமுக்கு தன் வழியாக ஒரு குமாரன் பிறப்பான் என்று அந்த தூதர்கள் சொல்லியதை அவள் கேட்டாள். அவள் மிகுந்த சந்தோஷம் அடைந்ததினால் நகைத்தாள்.

அவள் நகைத்ததை தூதர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள் என்பதை அறிந்த சாராள் தனக்குள் வெட்கப்பட்டாள். ஆனாலும், ஒரு குழந்தை பிறக்கப் போவதை எண்ணி மகிழ்ந்தாள்.

நாட்கள் சென்றபோது தேவன் குறித்த காலம், வந்தது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரன் பிறந்தான். அவனுக்கு நகைப்பு என்று பொருள் கொள்ளும் ஈசாக்கு என்ற பெயர் சூட்டப்பட்டது.

அந்த பெயரைக்குறித்து ஒரு அற்புதமான காரியத்தை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று விரும்புகின்றேன். அந்த பெயரை ஆபிரகாமோ சாராளோ தேர்வு செய்யவில்லை. நம்முடைய வீடுகளில் புதிதாய் பிறந்த குழந்தைகளுக்குப் பெயர்களை தேர்வு செய்வது எவ்வளவு ஒரு மகிழ்ச்சியான காரியம். ஆபிரகாம் மற்றும் சாராள், ஈசாக்கு என்ற பெயரை தேர்வு செய்யாதபோதிலும், ஈசாக்கு என்பது ஒரு நல்ல பெயர் என்று ஏற்றுக்கொண்டனர். இவர்களுடைய குமாரனுக்கு தேவன் இப்பெயரை சூட்டச் சொன்னார்.

அந்த குழந்தையை ஈசாக்கு என்று அழைப்பதினிமித்தம் தேவன் அவர்களுக்கு அளித்த அற்புதமான வாக்குத்தத்தத்தை அவர்கள் எப்பொழுதும் நினைவுகொள்ளும்படி சொன்னார். மேலும், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் உண்மையாக நிறைவேறும் காலத்தில் இந்த முழு உலகமும் இதை நினைவில்கொள்ள வேண்டும் என்பதற்காக தேவன் இதைச் சொன்னார்.

மேலும், அவ்வாக்குத்தத்தம் என்ன?

இந்த பூமியிலுள்ள முழு ஜனங்களையும் ஆபிரகாமின் பிள்ளைகள் வழியாக ஆசீர்வதிப்பதே தேவன் கொடுத்த வாக்குத்தத்தமாம். எவ்வளவு அற்புதமான வாக்குத்தத்தம்! இந்த பூமியின்மேல் ஜலப்பிரளயம் வருவதற்கு முன்னதாக வாழ்ந்த ஜனங்களையும்கூட தேவன் வருங்காலத்தில் ஆசீர்வதிப்பார் என்று பொருள்படுகிறது. நோவாவும் அவர் குடும்பத்தினரும் மற்றும் அக்காலத்திலிருந்து வாழ்ந்த அனைவரும்கூட ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று பொருள்படுகிறது. மொத்தத்தில் இந்த பூமியின்மேல் மனுஷனாக பிறந்த யாவருக்கும் ஒரு அற்புதமான திட்டத்தை தேவன் திட்டமிட்டிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

தேவன் இதை எவ்வாறு நிறைவேற்ற முடியும் என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். ஏனெனில், இதுவரைக்கும் அநேக ஜனங்கள் மரித்து தங்களுடைய கல்லறைகளில் அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இவைகளை எப்படி செய்ய வேண்டும் என்று தேவன் அறிந்திருக்கிறார். மரித்தவர்களை மீண்டும் கல்லறையிலிருந்து உயிரோடு எழுப்பி தேவன் அவர்களை ஆசீர்வதிப்பார் என்று வேதாகமம் கூறுகிறது. இது எவ்வளவு அற்புதமான காரியம்! இக்காரியங்கள் அனைத்தையும் தேவன் ஆபிரகாமின் பிள்ளைகள் வழியாக நிறைவேற்றுவார் என்று அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

நாம் முன்னதாக பார்த்தபடி, ஒரு வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்படியாக ஈசாக்கு அவருடைய பெற்றோரிடம் பிறந்தார். அவர்கள் அந்த சிறுவனை எவ்வளவு நேசித்திருப்பார்கள்.



எல்லாவற்றிற்கும் மேலாக இவ்வளவு அற்புதமான குமாரனைத் தந்த தேவனை இன்னும் அதிகமாக நேசித்திருப்பார்கள். ஈசாக்கு ஒரு வாலிபனாக வளர்ந்தபோது, தேவன் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு, அதாவது, இந்த உலக ஜனங்களுக்கு ஒரு அற்புதமான காரியத்தைச் செய்வதற்கு காலம்வந்தது என்று ஆபிரகாம் தனக்குள் எண்ணியிருக்கலாம்.

ஆனால் என்ன நடந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

தேவன் ஆபிரகாமின் குமாரனை தனக்கு பலி செலுத்தும்படியாக கூறினார். பலி செலுத்துவது என்பதின் பொருளைக்குறித்து நாம் அறிந்திருக்கிறோம். இந்த உலகத்தில் தேவனுக்கு என்று முதல் பலி செலுத்தின ஆபேலைக்குறித்து நாம் அறிவோம். நாம் அறிந்திருக்கிறபடி அவர் ஆதாமின் குமாரனாக இருந்தார். ஆபேல் தேவனுக்கு கொழுமையான ஒரு ஆட்டை பலி செலுத்தினார். தேவனுக்கு ஒரு மிருகத்தை பலி செலுத்துவது என்றால், அந்த மிருகம் முதலில் கொல்லப்பட வேண்டும். அப்படியாகவே ஆபேல் அந்த ஆட்டை பலி செலுத்தினார்.

அதற்குப் பின் நோவா தன் குடும்பத்தினரோடு பேழையை விட்டு வெளியே வந்தபோது, ஜலப்பிரளயத்திற்குப்பின், நிலம் காய்ந்தபின் அவரும் தேவனுக்கு பலி செலுத்தினார். அவர் பலியாக செலுத்தப்பட்ட மிருகங்களும் முதலில் கொல்லப்பட்டது.

இப்பொழுது சற்று சிந்தித்துப் பாருங்கள். தேவன் ஆபிரகாமின் குமாரனை பலியாக செலுத்துவதற்கு சொன்னபோது, ஆபிரகாமின் உணர்வுகள் எப்படியிருந்திருக்கும்? ஆபிரகாம் தன்னுடைய குமாரனைக் கொன்று, அதற்குபின் அவர் பலி பீடத்தின்மேல் அவரை தகனிக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்த்தார்.

இதை குறித்து ஆபிரகாம் என்ன செய்தார்?

அவர் தேவனை அதிகமாக நேசித்தார். தேவன் ஞானமுள்ளவரும், சர்வவல்லமையுள்ளவரும், எல்லாவற்றுக்கும் மேலாக அவர் அன்பு நிறைந்தவராக எந்தவிதமான தவறுகளையும் செய்யாதவர் என்பதை ஆபிரகாம் நன்கு அறிந்திருந்தார். ஆகவே, தேவன் கேட்டுக்கொண்டதை நிறைவேற்றும் அளவுக்கு தேவனை ஆபிரகாம் நேசித்தார். அவர் ஈசாக்கை மீண்டும் உயிரோடு தந்துவிடுவார் என்ற விசுவாசம் ஆபிரகாமுக்குள் அதிகமாகக் காணப்பட்டது. எவ்வளவு அற்புதமான காரியம்!

மறுநாள் காலையில் தேவன் சொல்லியபடி, ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து ஈசாக்கை அவரோடு அழைத்துச் சென்றார். இருவரும் அந்த நாள் முழுவதும் நடந்தார்கள். ஆபிரகாம் ஈசாக்கை பலி செலுத்துவதற்காக தேவன் ஓர் இடத்தை நியமித்திருந்தார். அவ்விடம் ஆபிரகாமின் வீட்டிலிருந்து வெகுதூரமாய் இருந்தது. அந்த இடத்தை சென்றடைவதற்கு மூன்று நாளானது என்று வேதாகமம் கூறுகிறது. இப்படியாக, அவர் முதல் நாளிலும் நடந்தார்கள், இரண்டாம் நாளிலும் நடந்தார்கள், மூன்றாம் நாளிலும் நடந்தார்கள் இது ஒரு நீண்ட பயணமாக இருந்தது!

ஆபிரகாம் ஏதோ ஒரு வாகனத்தை வைத்திருந்தால், சில மணி நேரங்களில் அந்த இடத்தை அடைந்திருக்கலாம். ஆனால், அந்நாட்களில் அப்படிப்பட்ட வசதிகள் இல்லாததினால், அவர்கள் நடந்து அல்லது ஒட்டகங்களின் மேலாவது, கழுதைகளின் மேலாவது ஏறிச்செல்ல வேண்டியதாய் இருந்தது. ஐயோ பரிதாபம், இனி செய்ய வேண்டிய காரியங்களை எண்ணி ஆபிரகாம் எவ்வளவு வருத்தப்பட்டுக்கொண்டே அவர் பிரயாணித்திருக்க வேண்டும்.

ஆனால், ஆபிரகாம் தன்னை பலியிடப்போவதைக்குறித்து, ஈசாக்கு அறியாதிருந்தார். ஏனெனில், தந்தையாகிய ஆபிரகாம் அவருக்கு அறிவிக்கவில்லை. இறுதியாக பலி செலுத்தப்படக்கூடிய இடம் வந்தபோது, பலி செலுத்துவதற்கான ஆடு எங்கே என்று ஈசாக்கு தந்தையிடம் கேட்டார். அவர் பலி செலுத்துவதற்காக வந்திருப்பதை ஈசாக்கு அறிந்திருந்ததினால் பலிசெலுத்த வேண்டிய மிருகம் எங்கே என்று கேட்டார். பலி செலுத்த வேண்டிய இடத்திற்கு வந்தபின் பலிபொருள் எப்படி கிடைக்கும் என்று ஈசாக்கு ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும்.

ஈசாக்கின் மனம் புண்படாதபடிக்கு தேவன் அதை பார்த்துக்கொள்ளுவார் என்று ஆபிரகாம் பதில் அளித்தார்.

இப்பொழுது இந்த பலி மோரியா மலையின்மேல் கொடுக்கப்பட வேண்டியதாய் இருந்தது. இருவரும் அந்த மலையின்மேல் ஏறிச்சென்று ஒரு பலிபீடத்தைக் கட்டினர். அதற்குபின், ஈசாக்குதான் பலி பொருள் என்று ஆபிரகாம் சொல்ல வேண்டியதாய் இருந்தது. ஈசாக்கும் தேவனை நேசித்தார். அதுபோல, அவருடைய தந்தையும் நேசித்தார். தேவன் எந்த தவறும் இழைக்காதவர் என்று அறிந்திருந்தார். தேவன் சொல்லிய காரியங்களுக்கு தன்னுடைய தகப்பன் கீழ்ப்படிய வேண்டும் என்று விரும்புகிறார் என்பதை நன்கு அறிந்த ஈசாக்கு அவ்விடத்தைவிட்டு ஓடிப்போகவில்லை. தன்னுடைய கால்களும், கைகளும் கட்டப்படுவதற்கு, தன்னுடைய பிதாவினிடம் அவைகளை ஒப்புக்கொடுத்து பலிபீடத்தின்மேல் கிடத்தப்பட்டு பலி செலுத்துவதற்கு ஆயத்தப்பட்டார்.

வழக்கத்துக்கு மாறான இந்த காரியத்தை தேவன் எதற்காக விரும்புகிறார் என்பது ஆபிரகாமுக்கு புலப்படாமல் இருந்தாலும், அவர் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவாரோ இல்லையோ என்பதை தேவன் நிரூபிக்க விரும்பினார்.

அவரால் அதிகமாக நேசிக்கப்பட்ட குமாரனுடைய உயிரை போக்குவதற்கு ஆபிரகாம் ஆயத்தமானார். ஆனால், ஆபிரகாமை தடுக்கும்படி தேவன் ஒரு தூதனை அனுப்பினார். அந்த தூதன் ஆபிரகாமை சுற்றிப்பார்க்கும்படிச் சொன்னார். அப்பொழுது ஒரு புதருக்குள் ஒரு ஆட்டுக்கடா சிக்கியிருப்பதை ஆபிரகாம் கண்டு பலி செலுத்துவதற்காக தேவன் அனுப்பின ஆடு என்பதையறிந்து, ஈசாக்குக்குப் பதிலாக அதை பலி செலுத்தினார். அதற்குப் பின் தன்னுடைய குமாரனை அவர் பலி செலுத்த வேண்டிய அவசியம் இல்லாதிருந்தது. எவ்வளவு அற்புதமான காரியம்!

**கேள்விகள்:-**

1. ஆபிரகாம் என்பவர் யார்? அவர் தேவனுடைய சிநேகிதன் என்று ஏன் அழைக்கப்பட்டார்?
2. ஆபிரகாம் தன் வீட்டைவிட்டு தூர தேசத்திற்குப் பிரயாணமாகப்போன காரணம் என்ன?
3. தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் என்ன? அவைகள் எப்பொழுது நிறைவேறும்?
4. ஈசாக்கு என்பவர் யார்? அவருடைய தாய் ஏன் நகைத்தாள்?
5. மரித்துப்போன இந்த உலகத்தின் முழு ஜனங்களையும் தேவன் எவ்வாறு ஆசீர்வதிப்பார்?
6. ஈசாக்கை பலி செலுத்தும்படி தேவன் ஆபிரகாமிடம் கேட்டுக்கொண்டதின் காரணம் என்ன?



## 7. ஒரு மணவாட்டி தேர்வு செய்யப்பட்டாள்

**அநேக** சிறுவர்கள் வளர்ச்சியடையும்போது, திருமணம் செய்துக் கொள்கிறார்கள். இது ஒரு வழக்கம். இப்படியாகவே, நாலாயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்த ஈசாக்கும் திருமணம் செய்து கொண்டார். நாம் பார்த்தபடி ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தத்தின் வழியாக இந்த ஈசாக்கு பிறந்தார் என்று நாம் அறிந்திருந்தோம். ஈசாக்கு ஒரு விசேஷித்த குழந்தை என்று இதன் மூலமாகப் பொருள்படுகிறது. ஏனெனில், இந்த உலக ஜனங்கள் அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சிகரமான காரியத்தை ஈசாக்கு மற்றும் அவருடைய பிள்ளைகளின் வழியாகக் கொடுப்பதற்கு தேவன் விரும்பினார்.

ஈசாக்கு திருமணம் செய்யக்கூடிய வயது வந்தபோது, ஒரு ஏற்ற மனைவியை அவருக்குக் கொடுக்க வேண்டும் என்று ஆபிரகாம் விரும்பினார். நாம் ஏதோ ஒரு அயல் நாட்டில் பலவிதமான ஜனங்களோடு குடியிருக்கும்போது, நிச்சயமாக நம்முடைய தாய் நாட்டைக்குறித்து சிந்திப்போம். மேலும், நாம் திருமணம் செய்ய விரும்பினால், நம்முடைய தேசத்திலிருந்து ஒருவரை திருமணம் செய்ய விரும்புவோம்.

இப்படியாகவே, ஆபிரகாமும் சிந்தித்தார். ஆபிரகாம் தன்னுடைய தேசத்தைவிட்டு வெகுதூரம் பெயர்ந்து வந்தபின், ஈசாக்கை அவர் பெற்றெடுத்தார். ஆயினும், அந்த புதிய தேசத்தை தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்திருந்ததினால், அவர் அத்தேசத்தில் குடியிருக்க வேண்டும் என்று விரும்பினார். தேவன் கானான் தேசத்தை அவருக்கு வாக்களித்திருந்தார். இப்பொழுது அந்த தேசம், இஸ்ரயேல் என்று அழைக்கப்படுகிறது. இன்னும் சில ஜனங்களால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் என்று குறிப்பிடப்படுகிறது. அக்காலத்தில் அங்கு வாழ்ந்த ஜனங்கள் ஆபிரகாமுக்கு அந்நியர்களாய் இருந்தார்கள். இந்த அந்நியர் மத்தியில் ஈசாக்குக்கு பெண் எடுப்பதை தேவன் விரும்பமாட்டார் என்று ஆபிரகாம் அறிந்திருந்தார். அவர் என்ன செய்தார் என்று தெரியுமா?

ஈசாக்கு தானே தனக்கு ஒரு மனைவியை தேர்வு செய்வதற்கு ஆபிரகாம் அனுமதிக்காமல், இந்த முழு விவரங்களையும் எலியேசர் என்ற பெயர் கொண்ட தன்னுடைய விசுவாசமுள்ள ஊழியக்காரனிடம் அறிவித்தார். ஆபிரகாம் புறப்பட்ட தேசத்திற்கு திரும்பிச்சென்று, ஆபிரகாமின் குடும்பத்திலிருந்து ஈசாக்குக்கு மனைவியாக இருக்கக்கூடிய ஏற்ற ஒரு பெண்ணை அழைத்துவரும்படி சொன்னார்.

இது ஒரு கடினமான காரியமாக இருக்கும் என்று எலியேசர் தனக்குள் சிந்தித்தார். இவர் தேர்வு செய்யும் பெண், அவரோடு வரவில்லையென்றால், என்ன செய்வது என்று எண்ணி பயந்தார். ஆனால், ஈசாக்குக்கு ஒரு நல்ல மனைவியை தேர்வு செய்வதற்கு இதுவே சிறந்த வழி என்பதை ஆபிரகாம் நன்கு அறிந்திருந்தார். எலியேசர் இக்காரியத்தை நிறைவேற்ற ஒப்புக்கொண்டார். ஆபிரகாமுக்கு ஒரு மனைவியை தேர்வு செய்யும் விஷயத்தில் அவருக்கு முன் ஒரு தூதன் தேவனால் அனுப்பப்படுவார் என்பதை ஆபிரகாம் அவருக்குக் கூறினார். இந்த முழு உலகத்தையும் ஆசிர்வதிப்பதற்கு தேவன் அவருடைய பிள்ளைகளுக்கு வாக்களித்திருப்பதினால், ஈசாக்கு ஒரு நல்ல மனைவியைப் பெற வேண்டும் என்பதில் ஆபிரகாம் உறுதியாக இருந்தார்.

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எப்பொழுதும் உண்மையாக நிறைவேறும்.

ஆபிரகாமின் தாய் நாட்டிற்கு திரும்பிச் செல்ல, எலியேசர் ஆயத்தமானார். எலியேசரின் நாட்களிலும்கூட எந்தவிதமான வாகனங்களோ, கப்பல்களோ, விமானங்களோ இருக்கவில்லை. இப்படியிருக்க, இவ்வளவு நீண்ட பிரயாணத்தை அவர் எப்படி பிரயாணித்தார்? அவர் ஒட்டகங்களின்மேல் பிரயாணம் பண்ணினார்!

ஆனால், எலியேசர் ஒன்றுக்கு மேற்பட்ட ஒட்டகங்களைப் பயன்படுத்தினார். அவர் தன்னோடு பத்து ஒட்டகங்களைகூட அழைத்துச்சென்றார். ஆனால், எலியேசர் பயணிப்பதற்கு பத்து ஒட்டகங்கள் அவசியமில்லாதிருந்தது. ஆயினும், அவருடைய நீண்ட பிரயாணத்தினிமித்தம் வழியில் தேவைப்படும் உணவு மற்றும் தண்ணீர், இரவு நேரத்தில் தங்குவதற்கான கூடாரங்கள் இவ்வனைத்தையும் சுமந்து செல்வதற்கு ஒட்டகங்கள் தேவைப்பட்டது. இவ்வளவு நீண்ட பிரயாணத்தை பத்து ஒட்டகங்களோடு துவங்கும்போது எப்படி இருந்திருக்கும்! நிச்சயமாக எலியேசர் மட்டுமே அங்கு பயணிக்காமல், அந்த மிருகங்களையும், கொண்டு செல்லும் பொருட்களைப் பராமரிப்பதற்கு அவரோடுகூட சில ஆட்களும் சென்றிருக்க வேண்டும். ஒருவேளை எலியேசரும் மற்றும் சிலர் ஒட்டகங்களின் மேலும், மற்றவர்கள் நடந்தும் போயிருக்கலாம். இப்படியாக அனைவரும் ஈசாக்குக்கு ஒரு நல்ல மனைவியை தேடுவதற்குப் புறப்பட்டார்கள்.

எலியேசர் மற்றும் அவரோடு சென்றவர்கள் ஒட்டகங்களின்மேல் தங்களுடைய பயணத்தைத் துவங்கினதை ஆபிரகாமும் ஈசாக்கும் கவனித்துக் கொண்டிருந்திருக்கலாம். ஈசாக்கும் அவர்களோடு சென்றிருந்தால் அது ஆச்சரியப்படக்கூடிய காரியமல்ல. ஆயினும், அந்நாட்களில் அது ஒரு சரியான காரியமாக இருக்கவில்லை. எலியேசர் தன்னுடைய மனைவியை அழைத்து வரும்வரைக்கும் ஈசாக்கு வீட்டில் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. அவர்கள் எத்தனை நாள் பிரயாணம் செய்தார்கள் என்று வேதாகமம் கூறவில்லை. ஆயினும், அது ஒரு நீண்ட காலமாய் இருந்திருக்க வேண்டும்.

இறுதியாக ஒருநாளின் முடிவில் அவர்கள் மெசொப்பொத்தாமியாவுக்கு அருகாமையிலுள்ள நாகோர் இருந்த பட்டணத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இக்காலத்தில் நாம் வாழக்கூடிய பட்டணங்கள்போல, அந்நாட்களில் பட்டணங்கள் இருக்கவில்லை என்று நினைவில்கொள்ள வேண்டும். நாகோர் பட்டணத்தில் வசித்த சிலர், விவசாயிகளாகவும், மந்தை மேய்க்கக்கூடியவர்களாகவும் இருந்தார்கள். இவர்களுக்கும், இவர்களின் மந்தைகளுக்கும் தண்ணீர் தேவைப்படும்போது, பட்டணத்திற்கு வெளியே சென்று அங்குள்ள கிணறுகளிலிருந்து தண்ணீர் மொண்டுக்கொள்ளுவார்கள். அங்கு அவர்கள் மிகப் பெரிய பானைகளில் தண்ணீர் நிரப்பி வீடுகளுக்கு சுமந்து வருவார்கள். எலியேசர், நாகோர் என்ற பட்டணத்திற்கு அருகே வந்தபோது, ஒரு கிணற்றண்டையில் நின்றார். அது மாலை நேரமாக இருந்ததினால் கிணற்றில் தண்ணீர் மொண்டுக்கொள்ளும்படி யாராகிலும் வருவார்கள் என்று அவர் எதிர்பார்த்தார். அதேபோல, தண்ணீர் மொள்ளும்படி, சில ஸ்திரீகள் அங்கு வந்திருந்தார்கள். ஒருவேளை ஆண்கள் கடினமான வேலைகளை செய்து கொண்டிருந்ததினால் அவர்களுக்கு உதவியாக தண்ணீர் மொள்ளும் வேலையை ஸ்திரீகள் செய்திருக்கலாம்.

எலியேசர் தேவன் மேல் அதிகமான விசுவாசம் வைத்திருந்தார். ஈசாக்குக்கு, ஏற்ற மனைவியை தேர்வு செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புவதை அவர் அறிந்திருந்தார். ஆகவே, அந்த கிணற்றண்டையிலே காத்துக்கொண்டிருக்கையில் தேவனிடத்தில் ஜெபித்தார். இந்த முக்கியமான காரியத்தை முடிவு செய்வதற்கு தேவனுடைய உதவிக்காக விண்ணப்பித்தார். தண்ணீர் சுமந்து வரும் எந்த பெண்ணையாவது அவர் பார்த்து,

"இதோ, நான் இந்தத் தண்ணீர்த்துரவண்டையில் நிற்கிறேன், இந்த ஊராருடைய பெண்கள் தண்ணீர் மொள்ளப் புறப்பட்டு வருவார்களே. நான் குடிக்க உன் குடத்தைச் சாய்க்க வேண்டும் என்று நான் சொல்லும்போது: குடி என்றும், உன் ஒட்டகங்களும் குடிக்கும்படி வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண் எவளோ, அவளே நீர் உம்முடைய ஊழியக்காரனாகிய ஈசாக்குக்கு நியமித்தவளாயிருக்கவும், என் எஜமானுக்கு அநுக்கிரகம் செய்தீர் என்று நான் அதினாலே அறியவும் செய்தருளும் என்றான்."

எலியேசர் சற்று நேரம் காத்திருந்தார். அப்பொழுது ரெபெக்காள் என்ற பெயர் கொண்ட ஒரு இளம் பெண் தண்ணீர் மொள்ளும்படி அந்த துரவண்டை வந்தாள். அந்த பெண் மிக சௌந்தர்யமுள்ளவளாக இருந்தாள் என்று வேதம் கூறுகிறது. அவள் தண்ணீர் மொண்டு வெளியே வந்தபோது, எலியேசர் அவளுக்கு எதிர்கொண்டு போய், தாகத்திற்கு தண்ணீர் கேட்டார். அவள் நட்போடு அவருக்கு மட்டும் தண்ணீர் கொடுக்காமல், அவருடைய ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்த்தாள்.

துரவண்டைக்கு வந்த முதல் பெண், தனக்கும், தன் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்த்ததை நினைத்து எலியேசர் ஆச்சரியப்பட்டார். தேவனிடத்தில் விண்ணப்பித்திருந்தபோதிலும், ரெபெக்காள் தன்னுடைய எஜமானனாகிய ஈசாக்குக்கு ஏற்ற மனைவியாக இருப்பாளா என்பதை மேலும் உறுதிபடுத்திக்கொள்ள விரும்பினார். ஆகவே, "நீ யாருடைய குமாரத்தி" என்று கேட்டார். தான், "நாகோரின் குமாரனாகிய பெத்துயேலுக்கு பிறந்த மகள்" என்று பதிலளித்தாள்.

நாகோர், ஆபிரகாமின் சகோதரனாய் இருந்தார். இப்படியாக எலியேசர் ஆபிரகாமின் ஜனங்களுக்குள் பெண்ணை தேர்வு செய்தார். இதினிமித்தம் ஈசாக்குக்கு ஏற்ற மனைவி என்று உறுதிபடுத்திக் கொண்டார். எலியேசர் பொன்னினால் செய்யப்பட்ட காதணிகளையும், கடகங்களையும் ரெபெக்காளுக்குக் கொடுத்து, இரா தங்குவதற்கு அவருடைய தந்தையின் வீட்டில் இடம் உள்ளதா என்று கேட்டனுப்பினார்.

ரெபெக்காள் ஒரு நல்ல பெண்ணாக இருந்ததினால் எலியேசரும் அவரோடுகூட வந்தவர்களும் இரா தங்குவதற்கு இடம் உண்டு என்று கூறினாள். மேலும், அவருடைய ஒட்டகங்களுக்குத் தேவையான உணவும் இடமும் உண்டு என்று கூறினாள். இதனால் எலியேசர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். தேவனுடைய தூதன் அவரை சரியான இடத்திற்குக்கொண்டு வந்து தன் எஜமானுக்கு ஏற்ற பெண்ணை காண்பித்தார் என்று அவர் உறுதிபடுத்திக்கொண்டார்.

ரெபெக்காளுக்கு லாபான் என்ற ஒரு சகோதரன் இருந்தார். எலியேசர் வந்த செய்தியை அவர் அறிந்தபோது, உடனடியாக அவர் துரவண்டை ஓடி தங்களுடைய வீட்டிற்கு அவரை அழைத்து வந்தார். தேவன் ஆபிரகாமை ஆசீர்வதித்தார் என்பதை அவர் அறிந்திருந்ததினால் இப்படி செய்தார். மேலும், ஆபிரகாமின் ஊழியக்காரனாகிய எலியேசருக்கு நன்மை செய்தால், அவர்களும் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள் என்று அறிந்திருந்தார். வந்த விருந்தாளிகளுக்கு தங்களுடைய வீட்டை ஆயத்தப்படுத்தினார்கள். அவர்களோடு வந்த ஒட்டகங்களுக்கும் இரா தங்குவதற்கு இடங்களை ஒழுங்குப்படுத்தினார்கள். அனைவரும் சௌகரியமாக இரா தங்கினார்கள். ரெபெக்காளின் குடும்பம் இரக்கமும், தயாள குணமும் உடையவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் எலியேசருக்கு ருசியுள்ள பதார்த்தங்களை ஆயத்தம் செய்து அவரை புசிக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். ஆனால், அவரோ தான் வந்த காரியம் இன்னதென்று அறிவிக்காமல் எதையும் புசிக்க மாட்டேன் என்று கூறினார்.

இவ்வளவு நீண்ட பிரயாணத்தின் காரணத்தை அறிந்துகொள்ளுவதற்கு அவர்களும் ஆர்வமுள்ளவர்களாக இருந்தார்கள். ஆகவே, எலியேசர் தன்னுடைய எஜமானாகிய ஆபிரகாமை குறித்த அற்புதமான கதையை விவரித்தார். பல வருடங்களுக்கு முன்பாக வீட்டை விட்டுச்சென்ற ஆபிரகாம், இந்த அளவுக்கு வளர்ச்சியடைந்ததை எண்ணி ஆபிரகாமின் உறவினர்கள் ஆச்சரியப்பட்டிருக்கலாம். தேவன் அவருக்கு எவ்வளவு நல்லவராக இருந்தார் என்பதை எலியேசர் மேலும் விவரித்தார். ஆபிரகாமுக்கு தேவன் எண்ணிக்கையில் அடங்கா கால்நடைகளையும், பொன்னையும், வெள்ளியையும், ஊழியக்காரரையும், ஊழியக்காரிகளையும் மற்றும் விலைமதிப்புள்ள சொத்துக்களையும் கொடுத்திருந்ததை விவரித்தார்.

அதற்குபின் ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்கைபற்றி அவர்களுக்கு அறிவித்தார். ஆபிரகாமின் சொத்துக்கள் அனைத்திற்கும் இவரே வாரிசு என்பதையும் கூறினார். அதற்குப் பின் கதைக்கு ஆர்வமூட்டும் பகுதிக்கு வந்தனர். ஆபிரகாம் தன்னுடைய குமாரனுக்கு தன்னுடைய சொந்த ஜனத்திலிருந்து ஒரு பெண்ணை தேர்வு செய்யும்படி அனுப்பினார் என்பதையும் விவரித்தார். ஆகவே, மெசொப்பொத்தாமியா வரைக்கும் இவர் பயணம் செய்த காரியத்தையும், ஈசாக்குக்கு ஒரு நல்ல மனைவியையும் தேர்வு செய்த பின் அவளை அவரோடு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதையும் கூறினார்.

அதற்குப் பின், அவர் துரவண்டையில் ரெபெக்காளை சந்தித்தவிதத்தையும், அவள் தனக்கும், தன் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்த்த விதத்தையும் விவரித்தார். ஈசாக்குக்கு மனைவியாக தேவனால் தேர்வு செய்யப்பட்ட பெண் ரெபெக்காள்தான் என்பதை அறிந்திருந்ததாகவும் கூறினார். இந்த அற்புதமான காரியங்களைச் சொல்லி முடித்தபின் ரெபெக்காளின் பெற்றோர், மற்றும் அவளுடைய சகோதரன் அனைவரும் தேவனுடைய விருப்பத்தின்படி செய்ய ஒப்புக்கொண்டார்கள். "இதோ ரெபேக்காள்," ஆண்டவர் கூறியபடி அவள் ஈசாக்குக்கு மனைவியாக அழைத்துச் செல்லுங்கள் என்று எலியேசரிடம் கூறினார்கள்.

ஆபிரகாம், மிகுந்த ஐசுவரியவானாக இருந்தபடியினாலும், ஈசாக்குக்கு பெண் தேடுவதற்காக அனுப்பப்பட்ட எலியேசரிடம் அருமையான வஸ்திரங்களையும், அழகான ஆபரணங்களையும் கொடுத்தனுப்பினார். அவைகளை எலியேசர் ரெபெக்காளுக்கு கொடுத்து, அவளுடைய சகோதரனுக்கும், பெற்றோருக்கும் உச்சிதமான பரிசுகளைக் கொடுத்தார்.

மறுநாள் அதிகாலையில் எலியேசர் தன்னுடைய வீட்டுக்குப் புறப்படும்படி ஆயத்தமானார். ஆனால், உடனடியாக ரெபெக்காளை அவருடன் அனுப்ப மனதில்லாத குடும்பத்தினர், தங்களோடு பத்து நாட்கள் தங்கியிருக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். ஆனால், அவரோ அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அப்பொழுது, அவர்கள் ரெபெக்காளின் விருப்பத்தின்படி முடிவு எடுக்க அனுமதித்தார்கள். அதற்குப் பின் அவர்கள் ரெபெக்காளை அழைத்து, "இவரோடு போகிறாயா? அல்லது சில நாட்கள் தங்கி இருப்பாயா என்று கேட்டபொழுது, நான் போகிறேன் என்று ரெபெக்காள் பதிலளித்தாள்.

அவர்கள் ரெபெக்காளையும் அவளுக்கு உதவியாக ஊழியக்காரிகளையும் எலியேசரோடு அனுப்பினார்கள். எலியேசர் தன்னுடைய ஊழியக்காரர்களோடு இவர்கள் அனைவரையும் கூட்டிக்கொண்டு அந்த ஒட்டகங்களின்மேல் ஏறி, தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்ததும், இப்பொழுது ஆபிரகாம் வாழ்ந்து கொண்டிருந்ததுமான தேசத்திற்குப் புறப்பட்டார்.

இந்த பயணம் எத்தனை நாட்கள் சென்றது என்பதை வேதாகமம் நமக்கு அறிவிக்கவில்லை. ஆனாலும், அவர்கள் வீட்டை நெருங்கும்போது. சாயங்காலவேளையில் ஈசாக்கு வயல்வெளியில் தியானித்துக்கொண்டிருந்தார். அங்கு தேவன் தனக்குச் செய்த அற்புதமான காரியங்களைக்குறித்து தனிமையில் சிந்தித்துக்கொண்டிருந்தார். அங்கிருந்து அவர் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, தூரத்தில் ஒட்டகங்கள் வருவதைக் கண்டார்.

அதே நேரத்தில் ஒட்டகங்களின்மேல் பயணித்த ரெபெக்காள் ஈசாக்கை கண்டாள். அந்த வயலில் காணப்பட்ட மனுஷன் யார் என்று எலியேசரிடம் கேட்டபோது, நீர் திருமணம் செய்து கொள்ளக்கூடிய மனுஷனாகிய ஈசாக்கு என்று விவரித்தார். அவள் உடனே ஒட்டகத்தை விட்டு இறங்கி, தன் முகத்தை மூடி ஈசாக்கை சந்திக்கச் சென்றாள். அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் அதிகமாக நேசித்தார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. ஈசாக்குக்கு இப்படிப்பட்ட ஒரு நல்ல மனைவியை எலியேசர் கண்டுபிடிப்பதற்கு தேவன் அவரை ஆசீர்வதித்ததை எண்ணி மகிழலாம்.

**கேள்விகள்:-**

1. ஈசாக்குக்கு பெண் தேடும்படி ஆபிரகாம் யாரை அனுப்பினார்? அவர் எங்கு சென்றார்?

2. ஈசாக்குக்கு மனைவியாக இருப்பதற்கு தேவன் விரும்பும் பெண் யார் என்பதை எலியேசர் எவ்வாறு கண்டுபிடித்தார்?

3. ரெபெக்காள் முதல்முதலில் ஈசாக்கை பார்க்கும்போது அவர் எங்கிருந்தார்?



## 8. ரெபெக்காளின் இரட்டை பிள்ளைகள்

இந்த உலகத்தில் ஒரே பிரசவத்தில் இரண்டு குழந்தைகள் அல்லது மூன்று குழந்தைகள் சில நேரங்களில் நான்கு குழந்தைகள் இன்னும் ஐந்து குழந்தைகள்கூட பிறக்கிறார்கள். ஒரு காலத்தில் ஈசாக்கு மற்றும் ரெபெக்காளுக்கு முக்கியமான இரட்டைப்பிள்ளைகள் பிறந்தார்கள். இவர்களின் திருமணத்திற்குப் பின் இருபது ஆண்டுகள் கழித்து பிறந்தார்கள். தன்னுடைய தந்தையைப்போல ஈசாக்கும், அவர் பெற்ற பிள்ளைகளும் தேவனுடைய பார்வையில், மிக முக்கியமானவர்களாக இருந்தார்கள். ஏனெனில், ஆபிரகாமின் குடும்பத்திற்கு தேவன் அற்புதமான வாக்குத்தத்தங்களை வாக்களித்திருந்தார்.

இந்த இரட்டையர்கள் மற்ற இரட்டையர்களைக்காட்டிலும் சற்று வித்தியாசமானவர்களாக இருந்தார்கள். இவர்கள் ஒரேவிதமாகக் காணப்படவில்லை. இவர்கள் யாக்கோபு, ஏசா என்று அழைக்கப்பட்டார்கள். ஏசா, சிவந்த மேனியும், சரீரத்தின்மேல் ரோமங்கள் உடையவனாகக் காணப்பட்டார் என்று வேதம் நமக்கு கூறுகிறது. அது விசித்திரமாக இருந்திருக்காதா? ஆனால் இதுவே, ரோமம் இல்லாதிருந்த யாக்கோபிடமிருந்து அதிகமாக ஏசாவை வித்தியாசப்படுத்தி காட்டியது. யாக்கோபின் தலையில் கொஞ்சம் இருந்திருக்கும், ஆனால் சரீரத்தில் அவ்வளவாக இருந்திருக்காது என்று நான் நினைக்கிறேன்.

ஏசா வளர்ந்தபோது, வேட்டையாடுவதில் காலத்தை செலவழித்தான். அவன் ஒரு நல்ல வேட்டைக்காரனாக இருந்தான் என்று வேதம் கூறுகிறது. யாக்கோபு கூடாரங்களில் வசிக்கக்கூடியவராக இருந்தார். ஒருவேளை இவர் விவசாயம் செய்துகொண்டு ஆடு மாடுகளை மேய்த்திருக்கலாம்.

ஈசாக்கு, ஏசாவை அதிகமாக நேசித்தார் என்று வேதம் கூறுகிறது. ஏசா, வேட்டையாடி வீடு திரும்பும்போது, புசிப்பதற்கு ருசிகரமான இறைச்சியைக் கொண்டுவந்தார். ஆனால், ரெபெக்காளோ, ஏசாவைகாட்டிலும் யாக்கோபை அதிகம் நேசித்ததாக வேதம் கூறுகிறது.

இப்பொழுது இரட்டையர்களின் தாயாகிய ரெபெக்காளுக்கு - யாக்கோபு விசேஷித்த ஆசீர்வாதம் பெறுவான் என்று தேவனால் வெளிப்படுத்தப்பட்டது. இதன் காரணமாகவே அவள் ஏசாவைகாட்டிலும் யாக்கோபை அதிகமாக நேசித்திருக்கக்கூடும். இந்த இரண்டு பேரைக்குறித்து, வேதாகமத்தில் வாசிக்கும்போது, யாக்கோபு தேவனால் அதிகமாக நேசிக்கப்பட்டார் என்று காண்கிறோம். ஏனெனில், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் உண்மையாக நிறைவேறும் என்று அவர் நம்பினார்!

யாக்கோபின் தாத்தாவாகிய ஆபிரகாமுக்கும், அவருடைய தந்தையாகிய ஈசாக்குக்கும் தேவன் அற்புதமான வாக்குத்தத்தத்தைக் கொடுத்திருந்தார் என்பதை யாக்கோபு

அறிந்திருந்தார். மேலும், அந்த வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக்கொள்வதற்கு அவர் எதையும்செய்ய துணிந்திருந்தார். இந்த வாக்குத்தத்தத்தை சேஷ்டபுத்திர பாகம் என்று வேதாகமம் அழைக்கிறது.

இந்த இரட்டையர்களில் ஏசா முதலில் பிறந்ததினிமித்தம் அந்த உரிமை ஏசாக்கு உரியது என்று அவர் நம்பியிருந்தார். ஆனால், யாக்கோபே உண்மையான சுதந்தரவாளி என்பதை ரெபெக்காளிடத்தில் தேவன் விவரித்தார். சந்தேகத்திற்கிடமின்றி ரெபெக்காள் யாக்கோபிடத்தில் அனைத்தையும் சொல்லியிருக்க வேண்டும். தேவன் விரும்பியபடி இந்த சேஷ்டபுத்திர பாகத்தை தாமே பெற்றுக்கொள்வதற்கு யாக்கோபு வாய்ப்புகளைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

ஒருநாள் ஏசா வேட்டையாடி பசி தாகத்தோடு வந்தபோது, வீட்டிலிருந்த யாக்கோபு ருசிகரமான சிவப்பு கூழை காய்த்துக் கொண்டிருந்தார். அதை கண்ட ஏசா, யாக்கோபிடம் தன்னுடைய பசியைப் போக்குவதற்காக அந்த கூழைக் கேட்டான். அப்பொழுது யாக்கோபு சேஷ்டபுத்திர பாகத்தை இந்த கூழுக்காகக் கொடுக்க வேண்டும் என்று ஏசாவிடம் கேட்டார்.

இது நல்ல காரியமாக ஏசாவுக்குத் தோன்றியது. யாக்கோபைப்போல தேவனுடைய வார்த்தைகளின்மேல் ஏசாவுக்கு அதிகமான விசுவாசம் இல்லாதிருந்தது. ஏசா மிகுந்த பசியோடு இருந்ததினால் தேவனுடைய எந்த வாக்குத்தத்தத்தைக்காட்டிலும், நல்ல உணவு அதிக முக்கியத்துவம் பெற்றது. ஆகவே, நல்ல உணவை புசிப்பதற்காக தன்னுடைய சேஷ்டபுத்திர பாகத்தை யாக்கோபிடம் விற்றுப்போட சம்மதித்தார். இதினிமித்தம் ஏசா, எவ்வளவு பெரிய தவறை செய்தான்.

அன்பான பிள்ளைகளே, எவ்வளவு உண்மையான காரியம். நம்முடைய பசியை தீர்த்துக்கொள்ளுவதையோ அல்லது மற்ற பூமிக்குரிய காரியங்களினால் திருப்தியடைந்ததையோ எதுவானாலும் சரி, எல்லாவற்றுக்கும் மேலாக தேவன் நமக்களித்த வாக்குத்தத்தங்களே மிக முக்கியமானது. நிச்சயமாக பின்நாட்களில் ஏசா தான் செய்த காரியத்துக்காக மிகவும் வருந்தினான். ஆயினும், ஏசாவால் மீண்டும் அவைகளைப் பெற்றுக்கொள்ள இயலவில்லை. இப்பொழுது, அந்த சிறப்புரிமை யாக்கோபுக்கு உரியதாயிற்று. ஏசாவைக்காட்டிலும் யாக்கோபு தேவனுடைய வாக்குத்தத்தங்களை அதிகமாக விசுவாசித்து உணர்ந்ததினால் தேவன் இந்த காரியத்தை அனுமதித்தார்.

சில வருடங்களுக்குப் பின் அந்த பிள்ளைகளின் தந்தை வயது சென்றவரானபோது, கொடுக்கவேண்டிய ஆசீர்வாதத்தை ஏசாவுக்குக் கொடுக்க விரும்பினார். இக்காலத்தில் பிதாக்கள் அப்படி செய்வதில்லை. ஆனால், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு வாழ்ந்த காலத்தில் அவர்கள் மரிப்பதற்கு சில நாட்களுக்கு முன் அவர்கள் குடும்பங்களை அழைத்து நல்வார்த்தைகளின் வழியாக அவர்களை ஆசீர்வதித்து தேவனுடைய வாக்குத்தத்தங்களை அவர்களுக்கு நினைவுகூருவது வழக்கமாயிருந்தது. அப்படியாக ஒரு தந்தை பிள்ளையை ஆசீர்வதித்த பின் அந்த ஆசீர்வாதத்தை ஒருவராலும் மாற்ற முடியாது.

ஏசா தன்னுடைய சேஷ்டபுத்திர பாகத்தை யாக்கோபுக்கு விற்றுவிட்டார் என்பதை ஈசாக்கு அறியாதிருந்தார். ஈசாக்கு ஏசாவை அழைத்து, வேட்டையாடி தனக்கு நல்ல ருசியுள்ள உணவை சமைத்துவரும்படி சொன்னார். அவர் மரிப்பதற்கு முன் ஏசாவை ஆசீர்வதிக்க வேண்டும் என்பதையும் கூறினார்.

ஈசாக்கு ஏசாவிடம் பேசிக்கொண்டிருந்த அனைத்தையும் ரெபெக்காள் கேட்டுக்கொண்டிருந்தாள். இவ்வனைத்து ஆசீர்வாதங்களும் யாக்கோபுக்குரியது என்பதை அவள் அறிந்திருந்ததினால் ஈசாக்கு ஏசாவுக்கு கொடுக்கவேண்டிய ஆசீர்வாதங்களை யாக்கோபு பெற்றுக்கொள்ளும்படி திட்டமிட்டாள். ஆனால், சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட்ட ஏசா அதை, தன்னுடைய தம்பியிடம் விவரிக்காமல், மேலும், அதற்கான ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு அவன் ஆர்வத்தோடு இருந்தது, நியாயமான காரியமாக இருக்கவில்லை.

ஆனால், தேவனை அதிகமாக நேசித்த ரெபெக்காள், யாக்கோபுக்குதான் அந்த ஆசீர்வாதம் கிடைக்க வேண்டுமென்று அறிந்தவளாய் ஏசா வேட்டையாடி வருவதற்குமுன் இந்த ஆசீர்வாதங்களை யாக்கோபு பெறும்படி நல்ல உணவை ஆயத்தம் பண்ணினாள். ஈசாக்குக்கு ருசியுள்ள உணவை சமைப்பதற்கு கொழுமையான ஆட்டுக்குட்டியை அடித்து வரும்படி யாக்கோபிடம் சொன்னாள்.

ஈசாக்கு வயது சென்றவராய் பார்வையில்லாதிருந்தார். ஆகவே, உணவைக் கொண்டுவந்தவர் ஏசாவா அல்லது யாக்கோபா என்பதை அறியாதிருந்தார். கூடுதலாக யாக்கோபின் தாய் அந்த ஆட்டின் ரோமத்தை யாக்கோபின் கையில்கட்டி அனுப்பினாள். யாக்கோபின் கையை தடவிப்பார்க்கும்பொழுது, ஏசாவைபோல் அவர் தோன்றினார். வந்தது ஏசா என்று ஈசாக்கு உறுதியாக நம்பி எல்லா ஆசீர்வாதங்களையும் கொடுத்தார்.

இப்படியாக யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கிடமிருந்து, எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டார். அந்நாள் முதல் தேவன் யாக்கோபின் தாத்தாவாகிய ஆபிரகாமுக்கும், தந்தையாகிய ஈசாக்குக்கும் கொடுத்த வாக்குத்தத்தங்கள் யாக்கோபுக்கு உரியதாயிற்று.

இப்பொழுது அவருடைய வாக்குத்தத்தங்கள் உண்மையாக நிறைவேறுவதற்கான அவருடைய அற்புதமான திட்டத்தில் பயன்படுவதற்காக இவரும் ஒரு நபராவார்!

**கேள்விகள்:-**

1. வேதாகமத்தில் சொல்லப்பட்ட முதல் இரட்டையர்கள் யார்? அவர்கள் ஒருமித்துக் காணப்பட்டார்களா?

2. சேஷ்டபுத்திர பாகம் என்பது என்ன? ஏசா தன்னுடைய சேஷ்டபுத்திர பாகத்தை யாக்கோபிடம் ஏன் விற்றுப்போட்டார்?

3. யாக்கோபின் தாயாகிய ரெபெக்காள் ஏசாவை பார்க்கிலும் யாக்கோபு இந்த ஆசீர்வாதங்களைப்பெற வேண்டும் என்று விரும்பின காரணம் என்ன?



## 9. சொப்பனம் கண்ட ஒரு சிறுவன்

**பிள்ளைகள்** பெரும்பாலும் சொப்பனம் காண்பதுண்டு. அதில் அநேக சொப்பனங்கள் முக்கியமானதல்ல. நம்முடைய சொப்பனங்கள் நல்லதாக இருந்தாலும் சரி, கெட்டதாக இருந்தாலும் சரி, பொதுவாக நாம் எழுந்தவுடன் அவைகளை மறந்துவிடுவது நல்லது. ஆனால், நீண்ட நாட்களுக்கு முன் தேவனால் விசேஷித்தவிதத்தில் நேசிக்கப்பட்ட ஜனங்களுக்கு சில முக்கியமான காரியங்களைச் சொப்பனங்கள் மூலமாக தேவன் வெளிப்படுத்தினார்.

இப்படியாக, யோசேப்பு என்னும் இளைஞனுக்கு தேவன் ஒரு காரியத்தை சொப்பனத்தின்மூலம் வெளிப்படுத்தினார். உண்மையில், அவர் இரண்டு சொப்பனங்களைக் கண்டார். அவர் வளர்ந்து வயது சென்றவராகும்போது நடக்கக்கூடிய சில நிச்சயமான காரியங்களை தேவன் யோசேப்புக்குக் காட்டினார். இந்த யோசேப்பு, யாக்கோபின் குமாரனாக இருந்தார். இந்த யாக்கோபு தன்னுடைய சகோதரனாகிய ஏசாவிடமிருந்து சேஷ்ட புத்திர பாகத்தைப் பெற்றவர் என்பதை நீங்கள் நினைவில்கொண்டிருக்கலாம். யாக்கோபு, தன்னுடைய தந்தையாம் ஈசாக்கிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றவுடன், ஏசா மிகவும் கோபமடைந்தார்.



ஆகவே, யாக்கோபு தன்னுடைய உயிர் தப்ப அங்கிருந்து ஓட வேண்டியதாயிருந்தது. அவர் தன்னுடைய தாயின் இனத்தாரிடம் சென்று, அவருடைய மாமனாகிய லாபான் வீட்டில் தஞ்சம் அடைந்தார்.

யாக்கோபு பல வருடங்கள் லாபான் வீட்டில் தங்கினார். அவருக்கு பன்னிரண்டு பிள்ளைகள் பிறந்தது என்று வேதம் கூறுகிறது. இந்த யோசேப்பு கடைசியாக பிறந்தவருக்கு முன் பிறந்தவர். இவர்கள் அனைவரும் வளர்ந்தபோது, மந்தை மேய்க்கிறவர்களானார்கள். யோசேப்பு, தேவனையும் அவருடைய வாக்குத்தத்தங்களையும் அதிகமாக நேசித்தார். யாக்கோபு,

தன்னுடைய குமாரனாகிய யோசேப்பை எவ்வளவு நேசித்தார் என்று காட்டுவதற்கு அவருக்கு ஒரு அழகான பலவருண அங்கியைத் தரிப்பித்தார்.

இவைகளினால் யோசேப்பிடம் அவர்கள் சகோதரர்கள் பொறாமை கொண்டார்கள்.

நாம் முன்னதாக பார்த்தபடி பொறாமை கொள்வது எவ்வளவு பயங்கரம்! பொறாமையின் காரணத்தினால் தனது சொந்த சகோதரனாகிய ஆபேலை, காயீன் கொன்றுவிட்டார். அதேபோல, இப்போதும் யோசேப்பின் சகோதரர்கள் அவர் மீது பொறாமை கொண்டு அவரை வெறுத்தார்கள் என்று வேதாகமம் கூறுகிறது.

இந்த சூழ்நிலையில் யோசேப்பு முதல் சொப்பனத்தைக் கண்டார். அவரும் அவருடைய சகோதரர்களும் வயலில் தானியத்தை சேர்த்துக்கொண்டிருந்தபோது, ஒவ்வொருவரும் தங்களுடைய அரிகட்டுகளைக் கட்டிவைத்தபோது, யோசேப்பின் அரிகட்டைச் சுற்றி, மற்றவர்கள் கட்டி வைத்திருந்த அரிகட்டுகள் வணங்கி நின்றதாக சொப்பனம் கண்டார்.

இந்த சொப்பனத்தை ஒருவரிடமும் சொல்லாமல் யோசேப்பு தனக்குள் வைத்திருந்தால் நலமாயிருந்திருக்கும். ஆனால், யோசேப்பு உடனடியாக தனது சகோதரர்களிடத்தில் அறிவித்தார். அதை அவர்கள் கேட்டபொழுது, யோசேப்பை அவர்கள் அனைவரையும் வணங்க வேண்டும் என்று அவர் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார் என்று எண்ணி, மேலும் அவரிடம் பொறாமை கொண்டு அவரை இன்னும் பகைத்தார்கள்.

சில நாட்களுக்குப் பின் யோசேப்பு மற்றொரு சொப்பனம் கண்டார். இது, முதல் சொப்பனத்தைக் காட்டிலும் அற்புதமானதாயிருந்தது. சூரியனும், சந்திரனும் மற்றும் பதினொரு நட்சத்திரங்களும் அவரை வணங்கியது. இந்த சொப்பனத்தையும் யோசேப்பு தன்னுடைய சகோதரர்களுக்கும், தந்தைக்கும் அறிவித்தார்.

இதினிமித்தம் அவர் தந்தையும் கோபமடைந்தார். ஏனெனில், இனிவரும் காலத்தில் தந்தையும்கூட யோசேப்புக்கு பணிந்திருக்க வேண்டுமா என்ற கேள்வி எழும்பியது. அந்த சொப்பனமும் யோசேப்பின் சகோதரர்களுக்கு அதிக கோபங்கொள்ளச் செய்தது.

அதற்குப் பின் யோசேப்பின் சகோதரர்கள், தங்கள் மந்தைக்காக மேய்ச்சலுள்ள இடங்களைத் தேடும்படிக்கு சீகேம் என்ற பகுதிக்குச் சென்றார்கள். இவர்கள் வெகுதூரம் சென்றதினால் யாக்கோபு தன்னுடைய மந்தைகளைக்குறித்தும், பிள்ளைகளைக்குறித்தும் கவலைகொண்டு அவர்களுக்காகக் காத்திருந்தார்.

யோசேப்பு தனது சகோதரர்களோடுகூட வேலை செய்யுமளவுக்கு பெரியவனாக இருக்கவில்லை. ஆகவே, அவர் வீட்டில் தரித்திருந்தார். அப்பொழுது யாக்கோபு யோசேப்பை அழைத்து, அவருடைய சகோதரர்களைப்பற்றி அறிந்துகொள்வதற்கு அவர்களிடத்தில் அனுப்பினார். தன் தந்தையின் சொல்லுக்கு முழுமையாகக் கீழ்ப்படியவேண்டும் என்ற மகிழ்ச்சியோடு யோசேப்பு தன் சகோதரர்களைக் காணும்படி சென்றார்.

அவர் அங்கு செல்லும்போது, தன் சகோதரர்களைக் காணாமல், அங்குள்ள மனிதர்களிடம் விசாரித்தான். அப்பொழுது அவர்கள், "உம்முடைய சகோதரர்கள் இங்கில்லை, தோத்தானுக்குச் சென்று விட்டார்கள்" என்று கூறினார்கள்.

ஆகவே, யோசேப்பு தோத்தான்வரை பயணத்தைத் தொடர்ந்து அவருடைய மந்தைகளை மேய்த்துக்கொண்டிருந்த சகோதரர்களைக் கண்டுபிடித்தார்.

யோசேப்பு வருவதை அவருடைய சகோதரர்கள் கண்டார்கள். இவர்கள் அருகில் வருவதற்கு யோசேப்புக்கு சிறிது நேரம் எடுத்திருக்க வேண்டும். ஏனெனில், இதற்கிடையில் யோசேப்பைக் கொல்லுவதற்கு அவர்களுடைய சகோதரர்கள் திட்டமிட்டார்கள். பொறாமையினால் காயீன், ஆபேலைக் கொன்றதுபோல, இவர்களும் யோசேப்பைக் கொல்ல முடிவு செய்தார்கள். பொறாமை எவ்வளவு மோசமான காரியத்திற்கு வழிநடத்துகிறது பார்த்தீர்களா!

தங்களுடைய சகோதரனை சொப்பனக்காரன் என்று அழைத்தார்கள். அவரை தந்தையிடம் அனுப்புவதற்குப்பதிலாக அவரை பிடித்துக் கொலை செய்யும்படி வகைதேடினார்கள். அவர்களின் மூத்த சகோதரனாகிய ரூபன் மற்றவர்களைப்போல கொடூரமானவனாக இருக்கவில்லை. யோசேப்பை விட்டுவிடும்படி அனைவரிடமும் வேண்டிக் கொண்டான். யோசேப்பை ஒரு குழியில் போட்டுவிடலாம் என்று ஒரு ஆலோசனையையும் கூறினான். யாரும் பார்க்காதபோது, அந்த குழியிலிருந்து யோசேப்பை விடுவித்து தகப்பனிடம் அனுப்பிவிடலாம் என்று ரூபன் திட்டமிட்டார்.

ரூபனின் திட்டத்தை அறியாத சகோதரர்கள் இதற்கு சம்மதித்தார்கள். ஆனால், யோசேப்பை குழியில் போட்டபின் அவர்களை சில மீதியானியர்கள் வழி போக்கராகக் கடந்து செல்வதை சகோதரர்கள் கண்டார்கள். யோசேப்பை அவர்களிடம் விற்கும்படி முடிவு செய்து, எகிப்துக்கு செல்லக்கூடிய அவர்களிடம் யோசேப்பை விற்றுப்போட்டார்கள். எகிப்திலுள்ள பார்வோனும் அங்குள்ள ஜனங்கள் ஐசுவரியவான்களாக இருந்ததினால் வேலை செய்வதற்கு அடிமைகளை வாங்குவது வழக்கம் என்பதை இந்த சகோதரர்கள் அறிந்திருந்தார்கள்.

இப்படியாக, மீதியானியர்களிடம் விற்கப்பட்ட யோசேப்பு எகிப்துக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு இராஜாவின் மந்திரியினிடத்தில் யோசேப்பு அடிமையாக விற்கப்பட்டார். யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பின் பலவருண அங்கியை ஆட்டின் இரத்தத்தில் தோய்த்து தம்முடைய தந்தையாகிய யாக்கோபினிடத்தில் எடுத்துச் சென்றார்கள். அந்த வஸ்திரம் இரத்தத்தினால் தோய்த்திருப்பதைக் கண்டு, ஏதோ ஒரு காட்டு மிருகம் தன்னுடைய குமாரனை கொன்றுபோட்டது என்று எண்ணினார். பல வருடங்கள் சென்ற பின்னும் யோசேப்பு மரித்து விட்டார் என்று யாக்கோபு எண்ணிக்கொண்டிருந்தார். ஆனால், அவர் ஒரு அடிமையாக எகிப்தில் இருந்தார் என்பதை சகோதரர்கள் அனைவரும் அறிந்திருந்தார்கள்.

ஆம், யோசேப்பின் சகோதரர்கள் அவரை சொப்பனக்காரன் என்று அழைத்தார்கள். தேவன் இந்த அற்புதமான சொப்பனங்களை யோசேப்புக்குக் கொடுத்ததினிமித்தம் அவர் அநேக உபத்திரவங்களைச் சந்திக்க வேண்டியதாயிருந்தது. சந்தேகத்திற்கிடமின்றி, அந்த சொப்பனங்கள் ஒருகாலமும் நிறைவேறாது என்று யோசேப்பின் சகோதரர்கள் நம்பினார்கள். எகிப்தில் அடிமையாயிருக்கும் யோசேப்பு, இவர்களை எவ்வாறு ஆட்சி செய்ய முடியும்?

ஆனால், ஒரு காரியத்தைக்குறித்து யோசேப்பின் சகோதரர்கள் அறியாதிருந்தார்கள். இந்த அற்புதமான சொப்பனங்கள் யோசேப்புக்கு தேவனால் கொடுக்கப்பட்டது என்றும், அந்த சொப்பனங்கள் நிச்சயமாக நிறைவேறுவதற்கு தேவன் வல்லமையுள்ளவர் என்றும் இவர்கள் அறியாதிருந்தார்கள்.

வருடங்கள் பல சென்றபோதிலும் இவர்கள் யோசேப்புக்கு செய்த காரியங்களை நினைவில்கொண்டவர்களாக, "நாம் அவனை வணங்க வேண்டும் என்று விரும்பினான், ஆனால், அவனுடைய சிந்தனைகளோ தவறாகிவிட்டது, நல்லவேளை நாம் சரியான காரியத்தைச் செய்தோம்" என்று தங்களுக்குள் சொல்லிக்கொண்டிருந்திருப்பார்கள்.

ஆனால் யோசேப்பு உண்மையில் தவறாகவா சிந்தித்தான்?

**கேள்விகள்:-**

1. யோசேப்பு என்பவர் யார்? மற்ற குமாரர்களைக் காட்டிலும் அவருடைய தந்தையாகிய யாக்கோபு அவரை அதிகமாக நேசித்ததின் காரணம் என்ன?

2. யோசேப்பு கண்ட இரண்டு சொப்பனங்கள் என்ன? இந்த சொப்பனங்களை அறிவித்ததினிமித்தம் சகோதரர்கள் ஏன் கோபம் கொண்டார்கள்?

3. யோசேப்பின் சகோதரர்கள் அவரை மீதியானியரிடம் விற்றதின் காரணம் என்ன? மேலும், யோசேப்பு மரித்து விட்டார் என்பதை அவரின் தந்தையை எவ்வாறு நம்ப வைத்தார்கள்?



## 10. ஒரு அடிமை ஆளுநர் ஆனார்

**தன்னுடைய** தந்தையை உண்மையாக நேசித்த அருமையான அந்த சிறுவன் யோசேப்பு, இத்தருணத்தில் எகிப்தில் இருந்தார். அந்நியர் மத்தியில் தனித்திருப்பது எவ்வளவு கடினமாக இருக்கும். அவர் வீட்டைக்குறித்து ஏக்கம் கொண்டவராய் இருந்திருக்கக்கூடும். ஆனால், யோசேப்பு தனித்திராமல் தேவன் அவரோடுகூட இருந்து அவரை ஆசீர்வதித்தார் என்று வேதம் கூறுகிறது.

அந்த வியாபாரிகள் யோசேப்பின் சகோதரர்களிடமிருந்து விலைக்கு வாங்கின யோசேப்பை, போத்திபார் என்ற மனுஷனிடத்தில் விற்றார்கள். போத்திபார், ஒரு ஐசுவரியமுள்ள மனுஷனாக இருந்தார். அவர் இராஜாவுக்குப் பிரதான மந்திரியாகவும் இருந்தார். எகிப்திலுள்ள இராஜாக்களை பார்வோன் என்று அழைப்பார்கள். யோசேப்பு தேவனை அதிகமாக நேசித்து, அவருக்குப் பிரியமான சகல காரியங்களையும் செய்ய விரும்பினார். அவர் அடிமையாக இருந்தபோதும் தம்மால் முடிந்த எல்லா வேலைகளையும் செய்வது தேவனுடைய விருப்பம் என்று யோசேப்பு அறிந்திருந்தார். இதன் காரணமாக, யோசேப்பு ஒரு சிறந்த அடிமை என்று பெயர் பெற்றார். கூடுதலாக தேவனும் அவருக்கு உதவி செய்து, அவர் செய்த எல்லா வேலைகளிலும் அவரை ஆசீர்வதித்தார்.

இவ்வளவு நல்ல ஊழியக்காரனாக இருந்த யோசேப்பு, தன்னுடைய எஜமான் மகிழ்ச்சியடையும்படிக்கு காரியங்களைச் செய்ய ஆர்வமுள்ளவராக இருந்தார். போத்திபார் யோசேப்பினால் மிகவும் மகிழ்ச்சி கொண்டதினால், தன்னுடைய எல்லா வீட்டு காரியங்களையும் கவனிக்கும்படிக்கு யோசேப்புக்கு பொறுப்பைக் கொடுத்தார். போத்திபார் எதைக்குறித்தும் கவலைப்படவில்லை. எல்லாவற்றையும் யோசேப்பே கவனித்துக்கொண்டார்.

ஒருநாள், போத்திபாரின் மனைவி யோசேப்பைக்குறித்து ஒரு பொய் சொன்னாள். அவள் கணவனோ அதை நம்பி யோசேப்பின்மேல் அதிக கோபப்பட்டு காவலில் அடைத்தார். தவறே செய்யாத ஒருவரை காவலில் போடுவது எவ்வளவு மோசமான காரியம்! ஆனால், யோசேப்பு இன்னும் தேவனை நம்பினார். அவர் காவலில் இருந்தபோதும் அவரால் முடிந்த நன்மைகளை செய்துகொண்டிருந்தார். அங்கும் தேவன் அவரை ஆசீர்வதித்தார்.

நீண்ட காலத்திற்குப் பின் சிறை காவலாளி யோசேப்பை ஒரு நல்ல மனுஷனாகக் கண்டார். மேலும், அந்த சிறையிலுள்ள மற்ற கைதிகளை மேற்பார்வையிடும்படி யோசேப்பை நியமித்தார். இது அற்புதமாக இல்லையா? யோசேப்பு ஒரு நல்ல மனுஷன் என்பதை சிறை காவலாளி நம்பினான். சிறையிலும் தேவன் யோசேப்பை ஆசீர்வதித்தார்.

நீண்ட காலங்களுக்கு முன் இருந்த இராஜாக்கள் வெகு எளிதில் கோபமடைவார்கள். ஒருநாள் பார்வோனின் இரண்டு ஊழியக்காரர்கள், இராஜாவுக்குப் பிடிக்காத காரியங்களைச் செய்ததினிமித்தம் உடனடியாக சிறைக்கு அனுப்பப்பட்டார்கள். இவர்கள் பார்வோனுடைய பிரதான பானபாத்திரக்காரனும், சுயம்பாகியுமாய் இருந்தார்கள். இவர்கள் யோசேப்பின் மேற்பார்வையில் இருந்தார்கள். ஒருநாள் இவர்கள் இருவரும் சொப்பனங்கண்டார்கள். மறுநாள் காலையில் அவர்களை சோகம் அடைந்தவர்களாக யோசேப்பு கண்டார்.

அவர்களின் சோகத்தின் காரணங்களைக் கேட்டபோது, அந்த சொப்பனத்தைக்குறித்து யோசேப்பிடம் கூறினார்கள். மேலும், அந்த சொப்பனத்தின் விளக்கத்தைக்குறித்து அவர்கள் அறியவில்லை என்றும் கூறினார்கள். யோசேப்பு தன் தந்தையோடு குடியிருந்தபோது, தேவன் அவருக்குக்கொடுத்த அற்புதமான இரண்டு சொப்பனங்களை அவர் அறிந்திருந்தார். மேலும், சொப்பனங்களைப் புரிந்துகொள்வதற்கு தேவன் அவருக்கு உதவி செய்திருந்தார். ஆகவே, அவர்களின் சொப்பனங்களைச் சொல்லும்படி யோசேப்பு கேட்டார்.

அந்த பானபாத்திரக்காரன் நல்ல சொப்பனத்தைக் கண்டதினால் மூன்று நாளைக்குப் பின், அவன் விடுதலையாக்கப்பட்டு மீண்டும் இராஜாவுக்கு ஊழியம் செய்வான் என்பதை யோசேப்பு அறிவித்தார். அந்த பானபாத்திரக்காரன் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்திருக்க வேண்டும்!

யோசேப்பு மகிழ்ச்சியாக இருந்தார். சிறையைவிட்டு பானபாத்திரக்காரன் புறப்படும்பொழுது, இராஜாவினிடத்தில் தன்னைக்குறித்து பேசும்படி யோசேப்பு அவனிடத்தில் சொன்னார். ஆனால், பார்வோனிடத்தில் செல்லும்பொழுது, யோசேப்புக்குக் கொடுத்த வாக்கை முற்றிலுமாக அவன் மறந்துவிட்டான். அதற்குப் பின் இரண்டு வருடங்களாக அவன் அதைக்குறித்து சிந்திக்கவில்லை. எவ்வளவு வேதனையான காரியம்?

அப்பஞ்சுடுகிறவனுக்கோ நல்ல சொப்பனம் கிடைக்கவில்லை. மூன்று நாளைக்குப் பின் அப்பஞ்சுடுகிறவன் மரித்துவிடுவான் என்று யோசேப்பு கூறினார். அது ஒரு நல்ல சொப்பனமாக இராதபோதிலும், யோசேப்பு உண்மையைக் கூறினார். இதனால் யோசேப்பு தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டார் என்று நிரூபிக்கப்பட்டது. யோசேப்பு செய்த சகல காரியங்களிலும் சொப்பனங்களை விளக்குவதிலும் தேவன் அவரோடுகூட இருந்தார்.

பானபாத்திரக்காரன் சிறையைவிட்டு வெளியே வந்து இரண்டு வருடங்களுக்குப்பின், பார்வோன் தாமே இரண்டு சொப்பனங்களைக் கண்டான். இந்த சொப்பனங்களைக்குறித்து மிகவும் கவலைப்பட்டான். அக்காலத்தில் இராஜாக்களும், ஐசுவரியவான்களும் தங்களுடைய சொப்பனங்களுக்கு விளக்கம் கொடுக்கும்படிக்கு ஆட்களை அமர்த்தியிருந்தார்கள். பார்வோன் அவர்களுக்கு ஆள் அனுப்பியபோதும், அந்த சொப்பனத்திற்கான விளக்கத்தை அவர்களால் கூறமுடியவில்லை. அதனால், இராஜா மிகவும் சோர்ந்துபோனான். மிகுந்த உபத்திரவம் வரப்போகிறதோ என்று எண்ணி அதிகமாகக் கவலைப்பட்டான்.

நிச்சயமாக சொப்பனங்களைக்குறித்து, பார்வோன் எவ்வளவாய் கவலைப்பட்டான் என்பதை பானபாத்திரக்காரன் அறிந்திருந்தான். பானபாத்திரக்காரன் எப்பொழுதும் தன் எஜமானுடைய உணவைக்குறித்தும், பானங்களைக்குறித்தும் மிக கவனம் உள்ளவனாய் இருக்க வேண்டும். பார்வோன் பேசுவதிலிருந்து அவர் எவ்வளவாய் கவலைப்பட்டார் என்பதை பானபாத்திரக்காரன் அறிந்துகொண்டான்.

அதற்குப் பின் அந்த பானபாத்திரக்காரன், தான் சிறையிலிருந்தபோது, தான்கண்ட சொப்பனத்தை மிகச் சரியாக விளக்கின அந்த எபிரெய இளைஞனாகிய யோசேப்பை நினைவுகூர்ந்தான். யோசேப்பு தன்னைக்குறித்து பார்வோனிடம் சொல்லச்சொன்ன காரியத்தை அவன் மறந்ததை எண்ணி நிச்சயமாக வருத்தப்பட்டிருப்பான்.

ஆம், யோசேப்பைக்குறித்து பார்வோனிடம் பேசுவதற்கு அந்த பானபாத்திரக்காரனுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. அப்படியே அந்த பானபாத்திரக்காரன் யோசேப்பைக்குறித்து பார்வோனிடம் அறிவித்தான். பார்வோன் உடனடியாக யோசேப்புக்கு ஆளனுப்பி அவன் கண்ட சொப்பனத்தை அறிவித்தான். இவை விநோதமான சொப்பனங்களாக இருந்தன!

தண்ணீரிலிருந்து ஏழு கொழுத்த பசுக்கள் எழும்பின பின், ஏழு மெலிந்த பசுக்களும் எழுந்தது. ஆனால், அந்த மெலிந்த பசுக்கள், கொழுத்த பசுக்களைப் புசித்த பின்பும் மெலிந்ததாகவே இருந்தது. இதுவே அவர் கண்ட முதல் சொப்பனம்.

இது ஒரு விசித்திரமான சொப்பனம் அல்லவா!

பார்வோன் கண்ட இரண்டாவது சொப்பனமும் இப்படியாக இருந்தது. அதில் ஏழு முதிர்ந்த கதிர்களைக் கண்டார். அதற்குப் பின், சாவியான ஏழு கதிர்களைக் கண்டார். இந்த சாவியான கதிர்கள், முதிர்ந்த கதிர்களைப் புசித்த பின்னும் சாவியாகவே இருந்தது.

இவைகள் வெறும் சொப்பனங்களே. ஏனெனில், மெலிந்த பசுக்கள், கொழுத்த பசுக்களைப் புசிப்பதில்லை. மற்றும் சாவியான கதிர்கள், முதிர்ந்த கதிர்களைப் புசிப்பதில்லை. ஏனெனில், அந்த சொப்பனங்களில் விநோதமான காரியங்கள் நிகழ்ந்துள்ளது. அதனால், பார்வோன் மிகவும் கலங்கினான்.

யோசேப்பு, உண்மையில் ஒரு ஞானமுள்ள வாலிபனாக இருந்தான். தேவன் அவரோடு இருந்ததினால் சொப்பனங்களை விளக்கக்கூடிய ஞானத்தைப் பெற்றிருந்தார். இப்படியாக யோசேப்பு தேவனுடைய உதவியினால் பார்வோன் கண்ட சொப்பனத்தின் பொருளை அறிந்துகொண்டார்.

ஏழு வருஷங்கள் மிக பசுமையான தானியங்கள் விளைவிக்கும் சுபிட்சமான வருஷங்கள் என்றும், மழை நன்றாகப் பெய்து எங்கும் செழிப்பாக இருக்கும் என்றும் விவரித்தார். மேலும், அதைத் தொடர்ந்துவரும் ஏழு வருஷங்கள் எந்தவிதமான விளைச்சல்களும் இல்லாத பஞ்ச வருஷங்கள் என்று முழுமையாக அந்த சொப்பனத்தின் விளக்கத்தைக் கூறினார்.

ஆகவே, வரக்கூடிய சுபிட்சமான அந்த ஏழு வருஷத்தில் கிடைக்கக்கூடிய சகல தானியங்களையும் களஞ்சியங்களில் சேர்த்துவைக்கும்படி யோசேப்பு பார்வோனிடம் கூறினார்.

ஏனெனில், அதற்கு பின்வரும் பஞ்சத்தில் சேர்த்துவைக்கப்பட்ட தானியங்கள் பயன்படும் என்றார். அது எவ்வளவு அற்புதமான காரியம்?

யோசேப்பு தன்னுடைய சொப்பனங்களுக்கு விளக்கங்களைக்கூறி, வரக்கூடிய ஏழு சுபிட்சமான வருஷங்களையும், அதை தொடர்ந்துவரும் பஞ்சத்தின் வருஷங்களைப்பற்றி முன் அறிவித்ததினிமித்தம், பார்வோன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். மேலும், அந்த பஞ்சக்காலத்தில் ஒருவரும் பசியாக இராதபடிக்கு தேவையான ஆலோசனைகளை யோசேப்பு சொன்னதினால் பார்வோன் அகமகிழ்வுற்றான். அவன் என்ன செய்தான் என்று அறிவீர்களா? அவன், யோசேப்பை சிறையிலிருந்து விடுவித்து, தனக்கடுத்தபடியாக எகிப்தில் அதிகாரியாக்கினான்.

அந்நேரம் துவங்கி முழு தேசத்திலும் இராஜாவைத்தவிர, யோசேப்புக்கு மட்டும் முழு அதிகாரம் கொடுக்கப்பட்டது. வரும் சுபிட்சமான ஏழு வருஷங்களில் அதிகமான தானியங்களை விளைவித்து, அவைகளை களஞ்சியங்களில் சேர்ப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்யும்படி பார்வோன் யோசேப்புக்குக் கட்டளையிட்டார். இந்த வேலையை யோசேப்பு அருமையாக செய்தார்.

இந்த எல்லா அனுபவங்களிலும் தேவன் யோசேப்பை ஆசீர்வதித்தது எவ்வளவு அற்புதமான காரியம்?

முதலில் அவர் எகிப்துக்கு அடிமையாக அனுப்பப்பட்டார். போத்திபாரின் வீட்டில் விசாரணைக்காரரானார். அதற்குப் பின் சிறையில் அடைக்கப்பட்டார். அனைவரையும்

மேற்பார்வையிடும் பொறுப்பில் அமர்த்தப்பட்டார். இறுதியாக சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு எகிப்து தேசத்திற்கு முழுவதும் அதிகாரியானார்.

இவை எல்லாவற்றிற்கும் காரணம் என்னவாக இருக்கும் என்று எண்ணுகிறீர்கள்?


**கேள்விகள்:-**

1. எகிப்துக்கு வந்தபோது யோசேப்பு முதலில் யாரிடம் வேலைக்குச் சேர்ந்தார்?

2. யோசேப்பு எதற்காக சிறையில் அடைக்கப்பட்டார்? அங்கு அவர் எப்படி இருந்தார்?

3. யோசேப்பு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு எகிப்தின் ஆளுநராக ஆனதின் சூழ்நிலைகளை விவரிக்கவும் :-

4. யோசேப்பு ஞானியாக இருந்ததினால் எகிப்துக்கு இராஜாவாக ஆக்கப்பட்டாரா? அல்லது தேவன் ஆயத்தம் செய்தபடியே யோசேப்பு எகிப்துக்கு இராஜாவானாரா?



## 11. சொப்பனங்கள் நிஜமாகும்பொழுது...

**ஆம்,** யோசேப்பு விவரித்ததுபோல, பார்வோனின் சொப்பனங்கள் உண்மையில் நிறைவேறியது. எகிப்து தேசம் முழுவதும் பஞ்சம் உண்டாயிற்று. அப்பஞ்சம் தேவன் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் வாக்களித்த தேசமாகிய கானான்வரை பரவியது. மேலும், யோசேப்பை விற்றுப்போட்ட பதினொரு சகோதரர்களும் பஞ்சத்தினால் வாடினார்கள்.

ஆகவே, யாக்கோபு தனது பத்து குமாரர்களை தானியங்களை வாங்கும்படி எகிப்துக்கு அனுப்பினார். எகிப்தில் பஞ்சம் இருந்தபோதிலும், அங்கு தானியங்கள் விற்கப்பட்டதாக யாக்கோபு கேள்விப்பட்டார். இப்படியாக உணவு கிடைப்பதற்கு, யோசேப்புதான் ஆயத்தம் செய்தார் என்பதை அறியாதிருந்தார்கள். உண்மையில், யோசேப்பு மரித்துவிட்டார் என்று யாக்கோபு எண்ணினார்.

யாக்கோபின் கடைசி குமாரன் மிகச் சிறுவனாக இருந்தான். அவருக்கு பென்யமீன் என்று பெயர். யாக்கோபு, பென்யமீனை அதிகமாக நேசித்ததால், மற்ற குமாரர்களோடுகூட, பென்யமீனை அனுப்பவில்லை. பல வருடங்களுக்கு முன் யோசேப்புக்கு அசம்பாவிதம் நடந்ததுபோல, வழியில் பென்யமீனுக்கு ஏதாவது நடந்துவிடுமோ என்று யாக்கோபு மிகவும் பயந்தார்.

யாக்கோபின் பிள்ளைகள் எகிப்திற்கு வந்து தானியங்களைக்குறித்து விசாரித்தபோது, அவர்கள் தங்கள் சகோதரனாகிய யோசேப்பினிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். உண்மையில் பல வருடங்களாக அவர்கள் யோசேப்பைக் காணாததினால், அவர் மரித்துவிட்டார் என்று இவர்களும் எண்ணினார்கள். எகிப்துக்கு முழு அதிகாரியாக இருந்த யோசேப்புக்கு முன் அவர்கள் நிறுத்தப்பட்டார்கள். அவரை, ஒரு உணவு மந்திரி என்றும் கூட சொல்லலாம்.

எகிப்தில் யோசேப்பின் அனுமதியின்றி, ஒருவரும் தானியங்களை வாங்கவோ, எடுத்துச் செல்லவோ முடியாது. அவர்கள் கானான் தேசத்திலிருந்து வந்தவர்கள் என்றும், தனது தகப்பன் வயது சென்றவர் என்றும், விவரித்தபோது, இவர்கள் அனைவரும் அவருடைய சகோதரர்கள் என்பதை யோசேப்பு அறிந்துகொண்டார்.

ஆம், தம்முடைய எல்லா மூத்த சகோதரர்களும் தனக்கு முன் கைகட்டி நின்றுகொண்டு, தானியங்களுக்காக விண்ணப்பிக்கும்போது, நிச்சயமாக யோசேப்பு, பிதா தனக்குக் கொடுத்த அற்புதமான சொப்பனங்களை நினைவுகூர்ந்தார். அவருடைய சகோதரர்கள் ஒருநாளில் யோசேப்பைப் பணிந்துகொள்ளுவார்கள் என்று அந்த சொப்பனங்கள் பொருள்கொண்டிருந்தது.

தாங்கள் உயிர் வாழ்வதற்காக தங்களுடைய இளைய சகோதரன் யோசேப்பிடம் மன்றாடினார்கள் என்பது மிகப் பொருத்தமாகக் காணப்படுகிறது.

அவர்கள் விற்றுப்போட்ட அடிமையான தங்களுடைய சொந்த சகோதரனிடம் பேசிக்கொண்டிருப்பதை அறியாதிருந்தார்கள். தங்களுடைய தந்தையைக்குறித்தும், இளைய சகோதரனாகிய பென்யமீனைக்குறித்தும், யோசேப்பு கேட்ட இவ்வளவு கேள்விகள் அவர்களுக்கு விநோதமாக தோன்றியிருக்க வேண்டும். அவர் அடிமையாக விற்கபட்டபின், அவரால் அதிகம் நேசிக்கப்பட்ட தந்தையைப்பற்றியும், இளைய சகோதரனைப்பற்றியும் அறிந்துகொள்வதற்கு மிகவும் வாஞ்சையுள்ளவராக இருந்தார்.

யோசேப்பு தன்னுடைய இளைய சகோதரனாகிய பென்யமீனை காண வாஞ்சித்தார். அடுத்தமுறை அவர்கள் தானியம் வாங்க வரும்போது, அவருடைய சகோதரனாகிய பென்யமீனை அவர்கள் அழைத்து வருவதற்கு யோசேப்பு ஒரு திட்டம் தீட்டினார். இந்த திட்டம் என்னவாக இருக்கும் என்று எண்ணுகிறீர்கள்? யோசேப்பு அவர்களுக்கு சாக்கு நிறைய தானியங்களை நிரப்பிக் கொடுத்தார். ஆனாலும், அவர்கள் அதற்குரிய பணத்தை செலுத்தினார்கள். அந்த பணத்தை அவர்களுடைய சாக்கில் திரும்ப போடும்படி ஊழியக்காரர்களுக்கு யோசேப்பு சொல்லியிருந்தார். சகோதரர்களுக்கு தானியங்களை விற்க வேண்டும் என்ற எண்ணம் யோசேப்புக்கு இல்லை என்று கவனியுங்கள்.

ஆனால், அவர்கள் உண்மையைப் பேசவில்லை என்று யோசேப்பு நம்பினதுபோல் நாடகமாடினார். அவர்கள் ஒற்றர்கள் என்று நினைத்ததாக யோசேப்பு கூறினார். உண்மையில், அவர்கள் அனைவரும் சோர்ந்து போனார்கள். அவர்கள் எவ்வளவு உண்மையான காரணங்களைச் சொன்னாலும், யோசேப்பு அவைகளை நம்பாமல் இருந்ததை எண்ணி வருத்தமடைந்தார்கள். ஆனால், யோசேப்பு இவர்களை நம்ப வேண்டுமென்றால், மீண்டும் தானியங்களை வாங்க எகிப்துக்கு வரும்போது அவர்களுடைய இளைய சகோதரனாகிய பென்யமீனை அழைத்து வரச்சொன்னார். அதுவரைக்கும் இவர்களில் ஒருவரை எகிப்தில் தங்க வைத்துக்கொண்டார். அவர்கள் பென்யமீனை அழைத்துவரவில்லை என்றால், அவர்கள் சொன்ன அனைத்தும் பொய் என்று நிரூபிக்கப்படும் என்றும் சொன்னார்.

இது மிகக் கடினமான காரியம் என்று அந்த சகோதரர்கள் எண்ணினார்கள். ஆனால், இதைத்தவிர அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. அவர்கள் கானானுக்கு திரும்பிச் சென்று, தங்களுடைய தந்தையாகிய யாக்கோபோடு நடந்த எல்லா விநோதமான காரியங்களையும் அறிவித்தார்கள்.

பென்யமீனை எகிப்துக்கு அழைத்துச் செல்வதற்கு யாக்கோபு சம்மதிக்கவில்லை. ஏதாகிலும் அசம்பாவிதம் நடந்துவிடுமோ என்று பயந்தார். இனி ஒருபோதும் பென்யமீனை காணாத அளவுக்கு யோசேப்பை தொலைத்ததுபோல, இவரையும் தொலைத்து விடுவாரோ என்றும் அஞ்சினார்.

ஆனாலும், பஞ்சம் தொடர்ந்தது. மேலும், யாக்கோபுக்கும், அவருடைய குடும்பத்துக்கும் தானியம் தேவைபட்டது. ஜனங்கள் பசியாயிருக்கும்போது, மற்ற நேரங்களில் செய்யமுடியாத காரியங்களையும்கூட உணவுக்காக செய்வார்கள் என்று அறியீர்களா? இறுதியாக, யாக்கோபு, பென்யமீனை வேறுவழியில்லாமல் எகிப்துக்கு அனுப்ப சம்மதித்தார்.

அவர்கள் எகிப்துக்கு வந்தபோது, மீண்டுமாக யோசேப்பிடம் அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் யார் என்று யோசேப்பு அறிந்திருந்தார். அவருடைய இளைய சகோதரனாகிய பென்யமீனைக் கண்டபோது, அவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்து அவரை கட்டி தழுவ வேண்டும் என்று விரும்பினார். ஆனால், அவருடைய சகோதரர்கள் இவருடைய உணர்வுகளைக் காணக்கூடாததினால், ஒரு அறைக்குள் கதவை சாத்திக்கொண்டு சத்தமிட்டு அழுதார். அதற்குப் பின், தன் கண்களை துடைத்துக் கொண்டு, முகத்தைக் கழுவி மீண்டும் அந்த சகோதரர்களிடம் சென்றார்.

அனைவருக்கும் இராவிருந்தை ஆயத்தம் பண்ணும்படி யோசேப்பு ஊழியர்களுக்குக் கட்டளையிட்டார். யோசேப்பு ஒரு எகிப்தியன் என்று அவருடைய சகோதரர்கள் எண்ணினார்கள். மற்ற தேசத்தாரோடு ஒரே மேஜையில் அமர்ந்து போஜனம் புசிப்பது, எகிப்தியர்களைப் பொறுத்தவரைக்கும் தவறாக இருந்தது. விசேஷமாக எபிரெயர்களோடு புசிப்பது மிகவும் தவறானதாய் இருந்தது. ஆகவே, யோசேப்பு தானே சகல காரியங்களையும் ஆயத்தம் செய்தார்.

இந்த சகோதரர்கள் தன்னை எகிப்துக்கு விற்றுப்போட்டதை அவர்கள் அறிந்துகொள்ள கூடாதபடிக்கு யோசேப்பு எல்லா வேலைகளையும் செய்தார்.

யோசேப்பு ஏற்பாடு செய்த இராவிருந்து எவ்வளவு அருமையாக இருந்திருக்க வேண்டும்! அங்கு விருந்துக்கு வந்த சகோதரர்கள் அடுத்து என்னநடக்கும் என்று திகைத்திருக்க வேண்டும். எகிப்தின் ஆளுநர் இவர்களுக்கு இவ்வளவு அருமையான போஜனம் பரிமாறுவதை எண்ணி ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். இவைகள் நடந்து கொண்டிருக்கும்போது, தம்முடைய சகோதரர்கள் அவரை எகிப்துக்கு விற்று போட்டபின் நடந்த அனுபவங்கள் அனைத்தும் யோசேப்பின் சிந்தைக்குள் ஒவ்வொன்றாக வந்திருப்பதை உங்களால் கற்பனைசெய்து பார்க்க முடிகிறதா?

இறுதியாக விருந்து முடிந்தது. அனைவரும் நித்திரைக்குச் சென்றார்கள். மறுநாள் காலையில் அவர்கள் தானியங்களோடு புறப்படுவதற்கான ஆயத்தங்கள் நடந்தது. மீண்டும் ஒவ்வொருவருக்கும் சாக்கு நிறைய தானியங்கள் கொடுக்கப்பட்டது. ஆனால், இந்த முறை யோசேப்பு தன்னுடைய வெள்ளி பாத்திரத்தை பென்யமீன் சாக்கில் போடும்படி தன்னுடைய ஊழியக்காரனுக்குச் சொன்னார்.

இது விசித்திரமாக இல்லையா?

அனைவரும் கானானுக்கு திரும்பிச் சென்றுக்கொண்டிருந்தனர். ஆனால், வெகுதூரம் செல்வதற்கு முன் யோசேப்பின் வேலைக்காரர்கள் மிக விரைவாக அவர்களுக்குப் பின்னே வந்தார்கள். யோசேப்பின் வெள்ளிப் பாத்திரம் தொலைந்துவிட்டதாக அந்த சகோதரர்களிடம் கூறினார்கள். அவர்கள் அந்த பாத்திரத்தை எடுக்கவில்லை என்று நிச்சயித்திருந்ததினால் அதை நிரூபிக்கும்படியாக தங்களுடைய கழுதைகளின் மேலிருந்த சாக்குகளைத் திறந்து காட்டினார்கள்.

ஆனால், பென்யமீன் சாக்கிலோ யோசேப்பின் வெள்ளி பாத்திரம் கண்டு பிடிக்கப்பட்டது - எவ்வளவு மோசமான சூழ்நிலையில் அகப்பட்டார்கள்! பென்யமீனை பத்திரமாக தங்களுடைய தந்தையிடம் கொண்டுவருவதற்கு வாக்களித்திருந்தார்கள். ஆனால், இப்பொழுதோ பென்யமீன் எகிப்தின் சிறையில் இருக்கக்கூடிய சூழ்நிலை வந்ததென்று சிந்தித்தார்கள்.

அவர்களால் என்ன செய்ய முடியும்?

மீண்டுமாக அனைவரும் யோசேப்பிடம் சென்று தாங்கள் அந்த பாத்திரத்தை திருடவில்லை என்று மிகத் தெளிவாக விவரித்தார்கள். ஆனாலும், வெள்ளி பாத்திரம் யாருடைய சாக்கில் கண்டுபிடிக்கப்பட்டதோ, அவர் தன்னோடுகூட எகிப்தில் ஒரு கைதியாக இருக்க வேண்டும் என்று யோசேப்பு விவரித்தார். மற்ற அனைவரையும் வீட்டிற்கு திரும்பிப்போகும்படி சொன்னார். ஆனால், அவர்களோ திரும்பிப் போகவில்லை. ஏனெனில், அவர்கள் நிச்சயமாக பென்யமீனை அவர்களோடு கூட்டிக்கொண்டு வருவார்கள் என்று யாக்கோபுக்கு வாக்களித்திருந்தார்கள்.

அவர்கள் உண்மையில் உபத்திரவத்தில் சிக்கிக்கொண்டார்கள். அந்த சகோதரர்களில் ஒருவனாகிய யூதா தனது வயதுசென்ற தந்தையைக்குறித்தும், பென்யமீனை எகிப்தில் விட்டுச்சென்றால், அதன் விளைவு மோசமாக இருக்கும் என்பதையும், மிகப் பொறுமையாக யோசேப்புக்கு விவரித்தார். ஒருவேளை இவர்கள் பென்யமீனோடு வீட்டுக்கு திரும்பாவிட்டால், அவர்களுடைய தந்தை மனமுடைந்து மரித்துவிடுவார் என்பதை யோசேப்புக்கு அறிவித்தார். இது எவ்வளவு பரிதாபமான காரியம்?

யூதா தகப்பனைக்குறித்து மிகவும் கவலைப்பட்டவராக பென்யமீனுக்குப்பதிலாக தான் எகிப்தில் இருப்பேன் என்று ஒப்புக்கொண்டார். எவ்வளவு அன்பான காரியம்? தன்னுடைய சகோதரருக்குப்பதிலாக சிறைக்குச் செல்வதற்கு யூதா முன் வந்தது, உண்மையில் அந்த சகோதரனுக்காக யூதா வைத்த அன்பைக் காட்டுகிறது.

யோசேப்பின் இருதயம் கசிந்தது, எல்லா எகிப்தியர்களையும் அவர் அனுப்பிவிட்டு, தன் சகோதரர்களோடு தனித்து இருந்தார். தன்னால் கட்டுப்படுத்த முடியாதபடிக்கு அவர்களுக்கு முன் கதறி அழுது,

"நான் உங்களுடைய சகோதரனாகிய யோசேப்பு" என்று கூறினார்.

அந்த சகோதரர்களுக்கு எவ்வளவு ஆச்சரியமாக இருந்திருக்க வேண்டும்! நிச்சயமாக அவர்கள் மிகவும் பயந்துபோயிருக்க வேண்டும். ஆனால் அவர்களை பயப்பட வேண்டாம் என்று யோசேப்பு கூறினார். எகிப்திற்கு தன்னை விற்றுப்போட்டதைக்குறித்து, அவர்கள் தங்களை குற்றம் சாட்டிக்கொள்ள வேண்டாம் என்று கூறினார். ஏனெனில், யோசேப்பு எகிப்துக்கு வரவேண்டும் என்பது தேவனுடைய உண்மையான திட்டமாய் இருந்தது என்பதை விவரித்தார். ஆம், அந்த ஏழு பஞ்ச வருஷங்களில் யோசேப்பின் சகோதரர்களும் அவர்களின் குடும்பங்களும் உணவின்றி மரித்துப்போகாமல் அவர்கள் ஜீவனோடு இருப்பதற்கு தேவன் யோசேப்பை எகிப்துக்கு முன்னதாகவே அனுப்பினார்.

யோசேப்புக்கு எவ்வளவு அற்புதமான மன்னிக்கக்கூடிய குணம் இருந்ததென்று பாருங்கள்?

யோசேப்பின் சகோதரர்கள் எவ்வளவு பொறாமைக்கொண்டிருந்தாலும், யோசேப்புக்கு அவர்கள்மேல் கோபம் வரவில்லை. அவர் பொறாமையும்படவில்லை. அவர்கள் செய்த காரியங்களினிமித்தம் அவர்களை தண்டிக்கவுமில்லை. அதற்குப்பதிலாக அவர்கள் கானானுக்குச் சென்று அவர்களுடைய தந்தையையும், அவர்களின் குடும்பங்களையும், மந்தைகளையும் அழைத்துவரும்படிச் சொன்னார். அந்த தேசத்தில் அவர்கள் குடியிருக்கும்படி கோசேன் என்ற பட்டணத்தையும் தருவதாக வாக்களித்தார்.

யோசேப்பு தன்னுடைய சகோதரர்களுக்கு எவ்வளவு நன்மையான காரியங்களைச் செய்தார்?

இவ்வகையில் யோசேப்பின் சொப்பனங்கள் உண்மையாக சம்பவித்தது. அவருடைய தந்தை மற்றும் அவருடைய சகோதரர்களுக்கு இவர் ஒரு ஆளுநர் ஆனார். ஒரு ஆளுநராக மட்டுமல்ல, அவர்களுடைய ஜீவனை மீட்ட இரட்சகருமானார். யோசேப்பை தேவன் அதிகமாக நேசித்ததினால், தேவன் அவருக்கு எல்லாவற்றிலும் உதவி செய்தார். இப்படியாக அந்த முழு குடும்பத்திற்கும் யோசேப்பு போஜனங்கொடுத்தார்.

சில வழிகளில் யோசேப்பு இயேசுவைப்போலிருந்தார். யோசேப்பு எகிப்துக்குச் சென்றதற்கு ஒப்பாக ஆண்டவர் இயேசு இப்பூமிக்கு வந்தார். எகிப்துக்கு சென்றபோது யோசேப்பு சிறையில் அடைக்கப்பட்டதுபோல, இயேசு இந்த பூமிக்கு வந்தபோது, சிறையில் அடைக்கப்பட்டார்.

யோசேப்பு இருந்த சிறையைக்காட்டிலும் இயேசு இந்த கொடூரமான கல்லறையில் மரணமாகிய சிறையிருப்பில் போடப்பட்டார்.

சிறையிலிருந்து யோசேப்பு விடுவிக்கப்பட்டு இராஜாவானதுபோல, மரணமாகிய சிறையிலிருந்து இயேசுவும் விடுவிக்கப்பட்டு மிகப் பெரிய ஆட்சியாளரானார். இந்த பூமி முழுவதும் ஆளக்கூடிய இராஜாவாக இருக்கிறார். யோசேப்பு தங்களுடைய ஜனங்கள் மரிக்காமல் ஜீவிப்பதற்கு உணவளித்ததுபோல, இந்த பூமியிலுள்ள அனைவருக்கும் இயேசு நித்தியஜீவனை அளிக்கக்கூடிய போஜனத்தைக் கொடுப்பார். இது அற்புதமாக இருக்கிறதல்லவா? ஆம், இயேசு கொடுக்கக்கூடிய உணவைப் புசிக்கும் அனைவரும் நித்தியமாக ஜீவிப்பார்கள்! இதை ஜீவ அப்பம் என்று வேதாகமம் அழைக்கின்றது.

தேவன் யோசேப்புக்கு எவ்வளவு நல்லவராக இருந்தார்? அதுபோல, தேவன் அனைவரையும் நேசிப்பதினால் விரும்பக்கூடிய அனைவருக்கும் ஜீவனைக் கொடுக்கக்கூடிய உணவை அளிக்கும்படி இயேசுவை அனுப்பினார். உண்மையில் பூமியிலுள்ள எல்லா குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதற்காக அவருடைய திட்டத்தை ஆபிரகாமிடம் கூறும்போது, தேவன் இக்காரியங்களைப் பொருள்கொண்டிருந்தார்!

## கேள்விகள்:-

1. யோசேப்பின் சகோதரர்கள் உணவுக்காக எகிப்துக்கு வரவேண்டிய அவசியம் என்ன? எகிப்திலுள்ள ஆளுநர் தாங்கள் விற்றுப்போட்ட சகோதரன் என்று அறிந்திருந்தார்களா?

2. பென்யமீன் என்பவர் யார்? அவருடைய தந்தை எகிப்துக்கு அவரை அனுப்ப சம்மதிக்காததன் காரணம் என்ன?

3. யாக்கோபும் அவருடைய முழு குடும்பமும் எகிப்தில் குடியேறியதின் காரணம் என்ன?

# 12. ஒரு பெட்டகத்தில் காணப்பட்ட ஒரு சிறு குழந்தை



**வெட்டாந்தரையில்** மிகப்பெரிய பேழையைக் கட்டின நோவாவின் கதை உங்களுக்கு நினைவிருக்கிறதா? அந்த பேழையை தேவன் கட்டச் சொன்னதால் நோவா கட்டினார். மழை பெய்து ஜலம் முழுவதும் பூமியை மூடி இந்த உலகத்தை அழிக்கும்போது, நோவாவின் குடும்பம் மற்றும் சில மிருகங்களும், பறவைகளும் அதிலிருந்து மீட்கப்படுவதற்காக இவ்வளவு பெரிய பேழை தேவை என்பதை தேவன் அறிந்திருந்தார். அந்த பேழை அனைவருக்கும் போதுமானதாய் இருந்தது.

ஆம், இப்பொழுது நாம் பார்க்கக்கூடிய கதை நோவாவின் பேழை பற்றியல்ல. ஆனால், ஒரு சிறிய குழந்தையை சுமக்கக்கூடிய அளவிலான சிறு பெட்டகத்தைப்பற்றி பார்க்கப்போகிறோம். ஆனால், அந்த மிகப்பெரிய பேழை எதற்காகக் கட்டப்பட்டதோ, அதே காரணத்திற்காக இந்த சிறிய பேழையும் உருவாக்கப்பட்டது. அந்த பெரிய பெட்டகம் நோவாவையும், அவருடைய குடும்பத்தினரையும் தண்ணீரில் மூழ்காதபடி பாதுகாத்ததுபோல, இந்த சிறு குழந்தை தண்ணீரில் மூழ்காதபடிக்கு அந்த சிறு பெட்டகம் அதை விடுவித்தது. அந்த குழந்தை யார் என்று உங்களுக்கு தெரியுமா?

அந்த சிறு பேழைக்குள் இருந்த குழந்தைக்கு அதுவரைக்கும் பெயரிடப்படவில்லை. அந்த பேழையிலிருந்து அந்த குழந்தையை ஒரு எகிப்திய இளவரசி எடுத்தபோது, அதற்கு மோசே என்று பெயரிட்டாள். மோசே என்பதற்கு "வெளியே எடுத்தல்" என்று பொருள். ஏனெனில், அந்த இளவரசி தண்ணீரிலிருந்து அந்த குழந்தையை எடுத்ததினால் இவ்வாறு பெயர் வைத்தாள்.

ஆனால், மோசே ஒரு எகிப்திய குழந்தையல்ல. அவர் ஒரு சிறு யூத குழந்தையாக இருந்தார். அவர்கள் எபிரெயர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். யூத ஜனங்களை இந்நாள்வரைக்கும் எபிரெயர்கள் என்று அழைக்கிறார்கள்.

இந்த எபிரெயர்கள் யாக்கோபின் பிள்ளைகளாக இருந்தார்கள். மேலும், யாக்கோபின் பிள்ளைகளுக்குப் பிறந்த பிள்ளைகளையும், யாக்கோபின் சந்ததி என்று அழைக்கப்பட்டார்கள். யாக்கோபு, ஆபிரகாமின் பேரனாக இருந்தார்.

ஆபிரகாமுக்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் தேவன் கானான் தேசத்தை வாக்களித்திருந்தார். ஆனால், இந்த கதையின்போது, எல்லா எபிரெயர்களும் எகிப்தில் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். யாக்கோபின் குமாரர்களில் ஒருவராகிய யோசேப்பு எகிப்தை ஆட்சி செய்தார். மீதியுள்ள அவருடைய குடும்பங்கள் பஞ்ச காலத்தில் எகிப்தில் தஞ்சமடைந்தார்கள். இவைகளைக்குறித்து நாம் முன்னதாகவே பார்த்தோம். இவைகளை நீங்கள் நினைவுகூரும்படி மறுபடியும்

ஞாபகப்படுத்துகிறேன்.

யோசேப்பு உயிரோடு இருந்தமட்டும் எபிரெய பிள்ளைகள் எகிப்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள். யோசேப்பும், அவருடைய சகோதரர்களும் வயதுசென்றதினால் மரித்துப்போனார்கள். பல வருடங்களுக்குப்பின் இந்த எபிரெயர்கள் ஆயிரக்கணக்கில் பெருகினார்கள்.

எகிப்தியர்களும் வயதுசென்று மரித்தார்கள். அனைவரும் மரிக்க வேண்டியது அவசியந்தான். ஏதேன் தோட்டத்தில் ஆதாமும், ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படியாததினால் அனைவருக்கும் இந்த மரணம் சம்பவித்துக்கொண்டிருக்கிறது. ஆனால், இவைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்காது.

ஏனெனில், தேவன் அனைவரையும் நேசிக்கிறார். ஆகவே, அனைவருக்காகவும் தம்முடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசுவை அவர் கொடுத்தார். இந்த இயேசு மரித்த அனைவரையும் படிப்படியாக உயிர்ப்பித்து, அவர்களுக்கு நல்ல ஆரோக்கியமான உடல்நலத்தைக் கொடுத்து, நித்தியஜீவனுக்கு வழி நடத்துவார். எவ்வளவு அற்புதமான காரியம்! ஆகவேதான், இயேசுவை ஜனங்களின் இரட்சகர் என்று வேதம் கூறுகிறது. நோவா அந்த பேழைக்குள் இரட்சிக்கப்பட்டார். மோசேயும் அந்த சிறு பெட்டகத்திற்குள் இரட்சிக்கப்பட்டார். அதுபோல, இயேசு அனைவரையும் மரணத்திலிருந்து இரட்சித்தார்.

யோசேப்பை முக்கியமான ஆளுநராக எகிப்தின் மீது நியமித்த அந்த அருமையான பார்வோன் இராஜாவும் மரித்தார். அதற்குப் பின் யோசேப்பையும், அவருடைய குடும்பத்தினரையும் அறியாத ஒரு பார்வோன் எகிப்தில் தோன்றினான்.

இந்த எபிரெயர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதைக்கண்டு, அந்த இராஜா மிகவும் பயந்தான். ஏனெனில், இவர்கள் எகிப்தியரைக்காட்டிலும் அதிக எண்ணிக்கையில் இருந்தார்கள். அவன் என்ன செய்தான் என்று உங்களுக்கு தெரியுமா? அனைத்து எபிரெயர்களையும் அடிமைகளாக்கி, அவர்கள் கடுமையான வேலைகள் செய்யும்படி, அவர்களுக்குமேல் விசாரணைக்காரர்களை வைத்தான். இதனால் இளவயதிலேயே அவர்கள் மரித்துவிடுவார்கள் என்றும், இப்படியாக அவர்களுடைய எண்ணிக்கை குறையும் என்றும் அவன் திட்டமிட்டான்.

ஆனால், தேவன் எபிரெயர்களோடு இருந்தார். அவர் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும், யாக்கோபின் பிள்ளைகளுக்கும் அற்புதமான வாக்குத்தத்தத்தைக் கொடுத்திருந்தார். இந்த வாக்குத்தத்தம் எபிரெயர் அனைவருக்கும் உரியதாயின. இப்பொழுது அவர்கள் அனைவரும் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தனர். தேவன் தம்முடைய ஜனங்களைக் கொன்றுபோடுவதற்கு ஒருபோதும் அனுமதி கொடுக்கமாட்டார்.

எல்லாவற்றிற்கும் மேலாக மரித்துபோன அனைவரையும் எபிரெயர் உட்பட தேவன் ஜீவனுக்குக்கொண்டு வருவார். தேவன் எப்போதும் அவருடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றக்கூடியவராய் இருக்கிறார். தேவன் செய்ய வேண்டும் என்ற காரியத்தை ஒருவராலும் தடைசெய்ய முடியாது. இந்த முக்கியமான காரியத்தை நாம் எப்பொழுதும் நினைவில்கொள்ள வேண்டும்.

ஆனால், எபிரெயர்களின் பெருக்கத்தின் எண்ணிக்கை குறையவில்லை. ஆகவே, பிறக்கும் ஆண் குழந்தைகளைக் கொல்ல வேண்டும் என்று எகிப்திய அரசன் கட்டளையிட்டான். அவர்களை நைல் நதியில் வீசிவிட வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தான். எவ்வளவு பயங்கரமான காரியம்!

மோசேயைப் பெற்றெடுத்த தாய் அந்தக் குழந்தையை அதிகமாக நேசித்ததினால், இராஜாவின் கட்டளை என்னவாக இருந்தாலும், அந்த குழந்தையை உயிரோடு பாதுகாக்க வேண்டும் என்று முடிவு செய்தாள்.

மூன்று மாதமளவும் அந்த குழந்தையை அவர்கள் ஒளித்து வைத்தார்கள். அதற்குமேல் அந்த குழந்தையை ஒளித்து வைக்க முடியாததினால் சிறு பெட்டகத்தை ஆயத்தம் செய்து தண்ணீர் புகாதபடிக்கு அதை சுற்றி கீல் பூசி அந்த பெட்டகத்திற்குள் அந்த குழந்தையை வைத்து, தண்ணீர் கரையிலிருக்கும் நாணலுக்குள் ஒளித்து வைத்தாள்.

இந்த சிறிய பெட்டகத்தில் அற்புதமான ஒரு குழந்தையை அதில் பயணிப்பதற்கு வைத்துவிட்டு அவள் சென்று விட்டாள். ஆனால், அந்த குழந்தைக்கு என்ன நடக்கும் என்று அந்த குழந்தையின் சகோதரி அந்த பெட்டகத்தின் அருகில் நின்றாள். என்ன நடந்திருக்கும் என்று எண்ணுகிறீர்கள்? குழந்தைகளைக் கொல்ல வேண்டும் என்று கட்டளையிட்டிருந்த இராஜாவின் குமாரத்திகளில் ஒருத்தி அந்த நதியில் ஸ்நானம் பண்ணும்படி வந்தாள். அவளோடுகூட அநேக ஸ்திரீகளும் வந்தார்கள். அந்த நாணலுக்குள் சிக்கிக்கொண்டிருந்த சிறிய பெட்டகத்தைக்கண்ட அவள் அதை எடுத்து வரும்படி தன் தாதிகளுக்குக் கட்டளையிட்டாள்.

அவர்கள் அதை திறந்தபோது, ஒரு அழகான குழந்தையைக் கண்டார்கள். அது ஒரு எபிரெய குழந்தை என்று இராஜாவின் குமாரத்தி அறிந்திருந்தாள். எல்லா எபிரெய ஆண் குழந்தைகளும் அழிக்கப்பட வேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டதைக்குறித்து அவளும் அறிந்திருந்தாள். ஆனால், இவ்வளவு அழகான குழந்தை கொல்லப்படுவதற்கு அவளுடைய இளகிய மனம் இடம் கொடுக்கவில்லை. ஆகவே, அந்தக் குழந்தையை தன்னுடைய சொந்த குழந்தையாக தத்து எடுக்க முடிவு செய்தாள். எவ்வளவு அற்புதமான காரியம்?

இந்த சிறுவன் பெரியவனாகும்போது, அநேக வேலைகளைச்செய்ய வேண்டியிருந்ததினால் தேவன் இப்படியாக வழிநடத்தினார். இவரைப் பயன்படுத்துவதற்காக தேவன் அவருடைய திட்டத்தின்படி அவரை இரட்சித்தார். தேவன் செய்ய வேண்டும் என்று விரும்பும் காரியங்களை அவர் நேர்த்தியாகச் செய்ய வல்லமையுள்ளவர். ஆகவே, அவருடைய வாக்குத்தத்தங்கள் உண்மையில் நிறைவேறும் என்று நிச்சயமாக நாம் எப்பொழுதும் நம்ப வேண்டும்.

அந்தக் குழந்தையை பராமரிப்பதற்கு அந்த இராஜ குமாரத்தி அறியாதிருந்தபோது, அந்த குழந்தையின் சகோதரி ஏற்றநேரத்தில் வந்து அந்த குழந்தையைப் பராமரிப்பதற்கு யாராவது தேவைப்படுமா என்று விசாரித்தாள். இது ஒரு நல்ல யோசனையாக இருப்பதை எண்ணி அந்த இராஜகுமாரத்தி அந்த தாதியை அழைத்துவரும்படிச் சொன்னாள். மோசேயின் சகோதரியோ, அவளுடைய தாயை அழைத்து வந்தாள்.

அவள் வந்தபோது, அந்த குழந்தையை அவள் கையில்கொடுத்து, அதை வளர்த்துத் தரும்படி பார்வோன் குமாரத்தி கேட்டுக்கொண்டாள். இப்பொழுது சகலமும் நேர்த்தியாக நடந்தது அல்லவா? இப்படியாகவே, தேவன் சகல காரியங்களையும் செய்கிறார். மோசே என்று இராஜகுமாரத்தியால் பெயர் வைக்கப்பட்ட அந்த குழந்தை, வளர்ந்து வாலிபனாகும்வரை தன்னுடைய சொந்த தாயினால் பராமரிக்கப்பட்டது.

**கேள்விகள்:-**

1. மோசே என்பவர் யார்? அவர் குழந்தையாக இருக்கும்போது நதியோரத்தில் சிறிய பெட்டகத்திற்குள் விட்டுச் செல்லக் காரணம் என்ன?

2. மோசே எவ்வாறு எகிப்து இராஜாவின் வீட்டில் கல்வி கற்று பராமரிக்கப்பட்டார் என்பதை விவரிக்கவும்:-



## 13. தேவன் மோசேயோடு பேசினார்

சிறிய குமாரனாகிய மோசே, இராஜகுமாரத்தியால் கண்டுபிடிக்கப்பட்டதை எண்ணி நீங்கள் ஆச்சரியப்படலாம். அவர் மிக அருமையாக பராமரிக்கப்பட்டார். நாம் முன்னதாக பார்த்தபடி, அந்த இராஜகுமாரத்தி, மோசேயைப் பராமரிப்பதற்காக அவருடைய சொந்த தாயையே வேலைக்கு அமர்த்தினாள்.

உண்மையில் பார்க்கும்போது, தேவனே மோசேயை பராமரித்தார் என்பது புரிகிறது. தேவன் அவருக்கு மிகப்பெரிய வேலையை நியமித்திருந்ததினால், எல்லா தீங்கிலிருந்தும் அவர் மோசேயை இரட்சிக்க விரும்பினார். எகிப்து இராஜாவாகிய பார்வோன், எபிரெயர்களின் சகல ஆண் குழந்தைகளைக் கொல்ல முடிவு செய்தாலும் தேவன் மோசேயைக் கைவிடவில்லை. இதை நாம் எப்பொழுதும் நினைவில்கொள்ள வேண்டும்.

தேவனுக்காக மோசே செய்ய வேண்டிய அந்த மிகப்பெரிய வேலை என்னவென்று நீங்கள் சிந்திக்கலாம்.

நீங்கள் அறிந்திருக்கிறபடி, ஆபிரகாமின் பிள்ளைகளாகிய எபிரெய ஜனத்துக்கு தேவன் எகிப்து தேசத்தை வாக்களிக்கவில்லை. யோசேப்பை தன் சகோதரர்கள் விற்றுப்போட்டதினாலும், அதற்குப்பின் யாக்கோபும், அவருடைய பிள்ளைகளும், அவர்களுடைய குடும்பங்களும் பஞ்சம் பிழைப்பதற்காகவுமே அவர்கள் எகிப்துக்கு வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது யோசேப்பு அனைவரையும் ஆண்டுவந்தார்.

ஆனால், அதற்குப்பின் எபிரெய ஜனங்கள், அதிக கொடுமைக்குள்ளாக்கப்பட்டு உபத்திரவப்பட்டார்கள். அவர்கள் அடிமைகளாக இருந்தார்கள். அவர்களின்மேல் வைக்கப்பட்ட விசாரணைக்காரர்களிடமிருந்து விடுவித்து தங்களுடைய தந்தையாகிய ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்துக்கு அழைத்துவரும்படி விரும்பினார். சகல இஸ்ரயேல் ஜனங்களையும் எகிப்தைவிட்டு வெளியே அழைத்துவந்து வழிநடத்துவதற்கு மோசே ஒரு சரியான நபராக இருப்பார் என்பதை தேவன் அறிந்திருந்ததினால் அவர் மோசேயை எல்லா வகையிலும் பாதுகாத்தார்.

மேலும் சில காரியங்களையும் தேவன் அறிந்திருந்தார்! தேவன் எல்லாவற்றையும் அறிந்திருந்தார்! அவைகள் நடப்பதற்கு முன்னதாகவே சகலத்தையும் **அவர்** அறிந்திருந்தார்!

இஸ்ரயேலர்கள் எகிப்தைவிட்டு புறப்படுவது, பார்வோன் இராஜாவுக்கு பிரியமில்லாத காரியம் என்பதை தேவன் அறிந்திருந்தார். ஏனெனில், இந்த இஸ்ரயேல் ஜனங்கள் எகிப்தியருடைய சகல வேலைகளையும் செய்துகொண்டிருந்தார்கள். ஒருவேளை இஸ்ரயேலர்கள் எகிப்தைவிட்டுச் சென்றுவிட்டால், எல்லா வேலைகளையும் எகிப்தியர்கள் செய்ய வேண்டியதாயிருக்கும் என்பதை அறிந்த பார்வோன் அவர்களை அனுப்பிவிட மனதில்லாதிருந்தான்.

எகிப்திலிருந்து இஸ்ரயேல் ஜனங்களை அழைத்துச் செல்லக்கூடிய நபர் யாராக இருந்தாலும் சரி, பார்வோன் இராஜாவைக்குறித்தும், அவனோடுகூட பேசவேண்டிய விஷயங்களைக்குறித்தும் முன்னதாகவே நன்கு அறிந்திருக்க வேண்டியதாயிருந்தது. இவை எல்லாவற்றிலும் மோசே தேர்ச்சி பெறுவதற்காக, தேவன் செய்த ஏற்பாடுகள் எவ்வளவு அற்புதமானது. ஏனெனில், அவர் அரமனையில் வளர்க்கப்பட்டு அதிலுள்ள சகல ஒழுங்குகளையும் வழிமுறைகளையும் அறிந்தவராய் இருந்தார்.

ஆனாலும், அவருடைய அரமனை வாழ்க்கையில் அவருடைய தாய் அவருடன் அதிக நேரத்தை செலவழித்தாள். ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தையும், இந்த எபிரெயர்கள் எகிப்தில் ஒரு விருந்தாளிகளாக வாழ்ந்துகொண்டிருப்பதை அவள் நன்கு அறிந்திருந்தாள். இப்படிப்பட்ட தேவனுடைய அற்புதமான காரியங்களைக்குறித்து அவள் நிச்சயமாக மோசேயுடன் ஓயாமல் பேசியிருக்க வேண்டும். ஆபிரகாமைக்குறித்தும், ஈசாக்கைக்குறித்தும், யாக்கோபைக்குறித்தும் அவர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களைக்குறித்தும், அந்த வாக்குத்தத்தத்தின் வழியாக உலகத்தின் முழு ஜனங்களும் ஆசீர்வதிக்கப்படப் போவதைக்குறித்தும் அவள் தெளிவாக விவரித்திருக்க வேண்டும்.

பொதுவாக, யூத ஜனங்கள் அனைவரும் தேவனுடைய அற்புதமான வாக்குத்தத்தத்தை நம்பினார்கள். இவர்கள் மத்தியிலிருந்து தேவன் ஒரு மனுஷனை எழுப்பி, அந்த மனுஷனின் வழியாக தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்று அவர்கள் விசுவாசித்தார்கள்.

இந்த மாபெரும் தலைவரை, "மேசியா" என்று எபிரெய பாஷையில் அழைத்தார்கள்.

ஆனால், மற்ற ஜாதியார், தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்பவில்லை. வரக்கூடிய மேசியாவை எதிர்பார்த்த யூத ஜனங்களை மற்ற ஜாதியார் மதியீனம் என்று எண்ணினார்கள். இன்றைக்கும் அப்படியே காரியங்கள் நடைபெறுகிறது. வேதத்திலுள்ள வாக்குத்தத்தங்களை நம்பக்கூடியவர்களை மதியீனர்கள் என்று அநேகர் கருதுகிறார்கள். வேதாகமத்தில் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் நிறைவேறுகிறது என்று எண்ணுவதே மதியீனம் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

தேவனுடைய வாக்குத்தத்தங்களை மோசேயின் தாய் நம்பினதுபோல மோசேயும் நம்பினார். அந்த நம்பிக்கைகள் மதியீனமானது என்று எகிப்தியர் கூறினாலும் அதைக்குறித்து மோசே கவலைப்படவில்லை. மோசே வளர்ச்சியடையும்போது, அநேக கடினமான சூழ்நிலைகளைச் சந்தித்திருக்க வேண்டும். தேவனுடைய வாக்குத்தத்தங்களைக்குறித்து, அவர் நம்பின காரியங்களை பார்வோன் பரியாசம் செய்திருக்கலாம். ஆனால், எதைக்குறித்தும் மோசே கவலைப்படவில்லை.

அவர் நாற்பது வயதானபோது, ஒருநாள் ஒரு எகிப்தியன் எபிரெயனை அடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். மோசே தேவனை நேசித்ததினால், அவர் தேவனுடைய ஜனங்களையும் அதிகமாக நேசித்தார். தேவனுடைய ஒரு பிள்ளை மற்றவர்களால் அடிக்கப்படுவதைப் பார்த்துக்கொள்ள முடியாத மோசே, என்ன செய்தார் தெரியுமா? அவர் அந்த எகிப்தியனைக் கொன்று போட்டார். இது ஒரு நியாயமான காரியமா? தீமையானவைகளை செய்வதைக்காட்டிலும், தீமையை சகிப்பதே மேல். ஒருவரும் கண்டுபிடிக்கமாட்டார்கள் என்று எண்ணி மோசே அந்த எகிப்தியனை மணலில் புதைத்தார்.

மறுநாளில் இவர் செய்த காரியத்தைக்குறித்து சில எபிரெயர்கள் அறிந்துகொண்டார்கள் என்பதை கேள்விப்பட்ட மோசே ஆச்சரியப்பட்டார். இப்பொழுது, மோசே ஒரு பிரச்சனையில் அகப்பட்டார். இவர் செய்த காரியம் இராஜாவின் காதுக்கும் எட்டியது. மோசே கொல்லப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

தேவன் மோசேயை இன்னும் நேசிப்பதினால், எகிப்தைவிட்டு அவர் தப்பிச்செல்ல உதவி செய்தார். ஆனால், அவர் மிக பயங்கரமான அனுபவங்களைப் பெறவேண்டியதாய் இருந்தது. தேவனுடைய ஜனங்களை எகிப்திலிருந்து வெளியே அழைத்து வருவதற்கு மோசேயால் கூடாதகாரியம் என்று தோன்றியது. ஆனால், மோசே நிச்சயமாக ஜனங்களை வழிநடத்துவார் என்பதை தேவன் அறிந்திருந்தார். ஆயினும், மோசே இவ்வனுபவங்களின்மூலமாக சில விலையேறப்பெற்ற பாடங்களைக் கற்றுக்கொள்ளும்படியாக தேவன் இவ்வனைத்தையும் மோசேக்கு அனுமதித்தார்.

நமக்கும் இந்த காரியங்கள் நல்ல பாடங்களைக் கற்பிக்கிறது. ரம்மியமான காரியங்கள்மட்டுமே நமக்கு சிறந்ததல்ல. சில நேரங்களில் நாம் பிரச்சனைகளின் வழியாக செல்ல வேண்டியதாக இருக்கும். ஆயினும், அதற்குப் பின் நமக்கு தேவைப்படும் அநேக பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்.

இப்படியாகவே, மோசே அநேக பாடங்களைக் கற்றுக்கொண்டார். அவர் தன் ஜீவன் தப்பும்படி, எகிப்தைவிட்டு மீதியான் தேசத்துக்குச் சென்றார். அவர் மீதியான் தேசத்தில் ஒரு அந்நியராக இருந்தார். அங்கு அவர் செய்ய வேண்டிய காரியம் ஒன்றுமில்லை. தேவன் அவரை எவ்வாறு வழி நடத்துவார் என்பதைக்குறித்து அவர் ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். அவர் ஒரு துரவண்டையில் அமர்ந்தபோது, மந்தைகளை மேய்த்துக்கொண்டிருந்தவர்கள் மந்தைக்கு தண்ணீர் காட்டும்படி துரவண்டைக்கு வந்தனர்.

அங்கு அவர் அமர்ந்திருந்தபோது, தன்னுடைய தந்தையின் மந்தையை மேய்த்த ஏழு மீதியானிய ஸ்திரீகள் அங்கு வந்தார்கள். ஆனால், அங்கிருந்த மேய்ப்பர்கள் அந்த ஸ்திரீகளை அங்கிருந்து விரட்டத் துவங்கினார்கள். இதை பார்த்துக்கொண்டிருந்த மோசே, அவர்களோடு வாக்குவாதம் செய்து, அந்த ஸ்திரீகள் தங்களுடைய மந்தைக்கு தண்ணீர் காட்டுவதற்கு உதவி செய்தார்.

இந்த மீதியானிய ஸ்திரீகள் வீடு திரும்பியபோது, நடந்த காரியங்கள் அனைத்தையும் தன் தந்தையிடம் சொன்னார்கள். அவர் உடனடியாக மோசேக்கு ஆள் அனுப்பினார். அவருக்கு எத்திரோ என்று பெயர். எத்திரோ மோசேயை அதிகமாக நேசித்ததினால், அவருடைய குமாரத்தியாகிய சிப்போராளை மோசேக்கு திருமணம் செய்து கொடுத்தார். இப்படியாக அனைவரும் ஒரே குடும்பமானார்கள்.

மோசே எத்திரோவின் ஆடுகளை மேய்த்து வந்தார். நாற்பது வருடங்கள் ஒரு மேய்ப்பனாக பணி புரிந்து வந்தார். இப்பொழுது மோசேக்கு என்ன வயதிருக்கும்? அவர் எகிப்தை விட்டோடி வந்தபோது, நாற்பது வயதாக இருந்தார். தன்னுடைய மாமனாகிய எத்திரோவிடம் நாற்பது வருடங்கள் வேலை செய்தார். மொத்தத்தில் மோசேக்கு எண்பது வயது நிரம்பியது இல்லையா? மோசே முதிர்ந்தவராக இருப்பினும் அவர் ஆரோக்கியமுள்ளவரும், பலமுள்ளவருமாயிருந்து, தேவன் அவருக்கு நியமித்திருந்த மிகப்பெரிய வேலையைச் செய்வதற்கு திராணியுள்ளவராக இருந்தார்.

அதற்கு பின் ஒரு அற்புதமான காரியம் நடந்தது. ஒருநாள் மோசே மந்தையை மேய்த்துக்கொண்டிருக்கும்பொழுது, எரிந்து கொண்டிருக்கிற ஒரு முட்புதரைக் கண்டார். அவர் அதைப் பார்க்கும்படி சென்றபோது, அக்கினி ஜுவாலை கொழுந்துவிட்டு எரிந்து

கொண்டிருந்தாலும், அந்த முட்புதர் அக்கினியினால் அழிக்கப்படவில்லை என்பதையும் கண்டார். இது ஒரு சாதாரண நெருப்பாக இருப்பதற்கு வாய்ப்பில்லை என்று சிந்தித்தபடியே மோசே அதை உற்றுப் பார்த்தார். அதிலிருந்து அவரோடு பேசக்கூடிய ஒரு குரலைக் கேட்டார். அந்த இடம் பரிசுத்தமாயிருந்ததால் மோசேயை பாதரட்சைகளைக் கழற்றிப்போடும்படி அந்தக் குரல் கேட்டுக்கொண்டது. தேவன் அவரோடுகூட இருந்ததை மோசே அப்பொழுது அறியாதிருந்தார்.

வெகு சீக்கிரத்தில் அவரோடு பேசிக்கொண்டிருப்பது யார் என்று மோசே உணர்ந்தார். இவர் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாய் இருந்தார். ஆகவே, எரிகிற முட்புதரிலிருந்து மோசேயுடன் பேசினவர் மோசேக்கு அந்நியராக இருக்கவில்லை. ஏனெனில், ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபுக்கு வாக்களித்த அந்த அற்புதமான தேவனைக்குறித்து மோசே அநேக காரியங்களை தம்முடைய தாயிடமிருந்து கற்றறிந்தார். பேசிக்கொண்டிருந்த இவர் எபிரெயர்களின் தேவனும் இப்படியாக மோசேயின் தேவனுமாயிருந்தார்.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரயேல் ஜனங்களை எகிப்தைவிட்டு வெளியே அழைத்துவருவதற்கு காலம் வந்துவிட்டதென்று தேவன் மோசேக்குச் சொன்னார். எகிப்திலிருந்து ஜனங்களை வழிநடத்துவதற்கு தாம் மோசேயை நியமித்திருப்பதாகவும் சொன்னார். மோசே நாற்பது வயதாக இருந்தபோது, அந்த எகிப்தியனைக் கொன்றுபோடுகையில் மிக தைரியமுள்ளவராக இருந்தார். ஆனால், காரியங்கள் இப்பொழுது வேறுபட்டது. இப்படிப்பட்ட மிகப்பெரிய வேலைகளைச் செய்வதற்கு தனக்குள் திராணியில்லை என்று தேவனிடம் கூறினார்.

நிச்சயமாக மோசே இவ்வேலையை தனித்து செய்ய முடியாது. இதைத்தான் மோசே கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை தேவன் விரும்பினார். ஆகவே, மோசேக்குத் தேவையான சகல உதவிகளையும் தேவன் தருவதாகக் கூறினார். பார்வோனுக்கு முன் நிற்பதற்கு அவருடைய சகோதரனாகிய ஆரோனை ஏற்பாடு செய்வதாகக் கூறினார். அவர் மோசேக்குப்பதிலாக அவரோடு கூடச்சென்று பார்வோனோடு பேசும்படி தேவன் ஒழுங்கு செய்தார்.

தேவன் அவருக்கு உதவி செய்வதை மோசே நன்கு உணர்ந்தபோது, தன்னால் முடிந்த காரியத்தைச் செய்வதற்கு ஒப்புக்கொண்டார். தேவனுடைய உதவியின்றி நம்மால் எதுவும் செய்ய முடியாது என்பதை நாம் அனைவரும் நினைவில்கொள்ள வேண்டும். நாம் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்பும் காரியங்களை நாம் செய்வதற்கு நிச்சயமாக தேவன் நமக்கு உதவி செய்துகொண்டிருக்கிறார் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். தேவனுக்காக அவருடைய பணியை செய்வது மிக மேன்மையான காரியம். ஆனாலும், அவைகளை நாம் செய்வதற்கு தேவன் நமக்கு உதவி செய்கிறார் என்பதை நாம் மறந்து விடக்கூடாது!

**கேள்விகள்:-**

1. எபிரெய ஜனங்கள் எகிப்துக்கு எப்படி சென்றார்கள்? அங்கு அவர்கள் நிரந்தரமாகத் தங்குவதற்கு தேவன் ஏன் விருப்பப்படவில்லை?

2. எகிப்தைவிட்டு புறப்படுவது மிக அவசியம் என்று மோசே எண்ணிய காரணம் என்ன? அவர் எங்குச் சென்றார்?

3. மோசேக்கு மனைவியாக வந்தவள் யார்? அவர் தன்னுடைய மாமனாரின் வீட்டில் எத்தனை நாட்கள் தங்கினார்?

4. எரிகிற முட்புதரிலிருந்து மோசேயிடம் பேசினவர் யார்? மேலும், அவர் என்ன செய்ய வேண்டும் என்று மோசேக்குக் கற்பித்தார்?



## 14. தேவன் தம்முடைய ஜனங்களை விடுவித்தார்

**கர்த்தர்** எவ்வளவு வல்லமையுள்ளவர் என்றும், ஞானமுள்ளவர் என்றும், இந்த கதை புத்தகத்தில், முதல் பாடத்தில் கற்றுக்கொண்டோம். தேவன் இந்த பூமியையும், சூரியனையும், சந்திரனையும், சகல நட்சத்திரங்களையும் சிருஷ்டித்தார் என்றும் அறிந்துகொண்டோம். மேலும், பூமியின்மேல் வாழும் சகல மிருகங்களையும், ஆகாயத்தின் பறவைகளையும், நீந்தும் மச்சங்களையும், அழகான ஆறுகளையும், மரங்களையும், பூக்களையும் சிருஷ்டித்தார் என்றும் அறிந்துகொண்டோம்.

தேவன் எவ்வளவு அற்புதமானவர்! அவர் செய்ய விரும்பும் யாவற்றையும் அவர் செய்ய வல்லமை பெற்றிருக்கிறார்.

வேதாகமம் இவைகளைக் கூறுவதினால், நாம் இவைகளை அறிந்துகொண்டோம். மேலும், வேதாகமம் உண்மை என்பதை நாம் நன்கு அறிந்திருக்கிறோம்! தேவன் செய்த சகல அற்புதமான காரியங்களையும் மீண்டும் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். ஏனெனில், நாம் பார்க்கக்கூடிய இந்த உண்மை கதையில் தேவன் அவருடைய சொந்த ஜனங்களுக்காக செய்த காரியங்களை நாம் பார்க்கப்போகிறோம்.

எரிகிற முட்செடிக்கு மத்தியிலிருந்து தேவன் மோசேயிடம் பேசினார் என்பதை நாம் அறிந்தோம். எகிப்தைவிட்டு எபிரெயர்களை எவ்வாறு அழைத்துவர முடியும் என்று மோசே பயந்தார். மோசே சரியாகவே சிந்தித்தார். ஆனால், தேவன் மோசேக்கு உதவி செய்ய திட்டமிட்டார். தேவனுடைய உதவியோடு மோசே தேவன் விரும்பும் எந்த காரியங்களையும் செய்ய வல்லமை பெற்றார். தேவன் மோசேக்கு நல்லவராக இருந்தார். அவர் தம் மாபெரும் வல்லமையை மோசேயிடம் காண்பித்தார். மோசே தன்னுடைய மாமனாரின் ஆடுகளை மேய்ப்பதற்காக தன் கையில் ஒரு கோலைப் பிடித்திருந்தார். அந்த கோலை தரையில் போடும்படி தேவன் மோசேயிடம் கூறினார். அவர் அப்படி போட்டபோது, கோல் சர்ப்பமாக மாறிற்று! எவ்வளவு அற்புதமான காரியம்?

மோசே மிகவும் பயந்தார். அங்கிருந்து மோசே ஓடத்தொடங்கினார். ஆனால், அந்த சர்ப்பத்தின் வாலை பிடிக்கும்படி தேவன் மோசேயிடம் சொன்னார். அவர் அதை கையில் பிடித்தபோது, அது மீண்டும் கோலாக மாறியது. இது மோசேக்கு அற்புதமான பாடமாக இருந்தது. பார்வோனுக்கு முன் மோசே நின்று எகிப்திலிருக்கும் இஸ்ரயேலர்களை அனுப்பும்படி அனுமதி கேட்கும்போது, இக்காரியத்தைச் செய்யச் சொன்னார். இந்த அற்புதம் மோசேக்கு தைரியத்தைத் தந்தது. மேலும், தேவன் அவருக்கு எப்போதும் உதவி செய்வார் என்றும் நிரூபித்தது.

தேவன் மோசேக்காக, மேலும் சில அற்புதமான காரியங்களையும் செய்தார்.

அதற்குப்பின் மற்ற இஸ்ரயேலர்களோடு எகிப்தில் வாழ்ந்த மோசேயின் சகோதரனான ஆரோனுடன் தேவன் பேசினார். நீண்ட காலமான நாற்பது வருடங்கள் மோசேயைக் காணாத அவர்களின் குடும்பத்தினர், அவர் மரித்துவிட்டார் என்று எண்ணியிருக்கலாம். ஆனால், மோசேயை சந்திக்கும்படி தேவன் ஆரோனிடத்தில் கூறினார். ஆரோன் தன்னுடைய சகோதரனாகிய மோசேயை சந்தோஷத்துடன் சந்தித்தார். அப்பொழுது, தாங்கள் செய்ய வேண்டிய காரியங்களைக்குறித்து தேவன் கற்பித்ததை மோசே ஆரோனுக்கு அறிவித்தார்.

மோசே மற்றும் ஆரோன் இணைந்து செயல்படுவதற்கு தேவன் மிகச் சிறப்பாக ஆயத்தம் செய்ததைப் பாருங்கள். ஆரோன் ஒரு நல்ல பேச்சாளராய் இருந்தார். இந்த நாளிலும் சில ஞானமுள்ள மனுஷர் சரியாகப் பேசுவதற்கு திராணியில்லாதிருக்கிறார்கள். அதேபோல் மோசேயும் இருந்தார். அவர் தேவனை அதிகமாய் நேசித்து அவர் விரும்பும் எல்லா காரியங்களையும் செய்வதற்கு சித்தமுள்ள, மனத்தாழ்மையுள்ள, ஞானமுள்ள மனுஷராக இருந்தார். ஆனாலும், அவர் சரியாகப் பேசுவதற்கு திராணியற்றவராக இருந்தார். ஆனால், ஆரோன் நல்ல பேச்சாளராக இருந்ததினால் இருவரும் இணைந்து செயல்பட்டார்கள்.

அதற்குப் பின் மோசேயும், ஆரோனும் தேவன் விரும்பும் காரியங்களைக்குறித்து சம்பாஷித்தார்கள். இதற்காக முதலில் இஸ்ரயேலின் மூப்பர்களை சந்திக்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள். இந்த மூப்பர்களை தலைவர்களாக இஸ்ரயேல் ஜனங்கள் பார்த்தார்கள். மேலும், இந்த மூப்பர்களுக்கு தேவன் எகிப்திலிருந்து இஸ்ரயேலர்களை மீட்பதற்கான அவருடைய திட்டத்தை விளக்குவது மிக அவசியமாயிருந்தது. தேவன் மோசே மற்றும் ஆரோனிடம் பேசின அற்புதமான காரியங்களை அவர்கள் கேட்டபோது, அனைவரும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

அதற்குப் பின் எகிப்தின் இராஜாவாகிய பார்வோனை சந்திப்பதற்கு மோசேயும், ஆரோனும் ஆயத்தப்பட்டார்கள். தேவனை தொழுதுகொள்வதற்காக சகல ஜனங்களையும் விடுவிக்க வேண்டும் என்று அவர்கள் பாவோனிடம் அனுமதி கேட்டார்கள். ஆனால், பார்வோன் இஸ்ரயேல் ஜனங்களை அனுப்பமாட்டான் என்று தேவன் நன்கு அறிந்திருந்தார். பார்வோன் மிக சுயநலமான, மிகக் கொடூரமான மனுஷன் என்றும் அறிந்திருந்தார். இக்காரியத்தை நம் தேவன் மோசேக்கு முன்னறிவித்தார். இப்படியாக, தான் கீழ்ப்படிவதற்கு அந்த தேவன் யார் என்பதை பார்வோன் அறிந்துகொள்ள விரும்பினார்.

ஐயோ, பார்வோனுக்குப் பரிதாபமான நிலை!

பார்வோனைப்போல தேவனோடு இசைந்திராத அநேக ஜனங்கள் இந்த உலகத்தில் இருக்கிறார்கள். தான் விரும்பும் காரியத்தைச் செய்து முடிக்கக்கூடிய ஒரு வல்லமையுள்ள தேவன் இருக்கிறார் என்ற காரியம் அவர்களுக்குப் பரியாசமாக இருக்கிறது. இவர்களுக்காக நீங்கள் வருத்தப்படுகிறீர்களா? ஆம், பார்வோனின் கண்கள் திறக்கப்பட்டதுபோல, ஒருநாளில் இவர்களின் கண்களும் திறக்கப்படும்.

பார்வோன், மோசே மற்றும் ஆரோனிடம் தேவனைப்பற்றி விசாரிக்கையில், ஆரோன் அந்தக் கோலை தரையில் வீசினார். அது சர்ப்பமாக மாறியது. இன்று குறவர்களைப்போல, எகிப்தில் பல மந்திரவாதிகளும், குறிசொல்பவர்களும் இருந்தார்கள். இவர்கள் தேவன் செய்த காரியங்களைச் செய்ய முயற்சித்தார்கள். அவர்களும் சில சர்ப்பங்களை உருவாக்கினார்கள். ஆனால், தேவன் மோசேயின் கோலினால் செய்த சர்ப்பம், மற்ற எல்லா சர்ப்பங்களையும் விழுங்கியது. எவ்வளவு விநோதமான காரியம்?

அதைப் பார்த்துக்கொண்டிருந்த பார்வோன் ஆச்சரியப்பட்டாலும் எபிரெயர்களை அனுப்ப சம்மதிக்கவில்லை. அவர்களை அனுப்பிவிடுவதற்குப்பதிலாக, அவர்கள் அடிமையாக இருந்து செய்யக்கூடிய வேலைகளை மேலும் கடுமையாக அதிகரித்தான். எபிரெயர்களின் நிலை

இன்னும் மோசமானது. எகிப்தைவிட்டுச் செல்வதற்கான காரியத்தைக்குறித்து அவர்கள் எப்போதும் சிந்தியாதபடிக்கு அவர்களை இக்கட்டான நிலைமையில் அகப்படுத்தினான்.

மோசே ஜனங்களின் நிலமையைக்கேட்டு மிகவும் வருத்தப்பட்டார். இவை அனைத்தையும் தேவன் அறிந்திருந்தார் என்பதை மோசே முழுமையாக அறியவில்லை. இந்த எபிரெயர்கள் எகிப்தைவிட்டு புறப்படும்வரையில் பார்வோனுடைய இருதயம் கடினப்படுவதினால் தேவன் செய்யக்கூடிய இன்னும் பல அற்புதமான காரியங்களைக்குறித்து அறியாதிருந்தார். எல்லாவற்றுக்கும்மேலாக, எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியே செல்வது எவ்வளவு அவசியம் என்பதை இஸ்ரயேலர்கள் உணர வேண்டும் என்பதை தேவன் விரும்பினார். நிச்சயமாக தேவன் ஞானமுள்ளவர்!

ஆம், காரியங்கள் விரைவாகத் துவங்கியது. எபிரெயர்களை அனுப்பும்படி மோசே மற்றும் ஆரோன் பார்வோனிடம் அனுமதி கேட்டார்கள். நாம் முன் பார்த்தப்படி ஆரோன் பார்வோனிடம் பேசினார். ஆனால், பேச வேண்டிய காரியங்களையும் மோசே மற்றும் ஆரோனிடம் அறிவித்தார். எல்லா காரியங்களையும் இப்படியாக செய்யும்படி தேவன் மோசேக்குக் கட்டளையிட்டார். ஆகவே, மோசே தேவனுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்தார். ஆனால், பார்வோன் மீண்டுமாக ஜனங்களை அனுப்ப மறுத்துவிட்டான்.

அதற்குப் பின் எகிப்தில் ஓடின ஆற்றின் மேல் மோசே தன் கையிலிருந்த கோலை நீட்டினார். என்ன நடந்தது தெரியுமா? அந்த நதியில் ஓடின ஜலம் (தண்ணீர்) இரத்தமாக மாறியது! இதினிமித்தம் நதியிலிருந்த மீன்கள் செத்துப்போயிற்று. நதியில் இருந்த தண்ணீர் மட்டுமல்ல, தண்ணீர் காணப்பட்ட எல்லா இடங்களும் இரத்தமாக மாறியிருந்தது எவ்வளவு பயங்கரமாக இருந்திருக்கும்? இறுதியாக அவர்கள் குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமற்போயிற்று. அவர்கள் தண்ணீருக்காக ஊற்று தோண்டினார்கள். தேவன் செய்யவிரும்பும் காரியங்களை, ஜனங்கள் சிந்திப்பதற்காக அவர் எவைகளை வேண்டுமானாலும் செய்வார்.

உண்மையில் எகிப்தின்மேல் இது ஒரு மிகப் பெரிய வாதையாக இருந்தது.

சற்று நேரத்திற்குப் பின் அவைகள் மாற்றப்பட்டது. ஆயினும், எபிரெயர்களை விடுதலைசெய்ய பார்வோனுக்கு மனதில்லாதிருந்தது. மீண்டும் எந்த ஒரு வாதையும் வராது என்றெண்ணி, அவன் தன் இருதயத்தை மேலும் கடினப்படுத்தினான்.

ஆனால், பார்வோன் தவறாக எண்ணினான். ஏனெனில், பல வாதைகள் தொடருவதற்கு ஆயத்தமாக இருந்தது. வெகு சீக்கிரத்தில் அந்த நதி தவளைகளால் நிறைந்தது! அந்த நதி தவளைகளினால் நிரம்பி வழிந்ததினால், அவைகள் வீட்டிற்குள் புகுந்து, மா பிசைகிற தொட்டிகளிலும், படுக்கை அறைகளிலும் அதிகமதிகமாய்க் காணப்பட்டது. அப்பத்தோடு தவளைகளையும் சமைத்துச் சாப்பிட விரும்புவார்களா?

இக்காரியம் எகிப்தியர்களை மோசமான நிலைக்குத் தள்ளியது. எகிப்தியர் புறஜாதியாராக இருந்ததினால் அவர்கள் தவளைகளை வணங்கிக்கொண்டு வந்தார்கள். ஆனால், இப்பொழுது அவைகளின்மேல் கோபம் வந்திருக்க வேண்டும் அல்லவா? அதற்குப் பின் பார்வோன் சிந்திக்கத் துவங்கினான். அவன் மோசேக்கும், ஆரோனுக்கும் ஆளனுப்பி, இந்த தவளைகளை தேசத்திலிருந்து விரட்டிவிட்டால் எபிரெயர்களை அனுப்பிவிடுவதாகக் கூறினான். ஆனால், அந்த தவளைகள் சென்றபோதோ பார்வோன் தன் மனதை மாற்றிக்கொண்டான்.

அதைத் தொடர்ந்து தேவன் மூன்றாவது வாதையை அனுப்பினார். இது பயங்கரமாக இருந்தது. நம்முடைய பாலைவனங்களைப்போல எகிப்தின் மீதெங்கும் மணல் காணப்பட்டது. மோசே தனது கோலை தரையின் மீது நீட்டினார். அந்த புழுதி பேன்களை பிறப்பித்தது. ஒருவேளை எல்லா புழுதியும் பேனாக மாறியிருக்க வேண்டும். இவைகளை உங்களால் கற்பனை செய்து பார்க்கமுடிகிறதா? அந்த பேன்கள் எல்லா இடங்களிலும் ஊறிச்சென்றது. நிச்சயமாக இது எகிப்தியருக்கு தாங்கமுடியாத அருவருப்பான அனுபவமாய் இருந்திருக்க வேண்டும்.

ஆனால், அந்த வாதை நீங்கினபோதோ, பார்வோனின் இருதயம் மேலும் அதிகமாகக் கடினப்பட்டது.

தேவன் மற்றொரு வாதையை அனுப்பினார். வண்டுகளினாலான வாதையாக இருந்தது. ஆனால், அந்த வாதையின்போது ஒரு அற்புதமான காரியம் நிகழ்ந்தது. எபிரெயர்கள் வாழ்ந்துவந்த பகுதிகளில் அவைகள் காணப்படவில்லை. இதினிமித்தம் தேவன் எபிரெயர்களுக்கு உதவி செய்கிறார் என்பது பார்வோனுக்கு உணர்த்தப்பட்டது. அவன் உடனடியாக மோசேக்கும், ஆரோனுக்கும் ஆளனுப்பி வெகு தூரத்திலுள்ள இடத்திற்கல்ல, மிக

அருகாமையிலுள்ள இடத்திற்கு அழைத்துச் செல்லும்படி சொன்னான். ஆனால், அந்த வாதை நீங்கினபோதோ, பார்வோன் தன்மனதை மாற்றிக்கொண்டு ஜனங்கள் போவதற்கு அவன் அனுமதிக்கவில்லை.

அதற்குப் பின் எகிப்தியர்களின் எல்லா கால்நடைகளும் மரிக்கும்படியாக அவர்கள்மேல் ஒருபெரிய வாதை வந்தது. இது ஐந்தாம் வாதையாய் இருந்தது.

அடுத்து, எகிப்தியர்களின்மேல் பெரிய கொப்பளங்கள் புறப்பட்டது.

அதற்குப் பின் கல்மழை பெய்தது.

அதற்குப்பின் எட்டாவது வாதை வந்தது. தேசம் வெட்டுகிளிகளினால் நிறைந்திருந்தது. எப்படிப்பட்ட அனுபவமாக இருந்திருக்க வேண்டும்! நாம் காணக்கூடிய வெட்டுக்கிளிகளைக்காட்டிலும் இது பெரிதாக இருந்திருக்க வேண்டும். அவைகளின் பார்வையில் பச்சையாக இருந்த அனைத்து தாவரங்களையும் புசித்து தேசம் முழுவதும் வெறுமையாக்கியது.

இந்தமுறை பார்வோன் எபிரெயர்களை அனுப்ப மனதாயிருப்பான் என்று நீங்கள் எண்ணலாம். இந்த முறையும் அவன் அனுப்பவில்லை. ஒவ்வொரு முறையும் அவன் ஜனங்களை அனுப்புவதாக மோசேயிடம் வாக்களித்து, வாதை நீக்கப்பட்டபோதோ, அவன் தன்மனதை மாற்றிக்கொண்டு, அவன் எவ்வளவு கொடூரமானவன் என்பதைக் காட்டினான்.

நல்ல மனுஷனுக்கும், துன்மார்க்கமான மனுஷனுக்கும் உள்ள வித்தியாசத்தை இவ்வழியில் நாம் எளிதில் கண்டு பிடிக்கலாம். நல்ல மனுஷன் தான் கொடுத்த வாக்குகளை எப்படியாகிலும் நிறைவேற்றிவிடுவான். ஆனால், ஒரு துன்மார்க்கனோ, அவன் செய்த வாக்குத்தத்தங்களை முறித்துவிடுவான். பார்வோன், அவன் செய்த வாக்குத்தத்தங்களை தொடர்ந்து முறித்துக்கொண்டிருக்கையில் தேவன் எகிப்திற்கு ஒவ்வொரு வாதையாக அனுப்பினார்.

காரிருள் தேசத்தை மூடுவதே ஒன்பதாவது வாதையாக இருந்தது. பகல் நேரத்திலும் எகிப்து இருட்டாக இருந்தது. நடுபகலும் நடுஇராத்திரி போலிருந்தது. அந்த மூன்று நாட்களிலும் ஒருவரும் வெளிச்சத்தைக் காணவில்லை. ஆனால், எபிரெயர்களோ, வெளிச்சத்தில் இருந்தனர்! இப்படியாக அநேக வாதைகள் எகிப்தின்மேல் வந்தது. இவைகளைச் செய்வதற்கு தேவன் உதவி செய்தார்.

மற்றொரு வாதையை அனுப்பும்படியாக, பார்வோன் தொடர்ந்து தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்திக்கொண்டிருந்தான். ஆனால், இதுவே கடைசி பத்தாவது வாதையாக இருந்தது. அது என்னவென்று தெரியுமா? எகிப்தியர்களின் குடும்பங்களில் பிறந்த ஒவ்வொரு தலைச்சன் பிள்ளைகளும் மரித்துப்போனார்கள். மந்தைகளில் பிறந்த முதன்மையானவைகளும் மரித்தது. பார்வோனின் முதல் பிறந்த ஒரே குமாரனும் மரித்துப்போனான். இக்காரியமானது, எபிரெயர்களை அனுப்பிவிடும்படி மாறாத சிந்தனையை பார்வோனுக்குள் ஏற்படுத்தியது. ஆகவே, அவன் இஸ்ரயேலர்களை போகும்படி அனுமதித்தான்.

உடனே பார்வோன் மோசேக்கும், ஆரோனுக்கும் ஆளனுப்பி, எகிப்திலிருந்து இஸ்ரயேலர்களை சீக்கிரமாக வெளியேறச் சொன்னான். பார்வோன் போதுமான பிரச்சனைகளைச் சந்தித்தான். இனி தேவனுடைய ஜனங்களை அனுப்பாமல், எகிப்தில் தங்கவைத்தால் அவனும் மற்ற எகிப்தியரும் மரித்துப் போவார்கள் என்ற பயம் அவனுக்குள் வந்தது. ஆகவே, அவர்களையும், அவர்களுடைய உடைமைகளையும், அவர்களின் ஆடு மாடுகளையும் உடனடியாக எடுத்துச் செல்லும்படிச் சொன்னான்.

இஸ்ரயேலர்கள் எகிப்தைவிட்டு புறப்பட வேண்டும் என்று எகிப்தியர் இஸ்ரயேலர்களை துரிதப்படுத்தினார்கள். அவர்களுக்கு தேவையான உதவிகளையும் செய்து, பொன்னும், வெள்ளியுமான ஆபரணங்ளைக் கொடுத்தனுப்பினார்கள். இது தேவனுக்கு ஒரு அற்புதமான வெற்றியாக இருந்தது. தேவன், மோசேயோடும், ஆரோனோடும் இருந்து உதவி செய்தார் என்று நிச்சயமாக அவர்கள் அறிந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இருந்திருக்க வேண்டும். இப்படியாக நாம் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்பும் காரியங்களை நாம் செய்வதற்கு அவர் முழுமையாக நமக்கும் உதவி செய்வார் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

**கேள்விகள்:-**

1. ஆரோன் என்பவர் யார்? தேவன் சொல்லிய காரியங்களைச் செய்வதற்கு அவர் மோசேக்கு எவ்விதத்தில் உதவியாக இருந்தார்?

2. எகிப்தின் இராஜா இஸ்ரயேலர்களை எகிப்தைவிட்டு அனுப்புவதற்கு சம்மதித்தானா?

3. எகிப்தில் நடந்த பத்து வாதைகள் என்னென்ன? தேவன் எகிப்திய ஜனங்கள்மேல் இவைகளை ஏன் அனுமதித்தார்?

4. இஸ்ரயேல் ஜனங்களை எகிப்தைவிட்டு அனுப்புவதற்கு பார்வோன் எத்தனைமுறை ஒப்புக்கொண்டு அவன் மனதை மாற்றிக்கொண்டான்?



## 15. எகிப்திலிருந்த கடைசி இரவு

**கடைசியாக,** அந்தக் கொடூரமான எகிப்திய இராஜாவாகிய பார்வோன் எபிரெயர்களை தன்னுடைய தேசத்திலிருந்து அனுப்புவதில் மகிழ்ச்சியடைந்தான் என்று நாம் முன்னதாகப் பார்த்தோம். எகிப்தின் ஒவ்வொரு குடும்பங்களிலும், தன்னுடைய குடும்பத்திலும் முதல் பிறந்த பிள்ளைகள் திடீரென்று மரித்தது இதற்குக் காரணமாயிருந்தது. அவன் இஸ்ரயேலர்களை எகிப்தைவிட்டு அனுப்பாததினிமித்தம் வந்த மிகப்பெரிய பிரச்சனைகளை அவன் அறிந்திருந்தான். ஆகவே, இம்முறை இஸ்ரயேலர்களை அனுப்ப சம்மதித்தான். ஆனால், முதற்பேறானவர்களாய் பிறந்தவர்களைக்குறித்த கதையின் மற்றொரு பகுதியை உங்களுக்குக் கூற விரும்புகிறேன்.

அந்த இராத்திரியில் எபிரெய குடும்பங்களின் மூத்த பிள்ளைகள் மரித்தார்களா என்று நீங்கள் எண்ணலாம். ஆனால், அவர்களில் ஒருவரும் மரிக்கவில்லை! இதற்கு ஒரு ஆர்வமூட்டும் கதை உள்ளது. இது உண்மையில் நடந்த கதையாகும். வேதாகமத்தில் இவை எழுதப்பட்டிருப்பதினால் இது உண்மை என்று நாம் அறிந்திருக்கிறோம்.

எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகள் சங்கரிக்கப்பட்ட காலம் வசந்த காலமாக இருந்தது. மேலும், எபிரெயர்களின் தலைச்சன் பிள்ளைகள் சங்கரிக்கப்படாதபடிக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை தேவன் மோசேயிடம் அறிவித்தார். அந்த வருடத்தின் முதல் மாதத்தின் துவக்கமாக ஒருநாளை குறித்துக்கொள்ளும்படி தேவன் கட்டளையிட்டார். நாம் ஜனவரி மாதத்தை முதல் மாதம் என்று கூறுகிறோம். ஆனால், இஸ்ரயேலர்களுக்கு நீசான் மாதத்தை முதல் மாதம் என்று தேவன் நியமித்தார். இது வசந்தகாலமாயிருக்கிறது.

எபிரெயர்களின் ஒவ்வொரு குடும்பங்களும் அந்த முதல் மாதத்தின் பத்தாம் தேதி ஒரு ஆட்டுக்குட்டியை தேர்வு செய்து, அதை பதினான்காம் தேதிவரைக்கும் வைத்திருக்க வேண்டும். பதினான்காம் தேதி சூரிய அஸ்தமனத்திற்கு பின், அந்த ஆடுகளை வெட்டி அதன் இரத்தத்தை வீடுகளின் நிலைகால்களில் தெளிக்க வேண்டும். அந்த இரவில் ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு அனைவரும் புசிக்க வேண்டும்.

ஒரு ஆட்டுக்குட்டியை புசிப்பதற்கு குடும்பத்தில் போதிய நபர்கள் இல்லாவிட்டால் பக்கத்து வீட்டுக்காரர்களை தங்கள் விருந்தாளிகளாக அழைத்துக்கொள்ளலாம். இப்படியாக இரு குடும்பங்கள் ஒரு ஆட்டைக்கூட புசிக்கலாம்.

ஆனால், விடியும்வரைக்கும் அந்த ஆட்டின் மாம்சத்தை மீதி வைக்கக்கூடாது. அவர்களால் புசிக்க முடியவில்லையென்றால், மீதியுள்ளதை வீட்டிற்குள் சுட்டெரித்துவிட வேண்டும்.

சுடப்பட்ட மாம்சத்தை புசிப்பதற்குமுன் எபிரெயர்கள் தங்கள் வஸ்திரங்களை உடுத்தி எகிப்தைவிட்டு புறப்படக்கூடிய ஒரு ஆயத்தநிலையில் இருக்க வேண்டும். ஏனெனில், மறுநாளில் இராஜாவாகிய பார்வோன் அவர்களை எகிப்தைவிட்டு அனுப்பிவிடுவான் என்று தேவன் அறிந்திருந்தார்.

அந்த இராத்திரியில் எபிரெயரின் தலைச்சன் பிள்ளைகளை தேவனுடைய வல்லமை அழித்துக்கொண்டு வரும்போது, இரத்தம் தெளிக்கப்பட்ட நிலைக்கால்களிலுள்ள வீடுகளிலிருந்த தலைச்சன் பிள்ளைகள் மட்டுமே அதற்குத் தப்பினார்கள். இப்படியாக, எபிரெயர்களின் தலைச்சன் பிள்ளைகளும் மரணத்திலிருந்து நீக்கப்பட்டார்கள். இதற்குப்பின் அனைவரும் மறுநாள் காலையில் எகிப்தைவிட்டு புறப்படுவதற்கு ஆயத்தமாகும்படி தேவன் கூறினார். தேவன் எவ்வளவு ஞானமுள்ளவர்? சகலத்தையும் சரியான வழியில் நேர்த்தியாகச் செய்வதற்கு அவர் அறிந்திருக்கிறார். ஆகவேதான், அவர் சொல்லிய காரியங்கள் அனைத்தையும் முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும் என்பது மிக அவசியமாய் இருக்கிறது.

எபிரெயர்களுக்காக தேவன் இந்த ஏற்பாடுகளைச் செய்வதில் மற்றொரு காரணம் இருந்தது. ஆபேல் தேவனுக்கு ஒரு ஆட்டுக்குட்டியை பலி செலுத்தினபோது, தேவன் எவ்வளவு மகிழ்ச்சியாயிருந்தார் என்பதை அறிந்திருக்கிறோம். ஆபேல் பலியாகச் செலுத்தின அந்த ஆட்டுக்குட்டி ஒருவகையில் நம்முடைய ஆண்டவராம் இயேசுவை அடையாளப்படுத்தின காரணத்தினால் தேவன் ஆபேலின் பலியில் பிரியமாயிருந்தார்.

தேவனுடைய ஆட்டுக்குட்டியாகிய இயேசு உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்ப்பவர் என்று வேதாகமம் கூறுகிறது. இந்த உலகத்தில் பாவம் இருப்பதினால் ஜனங்கள் மரித்துக்கொண்டிருக்கிறார்கள். இயேசு சகல பாவங்களையும் நீக்கிவிட்டால் இனி ஜனங்கள் மரிக்கமாட்டார்கள். இது எவ்வளவு மேன்மையான காலமாக இருக்கும்?

ஆம், தேவன் தம்முடைய ஆட்டுக்குட்டியாகிய இயேசுவை மாபெரும் வேலையைச் செய்வதற்கு அனுப்பப்போவதை அறிந்திருந்தார். ஆகவே, அவருடைய திட்டத்தை அடையாளப்படுத்துவதற்கு வெவ்வேறு காலங்களில் தம்முடைய ஜனங்களை ஆட்டுக்குட்டிகளை பலி செலுத்தும்படி கேட்டுக்கொண்டார். ஈசாக்கின் கதை உங்களுக்கு நினைவிருக்கிறதா? தேவன் ஈசாக்கை தனக்குப் பலியாகச் செலுத்தும்படி ஆபிரகாமிடம் கேட்டார். அதற்குப் பின் ஈசாக்கின் இடத்தில் பலிசெலுத்துவதற்கு தேவன் மற்றொரு ஆட்டை ஆபிரகாமுக்குக் கொடுத்தார். இந்த கதையை நீங்கள் மறந்திருப்பீர்களானால், அதை மீண்டும் வாசித்து நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்.

அனைவரையும் ஆசீர்வதிப்பதற்கு தேவன் திட்டமிட்டிருந்ததை ஆபிரகாமுக்குச் சொன்னார். ஆனால், அதற்கு முன் ஜனங்களின் பாவங்களை அவர் நீக்க வேண்டியதாய் இருந்தது. அதற்காக தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசு மரிக்க வேண்டியது அவசியமானது. இயேசுவைப்பற்றிய கதைகளை நாம் படிக்கும்போது, இன்னமும் அநேக காரியங்களைக் கூறலாம். இப்பொழுது இந்த காரியத்தை மட்டுமே நீங்கள் மனதில் வைத்துக்கொண்டால் போதும்.

இதற்காகவே, எகிப்தைவிட்டு புறப்படுவதற்குமுன் எபிரெயர்கள் ஆட்டுக்குட்டியை பலிசெலுத்தி புசிக்க வேண்டும் என்று தேவன் கேட்டுக்கொண்டார். தேவன் இரத்தம் தெளிக்கப்பட்ட வீடுகளிலுள்ள தலைச்சன் பிள்ளைகளை சங்கரிக்காமல் அவர்களைக் கடந்துச் சென்றார் என்பதற்காக அந்த ஆட்டுக்குட்டியை நாம் பஸ்காவின் ஆடு என்று அழைக்கிறோம்.

இரத்தம் தெளிக்கப்பட்ட இடங்களில் மரணம் இல்லை என்பதை எப்பொழுதும் நாம் நினைவில்கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். ஆகவே, தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுவின்மேல் நம்பிக்கை வைப்பவர்கள் மீண்டும் உயிரோடு எழுப்பப்பட்டு மரணத்திலிருந்து மீட்கப்படுவார்கள். இதுவரைக்கும் கேட்ட காரியங்களில் இது சிறப்பான காரியம் அல்லவா?

**கேள்விகள்:-**

1. எகிப்தில் தங்கியிருந்த கடைசி இராத்திரியில் இஸ்ரயேலர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள்? அவர்களின் முதற்பேரானவர்கள் அழிக்கப்பட்டார்களா?

2. இஸ்ரயேலர்கள் தங்களுடைய தலைச்சன் பிள்ளைகளை மரணத்திலிருந்து மீட்பதற்கு என்ன செய்ய வேண்டியதாயிருந்தது?

3. பஸ்கா ஆடு என்றால் என்ன? அது ஏன் இயேசுவையே நமக்கு நினைவுபடுத்துகிறது?



## 16. சிவந்த சமுத்திரத்தை கடந்து செல்லுதல்

**நீங்கள்** போகும் இடத்திற்கு இரண்டு வழிகள் உள்ளது - ஒன்று கடினமான பாதை, மற்றொன்று எளிதான பாதை. நீங்கள் எதை தேர்வு செய்வீர்கள்? அனைவரும் எளிதான பாதையை தேர்வு செய்வார்கள் என்று நம்புகிறோம். ஆயினும், எளிமையான வழிகள் எப்போதும் நன்மையாக இருப்பதில்லை என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். சில நேரங்களில் கடுமையான காரியங்களைச் செய்வதற்கும் பிரச்சனைக்குரிய இடங்களுக்குச் செல்வதற்கும் தேவன் விரும்புகிறார். ஆனாலும், நமக்குச் சிறந்த காரியங்கள் என்னவென்பதை அவர் முன்னதாகவே அறிந்திருக்கிறார். ஆகவே, அவர் விரும்பிய காரியங்களை மட்டுமே நாம் எப்பொழுதும் செய்ய வேண்டும்!

அதுபோலவே, தேவன் இஸ்ரயேலர்களை எகிப்தைவிட்டு புறப்படச் செய்தார். தேவனுடைய மகத்துவமுள்ள வல்லமை அடிமைகளாயிருந்த அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படச் செய்தது. தொடர்ந்து அநேக அற்புதமான காரியங்களைச் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்பினார். தேவன் அவர்களின் பிதாவாகிய ஆபிரகாமுக்கு வாக்களித்த கானான் தேசத்திற்குள் வழிநடத்துவதாக வாக்களித்தார். எகிப்தைவிட்டு கானானுக்குள் செல்வதற்கு இரண்டு வழிகள் இருந்தது. ஒன்று எளிமையான வழி, மற்றொன்று கடுமையான வழி. ஆனாலும் தேவன் அந்த கடுமையான வழியில் நடத்துவதை விரும்பினார். இதற்கான ஏற்ற காரணமும் இருந்தது.

தேவன் ஏன் இப்படியாக தம்முடைய ஜனங்களை வழிநடத்தினார் என்பதை எண்ணி நீங்கள் ஆச்சரியப்படலாம். மோசே அவர்களின் தலைவராக இருந்தார். ஆயினும், அவர்கள் எகிப்தைவிட்டு புறப்படும்பொழுது, தேவன் ஒரு மிகப் பெரிய மேகத்தை அவர்களுக்கு முன் மிதக்க விட்டார். அந்த மேகத்தை அவர்கள் பின்பற்ற வேண்டியதாய் இருந்தது. அந்த மேகம் சென்ற இடமெல்லாம் அவர்களும் சென்றார்கள். இரவு நேரங்களில் அந்த மேகம் அக்கினியைப்போல ஜுவாலித்தது. இப்படியாக இரவு நேரங்களிலும் அவர்கள் பயணித்தார்கள்.

எகிப்தை விட்டுப் புறப்பட்ட இஸ்ரயேல் ஜனங்கள் மிகப் பெரிய கடலுக்குமுன் வந்துநின்றார்கள். படகுகளோ, கப்பல்களோ இராததினால் அதை அவர்களால் கடக்க முடியவில்லை. அதற்கு சிவந்த சமுத்திரம் என்று பெயர். நீங்கள் உங்கள் பாட புத்தகத்திலுள்ள உலக வரைபடத்தில் இந்த சிவந்த சமுத்திரத்தைக் காணலாம். இந்த கடலின் முனையே எகிப்து தேசத்தின் முடிவாயிருந்தது.

இஸ்ரயேலர்கள் இந்த சிவந்த சமுத்திரத்தை எவ்வாறு கடந்திருப்பார்கள்?

அக்காலத்தில் கடந்துச் செல்வதற்கு விமானங்களும் இல்லையே! சிவந்த சமுத்திரம் அவர்களின் பாதையைக் குறுக்கிட்டதினால் அவர்களின் பயணம் கடினமாயிற்று. தேவனால் அனுப்பப்பட்ட மேகம் வேறு வழியில் நடத்தியிருந்தால் இந்த சமுத்திரத்தைக் கடக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது. ஆனால், சிறந்தவைகள் என்னவென்பதை தேவன் அறிந்திருந்தார்.

இஸ்ரயேலர்களுக்கு மற்றொரு பக்கத்திலிருந்தும் உபத்திரவம் வந்தது. எகிப்தைவிட்டு அனைத்து இஸ்ரயேலர்களும் சென்றதைக் கண்ட கொடூரமான எகிப்தின் அரசனாகிய பார்வோன் மிக வருத்தமடைந்தான். இஸ்ரயேலர்கள் சென்ற திசையை அவன் கண்டுபிடித்த பின் அவர்கள் நிச்சயமாய் சிவந்த சமுத்திரத்திற்கு முன் நின்றிருப்பார்கள் என்பதையறிந்து, அவன் என்ன செய்தான் தெரியுமா? அவன் தன் சேனைகள் அனைத்தையும் கூட்டிக்கொண்டு, மீண்டும் இஸ்ரயேலர்களை எகிப்துக்கு அடிமைகளாகக் கொண்டுவரும்படி புறப்பட்டான்.

பார்வோனிடம் அறுநூறு இரதங்கள் இருந்ததாக வேதாகமம் கூறுகிறது. இது குதிரைகளால் இழுக்கப்பட்ட இரண்டு சக்கர சிறிய வண்டிகளாகும். அவனுடைய போர்வீரர்கள் அதை ஓட்டினர். அக்காலத்தில் அநேக குதிரைகளையும், இரதங்களையும்கொண்டிருப்பவர்கள் வெற்றிகரமாய் யுத்தங்களை நடத்தினார்கள். அதுபோல, பார்வோனுக்கும் அநேக இரதங்கள் இருந்தன. இஸ்ரயேலர்களுக்கோ எந்தவிதமான இரதங்களும் சேனைகளும் இல்லாததினால் அவர்களை எளிதில் சிறைப்பிடித்து எகிப்துக்கு மீண்டும்கொண்டு வந்துவிடலாம் என்று பார்வோன் நிச்சயமாக நம்பினான்.

சிவந்த சமுத்திரத்திற்கு முன் நின்ற இஸ்ரயேலர்கள், வனாந்தரத்தில் எவ்வாறாக பயணிக்க முடியும் என்று சிந்தித்துக் கொண்டிருக்கையில், அவர்களை மீண்டும் சிறைப்பிடிப்பதற்கு பார்வோன் சேனைகளோடு வருவதைக் கண்டு பயந்தார்கள். ஆனாலும், அவர்கள் பயந்திருக்கக்கூடாது. ஏனெனில், எவ்வளவு வல்லமையுள்ள தேவன் அவர்களை நடத்தி வருகிறார் என்பதை நிச்சயமாக மனதில்கொண்டிருக்க வேண்டும்.

அனைவரும் திகைத்து பயந்து மோசேயிடம் முறையிட்டார்கள். நாங்கள் எகிப்தில் இருந்திருந்தால் நலமாய் இருக்கும் என்று கூறினார்கள். மோசே எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்திருக்க வேண்டும்! அவர்கள் மோசேயிடம் முறையிட்ட காரியம் தேவனிடத்தில் முறையிட்டது போலிருந்தது. ஏனெனில், தேவன் தாமே மோசேயிடம் வழிநடத்தும்படி கட்டளை கொடுத்திருந்தார்.

மோசே என்ன செய்தார் என்று நினைக்கிறீர்கள்? அவர் இரண்டு நிச்சயமான காரியங்களைச் செய்தார். தேவன் இந்த யுத்தத்தை நடத்துவார் என்று இஸ்ரயேலிடம் உறுதியாக கூறினார். அடுத்தபடியாக, உதவிக்காக மோசே தேவனிடம் ஜெபித்தார்.

இது மிக முக்கியமான காரியம்.

ஜனங்களை மேற்கொண்டு செல்லும்படி தேவன் மோசேக்குச் சொன்னார். இது விநோதமாக இருக்கிறதல்லவா? அவர்கள் கடலுக்குள் எவ்வாறு பிரவேசிக்கமுடியும்? அந்த மாலை நேரத்தில் ஒரு அதிசயமான சம்பவம் நிகழ்ந்தது. இஸ்ரயேல் ஜனங்களை வழிநடத்திய மேகத்தைக்குறித்து நாம் பார்த்தோமல்லவா? அந்த மேகம் இஸ்ரயேலருக்கும், எகிப்தின் சேனைகளுக்கும் நடுவாக நின்றது. இல்லாவிட்டால் எகிப்தியர்கள் இஸ்ரயேலர்களை பிடித்திருப்பார்கள். தேவன் இவ்வாறாக தம்முடைய ஜனங்களை எகிப்தியரிடமிருந்து பாதுகாத்தார்.

அந்த இரவில் அங்கு நின்ற மேகஸ்தம்பம் எகிப்துக்கு இருளாகவும், இஸ்ரயேலருக்கு வெளிச்சமாகவும் காணப்பட்டது. இப்படிப்பட்ட இருளை எகிப்தியர்கள் என்றுமே அனுபவித்ததில்லை.

இதற்கிடையில் இஸ்ரயேலர்களுடைய பயணத்திற்கு தேவன் மற்றொரு காரியத்தைச் செய்துகொண்டிருந்தார். மோசே தன்னுடைய கோலை சமுத்திரத்திற்கு முன் நீட்டச் சொன்னார். துவக்கத்திலிருந்தே மோசே இந்த கோலை வைத்திருந்தார். தேவன் அதின் வழியாக அருமையான காரியங்களைச் செய்தார். ஆனால், அந்த கோல் தனித்து எதுவும் செய்யக்கூடாதிருந்தது. தேவன் எல்லாவிதத்திலும் மோசேக்கு உதவி செய்தேன் என்று வாக்களிப்பதை மோசே எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்பினார். ஆகவே, கோலை சமுத்திரத்திற்கு மேல் நீட்டச் சொன்னபோது, ஏதோ ஒரு முக்கியமான அற்புதத்தை தேவன் நடத்துவார் என்பதை மோசே அறிந்திருந்தார்.

தேவன் என்ன செய்தார் தெரியுமா?

தேவன் ஒரு பலமான காற்றை அந்த கடலின் மீது வீசச்செய்தார். இஸ்ரயேலர்களும் அனைவரும் வெட்டாந்தரையில் நடக்குமளவுக்கு அந்த தண்ணீரைக் காற்றினால் தேவன் சமுத்திரத்தைப் பிரித்தார். இது இயற்கைக்கு மாறான காரியமல்லவா? தேவன் காரியங்களை எவ்வாறு செய்யவேண்டும் என்று அறிந்திருக்கிறார். ஒரு ஏந்தலான தட்டில் தண்ணீர் ஊற்றி ஒரு ஓரத்திலிருந்து வேகமாக காற்றை ஊதினால் அவ்விடத்திலிருக்கும் தண்ணீர் அதை சுற்றியுள்ள இடங்களுக்குச் சென்று, வேகமாக ஊதப்பட்ட இடமோ வெற்றிடமாகக் காணப்படும். இப்படியாகவே தேவனும் பலத்த காற்றை சிவந்த சமுத்திரத்தின்மேல் வீசச்செய்து, இஸ்ரயேலர்கள் நடப்பதற்கு இக்கரையிலிருந்து அக்கரைவரைக்கும் நடைப்பாதையை உண்டுபண்ணினார். அதில் பயணித்த இஸ்ரயேலர்களின் பாதங்கள் நனையவில்லை என்பது ஒரு ஆச்சரியமான காரியமாக இருந்தது.

நடந்ததை எகிப்தியர்கள் கண்டறிந்தார்கள். எபிரெயர்கள் அந்த சமுத்திரத்தைக் கடந்ததுபோலவே, தாங்களும் கடப்பதற்கு எகிப்தியர் முடிவுசெய்து அவர்களைப் பின் தொடர்ந்தார்கள். எபிரெயர்கள் பாதுகாப்பாக சமுத்திரத்தைக் கடந்ததுபோல, தாங்களும் கடந்துவிடலாம் என்று தவறாக எண்ணினார்கள். எகிப்தியர் சமுத்திரத்திற்குள் பிரவேசித்தப்போது, தேவன் பலமான காற்றை அனுப்பி மீண்டும் தண்ணீர் அந்த வெட்டாந்தரையை மூடும்படி செய்தார்.

காரியங்கள் அதோடுகூட முடியவில்லை. எகிப்தியர்கள் அந்த சமுத்திரத்தைக் கடந்து கொண்டிருக்கும்போது, ஜலம் அவர்களை முழுமையாக மூடியது. எகிப்தியரின் இரதங்களும், குதிரைகளும், முழு சேனையும் சமுத்திரத்தில் மூழ்கியது. இப்படியாக தேவன் தம்முடைய ஜனங்களை மிக அற்புதமான வழியில் இஸ்ரயேலர்களைக் கொடுமைப்படுத்திய எகிப்தியரிடமிருந்து இரட்சித்தார்.

தேவன் எகிப்தியரிடமிருந்து மீட்டு சிவந்த சமுத்திரத்தின் வழியாக அவர்களை நடத்தினார் என்பதை இஸ்ரயேலர்கள் உணர்ந்தபோது மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்கள். அப்பொழுது அவர்கள் தேவனையும், மோசேயையும் விசுவாசித்தார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. அதற்குப் பின் மோசேயும், இஸ்ரயேல் ஜனங்கள் அனைவரும் தேவனைப் பாடித் துதித்தார்கள்.

"தேவனே எங்கள் பலம், அவரே எங்கள் இரட்சிப்பு, அவரே எங்கள் தேவன்" என்று பாடினார்கள்.

சிவந்த சமுத்திரத்தை பாதுகாப்பாக கடந்த மோசே மற்றும் இஸ்ரயேல் ஜனங்கள் பாடின அந்த அற்புதமான பாடலை நாம் கற்றுக்கொள்வது நலமாக இருக்கும் அல்லவா?

### கேள்விகள்:-

1. இஸ்ரயேலர்கள் எகிப்திலிருந்து வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்கு பயணிப்பதற்கு எத்தனை வழிகள் இருந்தது? தேவன் இவர்களை செங்கடல் வழியாக நடத்தியதின் காரணம் என்ன?

2. இஸ்ரயேலர்களை வழிநடத்தும்படி அவர்களுக்கு முன் சென்றது என்ன? மேலும், அது எகிப்திய சேனைகளிடமிருந்து இஸ்ரயேலர்களை எவ்வாறு பாதுகாத்தது?

3. படகுகளின்றி சிவந்த சமுத்திரத்தை இஸ்ரயேலர்கள் கடப்பதற்கு தேவன் என்ன செய்தார்? இஸ்ரயேலர்கள் அந்த சமுத்திரத்தை கடந்தது போலவே எகிப்தியர்களால் அதை கடக்க முடியாமல்போன காரணம் என்ன?

# 17. தேவன் தம்முடைய ஜனங்களுக்கு பிரமாணங்களைக் கொடுத்தார்

இப்பொழுது எபிரெயர்கள் எகிப்து தேசத்தைவிட்டு வெளியே வந்தார்கள். அவர்கள் மற்ற ஜனத்திலிருந்து பிரிக்கப்பட்டார்கள். இனி தவறு எது, சரி எது என்று அறிந்துகொள்வது அவசியமாக இருந்தது. ஆகவே, தேவன் அவர்களுக்கு தம்முடைய பிரமாணத்தைக் கொடுத்தார். அவருக்கு பிரியமான ஊழியக்காரர்களாக எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று கற்பித்தார். இரண்டு மாதங்கள் அவர்கள் எகிப்தைவிட்டு புறப்பட்ட பின்னும், சில கடுமையான அனுபவங்களைப் பெறுவதற்கு முன்னும், தேவன் எபிரெயர்களுக்கு அவருடைய பிரமாணத்தைக் கொடுத்தார்.

அவர்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடந்தபின், வேதாகமம் "வனாந்தரம்" என்று அழைக்கப்பட்ட இடத்திற்கு வந்தார்கள். அது ஒரு பாலைவனம்போலிருந்தது. ஏதோ சில இடங்களில் மட்டுமே தண்ணீர் கிடைத்தது. மற்றபடி அவர்கள் புசிப்பதற்கு ஒன்றுமில்லை. ஆம், எபிரெயர்கள் முழுமையாக தேவனை விசுவாசிக்க வேண்டியதாயிருந்தது. ஒரு இடத்தில் அவர்கள் தண்ணீரைக் கண்டார்கள். ஆனால், அது கசப்பாக இருந்தது. இதைக்குறித்து அவர்கள் மோசேயிடம் எவ்வாறு முறையிட்டிருக்க வேண்டும்!

எல்லா நேரத்திலும் எல்லா காரியங்களும் எபிரெயர்களுக்கு சுலபமாகத் தோன்றவில்லை. அப்படிப்பட்ட எல்லா சூழ்நிலைகளிலும் மோசேயை பழி கூறினார்கள். எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்த அவர்களை தேவன் வழிநடத்தி பராமரித்து வருகிறார் என்பதை முழுமையாக மறந்துவிட்டார்கள். ஆயினும், கசப்பான தண்ணீரை மதுரமான தண்ணீராக மாற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று தேவன் மோசேக்குக் கற்பித்தார். அதனால், இஸ்ரயேலர்கள் சற்று நேரத்திற்கு மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

எகிப்திலிருந்து அவர்கள் கொண்டுவந்த உணவு பொருட்கள் தீர்ந்தது. அதற்காகவும் அவர்கள் மோசேயை பழிசாற்றினார்கள். ஆனால், மோசே எல்லாவற்றிலும் சாந்தகுணமுள்ளவராக இருந்து இந்த ஜனங்களுக்காக என்ன செய்ய வேண்டும் என்று எப்பொழுதும் தேவனிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டிருந்தார். ஏனெனில், தேவன் எப்பொழுதும் நன்மையான காரியங்களைச் செய்வார் என்பதை மோசே அறிந்திருந்தார்.

உணவைக்குறித்து தேவன் என்ன செய்தார் என்று எண்ணுகிறீர்கள்? அவர் வானத்திலிருந்து உணவை பொழியச்செய்தார்! இது எவ்வளவு அற்புதமான காரியம்?

இஸ்ரயேலர்கள் அதை மன்னா என்று அழைத்தார்கள். வெண்மையான நிறத்தில் பனித்துளிகளைப்போல, புசிப்பதற்கு மதுரமாக இருந்தது. ஒவ்வொரு நாளிலும் எபிரெயர்கள் அவர்கள் தேவைக்கேற்ப மன்னாவை சேகரிக்க



வேண்டியதாயிருந்தது. ஓய்வுநாளுக்காக வாரத்தின் கடைசி நாளில் மட்டும் இரண்டு நாளுக்குரிய மன்னாவை சேகரித்தார்கள்.

ஆம், எபிரெயர்கள் பல அற்புதமான அனுபவங்களைப் பெற்றார்கள். தேவன் அவர்களை நேசித்து அவர்களை வழி நடத்துகிறார் என்பதில் சந்தேகப்படுவதற்கு எந்தக் காரணமும் இல்லாதிருந்தது. ஆனாலும், அவர்கள் பலமுறை சந்தேகப்பட்டு எகிப்தைவிட்டு தங்களை அழைத்துவந்த மோசேக்கு விரோதமாய் பழிசொல்லி முறுமுறுத்தார்கள். நமக்கும் இது ஒரு சிறந்த பாடமாயிருக்கிறது. தேவனை எப்பொழுதும், ஒருபோதும் சந்தேகிக்கக்கூடாது.

இஸ்ரயேலர்கள் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்பதை தெரிந்துகொள்வது மிக அவசியமாய் இருந்தது. இந்த உலகத்தில் ஒருவர் தனித்திருந்தால் பெரிய வித்தியாசங்கள் எதுவும் நடக்காது. தவறு செய்தால் அவர் மட்டுமே உபத்திரவப்பட வேண்டும். ஆனாலும், சரியான காரியங்களைச் செய்வதே நல்லது. எப்பொழுதும் தேவனை நேசித்து, அவருக்குப் பிரியமான காரியங்களைச் செய்வது நலமாயிருக்கும். தவறான காரியங்களைச் செய்வது எப்பொழுதும் நியாயமாகாது.

ஆயிரக்கணக்கான இஸ்ரயேலர்கள் வனாந்தரத்தில் இருந்தார்கள். அவர்கள் சரியான காரியங்களைச் செய்யவில்லையென்றால் அவர்கள் எப்பொழுதும் உபத்திரவப்படுவார்கள் என்பதற்காக, தேவன் நீதியான காரியம் என்னவென்பதையும், ஒருவரோடொருவர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் அறிந்துகொள்வதற்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். சீனாய் மலையில் அல்லது ஓரேப் என்று அழைக்கப்பட்ட மலையில் தேவன் தம்முடைய ஜனங்களுக்கு அவருடைய நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். மோசே மலையின்மேல் ஏறி தேவனிடத்திலிருந்து அந்த அற்புதமான நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக்கொண்டு வந்தார். அவைகளைக்குறித்து அவர் ஜனங்களிடம் சொல்லியபோது, நாங்கள் அனைவரும் இந்த வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவோம் என்று வாக்களித்தார்கள்.

மற்ற எந்த தெய்வங்களையும் சேவிக்கக்கூடாது என்பது அந்த பிரமாணத்தின் முக்கிய காரியமாக இருந்தது. மற்ற தெய்வங்களைச் சேவிக்கக்கூடிய ஜனங்களை அவர்கள் சந்திக்க இருப்பதினால் இதை ஒரு முக்கிய கற்பனையாக தேவன் கொடுத்தார். நிச்சயமாக ஒன்றான மெய்தேவன் மட்டுமே முக்கியமானவர். மற்ற புறஜாதிகள் அனைவரும் தாங்கள் விரும்புவதை தேவர்களாக சேவித்து வந்தனர். சிலர் சூரியனை தெய்வமாகவும், சிலர் சந்திரனை தெய்வமாகவும், சிலர் மீன்களை தெய்வமாகவும், வழிபட்டு வந்தனர். சிலர் மரத்தால் மற்றும் கல்லால் செய்யப்பட்ட உருவங்களை தேவர்களாக ஆராதித்து வருகிறார்கள். உண்மையில் இவைகள் தெய்வங்கள் அல்லவே!

உண்மையான ஒரேதேவனே, சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் சிருஷ்டித்தவர். ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் அற்புதமான வாக்குத்தத்தம் கொடுத்த தேவனும் இவரே. இஸ்ரயேலர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தவரும் இந்த தேவனே. இப்படிப்பட்ட தங்களுடைய தேவனை நேசித்து, அவர் விரும்பும் சகலத்தையும் செய்வதே எபிரெயர்களின் சிறந்த காரியமாக இருந்தது.

அவர் நமக்கும் தேவனாய் இருக்கிறார். நமக்கு நன்மை உண்டாகும்படி அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று விரும்புகிறார். தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் எப்பொழுதும் நன்மையாக இருக்கும் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். மேலும், தேவனுக்குப் பிரியமான காரியம் செய்யும்பட்சத்தில் அவரும் மகிழ்ச்சியடைகிறார்.

மற்றவர்களுக்கு நன்மை உண்டாகும்படிக்குக் காரியங்களைச் செய்வது இஸ்ரயேலர்களுக்கு மிக அவசியமாய் இருந்தது. அன்பான பிள்ளைகளே, சில நேரங்களில் நமக்கு பிரியமானதைச் செய்யும்பொழுது அதினால் மற்ற சிலர் காயப்படலாம். அது மிகத் தவறான காரியமல்லவா? சில நேரங்களில் நமக்கு சுயாதீனம் கொடுக்கப்படவில்லை என்று நினைக்கலாம். நம்முடைய பெற்றோர்கள் நம்மிடத்தில் மிகக் கண்டிப்போடு இருப்பதாகத் தோன்றலாம். ஆனால், காலப்போக்கில் உண்மையில் மகிழ்ச்சியாய் இருப்பதற்கு இதுவே வழி என்பதை நாம் கற்றுக்கொள்ளுவோம். ஆகவே, நம்முடைய பெற்றோருக்கும், தேவனுக்கும் கீழ்ப்படிய வேண்டும்.

வனாந்தரத்தில் கடுமையான சூழ்நிலைகளை இஸ்ரயேலர்கள் அனுபவித்தார்கள். ஆயினும், அவர்கள் விரும்பியபடி முழுமையாக நடந்திருந்தால் காரியங்கள் இன்னும் மோசமாகியிருக்கும். ஆகவே, என்ன செய்ய வேண்டும் என்பதையும், என்ன செய்யக்கூடாது என்பதையும் தேவன் தம்முடைய நியாயப்பிரமாணத்தின் மூலம் கற்பித்தார். அவர்கள் அந்த

பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்தபோது, அவர்கள் சந்தோஷமாக இருந்தார்கள். அவர்கள் ஒருவரையொருவர் நேசித்து, மற்றவர்கள்மேல் பொறாமைகொள்ளாமல் இருக்க வேண்டும் என்று கட்டளை பெற்றிருந்தார்கள்.

மற்றவர்களுடைய உடமைகளைத் திருடக்கூடாது என்று அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. இதை நாமும் நினைவில்கொள்ள வேண்டும். மற்றவர்களுடைய உடமைகளை நாம் அதிகம் விரும்புவதால் அவைகளை எடுத்துக்கொள்ளக் கூடாது. பாருங்கள், தேவன் அனைவருடைய நன்மைக்காகவும் பிரமாணங்களைக் கொடுத்திருக்கிறார். நாம் தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து, மற்றவர்களை சந்தோஷமாக வைத்திருந்தால் நாமும் சந்தோஷமாக இருக்கலாம். ஆனால், மற்றவர்களை மகிழ்ச்சியாக வைப்பதில்மாத்திரம் நாம் மகிழ்ச்சியடைய முடியாது.

ஆம், அவர் இஸ்ரயேலர்களுக்கு நியாயப்பிரமாணம் கொடுத்தபோது, அவர்களின் பிள்ளைகளும் என்ன செய்ய வேண்டும் என்று கற்பித்தார். அது என்னவாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? அவர்கள் தங்களுடைய பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்களை கனப்படுத்த வேண்டியதாயிருந்தது. இந்நாளிலும் அக்காரியத்தை செய்வது நலமாயிருக்கும். பெற்றோருக்குக் கீழ்ப்படியாத பிள்ளைகளை யார் விரும்புவார்கள்? பெற்றோர்கள் தேவனுக்கு பிரியமாய் நடக்க முயற்சிக்கையில் அவர்களுடைய பிள்ளைகள் அவர்களுக்கு கீழ்ப்படியும்பட்சத்தில், பிள்ளைகளும் தேவனுக்கு கீழ்ப்படியக்கூடியவர்களாக இருப்பார்கள். தேவன் இதில் அதிகமாகப் பிரியப்படுகிறார்.

நீண்ட காலத்திற்கு முன் தேவன் இஸ்ரயேலர்களுக்கு இந்த பிரமாணங்களை கொடுத்தபோது, எந்தவிதமான அரசாங்கங்களும் இருக்கவில்லை. நமக்காகச் சட்டங்களை வரையறுக்கக்கூடியவர்கள் ஞானிகள் என்று நாம் எண்ணலாம். ஆனால், இன்று நாம் பெற்றுள்ள சட்டங்கள், அன்று தேவன் மோசேக்குக்குக் கொடுத்ததும், மோசே இஸ்ரயேலர்களுக்குக் கொடுத்த பிரமாணங்களைக்காட்டிலும் சிறந்ததா? உண்மையில் நம்முடைய சிறந்த சட்டங்கள் வேதத்திலிருந்து நேரடியாக எடுக்கப்பட்டது. இது எவ்வளவு அற்புதமான காரியம்? உண்மையில் தேவன் ஞானமுள்ளவர். இந்த உலகத்தில் வாழ்ந்த எந்த மனுஷனைக்காட்டிலும் அவர் ஞானமுள்ளவர். ஜனங்கள் தங்களை எப்படிப்பட்ட ஞானிகள் என்றெண்ணிக்கொண்டாலும் சரி, தேவன் மோசேயின் வழியாக இஸ்ரயேலுக்குக் கொடுத்த சட்டங்களைப்போல, ஒருவராலும் உருவாக்க முடியாது.

**கேள்விகள்:-**


1. சரி எது என்பதையும், தவறு எது என்பதையும் எபிரெயர்கள் எதின் மூலம் அறிந்துகொண்டார்கள்?

2. எபிரெய ஜனங்களுக்கு மோசேயால் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம் யாரால் வகையறுக்கப்பட்டது? குழந்தைகளைப்பற்றி இந்த பிரமாணம் என்ன கூறுகிறது?

# 18. தேவனுக்காக ஒரு வீட்டைக் கட்டுதல்

**இஸ்ரவேலர்கள்** கீழ்ப்படிய வேண்டுமென்று தேவன் மோசேயின் வழியாகக் கொடுத்த நியாயப்பிரமாணங்களை இரு கற்பலகைகளில் எழுதிக் கொடுத்தார். அக்காலத்தில் அச்சடிக்கும் இயந்திரங்களும், தட்டெழுத்து இயந்திரங்களும் இருக்கவில்லை. அப்பொழுது காகிதமும் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆகவே, நினைவில் வைக்க வேண்டிய முக்கியமான காரியங்கள் கற்பலகைகள் அல்லது காய்ந்த களிமண் பலகைகளின்மேல் அவைகள் எழுதப்பட்டது.

எழுதுவதற்கு அக்காலத்தில் மையும் இல்லை. ஆகவே, அவர்கள் சிறிய உளிபோன்ற கற்களினால் எழுத்துக்களை அந்த கற்பலகைகளின்மேல் பொறித்தார்கள். இப்படியாகவே, தேவன் அவருடைய பத்து பிரமாணங்களைக் கற்பலகையின்மேல் எழுதிக்கொடுத்தார். இந்த கற்பலகைகளை தேவன் சீனாய் மலையின்மேல் மோசேயிடம் கொடுத்தார்.



இந்த பத்து பிரமாணங்களைக்கொண்ட கற்பலகைகளை மோசே கொண்டுவந்து ஜனங்களிடம் வாசித்துக் காட்டினான். அப்பொழுது அவைகளுக்கு முழுமையாகக் கீழ்ப்படிவோம் என்று ஜனங்கள் வாக்களித்தார்கள். மீண்டும் மோசே மலையின்மேல் ஏறினபோது, ஒரு ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டவேண்டும் என்று தேவன் மோசேயிடம் கூறினார். "ஆசரிப்புக்கூடாரம்" என்ற வார்த்தையை நீங்கள் முன்னதாக கேள்விப்பட்டிருக்கிறீர்களா? தேவனை ஜனங்கள் தொழுதுகொள்வதற்காக கட்டப்பட்ட கூடாரத்திற்கு வேதாகமம் ஆசரிப்புக்கூடாரம் என்று கூறுகிறது. இது தேவனுடைய வீடாகும்.

நாம் வீடுகளில் தங்குவதுபோல, தேவன் தங்குவதற்கு ஒரு வீடு அவசியமில்லை. அவர் உறங்காததினால் அவருக்கு ஒரு படுக்கை அறை தேவையில்லை. நாம் புசிப்பதுபோல் அவர் புசிக்காததினால் அவருக்கு ஒரு சமயலறை தேவையில்லை. தேவன் நம்மைப்போல் சோர்வடையாததினால் அவர் ஓய்வு எடுப்பதற்கு அறைகள் தேவையில்லை. ஆகவே, தேவனுக்காக ஒரு வீட்டை கட்ட வேண்டும் என்று வேதாகமம் கூறும்போது, அது நாம் வசிக்கும் வீடுகளைப் போல் அல்ல என்று நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

தேவன் தமக்காக மோசேயிடம் கட்டச்சொன்ன வீடு அல்லது ஆசரிப்புக்கூடாரம் செங்கற்களினாலோ, கற்களினாலோ கட்டப்படவில்லை. இதற்கு எந்தவிதமான அடுக்குகளும் இல்லாதிருந்தது. இதின் பக்கங்கள் மரத்தினால் செய்யப்பட்ட பலகைகளைக்கொண்டிருந்தது. ஆனால், அவைகளைப் பார்க்கும்பொழுது, அது பொன்னினால் மூடப்பட்டிருந்தது. பசும் பொன்னை மெல்லிய தகடுகளாக அடித்து, அந்த பலகைகளை மூடியிருந்தார்கள். ஆகவே, அந்த கூடாரத்தைப் பார்க்கும்பொழுது அதின் சுவர்கள் பொன்னினால் ஆனதுபோல் தோற்றம் அளித்தது.

நம்முடைய வீடுகளில் காணப்படும் கூரைகளைப்போல் அதற்கு கூரைகள் இல்லை. ஆனாலும், மழையிலிருந்து அந்த கூடாரத்தைப் பாதுகாப்பதற்கு என்ன செய்திருப்பார்கள் என்று நீங்கள் ஆச்சரியப்படலாம்! மிகப்பெரிய திரைச்சீலைகளை அந்த கூடாரத்தின்மேல் விரித்தார்கள். ஒன்றல்ல, நான்கு திரைச்சீலைகள் அந்த கூடாரத்தின்மேல் விரிக்கப்பட்டது. அதில் போடப்பட்ட முதல் திரைச்சீலை நூலினால் செய்யப்பட்ட இயல்பான திரைச்சீலையாய் இருந்தது. ஆனால், அதற்கு மேலே விரிக்கப்பட்ட மூன்று திரைச்சீலைகள் வெவ்வேறு மிருகங்களின் தோல்களினால் தைத்து செய்யப்பட்டதாயிருந்தது. ஆடுகள் மற்றும் தகசுகள், மற்றொன்று ஆட்டு மயிரினால் செய்யப்பட்டது. இந்த மூடு திரைகள் ஆசரிப்புக்கூடாரத்தின் மேல்பகுதியில்மட்டுமல்ல, அவைகள் இரு பக்கங்களிலுள்ள அந்த சுவர்களையும் மூடும்படியாகவும் தொங்கியது. அந்த கூடாரம் கட்டி முடிக்கப்பட்டபின் அதின் சுவர்களில் காணப்படும் பொன், கூடாரத்துக்கு உட்புறத்தில் மட்டுமே காணப்பட்டது. ஏனெனில், கூடாரத்தின் மூடு திரைகள் கூடாரத்தை முழுமையாக மூடியது.

மேலும், தேவனுடைய ஆசரிப்புக்கூடாரத்திற்கு கதவுகள் இல்லை. இதற்கு ஒரே வாசல் இருந்தது. அந்த வாசல் இளநீலம், சிவப்பு, இரத்தாம்பரம் மற்றும் வெண்மையான பஞ்சு நூல் போன்ற நிறங்களில் நெய்யப்பட்ட விசித்திரமான தொங்கு திரைச்சீலை அதை மூடியிருந்தது. அந்த தொங்கு திரைச்சீலையை பொதுவாக திரை என்று அழைத்தார்கள். ஆசரிப்புக்கூடாரத்திற்குள் நுழைய வேண்டும் என்று விரும்பும் ஒருவர் அந்த தொங்கும் திரைச்சீலைக்கு அடியில் தவழ்ந்து போக வேண்டியதாயிருந்தது.

இந்த ஆசரிப்புக்கூடாரம் எவ்வளவு பெரியதாக இருந்தது என்று நீங்கள் எண்ணலாம்! அது, 45 அடி நீளமும், 15 அடி அகலமும், 15 அடி உயரமுமாய் இருந்தது. உட்புறத்தில் அது, இரண்டாம் திரைச்சீலை என்று அழைக்கப்படும் மிகப்பெரிய தொங்கு திரையினால் இரண்டு அறைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கூடாரத்தின் நுழைவு வாசலை மூடியிருந்த தொங்கு திரைச்சீலையை முதலாம் திரை அல்லது முதலாம் வாசல் என்று அழைக்கப்பட்டது. இந்த இரண்டாம் திரைச்சீலையோ ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து 15 அடி தூரத்தில் இருந்தது.

இப்படியாக, ஆசரிப்புக்கூடாரத்தில் இரண்டு அறைகள் காணப்பட்டது. இவைகள் ஒரே அளவைக்கொண்ட அறைகளாய் இருக்கவில்லை. நாம் அளவிட்டு பார்த்தால் முதலாம் அறையின் சரி பாதியாக இரண்டாம் அறை இருந்தது. முதலில் காணப்பட்ட அறைக்கு, பரிசுத்த ஸ்தலம் என்றும், அதைத் தொடர்ந்து காணப்பட்ட அறைக்கு, மகா பரிசுத்த ஸ்தலம் என்றும் அழைக்கப்பட்டது.

இக்காலத்தில் வீடுகளைச் சுற்றி ஜனங்கள் மரங்களையும், பசுமையான புற்களையும், மலர் செடிகளையும், கொடிகளையும் வைப்பது வழக்கம். ஆனால், இந்த ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றி பஞ்சு நூலினால் செய்யப்பட்ட வெண்மையான திரையைக்கொண்டு சுற்றி வேலியடைக்கும்படியாக தேவன் மோசேயிடம் சொன்னார். அதாவது, அந்த ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றி ஒரு திறந்தவெளி இருக்கும்படி கட்டளையிட்டார். ஆசரிப்புக்கூடாரத்திற்கு வெளியே காணப்பட்ட இந்த திறந்தவெளி - பிரகாரம் என்று அழைக்கப்பட்டது.

இந்த பிரகாரம் 150 அடி நீளமாகவும், அதின் அகலம் 75 அடிகளாகவும் இருந்தது. பிரகாரத்தின் வாசலுக்கு நேராக ஆசரிப்புக்கூடார வாசல் வைக்கப்பட்டது. இந்த பிரகாரத்தின் நுழைவாயிலை வாசல் என்று அழைப்பார்கள். இந்த வாசலும் இளநீலம், சிவப்பு, இரத்தாம்பரம் மற்றும் வெண்மையான பஞ்சு நூலினால் செய்யப்பட்ட அழகான சித்திரங்களைக்கொண்ட தொங்கு திரையினால் மூடப்பட்டது.

தேவனுடைய வீட்டில், அதாவது தட்டுமுட்டுச் சாமான்கள் இருந்ததா என்று நீங்கள் யோசிக்கலாம். ஆம், சில பொருட்கள் காணப்பட்டது. ஆனால், அவைகள் நம்முடைய வீட்டில் நாம் பயன்படுத்தும் தட்டுமுட்டுச் சாமான்களைப் போலல்ல. ஏனெனில், தேவன் நாம் வசிப்பதுபோல அந்த வீட்டில் அவர் வசிக்கவில்லை. ஆனாலும், அதற்குள் சில தட்டுமுட்டுச் சாமான்கள் இருந்தது. ஆசரிப்புக்கூடாரத்திற்கு வெளியே உள்ள பிரகாரத்திலும் இரண்டு முக்கியமான பொருட்கள் காணப்பட்டது. பிரகாரத்தின் வாசலுக்கு அருகே "வெண்கல பலிபீடம்" இருந்தது.

காயீன் மற்றும் ஆபேலின் கதையில் பலபீடங்களைப்பற்றி நாம் வாசித்ததை நீங்கள் நினைவில்கொண்டிருக்கலாம். தேவனுக்கு பலி செலுத்தும்படியாக ஆபேல் ஒரு பலிபீடத்தைக்

கட்டினான். பலிபீடத்தின்மேல் பலிகள் செலுத்தப்பட்டது. ஆனால், பிரகாரத்தில் மரத்தினால் செய்யப்பட்ட வெண்கல தகடுகளினால் மூடப்பட்ட ஒரு பெரிய பலபீடம் காணப்பட்டது.

ஒருவர் பிரகாரத்திலுள்ள பலிபீடத்தைக் கடந்து சென்றால், ஒரு மிகப்பெரிய தண்ணீர் தொட்டியைக் காணலாம். அந்த தண்ணீர் தொட்டியில் தண்ணீர் நிரப்பப்பட்டிருந்தது. ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசிப்பவர்கள் தங்களைச் சுத்திகரிப்பதற்காக இந்த தண்ணீரைப் பயன்படுத்தினார்கள்.

பரிசுத்தஸ்தலம் என்று அழைக்கப்பட்ட ஆசரிப்புக்கூடாரத்தின் முதல் அறையில் மூன்று பொருட்கள் காணப்பட்டது. ஒருவர் அதற்குள் பிரவேசிக்கும்பொழுது, வலது பக்கத்தில் ஒரு மேஜையைக் காணலாம். இந்த மேஜையின்மேல் "சமுகத்து அப்பங்கள்" என்று அழைக்கப்படும் இரண்டு வரிசைகளில் அடுக்கப்பட்ட அப்பங்களைக் காணலாம்.

இடது பக்கத்தில் அதாவது, அந்த மேஜைக்கு நேர் எதிரில் ஒரு மிகப்பெரிய அழகான குத்துவிளக்கு நின்றது. எப்பொழுதும் எரிந்துக் கொண்டிருக்கும் ஏழு அகல்கள் அந்த விளக்கில் காணப்பட்டது. இந்த குத்துவிளக்கின் வெளிச்சம் இராவிட்டால், அந்த ஆசரிப்புக்கூடாரம் முழுவதும் இருளாக இருக்கும். ஏனெனில், அந்த கூடாரத்திற்கு ஜன்னல்கள் இல்லை.

இந்த பரிசுத்த ஸ்தலத்தின் இறுதியில் அல்லது வாசலுக்கு நேர் எதிரில் ஒரு சிறிய பொன்னினால் செய்யப்பட்ட பலிபீடம் (தூபபீடம்) காணப்பட்டது. இந்த தூபபீடம் பிரகாரத்தில் காணப்பட்ட பலிபீடத்தைக் காட்டிலும் மிகச் சிறியது. மேலும், பரிசுத்த ஸ்தலத்தில் காணப்பட்ட தூபபீடம், வெண்கலத்தினால் அல்ல, பொன்னினால் மூடப்பட்டிருந்தது. அந்த பரிசுத்த ஸ்தலத்தில் காணப்பட்ட மேஜையும், குத்துவிளக்கும் பொன்னினால் செய்யப்பட்டிருந்தது.

இப்படியாக, ஆசரிப்புக்கூடாரத்தில் காணப்பட்ட அனைத்தும் பொன்னினால் செய்யப்பட்டிருந்தது. அதின் சுவர்கள், மேஜை, குத்துவிளக்கு, தூபபீடம் அனைத்தும் பொன்னினால் செய்யப்பட்டிருந்தது. அந்த அறை பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருந்திருக்க வேண்டும்!


ஆசரிப்புக்கூடாரத்தில் இரண்டாவது அறையாகிய மகா பரிசுத்த ஸ்தலம் இறுதியாக நின்றது. ஒருவர் அதற்குள் பிரவேசிப்பதற்கு இரண்டாம் திரையின் கீழ் தவழ்ந்து செல்லவேண்டியதாய் இருந்தது. அதில், "உடன்படிக்கை பெட்டி" என்று அழைக்கப்படும் ஒரே ஒரு பொருள் காணப்பட்டது. அது ஒரு மிகப்பெரிய டிரங்க் (trunk) பெட்டியைப்போல் காணப்பட்டது. அந்த பெட்டியும் பொன்னினால் செய்யப்பட்டிருந்தது. அதற்கு முழுமையாக பொன்னினால் செய்யப்பட்ட ஒரு மிகப்பெரிய மூடி இருந்தது.

அந்த மூடியின்மேல் அதே பொன் தகட்டினால் இரண்டு அருமையான கேரூபின்கள் தூதர்களைப் போன்ற வடிவங்களில் காணப்பட்டது. இவைகள் கேரூபின்கள் என்று அழைக்கப்பட்டது. இவைகள் ஒருவரையொருவர் பார்த்தபடியாக, அதேநேரத்தில் உடன்படிக்கை பெட்டியின் மூடியை கண்ணோக்கிக் கொண்டிருந்தன. இந்த மூடி கிருபாசனம் என்று அழைக்கப்பட்டது.

மகா பரிசுத்த ஸ்தலத்தில் ஜன்னல்களும் இல்லை, விளக்குகளும் இல்லை. இப்படியிருக்க, மகா பரிசுத்த ஸ்தலத்தில் ஒளி தரக்கூடிய காரியம் என்னவென்று நீங்கள் சிந்திக்கலாம். ஆம், கிருபாசனத்தின் மேல் அந்த இரண்டு கேரூபின்கள் மத்தியில் தேவன் ஒரு அருமையான வெளிச்சத்தைப் பிரகாசித்தார். எவ்வளவு அற்புதமான காரியம்! ஏதோ மின்னலைப்போல் இருந்திருக்க வேண்டும். ஆனால், இந்த வெளிச்சம் சற்று நேரத்திற்குமட்டுமல்ல அங்கு எப்பொழுதும் காணப்பட்டது. அதை ஒருவரும் எரியவைக்க வேண்டும் என்ற அவசியம் இல்லாதிருந்தது. ஏனெனில், அது தேவனுடைய ஒளியாய் இருந்தது!

இந்த ஆசரிப்புக்கூடாரம், தேவனுடைய வீடாயிருந்தது. நிச்சயமாக தேவன் அந்த ஆசரிப்புக்கூடாரத்தில் வசிக்கவில்லை. ஆனாலும், இஸ்ரயேலர்களின் மத்தியில் இருந்த ஆசரிப்புக்கூடாரத்தின் வழியாக தேவன் அவர்களை ஆசீர்வதிக்கிறார் என்பதை அறிந்து அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். தேவன் அந்த கூடாரத்தில் இருப்பதாக அவர்கள் எண்ணினார்கள். மேலும், தேவனை காணக்கூடிய ஒரு இடம் என்று அவர்கள் மனதில் சிந்தித்தார்கள். தேவன் எப்பொழுதும் இந்த ஆசரிப்புக்கூடாரத்திற்குள் அவர்களோடு இருந்தார் என்றும் நம்பினார்கள். சில நேரங்களில் நம்முடைய நண்பர்கள் வெளியே செல்வதினால் அவர்களை அவர்கள் வீட்டில் நாம் காணமுடியாது. ஆனால், தேவன் எப்பொழுதும் அவருடைய வீடாகிய ஆசரிப்புக்கூடாரத்தில் தங்கியிருந்தார்.

உண்மையில் அவர்களால் தேவனை காணமுடியவில்லை. இந்த பூமியின்மேல் ஒருவரும் அவரை கண்டதுமில்லை. தேவன் ஆசரிப்புக்கூடாரத்தில் தங்கியிருந்தார் என்று ஜனங்கள் விசுவாசித்த காரியம் - அவர்கள் எப்பொழுதும் தேவனுடைய ஆசீர்வாதங்களை ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து பெற்றுச் செல்லுவதற்கு ஒரு வழி இருந்தது. இஸ்ரயேலர்கள் அனைவரும் அந்த ஆசரிப்புக்கூடாரத்திற்குள் நேரடியாகச் சென்று தேவனோடு சம்பாஷிக்க முடியாது! இக்காரியங்களைச் செய்வதற்காக தேவன் சிலரை விசேஷித்த விதத்தில் தேர்வு செய்தார்.



இவர்கள் "ஆசாரியர்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். மோசேயின் சகோதரனாகிய ஆரோன், முதல் ஆசாரியனாக இருந்தார். அவர் பிரதான ஆசாரியன் என்றும் அழைக்கப்பட்டார். ஆரோனின் குமாரர்களும் ஆசாரியர்களாக இருந்தார்கள். ஆனால், ஆரோனைபோல் இவர்கள் முக்கியத்துவம் பெறவில்லை. தேவனிடத்தில் ஜனங்கள் ஆசீர்வாதம்பெற விரும்பும்போது, ஆரோனின் வழியாகவே இவர்கள் பெறவேண்டியதாய் இருந்தது. மேலும், ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு ஆரோனின் வழியாக தேவனுக்குப் பலி செலுத்த வேண்டியதாயிருந்தது. பிரகாரத்தில் காணப்பட்ட வெண்கல பலிபீடத்தில் நித்திய நோக்கமாக இது இருந்தது. பலி பொருட்கள் அந்த பலிபீடத்தின்மேல் தகனிக்கப்பட்டது.

இந்த பலிகளின் அவசியம் என்ன? இஸ்ரயேலர்கள் பாவ நிலைமையில் இருந்ததினால், இந்த பலிகள் செலுத்தப்பட வேண்டியதாய் இருந்தது. இந்த உலகத்தில் இருக்கும் அனைவரையும்போல, இவர்கள் தேவன் விரும்பிய காரியங்களைச் செய்யவில்லை.



வேதாகமத்திலுள்ள எல்லா கதைகளையும் நீங்கள் வாசித்தபடி தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு முதலில் நாம் பலி செலுத்த வேண்டும் என்ற பாடத்தை நீங்கள் எப்பொழுதும் நினைவில்கொள்ள வேண்டுகிறேன். இதை இப்பொழுது நீங்கள் நினைவில்கொள்ளுகிறீர்களா? ஏனெனில், தேவன்தாமே நம் அனைவரையும் நேசித்ததினால் அவருடைய சொந்த குமாரனாகிய இயேசுவை நமக்குப் பலியாகக் கொடுத்தார். இது எவ்வளவு அற்புதமான காரியம்? இயேசு நமக்காக மரித்தார் என்று மற்றவர்கள் சொல்வதை நீங்கள் கேட்கும்போது, அதில் உண்மையான அர்த்தத்தை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இஸ்ரவேலர்கள் தங்களுடைய பாவங்களைப்போக்க, ஆடுகளும், மாடுகளும் பலி செலுத்துவதற்காக ஆசரிப்புக்கூடாரத்துக்கு ஆரோனிடம் கொண்டுவந்தார்கள். உண்மையில் இவர்களின் பாவங்களைப் போக்குவதற்கு ஏற்ற மதிப்புள்ள பலிகளாக இது இருக்கவில்லை. அந்த பலி பொருளைக்கொண்டுவருவதினிமித்தமாக இஸ்ரவேலர்கள் சில பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்பினார். பலி செலுத்தப்பட்ட இயேசுவின் வழியாக நாம் தேவனிடத்தில் சென்றால் மட்டுமே அவருடைய ஆசீர்வாதங்களைப் பெறமுடியும் என்ற பாடத்தை நாம் கற்றுக்கொள்வதற்கு தேவன் விரும்புகிறார். இதற்காகவே, இயேசு தமது ஜீவனை நமக்குப் பலியாக செலுத்தினார் என்பதை எப்பொழுதும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஆசரிப்புக்கூடாரத்தில் செலுத்தப்படும் பலிகளைக்குறித்து முழுமையாகச் சொல்லுவதற்கு காலம் போதாது. ஆகவே, செலுத்தப்பட்ட சில முக்கியமான பலிகளைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். அதில் வருஷத்திற்கு ஒருமுறை ஒரு முக்கியமான பலி செலுத்தப்பட்டது.

முதலில், ஆரோன் ஒரு காளையை எடுத்து, அதைக் கொன்று, அதிலுள்ள முக்கியமான உறுப்புகளாகிய இருதயம், கல்லீரல் மற்றும் கொழுப்பை எடுத்து பிரகாரத்தில் காணப்படும் பலிபீடத்தில் தகனித்தார். மற்ற காரியங்கள் பாளயத்திற்குப் புறம்பாக எரிக்கப்பட்டது. ஆரோன் அந்த காளையின் இரத்தத்தை மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் எடுத்துச் சென்று, உடன்படிக்கை பெட்டியின் மேலிருக்கும் கிருபாசனத்தின்மேல் தெளித்தார்.

மகா பரிசுத்த ஸ்தலத்துக்குச் செல்லும் வழியில் காணப்படும் தூபபீடத்தில், பிரதான ஆசாரியன், சுகந்த வாசனையான தூபவர்க்கங்களை செலுத்தினார். இது மிகவும் பொடியாக்கப்பட்ட தூபவர்க்கமாயிருந்தது. ஆசாரியர் பிரகாரத்தில் இருக்கும் பலிபீடத்திலிருந்து எடுக்கப்பட்ட அக்கினித்தழல்களை பரிசுத்த ஸ்தலத்திலுள்ள தூபபீடத்தில்போட்டு பொடியாக்கப்பட்ட சுகந்தவர்க்கத்தை அதில் போட்டார். அதில் எழும் சுகந்த வாசனை பரிசுத்த ஸ்தலம் மட்டுமல்ல மகா பரிசுத்த ஸ்தலத்தையும் நிரப்பும்.

இப்படியாக, காளை பலி செலுத்தப்பட்ட பின் ஆரோன் ஒரு ஆட்டை அடித்து, காளையை பலி செலுத்தினதுபோலவே, இந்த ஆட்டையும் பலி செலுத்துவார். இறுதியில் அந்த ஆட்டின் இரத்தத்தையும் மகா பரிசுத்த ஸ்தலத்திலுள்ள கிருபாசனத்தின்மேல் தெளிப்பார்.

காளைகள் மற்றும் ஆடுகளின் பலிகளைக்காட்டிலும், இன்னும் விசேஷித்த காரியங்களை நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக தேவன் இவைகளையெல்லாம் நமக்கு பாடமாக வைத்திருக்கிறார். அந்த ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள மகா பரிசுத்தமான ஸ்தலத்தை, தேவனுடைய உண்மையான வீட்டை, பரலோகம் என்று வேதாகமம் கூறுகிறது. இயேசு சிலுவையில் மரித்து, மரித்தோரைவிட்டு எழுந்தபின் அவர் பரலோகத்திற்குச் சென்றார். இயேசு செலுத்தின பலியின்மேல் தேவன் மிகவும் பிரியமாயிருந்தார். ஆகவே, இப்பொழுது நாம் இயேசுவின் நாமத்தில், தேவனிடத்தில் ஜெபிக்கும்பொழுது, தேவனால் நாம் சேர்க்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படுகிறோம்.

இதற்காகவே, மகா பரிசுத்த ஸ்தலத்தில் காணப்பட்ட உடன்படிக்கையின் மூடி கிருபாசனம் என்று அழைக்கப்பட்டது. இயேசு நமக்காக இரத்தம் சிந்தினார் என்று நமக்கு இது கற்பிக்கிறது. தேவன் அவருடைய கிருபையினால் அவர்களை ஆசீர்வதித்து நித்தியஜீவனைக் கொடுத்தார். தேவன் எப்பொழுதும் ஜனங்களை நேசிக்கக்கூடியவராய் இருக்கிறார். நாம் அவரை நேசிப்பதனால் மட்டும் ஆசீர்வாதங்களைப்பெற முடியும் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்.

பூமியிலுள்ள எல்லா ஜனங்களையும் தேவன் ஆசீர்வதிப்பார் என்று அவர் ஆபிரகாமுக்குக் கொடுத்த மகா மேன்மையான வாக்குத்தத்தத்தை நீங்கள் நினைவில் வைத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஆம், ஆசரிப்புக்கூடாரம் மற்றும் அதிலுள்ள பாடங்கள் - தேவன் இயேசுவின் வழியாக நம்மை ஆசீர்வதிப்பார் என்பதை நினைவுபடுத்துகிறது. இயேசு நமக்காக மரித்ததினால் இவைகள் நித்தியமாக நிறைவேறும்.

பிரதான ஆசாரியர் காளை மற்றும் ஆடாகிய இரண்டு பலிகளை ஏன் செலுத்தினார் என்று நீங்கள் யோசிக்கலாம். இயேசு தம்முடைய ஜீவனை பலி செலுத்தியதுபோல, நாமும் பலி செலுத்துவதற்கு தேவன் நமக்கும் ஒரு வாய்ப்பு கொடுத்திருக்கிறார் என்ற தேவனுடைய சித்தத்தை இது வெளிப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றின

அனைவரும் தங்களுடைய ஜீவனை பலி செலுத்தினார்கள். இயேசு ஜனங்களை உண்மையாக நேசித்ததினால் அது அவர்களுக்கு உதவி செய்யும்படி தன்னையே பலி செலுத்தினார். இப்படிப்பட்ட மனநிலையைக் கொண்டிருக்கும் அனைவரும் இயேசுவைப்போல பலி செலுத்துவதற்கு வாய்ப்பைப் பெறுகிறார்கள். இவர்கள் உயிரோடு எழுப்பப்படும்பொழுது இயேசுவோடு இணைந்து இந்த உலக ஜனங்களுக்கு ஜீவனைக் கொடுப்பார்கள். நீங்கள் இயேசுவின் சீஷர்களாக அவரைப் பின்பற்ற விரும்புகிறீர்களா? மற்றவர்களுக்கு நன்மை செய்யும்படியாக உங்கள் காலங்களை செலவழிப்பது எவ்வளவு அற்புதமான காரியம்?

**கேள்விகள்:-**

1. ஆசரிப்புக்கூடாரம் என்றால் என்ன? யார் அதை கட்டினார்? அது எதற்காக பயன்பட்டது?

2. தேவனுடைய வீட்டில் இருந்த அறைகளின் அளவென்ன? அதற்குள் இருந்த பொருட்கள் என்ன?

3. பலிபீடம் என்றால் என்ன? அது எந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டது?

4. தேவனுடைய ஆசரிப்புக்கூடாரத்தில் வேலை செய்தவர்கள் யார்?



## 19. தேசத்தை வேவு பார்த்தல்

இந்த ஆசரிப்புக்கூடாரம் கட்டப்படும்வரைக்கும், இஸ்ரயேல் ஜனங்கள் சீனாய் மலையின் அடிவாரத்தில் தங்கியிருந்தார்கள். அதற்குப்பின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்திற்குப் புறப்படும்படி தேவன் சொன்னார். ஆசரிப்புக்கூடாரத்திற்கு மேல் மிதந்து கொண்டிருக்கும் மேகம் நகர்ந்து சென்றது. அப்பொழுது, ஜனங்கள் அனைவரும் அதனுடன் சென்றார்கள். ஜனங்கள் செல்ல வேண்டிய வழியை அந்த மேகம் காட்டியது. அந்த ஆசரிப்புக்கூடாரம் பல பகுதிகளாக செய்யப்பட்டதினால் அவர்கள் ஒரு இடம் விட்டு மற்றொரு இடம் சென்றபோது, ஸ்தாபிக்கப்பட்ட ஆசரிப்புக்கூடாரத்தை மிக எளிமையாகப் பிரித்து சுமந்துச் சென்றார்கள்.

இப்படியாக நாளுக்கு நாள் இந்த மேகம் நகர்ந்து இஸ்ரயேல் ஜனங்களை கானான் தேசத்து எல்லைக்கு அருகாமையிலுள்ள காதேஸ்பர்னேயா என்ற இடம்வரைக்கும் நடத்தியது. மேகம் அங்கு நிற்கும்போது, ஜனங்கள் அனைவரும் அங்கு தங்க வேண்டும் என தேவன் விரும்பியதை அது காட்டியது.

இஸ்ரலேர்கள் மத்தியிலிருந்த முதன்மையான பன்னிரண்டு மனிதர்களை அழைத்து, கானான் தேசம் எப்படிப்பட்டது என்று வேவு பார்க்கும்படி தேவன் மோசேயிடம் கூறினார். யாக்கோபுக்கு பன்னிரண்டு குமாரர்கள் இருந்தது நினைவிருக்கிறதா? இப்பொழுது இஸ்ரயேலர்கள் பன்னிரண்டு மிகப்பெரிய குடும்பங்களாகவும் அல்லது பன்னிரண்டு கோத்திரங்களாகவும் காணப்பட்டார்கள். ஒவ்வொரு கோத்திரமும் யாக்கோபின் வழியாக வந்த சந்ததியாய் இருந்தது. ஆகவே, மோசே இந்த பன்னிரண்டு கோத்திரங்களிலிருந்து பன்னிரண்டு பேரை தேர்வு செய்து, கானான் தேசத்தை வேவு பார்க்கும்படி அனுப்பினார்.

இக்காலத்திலும், யுத்த நேரங்களில் ஒவ்வொரு தேசத்திலிருந்தும் மற்ற தேசங்களுக்கு வேவு பார்க்கும்படி ஆள் அனுப்புகிறார்கள். கானான் தேசம் உண்மையில் இஸ்ரயேல் ஜனங்களுக்குச் சொந்தமானது. ஆனால், நீண்ட காலமாய் இவர்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்ததினால், மற்ற தேசத்தினர் அங்கு குடியேறினார்கள். இப்பொழுது இஸ்ரயேல் ஜனங்கள் அங்கு குடியேறுவதற்கு முன்பே அங்கிருக்கும் ஜனங்களை வெளியேற்ற வேண்டியதாயிருந்தது. ஆகவே, அந்த ஜனங்களைப்பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்காக இந்த வேவுகாரர்கள் அனுப்பப்பட்டார்கள்.

இந்த பன்னிரண்டு வேவுகாரர்களையும் கானான் தேசத்தின் எல்லைக்குள் பிரவேசித்து அதை முழுவதும் சுற்றிப்பார்த்தார்கள். அது அற்புதமான தேசமாயிருந்தது. எல்லாவிதமான உணவு பொருள்களும் அபரிதமாக விளைந்தது. அவர்கள் கானான் தேசத்தில் நாற்பது நாட்கள் தங்கியிருந்ததினால் அந்த தேசத்தைக்குறித்து அறிந்துகொள்ள வேண்டிய சகல காரியங்களையும் அதிகமாகவே அறிந்துகொண்டார்கள்.

அந்த வேவுகாரர்கள் இஸ்ரயேல் திரும்பும்படி ஆயத்தப்பட்டபோது, கானான் தேசத்தில் விளைந்த திராட்சப்பழங்களின் ஒரு கொத்தை இருவர் சுமந்து வந்தார்கள். அப்படிப்பட்ட திராட்சப்பழங்களைப் புசிப்பதற்கு உங்களுக்கு விருப்பமா? இப்படிப்பட்ட திராட்சக்குலையைக் கண்ட இஸ்ரயேலர்கள் எவ்வளவு ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும்?

கானான் மிக அற்புதமான தேசம் என்று அனைவரும் ஒப்புக்கொண்டார்கள். ஆனால், அங்கு குடியிருந்த ஜனங்களைக் கண்டு அனைவரும் பயந்தார்கள். அவர்கள் மிக வல்லமையுள்ள போர் வீரர்கள் என்பதை மோசேயிடம் அறிவித்தார்கள். அதிலும் சிலர், இராட்சதர்போல இருக்கிறார்கள் என்று கூறினார்கள். அவர்களுக்கு முன் இந்த வேவுகாரர்கள் வெட்டுக்கிளிகளைப்போல இருந்ததாகவும் கூறினார்கள். அங்கு சென்ற வேவுகாரர்கள் மிகவும் பயந்தார்கள்.

அதற்குப்பின் என்ன நடந்திருக்கும் என்று எண்ணுகிறீர்கள்? கானான் தேசத்துக்குச் சென்ற பத்து பேர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்க வேண்டாம் என்று மோசேயிடம் முறையிட்டார்கள். ஏனெனில், இஸ்ரயேலர்கள் நிச்சயமாக தோற்கடிக்கப்படுவார்கள் என்று எண்ணினார்கள். இஸ்ரயேலிலுள்ள அனைத்து புருஷர்களும் கொல்லப்பட்டு அவர்களுடைய மனைவிகளும், பிள்ளைகளும் மீண்டும் அடிமைகளாகிவிடுவார்கள் என்று பயந்தார்கள்.

இவர்களின் ஆலோசனையை மற்ற இரண்டு வேவுகாரர்களான காலேப் மற்றும் யோசுவா ஒப்புக்கொள்ளவில்லை. அவர்கள் தேவன்மேல் அதிகம் விசுவாசமுள்ளவர்களாய் இருந்தார்கள். கானான் தேசத்திலுள்ள ஜனங்களை தேவனுடைய உதவியினால் எளிதில் கைப்பற்றிவிடலாம் என்று இவர்கள் நம்பினார்கள். ஆகவே, இஸ்ரயேல் ஜனங்களைப் பயப்பட வேண்டாம் என்று ஆலோசனை கூறினார்கள்.

ஆயினும், இஸ்ரயேல் ஜனங்களில் அநேகர் தேவன் பேரில் விசுவாசம் வைக்காததினால் அவர்கள் இந்த இருவரின் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். தேவன் மிக அற்புதமான காரியங்களை இவர்களுக்காகச் செய்தாலும், எகிப்தின் வாதைகளிலிருந்து அவர்களை இரட்சித்தாலும், தேவனால் சிவந்த சமுத்திரத்தைக் கடந்தாலும், அவர்களை அழிக்கவந்த எகிப்திய சேனையை தேவன் அழித்திருந்தாலும், அவர்கள் உயிர்வாழ வேண்டும் என்பதற்காக நித்தமும் மன்னாவை பரலோகத்திலிருந்து வருஷித்தாலும், தேவன் அந்த ஜனங்களை மேற்கொள்ளுவதற்கு உதவி செய்வார் என்று இஸ்ரயேலர்கள் நம்பவில்லை. ஆகவே, தேவனை விசுவாசித்த யோசுவா மற்றும் காலேபின் ஆலோசனைகளைத் தள்ளிவிட்டார்கள்.

வேதாகமம், இந்த இஸ்ரயேலர்களை வணங்கா கழுத்துள்ள ஜனங்கள் என்று கூறுகிறது. தேவனுக்குக் கீழ்ப்படியாத மனநிலையில் இவ்வாறு கூறப்படுகிறது. தேவன் அவர்களை வணங்கா கழுத்துள்ளவர் என்று கூறின காரணத்தை நாம் அறிந்திருக்கிறோம். தேவன் அவர்களுக்காக எவ்வளவு அற்புதமான காரியங்களைச் செய்திருந்தாலும், அந்த தேசத்தின் எல்லை வரைக்கும் வழிநடத்தியிருந்தாலும், அந்த தேசத்திற்குள் பிரவேசிப்பதற்குப் பயந்தார்கள்.

இது மட்டுமல்ல, இஸ்ரயேலர்கள் மீண்டும் எகிப்துக்குச் செல்ல விரும்பினார்கள். ஆம், சிலர் எகிப்து தேசத்துக்கு மீண்டும் செல்வதற்காக ஒரு புதிய தலைவரை தேர்வு செய்ய முடிவெடுத்தார்கள்.

உண்மையில், இந்த இஸ்ரயேலர் தேவனுக்கு எந்தளவுக்குக் கீழ்ப்படியவில்லை என்பதைக் காட்டுகிறது. ஆனாலும், தேவன் அவர்களை அதிகமாக நேசித்தார். ஆகவே, அவர்கள் எகிப்துக்கு திரும்பிச் செல்லுவதற்கு தேவன் அவர்களை அனுமதிக்கவில்லை. அந்த இராத்திரியில் தேவன் மோசேயிடம் ஆசரிப்புக்கூடாரத்தில் இருந்து பேசினார். இஸ்ரயேலர் இந்த வனாந்தரத்தில் நாற்பது வருஷங்கள் சுற்றித்திரிய வேண்டும் என்று கூறினார். கானான் தேசத்தை நாற்பது நாட்கள் வேவுகாரர்கள் சுற்றித்திரிந்தது போல, இஸ்ரயேல் ஜனங்கள் நாற்பது வருஷங்கள் வனாந்தரத்தில் சுற்றித்திரிய வேண்டியதாய் இருந்தது. இருபது வயதிற்கு மேலுள்ளவர்கள், இந்த நாற்பது வருஷத்தில் மரித்துவிடுவார்கள் என்று தேவன் மோசேயிடம்

அறிவித்தார். தேவனோடு எதிர்த்துப் போராடிய ஜனங்கள் அனைவரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிப்பதை தேவன் விரும்பவில்லை.

இஸ்ரயேலிலுள்ள இருபது வயதிற்கு மேற்பட்ட இரண்டு மனுஷராகிய காலேப் மற்றும் யோசுவா மட்டுமே அந்த கானான் தேசத்தில் பிரவேசிப்பார்கள் என்று தேவன் கூறினார். ஏனெனில், இந்த இருவரும் தேவன்மேல் விசுவாசம்கொண்டவர்களாய் ஜனங்களுக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறினார்கள். இந்த இருவரும் தம்மேல் நம்பிக்கை வைத்திருப்பதை எண்ணி தேவன் மகிழ்ச்சியடைந்தார். அவர்மேல் விசுவாசம் வைக்கும்பொழுது, தேவன் எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருக்கிறார்.

தேவன் சொல்லிய காரியங்களை மோசே இஸ்ரயேலர்களிடம் சொல்லியபோது, அவர்கள் உடனடியாக தங்கள் மனதை மாற்றிக்கொண்டு, கானானுக்குள் பிரவேசிக்க ஆயத்தப்பட்டார்கள். ஆனால், தேவன் இஸ்ரயேலுக்கு உதவி செய்யாததினால் இஸ்ரயேலர்கள் தோற்கடிக்கப்பட்டு, விரட்டியடிக்கப்பட்டார்கள். ஆகவே, நீண்ட காலமாக இஸ்ரயேலர்கள் வனாந்தரத்தில் தங்கினார்கள்.

தேவன் விரும்பியதை செய்வதற்கு நாம் முயற்சித்தால் தேவன் நமக்கு உதவி செய்வார். நாம் விரும்புவதை செய்ய முயற்சித்தால், நிச்சயமாக நாம் தோல்வியடைவோம். துவக்கத்தில் நாம் சரியான வழி செல்வது போலிருக்கும். ஆனால், அதற்குப் பின் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்திருந்தால், நலமாக இருந்திருக்குமே என்று தோன்றும். இக்காரியங்களை நாம் எப்பொழுதும் நினைவில்கொள்ள வேண்டும்.

### கேள்விகள்:-

1. கானான் தேசத்தை வேவு பார்க்கும்படி மோசே எத்தனை பேரை அனுப்பினார்? அவர்கள் அங்கு என்னென்ன காரியங்களை அறிந்துகொண்டார்கள்?

2. இந்த வேவுகாரர்கள் மோசேயிடம் என்ன கூறினார்கள்? அனைவரும் அதற்கு ஒப்புக்கொண்டார்களா?

3. இஸ்ரயேலர் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்குள் செல்வதற்கு முன், எவ்வளவு காலம் வனாந்தரத்தில் இருந்தார்கள்?



## 20. யோர்தான் நதியை கடந்து செல்லுதல்

ஒரு அற்புதமான வாழ்க்கையை மோசே வாழ்ந்தார். அவர் குழந்தையாக இருந்தபோது, நைல் நதியிலிருந்து அவரை தேவன் விடுவித்த காரியங்களை நீங்கள் நினைவில் கொண்டிருப்பீர்கள். எகிப்திலிருந்து இஸ்ரயேல் ஜனங்களை எவ்வளவு நேர்த்தியாக மோசே வழி நடத்துவார் என்று தேவன் அறிந்திருந்தார். ஆகவே, மூழ்காதபடிக்கு மோசேயை நதியிலிருந்து மீட்டெடுத்தார். அதற்குப் பின் மோசே அரமனையில் நாற்பது வருடங்கள் வாழ்ந்ததை நீங்கள் அறிந்திருக்கலாம். அங்கு அவர் நல்ல கல்வியையும், மற்ற நல்ல காரியங்களையும் பெற்றார். எகிப்திலிருந்து இஸ்ரயேலர்களை வழிநடத்துவதற்கு இவர் கற்ற காரியங்கள் உதவியாக இருந்தது.

அதற்குப் பின், அவர் மீதியான் தேசத்திற்குச் சென்று தன்னுடைய மாமனாரின் மந்தைகளை மேய்க்கக்கூடிய மேய்ப்பரானார். அவர் வாழ்ந்த நாற்பது வருடங்களின் முடிவில், தேவன் முட்செடியிலிருந்து மோசேயிடம் பேசினார். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து எபிரெயர்களை வெளியே அழைத்து வழி நடத்தும்படி சொன்னார். அப்போது அவருக்கு எண்பது வயதாக இருந்தது. அதற்குப் பின், நாற்பது வருடங்கள் வனாந்தர பிரயாணம். இவைகளைக் கூட்டினால் மோசே 120 வயது நிரம்பினவராக இருந்தார்.

இஸ்ரயேலர்கள் யோர்தானைக் கடந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கான காலம் வந்தது. நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு முன் இந்த தேசத்தை தேவன், ஆபிரகாமுக்கு வாக்களித்திருந்தார். ஆனாலும், மோசே அத்தேசத்திற்குள் பிரவேசிக்கமுடியவில்லை. அவர் ஒரு விசுவாசமுள்ள ஊழியக்காரனாக இருந்தார். அந்த தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கான காலம் வந்தது என்றும், நீண்ட காலங்களுக்குப்பின் மீண்டும் இந்த இஸ்ரயேலர்கள் உலகமெங்கும் சிதறடிக்கப்படுவார்கள் என்றும், இஸ்ரயேலர்களுக்குச் சொல்லும்படி மோசேயிடம் தேவன் கூறினார்.

அனைத்து காரியங்களும் நிறைவேறியது. இந்நாள்வரைக்கும் இஸ்ரயேலர்கள் பூமியெங்கும் சிதறப்பட்டிருக்கிறார்கள். அவருடைய வார்த்தைகளின்படியே இந்நாள்வரைக்கும் யூத ஜனங்கள் தங்களுடைய சொந்த தேசத்தைச் சுதந்தரிக்க முடியவில்லை. இன்று நடக்கக்கூடிய காரியங்களைப் பல நூறு வருடங்களுக்கு முன்னதாகவே வேதாகமத்தில் எழுதப்பட்டிருப்பது அற்புதமான காரியமல்லவா! ஆகவேதான், வேதாகமத்தை தேவனுடைய வார்த்தை என்று கூறுகிறோம். வேதத்தில் என்ன சொல்லப்பட்டிருந்தாலும், அவைகள் உண்மையாகவே இருக்கிறது. இஸ்ரயேலர்கள் மீண்டும் தங்கள் சொந்த தேசத்திற்குத் திரும்பினார்கள் என்று வேதம் கூறுகிறது. அதை நிச்சயமாக அவர்கள் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

மோசே மரிப்பதற்கு முன் தேவன் அவரை மிக உயரமான பர்வதமாகிய பிஸ்காவின் கொடுமுடியில் ஏறி யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள அந்த அற்புதமான தேசத்தைக் காணும்படி அனுமதித்தார். எப்பொழுதாவது நீங்கள் ஒரு மலையின் உச்சிக்கு சென்றிருக்கிறீர்களா? மோசேயின் கண் பார்வை மிகத் தெளிவாக இருந்ததினால், தேவன் இஸ்ரயேலர்களுக்கு வாக்களித்த தேசத்தை அவரால் காணமுடிந்தது. அந்த தேசத்தைக் கண்ட பின் மோசே மரித்தார்.

மோசே அந்த மலைக்குச் சென்று, மரிப்பதற்கு முன்னதாகவே தன்னுடைய இடத்தில் ஒரு புதிய தலைவரை நியமித்தார். அந்த புதிய தலைவர், யோசுவா. இவர் நாற்பது வருடங்களுக்கு முன் கானான் தேசத்தை வேவு பார்க்கும்படி அனுப்பப்பட்ட வேவுகாரர்களில் ஒருவர் என்பதை நீங்கள் நினைவில்கொண்டிருக்கலாம். அப்பொழுது யோசுவா தேவன் மேல் விசுவாசம் கொண்டவராய் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தை தேவனுடைய உதவியோடு எளிதில் பற்றிக்கொள்ளலாம் என்று சிந்தித்தார்.

ஆம், யோசுவா தேவனை விசுவாசித்தார். ஆகவே, தேவன் அவரை அடுத்த தலைவராகத் தேர்வு செய்தார்.



ஆனால், தேவனுடைய உதவியின்றி இஸ்ரயேலர்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்க முடியாமற்போனது ஏன் என்ற காரணத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர்கள் பாளையம் இறங்கின இடத்திற்கும், தேவன் வாக்களித்த தேசத்திற்கும் இடையில் மிகப்பெரிய நதியாகிய யோர்தான் கரைபுரண்டு ஓடியது. நாம் அறிந்தவரைக்கும் அந்த நதியின்மேல் எந்தவிதமான கப்பல்களோ, அதைக் கடந்து செல்வதற்கு படகுகளோ இருக்கவில்லை. ஆகவே, உண்மையில் இஸ்ரயேலர்களுக்கு உதவி தேவைப்பட்டது. நாற்பது வருடங்களுக்கு முன் அவர்கள் எகிப்தைவிட்டு புறப்பட்டபோது, சிவந்த சமுத்திரத்தைக் கடப்பதற்கு தேவன் உதவி செய்ததுபோல, இப்பொழுதும் அவர் உதவி செய்தார்.

ஆசாரியர்கள் உடன்படிக்கை பெட்டியை சுமந்தவர்களாக அந்த நதியின் ஓரத்தில் நிற்கும்படி தேவன் யோசுவாவிடம் சொன்னார். ஆசரிப்புக்கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் காணப்பட்ட ஒரே பொருள் இந்த உடன்படிக்கைப் பெட்டி என்று நீங்கள் நினைவில் கொள்ளலாம். இப்பொழுது இஸ்ரயேலர்கள் புறப்படுவதற்கு ஆயத்தமானார்கள். அவர்களைவிட்டு அந்த உடன்படிக்கைப் பெட்டி தனியாகப் பிரிக்கப்பட்டது. அதை சுமந்த ஆசாரியர்கள் முதலில் சென்றார்கள்.

அவர்களின் பாதங்கள் நதியின் ஓரத்தைத் தொட்டபோது, இதை எப்படி கடக்கப்போகிறோம் என்பதைக்குறித்து அந்த ஆசாரியர்கள் நிச்சயமாக யோசித்திருக்க வேண்டும். ஆனால், யோர்தானுக்குள் ஒரு பாதையை அமைத்துத் தருவதாக தேவன் யோசுவாவிடம் கூறியிருந்தார். மிக வேகமாக ஓடிக் கொண்டிருக்கும் அந்த நதி இவர்கள் கடக்கும்படி இரண்டாகப் பிரியும் என்று நம்புவதற்கு அதிகமாக விசுவாசம் உண்மையில் தேவைப்பட்டது. தேவன் சொல்லியபடி அவர்கள் கடப்பதற்கு ஆயத்தமானார்கள். தேவன் சொல்லிய காரியங்களை உடனடியாக கீழ்ப்படிந்ததினிமித்தம் தேவனும் மகிழ்ச்சியடைந்தார். உண்மையில் கடினமாகத் தோன்றினாலும் தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்தால் அவர் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பார். ஆனால், அவர் சொல்லிய காரியங்கள் கஷ்டமாக இருந்தாலும் அதை நாம் செய்ய விரும்பும்பட்சத்தில் தேவன் நமக்கு முழுமையாக உதவி செய்வார் என்று நாம் அறிந்திருக்கிறோம்.

உடன்படிக்கைப் பெட்டியை சுமந்த ஆசாரியர்களின் பாதங்கள் தண்ணீரைத் தொட்டவுடன், ஓடிக்கொண்டிருந்த நதி நின்றது. இவர்களுக்குப்பின் ஓடிய நதி வேகமாகக் கடந்து அவ்விடத்தில் வெட்டாந்தரை காணப்பட்டது. அதற்குப் பின் அனைவரும் யோர்தானை எளிதாகக் கடந்தார்கள். எவ்வளவு அற்புதமான காரியம்! வேதாகமம் இதைக் கூறுவதால், இது உண்மையான காரியமாகவும் இருக்கிறது.

ஆனால், உடன்படிக்கைப் பெட்டியை சுமந்த ஆசாரியர்களோ, யோர்தானை முழுமையாகக் கடந்துவிடாமல் இஸ்ரயேலர் அனைவரும் அக்கறை சேரும்வரைக்கும் நதியின் நடுவில் நின்றார்கள்.

மேலும், சில காரியங்களைச் செய்ய வேண்டும் என்று தேவன் மோசேயிடம் கூறினார். இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களிலிருந்து, பன்னிரண்டு ஆட்களை தேர்வுசெய்து அவர்கள் ஒவ்வொருவரும் யோர்தானிலிருந்து மிகப்பெரிய கற்களை ஒரு ஞாபக சின்னமாக வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்கு எடுத்துவரும்படி கூறினார். தேவன் நடப்பித்த மாபெரும் அற்புதத்தை நினைவுகூரும்படியாக இவைகளைச் செய்தார். பல வருடங்களுக்குப் பின், இந்த கற்கள் எங்கிருந்து வந்தது என்று ஒருவர் கேட்பாரானால், தேவன் இஸ்ரயேல் ஜனங்களை யோர்தான் நதியைக் கடக்கச் செய்த அற்புதமான கதையைச் சொல்ல வேண்டும் என்பதை இது பொருள்படுத்தியது. யோர்தானுக்கு மத்தியிலிருந்த ஆசாரியர்கள் நின்ற இடத்திலும் பன்னிரண்டு கற்கள் வைக்கப்பட்டது.

இப்பொழுது நாற்பது வருடங்களாகிய நீண்ட கால வனாந்தரத்தில் அலைந்து கூடாரத்தில் வசித்த இஸ்ரயேல் ஜனங்கள், வாக்களிக்கப்பட்ட இஸ்ரயேல் தேசத்திற்குள் பிரவேசித்தார்கள். இது ஒரு செழிப்பான தேசமாக இருந்தது. அவர்கள் புசிப்பதற்கு அதிகபட்சமாக உணவு கிடைத்தது. இனி பரலோகத்திலிருந்து வரும் மன்னா அவசியமில்லாதிருந்தது. பரலோகத்திலிருந்து வருஷிக்கப்பட்ட மன்னா நிறுத்தப்பட்டது. இப்பொழுதே மற்ற காரியங்களுக்காக அவர்களை நடத்தினார்.

ஆயினும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் அவர்கள் பிரசேவிப்பது எளிதாக இருக்கவில்லை. அந்த தேசத்தில் குடியிருந்த அந்நியர்கள் பலசாலிகளாக இருந்தார்கள். இவர்கள் அனைவரும் இஸ்ரயேலுக்கு எதிராளியாகவும் இருந்தார்கள். அவர்கள் அனைவரையும் அவ்விடம்விட்டு வெளியேற்ற வேண்டியதாயிருந்தது.

யோர்தானைக் கடந்தபோது, இஸ்ரயேலர்கள், தேசத்தின் ஒரு மிகப்பெரிய பட்டணத்திற்கு வந்தார்கள். அது எரிகோ பட்டணம் என்று அழைக்கப்பட்டது. அது மதிற் சூழ்ந்த பட்டணமாகவும், மிகவும் பாதுகாப்போடு கட்டப்பட்ட ஒரு நகரமாகவும் இருந்தது. தேவன் யோர்தானை எவ்வளவு அற்புதமாக கடக்கச் செய்தார் என்று எண்ணிக்கொண்டிருந்த எரிகோ ஜனங்களுக்குப் பயம் பிடித்தது. அந்த பட்டணத்து படைவீரர்கள், போர்வீரர்கள், காவலாளிகள், பட்டணத்து ஜனங்கள் போர் செய்வதற்கு வெளியே வராதபடிக்கு உள்ளே சென்று பட்டணவாசலை அடைத்துக்கொண்டார்கள். தங்களை இஸ்ரயேலர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளுவதற்கு இதுவே வழி என்று எண்ணினார்கள்.

அந்நேரத்தில் யோசுவா அந்த பட்டணத்தை எவ்வாறு பிடிக்க வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருந்தார். அவர் தன்னுடைய கண்களை ஏறெடுத்துப் பார்த்தபொழுது, யுத்த வீரனுக்கு ஒப்பாக ஒரு புருஷன் நிற்பதைக் கண்டார். அவர் தன்னுடைய சிநேகிதனா, அல்லது எதிரியா என்று கேட்டார். அவர் தேவனுடைய சேனையின் அதிபதி என்று பதிலளித்தார். மேலும், இவருடைய தலைமையின் கீழ் எரிகோ இஸ்ரயேலர்களின் கரங்களில் விழுவார்கள் என்பதையும் அறிவித்தார். ஆனால், உண்மையில் அவர் ஒரு புருஷன் அல்ல, தேவனால் அனுப்பப்பட்ட ஒரு தூதனாயிருந்தார்!

தேவன் தம்முடைய தூதர்களை அவருடைய ஊழியக்காரர்களிடம் அனுப்புவது வழக்கம். அவர் தம்முடைய தூதர்களை ஆபிரகாம் மற்றும் மோசேயிடம் அனுப்பினதை நினைவில் கொண்டிருக்கலாம். இப்பொழுது தம்முடைய தூதனை யோசுவாவிடம் அனுப்பினார். உண்மையில் ஒருவரும் தூதரை பார்க்கமுடியாது. ஆனால், தேவன் தம்முடைய ஊழியக்காரர்களிடம் அனுப்பும்போது, தேவனுடைய திட்டங்களை அவர்களுக்கு அறிவிப்பதற்காக அவர்கள் மனுஷர்களைப்போல் காட்சியளிப்பார்கள். இப்படியாக, தேவனுடைய சேனைக்குத் தலைவராக இருந்த அந்த தூதன் - எரிகோவை கைப்பற்றுவதற்கு ஒரு அற்புதமான திட்டத்தை யோசுவாவிடம் கூறனார்.

மீண்டும் ஆசாரியர்கள் உடன்படிக்கைப் பெட்டியை சுமக்க வேண்டியதாயிருந்தது. ஜனங்கள் அனைவரும் அவர்களைப் பின் தொடர்ந்தனர். இவர்கள் ஆறு நாட்களும் பட்டணத்தை ஒருமுறை சுற்றிவர வேண்டியதாயிருந்தது. அந்த ஆசாரிய கோத்திரத்தார் எக்காளங்களை ஊதிக்கொண்டே நடக்க வேண்டியதாயிருந்தது. இப்படியாக அவர்கள் எக்காளங்களை ஊதிக்கொண்டு அந்த பட்டணங்களை ஒருமுறை சுற்றி வந்தார்கள். ஆறு நாளும் இக்காரியத்தைமட்டுமே செய்தார்கள். இஸ்ரயேலரிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக பட்டணத்தை பூட்டிக்கொண்டு, அதற்குள் இருந்த ஜனங்களுக்கு விநோதமாக தோன்றியிருக்க வேண்டும். அடுத்து அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்று அவர்கள் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

இஸ்ரயேலர்கள் அந்த பட்டணத்தைச்சுற்றி அந்த ஆறு நாளும் ஒவ்வொருமுறை சுற்றி வந்தார்கள். அதற்குப் பின், அந்த தூதனுடைய கட்டளையின்படி ஏழாம் நாளிலோ அவர்கள் ஏழுமுறை சுற்றி வந்தார்கள். அந்த பட்டணத்தை ஏழாவது முறையாக சுற்றி வரும்போது, அவர்கள் எக்காளங்களைமட்டும் ஊதாமல், இஸ்ரயேலர் அனைவரும் மிகுந்த சத்தத்தோடு ஆரவாரித்தார்கள். என்ன நடந்தது தெரியுமா? அவர்களுக்கு முன்பாக நின்ற அந்த பட்டணத்தின் மதிற்சுவர் திடீரென்று அவர்களுக்கு முன் விழுந்தது. அவர்கள் அனைவரும் அதற்குள் சென்று பட்டணத்தைக் கைப்பற்றினார்கள். தேவன் தம்முடைய ஜனங்கள், அவர்களுடைய எதிராளிகளை மேற்கொள்ளுவதற்கு எவ்வாறு உதவி செய்ய வேண்டும் என்று நிச்சயமாக அறிந்திருக்கிறார்.

**கேள்விகள்:-**

1. எபிரெய ஜனங்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்கும்பொழுது அவர்களுக்கு தலைவராக நியமிக்கப்பட்டிருந்தவர் யார்?

2. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரிப்பதற்கு அவர்கள் எந்த நதியை கடக்க வேண்டியதாய் இருந்தது? அதை அவர்கள் எவ்வாறு கடந்தார்கள்?

3. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன், அவர்கள் கடக்க வேண்டிய பட்டணத்தின் பெயரென்ன? அதை அவர்கள் எவ்வாறு கைப்பற்றினார்கள்?



## 21. மிகப் பெரியதாக இருந்த சேனை

ஒரு பிரதான தளபதி தன்னுடைய படைத்தலைவர் ஒருவரைப் பார்த்து, சேனைகள் மிகப்பெரியதாக இருந்ததினால், ஆயிரக்கணக்கான போர்ச் சேவகர்களை தங்களுடைய வீடுகளுக்கு அனுப்ப வேண்டும் என்று சொன்னவரைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இது மிகவும் விநோதமாக இருக்கிறதல்லவா? ஆனால், இஸ்ரயேலர்கள் தங்களுடைய எதிராளிகளோடு போர் செய்வதற்கு எழும்பியபோது, இப்படிப்பட்ட ஒரு காரியம் நடந்தது.

இஸ்ரயேலின் சேனைக்கு தளபதியாக தேவன் இருந்தார். அவருடைய படைதலைவர் கிதியோன் என்ற மனுஷன் இருந்தார். போர் செய்வதற்கு கிதியோன் 32,000 மனுஷர்களைக் கூட்டிச்சேர்த்தார். ஆனால், தேவன் 300 பேரை தவிர மற்ற அனைவரையும் அவர்களுடைய வீடுகளுக்கு அனுப்பிவிட்டார். தேவன் கிதியோனோடு இருந்ததினால், இஸ்ரயேலர்கள் போரில் வெற்றியடைந்தார்கள்.

யோசுவாவின் மரணத்திற்கு நீண்ட காலத்திற்குப்பின் மோசேக்குப் பதிலாக இஸ்ரயேலர்களை யோர்தான் நதியைக் கடக்கச் செய்த ஒரு அற்புதமான தலைவராக இவர் இருந்தார். யோசுவா, தேவனுடைய விசுவாசமுள்ள ஊழியக்காரனாகவும், தைரியமுள்ள ஒரு மனுஷனாகவும் இருந்தார். அவருடைய தலைமையின் கீழ் இஸ்ரயேல் ஜனங்கள் அனைவரும் கானான் தேசத்தில் குடியிருந்த புறஜாதிகளைப் போர்செய்து மேற்கொண்டார்கள். ஆனாலும், அந்த தேசத்தில் சில எதிராளிகள் மீதியிருந்தார்கள். ஆனாலும், அவர்கள் இஸ்ரயேலர்களுக்கு அதிகமாக தொல்லை கொடுக்கவில்லை. யோசுவா மரித்தபின் இஸ்ரயேல் ஜனங்கள் நாற்பது வருடங்கள் அமைதலோடு இருந்ததாக வேதம் கூறுகிறது.

தேவனுடைய ஜனங்கள் அதற்கு பின்வந்த காலங்களிலும் அமைதியாக இருந்திருக்கலாம். உண்மையில் அவர்கள் தேவனிடத்தில் விசுவாசம் உள்ளவர்களாக தங்களை காத்துக்கொண்டிருந்தால் எப்பொழுதும் அவர்கள் சமாதானத்தோடு இருந்திருக்கலாம். ஆனால், பல அற்புதங்களைச் செய்த தேவனை அவர்கள் மறக்கத் துவங்கினார்கள். தேவனை மறந்து மற்ற தேவர்களைச் சேவிக்கத் துவங்கினார்கள். அதில் ஒன்றை பாகால் என்று அழைத்தார்கள். அவர்களுடைய அவ்விசுவாசத்தின் காரணத்தினால் இஸ்ரயேலர்களுடைய உண்மையான

தேவன் அவர்களை எதிராளிகளின் தேசத்தில் அடிமைகளாக அனுமதித்தார். அவர்களின் சேனைகள் இஸ்ரயேலர்களின் தானியங்களை கொள்ளையிட்டுச் சென்றார்கள். இஸ்ரயேல் ஜனங்கள் தங்களுடைய பாவத்திற்கு ஏற்றபடி தண்டனையை அடைந்துவிட்டார்கள் என்று அறிந்த தேவன் அவர்களின் எதிராளிகளிடத்திலிருந்து அவர்களை இரட்சிக்க படைதலைவனாகிய கிதியோனை தேர்வு செய்தார்.

கிதியோனின் தகப்பன் பாகாலை சேவிக்கும் தலைவர்களில் ஒருவராக இருந்தார். அவர் தன்னுடைய சொந்த நிலத்தில் பலிபீடத்தைக்கட்டி பாகாலுக்கு பலியிட்டுக்கொண்டிருந்தார். எவ்வளவு துன்மார்க்கமான காரியம்? இப்படிப்பட்ட பலிபீடங்கள் பொதுவாக பாதுகாப்புக்காக தோப்புகளில் கட்டப்பட்டது. தேவன் தம்முடைய பணிக்காக கிதியோனை அழைத்தபோது அவருடைய தந்தையின் நிலத்திலிருந்த மரங்களையும், பலிபீடத்தையும் அழித்துபோடும்படிச் சொன்னார். இக்காரியத்தை செய்வதற்கு கிதியோன் நிச்சயமாக ஒரு தைரியமுள்ள மனுஷனாக இருந்திருக்க வேண்டும். அவர் தேவனை அதிகமாக நம்பினார். ஒருநாள் இரவில் தனக்கு உதவி செய்யும்படியாக பத்து ஊழியக்காரர்களை அழைத்துக்கொண்டு, தேவன் சொல்லிய காரியங்களைச் செய்துமுடித்தார். மறுநாள் காலையில் எழுந்தபோது, அந்த பலிபீடமும், தோப்புகளும் அழிக்கப்பட்டதை ஜனங்கள் கண்டார்கள்.

இக்காரியத்தைச் செய்த மனுஷன் கிதியோன் என்று கண்டுபிடித்தபின், பாகாலை சேவித்த சுற்றியுள்ள ஜனங்கள் கோபங்கொண்டார்கள். கிதியோனைக் கொல்லும்படி அவருடைய தந்தையிடம் முறையிட்டார்கள். ஆனால், கிதியோனின் தந்தையோ ஞானமுள்ள மனுஷனாக இருந்தார். பாகால் வல்லமையுள்ள தேவனாக இருந்தால், தன்னுடைய காரியத்திற்காக தானே வழக்காடட்டும் என்று சுற்றியுள்ள ஜனங்களுக்கு பதிலளித்தார். இது எவ்வளவு ஞானமான பதில்?

பாகால் உண்மையான தெய்வமல்ல. மனுஷர்கள் அதை தெய்வம் என்று நம்பினார்கள். ஆகவே, அதினால் ஒன்றும் செய்யக்கூடாதிருந்தது. எல்லா இஸ்ரயேலர்களும் இதைக்குறித்து அறிந்தபோது, எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அழைத்து வந்தவரும், சிவந்த சமுத்திரத்தையும், யோர்தான் நதியையும் கடக்கச்செய்த உண்மையான மெய் தேவனை சேவிப்பதற்கு விருப்பம்கொண்டார்கள். ஆனால், இஸ்ரயேல் ஜனங்கள் தங்கள் எதிராளிகளினால் பயமுறுத்தப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களைச் சுற்றி மீதியானியர்களின் சேனை பாளயம் இறங்கி இருந்தார்கள். வெகுசீக்கிரத்தில் இஸ்ரயேலர்களை அழித்து, அவர்களைப் பிடித்துவிட வேண்டும் என்று திட்டமிட்டார்கள். அவர்கள் சேனை முழுவதும் போராயுதம் வைத்திருந்தார்கள். அந்நாட்களில் விமானப்படைகளோ, தரை படைகளோ இருக்கவில்லை. அதற்குப்பதிலாக குதிரைகளும், ஒட்டகங்களும், சில போராயுதங்களும் இருந்தது. தகப்பனுடைய பலிபீடங்களையும், தோப்புகளையும் அழித்து, கிதியோன் தம்முடைய தைரியத்தை வெளிப்படுத்தினதினால், மீதியானியர்களின் வல்லமையுள்ள சேனைக்கு எதிராக தேவன் போர் தொடுக்கச் சொன்னார்.

கிதியோன் தைரியமுள்ளவராக இருந்தபோதிலும் தேவன் உண்மையில் இக்காரியங்களைச் செய்யும்படி சொன்னாரா என்பதையும், இதற்காக தேவன் உதவி செய்வாரா என்பதையும் உறுதிபடுத்திக்கொள்ளும்படி விரும்பினார். ஆகவே, இயல்புக்கு மாறான ஒரு காரியத்தைச் செய்தார். ஒரு இராத்திரியில், தரையின்மேல் ஒரு மயிருள்ள தோலைப் போடுகிறேன், அந்த தோல்மேல் மட்டும் பனி பெய்ய வேண்டும் என்றும், சுற்றியிருக்கும் தரை பனி பெய்யாமல் காய்ந்திருக்க வேண்டும் என்றும் தேவனிடம் கேட்டுக்கொண்டார். இக்காரியம் நடந்தால் மீதியானியரோடு போர் செய்வதற்கு தேவன் அனுப்பினார் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுவேன் என்றார். மறுநாள் காலையில் எழுந்து அவர் பார்த்தபொழுது, அந்த மயிருள்ள தோலின்மேல் பனி பெய்து ஊறியிருந்தது. ஒரு கிண்ணத்தில் அதின் தண்ணீரை பிழியும் அளவுக்கு அந்த தோலில் பனி நீர் இருந்தது. சுற்றியிருந்த நிலம் காய்ந்திருந்தது! எவ்வளவு ஆச்சரியமான காரியம்?

இந்த காரியம் படைத்தலைவனாகிய கிதியோனை மீதியானியர்களோடு போர் செய்வதற்கு போதுமானதாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், அவர் போருக்கு ஆயத்தமாகவில்லை. மீண்டும் ஒருமுறை என்னிடத்தில் பொறுமையாக இருக்கும்படி தேவனிடத்தில் கேட்டுக்கொண்டார். அவர் மீண்டும் ஒரு சோதனையை வைக்க வேண்டும் என்று தேவனிடத்தில் கேட்டுக்கொண்டார். தேவனிடம் ஒரு கடினமான காரியம் செய்ய வேண்டும் என்று கிதியோன் சொன்னார். அவர் இந்த யுத்தத்திற்குப் போகும்முன் தேவன் தம்மோடுகூட இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துவதற்காக இதைச் செய்தார்.

மறுநாள் இரவில், ஒரு மயிருள்ள தோலை தரையின் மேல்போட்டு, பனி தோலின்மேல் பெய்யாமல், அதை சுற்றியுள்ள தரையின்மேல் பெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அப்படியே, கிதியோன் கேட்டுக்கொண்டபடியே நடந்தது. மறுநாள் காலையில் கிதியோன் வெளியே சென்றபோது, பனி பூமியின்மேல் பெய்திருந்தது, ஆனால், அந்த தோல் காய்ந்திருந்தது. ஆம், இப்பொழுது தேவன் மீதியானியர்களுக்கு விரோதமாக கிதியோன் செல்ல வேண்டும் என்று விரும்பினதை தனக்குள் உறுதிப்படுத்திக்கொண்டார்.

அவர் இஸ்ரயேலர்களிடம் போர் செய்வதற்காக ஆள் அனுப்பி, 32,000 பேர்களை கூட்டிச் சேர்த்தார். இந்த சேனை மிகவும் பெரியதாக இருக்கிறது என்று தேவன் அறிந்து, அதை கிதியோனிடம் அறிவித்தார். இந்த சேனை மீதியானியர்களின் சேனையைக்காட்டிலும் மிகக் குறைவானதாக இருந்தாலும், அது பெரிய சேனை என்று தேவன் கிதியோனிடம் கூறினார். இஸ்ரயேலர்களுடைய சேனையும் இவ்வளவு ஜனங்களோடு யுத்தத்திற்குச் சென்று மீதியானியர்களை முறியடித்தால் அந்த மகிமையை தாங்களே எடுத்துக்கொள்ளுவார்கள் என்பதை தேவன் கிதியோனிடம் விவரித்தார். ஏனெனில், வெகு சமீபத்தில்தான் இஸ்ரயேல் ஜனங்கள் உண்மையான தேவனை வழிப்பட துவங்கினார்கள். எந்தவிதமான இக்கட்டான சூழ்நிலைகளிலும் அவர்கள் உபத்திரவங்களிலிருந்து தேவன் மட்டுமே இரட்சிக்க முடியும் என்பதை இந்த யுத்தத்தின் மூலம் நடத்திக்காட்ட விரும்பினார். இவ்வளவு பெரிய மீதியானியரின் சேனையை இஸ்ரயேலின் மிகச் சிறிய சேனை போர் தொடுத்தால் அது தங்களால் அல்ல, தேவனால் உண்டான அற்புதம் என்று ஜனங்கள் புரிந்துகொள்ளுவார்கள் என்பதை தேவன் விவரித்தார். படைத்தலைவனான கிதியோன், பிரதான தளபதியின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, பயமும் திகிலும் உள்ளவர்கள் வீட்டுக்குச் செல்லலாம் என்று கூறினார். என்ன நடந்தது என்று எண்ணுகிறீர்கள்? 22,000 பேர் கிதியோனின் சேனையை விட்டு திரும்பினார்கள். மீந்திருக்கும் ஜனங்கள், மிக அதிகம் என்று தேவன் கிதியோனிடம் கூறினார். இதை உங்களால் கற்பனை செய்துபார்க்க முடிகிறதா?

மீதியிருக்கும் 10,000 பேரை ஒரு தண்ணீர் துரவண்டையில் நடத்தும்படி தேவன் கிதியோனுக்குக் கட்டளையிட்டார். தங்களுடைய உதடுகளை தண்ணீரில் வைத்து, தண்ணீர் குடித்தவர்கள் அனைவரும் அவர்களுடைய வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள். தண்ணீரை தங்கள் கைகளில் அள்ளி குடித்த மீதமிருந்த 300 பேர் மட்டுமே கிதியோனின் சேனையாக இருந்தார்கள். 300 பேர் கொண்ட சேனையினால் மீதியானியர்களை ஜெயிக்கும் பட்சத்தில் நிச்சயமாக இஸ்ரயேலர்கள் அனைவரும் தேவனுடைய ஞானத்தையும், வல்லமையையும் உணர்வார்கள் என்று தேவன் திட்டமிட்டார்.

தைரியமுள்ள இந்த 300 போர் வீரர்களின் கைகளில் எப்படிப்பட்ட போராயுதங்கள் இருந்திருக்கும் என்று நீங்கள் எண்ணலாம். இவர்கள் விநோதமான பொருட்களை வைத்திருந்தார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தீ பந்தமும், அந்த தீ பந்தத்தை மூடுவதற்கு ஒவ்வொரு மண்பானையும், ஒவ்வொருவருக்கும் ஒரு எக்காளமும் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த இரவில் படைதலைவனாகிய கிதியோன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தவராக சிறய குழுக்களாகப் பிரிந்து மீதியானியர்கள் பாளையம் இறங்கின இடத்திற்குச் சென்றார்கள். கிதியோன் செய்தது போலவே அனைவரும் செய்ய வேண்டும் என்று கிதியோன் கட்டளை கொடுத்திருந்தார்.

அனைவரும் காணும்படியாக கிதியோன் ஒரு இடத்தில் நின்றார். திடீரென்று அந்த தீ பந்தத்தை மறைத்திருந்த பானையை கிதியோன் உடைத்து, அவர் பிடித்திருந்த எக்காளத்தை ஊதி, "கர்த்தரின் பட்டயம் கிதியோனின் பட்டயம்" என்று கோஷமிட்டார். அதைக் கண்ட மற்ற 300 பேரும் தங்களுடைய கைகளிலிருக்கும் பானைகளை உடைத்து, எக்காளங்களை ஊதி அவ்வாறாகவே ஆர்ப்பரித்தார்கள்.

ஆழ்ந்த நித்திரையிலிருந்த மீதியானியர்கள் பிரகாசிக்கும் தீ பந்தங்களைக் கண்டு எக்காளங்களின் சத்தங்களையும் வெவ்வேறு திசைகளிலிருந்து வந்து ஆர்ப்பரிப்பின் சத்தங்களையும் கேட்டு, தங்களைக்காட்டிலும் வல்லமையுள்ள ஒரு சேனையால் சூழப்பட்டார்கள் என்று கற்பனை செய்துகொண்டு மிகுந்த பயமும் திகிலும் அடைந்தார்கள். அவர்கள் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவர்களாக எதிராளிகளின் சேனைக்கும், தங்களுடைய சேனைகளுக்கும் வித்தியாசம் காணாதவர்களாக அருகாமையிலுள்ள தங்களுடைய சேனைகளை தாங்களே வெட்டி வீழ்த்திக் கொண்டனர். மீதி இருந்தவர்கள் பயத்தினால் ஓடிவிட்டனர்.

மீதியானியர்கள் ஓடுவதை அறிந்த கிதியோன், அவர்களுக்குப் பின்சென்று, இனி இஸ்ரயேலர்களின் சமாதானத்திற்கும் சந்தோஷத்திற்கும் தடையில்லாதபடிக்கு அவர்களை அடியோடு விரட்டினார். இவ்வளவு சிறிய சேனைக்கு கிடைத்த மாபெரும் வெற்றி ஒரு அற்புதமான காரியமல்லவா? கிதியோன் விசுவாசமுள்ளவராக தேவனுடைய சொல்லுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்ததினால் இந்த சிறிய சேனையைக்கொண்டு இஸ்ரயேலர்கள் வெற்றியடைந்தார்கள்.

**கேள்விகள் :-**

1. கிதியோன் என்பவர் யார்?

2. அவர் எதற்காக சேனையை திரட்டினார்? அந்த சேனை பெரிதாக இருந்த காரணம் என்ன?

3. கிதியோனின் சேனை எப்படிப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தியது? அவர்கள் எத்தனை பேர்களைக் கொன்றார்கள்?

# 22. தேவனுக்காக கொடுக்கப்பட்ட ஒரு சிறுவன்



**தேவனை** அதிகமாக நேசித்து, அவரை சேவிக்க வேண்டும் என்று விரும்பிய ஒரு அருமையான எபிரெய பெண்மணி இருந்தாள். ஆனால், அவளுக்கு பிள்ளை இல்லாத காரணத்தினால், அவள் எப்பொழுதும் துக்கமாகவே இருந்தாள். அவளுக்கு அன்னாள் என்று பெயர். அவளுடைய புருஷன் எல்க்கானா. இவர்கள் ராமதாயீம் என்ற பட்டணத்தில் குடியிருந்தார்கள். ஒவ்வொரு வருஷமும் எல்க்கானா தன் மனைவியோடு தேவனுக்கு பலிசெலுத்தும்படியாக சீலோவுக்கு பயணித்து வந்தார். அந்த சமயத்தில் ஆசரிப்புக்கூடாரம் ஸ்தாபிக்கப்பட்டு பலிசெலுத்தக்கூடிய இஸ்ரயேலரின் ஆசாரியர்கள் காணப்பட்டார்கள். ஆகவே, பலி பொருட்கள் ஆசாரியர்களிடத்தில் கொண்டுவரப்பட்டது.

ஒரு வருஷம் அவர்கள் சீலோவுக்குச் சென்றபோது, தனக்கு பிள்ளையில்லாததை எண்ணி, அன்னாள் மிகவும் வருத்தப்பட்டு தேவனிடத்தில் விசேஷமாக விண்ணப்பித்தாள். அங்கு பிரதான ஆசாரியனாகிய ஏலி இருந்தார். அன்னாள் ஜெபிப்பதை அவர் கேட்டு, தாம் தேவனிடத்தில் விண்ணப்பித்த காரியத்தை அவர் தருவார் என்று ஏலி உறுதியளித்தார். அன்னாள் மிக நன்றியுள்ளவளாக சந்தோஷத்தோடு தேவன் அவளுடைய விண்ணப்பத்தைக் கேட்டு, ஒரு குமாரனைக் கொடுத்தால், அந்த குமாரனை தேவனுடைய பணிக்காகக் கொடுத்துவிடுவதாக வாக்களித்தாள்.

காலம் நிறைவேறினபோது, வாக்களிக்கப்பட்ட குழந்தை அன்னாளுக்கு பிறந்தது. தேவன் தனக்குக் கொடுத்த குமாரனுக்கு சாமுயேல் என்று பெயரிட்டாள். சாமுயேல் மிகச் சிறியவனாக இருந்தபோதே அவருடைய தாய் தான் வாக்களித்தபடியே தேவனுடைய பணி செய்வதற்காக ஏலியினிடத்தில் விட்டுச்சென்றாள். இக்காரியத்தினிமித்தம் தேவன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்.

ஏலி மிகவும் வயது சென்றவராக இருந்தார். ஆகவே, தேவனுடைய வேலைகளைச் செய்வதற்கு பல வழிகளில் சாமுயேல் உதவியாக இருந்தார். ஆசரிப்புக்கூடாரத்தில் தேவனுக்கென்று ஊழியம் செய்யக்கூடிய இஸ்ரயேலின் ஆசாரியர்களுக்கு வெண் அங்கி கொடுக்கப்பட்டது. அதேபோல் சாமுயேலுக்கும் வெண் அங்கி கொடுக்கப்பட்டது. அதற்குபின், அந்த சிறு பையனாக இருந்த சாமுயேல் வெளியே வரவில்லை. ஒவ்வொரு வருஷமும் அவருடைய தாய் அவரை காண வந்தாள். ஒவ்வொருமுறை அவள் வரும்போது சாமுயேலுக்காக ஒரு புதிய சட்டை தைத்து வந்தாள். இப்படியாக சாமுயேல் வளரவளர அவருடைய தாய் அவருக்குத் தேவையான உடைகளைக் கொண்டுவந்தாள்.

ஏலி என்ற பிரதான ஆசாரியனுக்கு ஊழியம் செய்வதில் சாமுயேல் விசுவாசமுள்ளவராக இருந்தார். அவர் பிரதான ஆசாரியரின் படுக்கை அறைக்கு அருகாமையில் படுத்துக்கொண்டிருந்தார். ஒருவேளை இரவு நேரங்களில் தேவைப்படும்படி ஏலிக்கு உதவும்படியாக சாமுயேல் அவர் அருகில் இருந்தார். உண்மையில் ஒரு அருமையான பையனாக இருந்திருக்க வேண்டும். ஒருநாள் இரவு ஏலி படுக்கைக்குச் சென்றபின் சாமுயேலும் படுக்கச்சென்றார். அப்பொழுது சாமுயேலே, சாமுயேலே என்ற ஒரு சத்தம் கேட்டது. "இதோ இருக்கிறேன்" என்று சாமுயேல் பதிலளித்தார். அவர் ஏலி அழைத்திருப்பார் என்றெண்ணி உடனடியாக ஏலியிடம் சென்றார். ஆனால், ஏலி அவனை அழைக்கவில்லை என்று கூறினார்.

மிகுந்த குழப்பமடைந்தவராக சாமுயேல் படுக்கைக்குத் திரும்பினார். சிறிது நேரத்திற்குப் பின்பு சாமுயேலே, சாமுயேலே என்று அழைக்கக்கூடிய அதேகுரல் கேட்டது. சாமுயேல் குதித்தெழுந்து மீண்டும் ஏலியிடம் சென்றார். மீண்டும் நான் அழைக்கவில்லையே என்று ஏலி கூறினார். சாமுயேல் மேலும் அதிகமாக குழப்பம் அடைந்திருக்க வேண்டும். நான் கனவு கண்டிருப்பேனோ என்று அவர் சிந்தித்திருக்கலாம். அவர் படுக்கைக்குச் சென்றபோது அதே அனுபவத்தை மீண்டும் பெற்றார்.

சாமுயேல் ஏலியிடம் மூன்றாவது முறை வந்தபோது, தேவன் சாமுயேலை அழைத்தார் என்பதை ஏலி அறிந்துகொண்டார். ஆகவே, மீண்டும் ஒருமுறை யாராவது உன்னை

அழைத்தால், "கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன்" என்று கூறும்படி ஏலி சாமுயேலிடம் அறிவித்தார். அதேபோல, சாமுயேல் படுத்துக்கொண்டான். சாமுயேலே, சாமுயேலே என்ற குரலை சாமுயேல் கேட்டபொழுது, ஏலி தமக்குக் கற்பித்தபடி, "கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன்" என்று பதிலளித்தார். உண்மையில், தேவன் அந்த இளைய ஊழியக்காரனுக்கு ஒரு செய்தியை வைத்திருந்தார்.

ஏலி, தேவனை நேசித்து அவருக்கு விசுவாசமுள்ள ஊழியக்காரனாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால், அவருக்கோ இரண்டு துன்மார்க்கமான பிள்ளைகள் இருந்தார்கள். ஆசரிப்புக்கூடாரத்தில் பலி செலுத்த வருபவர்களிடத்தில் மிகக் கொடூரமாக நடந்துகொண்டதினால் அவர்களுடைய தந்தை அவர்களை கண்டித்தார். ஆனாலும், அவர்களுடைய பாவ வழிகளைவிட்டு அவர்கள் விலகவில்லை. இவ்வளவு பெரிய தவறுகளைச் செய்த பிள்ளைகளை ஏலி தண்டித்திருக்க வேண்டும். ஆனால், அவர் செய்யவில்லை. அவர் தன்னுடைய பிள்ளைகளை தண்டிக்க விரும்பாமல் இருந்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் செய்த தவறான கிரியைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று தேவன் முடிவு செய்தார். ஆகவே, ஏலியின் பிள்ளைகள் மரிக்கப் போகிறார்கள் என்பதை தேவன் சாமுயேலிடம் அறிவித்தார். மேலும், அவரை சேவிக்கக்கூடிய விசுவாசமுள்ள மற்றொரு ஆசாரியனை எழுப்பப்போவதாகவும் கூறினார்.

இவ்வளவு முக்கியமான செய்தியை தேவன் ஒரு இளைய ஊழியக்காரனிடம் அறிவித்தார். மறுநாள் காலையில், சாமுயேல் சகல காரியங்களையும் ஏலிக்கு அறிவித்தார். ஏலி சாந்தத்தோடு அந்த செய்தியை பெற்றுக்கொண்டு தேவன் நன்மையான காரியங்களை மட்டுமே செய்வார் என்று கூறினார். தேவன் சாமுயேலிடம் கூறின சகல காரியங்களும் ஏற்றநேரத்தில் நிறைவேறியது. ஜனங்களும் இதைக்குறித்து அறிந்தபோது தேவனுடைய விசுவாசமுள்ள ஒரு தீர்க்கதரிசி அவர்கள் மத்தியில் இருப்பதாக நம்பினார்கள். அந்நேரமுதல் சாமுயேல் அனைவராலும் நேசிக்கப்பட்டு, இஸ்ரயேல் ஜனங்களால் மதிக்கப்பட்டார். தேவன் அவரோடு இருந்ததை ஜனங்கள் உணர்ந்தார்கள்.

பல வருடங்கள் சாமுயேல் விசுவாசமுள்ளவராக இஸ்ரயேல் ஜனங்களை சேவித்தார். அவருக்கும் இரண்டு குமாரர்கள் பிறந்தனர். அவர்கள் வளர்ந்தபோது, ஏலியின் குமாரர்களைப்போல, அவர்களும் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். இவ்வளவு அருமையான ஒரு தகப்பனிடம் வளர்ந்த பிள்ளைகள் தேவனிடத்தில் எவ்வளவு விசுவாசம் உள்ளவர்களாக இருந்திருக்கலாம்? சாமுயேலின் பிள்ளைகள் அப்படி வளரவில்லை. ஜனங்கள் சாமுயேலை நேசித்ததுபோல அவருடைய குமாரர்களையும் நேசித்தார்கள். ஆனால், காலம் சென்றபோது அவர்கள் துன்மார்க்கர்கள் என்று அறிந்தபோது அனைவரும் அதை சாமுயேலிடம் முறையிட்டார்கள்.

மோசேயை தொடர்ந்து வந்த யோசுவாவின் மரணத்திற்குப்பின் கிட்டதட்ட 400 வருஷங்கள் இந்நேரத்திற்குள் கடந்தது. இந்த காலங்களில் யோசுவா, மோசே செய்ததுபோல ஒருவரும் இஸ்ரயேல் ஜனங்களை சீராக வழிநடத்தவில்லை. இவர்கள் நியாயாதிபதிகள் என்று அழைக்கப்பட்டார்கள். எவ்வாறு நடக்க வேண்டும் என்று ஜனங்களுக்குக் கற்பித்து சில நேரங்களில் எதிராளிகளிடமிருந்து பாதுகாத்தார்கள். இப்படியாக நியாயாதிபதிகளில் ஒருவராகிய கிதியோன் மீதியானியர்களை 300 பேர்கொண்ட சேனைகளோடு ஜெயித்தார். சாமுயேலும், இஸ்ரயேலில் ஒரு நியாயாதிபதியாக ஜனங்களை நியாயம் தீர்த்துக் கொண்டிருந்தார். மேலும், அவர் ஒரு தீர்க்கதரிசியாகவும் இருந்தார். இந்த சாமுயேல் இஸ்ரயேலில் கடைசி நியாயாதிபதியாவார்.



இந்த சாமுயேல் கடைசி நியாயாதிபதியாக இருந்ததின் காரணம் என்ன? அவருடைய குமாரர்கள் துன்மார்க்கமான வழியில் சென்றதினால் இஸ்ரயேல் ஜனங்கள் அனைவரும் சாமுயேலிடம் இதைக்குறித்து முறையிட்டதோடுகூட ஒரு புதிய இராஜா தங்களுக்கு வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். தேவன் சாமுயேலை அதிகமாக நேசித்தார் என்பதையும், சாமுயேல் ஒரு இராஜாவை தங்களுக்கு நியமித்தால் மட்டுமே சரியாக ஆட்சி நடக்கும் என்பதையும் ஜனங்கள் நன்கு அறிந்திருந்தார்கள். ஆகவே, தங்கள் மேல் ஆட்சி புரிவதற்கு ஒருவரை தேர்வு செய்யும்படி

அவர்கள் சாமுயேலிடம் கேட்டுக்கொண்டார்கள். நியாயாதிபதிகளால் இவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டதைக்குறித்து மிக சோர்வடைந்திருந்ததாகவும் அவர்கள் கூறினார்கள். மற்ற தேசங்களுக்கு இராஜா இருப்பதுபோல, தங்களுக்கு ஒரு இராஜா அவசியம் என்று கேட்டுக்கொண்டார்கள். சாமுயேலின் நிலை பரிதாபமாக இருந்தது! இதைக்குறித்து அவர் மிகவும் வேதனைப்பட்டார். ஆனாலும், தேவனோ, "உம்மையல்ல ஜனங்கள் என்னை புறக்கணித்தார்கள்" என்று சாமுயேலுக்கு ஆறுதல் அளித்தார். ஏனெனில், நியாயாதிபதியின் காலத்தில் தேவனே ஜனங்களை ஆட்சி செய்துக்கொண்டிருந்தார். நியாயாதிபதிகள் தேவனுடைய பிரதிநிதிகளாக இருந்தார்கள்.

ஆயினும், தேவன் இஸ்ரயேலர்களுக்கு ஒரு இராஜாவை நியமிக்கும்படி சாமுயேலிடம் கூறினார். ஆனால், அதற்கு முன் அதினால் வரக்கூடிய பிரச்சனைகளை முன்னறிவிக்கும்படி தேவன் சாமுயேலிடம் கூறினார். உங்களை ஆளும் இராஜாவின் காரியம் என்னவென்றால், தன் இரதத்திற்குமுன் ஓடும்படி அவன் உங்கள் குமாரரை எடுத்து, தன் இரதசாரதிகளாகவும் தன் குதிரைவீரராகவும் வைத்துக்கொள்ளுவான். ஆயிரம்பேருக்கும் ஐம்பதுபேருக்கும் தலைவராகவும், தன் நிலத்தை உழுகிறவர்களாகவும், தன் விளைச்சலை அறுக்கிறவர்களாகவும், தன் யுத்த ஆயுதங்களையும், தன் இரதங்களின் பணிமுட்டுகளையும் பண்ணுகிறவர்களாகவும், அவர்களை வைத்துக்கொள்ளுவான். உங்கள் குமாரத்திகளைப் பரிமளதைலம் செய்கிறவர்களாகவும், சமையல் பண்ணுகிறவர்களாகவும், அப்பஞ்சுடுகிறவர்களாகவும் வைத்துக்கொள்வான். உங்கள் வயல்களிலும், உங்கள் திராட்சத்தோட்டங்களிலும் உங்கள் ஒலிவத்தோப்புகளிலும் நல்லவைகளை எடுத்துக்கொண்டு, தன் ஊழியக்காரருக்குக் கொடுப்பான். உங்கள் தானியத்திலும் உங்கள் திராட்சப்பலனிலும் தசமபாகம் வாங்கி, தன் பிரதானிகளுக்கும் தன் சேவகர்களுக்கும் கொடுப்பான். உங்கள் வேலைக்காரரையும், உங்கள் வேலைக்காரிகளையும், உங்களில் திறமையான வாலிபரையும், உங்கள் கழுதைகளையும் எடுத்து தன்னுடைய வேலைக்கு வைத்துக்கொள்ளுவான். உங்கள் ஆடுகளிலே பத்தில் ஒன்று எடுத்துக்கொள்ளுவான்; நீங்கள் அவனுக்கு வேலையாட்களாவீர்கள். நீங்கள் தெரிந்துகொண்ட உங்கள் இராஜாவினிமித்தம் அந்நாளிலே முறையிடுவீர்கள்; ஆனாலும், கர்த்தர் அந்நாளிலே உங்களுக்குச் செவிகொடுக்கமாட்டார் என்றார்.

சாமுயேல் இச்செய்திகளை ஜனங்களுக்கு அறிவித்தார். ஆனாலும், தங்களுக்கு ஒரு இராஜா வேண்டும் என்று ஜனங்கள் உறுதியாய் இருந்தார்கள். நிச்சயமாக நல்ல இராஜாக்கள் சரியான காரியங்களைச் செய்வார்கள். வேதாகமம் ஒரு அருமையான இராஜாவைப்பற்றி கூறுகிறது. இவர் யார் என்று உங்களால் கூறமுடியுமா?

ஆம், வேதாகமத்தில் குறிப்பிடப்படும் அந்த இராஜா நம்முடைய ஆண்டவராம் இயேசுவே. இந்த இராஜா முழு பூமியையும் ஆயிரம் வருஷம் ஆட்சிசெய்யப்போகிறார். அப்பொழுது யுத்தங்களும், பசி தாகமும், மற்றெந்த குறைவுகளும் இருக்காது. அனைவரும் தேவனை நேசிக்க கற்றுக்கொண்டு அவர்களை சேவிப்பார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அதுவரைக்கும் மரித்த எல்லா ஜனங்களும் உயிரோடு எழுப்பப்படுவார்கள். எவ்வளவு அற்புதமான காரியம்?

ஆம், இயேசு இராஜாவாக இருக்கும்போது, ஆதாம், ஏவாள், காயீன், ஆபேல், நோவா, ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு, மோசே, யோசுவா, சாமுயேல் - மற்ற எல்லா ஜனங்களும் ஜீவனோடு எழுப்பப்படுவார்கள். அப்பொழுது சாமுயேலைப் பார்க்கும்பொழுது ஆச்சரியமாக இருக்குமல்லவா? அவரிடத்தில் கேட்பதற்கு உங்களிடத்தில் அநேக கேள்விகள் இருக்கிறதல்லவா?

ஆம், நாம் பாடத்தைவிட்டு வெளியே வந்துவிட்டோம். ஆனாலும், இந்த அற்புதமான இராஜாவாகிய இயேசுவைக்குறித்தும், அவர் சகல ஜனங்களுக்கு செய்யக்கூடிய காரியங்களைக்குறித்தும் நான் உனக்கு சொல்ல விரும்புகிறேன். ஆயினும், இஸ்ரயேல் ஜனங்கள் தங்களை ஆட்சி செய்வதற்கு ஒரு இராஜா வேண்டும் என்பதை அவர்கள் தீர்மானித்ததைக்குறித்து சாமுயேல் அறிந்தபோது, ஒரு நல்ல மனுஷனை இராஜாவாக தேர்வு செய்வதற்கு அவர் தேவனிடம் உதவி வேண்டினார். தேவன் சாமுயேலுக்கு உதவி செய்தார். சவுல் என்ற இஸ்ரயேலனை சாமுயேல் முதல் இராஜாவாக தேர்வு செய்தார். சவுலை இராஜாவாக ஜனங்கள் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டனர். "தேவனே, எங்கள் இராஜாவை இரட்சியும்" என்று அனைவரும் மகிழ்ச்சியோடு ஆர்ப்பரித்தார்கள்.

**கேள்விகள் :-**

1. சாமுயேல் என்பவர் யார்? அவர் சிறுவராக இருந்தபொழுது அவருடைய தாய் அவரை பிரதான ஆசாரியரிடத்தில் ஒப்படைத்தது ஏன்?

2. ஏலி என்பவர் யார்? தேவன் இவரைக்குறித்து சாமுயேலிடம் என்ன காரியத்தை வெளிப்படுத்தினார்?

3. இஸ்ரயேலின் முதல் இராஜாவாக நியமிக்கப்பட்டது யார்? அதற்கு முன் இஸ்ரயேலர்களை ஆட்சி செய்தவர்கள் எப்படியாக அழைக்கப்பட்டார்கள்?



## 23. சிறுவனாகிய ஒரு மேய்ப்பன் இராஜாவாக்கப்பட்டான்

**எகிப்தில்** அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பு, இறுதியில் ஒரு அதிகாரியானார் என்று நான் சொன்ன கதை உங்களுக்கு நினைவில் இருக்கும் என்று நம்புகிறேன். ஆம், இந்த கதையும் - தன்னுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த ஒரு இளைஞன் இஸ்ரயேல் ஜனத்தின்மீது இராஜாவாக நியமிக்கப்பட்டதைக் கூறுகிறது. அவரின் பெயர் தாவீது. இவர் அரசனாகிய சவுலுக்கு பின் ஆட்சி செய்தவர். முதல் இராஜாவாகிய சவுலை அபிஷேகித்த தீர்க்கதரிசியாகிய சாமுயேல் இரண்டாவது இராஜாவாகிய தாவீதையும் அபிஷேகித்தார்.

இராஜாவாகிய சவுல் தன்னுடைய ஆட்சியின் துவக்கத்தில் ஒரு நல்ல இராஜாவாகக் காணப்பட்டார். ஆனால், முடிவுபரியந்தம் அவர் விசுவாசமுள்ளவராய் நிலைநிற்கவில்லை. அவர் தனக்குள் பெருமை கொண்டவராக தேவனுக்குப் பிரியமில்லாத அநேக காரியங்களை நடப்பித்தார். இராஜாவாகிய சவுல் தொடர்ந்து பாவம் செய்துக்கொண்டிருக்கையில், தேவன் சாமுயேலை அழைத்து இஸ்ரயேலை ஆட்சி செய்வதற்கு வேறொரு புதிய இராஜாவை நியமிக்கச் சொன்னார். சாமுயேல் சவுலை அதிகமாக நேசித்ததினால் இக்காரியத்தைக்குறித்து மிகவும் வருத்தமடைந்தார். மேலும், தேவன் சொல்லிய காரியங்களை சவுல் தொடர்ந்து கீழ்ப்படியாததினிமித்தம், சாமுயேல் மேலும் வருத்தமடைந்தார்.

பெத்லகேமில் வாழ்ந்துக்கொண்டிருந்த ஈசாய் என்னும் நாமமுள்ள மனுஷனுடைய குமாரர்களிலிருந்து ஒருவரை இராஜாவாக தேர்வு செய்ய வேண்டும் என்று தேவன் சாமுயேலிடம் கூறினார். அவர் உடனே பெத்லெகேமுக்குப் போகும்படி சாமுயேலை அனுப்பினார். சாமுயேல் எப்பொழுதும் தேவசித்தத்திற்குக் கீழ்ப்படிந்ததினால் உடனடியாக அவர் பெத்லெகேமுக்குச் சென்று ஈசாய் மற்றும் அவருடைய குமாரர்களையும் சந்தித்தார். ஈசாய்க்கு அநேக குமாரர்கள் இருந்தார்கள். அவர்கள் பார்ப்பதற்கு ஆரோக்கியமுள்ளவர்களாகவும், அழகுள்ளவர்களாகவும் இருந்தார்கள். சாமுயேல் தீர்க்கதரிசி அவருடைய மூத்த குமாரனை பார்த்தபோது, தேவன் இவரை இராஜாவாக தேர்வு செய்வார் என்று நம்பினார். ஆனால், அங்கிருந்த குமாரர்களில் ஒருவரையும் நான் தேர்வு செய்யவில்லை என்று தேவன் சாமுயேலிடம் கூறினார்.

சாமுயேல் ஈசாயின் மற்ற குமாரர்களை தனக்குக் காட்டவேண்டும் என்று ஈசாயிடம் கூறினார்.

ஏனெனில், தேவன் யாரை தேர்வு செய்யப்போகிறார் என்பதைக்குறித்து சாமுயேலும் ஆச்சரியப்படத் தொடங்கினார். இறுதியாக, ஈசாய் அவருடைய கடைசி குமாரனை அழைத்துவரவில்லை என்பதை சாமுயேல் அறிந்துகொண்டார். அவரைக்குறித்து சாமுயேல் விசாரித்தபோது, "எனக்கு மற்றொரு குமாரன் உண்டு, அவன் என் ஆடுகளை வயலில் மேய்த்துக்கொண்டிருக்கிறான்" என்று ஈசாய் கூறினார். அவருடைய இளைய குமாரனை ஈசாய் ஒரு பொருட்டாக எண்ணாததால் சாமுயேலிடம் தாவீதை அழைத்து வரவேண்டும் என்று நினைக்கவில்லை.

தேவன் விரும்பிய காரியங்களை மட்டும் செய்ய வேண்டும் என்று எப்போதும் ஆயத்தமாக இருந்த சாமுயேல், மிக ஞானமுள்ளவராக ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த குமாரனை அழைத்துவரும்படிச் சொன்னார். தேவன் மனுஷர் பார்க்கும்விதமாய் பார்ப்பதில்லை என்று சாமுயேல் விவரித்தார். நம்முடைய பார்வைக்கு நல்ல தோற்றமுடையவராகக் காணப்பட்டாலும் இருதயத்தில் அவர் தேவனுக்குப் பிரியமாக இருப்பார் என்று நிச்சயிக்க முடியாது. தேவன் நம்முடைய சிந்தைகளை வாசிப்பவர் என்பதை எப்பொழுதும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். தவறாக இருக்கும் என்று நாம் எண்ணி அதை நம்முடைய பெற்றோர்களுக்கும், நண்பர்களுக்கும் மறைவாக அதை செய்யும்பட்சத்தில் தேவன் அதை காணக்கூடியவராய் இருக்கிறார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஈசாயின் மற்ற குமாரர்களை சாமுயேல் ஏன் அங்கீகரிக்கவில்லை என்பதை ஈசாயினால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, இளைஞனாகிய தாவீது என்ற பெயர்கொண்ட மேய்ப்பனை அழைப்பிக்கும்படி கூறினார். அவரை சாமுயேல் கண்டமாத்திரத்தில் அபிஷேகிக்கப்பட வேண்டிய இராஜா இவர் தான் என்று தேவன் சாமுயேலிடம் கூறினார். உடனே சாமுயேல், தாவீதை இஸ்ரயேலுக்கு இராஜாவாக அபிஷேகித்தார்.

"அபிஷேகம்" என்ற வார்த்தைக்கு பொருள் என்ன தெரியுமா? சாமுயேல் விசேஷித்த நறுமணமுள்ள ஒரு தைலத்தை தாவீதின் தலையில் ஊற்றினார். இதுவே, அபிஷேகம் என்று அழைக்கப்படுகிறது. தேவனால் தேர்வு செய்யப்பட்ட இஸ்ரயேல் இராஜா தாவீது என்பதை இது பொருள்படுத்தியது. அக்காலத்தில் இஸ்ரயேலர்கள் இதை அறிந்திருந்ததினால் அவருடைய சிந்தையில் மற்ற கேள்விகளுக்கு இடமில்லாமல் இருந்தது.

ஆனால், இராஜாவாகிய சவுல் இன்னும் உயிரோடிருந்தார். ஒரேநேரத்தில் இரண்டு இராஜாக்கள் இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆகவே, தாவீது உடனடியாக அந்த பதவியைப்பெற வேண்டும் என்று முயற்சிக்கவில்லை. தான் இராஜாவாக எல்லா பொறுப்புகளையும் துவங்கும்வரைக்கும் ஏற்றநேரம் வரவேண்டும் என்று மிக ஞானமாக காத்துக்கொண்டிருந்தார்.

இதற்கிடையில், இராஜாவாகிய சவுல் தேவனுக்கு தொடர்ந்து கீழ்ப்படியவில்லை. திடீரென்று அவர் மிகவும் கோபங்கொண்டு, உணர்ச்சிவசப்பட்டு, தன்னுடைய கட்டுப்பாட்டை இழந்துவிடுவார். இது எவ்வளவு மோசமான நிலை? இப்படிப்பட்ட சவுலின் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு அருமையான இசைக்கருவி மீட்டப்படும்பொழுது, சவுலின்நிலை பழைய நிலைமைக்குத் திரும்பியதை அவருடைய சிநேகிதர்கள் கண்டறிந்தார்கள்.

மேய்ப்பனாகிய தாவீது ஒரு அற்புதமான இசை கலைஞனாக இருந்தார். அவர் சுரமண்டலம் என்ற கருவியை மிக அருமையாக வாசித்தார். தாவீதைக்குறித்து இராஜாவாகிய சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது, உடனடியாக அவருக்காக வாசிக்கும்படி சவுல் தாவீதுக்கு ஆள் அனுப்பினார். இப்படியாக, தாவீதினிமித்தம் சவுல் அதிகமாக நன்மையைப் பெற்றார். ஆகவே, சவுல் தன்னுடைய சேனையில் ஒரு முக்கியமான நிலையை தாவீதுக்குக் கொடுத்து தாவீதை தன்னுடைய ஆயுததாரியாக்கினார்.

அதேநேரத்தில், பெலிஸ்தியர்கள் இஸ்ரயேலர்களை மிகவும் உபத்திரவப்படுத்திக்கொண்டிருந்தார்கள். சவுல் இராஜாவாக இருந்தபோது, துவக்கத்தில் பெலிஸ்தியர்களை முறியடித்து, அவர்களை தேசத்திலிருந்து விரட்டுவதற்கு தேவன் உதவி செய்தார். ஆனால், இப்போதோ தேவனுடைய உதவியை சவுல் பெறாததினால் பெலிஸ்தருடைய கை ஓங்கி நின்றது. இஸ்ரயேலுக்கு இது மகா உபத்திரவத்தை ஏற்படுத்தியது.

பெலிஸ்தியருக்கு விரோதமாகப் போர் தொடுப்பதற்கு சவுலின் சேனைகள் தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தார்கள். அதில் தாவீதின் மூன்று சகோதரர்களும் இருந்தார்கள். தாவீதின் தகப்பன் தங்களுடைய குமாரர்களுக்கு சில உணவு பண்டங்களைக் கொடுத்தனுப்பி, அவர்களுடைய சுக செய்தியை விசாரிக்கும்படி தாவீதை அனுப்பினார். தாவீது யுத்த களத்திற்கு வந்தபோது, ஒரு பெலிஸ்தியன் மிக வேகமாக ஓடிவந்து, இஸ்ரயேல் சேனைகள் அனைவரும் காணும்படியாக ஓரிடத்தில் நின்றான்.

அனைவரும் பயந்தார்கள். ஏனெனில், இவன் கோலியாத் என்று அழைக்கப்பட்ட பெலிஸ்திய இராட்சதனாய் இருந்தான். இந்த இராட்சதன் மிக வல்லமையுள்ளவனாகவும், பார்ப்பதற்கு மிக பயங்கரமானவனாகவும் இருந்தான். கனமுள்ள உலோகங்களைக்கொண்ட பாதுகாப்பு கவசங்களை அவன் அணிந்திருந்தான். கையில் ஒரு மிகப்பெரிய பட்டயம் வைத்திருந்தான். உண்மையில் அவன் பார்ப்பதற்கு கொடூரமாகவும், அபாயகரமாகவும் இருந்தான்! ஆயினும், தாவீது அவனைக்கண்டு அஞ்சவில்லை!

நிச்சயமாக போர் செய்வதற்காக தாவீது யுத்த களத்திற்கு அனுப்பப்படவில்லை. இராஜாவாகிய சவுலின் கட்டளைகளுக்கு அவர் கீழ்ப்படிய வேண்டும் என்று விரும்பினார். ஆனாலும், இந்த எதிராளியை தன்னால் தோற்கடிக்க முடியும் என்பதை வாய்ப்பு கிடைக்கும்போது, இராஜாவினிடத்தில் அறிவித்துவிட வேண்டும் என்று தனக்குள் எண்ணினார். ஆகவே, சிலரிடம் தான் எண்ணிய காரியத்தை பகிர்ந்துக்கொண்டார்.

சவுலின் காதுக்கு இது எட்டியபோது, அவர் தாவீதுக்கு ஆள் அனுப்பினார். தனக்காக மிக திறமையாக சுரமண்டலம் வாசித்த தாவீது ஒரு சாதாரனமான மனிதர் அல்ல என்பதை சவுல் அறிந்திருந்தார். ஆனாலும் சவுல், "நீ சொன்ன காரியம் இன்னதென்பதை உணர்ந்திருக்கிறாயா" என்று கேட்டார். அப்பொழுது தாவீது சவுலிடம், இந்த இராட்சதனை தன்னால் அழிக்கமுடியும் என்று உறுதியளித்து, போர்களத்திற்குச் சென்று அவனை அழிப்பதற்கு அனுமதி கேட்டுக்கொண்டார்.

தாவீதின் தைரியத்தைக்குறித்து ஆச்சரியப்பட்ட இராஜாவாகிய சவுல், இப்படிப்பட்ட காரியங்களை முயற்சிக்க வேண்டாம் என்று ஆலோசனை கூறினார். இவ்வளவு பெரிதான இராட்சதனோடு, போர் செய்வதற்கு இவருடைய வயது மிகக் குறைவானது என்று சவுல் தாவீதிடம் விவரித்தார். ஆயினும், இராஜாவிடம் தாவீது மன்றாடினார். ஒருமுறை தன்னுடைய தந்தையின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது, மந்தையை தாக்கின சிங்கத்தைக் கொன்றதாகவும், ஒருமுறை ஒரு பெரிய கரடியைக் கொன்றதாகவும் தாவீது, இராஜாவிடம் கூறினார்.

தாவீது மிகைப்படுத்திப்பேசவில்லை. தான் செய்ததை விவரித்தார். மேலும், தாவீது தேவனை அதிகமாக நேசித்ததினால் இந்த இராட்சதனை கொல்லுவதற்கு தேவன் உதவி செய்வார் என்பதை நிச்சயித்திருந்தார். தேவன் இஸ்ரயேலர்களையும் நேசித்ததினால் பெலிஸ்தியர்களிடமிருந்து அவர்களையும் விடுவிப்பார் என்று தாவீது நன்கு அறிந்திருந்தார்.

தாவீதின் தைரியமும், உண்மையும், பக்தி வைராக்கியமும் சவுலை அதிகமதிகமாகக் கவர்ந்தது. ஆகவே, தாவீது அவரை போர்களத்திற்குச் செல்ல அனுமதித்தார். ஒரு மனுஷனாகிய தாவீது மரித்தால் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை என்று சவுல் நிச்சயித்திருக்க வேண்டும்.



முதலில் சவுல் தன்னுடைய ஆயுதவர்க்கங்களை தாவீது அணியும்படி கொடுத்தார். தாவீதுக்கு அந்த அணிகலன்கள் பொருந்தாததினால் அனைத்தையும் கழற்றி வைத்துவிட்டு போர்களத்திற்குச் சென்றார். அவர் என்ன செய்தார் தெரியுமா? அவரோடுகூட ஒரு கவணையும், அந்த கவணை வைக்கக்கூடிய வழவழப்பான கற்களையும் எடுத்துச் சென்றார். இந்நாளிலும்கூட சிறுவர்கள் இதை பயன்படுத்துவதைக் காணலாம்.

தாவீது போர்களத்தை சென்றடைந்து அந்த இராட்சதனுக்கு முன் நின்றார். இளைஞனாகிய தாவீதை இராட்சதன் கண்டபோது, அவர் சிறியவரும், வலிமையற்றவரும், இளைஞருமாயிருப்பதைக்

கண்டு மிகவும் கோபங்கொண்டான். பட்டயங்களையோ, ஈட்டிகளையோ அணியாமல் வந்த தாவீதை ஏளனம் செய்தான். தாவீதுக்கு விரோதமாகவும், இஸ்ரயேலருக்கு விரோதமாகவும் அவன் தூஷிக்கத் தொடங்கினான். தாவீதின் மாம்சத்தைக் கிழித்து நாய்களுக்குப் போட்டுவிடுவதாக அந்த இராட்சதன் பயமுறுத்தினான்.

ஆனாலும், தாவீது மிக அமைதியாக இருந்தார். தேவன் அவரோடிருந்து அவருக்கு உதவி செய்வார் என்பதை தாவீது அறிந்திருந்ததினால் இந்த பயமுறுத்தல்களுக்கு அவர் அசையவில்லை. எவ்வளவு பெரிய வீரனானாலும் சரி இஸ்ரயேலர்களுக்காக அவர்களுடைய தேவன் யுத்தம் செய்வார் என்பதை தைரியமாக தாவீது அறிவித்தார். ஏற்றநேரத்தில் தன் கவணில் ஒரு கல்லை சுற்றி அந்த இராட்சதனை நோக்கி எரிந்தார்.

தாவீது எரிந்த முதல் கல்லே அந்த இராட்சதனின் நெற்றிக்குள் புதைந்தது. அதுவே இராட்சதனின் முடிவாயிருந்தது. முழு பெலிஸ்திய சேனைக்கு இந்த இராட்சதனே தலைவனாக இருந்தபடியினால், தாவீது தங்களுடைய தலைவனைக் கொன்றுவிட்டார் என்று பெலிஸ்தியர்கள் அறிந்தபோது, அவர்கள் பயந்து ஓடிவிட்டார்கள். இப்படியாக தேவன் இஸ்ரயேலர்களை தங்களுடைய எதிராளிகளிடமிருந்து இரட்சிப்பதற்கு தாவீதுக்கு உதவி செய்தார்.

சவுலின் இடத்திற்கு தாவீது இஸ்ரயேலின் இராஜாவாக தேவனால் தேர்வு செய்யப்பட்டிருந்தும், தேவன் குறித்த காலத்திற்காக, அவன் பொறுமையோடு காத்திருந்தான். அதுவரைக்கும் அவர் சவுலுக்கு விசுவாசமுள்ள ஊழியக்காரனாக இருந்தார். தாவீது இராட்சதனைக் கொன்றார் என்று அவைகளைக்குறித்து சவுல் இராஜாவுக்கு அறிக்கையிட்டார். முதலில் சவுல் மிக சந்தோஷமடைந்து தாவீதை தன்னுடைய அரமனைக்கு அழைத்துச்சென்று தன்னுடைய குடும்பத்தில் ஒரு நபராக்கினார்.

இராஜாவாகிய சவுலுக்கு யோனத்தான் என்ற குமாரன் இருந்தார். அவரும், தாவீதும் நெருங்கிய நண்பர்களானார்கள். இருவரும் ஒருவரையொருவர் தன் உயிரைப்போல நேசித்தார்கள். தாவீதுக்கு இது ஒரு நல்ல காரியமாக இருந்தது. ஏனெனில், இராஜாவாகிய சவுல், தாவீதுக்கு விரோதமாக எழும்பியபோது, யோனத்தான் தாவீதுக்கு உதவி செய்யாவிட்டால் சவுல் அவரைக் கொன்றிருப்பார்.

சவுல் இராஜா, தாவீதின்மேல் பொறாமைகொண்டார். ஆம், ஆபேலின்மேல் காயீன் பொறாமைகொண்டதுபோல, யோசேப்பின் மேல் பதினொரு சகோதரர்கள் பொறாமைகொண்டதுபோல இதுவுமாயிற்று. பொறாமை ஒரு பயங்கரமான காரியம். அது உங்களுடைய சந்தோஷத்தை நீக்கிவிட்டு மற்றவர்களைத் துன்புறுத்துவதற்கு வழிநடத்தும். இராஜாவாகிய சவுலின் பொறாமை உச்சக்கட்டத்தை எட்டியதினால் அவரால் முடிந்திருந்தால் தாவீதை கொன்றுபோட்டிருப்பார். ஆனாலும், தேவன் தாவீதுக்கு உதவி செய்தார். யோனத்தானை ஒரு அருமையான நண்பனாக தாவீதுக்கு கொடுத்திருந்தார். அவர் தாவீதை பலவழிகளில் பாதுகாப்பதற்கு உதவியாக இருந்தார்.

தாவீதை கொல்லுமளவிற்கு சவுல் இராஜாவிடம் பொறாமை வந்ததின் காரணத்தை எண்ணி நீங்கள் ஆச்சரியப்படலாம். அந்த இராட்சதனைக் கொன்று, பெலிஸ்தியர்களின் சேனைகளிலிருந்து இஸ்ரயேலர்களை விடுவித்ததினிமித்தம் ஜனங்கள் அனைவரும் தாவீதை நேசித்ததே இதற்குக் காரணமாயிருந்தது. பெலிஸ்தியர்களை தோற்கடித்தபின் வெற்றியின் கோஷமிடும்போது, வீதியிலுள்ள ஸ்திரீகளும் மற்ற அனைவரும் தாவீதையும், சவுலையும் புகழ்ந்துபாடினார்கள்.

ஆனால், சவுலைக் காட்டிலும், தாவீதை அதிகமாய்ப் புகழ்ந்தார்கள். "சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பத்தாயிரம்" என்று பாடினார்கள். அவர்கள் அனைவரும் சவுலைக் காட்டிலும் தாவீதை ஒரு நல்ல போர்வீரன் என்று எண்ணினார்கள். இதைக்கேட்ட இராஜாவாகிய சவுல், தன் இருதயத்தில் பொறாமைகொண்டார். இஸ்ரயேல் ஜனங்கள் இவருக்குப்பதிலாக தாவீதை இராஜாவாக ஏற்படுத்திவிடுவார்களோ என்ற எண்ணம் அவருக்குள் வந்திருக்க வேண்டும். ஆயினும், காரியங்கள் அவ்வாறே நடந்தாலும் சவுல் பொறாமைகொள்ள அவசியம் இல்லாதிருந்தது.

நம்மைக்காட்டிலும் நம்முடைய நண்பர்கள் மேலான காரியங்களைச் செய்ய காணும்பொழுது நாம் சவுலைப்போல, பொறாமைகொள்ளாமல் அவர்களோடு மகிழ்ச்சியாக இருப்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். இப்படியாக அனைவரும் தாவீதை புகழ்ந்துபாடும்பொழுது, சவுலும்கூட சேர்ந்து பாடியிருக்க வேண்டும். ஆனால், பொறாமை உள்ளவர்கள் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதில்லை. அந்த இராட்சதனை தாவீது கொன்று, பெற்ற வெற்றியை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வதற்குப்பதிலாக சவுல் தாவீதின் எதிராளியானார். அவர் வாழ்நாள் முழுவதிலும் தாவீதுக்கு எதிரியாகவே இருந்தார்.

தாவீது மிகவும் ஞானமாக நடந்துகொண்டார் என்று வேதம் கூறுகிறது. எப்படியெனில், இராஜாவாகிய சவுலுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்து அவருக்குப் பிரியமான சகல காரியங்களையும் செய்தார். தாவீது இராஜாவாக தேவனால் தேர்வு செய்யப்பட்ட பின்னும், தேவன் தேர்வு செய்த முதல் இராஜாவுக்குக் கீழ்ப்படிந்தார். தன்னால் முடிந்தவரைக்கும் அரமனையில் தங்கி சவுலை சேவித்தார். ஒருமுறை தாவீது சுரமண்டலம் வாசிக்கையில் இராஜாவாகிய சவுல் கோபங்கொண்டு, தன் கையிலிருக்கும் ஈட்டியை அவர்மேல் பாய்ச்சினார். தாவீது அவ்விடத்தைவிட்டு நகர்ந்ததினால் தாவீது உயிர்தப்பினார்.



இறுதியாக, தாவீதைக் கொல்ல வேண்டும் என்று சவுல் முடிவு செய்தபின் அவர் அரமனையைவிட்டுச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதுவே ஞானமுள்ள காரியம் என்று யோனத்தான் தாவீதுக்கு ஆலோசனைகூறி அவ்விடத்திலிருந்து தாவீதை தப்புவிப்பதற்கு அநேக திட்டங்கள் இட உதவி செய்தார்.

இந்த பிரிவு யோனத்தானுக்கும், தாவீதுக்கும் மிகக் கடினமாக இருந்தது. பிராண சிநேகிதர்களாகிய இவர்கள் தங்களுடைய நன்மையைக் காட்டிலும் எப்பொழுதும் ஒருவருக்கொருவர் நன்மை செய்ய விரும்பினார்கள். ஆகவே, தாவீதை விட்டுப்பிரிவது யோனத்தானுக்கு மிகக் கடினமாக இருந்தபோதிலும், தாவீதின் நன்மைக்காக யோனத்தான் இவரை அனுப்பிவிட்டார்.

ஆயினும், அவர்களுடைய பிரிவு மிக இனிமையாக இருந்தது. அவர்களைக் காத்து வழிநடத்த வேண்டும் என்று தேவனிடத்தில் விண்ணப்பித்தார்கள். உண்மையில் எவ்வளவு அற்புதமான காரியம்! நாம் அனைவருக்கும் தேவனைத்தவிர ஒரு சிறந்த நண்பர் இருக்க முடியுமா! நாம் அவரை நேசித்து, அவர் விரும்பக்கூடிய காரியங்களைச் செய்ய முயற்சித்தால் தேவன் நமக்கு சிநேகிதராய் இருப்பார்.

தாவீதும், யோனத்தானும் பிரிந்துபோனதற்குப் பின் தாவீது தப்பிவிட்டார் என்று சவுல் அறிந்து மிகவும் கோபங்கொண்டார். அவருடைய மீதி வாழ்க்கையை, தாவீதை தேடி கொல்ல வேண்டும் என்று முயற்சித்துக்கொண்டிருந்தார். தேவன் தாவீதோடு இருந்ததினால், தேவன் அவரை பாதுகாத்தார். தாவீது தேவனைபோல் இருக்க முயற்சித்ததினால், அவர் சவுலிடம் அன்பாக இருந்தார். தன்னை கொல்ல வேண்டும் என்று மூர்க்க கோபங்கொண்டு சுற்றிவரும் சவுலை அவர் வெறுக்கவில்லை. ஒருமுறை சவுல் தன்னுடைய படைவீரர்களோடு தாவீதை வேட்டையாடுவதற்கு வந்தபோது, அனைவரும் ஒரு மலையின் பக்கத்தில் அயர்ந்து நித்திரை செய்துக்கொண்டிருந்தார்கள்.

அதன் அருகாமையில் இருக்கும் குகைக்குள் தாவீதும், அவருடைய நண்பர்களும் ஒளிந்துக்கொண்டிருந்தார்கள். சவுல் நித்திரை செய்கையில், தாவீதும் அவருடைய நண்பர்களும் சவுலை கொன்றிருக்க முடியும். தாவீது அப்படி செய்யாமல், முழுமையாக நித்திரை செய்வதற்கு சவுலை அனுமதித்தார். தேவன் தாவீதை அதிகமாக நேசித்ததற்கு இது ஒரு காரணமாக இருக்கிறது.

இறுதியாக சவுல் மரித்தார். இஸ்ரயேலின் இராஜாவாக பொறுப்பேற்பதற்கு தாவீதுக்கு காலம் வந்தது. ஆனாலும், சகல ஜனங்களும் தாவீதை அறியாததினால் சிலர் வேறொரு இராஜா வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். ஆகவே தாவீது, தேவன் தன்னை உண்மையான இராஜா என்று ஜனங்கள் அனைவருக்கும் அறிவிக்கும் காலம்வரையில் பொறுமையோடு காத்திருந்தார். ஆடுகள் தன் மேய்ப்பனை முழுமையாக நம்புவதுபோல, அவருடைய முழுநம்பிக்கையை தேவன் பேரில் வைத்தார். தேவன் தன்னை ஒரு இராஜாவாக தேர்வு செய்தார் என்பதை நன்கு உணர்ந்ததினால் ஏற்றகாலத்தில் தேவன் அவரை இராஜாவாக நியமிப்பார் என்று விசுவாசித்தார். ஆகவே, தேவனுக்காக நீடியபொறுமையோடு காத்திருந்தார். இறுதியாக, சகல எபிரெய ஜனங்களுக்கும் ஒரு அன்பான இராஜாவாக தாவீது ஆட்சி செய்தார்.

**கேள்விகள் :-**

1. தாவீது என்பவர் யார்? இராஜாவாகிய சவுல் மரிப்பதற்கு முன் தீர்க்கதரிசியாகிய சாமுயேல் தாவீதை அபிஷேகிக்கக் காரணம் என்ன?

2. அந்த பெலிஸ்திய இராட்சதனை தாவீது எவ்வாறாகக் கொன்றார்? மேலும், இராஜாவாகிய சவுல் தாவீதின் மேல் பொறாமைகொள்வதற்கு இச்சம்பவம் காரணமாக அமைந்தது ஏன்?

3. இராஜாவாகிய சவுல் மரிப்பதற்கு முன் எவ்வளவு காலங்களாக தாவீதை அழிக்க வகைதேடினார்?



# 24. ஒரு இராஜா மதீயீனன் ஆனார்

**மேய்ப்பனாக** இருந்த தாவீது, இஸ்ரயேலுக்கு இராஜாவான கதையை நான் உங்களுக்குச் சொன்னேன். அப்பொழுது இராஜாவாகிய சவுல் மரித்ததையும் நான் குறிப்பிட்டேன். இப்பொழுது சவுல் மரிப்பதற்கு முன் பெற்ற விநோதமான அனுபவங்களை உங்களுக்குச் சொல்ல வேண்டும் என்று விரும்புகின்றேன். இராஜாவாகிய சவுல், தொடர்ந்து தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்ததினால் பெலிஸ்தியர்கள் இஸ்ரயேல் ஜனங்களை தாக்கும்படி தேவன் அனுமதித்தார். இது, தாவீது கோலியாத்தை கொன்று சில நாட்களுக்குப்பின் நடந்த சம்பவமாகும். சவுல் தன்னால் முடிந்தவரைக்கும் மிகப்பெரிய படையைத் திரட்டினார். தேவன் இஸ்ரயேலர்களுக்கு உதவி செய்திருந்தால் ஒரு சிறிய படையைக்கொண்டு பெலிஸ்தியர்களை விரட்டியிருக்கலாம். ஆனால், தேவன் அவர்களுக்கு உதவி செய்யவில்லை. சவுல் அதற்காக மிகவும் கவலைப்பட்டார். அவர் என்ன செய்திருப்பார் என்று எண்ணுகிறீர்கள்?

ஆம், தேவனுக்குப் பிரியமில்லாத சகல துன்மார்க்கமான காரியங்களிலும் சவுல் மிக மோசமான காரியத்தைச் செய்தார் - மரித்துப்போன சாமுயேல் தீர்க்கதரிசியிடம் ஆலோசனை கேட்க முயற்சித்தார். ஆம், அந்த நல்ல தீர்க்கதரிசி மரித்துப்போனார். அவர் உயிரோடு இருக்கும்போது சவுல் தேவனுக்கு செய்து வந்த பிரியமில்லாத காரியங்களைக்குறித்து தொடர்ந்து எச்சரித்துக்கொண்டிருந்தார். ஆனால், சாமுயேலின் எந்த எச்சரிப்புகளுக்கும் சவுல் செவிகொடுக்கவில்லை.

ஒரு நல்ல தீர்க்கதரிசியாகிய சாமுயேலிடம் சவுல் பேச முயற்சித்ததில் என்ன தவறு என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். ஒரு மனுஷன் மரித்தபின் அவரிடம் ஒருவரும் பேசமுடியாது. ஏனெனில், அவர் மரித்தநிலையில் இருக்கிறார். தேவனுடைய வல்லமை மட்டுமே அவரை எழுப்பமுடியும். ஆனால், மரித்த ஜனங்கள் உண்மையில் மரிக்கவில்லை என்று சாத்தான் ஜனங்களை நம்பவைத்துக்கொண்டிருக்கிறான். இதினிமித்தம் தேவனுடைய பார்வையில் சவுல் செய்தது தவறான காரியமாக இருந்தது.

ஏதேன் தோட்டத்தில் ஆதாம் ஏவாளிடம், "நீங்கள் மரிப்பதில்லை" என்ற பொய்யை சாத்தான் சொல்லியதை நீங்கள் நினைவில் கொண்டிருப்பீர்கள். தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை என்றாலும், அவர்கள் மரிக்கமாட்டார்கள் என்றும் சாத்தான் உறுதி கூறினான். ஆனாலும், ஆதாம் மற்றும் ஏவாள் அவருடைய எல்லா பிள்ளைகளும் மரித்தார்கள். இதினிமித்தம் சாத்தான் பொய்சொன்னான் என்பது உறுதிப்படுகிறது.

ஒருவர் பொய் சொன்னால் அந்த பொய்யை மறைப்பதற்கு பொதுவாக மற்றொரு பொய்யைச் சொல்ல அவசியமாகிறது. அதுபோல, சாத்தானும் அடுக்கடுக்காகப் பொய் சொல்லிக்கொண்டிருக்கிறான். அவன் சொன்ன முதல் பொய்யை மறைப்பதற்கு, பாவத்தினால் மரிக்கும் மனுஷர் உண்மையில் மரிப்பதில்லை என்று பொய் சொன்னான். எவ்வளவு பயங்கரம்? மரித்த ஜனங்கள் மரித்துவிட்டார்கள் என்று நாம் அறிந்திருக்கிறோம். ஆனால், அவர்கள் மரிக்கவில்லை என்று சாத்தான் கூறுகிறான். ஆனாலும், மரித்தவர்களிடம் உயிரோடு இருப்பவர்கள் பேசலாம் என்று ஜனங்களை நம்பவைத்து தான் சொல்லிய பொய்களை உண்மை என்று நிரூபித்து வருகிறான்.

சாத்தான் மற்றும் அவனுடைய சீர் கெட்ட தூதர்கள், ஜனங்களை இவ்வாறு வஞ்சிப்பதில் திறமைசாலிகளாக இருக்கிறார்கள். மரித்தோரோடு இவர்கள் பேசுகிறதாக ஜனங்களை நம்பவைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை அறிந்த தேவன் இவ்வாறு செய்யலாகாது என்று இஸ்ரயேல் ஜனங்களுக்கு அவருடைய பிரமாணத்தில் கட்டளை கொடுத்திருக்கிறார். அந்நாட்களில் இப்படிப்பட்ட துன்மார்க்கமான வேலைகளைச் செய்து ஜனங்களை வஞ்சிப்பதற்கு சாத்தான் சில ஸ்திரீகளைப் பயன்படுத்தினான். இவர்கள் சூனியக்காரிகள் என்று அழைக்கப்பட்டார்கள். சவுல் தன்னுடைய ஆட்சியின் துவக்கக் காலத்தில் தேவனை பிரியப்படுத்தும்படியாக இஸ்ரயேலின் தேவனிடத்தில் ஒருவரும் வஞ்சிக்கப்படாதபடிக்கு எல்லா சூனியக்காரிகளையும் விரட்டிவிட்டார்.

ஆனால், பெலிஸ்தியர்களைக்குறித்த பயம் சவுலைப் பற்றியபோது, தேசத்தில் எந்த உதவியும் கிடைக்காதபட்சத்தில் மரித்துப்போன தனது பழைய சிநேகிதராகிய சாமுயேலைக்குறித்து அவர் சிந்தித்தார். அவரோடு பேசினால் நலமாக இருக்கும் என்று எண்ணினார். அவர் என்ன செய்தார் தெரியுமா? விசுவாசமுள்ள அவருடைய ஆட்கள் சிலரை அனுப்பி அவர் சாமுயேலோடு பேசுவதற்கு உதவி செய்யக்கூடிய சூனியக்காரிகளைத் தேடும்படிச் சொன்னார். எந்தோர் என்ற இடத்திற்கு அருகிலுள்ள ஒரு குகையில் ஒரு சூனியக்காரி ஒளிந்துக்கொண்டிருந்தாள். அவள் எந்தோரின் சூனியக்காரி என்று அழைக்கப்பட்டாள்.

இஸ்ரயேலர்கள் தன்னைக் காணவந்தபோது அவள் மிகவும் பயந்தாள். ஏனெனில், சவுல் சூனியக்காரிகள் அனைவரையும் கொல்லும்படி உத்தரவிட்டிருந்தார். வந்தது சவுல் இராஜா என்று கண்டு பிடித்தபோது மிகவும் பயந்தாள். ஆனால், அந்த துன்மார்க்கமான இராஜா பயப்பட வேண்டாம் என்று அவளுக்கு தைரியம் கூறி அவளை பாதுகாப்பதாக வாக்களித்தார். சாத்தான் மிகவும் வல்லமையுள்ளவன். பூமிக்குள்ளிருந்து தேவர்கள் எழும்பி வருவதுபோல அந்த சூனியக்காரிக்குக் காட்சியளித்தான். அதில், ஒரு மனுஷனைக்குறித்து அவள் விவரிக்கும்போது, அது சாமுயேலாக இருக்க வேண்டும் என்று சவுல் கூறினார்.

சவுல் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராக சாமுயேலுக்காகக் காத்திருந்தார். அங்கு சாமுயேல் பேசுவதாக இருவரும் (சூனியக்காரி, சவுல்) நம்பினார்கள். இப்படிப்பட்ட அருமையான வஞ்சகத்தை சாத்தான் அங்கு நடப்பித்தான். சாமுயேல் உயிரோடு இருந்தபோது, அவர் தேவனுக்கு விசுவாசமுள்ளவராய் இருந்தார். இந்த துன்மார்க்கமான இராஜாவினிடத்தில் தேவன் தொடர்பு கொள்ளமாட்டார் என்பதை அறிந்திருந்தார். ஆகவே, சாமுயேலால் பேச முடிந்திருந்தாலும், அவர் சவுலிடம் பேசியிருந்திருக்கமாட்டார். இது முழுமையாக சாத்தானுடைய தந்திரமாக இருந்தது. உண்மையில் துன்மார்க்கமான அந்த சவுல் இராஜா வஞ்சிக்கப்பட்டார். அவர் சாமுயேலோடு பேசினதாக எண்ணினார். ஆனால், சாமுயேல் ஒருவரிடமும் பேசமுடியாதபடி மரித்திருந்தார்.

சாத்தான் ஜனங்களை எப்பொழுதும் பயமுறுத்த விரும்புவான். அவன் சாமுயேலைப்போல் பேசி, இஸ்ரயேலின் சேனைகள் பெலிஸ்தியர்களால் தோற்கடிக்கப்படும் என்றும், மறுநாள் சவுல், சாமுயேலோடு இருப்பார் என்றும் அவன் அந்த சூனியக்காரியின் மூலம் கூறினான். சவுல் மறுநாள் மரிக்கப்போவதை நன்கு அறிந்துகொண்டார். அவரை இன்னும் அதிகமாக பயம் பிடித்திருக்க வேண்டும்.

சில நாட்களுக்குப் பின், பெலிஸ்தர்களை இஸ்ரயேலர்கள் தாக்கினபோது, சவுல், புறஜாதியாரின் கையில் மரிப்பதை விரும்பாமல், தான் காயப்பட்டிருந்ததினால் தன்னைத்தான் மாய்த்துக்கொண்டார். ஒரு நல்ல இராஜாவாக தன்னுடைய வாழ்க்கையைத் துவங்கின மனுஷன், தேவனுக்குக் கீழ்ப்படியாததினால் இப்படிப்பட்ட ஒரு முடிவை சந்திக்க வேண்டியதாயிருந்தது. இது ஒரு பரிதாபமான கதை அல்லவா? நாம் சவுல் இராஜாவைபோல இருக்க முயற்சிக்க வேண்டாம்.

## கேள்விகள் :-

1. எந்தோரின் சூனியக்காரியாக இருந்தது யார்? அவளை சந்திப்பது இராஜாவாகிய சவுலுக்கு தவறான காரியமாக இருந்தது ஏன்?

2. மரித்துப்போன சவுல், சாமுயேலிடம் இராஜாவாகிய சவுல், உண்மையில் பேசமுடியாமல்போன காரணம் என்ன?

3. இராஜாவாகிய சவுல் எவ்வாறு மரித்தார்?

# 25. ஞானமுள்ள மனுஷன் மற்றும் ஒரு இராஜா



இஸ்ரயேல் ஜனங்களை ஆட்சி செய்த மற்றொரு இராஜாவைக் குறித்து இப்பொழுது நான் சொல்ல விரும்புகிறேன் - தேவனால் இந்த இராஜா ஞானத்தைப் பெற்றவர்.

அவர் இராஜாவானபோது, ஒரு சொப்பனங்கண்டார். அந்த சொப்பனத்தில், அந்த இராஜா விரும்பியதைக் கேட்கும்படி தேவன் சொன்னார். இப்படிப்பட்ட வாய்ப்புகளை நீங்கள் பெற்றால் என்ன கேட்பீர்கள்?

அந்த இராஜா அதிகமான ஐசுவரியத்தையும், தனக்குரிய மிகப்பெரிய சேனைகளையும் கேட்டிருக்கலாம். இதைக்குறித்து அவர் யோசித்த பின், ஒரு முடிவுக்கு வந்தார். எல்லாவற்றுக்கும்மேலாக அவர் ஞானத்தை விரும்பியதால், அவர் தேவனிடம் ஞானத்தைக் கேட்டார். தேவனுடைய ஜனங்களை சரியானமுறையில் ஆட்சி செய்வதற்கு போதிய ஞானம் தனக்கு வேண்டும் என்பதை உணர்ந்தார். இதையறிந்த தேவன் மிக மகிழ்ச்சியடைந்தார். ஆகவே, இதுவரைக்கும் இஸ்ரயேலர்களை ஆட்சி செய்த இராஜாக்களைக்காட்டிலும் இவரை தேவன் சிறந்த ஞானியாக்கினார்.

தேவன், இப்படிப்பட்ட ஞானமுள்ள இராஜாவாக மாற்றினவருடைய பெயரை இன்னும் உங்களுக்கு சொல்லவில்லை. ஆம், அவரின் பெயர் சாலொமோன். மேய்ப்பனாக இருந்த இஸ்ரயேலின் இராஜாவானவரின் குமாரனாக இருந்தார். தாவீது இஸ்ரயேலை ஆட்சிசெய்த நாற்பது வருடங்களும் அதிகமதிகமான பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியதாயிருந்தது. எப்பொழுதும் அவர்களுடைய எதிராளிகள் தேசத்தை சூழ்ந்திருந்தார்கள். ஆகவே, தாவீதின் காலம் ஒரு புயல் வீசும் சூழ்நிலையில் காணப்பட்டது. ஆனால், சாலொமோன் இராஜாவானபோது, அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கவில்லை.

தாவீது வயது சென்றபோது, அவர் மரிப்பதை முன்னதாகவே அறிந்து தன்னுடைய குமாரனாகிய சாலொமோனுக்கு அவர் சில கட்டளைகளைக் கொடுத்தார். தாவீது எந்தவிதத்திலும் பொறாமைகொள்ளவில்லை. அவர் இனி இஸ்ரயேலை ஆட்சி செய்ய முடியாது என்பதை அறிந்து, இஸ்ரயேலை பராமரிப்பதற்கு ஒரு இராஜா இருக்க வேண்டும் என்று விரும்பினார். ஆகவே, தன்னுடைய இடத்தில் சாலொமோனை இராஜாவாக நியமித்தார். இப்படியாக, சாலொமோன் மிக எளிமையான வழியில் இராஜாவானார். சாலொமோன் இராஜாவானபோது, இஸ்ரயேலுக்கு எந்தவிதமான எதிரிகளும் போர் தொடுக்கவில்லை. இப்படியாக, சாலொமோன் சமாதானத்தின் இராஜாவாகவும், தாவீது போர்களின் இராஜாவாகவும் இருந்தனர்.

இராஜாவாகிய சாலொமோன் ஐசுவரியங்களையும், மற்ற காரியங்களையும் தேவனிடத்தில் விண்ணப்பிக்காமல் ஞானத்தை தரும்படி கேட்ட காரியம் தேவனுக்குப் பிரியமாக இருந்தது. ஆகவே, சாலொமோன் கேட்காத ஐசுவரியத்தையும், மற்ற காரியங்களையும் தேவன்

அவருக்குக் கொடுத்தார். உண்மையில் தேவனிடத்தில் ஞானத்துக்காக விண்ணப்பிக்கக்கூடிய அனைவரையும் அவர் ஞானியாக்குவதில்லை. இஸ்ரயேலின்மேல் ஞானமாக ஆட்சிசெய்வதற்கு உதவியாக விசேஷித்த கிருபைகளை சாலொமோனுக்கு அளித்தார். குமாரனாகிய சாலொமோனை தேவன் ஆசீர்வதிக்க வேண்டும் என்பதே தாவீதின் மரண படுக்கையின் விருப்பமாயிருந்தது. அப்பொழுது தேவனுக்கு மகிமை செலுத்த வேண்டும் என்பதே சாலொமோனின் முதல் எண்ணமாக இருந்ததினால் அவர் தேவனுக்கு பலி செலுத்தினார். அப்பொழுது தேவன் தாம் விரும்பிய காரியத்தைக் கேட்கும்படி சாலொமோனிடம் கூறினார்.

ஆம், தேவன் சாலொமோனை ஒரு ஐசுவரியமுள்ள ஞானியாக மாற்றினார். ஒரு ஆலயத்தைக் கட்டும்படி தேவன் அவருக்கு உதவி செய்தார். அந்த ஆலயம், நாம் பார்த்த ஆசரிப்புக்கூடாரத்துக்குப்பதிலாக கட்டப்பட்டது. ஆசரிப்புக்கூடாரம், தேவனுடைய வீடாய் இருந்தது! இந்த ஆசரிப்புக்கூடாரத்தில் தேவன் ஆசாரியர்கள் மூலமாக ஜனங்களை ஆசீர்வதித்தார். ஆனால், இந்த ஆசரிப்புக்கூடாரம் எங்கு வேண்டுமானாலும் ஸ்தாபிக்கக்கூடிய தற்காலிகமான கூடாரம் என்பதை நினைவில்கொண்டிருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். அவர்கள் ஒவ்வொரு இடமாகச் செல்லும்போது, அதைக்குறித்து மீண்டும் ஸ்தாபிக்கும்படியாக வடிவமைக்கப்பட்டது. ஆசரிப்புக்கூடாரம் முதலில் கட்டப்படும்போது, வனாந்தரத்தில் இருந்தது. அவர்களுடைய பயணத்தில் அந்த ஆசரிப்புக்கூடாரம் எடுத்துச் செல்லப்பட்டது.

இஸ்ரயேலர்கள் இனி வனாந்தரத்தில் அலையாமல் நீண்ட காலத்திற்கு முன் தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் குடியிருந்தார்கள். ஆனால், அவர்கள் இன்னும் ஆசரிப்புக்கூடாரத்தைப் பயன்படுத்திக்கொண்டிருந்தார்கள். தற்காலிகமான தேவனுடைய வீடாகிய ஆசரிப்புக்கூடாரத்துக்குப்பதிலாக ஒரு நிரந்தரமான வீட்டை தேவனுக்குக் கட்ட வேண்டும் என்று தாவீது முடிவு செய்தார். இதைக்குறித்து தேவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். ஆனாலும், தேவன் அந்த சிறிய வீட்டைக் கட்டுவதற்கு தாவீதை அனுமதிக்கவில்லை. ஆகவே, தாவீது அந்த ஆலயத்துக்குத் தேவையான பொருட்களைச் சேர்த்து வைத்தார். சாலொமோன் இராஜாவாக ஆட்சி புரியும்வரைக்கும் இந்த வீட்டைக் கட்டுவதற்கு சார்ந்திருக்க வேண்டும் என்று தேவன் கூறினார்.

இப்படியாக, ஆலயம் என்றழைக்கப்பட்ட அந்த புதிய வீடு கட்டி முடிக்கப்பட்டது. ஆனால், ஆசரிப்புக்கூடாரத்தைப்போல இந்த கட்டிடத்தை அந்த ஜனங்களால் இடமாற்றம் செய்யமுடியவில்லை. இப்பொழுது இது தேவனுடைய வீடாயிற்று. ஆசரிப்புக்கூடாரம் பயன்படுத்தப்பட்டதுபோலவே ஜனங்கள் இதையும் பயன்படுத்தினார்கள். ஆசரிப்புக்கூடாரம் தற்காலிகமான கூடாரம்போலவும், ஆலயம் நிரந்தரமான ஒரு வீட்டைப்போலவும் இருந்தது.

மீன் பிடிப்பதற்காக சில நாட்கள் நாம் வீட்டைவிட்டு போகும்போது, தங்குவதற்கு ஒரு கூடாரத்தை எடுத்து செல்வோம் அல்லவா? ஏனெனில், நாம் இரவு நேரங்களில் உறங்குவதற்கு நமக்கு கூரை அவசியப்படுகிறது. ஆனால், நாம் திரும்ப வீட்டிற்கு வந்தபின் அந்த கூடாரங்களில் வசிப்பதில்லை.

அதுபோல், தேவனுடைய வீடும் இருந்தது. அவர்கள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தபோது, ஆசரிப்புக்கூடாரம் போதுமானதாயிருந்தது. ஆனால், அவர்கள் சொந்த தேசத்திற்கு வந்தபோது, தேவனுக்கு ஒரு நிரந்தரமான வீட்டைக் கட்ட வேண்டும் என்று தாவீதும், சாலொமோனும் எண்ணினார்கள். அவர் கட்டின வீடு எவ்வளவு அற்புதமாக இருந்தது தெரியுமா! வேதாகமத்தில் இதைக்குறித்து நீங்கள் வாசிக்கும்பொழுது, இந்த ஆலயத்தைக் கட்டுவதற்குரிய இவ்வளவு பொன்னை இவர்கள் எங்கிருந்து சேகரித்தார் என்று ஆச்சரியப்படுவீர்கள்.

முதலில், அதன் சுவர்கள் கற்களினால் கட்டப்பட்டது. அடுத்து, அந்த ஆலயத்தின் உட்புறத்தில் காணப்படும் தரைகள், உத்திரங்கள், மேற்கூரை அனைத்தும் கேதார் பலகைகளினால் மூடப்பட்டிருந்தது. அந்த கேதார் பலகைகளும் பொன்னினால் மூடப்பட்டிருந்தது. அந்த வீட்டிற்குள் நுழைந்தபோது, சகலமும் பொன்னினால் செய்யப்பட்டதுபோல மின்னியது. உண்மையில் இது எவ்வளவு அழகாக இருந்திருக்கும். மேலும், இந்த ஆலயத்தைக் கட்டுவதற்கு ஏழு வருஷங்கள் ஆனது. இதை கற்பனை செய்து பார்க்க முடிகிறதா?

இது தேவனுடைய வீடாயிருந்தது. சாலொமோன் தேவனை அதிகமாக நேசித்தார். ஆகவே, மிக உச்சிதமான பொருட்களைக்கொண்டு இந்த ஆலயத்தைக் கட்டினார். தேவனை பொறுத்தவரையில் நாமும் இப்படியாகவே எண்ண வேண்டும். தேவனுக்காக நாம் என்ன செய்தாலும் நம்மால் முடிந்த சிறப்பான காரியங்களை மட்டுமே செய்ய முடியும் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

அந்த ஆலயம் கட்டி தீர்ந்த பின் முதலில் அதற்குள் ஆசாரியர்கள் நுழைந்து தேவனுக்குப் பணி செய்தார்கள். திடீரென்று அந்த ஆலயம் புகையினால் நிறைந்தது. தீ பிடித்திருக்கும் என்று நீங்கள் எண்ணலாம். ஆனால், தேவன் அந்த ஆலயத்தைப் புகையினால் நிரப்பினார். இந்த ஆலயம் கட்டப்பட்டதினிமித்தம் தேவன் தம்முடைய மகிழ்ச்சியை எப்பொழுதும் இப்படியாகவே வெளிப்படுத்துவார் என்பதை ஆசாரியர்கள் மற்றும் சாலொமோன் மற்றும் சகல இஸ்ரயேலர்களுக்கும் கூறினார். அந்த புகை, தேவனுடைய மகிமை என்று வேதாகமம் கூறுகிறது. தேவன் அவருடைய மகிமையை வெளிப்படுத்தும்பொழுது அவர் மகிழ்ச்சியாயிருப்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

அதற்குப் பின் ஒரு நீண்ட ஜெபத்தை சாலொமோன் தேவனிடத்தில் ஏறெடுத்தார். அந்த ஜெபத்தில், பல அற்புதமான காரியங்களைக் கூறினார். அதில் தேவன் வசிப்பதற்கு உண்மையாக இந்த வீடு அவசியமில்லை என்பதையும் கூறினார். காணக்கூடாத பரலோகங்களில் தேவன் வாசம் செய்வதற்கு இடம்போதாது என்று கூறினார். இப்படியிருக்க பல மில்லியன்கணக்கான பெரும்பாலான பொன்னினால் ஆலயத்தைக் கட்டினாலும், அதில் தேவன் வாசம்செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது என்று கூறினார். ஆம், சாலொமோன் மிகச் சரியாகக் கூறினார்!

தேவனுக்கு இப்படிப்பட்ட ஒரு ஆலயம் தேவையில்லை. ஆனால், தேவனை தொழுதுகொள்ளுவதற்கு இவர்களுக்கு ஆலயம் தேவைப்பட்டது. தேவனுடைய ஆசீர்வாதம் மிக அவசியமாகத் தேவைப்பட்டது. ஆசரிப்புக்கூடாரம் மற்றும் இந்த ஆலயத்தின்வழியாக தேவன் இவர்களை ஆசீர்வதித்தார். தேவன் ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டும்படி மோசேயிடம் கூறினார். இப்பொழுது இந்த நிரந்தரமான ஆலயத்தைக் கட்டினதை நினைத்து மகிழ்ச்சியடைந்தார். ஏனெனில், கற்களினாலும், பொன்னினாலும், மரத்தினாலும் கட்டப்பட்ட ஆலயத்தின்வழியாக இஸ்ரயேல் ஜனங்களை ஆசீர்வதித்ததுபோல, தேவன் இந்த முழு உலகத்தையும் மனுஷரால் கட்டப்பட்ட இந்த ஆலயத்தின்வழியாக ஆசீர்வதிக்கப்போகிறார் என்பதை மிக அருமையாக இதன்வழியாக வெளிப்படுத்தினார்.

இதைக்குறித்து நாம் மற்ற கதையில் இன்னும் விளக்கங்களைச் சொல்லுவேன். இப்பொழுது - சாலொமோன் தேவனுக்காக மிக அருமையான ஆலயம் கட்டினார் என்றும், இன்னும் ஒரு சிறப்பான ஆலயம் கட்டப்படுவதற்கு இது ஒரு அடையாளம் என்பதையும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். ஏனெனில், இனி கட்டப்போகும் ஆலயத்தின்வழியாக இந்த பூமியிலுள்ள ஒவ்வொருவரும் நன்மையைப் பெறுவார்கள்.

சாலொமோன் உண்மையில் ஞானமுள்ளவராகவும், ஐசுவரியமுள்ளவராகவும் இருந்தார். அவர் இராஜாவாக இருந்தபோது, இஸ்ரயேல் தேசம் மிக சுபிட்சமாக இருந்தது. மத்திய தரைகடல் மற்றும் சிவந்த சமுத்திரத்தின்மேல் கப்பற்படைகள் பிரயாணிப்பதற்கு கப்பல்களைக் கட்டினார். வணிகத்திற்குரிய கப்பல்களும் இருந்தது. அதன்வழியாக ஓப்பீரின் தங்கத்தையும், இன்னும் தங்கள் தேசத்திற்குத் தேவையான சகல பொருள்களையும் தூர தேசத்திலிருந்து வருவித்தார்.

மற்றொரு தூர தேசத்திலிருந்து, பிரபலமான சேபாவின் இராணி, சாலொமோனின் ஐசுவரியங்களைக்குறித்தும் மிகுந்த ஞானத்தைக்குறித்தும் கேள்விப்பட்டாள். ஆனால், இவைகள் உண்மையாக இருக்க வாய்ப்பில்லையோ என்று தனக்குள் எண்ணினாள். ஆகவே, அதைக் கண்டுபிடிக்கும்படியாக நேரில்சென்று சாலொமோனைப் பார்க்க முடிவு செய்தாள். இப்படிதான் சிலர் வேதாகமத்தைக்குறித்து எண்ணுகிறார்கள். சகல அற்புதமான காரியங்கள் உண்மை என்பதை நம்ப மறுக்கிறார்கள். ஆனால், வேதாகமத்தில் சொல்லப்பட்ட அனைத்தும் உண்மை என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

சாலொமோனைக்காட்டிலும் மிக அற்புதமான இராஜாவைக்குறித்து வேதாகமம் கூறுகிறது. அவரே இராஜாவாகிய இயேசு. சாலொமோனைக்காட்டிலும் ஞானமுள்ளவர், சாலொமோனைக்காட்டிலும் ஐசுவரியமுள்ளவர், சாலொமோனைக்காட்டிலும் வல்லமையுள்ளவர். சாலொமோனைப்போலவே அவரைக்காட்டிலும் மேலானநிலையில் இயேசு சமாதானத்தின் இராஜாவாக இருப்பார்.

மேலும், என்ன அற்புதமான காரியம்? நீங்கள் அனைவரும் இராஜாவாக இயேசுவோடு இருப்பீர்கள். இராஜாவாகிய சாலொமோனைக்குறித்து வாசிப்பதில் எவ்வளவு ஆர்வமூட்டும் காரியங்கள் இருக்கிறது. அதைக்காட்டிலும் மேலானநிலையில் இருக்கும் இராஜாவாகிய இயேசுவிடம் எவ்வளவு நன்மையான காரியங்களை உலக ஜனங்கள் அனுபவிப்பார்கள்! இவைகளை வேதாகமம் கூறுகிறது. வேதாகமம் உண்மை என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

**கேள்விகள் :-**

1. தாவீதின் மரணத்திற்குபின் இஸ்ரயேலின் இராஜாவாக நியமிக்கப்பட்டவர் யார்? அவர் மிகுந்த ஞானியாக இருந்ததின் காரணம் என்ன?

2. சாலொமோன் கட்டின ஆலயம் என்பது என்ன? அது தேவனுடைய வீடு என்று ஏன் அழைக்கப்பட்டது?

3. சாலொமோனைக்காட்டிலும் ஞானத்திலும், ஐசுவரியத்திலும் மேன்மையான இராஜாவைக்குறித்து நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?



## 26. பதிலளிக்கப்பட்ட ஒரு தீர்க்கதரிசியின் ஜெபங்கள்

**எலியா** என்ற பெயருள்ள ஒரு அற்புதமான மனுஷனைக்குறித்த கதையை நாம் இப்பொழுது பார்க்கலாம். எலியா என்ற மனுஷன், இஸ்ரயேலில் தேவனுடைய தீர்க்கதரிசியாகப் பணிபுரிந்தவர். தேவனுடைய தீர்க்கதரிசிகள் அனைவரும் அவருடைய விசுவாசமான ஊழியக்காரர்களாக இருந்தார்கள். எலியா தேவனுடன் மிக நெருக்கமாக வாழ்ந்தவர். தேவன் அவருடைய ஜெபங்களுக்கு செவிகொடுத்து, அவருக்குப் பதிலளித்தார். தேவனுக்குப் பிரியமுள்ள காரியங்களை மட்டுமே எலியா விண்ணப்பித்ததினால் தேவன் எலியாவின் ஜெபங்களுக்குப் பதிலளித்தார்.

இஸ்ரயேல் ஜனங்களை ஒரு துன்மார்க்கமான இராஜா ஆட்சி புரிந்த காலத்தில், எலியா வாழ்ந்துவந்தார். அந்தக் காலம் தேவனுடைய தீர்க்கதரிசியாகிய எலியாவுக்கு ஒரு கடுமையான நாட்களாக இருந்தது. அந்த இராஜா தவறான வழியில் சென்றுக்கொண்டிருந்தார் என்பதை இந்த தீர்க்கதரிசி அவருக்கு அறிவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மேலும், சரியான வழியில் செல்லுவதற்கேற்ப ஆலோசனைகளையும் கூறவேண்டியதாய் இருந்தது. ஆனால், இந்த காரியத்தை இராஜா எதிர்த்தார்.

எலியா தேவனின் தீர்க்கதரிசியானபோது, இனி தேசத்தின்மீது ஒரு நீண்ட காலம் மழை பெய்யாது என்று தேவன் அறிவித்த காரியங்களை இராஜாவினிடம் கூறினார். ஆகாப் இராஜா மிகவும் துன்மார்க்கமான காரியங்களைச் செய்ததே இதற்கு முக்கிய காரணமாக இருந்தது. அவன் தன்னுடைய துன்மார்க்கமான மனைவியின் ஆலோசனையைப் பின்பற்றி, பொய் தெய்வமாகிய பாகாலின் உருவச் சிலைகளை ஸ்தாபித்து, அதை இஸ்ரயேல் ஜனங்கள் வழிபடுவதற்கு அனுமதித்தான். இது தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு முற்றிலும் முரண்பாடாய் இருந்தது! தொழுதுகொள்ள வேண்டிய உண்மையான தேவன் ஒருவர் மட்டுமே இருக்கும்பட்சத்தில் மற்ற தெய்வங்களை வழிபடுவதற்கு இராஜா அனுமதித்த காரணங்கள் மிக தவறாக இருந்தது.

ஆகவே, அந்த இராஜாவை எச்சரிக்க தேவன் எலியாவை அனுப்பினார். தீர்க்கதரிசியானவர் சொல்லும்வரை மழை பெய்யாது என்று சொல்லும்படி கட்டளையிட்டார். இப்படிப்பட்ட சூழ்நிலையின் மத்தியில் ஆகாப் இராஜா எந்தளவுக்கு கோபங்கொண்டிருப்பார் என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாம். இராஜா தன்னை கொன்றுவிடுவார்

என்றெண்ணி, இப்படிப்பட்ட ஒரு நல்ல தீர்க்கதரிசி அவ்விடம்விட்டு ஓடி ஒளித்துக்கொள்ள வேண்டியதாய் இருந்தது. ஆயினும், தேவன் அவரைப் பாதுகாத்தார்.

தேவன் விரும்பும் காரியங்களைச் செய்யக்கூடிய ஒவ்வொருவரையும் தேவன் எப்பொழுதும் பாதுகாக்கக்கூடியவராய் இருக்கிறார்!

தேவன் எலியாவை எவ்வாறு பராமரித்தார்? ஒரு நீரூற்றண்டையில் உள்ள அமைதியான இடத்திற்கு எலியா அனுப்பப்பட்டதன் காரணம் என்ன? அந்த நீரோடை கேரீத் என்று அழைக்கப்பட்டது. ஒருவேளை எலியா ஒளித்துக்கொள்வதற்கு அவ்விடம் மிகக் குளிர்ச்சியாக இருந்திருக்க வேண்டும். அங்கு அவர் தங்கியபோது வழக்கத்திற்கு மாறான வழியில் தேவன் அவரைப் பராமரித்தார். அவர் இரவும் பகலும் காகங்களைக்கொண்டு எலியாவைப் போஷித்தார். ஆம், இந்த காகங்கள் காலையும் மாலையும் அப்பம் மற்றும் இறைச்சியை அந்த தீர்க்கதரிசிக்கு நித்தமும் இரண்டு முறை கொண்டுவந்தது. சந்தேகத்திற்கிடமின்றி அந்த நீரோடையில் இருக்கும் தண்ணீரை அவர் பருகியிருக்க வேண்டும். காகங்கள், மிகவும் கருப்பு நிறத்தில் காணப்படக்கூடிய பறவைகள். ஆனாலும், காகங்கள் மிக நல்ல பறவைகள் என்று நாம் எண்ணுவதில்லை. ஆனால், நாம் பசியாயிருக்கும்போது அவைகள் நமக்கு உணவு கொண்டுவரும் பட்சத்தில் நாம் நிச்சயமாக அப்படி நினைப்போமா?

உண்மையில் காகங்களானாலும் சரி, மற்ற எந்தப் பறவைகளானாலும் சரி, குழந்தைகளுக்கோ ஆண்களுக்கோ, பெண்களுக்கோ, அவைகள் போஜனம் கொண்டுவர இயலாது. ஆனால், தேவன் கட்டளையிட்டதினால் காகங்கள் எலியாவைப் போஷித்தது. எலியாவிற்கு போஜனம் கொடுக்கும்படி தேவன் காகங்களுக்கு எவ்வாறு கட்டளையிட்டார் என்பதை அறியோம். நாம் புரிந்துகொள்ளாத பல காரியங்களை தேவன் செய்துகொண்டிருக்கிறார். நாம் பார்க்கக்கூடிய அழகான மலர்கள் எவ்வாறு வளர்கிறது என்பதையும் நாம் அறியோம். ஆனால், தேவன் இவைகளைச் செய்கிறவர் என்பதை ருசித்திருக்கிறோம். அதுபோல தேவன் காகங்களின் வழியாகப் போஷித்தார் என்று வேதாகமம் கூறியுள்ளது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இப்படியாக, அந்த தீர்க்கதரிசி அந்த நீரோடை அருகில் குடியிருந்தவரைக்கும், காகங்கள் நித்தம் அவருக்குப் போஜனம் கொண்டுவந்தது.

ஆனால், அதற்குப் பின்பு என்ன நடந்திருக்கும்? பறந்துபோன காகங்கள் மீண்டும் வரவில்லை என்று நீங்கள் எண்ணலாம். அப்படியில்லை, அந்த நீரோடையிலிருந்த தண்ணீர் வற்றிப்போயிற்று. ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது. ஏனெனில், தண்ணீர் இல்லாமல் ஒருவரும் ஜீவிக்க முடியாது. ஆகவே, நிச்சயமாக அந்த தீர்க்கதரிசிக்கு தண்ணீர் தேவைப்பட்டிருக்கும்.

வெயிலின் உஷ்ணத்தினால் அந்த நீரோடை வற்றிப்போனது. எலியா துன்மார்க்கமான அந்த ஆகாப் இராஜாவிடம் கூறியதுபோல, நீண்ட காலமாக மழை பெய்யவில்லை. மழை பெய்துகொண்டிருந்தால்மட்டுமே நீரோடைகளில் தண்ணீர் தேங்கிக்கொண்டிருக்கும். ஆனால், நீண்ட காலமாக மழை பெய்யாததின் காரணத்தினால் அந்த நீரோடையிலுள்ள தண்ணீரின் அளவு குறையத்துவங்கி, அந்த நீரோடை முற்றிலுமாகக் காய்ந்து போய்விட்டது. இப்படியாக, எலியாவுக்குத் தண்ணீர் கொடுத்துக்கொண்டிருந்த நீரோடை முழுமையாக வற்றிவிட்டது.

அதற்குப் பின் எலியா என்ன செய்தார்?

அந்த தீர்க்கதரிசியை வேறொரு இடத்திற்குச் செல்லும்படி தேவன் கூறினார். அந்த இடத்திற்கு சாறிபாத் என்று பெயர். சாறிபாத் என்ற ஊரில் ஒரு விதவை அவரை பராமரிப்பாள் என்பதை தேவன் அந்த தீர்க்கதரிசியிடம் கூறினார். தேவன் அனுப்பிய இடத்திற்கு எலியா சென்றார். அங்கு அந்த விதவையை அவர் கண்டுபிடித்தார். அந்த விதவை வாழ்ந்த ஊரில் பஞ்சம் ஏற்பட்டது. அவளிடமிருந்த எண்ணெய் தீர்ந்துகொண்டிருந்தது. ஒரு அப்பம் சுடுமளவுக்கு கொஞ்சம் மாவும், அதைச் சுடுவதற்குத் தேவையான கொஞ்சம் எண்ணெயும் அவள் வைத்திருந்தாள்.

ஆனால், எலியா தேவனுக்குக் கீழ்ப்படியும்வரைக்கும் தேவன் எல்லா விஷயங்களிலும் பராமரித்துக்கொண்டிருந்தார். ஒரு நல்ல மனிதன் செய்யக்கூடிய காரியமாகத் தோன்றாவிட்டாலும் எலியா ஸ்திரீயினிடத்தில் அந்த கடைசி அப்பத்தைச்சுட்டு தனக்குக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். அவர் சுயநலம் உள்ளவராக இக்காரியத்தைச் செய்யவில்லை. அவர் தேவன் மீது முழு நம்பிக்கை வைத்திருந்ததினால் இப்படிச் செய்தார். அதுபோல, தேவன் அவருடைய வாக்குத்தத்தை நிறைவேற்றுவார் என்பதை எலியா முற்றிலுமாக அறிந்திருந்தார்.

எலியா கேட்டபடியே அந்த விதவை செய்தாள். அதற்குப் பின் என்ன நடந்திருக்கும் என்று எண்ணுகிறீர்கள்? அவளிடம் இருந்த எண்ணெய் தீர்ந்து போகவேயில்லை! அவள் எப்பொழுதெல்லாம் அந்த எண்ணெயை பாத்திரத்திலிருந்து வெளியே எடுத்து பயன்படுத்தினாளோ, அது மீண்டும் எண்ணெயால் நிரம்பியிருந்ததைக் கண்டாள். எவ்வளவு அற்புதமான காரியம்! அதுபோல, அவள் அப்பம் சுடுவதற்காக எடுத்த மாவும் குறையவேயில்லை. இப்படியாக, அவருக்குப் பின் நித்தமும் அந்த விதவை மற்றும் தீர்க்கதரிசி தேவனால் போஷிக்கப்பட்டார்கள்.

இப்படியாக, நித்தமும் இவர்களைப் போஷிப்பது தேவனுக்குக் கஷ்டமான காரியமாக இருந்ததா? ஆம், தேவன் அவர்களுக்குமட்டுமல்ல, இந்த முழு உலகத்தையும் அவர் போஷித்துக்கொண்டிருக்கிறார். ஆனால், அதை வேறுவிதத்தில் அவர் நடத்தி வருகிறார். அவர் தானியங்களை விளையச்செய்து, ஒலிவ எண்ணெயைக் கொடுக்கும் மரங்களையும் வளரச்செய்து அப்பத்தையும், எண்ணெயையும் ஜனங்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். தேவனால் நடைபெற்று வருகிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால், அவைகள் எப்படி வளர்ச்சியடைந்துக்கொண்டிருக்கிறது என்பதை நாம் அறியாததுபோல, அங்கு அந்த விதவையின் பானையிலிருந்த மாவும், பாத்திரத்திலிருந்த எண்ணெயும் தீர்ந்து போகாமலிருந்தது எப்படி என்பதையும் குறித்து நாம் அறிந்துகொள்ள முடியவில்லை.

அந்த விதவைக்கு ஒரு அன்பான மகன் இருந்தான். அவன் ஒரு சிறியவனாக இருந்தான். ஒரு நாள் அவன் வியாதிப்பட்டு மரித்துப்போனான். அவன் தாய் மனம் உடைந்தாள். முதலில், இதற்காக எலியாவை பழி கூறினாள். அந்த சிறுவன் வியாதியில் செத்துப்போனது எலியாவுக்கு எந்த சம்பந்தம் இல்லாமல் இருந்தது. ஆனால், அந்த சிறுவன் மரித்தபின் எலியா அவனை அந்த வீட்டின் மேலறைக்கு எடுத்துச்சென்று, அவனை கட்டிலில் கிடத்தி, அவனுடைய கைகளையும் கால்களையும் சூடுபரக்க தேய்த்து, நன்கு அவன் சுவாசிக்கும்படியாக அவனுடைய நாசிக்குள் காற்றைப் புகுத்தி, மீண்டும் ஜீவன் அடையச் செய்தார். இது மிக அற்புதமான காரியமல்லவா? நிச்சயமாக, தேவனே அந்த சிறுவனுக்கு ஜீவனை மீண்டும் கொடுத்தார். எலியா தாமே இக்காரியத்தை தனித்து செய்திருக்க இயலாது.

அந்த சிறுவன் மீண்டும் ஜீவனைப் பெற்றுக்கொண்டதில் அந்த தாய் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்திருக்க வேண்டும் என்று சற்று கற்பனை செய்துபாருங்கள். அந்த சிறுவன்மட்டுமல்ல இந்த உலகத்தில் மரித்துப்போன ஒவ்வொருவரும் மீண்டும் ஜீவன் பெறுவார்கள் என்று வேதாகமம் கூறக்கூடிய அற்புதமான காரிங்களை சற்று சிந்தித்துப் பாருங்கள். அவரவர் உயிர்ப்பிக்கப்படும்போது, அந்தந்த குடும்பங்களோடு அவர்கள் மீண்டும் ஒருமித்துக் கூடிவாழ்வதை சற்று கற்பனை செய்துபாருங்கள். எவ்வளவு சந்தோஷமான காரியம்! தேவ வல்லமை இவையனைத்தையும் செய்யும். தேவன் வாக்குத்தத்தம் செய்த சகல காரியங்களையும் மற்ற எந்த காரியங்களையும் செய்வதற்கு அவர் வல்லமையுடையவர் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆம், தேவனுடைய வாக்குத்தங்கள் அனைத்தும் உண்மையில் நிஜமாகும்! இந்த காரியத்தையே வேதாகமம் உண்மை என்று கூறுகிறது.

மழை பெய்து மூன்று வருடங்கள் ஆயிற்று. ஜனங்கள் அனைவரும் பஞ்சத்தில் வாடினார்கள். அப்பொழுது தேவன் எலியாவை இராஜாவாகிய ஆகாபிடம் தன்னை வெளிப்படுத்தும்படிச் சொன்னார். ஏலியா, இராஜாவுக்கு முன் நின்றபோது, மழைபெய்யாத காரணத்திற்காக தீர்க்கதரிசியை குற்றஞ்சாட்டி அவர்மீது கோபங்கொண்டார். ஆனால், பொய்யான தேவனாகிய பாகால் வழிபாட்டை அறிமுகப்படுத்தின அவருடைய மனைவியின் செயலினிமித்தமே பஞ்சம் ஏற்பட்டது என்பதை எலியா, இராஜாவுக்குத் தெளிவாக விளக்கினார்.

இராஜா மனந்திரும்ப வேண்டும் என்பதை அந்த தீர்க்கதரிசி அறிவித்தார். எலியா சொன்ன எந்த காரியத்தையும் செய்வதற்கு இராஜா மனப்பூர்வமாய் சம்மதிக்கும்படி அவன் மிகவும் வருத்தமடைந்திருந்தான். ஜனங்கள் உபத்திரவப்படுவதற்காக தேவன் மழையை நிறுத்திவைக்காமல் பொய் தேவனாகிய பாகாலை தொழுதுகொள்வதை நிறுத்தும்படியாக இந்த காரியத்தைச் செய்தார்.

இதையும் எலியா அவர்களிடம் கூறினார். அனைத்து இஸ்ரயேல் ஜனங்களும் கர்மேல் என்னும் பர்வதத்திற்குக் கூடிவரும்படி அழைக்கப்பட்டார்கள். பாகாலின் தீர்க்கதரிசிகளும் அந்த மலைக்கு அழைக்கப்பட்டார்கள். அவர்கள் 450 ஆசாரியர்களாக இருந்தார்கள். ஆனால், உண்மையான தேவனைத் தொழுதுகொள்ளக்கூடிய ஒரே தீர்க்கதரிசயாக எலியா அங்கிருந்தார். ஆயிரக்கணக்கான ஜனங்கள் கர்மேல் பர்வதத்திற்கு ஏறிவந்தனர். மலையிலிருந்து பார்க்கும்போது ஆயிரக்கணக்கான ஜனங்கள் மலையின்மேல் ஏறிவருவது எப்படிப்பட்ட காட்சியாக இருந்திருக்கக்கூடும்!

ஒரு நாள் முழுவதும் ஜனங்கள் வந்துகொண்டிருந்தார்கள். எப்படிப்பட்ட ஒரு காட்சி!

இதற்கிடையில், எலியா ஜனங்களுக்கு முன்பாக உண்மையான தேவன் யார் என்பதை நிரூபிப்பதற்கான ஆயத்தவேலையைச் செய்துக்கொண்டிருந்தார். முதலில், பாகாலின் தீர்க்கதரிசிகளை ஒரு பலியை ஆயத்தப்படுத்தி வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவைகளை பட்சிக்கும்படி சொன்னார். அவர்களும் முயற்சித்தார்கள். ஆனால், அவர்கள் ஜெபங்களுக்கு பதில் வரவில்லை. அவர்களால் முடிந்தவரைக்கும் அவர்கள் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது எலியா அவர்களை பரியாசம்பண்ணி, இன்னும் உரத்த சத்தமாய் கூப்பிடுங்கள், உங்கள் தேவன் தூங்கியிருந்தாலும் தூங்கியிருப்பான் அல்லது அலுவலாக வெளியே சென்றிருப்பான் என்று கூறினார். எலியா அந்த சூழ்நிலையில் மகிழ்ச்சியடைந்திருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். நீங்கள்?

இறுதியாக மாலை நேரம் நெருங்கும்போது எல்லா ஜனங்களும் கூடிவந்தார்கள். எலியா உண்மையான தேவன் யாரென்பதைக் காண்பிப்பதற்கு, தான் கட்டிய பலிபீடத்தின் பக்கமாகத் திரும்பி அதன் மீது பலிகளை வைத்தார். அதைச் சுற்றி பள்ளம் வெட்டி, அந்த பள்ளத்தில் தண்ணீர் நிரப்பும்படிச் சொன்னார். அதற்குப் பின், பலிபீடத்தின் மேலுள்ள பலி பொருள்களின் மேலும் தண்ணீர் ஊற்றும்படிச் சொன்னார். எலியாவின் தேவனே உண்மையான ஒரே தேவன் என்பதை இராஜா விசுவாசிக்க வேண்டும் என்பதையே எலியா விரும்பினார். இஸ்ரயேலின் தேவனே உண்மையான ஒரே தேவன் என்று ஜனங்கள் நம்ப வேண்டும் என்றும் விரும்பினார். மேலும், அந்த ஜீவனுள்ள தேவன் மட்டுமே தம்முடைய வல்லமையைக்கொண்டு தம்முடைய ஜனங்களைப் பராமரித்தார் என்பதைக் காண்பிக்க விரும்பினார்.

எல்லாக் காரியங்களையும் ஆயத்தப்படுத்திவிட்டு எலியா தேவனிடத்தில் ஜெபித்து, அவர் செலுத்தின பலியை அங்கீகரிக்கும்படி ஜெபித்தார். அக்கினி வானத்திலிருந்து இறங்கி அந்த பலியை பட்சித்து, தேவன் தம்முடைய பலியை அங்கீகரித்தார் என்பதை ஜனங்களுக்கு முன் நிரூபிக்கும்படி வேண்டிக்கொண்டார்.

தேவனுடைய வல்லமையின் ஆச்சரியமான ஒரு வெளிப்பாடு பின் தொடர்ந்தது. அக்கினி கொழுந்துகள் காணப்பட்டது. அவைகள், வெட்டப்பட்டிருந்த காளையின் மேல்மட்டுமல்ல, அதைச் சுற்றியுள்ள தண்ணீரையும், அந்த பலிபீடத்தின் கற்களையும் அது எரித்துப்போட்டது. இதைக் கண்டு ஜனங்கள் அனைவரும் மகிழ்ச்சியினால் ஆர்ப்பரித்து இஸ்ரயேலின் தேவனே உண்மையான தேவன் என்று கோஷமிட்டார்கள்.

அதற்குப் பின் காரியங்கள் மாறியது. இஸ்ரயேலின் உண்மையான தேவனை வழிபடும் விஷயத்தில், அதாவது, இஸ்ரேயல் ஜனங்களை மேன்மையாக சீர்ப்படுத்துவதற்கு பாகாலின் தீர்க்கதரிசிகள் அனைவரும் அழிக்கப்பட்டார்கள். எலியா ஜெபித்த பின், குறுகிய நேரத்திற்குள், இஸ்ரயேல் தேசத்தில் மழை பெய்தது.

எலியா இன்னும் பல அற்புதமான அனுபவங்களைப் பெற்றிருந்தார். தொடர்ந்து, அவர் தேவனுடைய விசுவாசமுள்ள தீர்க்கதரிசியாக பணியாற்றினார். அவருடைய வாழ்க்கை ஒரு விசித்திரமான முறையில் முடிவுக்கு வந்தது. அவருடைய வேலைகள் அனைத்தையும் அவர் முடித்தபின் யோர்தான் நதியின் அக்கரையில் நின்றார். திடீரென்று ஒரு பலத்த சுழற்காற்று வந்தது. பார்த்துக்கொண்டிருக்கையில் அக்கினி இரதமும், குதிரைகளும் எலியாவை அந்த சுழற்காற்றின் வழியாக இந்த பூமியிலிருந்து எடுத்துக்கொண்டு போனது. அதற்குப்பின் எலியா காணப்படவில்லை.

நிச்சயமாக எலியா மரித்தார். ஆனால், அவருடைய சடலத்தை ஒருவரும் காணவில்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

எலியா பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு உயிரோடு வாழ்ந்துக்கொண்டிருக்கிறார் என்று எண்ணுகிறார்கள். ஆனால், அது உண்மையல்ல. ஏனெனில், பல வருடங்களுக்குப்பின் இயேசுவைத்தவிர ஒருவரும் பரலோகத்திற்குச் செல்லவில்லை என்பதை நாம் தெளிவாக அறிந்திருக்கிறோம். இயேசு சொன்ன சகல காரியங்களும் உண்மையென்று நாம் அறிந்திருக்கிறோம் அல்லவா? எலியா மரித்துவிட்டார் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். மற்ற ஜனங்களைப்போல அவர் மரிக்காமல் ஒரு வித்தியாசமான நிலையில் மரித்தார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அனைவரும் மரிக்க வேண்டும், ஆனால், ஒரேவிதத்தில் மரிக்க மாட்டார்கள். ஒரு காலம் வருகிறது, அப்பொழுது ஒருவரும் மரிக்க வேண்டிய அவசியம் இருக்காது. இதையே வேதாகமம் கூறுகின்றது. மேலும், வேதாகமம் உண்மை என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

## கேள்விகள் :-

1. தீர்க்கதரிசியாகிய எலியாவின் ஜெபங்கள் பதிலளிக்கப்படுகையில் இஸ்ரயேலை ஆட்சி செய்த இராஜாவின் பெயர் என்ன?

2. இஸ்ரயேல் தேசத்தில் நீண்ட காலம் மழை பெய்யாததின் காரணம் என்ன?

3. நீரோடையின் அருகில் தனித்து வாழ்ந்த எலியாவை தேவன் எவ்வாறு போஷித்தார்?

4. கர்மேல் என்று அழைக்கப்பட்ட அந்த பர்வதத்தில் எலியாவின் ஜெபத்திற்கு தேவன் எவ்வாறு பதில் அளித்தார்?

5. எலியா எவ்வாறு மரித்தார்?



## 27. மீண்டும் ஜீவனுக்குக் கொண்டு வரப்பட்ட ஒரு குழந்தை

இ**ஸ்ரயேலின்** தேசத்தில் உள்ள பல சிறிய பட்டணங்களுள் சூனேம் என்ற பட்டணம் இருந்தது. தேவனுடைய ஊழியக்காரர்களில் ஒருவருக்கு மிக அன்பான ஒரு ஸ்திரீ அந்த பட்டணத்தில் வசித்து வந்தாள். அந்த நல்ல ஸ்திரீயின் பெயரை வேதாகமம் குறிப்பிடாமல், பட்டணத்தின் பெயரால் சூனேமியாள் என்று குறிப்பிடுகிறது. தேவனுடைய ஊழியக்காரனாகிய எலிசாவினிடத்தில் அவள் இரக்கமுள்ளவளாய் இருந்தாள். எலிசா, தீர்க்கதரிசியாகிய எலியாவின் ஊழியக்காரராக இருந்தார். எலியா மரித்தபின், தேவன் எலிசாவை அவருடைய இடத்தில் தீர்க்கதரிசியாக நியமித்தார்.

இப்படியாக எலிசாவும், அவருடைய ஊழியக்காரனும், சூனேமியாளின் வீட்டைக் கடந்துச் செல்லும்பொழுதெல்லாம், அவள் அவருக்கு விருந்துகொடுக்க வேண்டி அழைத்தாள். ஒவ்வொரு ஊராகப் பயணிக்கும்போது, இப்படிப்பட்ட ஒரு நல்ல உணவை புசிப்பதற்கு எலிசாவுக்கு நிச்சயமாக மகிழ்ச்சியாக இருந்திருக்க வேண்டும். இவர்களுக்கு உணவு அளிப்பதில், அந்த சூனேமியாள் என்னும் ஸ்திரீ மிக சந்தோஷமாக இருந்தாள். ஆகவே, ஒவ்வொரு முறையும் அவரை அவள் தன்னுடைய வீட்டிற்கு அழைத்து உபசரித்தாள்.

எலிசா தேவனை நேசித்தார், இப்படியாக தாங்கள் நேசித்தவரைப்பற்றி பேசுவது வழக்கம். அதுபோல எலிசா, சூனேமியாள் ஸ்திரீயின் வீட்டில் ஒவ்வொரு முறையும் வரும்போது தேவனைக்குறித்து அந்த ஸ்திரீயிடம் நிச்சயமாகப் பேசியிருக்க வேண்டும். இதினிமித்தம், எலிசா தேவனுடைய ஒரு தீர்க்கதரிசி என்பதை அந்த சூனேமியாள் அறிந்துகொண்டாள். இதைக்குறித்து தன்னுடைய கணவனோடு பேசி, எலிசா தன்னுடைய வீட்டிற்கு எப்பொழுது வந்தாலும் அவர் ஓய்வெடுத்துக்கொள்ளும்படியாக ஒரு அறையை அவருக்கு ஏற்பாடு செய்வது நலமான காரியமாக இருக்கும் என்பதை அவள் கூறினாள். அவள் தேவனை நேசித்ததினால், தேவனுக்கும், ஊழியஞ்செய்யக்கூடிய எலிசாவுக்கும் உதவி செய்யும்படி விரும்பினாள்.

எலிசா இக்காரியத்தை வரவேற்றார். ஒரு நாள் சூனேமியாளின் வீட்டில் அவருக்கென்று ஆயத்தம்பண்ணப்பட்ட அந்த அறையில் அவர் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும்போது, அவளுக்கு ஏதாகிலும் நன்மை செய்து தன்னுடைய நன்றிகளை வெளிப்படுத்த வேண்டுமென்று அவர் யோசித்தார். இதைக்குறித்து அவருடைய ஊழியக்காரனிடம் அவர் பேசினார். அப்பொழுது அந்த ஸ்திரீக்கு பிள்ளைகள் இல்லை என்பதை அந்த ஊழியக்காரன் எலிசாவுக்கு அறிவித்தான். அவள் ஒரு குழந்தைக்குத் தாயாக இருப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைவாள் என்பதை அவர் கூறினார்.

தேவன் பிள்ளையற்ற தாய்மார்களுக்குப் பிள்ளைகளைக் கொடுப்பதற்கு வல்லமையுள்ளவர் என்பதை எலிசா அறிந்திருந்தார். தேவனிடத்தில் இந்த நல்ல பெண்மணிக்காக ஜெபித்தால் அவளுக்கு ஒரு குழந்தையை தேவன் கொடுப்பார் என்பதையும் உணர்ந்திருந்தார். அதற்குப் பின் தேவன் ஒரு குழந்தையைக் கொடுப்பார் என்று எலிசா அந்த ஸ்திரீயிடம் கூறினார். அவளால் அதை நம்பமுடியவில்லை. ஆனாலும், தேவன் அவளுக்கு ஒரு குழந்தையைக் கொடுத்தார். அவள் எவ்வளவு சந்தோஷமாக இருந்திருக்க வேண்டும்! அந்த தீர்க்கதரிசியினிடத்தில் இரக்கமாக நடந்துகொண்டதினால் தேவன் நிச்சயமாக அவளுக்கு ஒரு பரிசளித்தார்.

அந்த குழந்தை சிறுவனாக வளர்ந்தான். அவன் தன் தந்தைக்கு உதவியாக வளர்ச்சியடைந்தபோது, ஒரு கடுமையான வெயில் நாளில் வயலில் அறுவடை வேலை நடந்து கொண்டிருக்கும்பொழுது திடீரென்று தலையில் ஒரு கொடூரமான வேதனை ஏற்பட்டது. அவன் ஐயோ தன் தலை வலிக்கிறது என்று கூறினான். அவனுடைய தந்தை அவனிடத்திற்கு ஓடினார். அதற்குப் பின் அந்த சிறுவன் கீழே விழுந்து மயங்கி சுய நினைவு இழந்தான். அந்த சிறுவனின் தலையில் வெயிலின் உஷ்ணம் தாங்கவில்லை.

அந்த சிறுவனை தூக்கிச் செல்லும்படி அவனுடைய தாய்க்கு ஆள் அனுப்பினான். அந்த சிறுவனுடைய தாய் தன்னுடைய மடியில் கிடத்திக் கொண்டிருந்தாள். ஆனாலும், பலமணி நேரங்களாக அவன் சுயநினைவு அற்றவனாக இருந்து மரித்துப் போனான். ஆம், அருமையான சிறுவன் தன் தாயின் மடியில் மரித்து போனான். எவ்வளவு பரிதாபமான காரியம்? நிச்சயமாக அந்த தாய் மனமுடைந்து போயிருப்பாள். தேவன் அவளுக்கு ஒரு குழந்தையையும் தந்து, அது மரிக்க அனுமதித்தது எவ்வளவு விநோதமாகத் தோன்றுகிறது!

ஆனால், அந்த சூனேமியாள் சரியான ஒரு காரியத்தை ஞானமாகச் செய்தாள். தேவனுடைய மனுஷனாகிய எலிசாவைக்குறித்து அவள் சிந்தித்தாள். எலிசாவினிமித்தம் தேவன் தனக்கு ஒரு குமாரனைக் கொடுத்தார். அதுபோல, எலிசாவின் ஜெபத்தினால் இந்த சிறுவன் மீண்டுமாக தேவனிடத்திலிருந்து ஜீவனைப் பெறுவான் என்பதை அவள் நம்பினாள். இப்படியாக, அவள் எலிசாவுக்கு ஆளனுப்பியிருக்க வேண்டும் என்று நாம் எண்ணலாம்.

ஆனால், அவள் அப்படிச் செய்யவில்லை.

இப்படிப்பட்ட நம்பிக்கைக்குரிய காரியங்களுக்கு ஒருவரையும் தேவனுடைய தீர்க்கதரியினிடத்தில் அனுப்பாமல் தானே விரைந்துச் சென்றாள். அவள் கர்மேல் பர்வதம்வரைக்கும் நடந்துச் செல்ல வேண்டியிருந்தது. ஆனாலும், கர்மேல் பர்வதத்திற்குச் சென்று எலிசாவைக் கண்டு செத்துப்போன குழந்தையைக் காண்பதற்கு தன்னோடு கூடவரும்படியாக வேண்டிக்கொண்டாள்.

மரித்துப்போன குழந்தையின் முகத்தின்மேல் தன்னுடைய கோலை வைக்கும்படி எலிசா தன்னுடைய ஊழியக்காரனை அந்த ஸ்திரீயின் வீட்டுக்கு அனுப்பினார். அந்த ஊழியக்காரன் திரும்பிவந்து, அந்த சிறுவன் - இன்னும் மரித்திருக்கிறான் என்று திரும்பி வந்து கொண்டிருந்த தீர்க்கதரிசியிடம் அறிவித்தான். அந்த தாய் எவ்வளவு மோசமான மனநிலையைப் பெற்றிருக்க வேண்டும்!

ஆனாலும், எலிசா தேவனிடத்தில் மிகுந்த விசுவாசம் வைத்திருந்தார்!

அந்த ஸ்திரீயுடன் வீட்டுக்கு வந்தபோது, மேல் வீட்டறையில் தன்னுடைய படுக்கையின்மேல் கிடத்திவைத்திருந்த அந்த சிறுவனிடம் சென்று, தேவனிடத்தில் உதவி வேண்டி ஜெபித்தார். சற்று நேரத்திற்குப் பின், அந்த சிறுவனின் உடல் சூடேறியது. அவன் ஏழுமுறை தும்மி அந்த படுக்கையிலிருந்து எழுந்து அமர்ந்தான். அதற்குப் பின் எலிசா அந்த ஸ்திரீக்கு ஆளனுப்பி மேல் வீட்டுக்குத் தன்னுடைய குமாரனைப் பார்க்கும்படி சொன்னார். அவள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்திருக்கக்கூடும்!

இது தேவனுடைய வல்லமை, அந்த சிறுவனை மீண்டும் ஜீவனுக்குக்கொண்டு வந்தது ஒரு அற்புதமான கதையாக உள்ளது. ஆனால், இது ஒரு கதையைக்காட்டிலும் மேலான காரியம். நிச்சயமாக இது உண்மையான கதையாகும். ஏனெனில், மரித்துப்போன அனைத்து ஜனங்களையும் தேவன் தம்முடைய வல்லைமையைப் பயன்படுத்தி மீண்டும் உயிரோடு கொண்டுவருவார் என்ற சிறந்த கதை ஒன்று உண்டு. தேவனுடைய உதவியின்றி எலிசா அந்த சிறுவனை மீண்டும் உயிர்ப்பிக்க இயலவில்லை. ஆனால், தேவனுடைய உதவியோடு அற்புதமான காரியங்களை நடப்பிக்கலாம்.

அடுத்தமுறை ஒருவர் மரித்துபோனார் என்று நீங்கள் கேள்விப்படும்பொழுது, அந்த சிறுவனின் கதையை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். தேவனுடைய வல்லமையைக்கொண்டு அந்த சிறுவன் உயிர்ப்பிக்கப்பட்டான் என்பதை நினைவில்கொள்ளுங்கள். அனைவரையும் உயிர்ப்பிக்க வேண்டும் என்ற தேவனுடைய மிக நிச்சயமான வாக்குத்ததத்ததை நாம் அனைவரும் எப்பொழுதும் நினைவில்கொள்ள வேண்டும். ஆம், மரித்த அனைவரும் மீண்டும் உயிரோடு எழுப்பப்படுவார்கள்.

**கேள்விகள் :-**

1. எலிசா என்பவர் யார்? அவர் சூனேமியா பட்டணத்தில் வாழ்ந்த குடும்பத்தோடு எவ்வாறு நட்புறவு கொண்டார்?

2. சூனேமியாளின் குமாரன் எவ்வாறு மரித்தான்? அவன் எவ்வாறு மீண்டும் ஜீவனைப் பெற்றான்?

3. வேதாகமத்தில் தேவன் சொல்லிய கதைகளில் சிறந்த கதை எது?

# 28. புல்லை புசித்த ஒரு இராஜா



**இஸ்ரயேல்** ஜனங்கள் மீது, இராஜாவாகிய சவுல், முதல் இராஜாவாக இருந்தார். நீங்கள் அறிந்திருக்கிறபடி மற்ற அநேக இராஜாக்களும் இருந்தார்கள். அதில், தாவீது என்ற ஒரு நல்ல இராஜாவும் இருந்தார். அவருக்குப் பின் சாலொமோன் என்ற இராஜா இஸ்ரயேலை ஆட்சி செய்தார். ஆகாப் என்ற மற்றொரு இராஜாவும் இருந்தார். ஆனால், பொய்யான தேவர்களை ஆராதிப்பவருக்கு ஜனங்களை அவன் அனுமதித்ததினால் அவன் ஒரு நல்ல இராஜாவாக இருக்கவில்லை. இன்னும் பல இராஜாக்களைப்பற்றி நான் உங்களுக்கு முழுமையாகச் சொல்லவில்லை. ஆனால், இந்த இஸ்ரயேல் ஜனங்களுக்கு இறுதியாக சிதேக்கியா என்று பெயர்கொண்ட ஒரு மனுஷன் இராஜாவானான்.

சிதேக்கியா என்பவன் ஒரு கொடூரமான இராஜாவாக இருந்தான். அப்பொழுது இருந்த இஸ்ரயேல் ஜனங்களும் துன்மார்க்கமான ஜனங்களாக இருந்தார்கள். ஆகவே, தேவன் இஸ்ரயேலர்களின் எதிராளிகள் அவர்களை மேற்கொள்ளும்படி அனுமதித்தார். இப்படியாக எல்லா ஜனங்களும் சிறைபிடிக்கப்பட்டு அந்நிய தேசமாகிய பாபிலோன் என்று அழைக்கப்படும் தேசத்திற்கு கொண்டுச்செல்லப்பட்டார்கள். இப்படியாக, சவுல் இஸ்ரயேலுக்கு முதல் இராஜாவாகவும், சிதேக்கியா கடைசி இராஜாவாகவும் இருந்தார் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இக்காரியங்களை வளர்ச்சியடைந்த பெரியோர்கூட அறியாதிருக்கிறார்கள்!

பாபிலோனிலுள்ள ஜனங்கள் அனைவரும் அந்நியர்களாய் இருந்தார்கள். இவர்கள் இஸ்ரயேலின் உண்மையான தேவனை வழிப்படவில்லை. வேதம் இவர்களைப் புறஜாதி ஜனங்கள் என்று அழைக்கிறது. புறஜாதி தேசங்களையும் இராஜாக்கள் ஆட்சிசெய்து வந்தார்கள். அக்காலத்தில், புறஜாதி தேசமான பாபிலோனை நேபுகாத்நேச்சார் என்ற இராஜா ஆட்சி செய்து வந்தார்.

இந்த பெயர் நீளமானதாகத் தோன்றுகிறதா!

ஆனாலும், இந்த பெயரை நீங்கள் உச்சரித்துப் பழகிக்கொள்ள வேண்டும். ஏனெனில், நாம் பார்க்கக்கூடிய இந்த கதையில் நேபுகாத்நேச்சாரைக்குறித்து அநேக காரியங்களை நாம் கற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

நேபுகாத்நேச்சார், சிதேக்கியாவை சிறைபிடித்தபோது, ஒரு அற்புதமான சொப்பனம் கண்டான். ஆனால், அவன் விழித்தெழுந்தபோது, அந்த சொப்பனத்தை அவன் மறந்துவிட்டான். நீங்கள் எப்பொழுதாவது ஒரு சொப்பனங்கண்டு காலையில் எழும்பொழுது அதை மறந்திருக்கிறீர்களா? இதுதான் நேபுகாத்நேச்சாரின் அனுபவமும்கூட. ஆனால், அது உண்மையில் ஒரு அற்புதமான சொப்பனமாக இருந்தது. அவர் மீண்டும் அதை நினைவுகூரும்படி பலமுறை முயற்சித்தும் அவரால் கூடாமற்போனது.

ஆம், அதற்குப் பின் அவர் என்ன செய்தார்?

முதலில் சில ஞானிகளை அழைத்துவரும்படி ஆள் அனுப்பினார். இவர்கள் இராஜா அறிய வேண்டும் என்று விரும்பும் காரியத்தைக் கூறுவதற்கு விசேஷித்த பயிற்சிபெற்றவர்கள். உண்மையில் அவர்கள் ஞானிகளல்ல, இவர்கள் ஞானிகள் என்று அழைக்கப்பட்டார்கள். நேபுகாத்நேச்சார் அவர்களிடம் அந்த சொப்பனத்தையும், அதின் விளக்கத்தையும் கூறும்படிக் கேட்டார்.

இந்த ஞானிகளுக்கு இது ஒரு கடினமான காரியமாக இருந்தது. ஆம், இது உண்மையில் கடினமான காரியம்தான். ஏனெனில், இராஜா கண்ட சொப்பனத்தை அவர் சொல்ல வேண்டும் என்று இராஜா கேட்டுக்கொண்ட காரியம் ஒரு அரிதான காரியமாக இருந்தது. இராஜா

சொப்பனத்தைச் சொன்னால்மட்டுமே அதின் விளக்கங்களைச் சொல்லமுடியும் என்று அவர்கள் இராஜாவிடம் கேட்டுக்கொண்டார்கள். ஆனால், இராஜா அந்த சொப்பனத்தைச் சொல்ல இயலாத சூழ்நிலையில் இருந்ததினால் அவன் மிகவும் கோபங்கொண்டு, எல்லா ஞானிகளையும் கொல்லும்படி கட்டளையிட்டான்.

அந்த ஞானிகள் மத்தியில், அந்த இராஜாவுக்கு இரகசியங்களை அறிவிக்கவும், அவருக்கு ஆலோசனைக் கூறவும் நான்கு இளைய இஸ்ரயேலர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவர்களில் ஒருவர் தானியேல். இராஜா மிகவும் கோபமாயிருக்கிறார் என்றும், அவர் அனைவரையும் கொல்ல கட்டளையிட்டிருக்கிறார் என்பதையும் தானியேல் கேட்டபோது, அந்த சொப்பனத்திற்கு தான் விளக்கம் அளிப்பதற்கு அனுமதி கேட்டுக்கொண்டார். இந்த யோசனைக்கு நேபுகாத்நேச்சாரும் சம்மதித்தார்.

தானியேல், தனித்து காரியங்களைச் செய்யமுடியவில்லை. ஆனால், தேவனுடைய உதவியோடு அவரால் சொல்லக்கூடும் என்று நம்பினார். அதுபோல, இராஜா என்ன சொப்பனம் கண்டார் என்பதையும், அதின் விளக்கத்தையும் அறிந்துகொள்ள தானியேலுக்கு தேவன் உதவி செய்தார். அந்த சொப்பனத்தில் ஒரு மிக பிரம்மாண்டமான சிலை காணப்பட்டது என்று நேபுகாத்நேச்சாரிடம் தானியேல் சொன்னார். அந்த சிலை ஒரு மனுஷனைப்போல தலையும், சரீரமும், கால்களும், பாதங்களும் கொண்டிருந்தது. அந்த தலை பொன்னினால் செய்யப்பட்டதுபோலவும், அதின் மார்பும், கரங்களும் வெள்ளியினால் செய்யப்பட்டதுபோலவும், அதின் வயிறும், தொடைகளும் வெண்கலத்தினால் செய்யப்பட்டதுபோலவும், அதின் பாதங்கள் இரும்பினால் செய்யப்பட்டதுபோலவும் தோன்றியது. அதின் பாதங்கள் விநோதமாக இருந்தது. அது இரும்பு மற்றும் களிமண்ணின் கலவையினால் செய்யப்பட்டிருந்தது.

அதற்குப் பின் கைகளினால் பெயர்க்கப்படாத ஒரு சிறிய கல், மேலிருந்து உருண்டு, அந்த சிலையின் பாதத்தில் மோதி, அந்த சிலையை நொறுக்கியது. அதற்குப் பின் காற்று அடித்தபோது, அவைகள் அனைத்தும் பதரைப்போல் பறந்து போனது. அதற்குப் பின் ஒரு விசித்திரமான காரியம் நடந்தது. அந்த பாதத்தில் மோதின கல்லோ, படிப்படியாக வளர்ச்சியடைந்து, முழு உலகத்தையும் நிரப்பிற்று. இதுவே, நேபுகாத்நேச்சார் கண்ட சொப்பனம் என்று தானியேல் அறிவித்தார். எவ்வளவு முக்கியமான ஒரு சொப்பனம்!

இதன் பொருள் என்னவென்பதை நீங்கள் அறிய விரும்புகிறீர்களா? நேபுகாத்நேச்சாரும் அவ்வாறே விரும்பினார். அதை தானியேல் அவருக்கு விவரித்தார். அந்த பொன்னான தலை, பாபிலோன் இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் என்றும், அந்த சிலையில் காணப்பட்ட மற்ற உறுப்புகள், பாபிலோன் இராஜாவுக்குப் பின் இஸ்ரயேலர்களை ஆட்சி செய்யக்கூடிய மற்ற வல்லமையுள்ள தேசங்கள் என்றும் அவர் விவரித்தார்.

நூற்றுக்கணக்கான வருடங்களாக இஸ்ரயேலர்கள், மற்ற புறஜாதி இராஜாக்களால் ஆளப்படுவார்கள் என்று அந்த சொப்பனம் பொருள்பட்டது. அப்படியாகவே நடந்தது. இவைகள்



நடைபெறுவதற்கு முன்னதாகவே தேவன் இதை முன்னறிவித்தது எவ்வளவு அற்புதமான காரியம்! நம்மால் இதைச் செய்ய முடியுமா? ஆனால், தேவனால் கூடும். அவர் நூற்றுக்கணக்கான வருடங்களுக்குப் பின் நடக்கக்கூடிய உலக வரலாற்றை, தானியேலுக்கு புரிந்துகொள்ளும்படியாக உதவி செய்தார்.

தேவன் ஒரு இராஜாவை அனுப்பும்வரையில் இந்த புறஜாதி தேசங்கள் இஸ்ரயேலை ஆட்சி செய்யும் என்று தானியேல் விவரித்தார்.

தேவனுடைய இராஜ்யம் அந்த சிறிய கல்லின் மூலம் அடையாளப்படுத்தப்பட்டது. ஏனெனில், அந்த கல் இந்த சிலையை நொறுக்கி முழு பூமியையும் நிரப்பிற்று. இயேசுவே, தேவனுடைய இராஜ்யத்தின் இராஜாவாக இருப்பார். இந்த முழு உலகத்தையும் இராஜாவாகிய இயேசு ஆட்சி செய்யும் காலம்வரைக்கும் இஸ்ரயேல் ஜனங்களுக்கு வேறொரு எந்த இராஜாவும் இருக்கப்போவது இல்லை என்றே இந்த சொப்பனம் பொருள்படுத்துகிறது.

இந்த பூமியின்மேல் இப்படிப்பட்ட துன்மார்க்கமான இராஜாக்கள் இனி ஒருபோதும் ஆட்சி செய்யமாட்டார்கள் என்று அறிந்துகொள்வதில் நமக்கு எவ்வளவு மகழ்ச்சியாய் இருக்கிறது? நிச்சயமாக இயேசு இந்த முழு உலகத்தையும் ஆட்சி செய்வார் என்று தேவன் அன்று வாக்களித்தார். அவருடைய அனைத்து வாக்குத்தத்தங்களும் உண்மையாக நிறைவேறும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

தேவன் அனுமதித்தவரைக்கும் நேபுகாத்நேச்சார் இஸ்ரயேலர்கள்மேலும், முழு உலகத்தின்மேலும் ஆட்சி செய்தான். ஆனாலும், இதை மறந்தவனாக அவர் தனக்குள் பெருமைகொண்டான். அவன் மிக அற்புதமானவன் என்றும், அவனை எல்லா ஜனங்களும் ஆராதிக்க வேண்டும் என்றும், ஜனங்களை சிந்திக்க வைப்பதற்கும் முயற்சித்தான். அவனும் இஸ்ரயேலர்களின் இராஜாக்களைப்போல, தேவன் மேல் முழு நம்பிக்கையாக இருக்கவில்லை. ஆனால், தேவனுடைய உதவியில்லாமல், தான் இந்த அற்புதமான வேலைகளை செய்யக்கூடிய ஒரு ஞானமான இராஜாவாக இருக்கிறான் என்ற ஒரு முட்டாள்தனமான யோசனையை தனக்குள் சிந்தித்தான்.

என்ன நடந்திருக்கும் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்? அந்த இராஜா மற்றொரு பயங்கரமான சொப்பனத்தையும் கண்டான். அந்த சொப்பனத்தின் வழியாக அவன் தன் சிந்தனைகளை இழந்தவனாக ஏழு வருடங்கள் மிருகங்களைப்போல வயலில் புல்லை மேய்ந்துக்கொள்வான் என்று தேவன் அறிவித்தார். அப்படியே நேபுகாத்நேச்சாருக்கு நடந்தது. இப்படிப்பட்ட வல்லமையுள்ள இராஜா நான்கு கால்களில் நடந்து, புல்லை மேய்ந்து கொண்டிருப்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? அவனுடைய மயிர் நீளமாக வளர்ந்து, அவனுடைய கரங்களுக்குமேல் முளைத்த ரோமங்கள் பறவைகளின் சிறகுகளைப்போலவும், கைகளில் நகங்கள் மிருகங்களின் நகங்களைப்போலவும் இருந்ததாக வேதம் கூறுகின்றது.

இறுதியாக நேபுகாத்நேச்சார், தன்னுடைய சிந்திக்கக்கூடிய திறனைப் பெற்றபோது, அவன் செய்த காரியத்தை உணர்ந்தவனாய் அதற்காக தனக்குள் மிகுந்த அவமானப்பட்டான். ஆயினும், இந்த அனுபவத்தின் மூலமாக அவன் ஒரு ஞானமுள்ள, வல்லமையுள்ள இராஜா என்றும், தான் பெற்றிருந்த சிந்தனை தவறு என்பதையும் கற்றுக்கொண்டான். இப்பாடத்தை அவன் கற்றுக்கொண்ட பின்பு, தேவனே சர்வத்துக்கும் வல்லமையுள்ளவர் என்று அறிக்கையிட்டு, இந்நாள்வரைக்கும் இந்த ஆட்சியை தனக்குள் அனுமதித்ததற்காக தேவனை நன்றியோடு ஸ்தோத்திரித்தான்.

**கேள்விகள் :-**

1. இஸ்ரயேலின் கடைசி இராஜா யார்? அவர் யாரால் சிறைப்பிடிக்கப்பட்டார்?


2. தானியேல் என்பவர் யார்? தானியேல் விவரித்துச் சொன்ன நேபுகாத்நேச்சாரின் சொப்பனம் என்ன?

3. ஏழு வருடங்களாக பாபிலோன் இராஜாவாகிய நேபுகாத்நேச்சார், புல்லை புசிக்க வேண்டிய அவசியம் என்ன?

# 29. ஓர் அக்கினி சூளையில்

**பாபிலோன்** இராஜாவாகிய நேபுகாத்நேச்சார், இஸ்ரயேல் இராஜாவையும் மற்ற இஸ்ரயேலர்களையும் பாபிலோனுக்கு சிறைப்பிடித்துச் சென்றபோது, அதில் நான்கு இளைஞர்களுக்கு விசேஷமாக இராஜாவின் கிருபை கிடைத்தது. அதில் ஒருவர் தானியேல். இவர்கள் இராஜாவின் அரமனைக்குக் கொண்டுவரப்பட்டு, அரமனையில் அவர்கள் சேவிக்கும்படி பயிற்சி கொடுக்கப்பட்டார்கள். இப்படியாக, அநேகர் இந்த பயிற்சியைப் பெற்றார்கள். இவர்களை ஞானிகள் என்று அழைத்தார்கள்.

இந்த ஒரு பயிற்சி, மூன்று வருடங்களாக நீடித்தது. ஒரு கல்லூரியின் கால அளவைப்போல இது இருந்தது. அவர்கள் நல்ல ஆரோக்கியமான உடல்நலனைப் பெறுவதற்காக இராஜாவுக்காக ஏற்பாடுசெய்த உணவுகளையும், அவருக்காக ஆயத்தம் பண்ணின திராட்சரசங்களையும் புசிப்பதற்கும், குடிப்பதற்கும் கொடுக்கப்பட்டது. இந்த இளைய எபிரெயர்கள் அந்த விசேஷித்த பள்ளிக்கு அழைத்து வரப்பட்டபோது, அவர்களை மேற்பார்வையிடும் அந்த பிரதானியிடம், அவர்கள் இராஜாவின் உணவையோ, பானத்தையோ புசிப்பதற்கு விருப்பம் இல்லை என்று கூறினார்கள்.



ஆனால், அந்த மனுஷனோ, இந்த எபிரெயர்களை இராஜாவுக்கு ஆயத்தம் செய்த உணவையும், பானங்களையும் புசிக்கக் கொடுக்காவிட்டால், இராஜா தன்மேல் கோபங்கொள்வார் என்றெண்ணி அவன் பயந்திருந்தான். ஆனாலும், தானியேல் அவர்களுக்கு மற்ற உணவுகளைக் கொடுத்து, அதின் விளைவுகளைப் பார்க்கும்படியாக ஆலோசனை கூறினார். ஒரு பத்து நாளளவும் வேறு உணவுகளைக் கொடுக்கும்படி அவன் வேண்டிக்கொண்டான். இதற்கு அந்த மனுஷனும் சம்மதித்தான். இப்படியாக அந்த பத்து நாட்களின் முடிவில் மற்றவர்களைக் காட்டிலும் இந்த நான்கு பேரும் மிக புத்துணர்வாகவும், ஆரோக்கியமாகவும் காணப்பட்டார்கள். இதினிமித்தம் அவர்களைப் பராமரித்தவன் திருப்தியடைந்தான். அதற்குப் பின் இராஜாவும் இவர்களால் மகிழ்ச்சியடைந்தார்.

நாம் கடைசியாகப் பார்த்த கதையின்படி, இந்த நான்கு எபிரெயரில் ஒருவராகிய தானியேல், இராஜாவின் சொப்பனத்தை விவரித்தவராக இருந்தார். இதினிமித்தம் இராஜா மிகவும் மகிழ்ச்சி அடைந்து, தானியேலை மிக உயர்ந்த பதவிக்கு உயர்த்தினார். அதாவது, பாபிலோனின் பிரதானிகளுக்கு மேலாக அவரை உயர்த்தினார்.

தானியேலைப் பொறுத்தவரைக்கும் மற்றொரு நல்ல காரியம் என்னவெனில், அவர்கள் நண்பர்களிடமும் உண்மை உள்ளவராய் இருந்தார். தானியேலுக்கு அந்த இராஜா இவ்வளவு அற்புதமான நிலையை பரிசாகக் கொடுத்தபின் தானியேல், மற்ற மூன்று எபிரெய நண்பர்களுக்காகவும் இராஜாவினிடத்தில் அவர்களைப் பற்றிக்கூறினார். அதைக் கேட்டறிந்த இராஜா மற்ற மூன்று எபிரெயர்களையும் பாபிலோனின்மேல் அதிகாரிகளாக வைத்தார். எவ்வளவு அற்புதமான ஏற்பாடுகள்!

ஆனால், அதற்குப் பின் எவ்வளவு பெரிய பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியதாய் இருக்கும் என்பதை அறியாதிருந்தார்கள்.

இந்த உலகத்தில் ஒரு வல்லமையுள்ள ஆட்சியாளராக நேபுகாத்நேச்சார் இருந்தார் என்பதை தானியேல் சொன்னபோது, அவன் தனக்குள் பெருமை கொண்டவனாக தன்னையே ஞானி என்று எண்ணினான். அவன் தன்னுடைய சொப்பனத்தை விளக்கம் சொன்ன தானியேலுடைய தேவனை மறந்துவிட்டான். அதற்குப் பின் அவன் ஒரு மிக உயரமான பொற்சிலையை உண்டுபண்ணி அனைவரும் அந்த சிலையை மட்டுமே வணங்கும்படி கட்டளையிட்டான்.

அந்த மூன்று எபிரெயர்களைத்தவிர மற்ற எல்லா பிரதானிகளும் அரமனையில் உள்ளவர்களும் இராஜாவின் கட்டளையை ஏற்றுக்கொண்டார்கள். அப்பொழுது, மேளதாளங்கள் வாசிக்கப்படும்பொழுது ஜனங்கள் அந்த சிலையை வணங்கி தொழுதுகொண்டார்கள்.

பாபிலோன், அந்த தேசத்தில் ஒரு சிறிய பகுதியாக இருந்தது. அந்த சிறிய பகுதியில், பாபிலோன் பட்டணம் கட்டப்பட்டிருந்தது. இதை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா? பாபிலோனில் பல மாகாணங்கள் இருந்தது. அந்த மாகாணங்களின் மேல் இந்த எபிரெயர்கள் ஆளுநர்களாக அல்லது பிரதானிகளாக நியமிக்கப்பட்டார்கள். ஆனால், இவர்களோ நேபுகாத்நேச்சார் ஏற்படுத்தின அந்த சிலையை வணங்குவதற்கு மறுத்துவிட்டார்கள்.

பாபிலோன் இராஜாவாகிய நேபுகாத்நேச்சாரை எதிர்ப்பதற்கு, இந்த இளைஞர்கள் மிகவும் துணிச்சல்கொண்டிருந்தார்கள். இதைக் கேட்ட இராஜா மிகவும் கோபங்கொண்டான். அக்காலத்தில் தங்களுக்குக் கீழ்ப்படியாதவர்களிடத்தில் மிகக் கொடூரமாக இராஜாக்கள் நடந்துகொள்வார்கள். அதுபோல, இந்த பொற்சிலையை வணங்க மறுக்கும் யாவரும் அக்கினி



சூளையில் எரியப்பட வேண்டும் என்று நேபுகாத்நேச்சார் அடுத்தபடியாகக் கட்டளையிட்டான்.

எவ்வளவு பயங்கரமான காரியம்!

நிச்சயமாக இந்த இராஜா பிறப்பித்த கட்டளையைக்குறித்து அந்த மூன்று எபிரெயர்களும் நன்கு அறிந்திருந்தபோதிலும், அவர்கள் அந்த பொற்சிலையை வணங்குவதற்கு ஒருபோதும் சம்மதிக்கவில்லை. இப்படிப்பட்ட உருவச் சிலைகளை வணங்குவது தேவனுக்கு முன்பாக தவறான காரியம் என்பதை அவர்கள் அறிந்து தேவனை மட்டுமே நம்பினார்கள்.

ஆம், இந்த மூன்று எபிரெயர்களும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவில்லை என்பதை நேபுகாத்நேச்சார் அறிந்தபோது, அவன் உண்மையில் மிகவும் கோபங்கொண்டான். ஆனாலும், அவர்களுக்கு அவன் மற்றொரு வாய்ப்பைக்கொடுத்தான். அதற்குப் பின்னும் அவர்கள் அந்த சிலையை வணங்கவில்லை. இப்பொழுது, இராஜா எவ்வளவு மூர்க்கக் கோபங்கொண்டிருப்பான் என்று உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா! அவன் தன்னுடைய ஊழியக்காரர்களை அழைத்து எரியக்கூடிய இந்த அக்கினி சூளையை ஏழு மடங்கு சூடாக்கி, அதில் இந்த மூன்று எபிரெயர்களையும் கட்டி, அதில் வீசும்படி கட்டளையிட்டான்.

ஆனாலும், பக்தியுள்ள இந்த இளைஞர்கள் கொஞ்சங்கூடப் பயப்படவில்லை!

தேவன் அவர்களுக்கு நிச்சயமாக உதவி செய்வார் என்றும், ஒருவேளை அவர்கள் வணங்கக்கூடிய தேவன் அவர்களுக்கு உதவி செய்யாமற்போனாலும் நேபுகாத்நேச்சாரினால் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளுக்கு நாங்கள் கீழ்ப்படியமாட்டோம் என்பதை தெளிவாக இராஜாவுக்கு அறிவித்தார்கள். ஆம், அக்கினி மிகவும் சூடாயிருந்தது - அந்த எபிரெயர்களைக் கட்டி அந்த சூளைக்குள் போடுவதற்காக எடுத்துச் சென்ற அந்த பலவான்களை அது சுட்டுப்பொசுக்கியது.

அந்த இராஜா மிக வல்லமையுள்ளவன் என்றும், ஞானமுள்ளவன் என்றும் தனக்குள் சிந்தித்திருக்க வேண்டும். "இந்த எபிரெயர்களுக்கு ஒரு நல்ல பாடத்தை நான் கற்றுக்கொடுப்பேன், அவர்களின் தேவன் யார் என்பதை அவர்கள் அறிந்துகொள்வார்கள்" என்று அவன் தனக்குள் சொல்லியிருக்க வேண்டும். அதற்குப் பின் அவனுடைய வல்லமையான செயலை எண்ணி மகிழ்ச்சியடைந்து அக்கினி சூளையில் போடப்பட்ட எபிரெயர்கள் மரித்துவிட்டார்களா என்பதைப் பார்ப்பதற்கு அவன் அருகில் சென்றபோது - எப்படிப்பட்ட ஒரு ஆச்சரியம்! அவர்கள் கருகிப்போவதற்குப் பதிலாக கட்டவிழ்க்கப்பட்டவர்களாக அந்த அக்கினி ஜுவாலையில் உலாவிக்கொண்டிருந்ததைக் கண்டான். மேலும், அந்த அக்கினி சூளையில் வீசப்பட்ட மூன்று நபர்கள் மட்டுமல்ல, அதில் நான்காவது நபரையும் நேபுகாத்நேச்சார் கண்டான். அந்த நான்காவது நபர், தேவ புத்திரனைப்போல தோற்றம் உள்ளவராக இருந்தார் என்றும் அவன் கூறினான்.

நேபுகாத்நேச்சார் இதைக் கண்டு எவ்வளவு பயந்திருக்க வேண்டும்! ஏதோ ஒரு வல்லமை அந்த மூன்று எபிரெயர்களையும் பத்திரமாக பாதுகாத்தது என்பதை புரிந்துகொள்ளும் அளவுக்கு அவன் ஞானம் பெற்றிருந்தான். அப்பொழுது, அவர்களின் தேவன் வல்லமையுள்ளவர் என்பதை உணர்ந்துகொண்டான். அவன் அந்த அக்கினி சூளையண்டை சென்று அந்த மூன்று எபிரெயர்களையும் வெளியே வரும்படி விண்ணப்பித்தான். அவர்கள் வெளியே வந்தபோது, அந்த அக்கினியின் வாசனைகூட அவர்களின் வஸ்திரங்களின்மேல் இராததைக் கண்டான். எவ்வளவு அற்புதமான காரியம்? ஆம், இந்த மூன்று எபிரெயர்களின் பெயர்களை நான் உங்களுக்குச் சொல்ல மறந்துவிட்டேன். இவர்களுக்கு சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத் நெகோ என்று இராஜாவின் ஊழியக்காரர்கள் அவர்களுக்குப் பெயர் வைத்தார்கள்.

இந்த மூன்று எபிரெயர்களின் தேவனுக்கு விரோதமாக இராஜ்யம் முழுவதிலும் எங்குமுள்ளவர்கள் எதிராகப் பேசக்கூடாது என்று இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் கட்டளையிட்டான். அதுமட்டுமல்ல, அந்த மூன்று எபிரெயர்களுக்கு முன் இருந்த நிலமையைக்காட்டிலும் உயர்ந்த ஒரு நிலமையை இராஜ்யத்தில் கொடுத்தான்.

தேவன் வல்லமையுள்ளவர் என்று அறிந்துகொள்வது எவ்வளவு அற்புதமான காரியம்? மேலும், அவரை நேசித்து அவருக்கு ஊழியஞ்செய்யக்கூடியவர்களை அவர் எவ்வளவு நேர்த்தியாக வழிநடத்துகிறார் என்பது மேலும் அற்புதம் அல்லவா? இவ்வளவு கொடூரமான அக்கினி சூளையிலிருந்து, இந்த மூன்று எபிரெயர்களையும் தேவன் பாதுகாத்த விதம், ஆச்சரியமாகவே இருக்கிறது. அக்கினி சூடானதும், காகிதம், மரக்கட்டை, நிலக்கரி போன்ற காரியங்களை எரிக்கக்கூடியது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால், அது கற்களை எரிக்க முடியாது என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம். அதுபோல, தண்ணீரும் எரியக்கூடியது அல்ல என்றும் நாம் அறிந்திருக்கிறோம். அக்கினியைக்குறித்து தேவன் சகல காரியங்களையும்

அறிந்திருக்கிறார். ஆகவே, இந்த மூன்று எபிரெயர்களையும் அந்த அக்கினியிலிருந்து அவர் விடுவிப்பதற்கும் அவர் அறிந்திருக்க வேண்டும்.

இவைகளை வேதாகமம் கூறுகிறது. வேதாகமம் கூறும் அனைத்து காரியங்களும் உண்மை என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

**கேள்விகள் :-**

1. பாபிலோனுக்குச் சிறைப்பிடிக்கப்பட்டு வந்த தானியேலின் மூன்று நண்பர்கள் யார்?

2. இந்த மூன்று எபிரெயர்களும் பாபிலோனின் முக்கிய பிரதானிகளாக எவ்வாறு நியமிக்கப்பட்டார்கள்?

3. இந்த மூன்று எபிரெயர்களின் எதிராளிகளும் அவர்களை இராஜாவின் கட்டளைகளின் அடிப்படையில் கொல்லுவதற்கு என்ன திட்டமிட்டார்கள்? விவரிக்கவும் :-

4. அந்த அக்கினி ஜுவாலையில் போடப்பட்ட எபிரெயர்கள் மரிக்கவில்லை என்பதை அறிந்த பாபிலோன் இராஜா என்ன செய்தார்?



## 30. சிங்கங்களின் கெபியில்

**தானியேல்போல** தைரியம் உள்ளவரா?" என்று யாராகிலும் சொல்வதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? தானியேல் தேவனுக்குப் பிரியமான காரியங்களை மட்டுமே எப்பொழுதும் செய்தார். அவர் கொல்லப்பட்டாலும் தேவனுக்குப் பிரியமான காரியங்களை மட்டுமே செய்ய வேண்டும் என்று முடிவெடுத்திருந்தார். ஆகவே, தானியேல்போல தைரியம் உள்ளவரா என்று ஜனங்கள் அவரைக்குறித்து கேட்பார்கள். அது எவ்வளவு கஷ்டமான காரியமானாலும் சரி, தேவனுடைய பார்வையில் சரியான காரியத்தை மட்டுமே செய்வதற்கு அவர் துணிந்திருந்தார். சில நேரங்களில் சரியான காரியங்களைச் செய்வதைக்காட்டிலும், தவறான காரியங்களைச் செய்வது எளிதாக இருக்கும். ஆனால், "நாம் தானியேலைப்போல இருக்கையில், நான் சரியானதைமட்டுமே செய்வேன்" என்று சொல்லுவதற்கு இந்த தானியேலை எப்பொழுதும் நினைவில்கொள்ள வேண்டும்.

தானியேல் ஞானமுள்ளவராகவும், நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்தை விளக்குவதற்கு ஏதுவாக தேவன் அவருக்கு எல்லாவகையிலும் உதவி செய்தார் என்பதை நாம் முன்னதாகவே கதைகளில் பார்த்தோம். இராஜா, தானியேலைக்குறித்து மிகவும் மகிழ்ச்சியடைந்திருந்ததினால் பாபிலோனில் வல்லமையுள்ள ஒரு பிரதானி மட்டுமல்ல, மற்ற ஞானம் உள்ள பிரதானிகளுக்கும் மேலாக தானியேலை, இராஜா உயர்த்தினார் என்பதையும் பார்த்தோம். உண்மையில் இந்த இளைஞனான யூத மனுஷன் பாபிலோனின் சிறையிருப்பிலிருந்தாலும், தேவன் அவரோடு இருந்து எல்லாவற்றிலும் உதவி செய்து அவரை உயர்ந்த நிலையில் வைத்தார் என்பதையும் அறிந்துகொள்ளலாம்.

தானியேல் பாபிலோனை நீண்ட காலம் ஆட்சி செய்தார். தேவனும் அவரை ஆசீர்வதித்தார். நேபுகாத்நேச்சார் மரித்து மற்றொரு இராஜா பாபிலோனை ஆட்சிசெய்ய வரும்வரைக்கும் அவர் ஆளுகை செய்தார். அடுத்து வந்த இராஜாவின் பெயர் பெல்ஷாத்சார். வந்திருந்த அந்த புதிய இராஜாவுக்கும் தானியேலை மிகவும் பிடித்தது. ஆனால், அந்த புதிய இராஜா நீண்ட நாட்களாய் பாபிலோனை ஆட்சி செய்யவில்லை. மேதியர்கள் பாபிலோனை முற்றிகையிட்டு பெல்ஷாத்சாரை கொன்றுபோட்டார்கள். ஆனால், தானியேல் மிக நல்ல ஒரு பிரதானியாக இருந்ததினால், மேதியர்களின் இராஜாவாகிய தரியுவுக்கும் அவரை மிகவும் பிடித்துபோனது. ஆகவே, அவருடைய இராஜ்யத்திற்கும் தானியேலை ஒரு பிரதான ஆளுநராக நியமித்தார்.

தானியேல் தேவனை அதிகமாக நேசித்து அவரை சேவித்துவந்தார். அவர் உண்மையோடும், உத்தமத்தோடும் காணப்பட்டு ஜனங்களை மிக அன்பாக நடத்தினார். இதினிமித்தம் ஜனங்கள் அனைவரும் அவருக்குக் கீழ்ப்படிந்தார்கள். இதன் காரணத்தினால் நேபுகாத்நேச்சார் மற்றும் பெல்ஷாத்சார் தங்களுடைய ஜனங்களுக்குமேல் இவரை ஒரு பிரதானியாக நியமிக்க விருப்பம்கொண்டிருந்தார்கள்.

ஆனால், அந்த தேசத்தில் மதிப்பு குறைவுள்ள சில பிரதானிகள் தானியேலிடமிருந்து கட்டளைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது. இதை அவர்கள் ஒருபோதும் விரும்பவில்லை. இதனால், இவர்கள் பொறாமை கொண்டவர்களாக தானியேலுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அந்த உயர்ந்த நிலையைப் பெறுவதற்கு விரும்பினார்கள். பொறாமைகொண்ட ஜனங்கள் அநேக துன்மார்க்கமான காரியங்களைச் செய்வார்கள் என்பதை பல கதைகளில் நாம் பார்த்தோம். ஆகவே, நாம் எப்பொழுதும் பொறாமை கொள்ளாமல் இருப்பதற்கு முயற்சிக்க வேண்டும்!

தானியேலிடமிருந்து கட்டளைகளை எப்பொழுதும் பெற்றுக்கொள்ளக்கூடிய மனுஷர்கள், எவ்வளவு துன்மார்க்கமாக இருந்தார்களோ, அவ்வளவு தந்திரமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். ஏதோ ஒருவகையில் தானியேல் தவறான காரியத்தைச் செய்தார் என்பதை இராஜாவினிடம் அறிவிப்பதற்கு சில காரியங்களைத் தேடினார்கள். ஆனால், தானியேல் எப்பொழுதும் சரியான காரியங்களைமட்டுமே செய்தார் என்பதையும் அறிந்திருந்தார்கள். தானியேல் தேவனை ஆராதிக்கும் விதத்தில்மட்டுமே அவரிடத்தில் குற்றம் கண்டுபிடிப்பதற்கு வாய்ப்புகள் உண்டு என்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். ஏனெனில், தானியேல் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவராக நித்தமும் அவரிடத்தில் ஜெபித்தார் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். தானியேல் ஜெபிப்பதற்காக விசேஷித்த இடத்தையும், நேரங்களையும் ஒதுக்கியிருந்தார். இதைக்குறித்து அந்த பிரதானிகள் நன்கு அறிந்திருந்தார்கள்.

அவர்கள் என்ன செய்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்?

வரக்கூடிய ஒரு முப்பது நாளைக்கு, இராஜாவைத்தவிர வேறெந்த தெய்வத்தையோ, மனிதனையோ ஒருவரும் வணங்கக்கூடாது என்ற ஆலோசனையை இராஜாவிடம் இவர்கள் கூறினார்கள். இது இராஜாவுக்கு பிரியமாயிருந்தது. எல்லா ஜனங்களும் இராஜாவை நினைவுகூரும்படி இது ஒரு நல்ல ஆலோசனை என்று அவன் கருதினான். தானியேலுக்கு விரோதமாக திட்டம் தீட்டின பிரதானிகள், இராஜாவின் இந்த கற்பனைக்குக் கீழ்ப்படியாதவர்களை சிங்கங்களின் கெபியில்போட கட்டளையிட வேண்டும் என்று இராஜாவுக்கு அறிவித்தார்கள். இந்த ஆலோசனையும் மிக நல்லதாக இராஜாவுக்குத் தோன்றியது.

ஆகவே, இராஜா இதை கட்டளையாக எழுதி, அவருடைய கையெழுத்தை அதில் இட்டார். இதற்கு என்ன பொருள் என்று உங்களுக்கு தெரியுமா? தானியேல் நித்தமும் தேவனிடத்தில் ஜெபித்தார். ஆனால், இராஜாவைத் தவிர வேறு ஒருவரையும் முப்பது நாளைக்கு வணங்கக்கூடாது என்று இராஜா கட்டளையிட்டான். ஆனால், தொடர்ந்து தானியேல் தேவனிடத்தில் ஜெபித்துகொண்டிருப்பாரானால், அவர் இராஜாவின் கற்பனையை மீறுகிறதாகவும், அவர் சிங்கங்களின் கெபியில் எரியப்பட வேண்டியதாகவும் இருக்கும்.

இப்படி நடந்திருந்தால் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்?

நீங்கள் தானியேலைப்போல தைரியமுள்ளவராக இருந்திருப்பீர்களா? என்ன நடந்தாலும் சரி என்று நீங்கள் தேவனிடத்தில் தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருந்திருப்பீர்களா? ஆனால், தானியேல் ஜெபித்தார். தானியேல் இராஜாவைப் பிரியப்படுத்துவதைக்காட்டிலும் தேவனைப் பிரியப்படுத்துவதற்கு அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்தார். ஆகவே, அவர் இராஜாவையல்ல, தேவனிடம் தொடர்ந்து ஜெபித்துக்கொண்டு வந்தார்.

தானியேலுக்கு எதிராக திட்டம் தீட்டின பிரதானிகள் அவரை உளவு பார்த்து இராஜாவுக்குப் பதிலாக அவருடைய தேவனிடத்தில் ஜெபித்துக்கொண்டிருப்பதை இராஜாவுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது இவர்கள் மிக தந்திரமாக கொடூரமான திட்டத்தைத் தீட்டியிருப்பதை இராஜா உணர்ந்தார். இராஜா தானியேலிடம் கோபங்கொள்ளவில்லை. அவரை சிங்க கெபியில் போடுவதற்கு விருப்பமில்லாதிருந்தது. ஆயினும், அவர் பிறப்பித்த கட்டளையை அவரால் மாற்றக்கூடாதிருந்தது.

இராஜா தாமே போட்ட கட்டளையை ஏன் மாற்றக்கூடாது என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். இது மேதியர்களின் பிரமாணமாக இருந்தது. இராஜாவினால் பிறப்பிக்கப்பட்ட எந்த கட்டளையும் மாற்றப்படக்கூடாது என்பதே மேதியர்களின் பிரமாணமாக இருந்தது. ஆகவே

இராஜா, தான் கொடுத்த கட்டளையை மாற்றமுடியவில்லை. ஆனாலும், தானியேல் அதற்காக பயப்படவில்லை.

தானியேல் தேவனை நம்பினார்.

தன்னுடைய முழு வாழ்க்கையையும் பராமரித்த தேவன் இப்பொழுதும் அதை செய்ய வல்லவர் என்பதை தானியேல் அறிந்திருந்தார். ஆகவே, தேவன் என்ன விரும்புகிறாரோ அதைமட்டுமே செய்வதற்கு தன்னை ஒப்புக்கொடுத்தார். தானியேலை மீட்பதற்கு எந்த வழியுமில்லை என்பதை இராஜா அறிந்தபோது அவரை சிங்கங்களின் கெபியில் போடும்படி அனுமதி கொடுத்தான். பயங்கரமான சக்தியுள்ள சிங்கங்களின் மத்தியில் அவரை போட்ட பின்பு, அவர் அங்கிருந்து தப்பிப்போகாதபடிக்கு ஒரு மிகப்பெரிய கல்லை புரட்டி கெபியை அடைத்தார்கள்.

ஆனால், அந்த இரவு முழுவதும் இராஜா மிகவும் துக்கமாக இருந்தான். அவனால் உறங்க முடியவில்லை. இராமுழுவதும் படுக்கையில் புரண்டுபடுத்தான். தானியேலுடைய தேவன் அற்புதமானவர் என்பதில் எந்த சந்தேகமும் அவனுக்கு இருக்கவில்லை. ஆகவே, தானியேலின் தேவன் தானியேலை நிச்சயமாக விடுவிப்பார் என்று நம்பினான். ஆனாலும், அது உண்மையில் நிறைவேறுமா என்பதில் அவனால் முழுமையாக நம்பமுடியவில்லை. ஏனெனில், தானியேல் அறிந்திருக்கிறபடி அவருடைய தேவனைக்குறித்து இந்த இராஜா அதிகமாக அறிந்துகொள்ளவில்லை. ஆகவே, அவன் இராமுழுவதும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தான்.

அதிகாலையில் இராஜா எழுந்து நேரடியாக சிங்கங்களின் கெபிக்குச் சென்று தானியேலே, தானியேலே என்று அழைத்தான். இந்த நல்ல மனுஷனை தேவன் பாதுகாத்திருப்பார் என்பதை ஓரளவுக்கு யூகித்த இராஜா, "தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய ஊழியக்காரனே, தொடர்ந்து நீர் ஆராதித்துவந்த தேவன் இந்த சிங்கங்களிடமிருந்து உன்னை இரட்சித்தாரா?" "இராஜாவே, நீர் வாழ்க. தேவன் ஒரு தூதனை அனுப்பி சிங்கங்களின் வாயைக் கட்டினார். அவைகள் என்னை சேதப்படுத்தவில்லை" என்று தானியேல் பதிலளித்தார். இந்த குரலைக் கேட்டு இராஜா எவ்வளவு மகிழ்ச்சியடைந்திருப்பார்!

தானியேல் எந்த தவறும் செய்யவில்லை. அவர் இராஜாவோடு கோபமும் கொள்ளவில்லை. இப்படிப்பட்ட பயங்கரமான சூழ்ச்சிக்குள் இராஜாவை அகப்படுத்தினார்கள் என்பதை தானியேலும் அறிந்திருந்தார். ஆகவே, சிங்கங்களின் கெபியில் தூக்கிப்போட்டதற்காக அவர் இராஜாவை குறைகூறவுமில்லை. அதற்குப்பின் இராஜா என்ன செய்தார் தெரியுமா? தானியேலை சிங்கங்களின் கெபியில் போடுவதற்காக எத்தனம் செய்த அனைவரையும் அதே சிங்கங்களின் கெபியில் போடும்படி கட்டளையிட்டார். ஆனால், தேவனுடைய தூதர்களோ, அந்த சிங்கங்களின் வாயைக் கட்டாமல் அந்த துன்மார்க்கமான மனுஷரை புசிக்கும்படி அனுமதித்தார்கள்.

அந்த இராஜா தானியேலின் தேவனை அனைவரும் தொழுதுகொள்ள வேண்டும் என்று பூமியிலுள்ள சகல ஜனங்களுக்கும் கட்டளையிட்டார். தானியேலின் தேவனை உண்மையான ஜீவனுள்ள தேவன் என்றும், அவர் தம்முடைய ஜனங்களை நேர்த்தியாக பராமரிக்கிறவர் என்று அவர் விவரித்தார். ஆம், இவரே நம்முடைய உண்மையான தேவன். அவருடைய எல்லா வாக்குத்தத்தங்களையும் உண்மையாக நிறைவேற்றுவதில் அவர் வல்லமையுள்ளவராகக் காணப்படுகிறார். அவருடைய வாக்குத்தத்தங்கள் உண்மையாக நிறைவேறும்போது, எல்லா ஜாதிகளிலுள்ள ஜனங்களும் அவரை தொழுதுகொண்டு அவரை சேவிப்பார்கள். அப்பொழுது உண்மையில், இது ஒரு அற்புதமான உலகமாக இருக்கும் அல்லவா?

**கேள்விகள் :-**

1. "தானியேலைப்போல தைரியமுள்ளவர்களா" என்பதை கூறும்பொழுது ஜனங்கள் என்ன பொருள்படுத்துகிறார்கள்?

2. இராஜாவாகிய தரியு, தானியேலை மரணத்துக்குள்ளாக்குவதற்கு தானியேலின் எதிரிகள் என்ன திட்டமிட்டார்கள்?

3. முழு இரவும் சிங்க கெபியில் போடப்பட்ட தானியேல் அவைகளினால் சேதப்படாததின் காரணம் என்ன?



## 31. ஒரு மீனின் வயிற்றில்

**யோனா தேவனை** நேசித்த ஒரு நல்ல ஊழியக்காரராக இருந்தார். ஆனாலும், அவர் முழுமையாக தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை. நீங்கள் மற்றவர்களைக்காட்டிலும் உங்கள் பெற்றோர்களைஅதிகமாக நேசித்தால் அவர்களை பிரியப்படுத்தும்படி நீங்கள் எப்பொழுதும் அவர்களுக்கு விருப்பமான காரியங்களைமட்டும் செய்வீர்கள் அல்லவா? ஆம், யோனா அந்தளவுக்கு தேவனை நேசிக்கவில்லை. தேவன் ஒரு காரியத்தை யோனாவுக்குக் கட்டளையிட்டபோது, அந்த வேலையைச் செய்யாதபடிக்கு அவர் அவ்விடத்தைவிட்டு ஓடிப்போக முயற்சித்தார்.

யோனாவும் தேவனுடைய தீர்க்கதரிசிகளில் ஒருவராக இருந்தார்.

தேவனைப்பற்றியும், அவர் செய்ய விரும்பும் காரியங்களைப்பற்றியும் ஜனங்களுக்கு அறிவிக்கக்கூடியவரே ஒரு தீர்க்கதரிசி. மேலும், ஜனங்கள் தவறாக நடக்கும்பொழுதும், அந்த தவறுகளினால் அவர்கள் சந்திக்க வேண்டிய பிரச்சனைகளையும்கூட ஒரு தீர்க்கதரிசியானவர் அவர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும், நீண்ட நாட்களுக்குப் பிறகு நடக்கக்கூடிய காரியங்களையும் ஒரு தீர்க்கதரிசி முன்னதாகவே அறிவித்தார். இப்படியாக, யோனாவும் தேவனுடைய ஒரு தீர்க்கதரிசியாக இருந்தார். தேவன் அவரை துன்மார்க்கமான மனுஷர் வாழும் நினிவே என்ற பட்டணத்திற்கு போகும்படி கட்டளைகொடுத்தார். அவர்கள் அனைவரும் தன்னுடைய துன்மார்க்கமான செயல்களினிமித்தம் அவர்கள் அழிக்கப்படப்போவதாக அறிவிக்கும்படி தேவன் யோனாவுக்கு கட்டளையிட்டார். இதை செய்ய விரும்பாத யோனா அவ்விடம்விட்டு ஓடிப்போக முடிவு செய்தார். அவர் யோப்பாவுக்குச் சென்று, தர்ஷீசுக்குச்

செல்லும் ஒரு கப்பலைக்கண்டு அதில் பிரயாணப்படுவதற்கான பிரயாண சீட்டையும் வாங்கிக்கொண்டார். தர்ஷீஸ் என்ற பட்டணம், நினிவேயைவிட்டு மிக தூரத்தில் இருந்தது. ஆகவே, நினிவேயைவிட்டு வெகுதூரம் செல்லப் போகிறோம் என்று தனக்குள்ளே உறுதிபடுத்திக்கொண்டார்.

யோனா தவறாக சிந்தித்தார். ஏனெனில், அந்த கப்பல் நினிவேக்கு செல்லக்கூடியதாக இராவிட்டாலும், யோனா நினிவேக்குச் சென்றார்!

யோப்பாவைவிட்டு அந்த கப்பல் பிரயாணமாகப் புறப்பட்டுப்போகையில் தேவன் அக்கப்பலை சுற்றியுள்ள கடலை கொந்தளிக்கும்படி ஒரு பயங்கரமான புயலை கட்டளையிட்டார். அந்த கொடூரமான அலைகளும், காற்றும் அந்த கப்பலை உடைத்துவிடுமோ என்றவாறு அதற்குள் இருக்கும் பயணிகள் அனைவரும் பயந்தார்கள். அந்த கப்பலுக்குள்ளிருந்த கப்பலோட்டிகள் உண்மையான தேவனை விசுவாசியாததினால் அவர்கள் அனைவரும் புறஜாதியார்களாய் இருந்தார்கள். ஆயினும், இதினிமித்தம் அவரவர் தங்களுடைய சொந்த தேவர்களை நோக்கி வேண்டிக்கொள்ளத் தொடங்கினார்கள். அவர்களின் தெய்வங்கள் உண்மையான தெய்வங்களாக இராததினால், அந்த தெய்வங்கள் அவர்களுக்காக எதுவும் செய்ய இயலாமற்போயிற்று.

இதற்கிடையில், யோனா கப்பலின் அடித்தட்டில் சென்று அயர்ந்த நித்திரை செய்தார். கப்பலின் தலைவர் யோனாவை மட்டும் காணவில்லை என்றறிந்து அவரை தேடத்துவங்கினார். அந்த தீர்க்கதரிசியை அவர்கள் கண்டு பிடித்தபோது, இந்த கப்பலை பாதுகாக்கும்படி தன்னுடைய தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டிக்கொண்டார்கள். யோனா எல்லா காரியங்களையும் சொல்வதற்கு முன்னதாகவே அந்த கப்பலின் மாலுமிகள் யாரால் இந்த மகா பெரிய உபத்திரவம் வந்தது என்று கண்டுபிடிப்பதற்காக அனைவருக்கும் சீட்டுப்போட்டார்கள். ஏனெனில், இந்த கப்பலில் பயணிக்கக்கூடிய யாரோ ஒருவரால் இந்த உபத்திரவம் வந்தது என்றும், அவர்கள் தண்டிப்பதற்காக இக்காரியம் நடைபெறுவதாகவும் அவர்கள் நம்பினார்கள்.

இந்த கப்பலில் பயணித்த தீர்க்கதரிசியாகிய யோனா, தேவன் சொல்லிய காரியத்திற்குக் கீழ்ப்படியாமல், அவர் வெகு தூரம் சென்று கொண்டிருப்பார் என்பதையும், ஆகவே, இந்த கப்பல் இப்பொழுது தேவனுடைய கரத்தில் இருக்கிறது என்பதையும் அவர்கள் அறியாதிருந்தார்கள். ஆம், தேவனே எல்லா காரியங்களையும் பராமரிப்பவர். அவர்கள் சீட்டு போட்டபோதோ அந்த சீட்டு யோனாவின் பெயருக்கு விழுந்தது. அதற்குப் பின் அவர்கள் அனைவரும் யோனாவிடம் சென்று, "நீர் யார்? நீர் எங்கிருந்து வந்தவர்? இந்த பிரச்சனை வந்ததற்கு காரணம் என்ன?" என்று கேட்டனர். தேவன் சொல்லிய காரியத்திற்குக் கீழ்ப்படியாமல், அவர் அவ்விடத்தைவிட்டு ஓடினார் என்பது தவறு என்ற காரியம் யோனா நன்கு அறிந்திருந்ததினால் அவர் செய்த எல்லா தவறுகளையும் அவர்களுக்கு முன் அறிக்கையிட்டார்.

யோனா ஒரு நல்ல மனுஷனாக இருந்தபடியினால், இவர்களினிமித்தம் அந்த கப்பலிலுள்ள அனைவரும் சேதமடைவதற்கு அவர் விரும்பவில்லை. "இந்த கடல் அமைதியாய் இருப்பதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று அந்த மாலுமிகள் யோனாவிடம் கேட்டனர். அப்பொழுது, "இந்த மாபெரும் புயல் என்னிமித்தமாக வந்தது. ஆகவே, என்னை நீங்கள் இந்த கடலில் தூக்கிப்போட்டால் இந்த கடல் அமைதியாகும்" என்று யோனா பதிலளித்தார்.

கப்பலில் பயணித்த மற்ற பயணிகளும், மாலுமிகளும் தங்களுடைய ஜீவனை பாதுகாப்பதற்காக யோனா கடலில் மூழ்கி மரிப்பதற்கு மனப்பூர்வமாய் சம்மதித்தார்கள். நிச்சயமாக அவர் ஒரு நல்ல மனுஷனாக இருக்கிறார் அல்லவா? யோனா சொன்னதை அந்த மாலுமிகள் செய்தார்கள். யோனாவை அந்த கப்பலிலிருந்து தூக்கியெறிந்த பின்பு, கடல் அமைதியாய் இருந்தது. புயலும் அமர்ந்தது. அனைவரும் பாதுகாப்பாக மீண்டும் பயணித்தார்கள்!

ஆனால், யோனாவின் நிலைமை பரிதாபமாக இருந்தது! அவர் நீண்ட நேரம் ஜலத்தில் இருக்க வாய்ப்பில்லை என்று நீங்கள் சிந்திக்கலாம். ஆனால், தேவன் அவருக்கு உதவியாக ஒரு மிகப்பெரிய காரியத்தைச் செய்தார்.

"யோனாவை விழுங்குவதற்கு தேவன் ஒரு மிகப்பெரிய மீனை ஆயத்தம் செய்தார்" என்று வேதம் நமக்குக் கூறுகிறது. மனிதர்களை விழுங்குமளவுக்கு மிகப்பெரிய மீன்கள் கடலில் இருப்பதை நாம் அறிந்திருக்கிறோம். திமிங்கலங்களும் மிகப்பெரியதாக இருக்கிறது அல்லவா? ஆனால், யோனாவை திமிங்கலம் விழுங்கவில்லை. ஏனெனில், திமிங்கலத்தின் வயிறு மிகப்பெரியதாக இருந்தாலும், அதின் தொண்டை மிகச் சிறியதாகவே இருக்கும்.

வேதாகமம், யோனா செய்ததை முன்னறிந்தவராக, அவர் கப்பலிலிருந்து எறியப்படும்பொழுது அவரை விழுங்கும்படி ஒரு மிகப்பெரிய மீனை ஆயத்தமாக்கியிருந்தார். யோனாவை பராமரிப்பதற்கு தேவன் எவ்வளவு நல்ல வழியை தெரிந்தெடுத்தார் பாருங்கள். யோனா அந்த மீனின் வயிற்றில் மூன்று நாட்கள் தங்கியிருந்தார். நிச்சயமாக அந்த மீன் அவரை செரித்து விடாதபடிக்கு தேவன் அந்த மீனின் வயிற்றிலும் யோனாவை பாதுகாத்திருக்க வேண்டும். அதேநேரத்தில் மீனின் வயிற்றிலிருந்த யோனா, உண்மையோடும், விசுவாசத்தோடும் தேவனிடத்தில் ஜெபித்தார். தேவனும் அவருடைய ஜெபங்களுக்கு செவிசாய்த்தார்.

ஆம், யோனாவின் ஜெபங்களை தேவன் கேட்டு அவரை விடுவித்தார். அவர் உயிரோடு பத்திரமாக ஒரு கரையில் விடுவிக்கப்பட்டார். எவ்வளவு பயங்கரமான ஒரு அனுபவமாக இது இருந்திருக்க வேண்டும்!

அதற்குப்பின் அவர் வீட்டிற்கு சென்றாரா? இல்லையே! தேவன் அவரை போகச்சொன்ன இடமாகிய நினிவேயின் கரையில் அந்த மீன் யோனாவை விட்டது.

இனி தேவனைவிட்டு ஓடுவதில் எந்த பயனுமில்லை என்று யோனா அறிந்தவராக தேவன் கற்பித்ததை அவர் செய்யத் துவங்கினார். அவர் நினிவே பட்டணத்தைச் சுற்றி நடந்து, தேவன் அவருக்கு சொல்லி அனுப்பிய காரியங்களை அந்த ஜனங்களிடம் விவரமாக எடுத்துரைத்தார். இவர்கள் துன்மார்க்கமாக இருந்ததினால், தேவன் நினிவே என்ற பட்டணத்தை நாற்பது நாளில் அழிக்கப்போவதாக முன்னறிவித்தார்.

நினிவேயின் ஜனங்கள் என்ன செய்தார்கள் என்று தெரியுமா?

யோனா இப்படிப்பட்ட ஒரு துர்ச்செய்தியை கொண்டு வந்ததினால், அவரைக் கொலை செய்யும்படி அந்த ஜனங்கள் வகைதேடினார்களா? இல்லை, நிச்சயமாக இல்லை. அவர்கள் தங்களுடைய செயலினிமித்தம் வருந்தினார்கள். நினிவே பட்டணத்தின் இராஜா, மக்கள் அனைவருக்கும் செய்திகளை அனுப்பி, அவர்களுடைய துர்ச்செயல்களுக்காக மனந்திரும்ப வேண்டும் என்று கட்டளையிட்டான். தேவன் அந்த பட்டணத்தை அழிப்பதில் அவனுக்கு விருப்பம் இல்லாதிருந்தது.

தேவன் அந்த பட்டணத்தை இப்பொழுது அழிக்காததினால், யோனா மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார் என்று எண்ணுகிறீர்களா? ஆனால், யோனா மகிழ்ச்சியாக இல்லை. தேவன் பட்சபாதம் உள்ளவர் என்று யோனா எண்ணினார். ஏனெனில், தேவன் இவர் மூலமாக ஜனங்களுக்கு அறிவித்த காரியங்களை அவர் நிறைவேற்றவில்லை என்பதில் அவருக்கு வருத்தமாக இருந்தது. மேலும், யோனா தனக்குள் மேட்டிமையான சிந்தனை கொண்டிருந்ததினால், யோனா சொன்ன காரியங்கள் நிறைவேறவில்லையே என்று ஜனங்கள் சிந்தித்துவிடுவார்களோ என்றும் அவர் யோசித்தார். ஆனால், தேவன் அவர்களை நேசித்ததினால் அவர்கள் மனந்திரும்பியபொழுது தேவன் அவர்களை அழிக்காமல் தப்பவிட்டார்.

யோனா ஒரு நல்ல மனுஷன். அதேநேரத்தில் சில காரியங்களில் சிடுசிடுப்பாய் இருந்தார். ஆனாலும், தேவன் எவ்வளவு அற்புதமானவர். அவர் போக வேண்டாம் என்று முடிவு செய்த யோனாவை மீண்டும் அதே பட்டணத்திற்கு அனுப்பி, தேவன் சொல்ல வேண்டிய காரியத்தை அவர் மூலமாகவே சொல்ல வைத்தார்?

**கேள்விகள்:**

1. யோனா என்பவர் யார்? தேவன் கட்டளையிட்ட வேலையை செய்ய மறுத்து, அவ்விடம்விட்டு ஓடின காரணம் என்ன?

2. யோனா கப்பலிலிருந்து வெளியே எறியப்பட்டபோது அவர் ஏன் மூழ்கவில்லை?

3. யோனா மீனின் வயிற்றிலிருந்து நீக்கப்பட்டபோது அவர் எங்கிருந்தார்? மேலும், அவர் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்பினார்?



## தேவனுடைய புத்தகத்தின் கதை - பகுதி 1

**தேவனுடைய** புத்தகத்திலுள்ள கதையே மிக அற்புதமான கதைகளில் ஒன்றாகும். வேதாகமத்தைப்பற்றி அறிந்துகொள்ளவும், அது எவ்வளவு அற்புதமானது என்பதை புரிந்துகொள்வதற்காகவுமே இந்த கதைகளை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நான் சொல்லிய எல்லா கதைகளும் இந்த வேதாகமத்தில் உள்ளது. ஆனால், இவைகளை உங்களால் எளிதில் கண்டுபிடிக்க முடியாது. ஆகவே, இந்த கதைகளையும், மற்ற அற்புதமான காரியங்களையும் இந்த வேதாகமத்தில் எவ்வாறாக கண்டுபிடிக்க வேண்டும் என்பதை இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லப்போகிறேன். இந்த முழு வேதாகமமும் ஒரு புத்தகமாய் இருக்கிறது. ஆனால், இது அநேக பகுதிகள் கொண்டிருக்கிறது. இந்த வேதாகமத்தில் ஒவ்வொரு சிறு பகுதியும் புத்தகம் என்று அழைக்கப்படுகின்றது.

வேதாகமத்தில் முதல் புத்தகம் ஆதியாகமம் என்று அழைக்கப்படுகின்றது.

வேதாகமத்தில் காணப்படும் இந்த புத்தகங்கள் ஒவ்வொன்றும் அதிகாரங்களாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அதிகாரங்களும் வசனங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதை நீங்கள் புரிந்துகொள்வதற்கு வேதாகமத்தை நீங்களே பார்க்கவும். நிச்சயமாக உங்களிடம் ஒரு வேதாகமம் இருக்கும் என்று நான் நம்புகின்றேன்! குறுகிய காலத்தில் காணப்பட்ட வேதாகமத்தைக்காட்டிலும் இப்பொழுது நம்முடைய கரங்களில் இருக்கக்கூடிய வேதாகமம் மிக அருமையானதாக இருக்கின்றது. முற்காலத்தில் நீண்ட சுருள்களில் வேதாகமம் எழுதப்பட்டு அதை சுருட்டி வைத்திருப்பார்கள். அவைகளை சுருள்கள் என்று அழைப்பார்கள்.

ஆயினும், வேதாகமத்திலுள்ள எல்லா கதைகளையும் உங்களிடம் சொல்லவில்லை. நான் உங்களுக்குச் சொல்லிய கதைகள் அனைத்தும் வேதாகமத்தில், முதல் பகுதியில் உள்ளது. அது, பழைய ஏற்பாடு என்று அழைக்கப்படுகின்றது. அதில் ஆபிரகாமைப்பற்றிய ஒரு கதையை உங்களுக்கு நான் சொல்லியிருக்கிறேன். அவர் மூலமாக இந்த உலகத்திலுள்ள முழு குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்ற அற்புதமான வாக்குத்தத்தத்தை தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்ததை நீங்கள் நினைவில்கொண்டிருக்கலாம்.

இப்பொழுது, இந்த வாக்குத்தத்தத்தை வேதாகமத்தில் எப்படி கண்டுபிடிப்பது என்பதை நான் உங்களுக்கு சொல்லுகிறேன். இது, ஆதியாகமம் 22:18-ம் வசனத்தில் காணப்படுகின்றது. அதாவது, 22 என்பது அதிகாரத்தையும், 18 என்பது வசனத்தையும் பொருள்படுத்துகிறது. இப்பொழுது, உங்கள் வேதாகமத்தில் காணப்படும் முதல் புத்தகமாகிய ஆதியாகமத்தை கவனிக்கவும். அதில் 22-ம் அதிகாரத்தை எடுத்துக்கொள்ளவும். அதில் வரிசையாக நீங்கள் பார்க்கும்போது, 18-ம் வசனத்தை நீங்கள் காணலாம். அதில், "நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்" என்று இதில் வாசிக்கலாம்.

இது எவ்வளவு அற்புதமாக இருக்கிறது? சந்ததி என்ற வார்த்தைக்கு, பிள்ளைகள் அல்லது பேரப்பிள்ளைகள் என்று பொருள்படும். அதற்குப் பின், இயேசுதான் அந்த ஆபிரகாமின் சந்ததி என்று நாம் கற்றறிந்தோம். இப்படியாக, இயேசு சகல ஜாதிகளுக்குமேல் இராஜாவாக இருந்து இந்த முழு உலகத்தையும் ஆசீர்வதித்தார். இதைக்குறித்து நாம் பிறகு பார்க்கலாம். இப்பொழுது, வேதாகமத்தை எவ்வாறு படிக்க வேண்டும் என்றும், அவைகளிலுள்ள ஆர்வமூட்டும் வகைகளை எவ்வாறு கண்டுபிடிக்க வேண்டும் என்பதையும் நாம் கற்றுக்கொள்ளுவோம். முதலில் வேதாகமத்தில் காணப்படும் முதல் பகுதியிலுள்ள புத்தகங்களைக்குறித்து வரிசையாக பார்ப்பது ஒரு சிறந்த வழியாக இருக்கும் என்று நான் சிந்திக்கிறேன். இது ஒரு நல்ல யோசனையாக இருக்கிறதல்லவா? சரி, நாம் வரிசையாகப் பார்க்கலாம்.

### ஆதியாகமம்

முதல் புத்தகம் ஆதியாகமம். ஆதியாகமம் என்பதற்கு "துவக்கத்தில்" என்று பொருள். இந்த புத்தகம், தேவன் சிருஷ்டித்த பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் மற்றும் அனைத்து காரியங்களைக்குறித்தும் கூறுகிறது. மேலும், முதல் மனிதனாகிய ஆதாமையும் அவன் துணைவியாகிய ஏவாளையும்பற்றிய கதைகளை இது கூறுகிறது. தேவன் சொல்லிய காரியங்களை அவர்கள் கீழ்ப்படியாமல் போனதினால் அவர்கள் மரித்தார்கள். அவர்கள் பிள்ளைகளும் மரித்தார்கள் என்பதை தெளிவாக இப்புத்தகம் விவரிக்கிறது. ஆகவே, இந்நாள்வரைக்கும் ஜனங்கள் மரித்துக்கொண்டிருக்கிறார்கள். நான் உங்களுக்குச் சொல்லிய முதல் பன்னிரண்டு கதைகளை ஆதியாகமம் புத்தகத்தில் காணலாம். இந்த கதைகளை நீங்கள் நினைவில் கொண்டிருப்பீர்களானால் வேதாகமத்தின் முதல் புத்தகத்துக்குரிய நல்ல அறிவைப் பெற்றிருப்பீர்கள்.

### யாத்திராகமம்

இது வேதாகமத்தின் இரண்டாவது புத்தகம். யாத்திராகமம் என்பதற்கு "வெளியே செல்லுதல்" என்று பொருள். இஸ்ரயேல் ஜனங்கள் எகிப்தைவிட்டு வெளியே செல்வதைப்பற்றி இப்புத்தகம் கூறுகிறதினால் இந்த புத்தகத்திற்கு யாத்திராகமம் என்று பெயர் வழங்கப்பட்டது. எகிப்திலிருந்து இஸ்ரயேல் ஜனங்களை மோசேயின் வழியாக தேவன் எவ்வளவு அற்புதமான விதத்தில் வழிநடத்தினார் என்று என் கதைகளை நீங்கள் வாசித்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். அனைத்தும் யாத்திராகமம் புத்தகத்திலே காணப்படுகிறது. இது மோசேயின் பிறப்பைப்பற்றி சொல்ல துவங்குகிறது. மேலும், மோசேயின் தாய் அவனை ஒரு நாணற் பெட்டியில் ஒளித்து நைல் நதியில் விட்டதையும் கூறுகிறது. நீங்கள் இக்கதைகளை மீண்டும் மீண்டும் வாசித்தாலும் நலமாக இருக்கும். மேலும், அந்த புத்தகத்தில் தேவன் எபிரெயர்களுக்குக் கொடுத்த நியாயப்பிரமாணங்களைப்பற்றியும், தேவனுடைய வீடு (ஆசரிப்புக்கூடாரம்) எவ்வாறாகக் கட்டப்பட வேண்டும் என்பதையும் தெளிவாகக் கூறுகிறது.

### லேவியராகமம்

இது வேதாகமத்தில் மூன்றாவது புத்தகம். இந்த புத்தகம் லேவி குடும்பத்தினரைக்குறித்து கூறுகிறது. இஸ்ரயேலர்களில், பன்னிரண்டு குடும்பங்கள் அல்லது

கோத்திரங்கள் இருந்தது. அதில், லேவி கோத்திரம் அல்லது லேவி குடும்பத்தாரை தேவன் தம்முடைய வேலைகளைச் செய்வதற்காக தேர்வு செய்தார். ஆசரிப்புக்கூடாரத்தில் பணிபுரிந்த ஆசாரியர்கள் லேவி குடும்பத்தை அல்லது லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். ஆகவே, இந்த மூன்றாவது புத்தகம் லேவியராகமம் என்று அழைக்கப்படுகின்றது. மேலும், இவர்கள் தேவனை எவ்வாறு சேவிக்க வேண்டும் என்று மற்ற கோத்திரங்களுக்கு கற்றுக்கொடுத்ததையும் இது கூறுகிறது.

## எண்ணாகமம்

வேதாகமத்தின் நான்காம் புத்தகம், எண்ணாகமம் என்று அழைக்கப்படுகின்றது. இது, இஸ்ரயேல் ஜனங்களின் எண்ணிக்கையைக் கூறுகிறது. இது ஒரு வரலாறு சார்ந்த புத்தகமாக இருக்கிறது. இஸ்ரயேல் ஜனங்கள் எகிப்தைவிட்டுப் புறப்பட்ட நாளில் பெற்ற அனுபவங்களிலிருந்து யோர்தான் நதியைக் கடந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம்வரைக்கும் அவர்கள் சொந்த காரியங்களை நமக்குக் கூறுகிறது. இது சரியாக, நாற்பது வருட கால அளவாகும்.

## உபாகமம்

இது வேதாகமத்தின் ஐந்தாம் புத்தகம். இதற்கு "இரண்டாவது முறையாக நியாயப்பிரமாணம் கொடுத்தல்" என்று பொருளாகும். இதில், மோசேயினால் பேசப்பட்ட மூன்று அற்புதமான பிரசங்கங்களைக் காணலாம். இந்த பிரசங்கங்கள் அனைத்தும், மோசே தன்னுடைய மரணத்திற்குச் சற்று முன்பாக பிரசங்கித்ததாகும். இதில், இஸ்ரயேல் ஜனங்களுக்கு தேவன் கொடுத்த நியாயப்பிரமாணத்தைப்பற்றியும், அதை அவர்கள் கீழ்ப்படிவதற்கான முக்கியத்துவங்களைப்பற்றியும் முழுமையாக அறிவிக்கப்படுகின்றது. இந்த புத்தகத்தின் முடிவில் மோசேயின் மரணத்தைக்குறித்து எழுதப்பட்டிருக்கிறது.

## யோசுவா

இஸ்ரயேல் ஜனங்களுக்கு ஒரு தலைவராக யோசுவா நியமிக்கப்பட்டபோது, நடந்த வரலாற்றை இப்புத்தகம் கூறுகிறது. யோசுவாவைப்பற்றி நான் சொல்லிய கதைகளை நீங்கள் நினைவில்கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன் - அதாவது, அவர் இஸ்ரயேல் ஜனங்களை எவ்வாறு யோர்தான் நதியை கடக்கச்செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைக் கைப்பற்ற வழிநடத்தினார் என்று.

## நியாயாதிபதிகள்

வேதாகமத்தில் நியாயாதிபதிகள் என்று அழைக்கப்படுகிறவர்கள், இஸ்ரயேல் ஜனங்களை நானூற்று ஐம்பது வருடங்கள் ஆட்சி செய்தார்கள். அப்பொழுது இஸ்ரயேல் ஜனங்களின் வரலாற்றைப்பற்றி இப்புத்தகம் கூறுகிறது. அதாவது, இஸ்ரயேலர்களுக்கு ஒரு இராஜா வருவதற்கு முந்திய காலமாக இது இருந்தது.

## ரூத்

ரூத்தின் புத்தகம் ஒரு அருமையான மோவாபிய ஸ்திரீயைக் குறித்து கூறுகிறது. அவள், தன்னுடைய தேசமாகிய மோவாபைவிட்டு, இஸ்ரயேல் தேசத்திற்குச் சென்று, போவாஸ் என்ற இஸ்ரயேலனை திருமணம் செய்தாள். இது ஒரு அருமையான கதை.

நகோமி என்ற யூத பெண், தன்னுடைய கணவனோடு இஸ்ரயேல் தேசத்தைவிட்டு மோவாப் தேசத்திற்குச் சென்றாள். அங்கு அவர்கள் சுபிட்சமாக இருப்பார்கள் என்று எண்ணினார்கள். அவர்களுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அந்த மோவாப் தேசத்தில் இரண்டு குமாரர்களுக்கும் பெண்களைத் தேடி திருமணம் செய்து வைத்தார்கள். அதில் ஒரு பெண்ணின் பெயர் ரூத். அதற்குப்பின் நகோமியின் கணவரும், அவருடைய இரண்டு குமாரர்களும் மரித்துப்போனார்கள். அவள் மிக சோகமடைந்து தனிமையில் இருந்ததினால் மீண்டுமாக தன்னுடைய இஸ்ரயேல் தேசத்திற்குத் திரும்ப வேண்டும் என்று முடிவு செய்தாள். அப்பொழுது ரூத்தும் அவளோடு சென்றாள். அவர்கள் இஸ்ரயேலுக்கு வந்தபோது, போவாசுக்கு சொந்தமான வயலில் ரூத் வேலை செய்யும்படி போனாள். இந்த போவாஸ், நகோமியின் உறவுக்காரனாய் இருந்தார். அதற்குப் பின் ரூத் போவாசை திருமணம் செய்தாள். அவர்களுக்கு ஒரு குமாரன் பிறந்தார். அவர் இயேசுவைப் பெற்ற தாயாகிய மரியாளின் மூதாதையராக இருந்தார்.

## 1 சாமுயேல் மற்றும் 2 சாமுயேல்

தீர்க்கதரிசியாகிய சாமுயேலின் பெயரைக்கொண்ட இரண்டு புத்தகங்களை வேதாகமத்தில் நாம் காணலாம். இந்த புத்தகங்கள் சாமுயேலின் பிறப்பையும், அவருடைய வாழ்க்கையைப்பற்றியும் கூறுகிறது. சாமுயேலைக்குறித்த கதைகளை நீங்கள் வாசித்தால், அவர் தேவனுடைய தீர்க்கதரிசியாகவும், இஸ்ரயேலை முதல் இராஜாவாக சவுலை அபிஷேகம் பண்ணினவர் என்பதையும் நீங்கள் அறிந்துகொள்ளலாம். அதற்குப் பின் இராஜாவாகிய சவுலின் இடத்திற்கு தாவீதை இராஜாவாக அவர் நியமித்தார். இந்த இரண்டு புத்தகங்களும், சவுல் மற்றும் தாவீதைக்குறித்த கதைகளைக் கூறுகிறது. அதில் சவுல் மரணத்திற்குப்பின் தாவீது இஸ்ரயேலுக்கு இராஜாவாகும் காலம் வரைக்குமுள்ள கதைகளைக் கோருகிறது.

## 1 இராஜாக்கள் மற்றும் 2 இராஜாக்கள்

இஸ்ரயேலர்களை இராஜாக்கள் ஆட்சி செய்த காலத்தைக்குறித்த வரலாற்றை இவ்விரண்டு புத்தகத்திலும் காணலாம். இதில் தாவீது இராஜா துவங்கி, கடைசி இராஜாவாகிய சிதேக்கியா வரைக்குமுள்ள வரலாற்றை நாம் வாசிக்கலாம். இந்த சிதேக்கியா இராஜாவை பாபிலோன் இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் சிறைபிடித்து பாபிலோன் பட்டணத்திற்கு எடுத்துச் சென்றான். ஆனாலும், அவன் அந்த பாபிலோனை தன்னுடைய கண்களினால் காணவில்லை என்று வேதாகமம் கூறுகிறது. ஏனெனில், அவன் சிறைபிடிக்கப்பட்டபோது, அவன் கண்கள் குருடாக்கப்பட்டது. மேலும், இந்த புத்தகங்கள் தீர்க்கதரிசிகளாகிய எலியா மற்றும் எலிசாவின் அனுபவங்களையும் கூறுகிறது.

## 1 நாளாகமம் மற்றும் 2 நாளாகமம்

முதல் மற்றும் இரண்டாம் இராஜாக்களின் புத்தகங்களில் எழுதப்படாத இஸ்ரயேலர்களின் கதைகளை இந்த இரண்டு புத்தகங்களிலும் நாம் காணலாம். இந்த புத்தகங்களில் இராஜாவாகிய கோரேஸ் பாபிலோன் சாம்ராஜ்யத்தை மேற்கொண்டு மீண்டும் இஸ்ரயேலர்களை தங்களுடைய தாய் நாட்டுக்கு திரும்பி வரச்செய்த இஸ்ரயேலின் வரலாற்றை இப்புத்தகத்தில் காணலாம்.

## எஸ்றா

பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன இஸ்ரயேலர்களை சேவித்த ஒரு ஆசாரியனுடைய நாமம் இந்த புத்தகத்திற்குப் பேராக சூட்டப்பட்டுள்ளது. கடைசி இராஜாவாகிய சிதேக்கியாவின் சிறையிருப்புக்குப்பின், இஸ்ரயேல் ஜனங்களுக்கு நடந்த சம்பவங்களை இப்புத்தகம் விவரிக்கிறது. இஸ்ரயேலர்கள் பாபிலோனில் எழுபது வருடங்கள் இருந்தபின், அவர்கள் மீண்டுமாக பாலஸ்தீனா தேசத்திற்குத் திரும்பிச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். இவர்களை வழிநடத்திச் சென்ற முக்கியமான தலைவர் எஸ்றாவாக இருந்தார். எஸ்றா தேவனுடைய வீடாகிய எருசலேம் ஆலயத்தைக் கட்டுவதை மிகவும் வாஞ்சித்தார்.

## நெகேமியா

இந்த புத்தகத்தை முழுமையாக எழுதிய தேவனுடைய ஒரு ஊழியக்காரனுடைய பெயர் இந்த புத்தகத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது. பாபிலோனிலிருந்து மீண்டும் பாலஸ்தீனாவுக்குத் திரும்பின இஸ்ரயேலர்களைக் குறித்த வரலாற்றை இப்புத்தகத்தில் காணலாம். மேலும், பாலஸ்தீனாவுக்குத் திரும்பின நெகேமியா எவ்வாறாக எருசலேமையும், அதின் மதிற்சுவர்களையும் திரும்பக்கட்டினார் என்று இந்த புத்தகம் நமக்கு தெளிவாகக் கூறுகிறது.

## எஸ்தர்

யூத ஸ்திரீயாகிய எஸ்தரின் அனுபவங்களை இந்த புத்தகம் பதிவு செய்திருக்கிறது. பாபிலோனில் இஸ்ரயேலர்கள் சிறைப்பட்டிருந்தபொழுது, பாபிலோனை மேற்கொண்ட மேதோ பெர்சியா இராஜாவாகிய அகாஸ்வேருவின் மனைவியாக, இந்த யூத ஸ்திரீ எஸ்தர் இருந்தாள். அவனுடைய பிரதான வேலைக்காரனாகிய ஆமான் எஸ்தர் இராஜாத்தியின் உறவுக்காரராகிய மொர்தெகாயுவின்மேல் பொறமைகொண்டிருந்தான். இதினிமித்தம் அவன் யூத ஜனங்களை முழுமையாக வெறுத்தான். அனைத்து யூதர்களையும் வெட்டி வீழ்த்துவதற்கு இராஜாவினிடத்தில் தந்திரமாக ஒரு அனுமதியைப் பெற்றுக்கொண்டான். ஆனால், இராணியாக இருந்த எஸ்தர், தன்னுடைய செல்வாக்கை பயன்படுத்தினாள். அவள் இராஜாவின் மனதை மாற்றி, யூதர்களை இரட்சித்தாள். அதற்குப் பின் ஆமான், இராஜாவின் எதிராளியாக எண்ணப்பட்டு, அவனுக்கு மரணத்தீர்ப்பு அளிக்கப்பட்டது.

## யோபு

தேவனுடைய ஒரு விசுவாசமுள்ள ஊழியக்காரனும், அவன் வாழ்க்கையையும்பற்றி, யோபு என்ற புத்தகம் விவரிக்கின்றது. அவர் ஒரு தீர்க்கதரிசியாகவும் இருந்தார். தேவனுடைய எதிராளியாகிய சாத்தான் என்பவன், தேவன் யோபுவை ஆசீர்வதித்ததினால்தான், யோபு தேவனிடத்தில் விசுவாசமாய் இருக்கிறான் என்று கூறினான். யோபுவை உபத்திரவத்திற்குள் தேவன் அனுமதித்ததால், அதற்குப்பின் யோபு தேவன் சொல்லிய காரியங்களை ஒருபோதும் செய்யமாட்டார் என்று சாத்தான் சவால் விட்டான். யோபுவின்மேல் மிகப்பெரிய உபத்திரவங்களை எவ்வாறாக அனுமதித்தார் என்று இந்த கதை விவரிக்கின்றது. உண்மையில் இதினால் யோபு மிகப்பெரிய பிரச்சனைகளுக்குள் அகப்பட்டார். அவருடைய பிள்ளைகள் கொல்லப்பட்டனர். அவருடைய கால்நடைகள் மரித்துப்போயிற்று. அவர் உடல் நிலை பாதிக்கப்பட்டு எரிகொப்பளங்களால் அவதிப்பட்டார். இறுதியாக யோபுவின் மனைவி அவருக்கு விரோதமாகத் திரும்பினாள்.

எவ்வளவு கொடிய பிரச்சனைகள்!

ஆனாலும், யோபு இறுதிவரைக்கும் தேவனிடத்தில் நம்பிக்கையாய் இருந்தார் என்று இந்த கதை கூறுகிறது. மேலும், தேவன் விரும்பியதை அவர் செய்தார் என்றும் வலியுறுத்துகிறது. அதற்குப்பின் யோபுவின் உடல்நலம் சுகமாக்கப்பட்டது. அதற்குபின், அவருக்கு மிக அருமையான பிள்ளைகள் பிறந்தார்கள். அவருடைய மனைவி மீண்டும் அவரை நேசித்தாள். யோபுவுக்கு முன்னிருந்த ஐசுவரியத்தைக் காட்டிலும், இரட்டிப்பான ஐசுவரியங்களால் தேவன் மீண்டும் யோபுவை ஆசீர்வதித்தார்.

இந்த கதையை நாம் வாசிக்கும்பொழுது, ஆதாம் மற்றும் ஏவாளைக்குறித்து நாம் சிந்திக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். யோபுவுக்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் மிகுந்த பிரச்சனைகள் வந்ததுபோல, ஆதாம் ஏவாள் மற்றும் அவர்களின் பிள்ளைகளுக்கும் இப்படிப்பட்ட பிரச்சனைகள் வந்தது. ஆனால், யோபு தன்னுடையவைகளை திரும்பப்பெற்றுக்கொண்டதுபோல, இவர்களும் அனைத்து காரியங்களையும் திரும்பப்பெற்றுக்கொள்வார்கள்.

## சங்கீதங்கள்

தாவீது இராஜா மற்றும் தேவனுடைய மற்ற ஊழியக்காரர்களில் அருமையான எழுத்துக்களை சங்கீத புஸ்தகங்கள் கொண்டிருக்கிறது. சங்கீதங்கள் என்பதற்கு பாடல்கள் என்று பொருள் அல்லது பாமாலை என்று பொருள். தாவீது ஒரு அருமையான கவிஞனாக இருந்தார். ஆகவே, கவிதை நடையில் தாவீது சங்கீதங்களை எழுதினார். அதில் அவர் தேவனோடு வைத்த அன்பையும், தேவன் அவருக்கு செய்த சகல அற்புதமான காரியங்களுக்காக நன்றிகளை ஏறெடுக்கக்கூடிய உணர்வுகளையும் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

சங்கீதங்களின் புஸ்தகத்தில் 23-ம் அதிகாரம் ஒரு அருமையான சங்கீதமாகும். தாவீதின் கதையை நீங்கள் படித்தீர்களானால் தாவீது சிறுவனாக இருந்தபோது, மந்தைகளை மேய்க்கக்கூடிய ஒரு மேய்ப்பராக இருந்ததை அறிந்துகொள்ளலாம். 23-ம் சங்கீதத்தில், அவர் தேவனை ஒரு நல்ல மேய்ப்பராகவும், தேவன் தன்னை எவ்வாறு பராமரித்து வழிநடத்துகிறார் என்பதையும் அவர் சிந்தித்து 23-ம் சங்கீதத்தை எழுதினார்.

தேவனுடைய தீர்க்கதரிசியாகிய அவர், இனி வரக்கூடிய அநேக அற்புதமான காரியங்களை எழுதினார். இயேசு இராஜாவாக வந்து, இவ்வுலகில் ஆட்சி செய்யும் காலத்தில் நடக்கக்கூடியவைகளை எழுதுவதற்காக, தேவன் அவரை பயன்படுத்தினார். 46-ம் சங்கீதத்தில், தாவீது, வரக்கூடிய நாட்களில் யுத்தம் இல்லாத நிலமைகளைக்குறித்து தேவனுடைய வாக்குத்தத்தத்தை பதிவு செய்திருப்பதைக் காணலாம்.

சங்கீதம் 72:8-ல், தாவீது இராஜாவாகிய இயேசுவைக்குறித்து, "ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கி பூமியின் எல்லைகள்வரைக்கும் அவர் அரசாளுவார்" என்று எழுதுகிறார்.

## நீதிமொழிகள்

ஞானியாகிய சாலொமோன் இந்த புத்தகத்தை முழுமையாக எழுதினார். நீங்கள் இராஜாவாகிய சாலொமோனைக்குறித்த கதைகள் வாசிப்பீர்களானால், அவர் எவ்வளவு ஞானமுள்ளவர் என்பதை அறிந்துகொள்ளலாம். ஏனெனில், தேவனே அவருக்கு அந்த

ஞானத்தைக் கொடுத்தார். சாலொமோனின் ஞானத்தில் சில காரியங்களை நீதிமொழிகளின் புஸ்தகத்தில் காணலாம். நீதிமொழிகள் 3:5, 6 வசனங்களில், "உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்" என்று ஞானமாக இராஜாவாகிய சாலொமோன் எழுதியிருக்கிறார்.

## பிரசங்கி

இந்த புத்தகமும் சாலொமோனால் எழுதப்பட்டிருக்கிறது என்று அனைவராலும் நம்பப்படுகின்றது. நீதிமொழிகளின் புத்தகத்தைப்போலவே, இந்த புத்தகத்திலும் நாம் பின்பற்ற வேண்டிய அநேக நல்ல காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த புத்தகத்தில், "நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்குநாட்கள் வராததற்குமுன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்குமுன்னும்," (பிரசங்கி 12:1) என்ற ஞானமுள்ள காரியங்கள் சாலொமோனால் எழுதப்பட்டிருக்கிறது.

இது உண்மையில் ஒரு ஞானமான காரியமாகவே இருக்கிறது.

நீங்கள் எவ்வளவு அதிகமாக வேதாகமத்தை வாசிப்பீர்களோ, அவ்வளவுக்கதிகமாக சிருஷ்டிகராகிய தேவனை நினைவுகூருவீர்கள் என்று நான் நம்புகிறேன். சிருஷ்டிகர் என்ற வார்த்தைக்கு, சகலத்தையும் சிருஷ்டிக்கக்கூடியவர் என்று பொருள். தேவன் பல காரியங்களை சிருஷ்டித்தார் - சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பூமி, அதிலுள்ள நம்மையும் அவர் சிருஷ்டித்தார். ஆகவே, அவரை நாம் எப்பொழுதும் நினைவுகொண்டவர்களாக நம்முடைய வாழ்நாள் முழுவதிலும் அவரை நேசிக்க வேண்டும்.

## உன்னதப்பாட்டு

வேதாகமத்தில் காணப்படும் இந்த புத்தகத்தையும் இராஜாவாகிய சாலொமோன் எழுதினார். இது பாடல்களின் பாடல்கள் அல்லது ஒரு அன்பின் கதை என்று சொல்லப்படுகிறது. ஒரு கணவன் தன் மனைவியின்மேல் வைத்த அன்பை இக்கதை வெளிப்படுத்துகிறது. தேவன் நம்மேல் வைத்த அன்பை அல்லது இயேசு நம்மேல் வைத்த அன்பையும் காட்டுவதற்கு இந்த புத்தகம் ஒரு நல்ல பாடமாக அமைகிறது.

## ஏசாயா

ஏசாயா என்ற தீர்க்கதரிசியின் பெயரை இந்த புத்தகம் கொண்டிருக்கிறது. தேவன் ஏசாயாவுக்கு கூறின அநேக அற்புதமான பாடங்களை இப்புத்தகம் கொண்டிருக்கிறது. இஸ்ரயேல் ஜனங்கள் செய்த தவறுகளுக்காக தேவன் அவர்களை தண்டித்தார் என்று தீர்க்கதரிசியாகிய ஏசாயா அவர்களை எச்சரித்தார். மேலும், இந்த உலக ஜனங்களுக்காக தேவன் வைத்திருக்கக்கூடிய அருமையான திட்டங்களையும், தேவனுடைய அற்புதமான வாக்குத்தத்தங்களையும் இந்த புத்தகம் பதிவுசெய்து விவரிக்கிறது.

ஏசாயா 11:6, 7 - "அப்பொழுது ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும், ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். பசுவும் கரடியும் கூடிமேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக்கொள்ளும்; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும்."

எவ்வளவு அற்புதமான வாக்குத்தத்தம்?

ஆதாம் எல்லா மிருகங்களுக்கும் பெயரிட்ட வேதாகமக் கதையைக்குறித்து நான் சொல்லியது உங்கள் நினைவில் இருக்க வேண்டும் என்று நம்புகிறோம். அவைகளுக்குமேல் ஆதாம் இராஜாவாக முடி சூட்டப்பட்டதினால், அவைகள் அவருக்குக் கீழ்ப்படிந்தது. ஆம், காலம் வரும்பொழுது எல்லா மிருகங்களும் ஏதேன் தோட்டத்தில் ஆதாமுக்குக் கீழ்ப்படிந்தது போல, அனைவருக்கும் கீழ்ப்படியும். இது எவ்வளவு மகத்துவமான காலமாக இருக்கும்!

ஏசாயா 35:5,6 வசனங்கள் தேவனால் வாக்களிக்கப்பட்ட மற்றொரு ஆசீர்வாதத்தைக் கூறுகிறது. "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான்; ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்; வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும்."

இராஜாவாகிய இயேசு இந்த உலகத்தை பகிரங்கமாக ஆட்சி செய்கையில், தேவன் அவருடைய வாக்குத்தத்தங்களை உண்மையாக நிறைவேற்றுவார்.

### எரேமியா

தேவனுடைய ஒரு தீர்க்கதரிசியின் பேரில் இப்புத்தகம் கொண்டிருக்கிறது. இஸ்ரயேல் ஜனங்களின் பாவத்தைக்குறித்து எழுதும்படி தேவன் எரேமியாவிடம் கேட்டுக்கொண்டார். அவர்களின் பாவத்திற்காக தேவன் அவர்களை தண்டிக்கப் போவதாகவும் அவர் எச்சரித்தார்.

"தேவன் தம்முடைய ஜனங்களுக்கு அவருடைய பிரமாணங்களைக் கொடுத்தார்" என்ற கதையை நீங்கள் படித்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். அந்த கதையின் போது மோசே இஸ்ரயேலர்களுக்கு தலைவராக இருந்து அவர்களை நடத்தினார். தேவன் அவர்களுக்கு தம்முடைய பிரமாணத்தைக் கொடுத்தார். ஆனால், அவர்களோ அவைகளுக்கு முழுமையாகக் கீழ்ப்படியவில்லை. தேவன் விரும்பக்கூடிய காரியங்களை அவர்கள் செய்ய மறுத்தார்கள், இறுதியாக, அவர்களை ஆட்சி செய்வதற்கான ஒரு இராஜா அவர்களின்மேல் இருக்கவில்லை.

பல நூற்றாண்டுகளாக, தேவன் அவர்களுக்கு வாக்களித்த தேசத்தில் அவர்கள் குடியிருக்கவில்லை. ஆனால், மீண்டுமாக அந்த ஜனங்களுக்கு தேவன் தேசத்தைக் கொடுக்கப்போவதாக தீர்க்கதரிசியாகிய எரேமியாவின் மூலமாக வெளிப்படுத்தினார்.

மற்றொரு தீர்க்கதரிசியின் பெயரை இந்த புத்தகம் கொண்டுள்ளது. தேவன் இஸ்ரயேல் ஜனங்களின் பாவங்களை எழுதும்படியாக எரேமியாவிடம் கேட்டுக்கொண்டார். மேலும், அவர்களின் பாவங்களுக்காக அவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்ற எச்சரிப்பையும் எரேமியாவின் மூலமாக தேவன் இஸ்ரயேல் ஜனங்களுக்குக் கொடுத்தார்.

தேவன் தம்முடைய ஜனங்களுக்கு அவருடைய பிரமாணத்தைக் கொடுத்தார். இந்த கதையை நீங்கள் வாசித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். அக்காலத்தில் மோசே இஸ்ரயேலர்களுக்கு தலைவராக இருந்து அவர்களை வழிநடத்தினார். தேவன் அவருடைய பிரமாணங்களைக் கொடுத்தார். ஆயினும், அவர்கள் முழுமையாக அவைகளுக்குக் கீழ்ப்படியவில்லை. தேவன் விரும்பிய காரியங்களை அவர்கள் செய்யவில்லை. இறுதியில் தங்கள்மேல் ஆட்சி செய்வதற்கு ஒரு சொந்த இராஜா அவர்களுக்கு இல்லாமல் போய்விட்டது.

இதற்கிடையே நூற்றுக்கணக்கான வருடங்கள் தேவன் அவர்களுக்கென்று வாக்களித்த தேசத்தைவிட்டு வெளியே தங்கினார்கள். ஆனால், அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்படவும் ஒரு புதிய உடன்படிக்கை அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய காலம் வெகுசீக்கிரத்தில் வருகிறதென்று தேவன் தீர்க்கதரிசியாகிய எரேமியாவின்மூலம் வெளிப்படுத்தினார். இஸ்ரயேலுக்கு தேவன் கொடுக்கும் இந்த புதிய பிரமாணம், புதிய உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிறது. எரேமியா 31:31-34 வசனங்கள் குறித்து நமக்கு தெளிவாகக் கூறுகிறது.

### புலம்பல்

புலம்பல் என்பதற்கு மிக "சோகமான" அல்லது "துக்ககரமான" என்று பொருள். இந்த புஸ்தகத்தையும் தீர்க்கதரிசியாகிய எரேமியா எழுதினார். தேவன் சொல்லிய காரியங்களை இஸ்ரயேல் ஜனங்கள் கீழ்ப்படியாததினிமித்தம் அவர்கள்மேல் வந்த உபத்திரவங்களைக்குறித்து தீர்க்கதரிசியாகிய எரேமியா இப்புத்தகத்தில் கூறுகிறார். ஆனால், சிறிது காலத்திற்குப் பின் இஸ்ரயேலர்களையும், அவர்கள் வழியாக இந்த உலகத்தில் முழு ஜனங்களையும் ஆசீர்வதித்தார் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

### எசேக்கியேல்

எசேக்கியேல் என்பது மற்றொரு தேவனுடைய தீர்க்கதரிசியின் நாமம். அவர் தேவன் சொல்லியபடி அநேக அற்புதமான காரியங்களை எழுதியிருக்கிறார். தேவன் இஸ்ரயேல் ஜனங்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்களை பூமியெங்கும் சிதறடிக்கப் போவதாகவும், தேவன் எசேக்கியேல் தீர்க்கதரிசியின் மூலம் அறிவித்தார். ஆனாலும், நீண்ட நாட்களுக்குப் பிறகு மீண்டுமாக இஸ்ரயேலர் அனைவரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள் என்பதையும் தேவன் எசேக்கியேலிடம் கூறினார். இக்காரியம் இப்பொழுது நிறைவேறிக்கொண்டு வருகிறது.

### தானியேல்

தீர்க்கதரிசியாகிய தானியேலினால் இந்த புத்தகம் எழுதப்பட்டது. இதில் நேபுகாத்நேச்சார் சொப்பனத்தில் கண்ட மிகப்பெரிய சிலையைப்பற்றி கூறுகிறது. இந்த

புத்தகத்தில் மேலும் மூன்று எபிரெய வாலிபர்கள்பற்றிய கதை குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் எரிகிற அக்கினி சூளையில் போடப்பட்டாலும், தேவன் அவர்களை பாதுகாத்ததினால் அவர்கள் மரிக்கவில்லை என்ற கதையையும் காணலாம். அடுத்து, தானியேல் சிங்க கெபியில் போடப்பட்ட கதையும் இந்த புத்தகத்தில் உள்ளது.

நாம் வாழக்கூடிய இந்த காலத்தில் அறிவு பெருகிப்போகும் என்பதை தானியேல் எழுதும்படி தேவன் அவரைத் தூண்டினார். அன்று தானியேல் எழுதின காரியங்கள் இன்று உண்மையாக நிறைவேறிக்கொண்டு வருகிறது. இந்நாட்களில் அனைவரும் கல்வி அறிவை பெற்றுக்கொள்ளும்படியாக பல பள்ளிகள் உள்ளது. பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பாக இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் கல்வி சாலைகள் எதுவும் இல்லாதிருந்தது.

## ஓசியா

தீர்க்கதரிசியாகிய ஓசியாவின் பெயரை வேதாகமத்திலுள்ள இந்த புத்தகம் கொண்டுள்ளது. தேவன் மரணத்தை அழிக்கக்கூடிய காலம் வருகிறதென்று இந்த தீர்க்கதரிசி எழுதியிருக்கிறார். இந்த வாக்குத்தத்தம் உண்மையாக நிறைவேறும்போது ஒருவரும் மரிக்கமாட்டார்கள். வேதாகமத்தில் இது எழுதப்பட்டிருக்கிறதினால் அது நிச்சயமாக நடக்கும் என்று நாம் நம்புகிறோம்.

## யோயேல்

யோயேல் என்ற மனுஷன் தேவனை அதிகமாக நேசித்து, தேவன் சொல்லிய காரியங்களை முழுமையாக கேட்டறிந்தார். இந்த புத்தகம் அவருடைய பெயரைக் கொண்டிருக்கிறது. வருங்காலங்களில், தேசங்களுக்கு மத்தியில் நடக்கக்கூடிய மகா பெரிய யுத்தங்களைக்குறித்து இவர் ஜனங்களிடம் கூறினார். தேவன் யோயேலின் வழியாகச் சொன்ன காரியங்கள் அனைத்தும், இப்பொழுது நிறைவேறிக்கொண்டிருக்கிறது அல்லவா? தேசங்கள் போரிடுவதை நீடித்துவிட்டு, பூமியிலுள்ள ஜனங்கள் எங்கும் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்றும் தேவன் சொல்லிய காரியங்களைச் செய்திருக்கிறார்.

## ஆமோஸ்

ஆமோஸ் தேவனுடைய ஒரு தீர்க்கதரிசி. யூத ஜனங்கள் மீண்டுமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு கூட்டிச்சேர்க்கப்படும் காலத்தைக்குறித்து ஆமோஸ் தீர்க்கதரிசி எழுதியிருக்கிறார். நாம் நன்மையான காரியங்களைச் செய்ய விரும்பினால் தேவன் நம்மோடிருந்து நம்மை ஆசீர்வதிப்பார் என்றும் எழுதியிருக்கிறார்.

## ஒபதியா

ஒபதியாவின் புஸ்தகம் மற்ற புஸ்தகங்களைக்காட்டிலும் வேறுபட்டதாய் காணப்படுகிறது. ஏனெனில், இதற்கு ஒரே அதிகாரம் உள்ளது. இந்த அதிகாரத்தை தேவனுடைய தீர்க்கதரிசியாகிய ஒபதியா எழுதினார். இயேசு கிறிஸ்துவின் தலைமையில் இரட்சகர்கள் என்று அழைக்கப்படும் தேவனுடைய பரிசுத்தமான ஜனங்கள் ஆட்சி செய்ய குறித்த காலம் வருகிறதாக ஒபதியா அந்த அதிகாரத்தில் தெளிவாக விவரிக்கிறார்.

## யோனா

யோனாவின் கதையை நீங்கள் படித்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். இவர் கப்பலிலிருந்து தூக்கிப்போடப்பட்டபோது ஒரு பெரிய மீன் அவரை விழுங்கியது. மேலும், யோனா புத்தகத்தில் அவர் பெற்ற அனுபவங்கள் கூறப்பட்டுள்ளது.

## மீகா

மீகா தீர்க்கதரிசியின் மூலமாக தேவன் கொடுத்த ஒரு முக்கியமான வாக்குத்தத்தம் சொல்லப்படுகிறது. "ஆனாலும் கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதனிடத்திற்கு ஓடிவருவார்கள். திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில், சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்ளுவார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அறிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி

பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. அவனவன் தன்தன் திராட்சச்செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்; சேனைகளுடைய கர்த்திரின் வாய் இதைச் சொல்லிற்று." மீகா 4:1-4.

## நாகூம்

தேவனுடைய பல தீர்க்கதரிசிகளில் நாகூமும் ஒருவர். தேவன் நாகூமுக்கு உதவி செய்தபடியினால் நூற்றுக்கணக்கான வருடங்களுக்குப்பின் கண்டுபிடிக்கப்பட வேண்டிய வாகனங்களைப்பற்றி அவர் முன்னதாகவே எழுதியிருக்கிறார். உண்மையில் ஐம்பது வருடங்களுக்கு முன்னதாகத்தான், நல்ல வாகனங்கள் கண்டு பிடிக்கப்பட்டது. இதைக்குறித்து இவ்வளவு நீண்ட நாட்களுக்கு முன்பாகவே தேவன் நாகூமிடம் இவைகளைக்குறித்து எழுதச் சொன்னது ஆச்சரியமான காரியமல்லவா? நாகூம் அவைகளை இரதங்கள் என்று அழைக்கின்றார். இரவு நேரங்களில் வெளிச்சம் வீசுவதற்காக அவர்களுக்குள் இருந்த வெளிச்சத்தினிமித்தமாக நாகூம், அவைகள் தீ பந்தங்களைப்போல் இருப்பதாக எழுதுகிறார்.

## ஆபகூக்

இந்த பெயர் கூறுவதற்கு சற்று கடினமாக இருக்கிறது. இவர் தேவனை அதிகமாக நேசித்து அநேக அற்புதமான காரியங்களை அவர் புத்தகத்தில் எழுதியிருக்கிறார். "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." ஆபகூக் 2:14

## செப்பனியா

இந்த புத்தகத்தில் தீர்க்கதரிசியாகிய செப்பனியா - இந்த முழு உலகமும் தேவனை ஆராதித்து, அவரை சேவித்து, அவர் விரும்பும் காரியங்களைச் செய்யக்கூடிய காலம் இனி வரக்கூடியதாக விவரிக்கப்படுகிறது. அப்பொழுது அனைவருக்கும் ஒரே மதமும், ஒரே தேவனைப்பற்றி அறியக்கூடிய அறிவும் பெற்றிருப்பார்கள் என்று கூறப்படுகிறது. இந்த முழு உலகமும் தேவனை ஆராதித்து அவரை சேவிக்கக்கூடிய காலம் வருகிறதாக தீர்க்கதரிசியாகிய செப்பனியா இந்த புஸ்தகத்தில் விவரிக்கிறார். அக்காலத்தில் அனைவருக்கும் ஒரே மதம் இருப்பதாகவும் அனைவரும் தேவனைப்பற்றிய அறிவை பெற்றவர்களாகவும் இருப்பார்கள் என்று கூறப்படுகிறது. ஏனெனில், தேவனும், அவர் கொடுத்த அற்புதமான வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் அக்காலத்தில் நிறைவேற்றப்போகிறார். ஆகவே, "அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையை சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்" (செப்பனியா 3:9) என்று தேவன் சொல்லுகிறார்.

## ஆகாய்

இப்புத்தகம், இதை எழுதிட்ட தேவனுடைய தீர்க்கதரிசியினுடைய பெயர் சூட்டப்பட்ட மற்றொரு புத்தகமாகும். தேவன் மற்றொரு தீர்க்கதரிசிகளுக்கு உதவி செய்ததுபோல, இனி வரக்கூடிய காரியங்களை எழுதுவதற்கு ஆகாய் தீர்க்கதரிசிக்கும் உதவி செய்தார். பூமியிலுள்ள சகல ஜாதிகளும் அசைக்கப்படுவார்கள் என்று அவர் எழுதுகிறார். இப்படிப்பட்ட உபத்திரவங்கள் ஜாதிகள்மேல் வந்திருப்பதை நாம் முன்னதாகவே கண்டிருக்கிறோம்.

மேலும், "சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்; இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (ஆகாய் 2:7) என்று தீர்க்கதரிசி எழுதினார். இன்னும் இந்த யுத்தங்களும் இராதபடிக்கு காலம்வருகிறதென்றும் சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் வாழ்க்கையில் மகிழ்ச்சியோடு அனுபவிக்கக்கூடிய காலம் வருகிறது என்றும் இவ்வசனம் பொருள்படுகிறது.

## சகரியா

இந்த புஸ்தகம் சகரியா என்ற தீர்க்கதரிசியின் பெயரைக்கொண்டுள்ளது. இஸ்ரயேலர்களில் வரக்கூடிய மாபெரும் உபத்திரவத்தைக்குறித்து இதில் எழுதப்பட்டுள்ளது. மேலும், இஸ்ரயேலர்களும் மற்ற தேசத்தாரும் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய ஒரு காலம் வருகிறதாக இவர் கூறுகிறார். ஏனெனில், அப்பொழுது தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய ஆசீர்வாதங்களைப்பெற இருக்கிறார்கள்.

**மல்கியா**

இது வேதாகமத்தின் கடைசி புத்தகமாக இருக்கிறது. அதாவது, பழைய ஏற்பாட்டு பகுதியில் இது கடைசி புத்தகம். மற்ற புத்தகங்களைப்போல இந்த புத்தகத்தை எழுதினவருடைய பெயரே இதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற புத்தகங்களைப்போல இந்த புத்தகத்தை எழுதுவதற்கும் தேவன் வழிநடத்தினார். இந்த வேதாகமத்திலுள்ள எல்லா புத்தகங்களையும் நீங்கள் மனதில் கொண்டிருக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். சில புத்தகங்களை யார் எழுதினாலும் சரி, தேவன் சொல்லியபடி அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

அதாவது, இந்த முழு வேதாகமம் தேவனுடைய புத்தகம் என்று பொருள்படுகிறது. ஏனெனில், இது உண்மையாக நிறைவேறக்கூடிய தேவனுடைய புத்தகமாய் இருக்கிறது.


இஸ்ரயேல் ஜனங்கள் தங்களுடைய துன்மார்க்கமான வழியைவிட்டு மனம்மாறி தேவனை சேவிக்காவிட்டால், அந்த ஜாதிகள்மேல் கடுமையான உபத்திரவம் வரும் என்பதை தேவன் கூறியபடி மல்கியா எழுதினார். நாம் அந்த உபத்திரவ காலத்தின் துவக்கத்தில் இருக்கிறோம். ஆனாலும், அந்த உபத்திரவ காலத்தின் முடிவில் இந்த முழு உலகமே ஆசீர்வதிக்கக்கூடிய ஒரு அற்புதமான காலம்வரும் என்பதையும் மல்கியா எழுதியுள்ளார்.


நீங்கள் வளர்ந்து பெரியவர்களாகும்பொழுது, நீங்கள் வேதாகமத்திலுள்ள எல்லா புத்தகங்களையும் முழுமையாக வாசிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அப்பொழுது தேவன் கூறியிருக்கிறதும், நாம் செய்ய வேண்டும் என்று அவர் விரும்பும் பல அற்புதமான காரியங்களைக்குறித்து நீங்களே கற்றுக்கொள்ளலாம்.

நீங்கள் பழைய ஏற்பாட்டின் பகுதியில், தேவன் இந்த பூமிக்கு ஒருவரை அனுப்பப்போவதாக வாக்களித்தார். இவர் ஒரு இராஜாவாக இருந்து அனைவரையும் மகிழ்ச்சியாக ஆட்சி செய்வார் என்று கூறப்பட்டது. இந்த ஒருவர், ஆபிரகாமின் குடும்பத்திலிருந்து வரவேண்டியதாயிருந்தது, அதாவது, அவர் ஒரு இஸ்ரயேலனாக இருக்கவேண்டியதாக இருந்தது. இவரே, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் நிறைவேற்றப் போகிறவர்.

இவர் ஒரு குழந்தையாக பிறந்து, இந்த பூமிக்கு சமாதானப் பிரபுவாக இருப்பார் என்று தேவன் ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக வாக்களித்திருக்கிறார். அவருடைய பெயர் இயேசு. அவரைக்குறித்து நாம் அடுத்த கதையில் பார்க்கலாம்.

இந்த இயேசுவின் பிறப்புக்குப்பின், தேவனுடைய ஊழியக்காரர்கள் வேதாகமத்தின் இரண்டாம் பகுதியாகிய புதிய ஏற்பாட்டை எழுதினார்கள். தேவன் பழைய ஏற்பாட்டில் கொடுத்த அநேக வாக்குத்தத்தங்கள், புதிய ஏற்பாட்டின் காலத்தில் நிறைவேறத் துவங்கியது. மீதமுள்ள வாக்குத்தத்தங்கள் அனைத்தும், வரக்கூடிய காலத்தில் ஒன்றுக்குப்பின் ஒன்றாக நிச்சயமாக நிறைவேறும்.





இயேசுவின்
உலகம்
தீரு
தாண்
கலிலேயா
பெத்சாயிதா
கப்பர்நகூம்
கலிலேயக் கடல்
கர்மேல் மலை
கானா
நாசரேத்து
தாபோர் மலை
மத்தியத்தரைக் கடல்
நாயீன்
இயேசுவின் பாதங்களை ஸ்திரீ அபிஷேகித்தல்
செசரியா
யோர்தான் நதி
யோர்தானில் இயேசு ஞானஸ்நானம் பெறுதல்
சமாரியா
சமாரியா
ஏபால் மலை
சீகார்
கெரிசீம் மலை
கிணற்றண்டையில் ஸ்திரீ
யோப்பா
ஓசன்னா
எம்மாவு
பெதலகேம்
"லாசரு புறப்பட்டு வருதல்"
பெத்தானி
அஸ்கலோன்
பெத்லகேம்
ஒரு குழந்தை பிறந்தது
சவக் கடல்
கிழக்கிலிருந்து வந்த மனுஷர்கள்
மேய்ப்பர்கள் தங்கள் மந்தைகளைக் கண்காணித்தல்
யூதேயா
பெயர்செபா

# புதிய ஏற்பாட்டு கதைகள்



# 32. மிக முக்கியமான குழந்தை

இந்த உலகத்தில் பிறந்த மிக முக்கியமான குழந்தை ஜார்ஜ் வாஷிங்டன் என்று சிலர் எண்ணியிருக்கலாம். ஆனால், அது தவறு. இந்த உலகத்தில் பிறந்த ஒரு முக்கியமான குழந்தை "இயேசு." அவருடைய பிறப்புக்கு முன், எந்த ஒரு குழந்தையும் மிகவும் முக்கியமாகக் கருதப்படவில்லை. அவருடைய பிறப்புக்குப் பின்னும், அவரைப்போல ஒருவரும் பிறக்கவில்லை. இயேசு இந்த உலகத்தில் பிறந்தபோது, தேவனுடைய பல அற்புதமான வாக்குத்தத்தங்கள் நிறைவேறும் என்பது பொருள்பட்டது. தேவன் கொடுத்த மீதமுள்ள வாக்குத்தத்தங்களும், இனி நிறைவேறும் என்று நிச்சயிக்கப்பட்டது. ஆகவே, இயேசுவின் பிறப்பு மிக முக்கியமானதாக இருந்தது.

கால்நடைகளின் உணவு வைக்கப்படும் ஒரு மாட்டுத்தொழுவத்தில் இயேசு பிறந்தார். இனி, இதன் காரணத்தை நாம் பார்க்கலாம். அவருடைய பெற்றோர்கள் நாசரேத் என்ற பட்டணத்தில் வாழ்ந்துவந்தார்கள். இஸ்ரேயல் ஜனங்களை அவர்களுடைய இராஜா ஆட்சி செய்யவில்லை. அவர்கள் ரோமர்களால் ஆட்சி செய்யப்பட்டார்கள். ரோம அரசாங்கம் எல்லா ஜனங்களிடம் வரிவசூலிப்பதற்கு ஆயத்தமானபோது, ரோம வரி புத்தகத்தில் தங்களுடைய பெயர்களை எழுதுவதற்காக இயேசுவின் பெற்றோர் பெத்லகேமுக்குப்போக வேண்டியதாய் இருந்தது.

அநேக ஜனங்கள் அந்நேரத்தில் பெத்லகேமுக்குச் சென்றிருந்தார்கள். இயேசுவின் பெற்றோர் அங்கு வந்தபோது அவர்கள் தங்குவதற்கு இடம் இல்லாதிருந்தது. எல்லா இடங்களிலும் ஜனங்கள் இருந்தார்கள். அந்த இராத்திரியில் தங்குவதற்கு அந்த தொழுவத்தைத்தவிர அவர்களுக்கு வேறு எந்த இடமும் கிடைக்கவில்லை.

ஆகவே, இயேசு அவ்விடத்தில் பிறந்தார்.

இது ஒரு பெரிய வித்தியாசமான காரியமல்ல. அவர்கள் எங்கு பிறந்தார்கள் என்று மிகப்பெரிய அளவில் கணக்கிடப்படுவதில்லை அல்லவா? ஆனால், இயேசு தேவனுடைய சொந்த குமாரனாக இருந்தார். தேவன் அவரை அதிகமாக நேசித்தார். அவர் நிறைவேற்றுவதற்கு ஒரு அற்புதமான வேலையை நியமித்திருந்தார். அந்த வேலையினிமித்தம் இந்த உலகத்திலுள்ள அனைவரும் ஜீவனைப்பெற்று மகிழ்ச்சியோடு இருப்பார்கள்.

இயேசு பிறந்த அந்த இரவில் ஒரு அற்புதமான காரியம் நிகழ்ந்தது.

பெத்லகேமுக்கு அருகாமையிலுள்ள வயல்களில் மந்தைகளை மேய்த்துக்கொண்டிருந்த மேய்ப்பர்கள் கூட்டமாக இருந்தார்கள். திடீரென்று வானத்திலிருந்து ஒரு அருமையான இசையை அவர்கள் கேட்டார்கள். சந்தேகத்திற்கிடமின்றி, விநோதமான இக்காரியத்தைக் கண்ட அவர்கள் பயந்திருக்க வேண்டும். வானத்தில் காணப்பட்ட தூதர்கள் பயப்பட வேண்டாம் என்று அவர்களிடத்தில் கூறினார்கள். இந்த மேய்ப்பர்களுக்கு ஒரு நற்செய்தி உண்டு என்பதையும் அந்த தூதர்கள் கூறினார்கள் - கிறிஸ்து என்னும் இரட்சகர் இந்த இராத்திரியில் பிறந்திருப்பதாகவும் அவர் இஸ்ரயேல் ஜனங்களை தங்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிப்பார் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் அறிவித்தார்கள். இது, அற்புதமான செய்தி அல்லவா?

இயேசுவுக்கு கிறிஸ்து என்ற ஒரு நாமமும் உண்டு. அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பதற்காக தேவன் அவரை அனுப்பும்படி வாக்களித்தார் என்பதே இயேசுவின் நாமத்திற்கான பொருளாகும். நூற்றுக்கணக்கான வருடங்களாக கிறிஸ்துவை அனுப்புவதாக வாக்களித்தார். இப்பொழுது இவர் ஒரு குழந்தையாக, பெத்லகேமில், அந்த தொழுவத்தில் பிறந்திருக்கிறார் என்று அங்குள்ள மேய்ப்பர்களுக்கு தூதர்கள் கூறினார்கள். அந்த மேய்ப்பர்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருந்திருக்க வேண்டும்!

இந்த நற்செய்தியை மேய்ப்பர்களிடம் அந்த தூதர் கூறியதற்குப்பின் அவரோடுகூட நின்ற அந்த தூதர்களின் திரள் தோன்றி பாடத் துவங்கினார்கள். இந்த பூமியின்மேல் சமாதானம் நிலவும் என்றும் இந்த பூமியிலுள்ள சகல ஜனங்களுக்கும் நன்மை உண்டாகும்படி தேவன் அவருடைய குமாரனை அனுப்பினார் என்றும் அவர்கள் பாடினார்கள். ஆம், தேவன் ஜனங்கள் அனைவரையும் நேசிக்கிறார். இப்பொழுது உண்மையில் அவர்களை ஆசீர்வதிக்கும்படியாகக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமானார்.

அது எவ்வளவு அற்புதமான இரவாக இருந்திருக்கும்!

உடனடியாக மேய்ப்பர்கள் பெத்லகேமுக்குச் சென்று அந்த குழந்தையைக் கண்டார்கள். தேவன் அனுப்பின அந்த குழந்தை மிக அற்புதமானதாக இருந்தது. அவர்கள் அந்த குழந்தையை தொழுதுகொண்டு தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிஜமாக நிறைவேற்றுகிறார் என்பதற்காக அவருக்கும் அனைவரும் நன்றி செலுத்தினார்கள். இந்த முழு உலகத்தையும் இயேசு மகா இராஜாவாக ஆட்சி செய்வார் என்பதே தேவன் கொடுத்த வாக்குத்தத்தமாகும். மற்ற கதைகளில் சொல்லப்பட்ட இராஜாவாகிய இயேசு இவர்தான்.

தூர தேசத்தில் பாலஸ்தீனாவிற்குக் கிழக்கே ஞானிகள் இருந்தார்கள். இன்றைய தினத்தில் புனிதர்கள் என்று நாம் அழைப்பவர்களுக்கு இவர்கள் ஒப்பாயிருந்தார்கள். இவர்கள் வானசாஸ்திரத்தைக் கற்றவர்கள். அவர்கள் வானத்திலிருக்கும் நட்சத்திரங்களைப்பார்த்து தேவன் என்ன செய்யப்போகிறார் என்பதை அறிந்துகொள்பவர்கள். ஆம், இவர்கள் இயேசுவின் பிறப்பை அறிந்துகொண்டு அவரே மகா இராஜாவாக இருக்கப்போகிறவர் என்பதை அறிந்தவர்களாக புதிதாகப் பிறந்த அந்த இராஜாவைப் பார்ப்பதற்கு பெத்லகேமுக்குப் பிரயாணமாக வந்தார்கள்.

அவர்கள் இஸ்ரயேல் தேசத்திற்கு வந்தபோது, அங்குள்ள இராஜாவாகிய ஏரோதை காணும்படி முதலில் முடிவு செய்தார்கள். ஏரோது ராஜா அக்காலத்தில் முழு ரோம உலகத்திற்கு (சர்வாதிகாரமுள்ள) ஒரு ராஜாவாக இருந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக இராயர் என்பவர் ஆட்சி செய்தார். அக்காலத்தில் திபேரியு இராயன் ஆட்சி செய்துக் கொண்டிருக்கும்போது ஏரோது அவருக்குக் கீழ் இராஜாவாக ஆட்சி செய்துக்கொண்டிருந்தார்.

இராயரின் கட்டளைபடியே ஏரோது நடக்க வேண்டியதாய் இருந்தது.

ஆம், இந்த ஞானிகள் ஏரோதை சந்தித்து, இயேசுவின் பிறப்பைப்பற்றியும், அவர் ஒரு யூதக் குழந்தை என்பதையும் அவர் வளர்ச்சியடையும்போது ஒரு மகாராஜாவாக இருப்பார் என்பதையும் அறிவித்தார்கள். இக்காரியங்கள் ஏரோதின் மனதுக்கு சஞ்சலமாயிருந்தது. எனவே, அக்குழந்தையைக் கொல்லுவதற்கு முடிவு செய்தார்.

ஆனால், ஏரோது செய்ய நினைத்த காரியங்களை அந்த ஞானிகளிடம் கூறவில்லை. அந்த புதிய இராஜாவை தானே காண விரும்புவதாக, ஏரோது அந்த ஞானிகளிடம் சொல்லியனுப்பினார். முதலில் அவர்கள் அந்த குழந்தையைத்தேடி கண்டபின், அந்த குழந்தை பிறந்திருக்கும் பிறப்பு குறித்து தன்னிடம் வந்து கூறும்படி ஏரோது அந்த ஞானிகளிடம் அறிவித்தான். இது ஒரு அறிவுள்ள செயலாக இருந்தாலும், பிதாவாகிய தேவன் இயேசுவுக்கு

பாதுகாப்பு அளித்தார். அந்த ஞானிகள் குழந்தையாகிய இயேசுவையும், அதன் தாயையும் கண்டார்கள். அவர்கள் கொண்டுவந்த வெகுமதிகளையும் அவர்களிடம் கொடுத்து அந்த குழந்தையைத் தொழுதுகொண்டார்கள்.

அந்த நாள் நெருங்கும்வரைக்கும் அவர்கள் தங்கினார்கள். மீண்டும் ஏரோது இராஜாவைக் காண்பது, தவறான காரியம் என்று அவர்கள் சொப்பனத்தில் உணர்த்தப்பட்டார்கள். ஆகவே, ஏரோது இராஜாவிடம் எந்த அறிவிப்பும் கொடுக்காமல் அவர்கள் தங்களுடைய தேசத்திற்கு வேறு வழியாய் திரும்பிச் சென்றார்கள்.

தேவன் அவர்களுக்கு இந்த சொப்பனத்தைக் கொடுத்ததினால், அவர்கள் ஏரோதின் கண்களுக்கு மறைவாக அவர்கள் வேறுவழியாகச் சென்றுவிட்டார்கள். இந்த ஞானிகள், தேவன் சொல்லிய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்தார்கள். இப்படியாக, அந்த குழந்தையைக் கண்டு கொல்லவேண்டும் என்ற ஏரோதின் திட்டம் தோல்வியடைந்தது.

அந்த ஞானிகள் வேறுவழியாகச் சென்றதை அறிந்த ஏரோது, மிகவும் கோபமடைந்தான். இயேசுவை எப்படி கண்டுபிடிப்பது என்று அவனுக்குத் தெரியவில்லை. வருங்காலத்து இராஜா பிறந்திருப்பதை மாத்திரம் அவன் அறிந்திருந்தான். ஆகவே, இராஜாவாக வளர்ச்சியடைவதற்கு முன், அந்த குழந்தையைக் கொல்ல வேண்டும் என்று திட்டமிட்டான்.

ஏரோது ஒரு கொடூரமான காரியத்தை நடப்பித்தான்.

பெத்லகேமிலுள்ள யூத குழந்தைகள் அனைவரும் கொல்லப்படவேண்டும் என்று கட்டளை பிறப்பித்தான். எல்லாக் குழந்தைகளும் கொல்லப்படும்போது இயேசுவும் நிச்சயமாகக் கொல்லப்படுவார் என்று அவன் நம்பினான். இது, எவ்வளவு கொடூரமான காரியம்?

நிச்சயமாக அனைத்து குழந்தைகளும் ஜீவனோடு எழுப்பப்படுவார்கள். "சத்துருக்களின் தேசத்திலிருந்து" இவர்கள் திரும்பிவருவார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. மரணமே சத்துருக்களின் தேசம் என்று குறிப்பிடப்படுகிறது. ஆகவே, மரணத்திலிருந்து எல்லாக் குழந்தைகளும் திரும்பிவருவார்கள். பிதாவாகிய தேவன், தீர்க்கதரிசியாகிய எரேமியா மூலமாக இந்த வாக்குத்தத்தத்தை எழுதும்படி சொன்னார். ஆகவே, எரேமியா 31:16-17 வசனங்களில் இந்தக் காரியங்களை நாம் வாசிக்கலாம்.

பல யூத குழந்தைகள் கொல்லப்பட்டாலும், தேவன் இயேசுவைப் பாதுகாத்ததினால் இயேசு அத்தருணத்தில் கொல்லப்படவில்லை. தேவன் இயேசுவாகிய குழந்தையைக் கொல்ல அனுமதித்திருந்தால் அவர் கொடுத்த அற்புதமான வாக்குத்தத்தங்கள் உண்மையில் நிறைவேறியிருக்காது.

அதற்குப் பின் தேவன் என்ன செய்தார்?

ஆம், அதே இராத்திரி யோசேப்பு ஒரு சொப்பனம் கண்டார். அதற்குப் பின் தானும், மரியாளையும், குழந்தையையும் அழைத்துக்கொண்டு எகிப்துக்குச் சென்றார். இப்படியாக இயேசு ஏரோதிடமிருந்து தப்பித்தார்.

இயேசு பன்னிரண்டு வயதாகும்வரைக்கும் அவரைக்குறித்த விவரங்களை வேதாகமம் கூறுவதில்லை. அதற்குள் இராஜாவாகிய ஏரோது மரித்துவிட்டான். அதற்குப்பின் யோசேப்பு, மரியாளையும் இயேசுவையும் அழைத்துக்கொண்டு நாசரேத்திலுள்ள தங்களுடைய வீட்டிற்குச் சென்றார்கள். நாசரேத்துக்கு அவர்கள் சென்ற பின், அவர்கள் ஆலயத்திற்குச் சென்றார்கள். அங்கு இயேசு அங்குள்ள போதகர்களோடு சம்பாஷித்தார்.

அவருடைய பெற்றோர்கள் வீடு திரும்புவதையும்கூட அறியாமல், இயேசு அவர்களோடு பேசிக்கொண்டிருந்தார். மற்றவர்களோடு அவர் வீடு திரும்பிவிடுவார் என்று அவர்கள் எண்ணினார்கள். ஆனால், மற்ற நண்பர்கள் உறவினர்களோடு அவர் வீடு திரும்பவில்லை என்று அறிந்த பெற்றோர் மீண்டும் எருசலேமுக்குச் சென்றபோது அவரை ஆலயத்தில் கண்டார்கள். இவ்வளவு பிரச்சனைகள் ஏற்பட்டதினிமித்தம் அவருடைய தாய் மிகவும் கவலைகொண்டதாக இயேசுவிடம் கூறினார். பிதா விரும்பிய காரியங்களைச் செய்வது தனக்கு மிக அவசியம் என்பதை நீங்கள் அறியாமலிருப்பது என்ன என்று இயேசு அவர்களிடம் பதிலளித்தார்.

இயேசு கூறியதை அவர்கள் புரிந்துகொண்டார்களோ இல்லையோ என்று தெரியவில்லை. ஆனாலும், தேவன் இயேசுவுக்குப் பிதாவாக இருந்ததை இயேசு நன்கு அறிந்திருந்தார். மேலும், அவருடைய பன்னிரண்டாம் வயதிலேயே பிதாவுக்காகச் செய்ய வேண்டிய காரியங்களை அவர் உணர்ந்திருந்தார்.

தேவனுக்காக பணி செய்பவர்களை, ஆசாரியர்கள் அல்லது தீர்க்கதரிசிகள் என்றும், இவர்கள் குறைந்த பட்சம் முப்பது வயது நிரம்பினவர்களாக இருக்க வேண்டும் என்றும், தேவன் மோசே வழியாக இஸ்ரயேல் ஜனங்களுக்குக் கொடுத்த நியாயப்பிரமாணத்தில் எழுதப்பட்டிருந்தது. ஆனால், இயேசு பன்னிரண்டு வயது நிரம்பினவராக ஆலயத்தில் அமர்ந்து கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்தார். மேலும், இக்காரியங்களை முழுமையாக நிறைவேற்ற அவர் முப்பது வயதுவரை காத்திருக்க வேண்டும் என்ற காரியத்தை அவர் கற்றுக்கொண்டார்.

இயேசுவின் தந்தை என்று அழைக்கப்பட்ட யோசேப்போடு அவர் வீட்டுக்குத் திரும்பிச் சென்று மீதியுள்ள அந்த பதினெட்டு வருடங்கள் தச்சுத் தொழிலில் ஈடுபட்டிருந்தார். நிச்சயமாக இயேசு ஒரு அற்புதமான தச்சராக இருந்திருக்க வேண்டுமல்லவா?

**கேள்விகள் :-**

1. இந்த உலகத்தில் பிறந்த முக்கியமான குழந்தை எது? அவர் பிறந்தபோது என்ன பொருள்பட்டது?

2. இயேசு எங்கு பிறந்தார்? தேவன் அவருடைய பிறப்பை யாருக்கு அறிவித்தார்?

3. அங்கு வந்த ஞானிகள் யார்? அவர்கள் இயேசுவை கண்டபின் மீண்டும் ஏரோதிடத்தில் திரும்பிப்போக வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டதன் காரணம் என்ன?

4. இயேசுவாகிய குழந்தையை இராஜாவாகிய ஏரோது எவ்வாறு கொல்ல முயற்சித்தான்?

5. லோகோஸ் என்பவர் யார்?

# 33. இயேசுவுக்கு வழியை ஆயத்தம் செய்தல்



**இதுவரைக்கும்** காணாத ஒரு அற்புதமான அனுபவத்தை இஸ்ரயேல் ஜனங்கள் பெறுவதற்கு ஒரு காலம் வந்தது. நான் முன்னதாகவே சொல்லியபடி இஸ்ரயேல் ஜனங்கள் அனைவரும் ஆபிரகாமின் குடும்பத்தினராக இருந்தார்கள். இந்த பூமியிலுள்ள முழு குடும்பங்களையும் ஆட்சி செய்வதற்கு ஒருவர் ஆபிரகாமின் குடும்பத்திலிருந்து வருவார் என்று தேவன் வாக்களித்திருந்தார். இந்த இயேசுவே, தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த சந்ததி. இப்பொழுது இயேசு தம்மை யார் என்பதை இஸ்ரயேல் ஜனங்களுக்குக் காண்பித்துக்கொள்வதற்கான நேரம் வந்தது.

எவ்வளவு மேன்மையான காரியம்! நூற்றுக்கணக்கான வருடங்கள் சென்ற பின்பும் தேவனுடைய ஒரு அற்புதமான வாக்குத்தத்தம் உண்மையாக நிறைவேறியது!

இந்த வாக்குத்தத்தம் நிறைவேறும்படியாக இஸ்ரயேல் ஜனங்கள் ஆயத்தமாக இல்லையென்பதை தேவன் அறிந்திருந்தார். அந்நாட்களில் அநேகர் தேவனை மறந்திருந்தார்கள். தேவன் என்ன விரும்புகிறார் என்பதைக் குறித்தும் அவர்கள் அறியாதிருந்தார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு உதவி தேவையில்லையா? நிச்சயமாக அவர்களுக்கு தேவனைப்பற்றின காரியங்களையும், அவர் விரும்பும் காரியங்களையும் அறிவிப்பதற்கு அவசியம் ஏற்பட்டது. ஆகவே, இக்கரியத்தைச் செய்வதற்கு ஒருவர் இருக்க வேண்டும். அவர் யார் என்பதைக்குறித்து உங்களுக்குத் தெரியுமா? ஆம், அந்த மனுஷனுக்கு யோவான் என்று பெயர்.

இந்த யோவான் இயேசுவைக்காட்டிலும் ஆறு மாதங்கள் பெரியவராக இருந்தார். தேவனுடைய ஆவி, யோவான் மீது இருந்ததாக வேதாகமம் கூறுகிறது. அதாவது, அவர் தேவனுடைய வல்லமையைப் பெற்றிருந்தார் என்று பொருள். தேவனுடைய ஆவி என்று வேதாகமம் கூறுவது அது தேவனுடைய வல்லமையைப் பொருள்படுத்தக் கூடியதாக இருக்கிறது. தேவனுடைய ஆவி யோவான்மேல் இருந்ததினால் அவர் தேவனுடைய அற்புதமான வேலைக்காரராக இருந்தார். இஸ்ரயேல் ஜனங்களுக்கு தேவனைப்பற்றி அறிவிக்கவும், அவர்கள் நியாயமான காரியங்களைச் செய்யாமல் தவறான காரியங்களைச் செய்து கொண்டிருப்பதையும் அவர்களுக்குச் சுட்டிக்காட்டி, தேவன் விரும்பிய காரியங்களை அவர்களுக்கு நினைப்பூட்டும்படியாக ஒரு முக்கியமான வேலையை தேவன் யோவானுக்குக் கொடுத்திருந்தார்.

யோவானின் வார்த்தையை விசுவாசித்தவர்கள் தங்களுடைய தவறான செய்கைகளுக்காக மனம் வருந்தினார்கள். மீண்டும் அவர்கள் தேவனை நேசிப்போம் என்று கூறினார்கள். அதற்குப் பின் தேவன் விரும்பிய காரியங்களைச் செய்வோம் என்று கூறி, யோர்தான் நதியில் அவரால் ஞானஸ்நானம் பெற்றார்கள். ஞானஸ்நானம் என்பதன் பொருள் என்ன என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஒருவர் தண்ணீரில் முழுமையாக முழுக்கப்பட்டு மீண்டும் எழுப்பப்படுவது இந்த ஞானஸ்நானத்தின் அடையாளம் என்று கூறலாம். இப்படியாக தங்களுடைய தவறான செயல்களுக்கு மனம் வருந்திய அனைத்து இஸ்ரயேலர்களுக்கும் யோவான் ஞானஸ்நானம் கொடுத்தார். அவர்களுடைய பாவத்தைப் போக்குவதைப்போல் இது இருந்தது.

தவறான காரியங்கள் பாவமாகும்.

உண்மையில் அங்கிருந்த தண்ணீர் அவர்களுடைய பாவங்களைக் கழுவவில்லை. ஏனெனில், பாவங்கள் நம்முடைய சரீரத்திற்கு வெளியே இருந்து கழுவப்படக்கூடிய அசுத்தங்கள் அல்ல. இது நமக்குள்ளிருக்கும் பாவத்தைப் போக்குதவற்கு ஒரு அடையாளமாக, தண்ணீரினால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இப்படிப்பட்ட ஞானஸ்நானத்தை யோவான் இஸ்ரயேலர்கள் மத்தியில் கொடுத்து வந்தார். இக்காரியத்தை யோவான் செய்ததினால் யோவானை, ஸ்நானகன்யோவான் என்று அழைத்தார்கள்.

யோவான், இந்த காரியங்களை பட்டணங்களில் செய்யாமல் பட்டணத்திற்கு வெளியே வனாந்தரத்தில் செய்ததாக வேதாகமம் கூறுகிறது. யோவான் வனாந்திரத்திற்குச் சென்றபோது அநேக ஜனங்களை, தேவனைப்பற்றி அவர் கூறும் வார்த்தைகளைக் கேட்பதற்கு அவரைப் பின் தொடர்ந்தார்கள்.

"யோர்தான் நதியை கடந்து செல்லுதல்" என்ற இந்தக் கதையை நீங்கள் வாசித்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். வாசித்திருந்தால் யோர்தான் நதியைக்குறித்து நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆம், இந்த யோர்தான் நதி, வனாந்தரத்தின் வழியாக ஓடியது. அங்குதான் யோவான்ஸ்நானன் தேவனைக்குறித்து பிரசங்கித்து அந்த நதியில் மனந்திரும்பிய அனைவருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார்.

பல மாதங்கள் யோவான் தேவனைக்குறித்து ஜனங்களுக்கு சொன்னதற்கு பின், ஒருநாள் ஆண்டவராகிய இயேசு பட்டணத்திலிருந்து யோவானை நோக்கி வனாந்தரத்திற்கு வந்தார். இயேசு யோவானிடம் ஞானஸ்நானம் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். ஆனால், யோவான் ஞானஸ்நானம் கொடுப்பதற்கு ஆயத்தமாகவில்லை. ஆனால், இயேசு எப்பொழுதும் தேவன் விரும்பும் காரியங்களை மட்டுமே செய்வார் என்பதை யோவான் அறிந்திருந்தான். தவறான காரியங்களைச் செய்துகொண்டிருப்பவர்கள் மனந்திரும்புதலுக்காக அல்லது மனம் திரும்புவதற்கான அடையாளமாக யோவான் அனைவருக்கும் ஞானஸ்நானம் கொடுத்து வந்தார். ஆகவே, அவர் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதை மறுத்த காரணத்தை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா?

ஆனாலும், யோவான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது சரியான காரணமாக இருக்கும் என்று இயேசு அவரிடம் கூறினார். ஏனெனில், யோவானைக்காட்டிலும் இயேசு அதிகமான காரிங்களைக்குறித்து அறிந்திருந்தார். இயேசு தண்ணீரில் ஞானஸ்நானம் எடுக்க வேண்டிய அவசியத்திற்கான மிக முக்கியமான காரியங்கள் உண்டு என்பதை அவர் அறிந்திருந்தார்.

இதற்கான காரணங்களைக்குறித்து அடுத்து பார்க்கலாம்.

அப்போது, ஒரு அற்புதமான காரியம் நிகழ்ந்தது. இயேசு தண்ணீரிலிருந்து வெளியே வரும்போது ஒரு அழகான புறா வானத்திலிருந்து பறந்து இயேசு கிறிஸ்துவின்மேல் இறங்கி வருவதை யோவான் கண்டார். இயேசுவின்மேல் தேவனுடைய ஆவி வந்ததை யோவான் புரிந்துகொண்டார். அவர்கள் இருவரும் நின்றுகொண்டிருக்கும்பொழுது, "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்ற சத்தத்தைக் கேட்டார்கள்" இது தேவனுடைய சத்தமாக இருந்தது!

இயேசுவின் பிறப்பைக்குறித்து தேவனுடைய தூதர்களில் ஒருவர் அறிவித்தார். கொடுமையான ஏரோது இராஜாவின் கைகளுக்கு தேவன் இயேசுவைத் தப்புவித்தார். இப்பொழுது தேவன் விரும்பிய காரியங்களைச் செய்வதற்கான காலம் வந்தது. ஆகவே, தேவன் விரும்பிய காரியங்களைச் செய்வதற்கான பலத்தை தேவன் அவருடைய ஆவியின் வழியாக இயேசுவுக்குக் கொடுத்தார்.

**கேள்விகள் :-**

1. இயேசுவின் இனத்தாருடைய யெபர் என்ன? தேவன் அவருக்கு என்ன வேலையைக் கொடுத்திருந்தார்?

2. இயேசுவின் இனத்தார் எங்கு வேலை செய்தார்? அங்கு அவரிடம் இயேசு சென்ற காரணம் என்ன?

3. தேவனுடைய ஆவி அல்லது தேவனுடைய வல்லமை இயேசுவின்மேல் வந்ததை யோவானால் எவ்வாறு அறிந்துகொள்ள முடிந்தது?



# 34. இயேசு தவறு செய்யார்

தேவன் சொல்லிய காரியங்களை மட்டுமே இயேசு எப்பொழுதும் செய்தார்! தேவன் விரும்பாத காரியங்களை இயேசு செய்யும்படி பிசாசாகிய சாத்தான் முயற்சித்தான். ஆனாலும், இயேசு சரியான காரியங்களைமட்டுமே செய்தார். ஏதேன் தோட்டத்தில் ஆதாம் மற்றும் ஏவாளுடைய கதையை நீங்கள் நினைவில் வைத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். தேவன் அவர்களுக்குச் சொல்லியிராத காரியங்களைச் செய்யும்படி சாத்தான் அவர்களுக்கு எவ்வாறு ஆலோசனை கூறினான் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இதினிமித்தமாக அவர்கள் அழகான தோட்டத்தை இழப்பதோடுமட்டுமல்ல அவர்கள் வயது சென்று மரித்துவிட்டார்கள் என்பதையும் நாம் அறிவோம்.

இந்த உலகத்திலுள்ள அனைவரும் பரிபூரணமான ஜீவனை மீண்டும் பெறுவதற்காக இப்பொழுது இயேசு இந்த உலகத்திற்கு வந்தார். முழு உலக ஜனங்களுக்கும் தேவன் மிகப்பெரிய ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தமாகக் கொடுத்திருப்பதை தடுப்பதற்காக சாத்தான் இயேசுவை தவறான காரியங்களைச் செய்வதற்காக மிகக் கடுமையாக முயற்சித்தான்.

இயேசு யோர்தான் நதியில் ஞானஸ்நானம் எடுத்தபோது, தேவனுடைய வல்லமை அவர்மேல் வந்தது. அவர் அந்நாள்வரைக்கும் செய்யாத அற்புதமான வேலையைச் செய்வார் என்பதை அறிந்திருந்தார். இப்பொழுது, இயேசுவால் அநேக அற்புதங்களை நடப்பிக்க முடியும். அற்புதங்கள் என்றால் என்ன என்பது உங்களுக்குத் தெரியும். ஆம், இந்த உலகத்தில் மனுஷர்களால் செய்ய முடியாத காரியங்களை அற்புதம் என்று கூறுகிறோம். ஆனால், தேவனுடைய வல்லமையை இயேசு பெற்றபோது அவரால் அநேக அற்புதமான காரியங்களைச் செய்ய முடிந்தது.

நாம் அழகுள்ள பூக்களை சிருஷ்டிக்க முடியுமா? ஆனால், தேவன் அவைகளைச் செய்வார்.

ஆனால், பூக்கள் வளருமே என்று சிலர் கூறலாம். ஆம், நிச்சயமாக வளரும். ஆனால், அதை வளர்ப்பவர் யார்? தேவனே அவைகளை வளர்ப்பவர். நாம் பூக்கள் வளர்வதைக் காணலாம். ஆனால், அதை எது வளரச்செய்கிறது என்றோ அல்லது ஒவ்வொரு பூக்கள் பெற்றிருக்கும் நிறங்கள்பற்றியோ நம்மால் எதுவும் கூற முடியாது. ஆம், அவைகளை சிருஷ்டித்த தேவனே சகலத்தையும் அறிவார்.

நாம் புரிந்துகொள்ள முடியாத காரியங்களையும் இயேசு தேவனுடைய ஆவியைப் பெற்று செய்ய முடியும் என்பதை நீங்கள் நினைவில்கொள்ள வேண்டும் என்பதை நான் விரும்புகின்றேன். ஏனெனில், இயேசு செய்த பல அற்புதமான காரியங்களை நான் உங்களுக்கு சொல்லப் போகிறேன். ஆகவே, இந்த குறிப்பை நீங்கள் எப்பொழுதும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அவைகள் அனைத்தும் நடந்த உண்மைகளே. வேதாகமமும் இவைகளைப்பற்றி கூறுகிறது. வேதாகமம் உண்மை என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

தேவனுடைய வல்லமை இயேசுவின்மேல் வந்தபோது அவர் மிகவும் மகிழ்ச்சியாயிருந்தார். தேவனுடைய விருப்பத்தை அறியும்படிக்கு அவரிடம் ஜெபித்து சகல காரியங்களைக்குறித்து தியானிப்பதற்காக இயேசு வனாந்தரத்திற்குச் சென்றார். அவர் அங்கு

40 நாள் புசியாமல் இருந்தார். புசியாமல் இருப்பதற்கு அது ஒரு நீண்ட காலம் அல்லவா? நிச்சயமாக இயேசு மிகவும் பசியாக இருந்தார். அப்பொழுது சாத்தான் அவரிடம் வந்து நீர் தேவனுடைய வல்லமையைப் பயன்படுத்தி இந்த கல்லுகள் அப்பமாகும்படி சொல்லும் என்று கூறியது.

இப்படியாக சாத்தான் இயேசுவை சோதித்தான் என்று வேதம் கூறுகிறது.

சோதிப்பது என்பதின் பொருளைக்குறித்து உங்களுக்குத் தெரியுமா?

நாம் தவறு என்று அறிந்திருந்தாலும் அவைகளை செயல்படுத்துவதற்கு நம்மை தூண்டுவதே சோதனையாகும். கல்லுகளை அப்பங்களாக மாற்றி தன்னுடைய பசியை திருப்திசெய்வதற்கு தேவனுடைய ஆவியை பயன்படுத்துவது மிகத் தவறு என்பதை இயேசு நன்கு அறிந்திருந்தார்.

இது தவறு என்பதை இயேசு எப்படியாக உணர்ந்திருந்தார்?

அன்பான பிள்ளைகளே, நீங்கள் எப்பொழுதும் நினைவில்கொள்ள வேண்டிய காரியத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்; நீங்கள் உங்களுக்கென்று செய்யக்கூடிய காரியங்களைக் குறித்து சிந்திப்பதற்கு முன்னதாக மற்றவர்களுடைய நன்மைக்காக என்ன செய்ய வேண்டும் என்பதை சிந்திக்க வேண்டும். இப்படியாக நாம் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அப்பொழுது சுயநலமற்றவர்கள் என்று அழைக்கப்படுவோம்.

ஆம், இயேசு தேவனுடைய வல்லமையைப் பெற்றவுடன் மற்ற ஜனங்களுக்குத் தேவையான பல அற்புதங்களை நிகழ்த்தினார். ஆனால், இந்த வல்லமையை தனக்கே பயன்படுத்திக்கொள்வது தேவனுக்கு முன்பாக தவறாக இருந்தது. தேவனுடைய வல்லமையை பயன்படுத்தி, கல்லுகளை அப்பங்களாக மாற்றி புசிப்பதற்குப்பதிலாக சிறிது நேரம் பசியோடிருந்து ஆகாரத்தைத் தேடி புசித்துக்கொள்ளலாம் என்று இயேசு சாத்தான் சொல்லிய காரியங்களைச் செய்யவில்லை. அதாவது, தேவன் விரும்பாத காரியத்தை அவர் செய்யவில்லை.

இது சிறியவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும். இந்த கதையை நீங்கள் எப்பொழுதும் நினைவில்கொள்வீர்களானால் உங்களைக் குறித்தல்ல உண்மையில் மற்றவர்களின் நன்மையைக்குறித்து எப்பொழுதும் சிந்திக்கக் கூடியவர்களாக இருப்பீர்கள். இதுவே மகிழ்ச்சியைப் பெறுவதற்கு உண்மையான வழியாகும். இது மகிழ்ச்சியாக இருப்பதற்கு தேவனுடைய வழியாகவும் இருக்கிறது.

ஏனெனில், மற்றவர்களுக்கு நன்மை செய்வதே தேவனுடைய விருப்பம்.

நமக்காக தேவன் வாக்களித்த அற்புதமான காரியங்களைச் சற்று யோசித்துப் பாருங்கள். நாமும் தேவனைப்போல் இருக்க வேண்டாமா? ஆம், இப்படிப்பட்ட வழியில் நாம் நடக்க வேண்டும் என்பதே தேவன் விரும்பும் காரியமாகும். ஏனெனில், அதுவே நமக்கு சிறந்த காரியம் என்று தேவன் அறிந்திருக்கிறார்.

**கேள்விகள் :-**

1. இயேசு எப்போதாவது தவறு செய்தாரா?

2. இயேசு கற்களினால் அப்பத்தை செய்வது தவறான காரியமாக இருந்ததன் காரணம் என்ன?



## 35. இயேசுவின் வல்லமையுள்ள கிரியைகள்

**நீங்கள்** எப்பொழுதாவது ஒரு பார்வையற்ற மனுஷனைப் பார்த்திருக்கிறீர்களா? ஒரு பார்வையற்ற மனுஷன் சாலையை கடக்க முடியாதபடிக்கு நின்றுகொண்டிருக்கும்பொழுது, அவருடைய கரங்களைப் பிடித்து அந்த சாலையைக் கடக்கச் செய்வது ஒரு நல்ல இரக்கமுள்ள காரியமாக இருக்கும். ஆனால், பார்வையற்ற அந்த மனுஷனின் கண்களை மீண்டும் பார்வையடையச் செய்வது எவ்வளவு அற்புதமான காரியமாக இருக்கும்? இது அதைக்காட்டிலும் மேன்மையான ஒரு காரியம்!

ஆம், தேவனுடைய வல்லமையை இயேசு பெற்றதினால் இப்படிப்பட்ட காரியங்களை இயேசு செய்தார். ஏனெனில், தேவனுடைய வல்லமையால் அற்புதமான காரியங்களைச் செய்ய இயலும். ஆம், பார்வையற்றோரின் கண்களை இயேசு திறந்தார். செவிடர்களின் காதுகளை கேட்கும்படி செய்தார். முடவர்களை நடக்கும்படி சொஸ்தமாக்கினார்.

இயேசு இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வார் என்று தேவன் முன்னதாகவே வாக்களித்திருந்தார். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எப்பொழுதும் முழுமையாக நிறைவேறும்.

உண்மையில் அனைத்து குருடர்களையும் இயேசு சொஸ்தமாக்கவில்லை. மேலும், வியாதியாயிருந்த அனைவரையும் அவர் குணப்படுத்தவில்லை. ஆனால், அவர் இராஜாவாக இந்த முழு உலகத்தை ஆட்சி செய்யும்போது, இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யப் போகிறார் என்பதை முன்னதாகவே செய்து காட்டினார். அப்போது தேவனுடைய எல்லா வாக்குத்தத்தங்களும் உண்மையில் நிறைவேறும். இயேசு அவைகளை உண்மையில் நிறைவேற்ற வல்லவர் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

வியாதியஸ்தரை சுகப்படுத்தும் அற்புதமான காரிங்களைக்காட்டிலும் மேலான காரியங்களை இயேசு செய்தார். இஸ்ரயேல் தேசத்தில் பெத்தானியா என்ற ஒரு பட்டணம் இருந்தது. அந்தப் பட்டணத்தில் மூன்று நபர்களைக்கொண்ட ஒரு அருமையான குடும்பம் வசித்து வந்தது. இவர்கள், இரண்டு சகோதரிகளாகிய மார்த்தாள் மற்றும் மரியாள், மற்றும் அவர்களின் சகோதரனாகிய லாசரு. மார்த்தாள், மரியாள் மற்றும் லாசரு அனைவருமே இயேசுவுக்கு சிநேகிதர்களாக இருந்தார்கள். இயேசு அவர்களைபோய் சந்திப்பது வழக்கமாக இருந்தது. நம்முடைய வீடுகளில் நம்மை சந்திப்பதற்கு நண்பர்கள் வரும்போது நாம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறோம்?

ஒருமுறை, இயேசு பெத்தானியாவைவிட்டு தொலைவான ஒரு இடத்திற்குச் சென்றபொழுது லாசரு வியாதிப்பட்டிருந்தார். இயேசு இந்த வியாதியை சொஸ்தமாக்கிவிடுவார் என்பதை அறிந்த மார்த்தாளும் மரியாளும், லாசரு வியாதியாயிருக்கிறார் என்ற செய்தியை இயேசுவுக்கு அறிவித்தார்கள். ஆனால், இயேசுவுக்கு அந்த செய்தி கிடைத்த பின்னும் அவர் பெத்தானியாவுக்குப் புறப்படவில்லை. ஒருவேளை நம்முடைய நண்பர்கள் யாராவது வியாதியாயிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டால் துரிதமாக அங்குச் சென்று அவரைப் பார்ப்போம் அல்லவா?

நிச்சயமாக நாம் புறப்படுவோம்.

ஆனால், இயேசு துரிதமாகப் புறப்படவில்லை.

மூன்று நாள் சென்றபின்பு, லாசரு நித்திரையாயிருக்கிறார் என்று இயேசு கூறினார். இப்பொழுது நித்திரையிலிருந்து அவரை எழுப்பப்போவதாக அவர் கூறினார். அனைவருக்கும் இந்த காரியம் விநோதமாக இருந்தது. வியாதியாயிருந்த மனுஷனை ஒருவர் எழுப்பலாம். ஆனால், லாசரு மரித்து விட்டதாகவும், மரணத்திலிருந்து எழுப்பப்போவதாகவும் இயேசு கூறினார். ஜனங்கள் மரிக்கும்பொழுது நித்திரை செய்வது போல் தோன்றும். நீங்கள் இரவு நேரத்தில் அயர்ந்து நித்திரை செய்யும்பொழுது சுற்றி நடக்கும் காரியங்கள்குறித்து உங்களுக்கு ஏதாவது தெரியுமா? அப்படித்தான் மரித்த ஜனங்களுக்கும் இருக்கும். அவர்களும் ஒன்றும் அறியார்கள்.

ஆனால், ஒருவரும் எல்லா நேரங்களிலும் நித்திரை செய்துக்கொண்டே இருப்பதற்கு விரும்பமாட்டார்கள். நாம் இரவு நேரத்தில் படுக்கைக்குச் செல்லும்போது மறுநாள் எழுந்து மற்ற வேலைகள் செய்து மகிழ்வோம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால், லாசரு நித்திரை அடைந்திருக்கிறார், அவரை நான் எழுப்பப் போகிறேன் என்று இயேசு கூறும்பொழுது, மரணத்தில் இருக்கும் லாசருவை அவர் எழுப்பப்போவதாக பொருள்படுத்தினார்.

மரித்த ஜனங்கள் நித்திரையில் இருப்பதாக வேதாகமம் கூறுகின்ற இந்த முக்கியமான காரியத்தை நாம் நினைவில்கொள்ள வேண்டும். இயேசு இந்த உலகத்திற்கு இராஜாவாக இருக்கும்போது மரித்துப்போன அனைத்து ஜனங்களும் அந்த நித்திரையிலிருந்து எழுப்பப்படுவார்கள்.

இயேசு பெத்தானியாவுக்குச் சென்றபோது மார்த்தாளும் மரியாளும் மிக வேகமாக அவரை சந்திக்க வந்தார்கள். அவர்கள் இருவரும் மிகவும் துக்கமாக இருந்தார்கள். இயேசு உரிய நேரத்தில் வரவில்லை என்பதால் அவரை திட்ட வேண்டும் என்றும்கூட அவர்கள் மனதில் எண்ணியிருக்கலாம். நீங்கள் இங்கு இருந்தீர்களானால் எங்களுடைய சகோதரன் மரித்திருக்கமாட்டான் என்று அவள் கூறினாள். இப்பொழுது அவன் மரித்துவிட்டானே என்றார்கள்.

லாசரு மீண்டும் உயிரோடு வருவார் என்று இயேசு உறுதியளித்தார். அப்பொழுது மார்த்தாள் ஆச்சரியப்பட துவங்கினாள். அனைவரும் ஒருநாளில் உயிரோடு எழுப்பப்படுவார்கள் என்ற தேவனுடைய அற்புதமான வாக்குத்தத்தத்தை இயேசு நினைவுகூருகிறாரோ என்று அவள் நினைத்தாள்.

இயேசு இந்த முழு உலகத்திற்கும் இராஜாவாக இருக்கும்போது, மரித்த அனைவரையும் எழுப்புவோம் என்பதை இயேசு அறிந்திருந்தார். ஆனால், அதைக்குறித்து இயேசு மார்த்தாளிடம் கூறவில்லை. அப்பொழுதே லாசரு தேவனுடைய வல்லமையினால் மீண்டும் உயிரோடு எழுப்பப்படுவார் என்று அவருடைய வார்த்தைகள் பொருள்பட்டது. லாசரு வைக்கப்பட்ட கல்லறைக்கு இயேசுவை அழைத்து சென்றனர். அங்கு இயேசு பரலோக பிதாவிடம் ஜெபித்துவிட்டு, "லாசருவே வெளியே வா" என்று லாசருவை அழைத்தார். தேவனுடைய வல்லமையினால் லாசரு மீண்டும் ஜீவனைப்பெற்று கல்லறையைவிட்டு வெளியே வந்தார். எவ்வளவு அற்புதமான காரியம்?

இந்த கதை உண்மை என்பதே இதன் சிறந்த பகுதியாகும். கூடுதலாக, மரித்த அனைவரும் எவ்வாறு உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்பதை இது காட்டியது. மரித்த அனைவரையும் ஜீவனோடு இயேசு எழுப்புவதே தேவன் விரும்பும் காரியமாகும்.

தேவன் விரும்பும் கிரியைகளை இயேசு செய்யத் துவங்குகையில், அவரோடு வேலை செய்வதற்கு பன்னிரண்டு யூத மனுஷரை தெரிந்தெடுத்தார். ஒரு காலத்தில் அவருடைய சீஷர்களாக இருந்த இவர்கள் இயேசுவின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்டார்கள். ஒருநாள் அனைவரும் கலிலேயாவின் கடலை ஒரு படகில் கடந்து கொண்டிருக்கும்போது, திடீரென்று ஒரு பயங்கரமான புயல் எழும்பியது. இந்த புயல் எழும்பும்போது இயேசு அயர்ந்த நித்திரை செய்தார். அவருடைய சீஷர்கள் மிகவும் பயந்தார்கள். இதினிமித்தம், அவர்கள் இயேசுவை எழுப்பினார்கள். ஆனால், அவர் சற்றும் அஞ்சவில்லை. "இரையாதே அமைதலாயிரு" என்று இயேசு அப்புயலிடம் கூறினார். சில நொடிகளில் அந்த புயல் அமர்ந்தது.

இப்படிப்பட்ட ஒரு கதையை நாம் வேதாகமத்தில் வாசிக்கும்போது, இயேசுவுக்கு கடினமான காரியம் ஒன்றுமில்லை என்று நாம் அறிந்துகொள்கிறோம். ஆம், ஆகவே இந்த கதைகளை வேதாகமத்தில் எழுத வேண்டும் என்று தேவன் விரும்பினார். அவருடைய எல்லா வாக்குத்தத்தங்களும் உண்மையில் நிறைவேறும் என்பதை நாம் நம்ப வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அவருடைய குமாரனாகிய இயேசு எந்த காரியத்தைச் செய்யவும் வல்லமையுள்ளவர் என்பதை நாம் நம்ப வேண்டும் என்பதை தேவன் விரும்புகிறார்.

**கேள்விகள்:-**

1. மற்ற ஜனங்களால் செய்ய இயலாத காரியங்களை இயேசுவால் எவ்வாறு செய்ய முடிந்தது?

2. பார்வையற்ற அனைவரும் பார்வை பெறுவதற்கான காலம் இனிவருமா?

3. லாசரு என்பவர் யார்? அவருடைய சகோதரிகளின் பெயரென்ன?

4. லாசரு எப்போது மரித்தார்? அவர் நித்திரை செய்கிறார் என்பதின் இயேசு கூறிய காரணம் என்ன?

5. இயேசு லாசருவை மீண்டும் ஜீவனோடு எழுப்புவதற்கு எவ்வாறு சாத்தியமானது?

# 36. தேவ ஆட்டுக்குட்டி



**யோவா**ர்தான் நதியில் கிறிஸ்துவுக்கு ஞானஸ்நானம் கொடுத்த தீர்க்கதரிசியாகிய யோவான், இயேசுவுக்கு முன்னோடியாக இருந்தார் என்று வேதம் கூறுகிறது. பிதாவாகிய தேவன் வாக்குத்தத்தம் செய்த மிகப்பெரிய இஸ்ரயேலின் இராஜா இவர்தான் என்று யோவான் இவரைப்பற்றி முன்னறிவித்ததே இதன் பொருளாகும். தேவன் விரும்பிய காரியங்களை யோவான் செய்ததினால், இயேசு ஒரு தேவ ஆட்டுக்குட்டி என்று ஜனங்களிடம் அவர் அறிவித்தார் என்பது விநோதமாக இல்லையா?

ஆம், இயேசுவே தேவ ஆட்டுக்குட்டி என்றும் அவர் இந்த உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிறவர் என்றும் கூறினார்.

நாம் செய்யக் கூடாது என்று தேவன் விரும்பும் காரியங்களே பாவமாகும். தேவன் சொல்லிய காரியங்களை ஆதாம் மற்றும் ஏவாள் செய்யாததினால் அழகான தோட்டமாகிய ஏதேனை அவர்கள் தொலைத்து, அதற்கு பின் அவர்கள் மரித்தார்கள். ஆம், அனைவரும் இந்நாள் வரைக்கும் மரித்துக்கொண்டிருக்கிறார்கள். பாருங்கள், இயேசு இந்த உலகத்தின் பாவத்தை தொலைத்துவிட்டால் எவ்வளவு அற்புதமாக இருக்கும். ஏனெனில், அதற்கு பின் ஒருவரும் மரிக்க மாட்டார்களே.

இயேசுவை தேவ ஆட்டுக்குட்டி என்று யோவான் ஏன் குறிப்பிட்டார்? ஆதாம், ஏவாள் மற்றும் காயின், ஆபேல் மற்றும் ஆபிரகாம், ஈசாக்கு ஆகியோரைக் குறித்து நான் சொல்லிய கதைகளை நீங்கள் வாசித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். அதற்குப் பின் எகிப்தின் முதல் பிறந்தவர்களின் மரணத்தைப்பற்றியும் அதற்குப் பின் இஸ்ரயேலின் ஆசாரியர்கள் தேவனை தொழுதுகொள்வதற்கு ஏற்படுத்தின ஆசரிப்புக்கூடாரத்தைப்பற்றியும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். அதில் பலியிடப்பட்ட ஆடுகளைப்பற்றியும் நீங்கள் அறிந்திருக்கலாம்.

ஆம், அந்த ஆடுகள்போல் நம்முடைய ஆண்டவராம் இயேசு பலி செலுத்தப்பட்டார். தேவனுக்குப் பிரியமானதைச் செய்வதற்கு இயேசு எப்பொழுதும் விரும்பினார். ஏனெனில், ஒருநாளில் இந்த முழு உலகமும் மரிக்காமல் தேவனுக்குப் பிரியமாக நடந்து கொள்வார்கள் என்பதற்காக அவர் மனப்பூர்வமாய் தன்னை பலிசெலுத்த ஒப்புக்கொடுத்தார்.

இயேசு எவ்வளவு அற்புதமான ஒரு மனுஷர்!

அவர் அனைவரிடத்திலும் இரக்கமுள்ளவராய் இருந்தார். பிள்ளைகளை அதிகமாய் நேசித்தார். பிள்ளைகள் இயேசுவை தொந்தரவு செய்வதாக இயேசுவின் நண்பர்கள் எண்ணிக்கொண்டு அவர்கள் இயேசுவிடம் வருவதைத் தடுத்தார்கள். ஆனால், இயேசு குழந்தைகளை அதிகமாக நேசித்ததினால் அவர்களை தடை செய்ய வேண்டாம் என்று தம் நண்பர்களிடம் கூறினார். மேலும், வளர்ச்சியடைந்த முதியவர்களும் சிறு பிள்ளைகளைப்போல மனத்தாழ்மையுள்ளவர்களாக மாறினால் அவர்கள் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிக்க முடியும் என்று கூறினார். ஆம், இயேசு மிகவும் அன்புள்ளவராக இருந்தார்!



வியாதியஸ்தரை சொஸ்தமாக்கினார். தாம் ஒரு இராஜாவாக இந்த உலகத்திற்கு வரக்கூடிய ஒரு நல்ல காலத்தைப்பற்றி கூறி வேதனைகள் உள்ளவர்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கினார்.

இஸ்ரயேலிலுள்ள ஜனங்கள் அனைவரும் இயேசுவை நேசிப்பார்கள் என்று நீங்கள் எண்ணலாம். ஆனால், அவர்கள் இயேசுவை நேசிக்கவில்லை. யூதர்களின் மதத்தலைவர்களாகிய பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்கள் இயேசுவை வெறுத்தார்கள் என்று வேதம் கூறுகிறது. அவர்கள் இயேசுவின்மேல் பொறாமை கொண்டார்கள். ஆகவே, இயேசுவைக் கொலை செய்ய வேண்டும் என்று எண்ணினார்கள். பொறாமை ஒரு கொடூரமான காரியமாகும்!

அமெரிக்காவில் வாஷிங்டன் ஒரு முக்கிய நகரமாய் இருப்பதுபோல, இஸ்ரயேல் தேசத்தில் எருசலேம் ஒரு பிரதானமான பட்டணமாக இருந்தது. இயேசுவின்மேல் பொறாமைகொண்ட தலைவர்கள் எருசலேமில் இருந்தார்கள். இயேசு வரும்போது அவரைக் கொல்ல வேண்டுமென்று அவர்கள் போட்ட திட்டத்தை அறிந்து, இயேசு அங்குச் சென்றார்.

இது விநோதமாக இருக்கவில்லையா? இயேசுவின் விசேஷித்த பன்னிரண்டு சீஷர்களின் மத்தியில் பேதுரு என்ற பெயர் கொண்ட ஒருவர் இருந்தார். பேதுரு, இயேசுவின் நெருங்கிய நண்பராக இருந்தார். இயேசு கொல்லப்படுவதற்கு அவர் விரும்பவில்லை. ஆகவே, எருசலேம் பட்டணத்திற்குப்போக வேண்டாமென்று அவர் இயேசுவுக்கு ஆலோசனை கூறுகிறார்.

ஆனாலும், இயேசு பேதுருவின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் தேவன் விரும்பும் காரியம் செய்ய வேண்டும் என்று வாஞ்சித்தார். தேவன் அவரைப் பராமரிப்பார் என்பதை அவர் அறிந்திருந்தார். தேவன் எவ்வளவு வல்லமையுள்ளவர் என்பதை நாம் அறிந்திருக்கிறோமல்லவா? தேவன் தம்முடைய எல்லா வல்லமையையும் பயன்படுத்தி இயேசுவை பாதுகாப்பார் என்பதை அவர் அறிந்திருந்தார். ஆகவே, இயேசு ஒருபோதும் எருசலேமுக்குப்போக அஞ்சவில்லை.

அதற்குப் பின் ஒரு இராத்திரிவேளையில், தம்முடைய அப்போஸ்தலர்களிடம் ஒரு விசேஷித்த இராவிருந்தை புசித்தார். அது, "பஸ்கா போஜனம்" என்று அழைக்கப்படுகிறது. பஸ்கா என்பதின் பொருள் என்ன? இஸ்ரயேலர்கள் எகிப்தை விட்டுப் புறப்படும்போது, தங்களுடைய வீட்டின் நிலைக்கால்களில் ஆட்டின் இரத்தத்தைத் தெளித்த கதையைக்குறித்து நீங்கள் படித்திருந்தால் இதை நீங்கள் நினைவில்கொண்டிருக்கலாம்.

ஒவ்வொரு வருஷமும் இந்த பஸ்கா உணவைப் புசித்து, தேவன் செய்த அற்புதமான நிகழ்ச்சியை நினைவுகூரும்படி இஸ்ரயேலர்களுக்கு தேவன் கட்டளையிட்டிருந்தார். அந்த காரியத்தை இயேசுவும் அவருடைய சீஷர்களும் செய்தனர்.

இப்படியாக, அனைவரும் ஒருமித்து போஜனம் புசித்துக்கொண்டிருக்கையில், உங்களில் ஒருவர் என்னைக் காட்டிக் கொடுப்பார் என்று இயேசு அவர்களிடம் கூறினார். இயேசுவின் எதிராளிகள் அவரைக் கொலை செய்வதற்கான வாய்ப்பை தேடிக்கொண்டிருந்தார்கள். ஆனால், அதிகமான ஜனங்கள் அவரைச் சுற்றி இராத நேரம் இதை செய்ய வேண்டுமென்று விரும்பினார்கள்.

மேலும், இயேசு எப்படியாக இருப்பார் என்பதையும் அவர்கள் அறியாதிருந்தார்கள். அன்றைய தினங்களில் புகைப்படங்கள் இருக்கவில்லை. அந்நாட்களில் இயேசுவைக்குறித்து அநேக ஜனங்கள் கேள்விப்பட்டிருந்தாலும் எல்லாரும் அவரைக் கண்டதில்லை. ஆகவே, இயேசுவின் அப்போஸ்தலர்களில் ஒருவர் இயேசுவின் எதிராளிகளுக்கு அவரைக் காட்டிக் கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டார். அவர்களிடம் சென்று, அவரை முத்தமிட்டு, அவரை அடையாளம் காட்டிக்கொடுப்பதாகக் கூறினார்.

அந்த அப்போஸ்தலரின் பெயர் யூதாஸ்காரியோத்.

நீ யூதாஸைப்போல் இருக்க வேண்டாம்! என்று யாராவது சொல்லி நீங்கள் கேட்ருக்கிறீர்களா? ஆம், இக்காரியத்தைக்குறித்து அறிந்திருந்தீர்களானால் இதற்கு என்ன பொருள் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளலாம். நல்லவர்களுக்கு எதிராக அவர்களை காட்டிக்கொடுப்பதும், அவர்களுக்கு தீங்கிழைப்பதற்கு முயற்சிப்பதுமே இதன் பொருளாகும். நாம் ஒருபோதும் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யக்கூடாது என்று தேவன் விரும்புகிறார்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் தேவனுடைய தீர்க்கதரிசி ஒருவர், இயேசு இந்த உலகத்திற்கு வரும்போது, அவருடைய நண்பர் ஒருவர் அவரைக் காட்டிக்கொடுப்பார் என்று

முன்னறிவித்திருந்தார். நிச்சயமாக அந்த தீர்க்கதரிசிக்கு தேவனே இந்த காரியத்தைக் கூறியிருக்க வேண்டும். தேவன் சகல காரியங்களையும் அறிந்தவர். மேலும், மோசமான காரியம் என்னவெனில், யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்காக பணம் வாங்கிக்கொண்டான். அவன் இயேசுவைக்காட்டிலும் பணத்தை அதிகமாக நேசித்தான். நாம் எப்பொழுதும் பணத்தை நேசிப்பவர்களாக இருக்க வேண்டாம். விசேஷமாக நம்முடைய நண்பர்களைக்காட்டிலும் பணத்தை நேசிக்க வேண்டாம்.

அவர்கள் பஸ்கா போஜனத்தைப் புசித்து முடித்த பின்பு, இயேசுவும் மற்ற பதினோரு அப்போஸ்தலர்களும் எருசலேம் பட்டணத்தைவிட்டு கெத்செமனே என்ற ஒரு அழகான தோட்டத்திற்கு நடந்து சென்றார்கள். அனைவரும் புறப்படுவதற்கு முன்னமே யூதாஸ் அவ்விடம்விட்டுப் புறப்பட்டுச் சென்றான். இயேசுவை காட்டிக்கொடுப்பதற்கு அவருடைய எதிராளிகளை சந்திக்கும்படி துரிதமாக யூதாஸ் சென்றான். இரவு நேரமாக இருந்ததினால் தோட்டத்தில் வீசிய நிலா வெளிச்சத்தில் இயேசுவை சந்திப்பதற்கு எளிமையாக இருக்கும் என்று எண்ணினான்.

எதிராளிகள் தன்னைக் கொல்ல வேண்டுமென்று இயேசு அறிந்திருந்தார். மற்ற பதினோரு அப்போஸ்தலர்களும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அனைவரும் தோட்டத்திற்கு வந்தபின் இயேசு, தேவனிடம் ஜெபித்தார். ஒரு ஆட்டைப்போல் தான் மரிக்க வேண்டிய நேரம் வந்ததை இயேசு அறிந்துகொண்டார். தேவன் விரும்பிய காரியத்தை செய்வதற்கு தன்னை ஒப்புக்கொடுத்தார். "என்னுடைய சித்தத்தின்படி அல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று தேவனிடம் கூறினார்."

அவர்கள் அந்த தோட்டத்தை விட்டுப் புறப்படுகையில் பட்டணத்திலிருந்து ஒரு மிகப்பெரிய ஜனக்கூட்டம் தங்களை நோக்கி வருவதைக் கண்டார்கள். யூதாஸ் இயேசுவின் எதிரிகளை அழைத்து வந்தான். இப்பொழுது இயேசுவை பிடித்துக்கொள்வதற்காக இயேசுவைக் காட்டிக்கொடுக்க வந்தான்.

"யாரைத் தேடுகிறீர்கள் என்று இயேசு அவர்களிடம் கேட்டார்" அவர்கள் இயேசுவை என்று பதிலளித்தபோது "அவர் நானே என்று இயேசு பதிலளித்தார்."

பாருங்கள், இயேசு எதற்கும் அஞ்சவில்லை. ஒருவேளை அவர் உண்மையைச் சொல்லாமலிருந்தால், இயேசு வேறொருவராக இருக்கக் கூடுமோ என்று அவருடைய எதிரிகள் சிந்தித்திருக்கலாம். ஆகவே, யூதாஸ் அந்த ஜனக்கூட்டத்தை விட்டு வெளியே இயேசுவினிடத்தில் வந்து அவரை முத்தமிட்டான். எவ்வளவு கொடுமையான காரியம்?

இயேசுவின் எதிரிகள் அவரை பிடித்தபோது இயேசுவை அதிகமாக நேசித்த பேதுரு அங்கு வந்த ஒரு மனுஷனுடைய காதை வெட்டினார். பாருங்கள், இயேசுவைக் காப்பாற்றி அவருடைய எதிரிகளுக்கு விரோதமாக போர் செய்வதற்காக அவருடைய நண்பர்கள் துணிந்திருந்தார்கள். ஆனால், ஒரு விநோதமான காரியம் நிகழ்ந்தது! பேதுருவை, வாளை தன்னுடைய உறையில் போடும்படி இயேசு கூறினார். மேலும், இயேசு அவர்மேல் இருந்த தேவனுடைய வல்லமையைப் பயன்படுத்தி, அந்த மனுஷனுடைய காதை ஒட்டவைத்து சொஸ்தமாக்கினார். உண்மையில் பார்வையற்றோருக்கு பார்வை கொடுப்பதற்கும் கேளாத செவியையுடையவர்களுக்கு கேட்கும் செவியைக்கொடுப்பதும் இயேசுவுக்கு எளிதான காரியமாக இருந்தது.

இயேசு செய்த காரியங்களை பேதுருவால் நிச்சயமாக புரிந்துகொண்டிருக்க முடியாது என்று நான் எண்ணுகிறேன். ஆனால், இயேசு அனைத்தையும் அறிந்திருந்தார். பேதுரு மற்ற அப்போஸ்தலர்கள் அவருடைய எதிரிகள் மற்றும் நாமும் நம்முடைய எதிரிகளோடு போர் செய்ய வேண்டிய விதங்களைக்குறித்து அறிந்துகொள்ள வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்.

இயேசு அவருடைய எதிராளிகளை நேசித்தார். நீங்கள் நேசிப்பவர்களோடு சண்டை போட்டு அவர்களை கொல்ல விரும்புவீர்களா?

எல்லாவற்றுக்கும்மேலாக, தேவன் இயேசு செய்ய வேண்டும் என்று விரும்பிய காரியங்களை மட்டுமே அவர் செய்துகொண்டிருந்தார். அவரை தம்முடைய எதிராளிகள் கையில் கொல்வதற்காக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். இயேசு தேவ ஆட்டுக்குட்டி என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். பஸ்கா ஆடு அன்று கொல்லப்பட்டதுபோல, ஆபேல் ஆட்டைக் கொன்று தேவனுக்குப் பலி செலுத்தியதுபோல, பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய இயேசுவும் கொல்லப்பட வேண்டுமென்று தேவனுடைய தீர்க்கதரிசிகளில் ஒருவர் முன்னறிவித்திருந்தார் என்பதை நாம் எப்பொழுதும் நினைவில்கொள்ள வேண்டும்.

இயேசுவைப் பிடித்தபின் அவரை யூத பிரதான ஆசாரியரிடம் எருசலேமுக்கு இழுத்துச் சென்றார்கள். நீர் தேவனுடைய குமாரனா என்று பிரதான ஆசாரியன் இயேசுவிடம் கேட்டார். தேவனுடைய குமாரன் என்று கூறுவது ஒரு பயங்கரமான தூஷணம் என்று யூதர்கள் எண்ணிக்கொண்டிருந்தார்கள். இது தேவனுக்கு விரோதமான பாவம் என்று அவர்கள் எண்ணினார்கள். இயேசு உண்மையில் தேவனுடைய குமாரன் என்பதை யூதர்கள் அறியாதிருந்தார்கள். ஆகவே, இயேசு தேவதூஷணம் சொல்வதாக எண்ணினார்கள்.

தான் தேவனுடைய குமாரன் என்று இயேசு பிரதான ஆசாரியனிடம் கூறினபோது, அந்த பிரதான ஆசாரியன் மிகக் கொடூரமாக இருந்ததினால், அவரை மரணத்திற்குள் தீர்ப்பளிக்க வேண்டும் என்று முடிவு செய்தார். ஆனால், இயேசுவை கொலை செய்வதற்கு இஸ்ரயேலர்களிடம் எந்தவிதமான அதிகாரமும் கொடுக்கப்படவில்லை. அந்த முடிவை ரோமர்கள் மட்டுமே பெற்றிருந்தார்கள்.

இஸ்ரயேல் ஜனங்கள் தங்களுக்கென்று ஒரு ஆட்சி உரிமையைக் கொண்டிருக்கவில்லை. நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன், கொடுமையான இராஜாவாகிய சிதேக்கியா நேபுகாத்நேச்சாரால் சிறைபிடிக்கப்பட்டபோது, இவர்கள் தங்களுடைய ஆட்சியை தொலைத்துவிட்டார்கள்.

ஆகவே, பிலாத்து என்று பெயர் கொண்ட ரோம ஆளுநரிடம் இயேசுவை இழுத்துச் சென்றார்கள். தவறு செய்தவர்களை தண்டிப்பதற்கு அவன் முழு உரிமையைப் பெற்றிருந்தான். பிலாத்து ரோம சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாகிய இராயனுக்கு வேலை செய்தான். இதற்கிடையில் ஒருவரும் இராஜாவாக தங்களை ஏற்படுத்திக் கொள்ளாதபடிக்கு பிலாத்து பார்த்துக்கொள்ள வேண்டியதாய் இருந்தது. ஒருவர் தன்னை இராஜாவாக ஏற்படுத்திக்கொள்ள முயற்சித்தால் அதை சரியாகக் கண்டுபிடித்து அவனை மரணத்தீர்ப்புக்கொடுக்க வேண்டியது பிலாத்துவின் கடமையாக இருந்தது.

இதையறிந்த இஸ்ரயேல் ஜனங்கள், இயேசு ஒரு இராஜாவாக இருக்க விரும்புகிறார் என்று பிலாத்துவிடம் கூறினார்கள். ஆனாலும், பிலாத்து இதை நம்பவில்லை. அதற்குப் பதிலாக இது உண்மையா என்று இயேசுவிடம் கேட்டார்.

"நீ இராஜாவா" என்று இயேசுவிடம் கேட்டார்.

இந்த காரணத்திற்காகவே உலகத்திற்கு வந்தேன் என்பதை இயேசு விவரித்தபோது, பிலாத்து மிகவும் ஆச்சரியப்பட்டான். இதற்காகவே, இந்த உலகத்திற்கு வந்தேன் என்று இயேசு கூறினார். இயேசு இப்படியாகவே பதிலளித்திருந்தாலும் அவர் மரணத்திற்கேதுவான எந்த தவறும் செய்யவில்லை என்பதை பிலாத்து புரிந்துகொண்டான். இயேசுவை இராயனிடம் அழைத்துச் சென்றால் எந்த ஆபத்தும் அவருக்கு நேரிடாது என்று பிலாத்து எண்ணினான்.

உண்மையில் இயேசு ஒரு இராஜாவாக இருப்பார், இந்நாள்வரைக்கும் ஆட்சி செய்த இராஜாக்கள் எல்லாரிலும் அற்புதமான ஒரு இராஜாவாக இருப்பார். இராஜாவாகிய இயேசு இந்த முழு உலகத்தையும் ஆட்சி செய்யப்போகிறார். அவர் இந்நாளில் இருப்பதைப்போல அவரிடத்தில் இராணுவமோ, போர்ச்சேவகர்களோ போர்க்கருவிகளோ இருக்கப்போவதில்லை. இயேசு சொல்லிய காரியங்களை ஜனங்கள் கீழ்ப்படிவதினால் அங்கு இனி யுத்தங்களும் இராது, அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

அப்பொழுது ஜனங்கள் ஒருவரையொருவர் நேசிக்கக் கற்றுக்கொண்டு ஒருவருக்கொருவர் உதவி செய்வார்கள். இந்த முழு உலகத்தில் ஒவ்வொருவரும் மற்றவர்களிடம் போர் செய்வதற்குப்பதிலாக உதவி செய்ய விரும்பினால் அங்கு எந்த பிரச்சனையும் இராது. ஆம், இயேசு இராஜாவாக இருக்கும்போது இந்த உலகம் மகிழ்ச்சியாக இருக்கும்.

ஆனால், இஸ்ரயேல் ஜனங்கள் இயேசுவைக் கொலை செய்ய வேண்டும் என்று பிலாத்துவினிடம் வேண்டிக்கொண்டார்கள். அவர் ஒரு இராஜா என்று இயேசு ஒப்புக்கொண்டதினால் யூதர் சட்டத்தின்படி அவரை விடுதலை செய்வதற்கு பிலாத்து சுதந்திரம் பெறவில்லை.

அவர்கள் இயேசுவை மிகக் கொடுமையாக நடத்தினார்கள். அவருடைய வஸ்திரங்களை உரிந்துகொண்டு அவரை சாட்டையினால் அடித்தார்கள்.

அவருடைய தலையின்மேல் ஒரு முள் கிரீடம் சூட்டினார்கள்.

அதற்குப் பின் கொல்கொதா என்று அழைக்கப்பட்ட மலைக்கு, பட்டணத்திற்கு வெளியே அவரை இழுத்துச் சென்றார்கள். அங்கு அவரை சிலுவையில் அறைந்து மரிக்கும்வரைக்கும் அவரைத் தொங்கவிட்டார்கள்.

ஆம், மாட்டுத்தொழுவத்தில் பிறந்த இயேசு இப்பொழுது மரித்துவிட்டார். அவர் பிறப்பைக்குறித்து தூதர்கள் சொன்னார்கள். ஆனாலும், அவர் மரித்துப்போனார். தூதர்களும் ஒன்றும் செய்யவில்லை. குருடர்களுக்குப் பார்வை தந்தவரும், செவிடருக்குக் கேட்கும் செவியைத் தந்தவரும், மரித்துப்போனவர்களை மீண்டும் உயிரோடு எழுப்பினவருமாகிய இயேசு இப்போது மரித்தார்! ஜனங்களுக்காக பல அற்புதமான காரியங்களைச் செய்திருந்தபோதிலும், ஒருவருக்கும் தீங்கிழைக்காதபோதிலும் அவருடைய எதிராளிகள் அவரை சிலுவையில் அறைந்து கொன்றுப்போட்டார்கள்.

பேதுரு இயேசுவுக்கு உதவி செய்ய விரும்பினாலும், இயேசு அதை அனுமதிக்கவில்லை. இயேசு தேவனிடத்தில் உதவி கேட்டிருந்தால் தேவன் அவருக்குப் பல தூதர்களை அனுப்பியிருப்பார் என்று இயேசு கூறினார். ஆனாலும், இயேசு அப்படிப்பட்ட எந்த உதவிகள் கேட்கவுமில்லை, எந்த தூதர்களும் அவருக்கு உதவி செய்ய வரவுமில்லை. ஆம், இந்த முழு உலகத்திற்கும் இராஜாவாக இருப்பார் என்று தேவன் வாக்களித்த அந்த மகாராஜாவாகிய இயேசு இப்போது மரித்தார்.

**கேள்விகள்:**

1. இயேசுவை தேவ ஆட்டுக்குட்டி என்று யோவான்ஸ்நானன் கூறின காரணம் என்ன?

2. இயேசுவின் எதிராளிகள் இயேசுவைக் கொல்வதற்கு தேவன் ஏன் அனுமதித்தார்?

3. இந்த முழு உலகத்தின்மேல் இராஜாவாக இயேசு எப்பொழுது வருவார். அவர் தன்னோடு போராயுதங்களையும், சேனைகளையும் வைத்திருப்பாரா?

# 37. மிகப்பெரிய வெற்றி

**வாரத்தின்** முதல் நாளின் அதிகாலையில், மரியாளும் மற்ற இயேசுவின் நண்பர்களும் தங்களுடைய ஆண்டவரை வைத்திருந்த கல்லறையைக் காணும்படி சென்றார்கள். மூன்று நாட்களுக்கு முன் மரித்த தங்களுடைய ஆண்டவரின் சரீரத்திற்கு சுகந்தவர்க்கமிடச் சென்றார்கள்.

இன்று நாம் மரித்தவர்களைப் புதைப்பதுபோல அன்று இயேசுவை புதைக்கவில்லை. அவரை மிகப்பெரிய ஒரு குகையில் அதாவது, கல்லினால் வெட்டப்பட்ட ஒரு குகையில் அவரை வைத்து, அதின் வாயை ஒரு மிகப்பெரிய கல்லினால் அடைத்து வைத்திருந்தார்கள். அந்த கல்லை ஒருவர் புரட்டினால், ஒருவர் அந்த குகைக்குள் நடந்து செல்லலாம். அதிகாலையில் அந்த கல்லறைக்கு வந்த ஸ்தரீகள், "நமக்காக அந்த கல்லை யார் புரட்டுவார்கள் என்று" தங்களுக்குள் கேட்டுக்கொண்டார்கள்.



அவர்கள் கல்லறைக்கு வந்தபோது அந்தக் கல் முன்னதாகவே புரட்டப்பட்டிருப்பதைக் கண்டார்கள்! இவர்களுக்கு முன், யாரோ ஒருவர் வந்திருக்க வேண்டும் என்று சிந்தித்துக்கொண்டார்கள். அவர்கள் அந்த கல்லறைக்குள் நுழைந்தபோது இயேசு கிடத்தப்பட்ட இடத்தில் அவரைக் காணவில்லை.

இயேசுவின் எதிரிகள் அவருடைய சரீரத்தை திருடிச்சென்றிருக்கலாம் என்று முதலில் சிந்தித்து, மிகவும் துக்கமடைந்தார்கள். ஆனால், அங்கிருந்த ஒரு இளைஞன், இயேசு உயிரோடு எழும்பினார் என்று அவர்களிடம் கூறினார்.

அந்த இளைஞன் உண்மையில் ஒரு மனுஷனல்ல, ஒரு தூதனாக இருந்தார்! ஸ்தீரிகள் கண்டு அஞ்சினாலும் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். அந்த தூதர் ஆண்டவருடைய மற்ற அப்போஸ்தரிடத்தில் இதை அறிவிக்கும்படி கூறினார். இயேசுவின் சிநேகிதர்களிடம் இந்த அற்புதமான செய்தியை எடுத்துச் செல்வது இது மகிழ்ச்சியான காரியமல்லவா? இது ஒரு அற்புதமான செய்தி அல்லவா? இயேசுவின் அற்புதமான பரலோக தந்தையாகிய தேவன், அவருடைய சர்வவல்லமையினால் அவரை மீண்டும் உயிர்ப்பித்தார். சகல காரியங்களையும் செய்வதற்கு தேவன், வல்லமை உள்ளவராயிருக்கிறார். தேவனுடைய வல்லமையினால் நாம் ஜீவனைப் பெற்றிருக்கிறோம். அப்படியாகவே தேவன், இயேசுவுக்கு மீண்டும் ஜீவனைக் கொடுத்தார். இயேசு, தேவன் விரும்பிய அனைத்தையும் ஏற்றவிதமாய் செய்து முடித்ததினால் தேவன் அவருக்கு மீண்டும் ஜீவனைக் கொடுத்தார்.

இயேசு தம்முடைய எதிராளிகளை அதிகமாக நேசித்ததினால் அவர்கள் தம்மைக் கொல்லும்படி அனுமதித்தார். இதுவே தம்முடைய குமாரன் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்பினார். தேவனும், அவருடைய எதிரிகளை நேசித்தார். தேவன் செய்ய வேண்டும் என்று விரும்பிய காரியங்களைச் செய்யாதவர்கள், தேவனுடைய எதிராளிகளாக இருக்கிறார்கள். ஆனாலும், அவர்களை அதிகமாக நேசித்ததினால் அனைவரையும் மீண்டும் ஜீவனோடு எழுப்பப்போகிறார். அவர்களை ஜீவனோடு எழுப்பும்போது தேவன் விரும்பிய காரியங்களை அவர் செய்தால் நிச்சயமாக ஜீவனோடு இருப்பார்கள்.

இதுவே, தேவன் வாக்களித்த காரியமாகும். அவருடைய வாக்குத்தத்தங்கள் உண்மையில் நிறைவேறும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

தேவன் ஜனங்களை நேசித்ததுபோல இயேசுவும் நேசித்ததினால் அவர்களுக்காக மரித்தார்! இயேசு அனைவருக்காகவும் மரித்ததினால் அனைவரும் ஜீவிப்பதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். பள்ளியில் ஒரு மாணவன் தவறு செய்தால் ஆசிரியர்கள் அவனை தண்டிப்பார்கள் அல்லவா? ஆம், அதேநேரத்தில் தவறு செய்யாத மற்றொரு மாணவன் தண்டிக்கக்கூடிய மாணவனை அதிகமாக நேசிப்பதினால் அவனுக்காக அந்த தண்டனையை ஏற்றுக்கொள்வது எப்படிப்பட்ட காரியமாக இருக்கும்?

இப்படியாகவே, இயேசுவும் மரித்தார். ஆதாம் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் மரண தண்டனையை அடைந்தார். ஆதாமை மீண்டும் உயிரோடு எழுப்புவதற்காக, ஆதாமின் இடத்தை அல்லது ஆதாம் செய்த பாவத்திற்கான தண்டனையை இயேசு பெற்றுக்கொண்டார். ஆதாமுடைய பாவத்தினிமித்தம் அனைவரும் இந்நாள்வரைக்கும் மரித்துக்கொண்டிருக்கிறார்கள். இயேசு அந்த தண்டனையை ஏற்றுக்கொண்டதினால் இயேசுவினிமித்தம் அனைவரும் உயிரோடு எழுப்பப்படுவார்கள்.

பேதுரு மற்றும் யோவான் இயேசு உயிர்த்தெழுந்ததைக்குறித்து கேள்விபட்டபோது அவர்கள் கல்லறைக்கு மிக விரைவாக ஓடினார்கள். ஒருவேளை அவரை உயிரோடு அங்கு காணலாம் என்றெண்ணி அவர்கள் ஓடியிருக்கலாம். அல்லது அவர்கள் கேள்விப்பட்டதை நம்பாமல் அதை நிரூபிப்பதற்காக ஓடியிருக்கலாம். ஆனாலும், கல்லறை காலியாக இருந்தது. இயேசு உயிர்த்தெழுந்ததினால் மரித்துபோன இயேசு அங்கு காணப்படவில்லை. தேவன் அவருக்கு ஒரு மிகப்பெரிய வெற்றியைக் கொடுத்தார் - மரணத்தின்மேல் மிகச்சிறப்பான வெற்றி.

தேவனுடைய வல்லமை மீண்டும் அவரை உயிர்பெறச் செய்தது.

ஆனால், உயிர்த்தெழுந்த இயேசுவை ஒருவரும் காணவில்லை. இது விநோதமான காரியம் அல்லவா! இயேசுவின் சரீரம் ஒரு அழகான தோட்டத்திலுள்ள ஒரு கல்லறையில் வைக்கப்பட்டிருந்தது. மரியாள் அந்த கல்லறைக்கு அருகாமையில் நின்று அழுதுக்கொண்டிருந்தாள். அவள் தோட்டக்காரனைப்போல இருக்கும் ஒருவரைக்கண்டு,

"ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன் என்றாள்."

அப்பொழுது அந்த மனுஷன் மரியாளே என்று அழைத்தார். இயேசு தன்னுடன் பேசும்போது எவ்வாறு அழைப்பாரோ அவ்வாறே இந்த மனுஷனும் மரியாளை அழைத்தார். ஆம், அவர் இயேசுதான் என்பதை அவள் நிச்சயித்துக் கொண்டாள். ஆனால், அவர் மிக வித்தியாசமான தோற்றத்தில் காணப்பட்டார். ஆயினும், அவர் இயேசு என்பதை மரியாள் நன்கு அறிந்துகொண்டாள்.

அதற்குப் பின்பு, இயேசுவின் இரண்டு சீஷர்கள் இயேசுவைக்குறித்து பேசிக்கொண்டு சாலையில் நடந்துக்கொண்டிருந்தார்கள். இயேசு மீண்டும் உயிரோடு எழுப்பப்பட்டதை அவர்கள் அறியாதிருந்தார்கள். அப்பொழுது ஒருவர் அவர்களோடு சேர்ந்துகொண்டு,

நீங்கள் ஏன் இவ்வளவு வருத்தமாய் இருக்கிறீர்கள் என்று கேட்டார். அவருக்கு இயேசுவைப்பற்றின காரியங்களைக் கூறினார்கள். அவர் இராஜாவாக இந்த இஸ்ரயேல் ஜனங்கள்மேல் ஆட்சி செய்வார் என்று நாங்கள் நம்பினோம். ஆனால் இப்பொழுது அவர் மரித்து விட்டார் என்று மிகவும் வருத்தப்பட்டுக் கூறினார்கள்.

இயேசுவைக்குறித்த தீர்க்கதரிசனங்களையும், அவர் ஆட்டுக்குட்டியாக மரிக்கப் போவதைக்குறித்த தீர்க்கதரிசனங்களையும் அந்த இரண்டு சீஷர்களுக்கும் அவர் விவரித்தார். இயேசு இராஜாவாக வருவதற்கு முன் அவர் மரிக்க வேண்டியது அவசியம் என்பதையும் அவர் கூறினார். இவ்விதமாய் இவர்கள் ஒருமித்து பயணம் செய்தார்கள். அவர்கள் சேர வேண்டிய இடம் வந்தபோது அவர்கள் போஜனம் செய்யும்படி அமர்ந்தார்கள்.

அப்பொழுது அவர்களோடு வந்த அந்த மனுஷன் இயேசு என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள். அவர்கள் அறிந்தவுடனே இயேசு அவ்விடத்திலிருந்து மறைந்துவிட்டார். அவர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்திருக்கும்!

இயேசு மீண்டும் ஜீவனை பெற்றுவிட்டார் என்பதை இயேசுவின் அப்போஸ்தலர்களில் ஒருவரால் நம்ப முடியவில்லை. அவர் பேர் தோமா. இவரும் இயேசுவின் ஒரு அப்போஸ்தலராக இருந்தார். இவர் நம்முடைய ஆண்டவர் மரித்தோரிலிருந்து எழுந்ததை நம்ப முடியாமல் இருந்தார்.

ஒரு நாள் பதினொரு அப்போஸ்தலர்களும் ஒரு மாடி வீட்டில் ஒருமித்துக் கூடியிருக்கையில் அவர்கள் அண்ணார்ந்து பார்க்கும்பொழுது இயேசு அவர்கள் மத்தியில் நின்றார். எல்லாக் கதவுகளும் அடைக்கப்பட்டிருந்ததினால் அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு பயந்தார்கள்.

ஆனாலும், "உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக என்று இயேசு கூறினார்"

சந்தேகித்துக்கொண்டிருந்த தோமாவிடம் இயேசு, "உன் கையை நீட்டி என் விலாவைத் தொட்டுப் பார், அவிசுவாசியாயிராதே விசுவாசியாயிரு" என்று கூறினார். அதற்குப் பின் தோமா நம்பினார். சில நொடிகளுக்குப் பின், இயேசு சீஷர்களை விட்டு கடந்துச் சென்றார். அங்கிருந்த கதவுகள் திறக்கப்படவில்லை. திடீரென்று அவர் வந்தபடியே அவர் அவ்விடத்திலிருந்து மறைந்துச் சென்றார்.

எவ்வளவு விநோதமான காரியம்?

நீங்கள் தெரிந்துகொள்ளும் பட்சத்தில் - நிச்சயமாக இது விநோதமான காரியமல்ல. இப்பொழுது இயேசு முற்றிலும் வேறுபட்டவராய் இருந்தார். தேவன் அவரை உயிர்ப்பித்தாலும் இனி ஒருபோதும் அவர் ஒரு மனுஷனாக இருக்கவில்லை. அவர் தன்னைத்தானே ஒரு மனுஷனைப்போல் காட்சியளித்ததால் மட்டுமே அப்போஸ்தலர்களாலும்கூட அவரை காணமுடிந்தது.

இயேசு உயிர்த்தெழுப்பப்பட்ட பின் தேவனைப் போலிருந்தார். நாம் தேவனைக் காண முடியுமா? இல்லை! தேவனைக் காணக்கூடிய கண்களை நாம் சரியாகப் பெறமுடியவில்லை. அதுபோல, இயேசுவைக் காண்பதற்கான கண்களை அப்போஸ்தலர்கள் பெறவில்லை. ஆனால் இயேசு, உண்மையில் எழுந்து இப்பொழுது வல்லமையுள்ளவராக இருக்கிறார். அவர் இந்த முழு உலகத்தின்மேலும் ஆட்சி செய்யும்போது, அவர் ஒரு வல்லமையுள்ள இராஜா என்பதை அனைவரும் அறிந்துகொள்வார்கள்.

இயேசுவின் சீஷர்கள் மற்ற சில இடங்களில் அவரைக் கண்டார்கள். ஒருமுறை, அவர்களுக்காக இயேசு காலை உணவை சமைத்து வைத்திருந்ததை கலிலேயக்கடற்கரையில் கண்டார்கள். இவர்கள் அனைவரும் மீன் பிடிக்க கடலில் சென்றிருந்தார்கள். இராமுழுவதும் கடலில் இருந்தும் அவர்கள் ஒரு மீனையும் பிடிக்கவில்லை.

கரையிலிருந்த இயேசு: உங்கள் வலைகளை கப்பலுக்கு வலது புறமாகப் போடுங்கள், அங்கு மீன்களைக் காண்பீர்கள் என்றார். இயேசு சொன்ன வார்த்தைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிந்தவுடன், வலை மீன்களால் நிறைந்தது. அப்பொழுது அவர்களுடன் பேசின மனுஷன் இயேசு என்று அப்போஸ்தலர்கள் அறிந்ததினால், அவர்கள் கரைக்கு சீக்கிரமாய் வந்தார்கள். காலை நேரத்தில் இயேசுவோடு ஒரு இனிமையான சந்திப்பு ஏற்பட்டது. இயேசுவை பேதுரு அதிகமாக நேசித்தார் என்று கூறும்போது, "என் ஆடுகளை மேய்ப்பாயா என்று இயேசு பேதுருவிடம் கேட்டார்."

இயேசுவை நேசித்து அவர் விரும்பிய காரியங்களை செய்பவர்களே இயேசுவின் ஆடுகளாய் இருக்கிறார்கள்.

அப்போஸ்தலர்கள் இயேசுவை கண்டபோது, தேவனைக்குறித்தும், நற்செய்திகளைக்குறித்தும், உலகெங்கும் உள்ள ஜாதிகளுக்கும் நீங்கள் சென்று அறிவிக்க வேண்டும் என்று இயேசு அவர்களிடம் கூறினார். அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய ஒரு காலம் வருகிறது என்பதையும் அறிவிக்கச் சொன்னார். இந்த சுவிசேஷத்தை நற்செய்தி என்று வேதம் அறிவிக்கிறது.

"நீங்கள் உலகமெங்கும் சென்று இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்று இயேசு அப்போஸ்தலரிடம் கூறினார்.

அப்போஸ்தலர்களிடம் மிகப்பெரிய பொறுப்பு கொடுக்கப்பட்டதல்லவா? முடிந்தவரைக்கும் அனைவரும் இந்த சுவிசேஷத்தைப் பிரசங்கித்துவிட்டு தம்முடைய வீட்டிற்குத் திரும்பும்படி இயேசு அப்போஸ்தலரிடம் கூறினார்.


**கேள்விகள்:**

1. இயேசுவின் கல்லறையை பார்க்கச் சென்று, அது காலியாக இருக்கக் கண்ட ஸ்திரீகளிடம், தூதன் சொன்ன செய்தி என்ன?

2. இயேசு மீண்டும் உயிரோடு எழுப்பப்பட்டார் என்று பேதுருவும் யோவானும் அறிந்த பின், அவர்கள் என்ன செய்தார்கள்?

3. இயேசு மீண்டும் உயிரோடு எழுப்பப்பட்ட பின்பு, சீஷர்கள் செய்ய வேண்டும் என்று அவர் கூறினது என்ன?

# 38. வருகிற தேவனுடைய வல்லமை



இயேசு அப்போஸ்தலர்களைவிட்டு பரலோக வீட்டிற்குச் செல்வதற்கு முன், தேவனுடைய வல்லமையை பெற்றுக்கொள்ளும்வரைக்கும், எருசலேமில் காத்திருக்கும்படி சொன்னார். தேவனுடைய வல்லமையை, பரிசுத்த ஆவி என்று வேதம் அழைக்கிறது. யோர்தான் நதியில் தீர்க்கதரிசியாகிய யோவானிடம் இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது, தேவனுடைய வல்லமை இயேசுவின்மேல் அமர்ந்ததைக்குறித்து நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். இப்பொழுது இயேசுவுக்காக ஊழியம் செய்வதற்கு தேவனுடைய வல்லமை அவர்களுக்கும் தேவைப்பட்டது!

ஆகவே, சில நாட்கள் எருசலேமில் அனைவரும் காத்திருந்தார்கள். ஒரு நாள் இயேசுவைக்குறித்தும், தேவனைக்குறித்தும் அவர்கள் ஒருமித்து பேசிக்கொண்டு ஜெபிக்கையில் ஒரு பலமான காற்றடித்தது. அதற்குப் பின் அக்கினி நாவுகள் போன்றவைகள் ஒவ்வொரு சீஷர்களுடைய தலையின்மேலும் தோன்றியது.

இது எவ்வளவு நேரம் நீடித்தது என்பதை நாம் அறியோம். ஆயினும், அப்போஸ்தலர்கள் வெவ்வேறு மொழிகளை தங்களால் பேச முடியும் என்பதை அறிந்துகொண்டார்கள். எவ்வளவு விநோதமான காரியம்! அப்பொழுது என்ன நடந்தது?

தேவனுடைய வல்லமை அவர்கள் மேல் வந்தது.

தேவன் எவ்வளவு வல்லமையுள்ளவர் என்பதை சீஷர்களுக்குக் காண்பிக்கும்படியாக தேவன் இக்காரியங்களை நடத்தினார். அவர்கள் தேவனுக்காகவும் இயேசுவுக்காகவும் ஊழியம் செய்வதற்கும், அவர்களுக்குத் தேவைப்படும்போதெல்லாம் உதவி செய்வதற்காகவும் தேவன் அவருடைய வல்லமையை அனுப்பினார். அவர்கள் தேவனுடைய வல்லமையை பெற்றதினால் வெவ்வேறு மொழிகளைப் பேசமுடியும் என்பதை அறிந்துகொண்டார்கள். மற்ற மொழிகளிலும் இயேசுவைக்குறித்து பிரசங்கிப்பதற்கு இக்காரியம் மிக அவசியமாகத் தேவைப்பட்டது.

இயேசுவின் சீஷர்கள்மேல் வல்லமை வந்து இறங்கிய அந்த நாள் பெந்தெகொஸ்தே நாள் என்று அழைக்கப்பட்டது. அதற்கு ஐம்பது என்று பொருள். இயேசு உயிர்த்தெழுந்த பின், ஐம்பதாம் நாளில் இச்சம்பவம் நடந்தது. அப்பொழுது, உலகமெங்குமுள்ள பக்தியுள்ள யூதர்கள் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தில் பலி செலுத்தவதற்காக வந்திருந்தார்கள்.

இந்த இஸ்ரயேலர்கள் பல இடங்களிலிருந்து வந்திருந்ததினால் இவர்கள் பல மொழிகளைப் பேசினார்கள். இப்படிப்பட்ட பல மொழிகளைக்குறித்து இயேசுவின் சீஷர்கள் அறியாதிருந்தார்கள். உடனடியாக வந்த அனைவருக்கும் இயேசுவின் காரியங்களைக்குறித்து பிரசங்கிப்பதற்கு அவர்கள் அறிய வேண்டியதாக இருந்தது. ஆகவே, தேவனுடைய வல்லமையினால் அங்கிருந்த அப்போஸ்தலர்கள் அனைவரும் அங்கு கூடி வந்திருந்த இஸ்ரயேலர்கள் பேசின மொழியில் இயேசுவைக்குறித்த காரியங்களைப் பேசினார்கள். இப்படியாக சீஷர்கள் கற்றறியாத மொழிகளில் தேவனுடைய வல்லமையின் உதவியினால் பேசினார்கள்.

அந்நாளில் அப்போஸ்தலர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். அவர்கள் பாடல்களைப் பாடி தேவனைத் துதித்திருக்கலாம். தேவனுடைய வல்லமையைப் பெற்றதினால், இயேசு அவர்களுக்குச் சொல்லியிருந்த சகல காரியங்களையும் பேச விரும்பினார்கள்.

பேதுரு அற்புதமான ஒரு சொற்பொழிவை பிரசங்கித்தார்.

தேவனுடைய தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டவர் இந்த இயேசுவே என்று ஜனங்களுக்குக் கூறினார். மேலும், அனைவரும் ஜீவனைப் பெறுவதற்காக இயேசு மரித்தார் என்பதையும் தீர்க்கதரிசிகள் முன்னறிவித்திருக்கிறார்கள் என்று கூறினார். இயேசு உயிர்த்தெழுப்பப்பட்டு பரலோகத்திற்குச் சென்றதையும், அதனால் பரிசுத்த ஆவி அவர்கள்மேல் வந்தது என்பதையும்குறித்து பேதுரு ஜனங்களிடம் கூறினார். பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டிருந்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணுகிறோம்!

இயேசுவைக் கொலை செய்வதற்கு உதவியாக இருந்த பல இஸ்ரயேலர்கள் மிகவும் வருத்தப்பட்டார்கள். தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று பேதுருவிடம் கேட்டார்கள், நீங்கள் "மனந்திரும்பி" ஞானஸ்நானம் பெறுங்கள் என்று கூறினார். இவைகளைச் செய்வீர்களானால் உங்கள்மேல் தேவன் பிரியமாயிருப்பார் என்று கூறினார். நீங்கள் இயேசுவின் சீஷர்களாக இருப்பீர்கள் என்று பொருள்படும்.

அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவது என்று வேதாகமம், 1 பேதுரு 2:21-ல், இயேசு விரும்பிய காரியங்களை நாம் செய்ய முயற்சிப்பதே இதன் பொருளாகும். இயேசுவின் நண்பர்களின் மீது பரிசுத்த ஆவி வந்தபோது இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டும் என்று பலர் முடிவு செய்தார்கள்.

**கேள்விகள்:-**

1. தேவனுடைய வல்லமைக்கு வேதாகமம் என்ன பெயர் கொடுத்துள்ளது?

2. தேவனுடைய வல்லமையை இயேசுவின் சீஷர்கள் பெற்றபோது அவர்களால் என்ன செய்ய முடிந்தது?

3.சீஷர்களின் எதிரிகள் அவர்களைக்குறித்து என்ன சொன்னார்கள்? அதற்கு பேதுரு சொன்ன பதில் என்ன?



## 39. ஒரு முடவன் சொஸ்தமாக்கப்பட்டான்

பேதுரு ஒரு நல்ல மனுஷன். தேவன் விரும்பிய காரியங்களைச் செய்வதற்கு அவர் எப்பொழுதும் ஆயத்தமாக இருந்தார். பேதுருவுக்கும், மற்ற சீஷர்களுக்கும் பரிசுத்தஆவி கிடைத்தவுடனே பேதுரு ஒரு நாள் தேவாலயத்திற்குச் சென்றார். தேவாலயத்தின் வாசலில் நடக்க முடியாமல் அமர்ந்திருக்கும் ஒரு மனுஷனைக் கண்டார்.

அந்த மனுஷன் பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். அந்த முடவனுக்கு கொடுக்கும்படியாக பேதுருவினிடத்தில் பணம் இல்லாதிருந்ததினால், அதைக்காட்டிலும் மேலான ஒரு காரியத்தை அந்த முடவனுக்காக பேதுரு செய்தார். பேதுரு தேவனுடைய வல்லமையைப் பயன்படுத்தி, அந்த மனுஷனுடைய கால்களை குணமாக்கினார். எவ்வளவு அற்புதமான ஒரு காரியம்!

இயேசுவைப்போல வியாதியஸ்தர்களை குணமாக்கவும், மரித்தவர்களை உயிரோடு எழுப்புவதற்கும், பேதுருவின்மேல் தேவனுடைய பரிசுத்தஆவி இருந்தது. பேதுரு செய்த காரியத்தை அநேக ஜனங்கள் கண்டார்கள். அப்பொழுது பேதுரு இயேசுவைக்குறித்து அவர்களிடம் பேசினார் - வருவார் என்று தேவனுடைய தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டவர் இவரே என்று கூறினார். இயேசுவின் எதிராளிகள் அவரைக் கொன்றுபோட்டாலும் தேவன் அவரை உயிரோடு எழுப்பினார் என்று பேதுரு கூறினார். தேவன் இயேசுவுக்குக் கொடுத்த வல்லமையை, இப்பொழுது அப்போஸ்தலரும் பெற்றுக்கொண்டதினால், இப்படிப்பட்ட முடவனை பேதுரு குணமாக்கினார் என்பதை அவர் விவரித்தார்.

சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன் உண்மையில் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்திருக்க வேண்டும்! அவரும் மற்றவரைப்போல நடந்தார், அவர் துள்ளி குதித்தெழுந்தார் என்று வேதம் கூறுகிறது. அதற்காக நாம் அவரை பின்பற்ற முடியுமா?

இந்த உலகத்திலுள்ள அனைத்து முடவர்களும் சொஸ்தமாக்கப்படுவது எவ்வளவு அற்புதமாக இருக்கும்! அதுபோல உலகத்திலுள்ள பார்வையற்றோர் கேளா செவியுடையோர் அனைவரும் சொஸ்தமாக்கப்பட்டால் எவ்வளவு அற்புதமாக இருக்கும். ஆம், தேவன் இப்படிப்பட்ட வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்கு காலம் மிகவும் சமீபித்திருக்கிறது.

ஏசாயா புத்தகத்தில் 35-ம் அதிகாரத்தில் தேவன் இதைக்குறித்து நமக்குக் கூறுகிறார். முடவனாய் இருப்பவர்கள் மானைப்போல துள்ளிக் குதிப்பார்கள் என்று தேவன் சொல்லுகிறார்.

ஒரு மானை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அவைகள் எவ்வளவு வேகமாக துள்ளி குதித்து ஓடும் என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

உண்மையில் உலகத்திலுள்ள முடவர்கள் அனைவரும் சொஸ்தமாக்கப்படுவர் என்றும், அவர்கள் ஓயாமல் துள்ளி குதித்துக்கொண்டிருப்பார்கள் என்றும் பொருளல்ல, அவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்பதையே தேவன் பொருள்படுத்துகிறார். ஆம், ஜனங்கள் அனைவரும் சொஸ்தமாகும்பொழுது, பார்வையற்றோர் பார்வை பெறும்பொழுது, கேளாத செவிகள் கேட்கும் திறனைப் பெறும்பொழுது அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியாக இருப்பர்கள்.

இந்த அற்புதமான காரியங்களையெல்லாம் தேவன் எப்பொழுது செய்வார் என்று நீங்கள் சிந்திக்கலாம்? அதைக்குறித்துதான் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

ஆலயத்தின் வாசலில் அமர்ந்திருந்த முடவனை பேதுரு சொஸ்தமாக்கின பின் இயேசுவைக்குறித்து அவருக்கு விவரித்தார். இயேசு மீண்டும் இந்த உலகத்திற்குத் திரும்பிவரும்பொழுது உலகத்திலுள்ள அனைவரும் சொஸ்தமாக்கப்படுவார்கள் என்று பேதுரு கூறினார். அது எவ்வளவு மேன்மையான காலமாக இருக்கும்! அதை "திரும்பக் கொடுத்தலின் காலம்" என்று பேதுரு அழைக்கிறார்.

திரும்பக் கொடுத்தல் என்ற வார்த்தையை நீங்கள் நினைவில் வைத்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இது அற்புதமான வார்த்தை. இதற்கு சகல காரியங்களையும் முந்தின சீருக்குக் கொண்டுவருவது என்று பொருள். எல்லா வியாதியஸ்தரும் ஆரோக்கியமான உடல்நிலைக்கு மீண்டும் கொண்டுவரப்படுவார்கள். மரித்த அனைவரும் மீண்டும் ஜீவனைப் பெறுவார்கள். இதை நாம் எவ்வாறு அறிந்துகொள்ள முடியும்? தேவன் இதை வாக்களித்தார் என்று பேதுரு கூறினார். தேவனுடைய வாக்குத்தத்தங்களை எல்லா தீர்க்கதரிசிகளும் எழுதும்படி தேவன் கூறியிருக்கிறார். இதன் வழியாக இந்த உலகத்தின் முழு மனுக்குலத்திற்கும் தேவனுடைய திட்டங்களை நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது. ஆம், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் உண்மையில் நிறைவேறும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்!

**கேள்விகள்:**

1. இந்த உலகத்திலுள்ள அனைத்து முடவர்களும் சொஸ்தமாக்கப்படக்கூடிய ஒரு காலம் வருகிறதா?

2. திரும்பக்கொடுத்தல் என்ற வார்த்தையின் பொருள் என்ன? தேவனுடைய தீர்க்கதரிசிகளில் எத்தனை பேர் இதைக்குறித்து எழுதியிருக்கிறார்கள்?



## 40. பொய் என்ற பாவம்

இயேசுவின் சீஷரிடம் ஒரு மனுஷனும் அவனுடைய மனைவியும் பொய் சொன்னதினிமித்தம் என்ன நடந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? இப்படிப்பட்ட துன்மார்க்கமான காரியத்தைச் செய்த ஒரு கணவனும் மனைவியும் இருந்தார்கள். அவனுக்கு அனனியா என்றும், அவனுடைய மனைவிக்கு சப்பீராள் என்றும் பெயர். இவர்களே பேதுருவிடம் பொய் சொன்னவர்கள். தேவனுடைய பணியில் செய்யக்கூடிய காரியங்களில் பொய்சொல்வது மேலும் தவறாகும். இப்படிப்பட்ட ஒரு பொய்யை பேதுருவிடம் அனனியாவும் சப்பீராளும் கூறினார்கள். எப்படிப்பட்ட பொய்யும் மிகப்பெரிய தவறாகும்.

பேதுருவும் இயேசுவின் சீஷராகிய யோவானும் ஒருமித்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டிருந்தார்கள். நான் சொல்லிய கடைசி கதையில் முடவனான ஒரு மனுஷனை பேதுரு அற்புதமாக சொஸ்தமளித்த கதையைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்லியிருந்தேன். இவர்களுடைய நற்கிரியைகளினிமித்தமாக பேதுரு மற்றும் யோவான் இயேசுவைக்குறித்தும் அவர் வழியாக வரும் அற்புதமான ஆசீர்வாதங்களைக்குறித்தும் அநேக ஜனங்கள் நம்பினார்கள்.

பேதுரு மற்றம் யோவான் எருசலேமில் தேவாலயத்தில் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். இஸ்ரயேலின் மதத்தலைவர்கள் அவர்களைக்குறித்து பொறாமைகொண்டு, இயேசுவைக்குறித்த பிரசங்கத்தை நிறுத்தச் சொன்னார்கள். ஆனால், இயேசுவின் சுவிசேஷத்தை எருசலேமில்மட்டுமல்ல இந்த முழு உலகத்திற்கும் பிரசங்கிக்கச்சொன்ன தேவனுக்கு கீழ்ப்படிவதே தங்களுடைய தலையாய கடமை என்று இந்த இரண்டு சீஷர்களும் நம்பினார்கள்.

ஏனெனில், தேவன் தாமே இந்த சுவிசேஷத்தைக்குறித்து எருசலேமில் மட்டுமல்ல இந்த முழு உலகத்திலும் பிரசங்கிக்கும்படி கட்டளையிட்டிருந்தார். அவர்கள் பிரசிங்கிப்பதை நிறுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டது - "நீங்கள் அந்த நாமத்தைக்குறித்து போதகம் பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளையிடவில்லையா? அப்படியிருந்தும், இதோ, எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி, அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள்மேல் சுமத்தவேண்டுமென்றிருக்கிறீர்கள் என்று சொன்னான். அதற்கு

பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்: மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது.” (அப்போஸ்தலர் 5:28-29)

இப்படியாக அவர்கள் தொடர்ந்து பிரசங்கித்தார்கள்.

மதத்தலைவர்கள் இவர்களைக் கண்டு அஞ்சினார்கள், ஏனெனில், எருசலேமிலுள்ள ஜனங்கள், பேதுரு மற்றும் யோவானை தேவனுடைய ஊழியக்காரர் என்றார்கள். அவர்கள் செய்த அற்புதமானது அனைவரையும் சிந்திக்க வைத்தது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இயேசுவில் விசுவாசம்கொண்டும் அவருடைய சீஷர்களாக மாறுவதற்கும் முடிவு செய்தார்கள்.

இயேசுவைக்குறித்து மற்ற இடங்களில் பிரசங்கிப்பதற்கு முடிவு செய்தார்கள். இதை முழுமையாக நடப்பிப்பதற்கு அவர்களுடைய சொத்துக்களையெல்லாம் ஓரிடத்தில் சேர்த்து ஒரு மிகப்பெரிய குடும்பமாக தேவனுடைய பணியைச் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார்கள். தங்களுடைய விலைமதிப்புள்ள சொத்துக்களையும் நிலங்களையும் விற்று பொதுவாக வைத்தார்கள். இந்த பணம், எல்லா சீஷர்களின் உணவுக்காகவும் உடைக்காகவும் செலவழிக்கப்பட்டது. இப்படியாக அனைவரும் விடுதலை பெற்றவர்களாக இயேசுவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்.

இப்படியாக, அனனியா மற்றும் அவருடைய மனைவி இயேசுவின் சீஷர்கள் செய்த ஒழுங்கைக்குறித்து அறிந்தவர்களாக தங்களுடைய உடைமைகளை விற்று தேவனுடைய பணிக்குக் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்தார்கள். ஆனால், மற்ற விசுவாசிகளைப்போல, தாங்களும் தங்களுடைய சொத்துக்களை விற்றுக் கொடுப்பதாகக் கூறினார்கள். ஆனால், உண்மையில் அவர்கள் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்யாமல் பொய் சொன்னார்கள். அவர்கள் பொய் சொன்னார்கள் என்பதை பேதுரு அறிந்துகொண்டார். பேதுருவிடம் இந்த காரியத்தை ஒருவரும் கூறவில்லை. ஆனாலும், தேவனுடைய வல்லமையின் உதவியினால் அனனியா மற்றும் அவருடைய மனைவி வஞ்சித்ததை அறிந்துகொண்டார். அவர்களுடைய மதிப்புள்ள ஒரு சொத்தை விற்று தங்களுக்காக ஒரு பகுதியை மறைத்து வைத்துக்கொண்டார்கள். பேதுருவிடம் பொய் சொல்லும்படி சாத்தான் அவர்கள் இருதயத்தை நிரப்பினான் என்று வேதாகமம் கூறுகிறது. ஆகவே, தங்களுடைய சொத்தை விற்று முழுபணத்தையும் சீஷர்களிடம் கொடுத்ததாகப் பொய் சொன்னார்கள்.

ஜனங்களை எப்பொழுது வேண்டுமானாலும் பொய் சொல்வதற்கு சாத்தான் தூண்டுகிறான். அவன் பொய்க்குப் பிதாவாயிருப்பதினால் இப்படி செய்கிறான். ஏதேன் தோட்டத்தில் தாயாகிய ஏவாளிடத்தில் துன்மார்க்கமான அந்த சாத்தான் சொன்ன பொய்யை நீங்கள் நினைவில்கொண்டிருப்பீர்கள்.

நீங்கள் சாகவே சாவதில்லை என்று ஏவாளிடம் அந்த பொய்யைக் கூறினான்.

புசிக்க வேண்டாம் என்று சொன்ன விருட்சத்தின் கனியை புசித்தால் நிச்சயமாக சாகவே சாவீர்கள் என்று தேவன் ஆதாம் மற்றும் ஏவாளிடம் சொல்லியிருந்தார். ஆனால், சாத்தான் நிச்சயமாக சாவதில்லை என்று அவர்களுக்கு உறுதியளித்தான். ஆனால், உண்மையில் அவர்கள் மரித்தார்கள். நாம் அறிந்திருக்கிறபடி இந்நாள்வரைக்கும் அனைவரும் மரித்துக்கொண்டிருக்கிறார்கள். அனனியா மற்றும் அவருடைய மனைவி பேதுருவிடம் பொய் சொன்னதினால் தேவன் அவர்களுக்கு மரண தண்டனை கொடுத்தார். அனைவரும் இவர்கள் செய்த தவறை அறிந்துகொள்ளும்படியாக நடந்தது.

தேவன் பேதுரு மற்றும் யோவானோடு இருந்தார் என்று தங்களுக்குள் அதிகமாக உறுதிப்படுத்திக்கொண்டதினால் மதத்தலைவர்கள் மேலும் பொறாமைகொண்டவர்களாக இந்த இருவரையும் சிறையிலடைத்தார்கள். ஆனால், ஒரு நாள் இரவில் தேவனுடைய தூதர்களில் ஒருவர் இந்த சிறையின் கதவுகளைத் திறந்து அவர்களை விடுவித்தார். விடுவிக்கப்பட்ட அவர்கள் ஆலயத்திற்குச் சென்று தொடர்ந்து இயேசுவைக்குறித்து பிரசங்கித்தார்கள். இதனால் இன்னும் அதிகமான ஜனங்கள் இயேசுவை விசுவாசித்தார்கள்.

மீண்டுமாக அந்த மதத்தலைவர்கள் பேதுருவையும், யோவானையும் கைது செய்தார்கள். ஆனால், இயேசுவின் சீஷர்களின் காரியங்களில் தலையிடாமல் இருப்பதே ஞானமான காரியம் என்று அவர்களில் ஒரு போதகர் ஆலோசனை சொன்னார். எல்லாரும் அதற்கு ஒப்புக்கொண்டார்கள். ஆகவே, பேதுருவையும் யோவானையும் கடுமையாக அடித்து அவர்களை விடுதலை செய்தார்கள். இப்படியாக, தேவன் அவர்களை பாதுகாத்ததினால் தொடர்ந்து சுவிசேஷத்தைக்குறித்து அவர்களால் பிரசங்கிக்க முடிந்தது.

**கேள்விகள்:**

1. அனனியா மற்றும் சப்பீராள் என்பவர்கள் யார்? அவர்கள் செய்த மிகப்பெரிய பாவம் என்ன?

2. அனனியா சப்பீராள் தன்னிடம் உண்மை பேசவில்லை என்று பேதுரு எவ்வாறு அறிந்துகொள்ள முடிந்தது?

3. அனனியா மற்றும் அவருடைய மனைவி தங்களுடைய தவறான செயல்களுக்காக எவ்வாறு தண்டிக்கப்பட்டார்கள்?

# 41. இளைஞனான ஒரு விசுவாசி கல்லெறியப்பட்டார்

**இஸ்ரயேலில்** அதிகமதிகமான பேர்கள் இயேசுவே தேவனால் தன்னுடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்காக அனுப்பப்பட்டவர் என்று விசுவசித்தார்கள். அதில் ஸ்தேவான் என்ற ஒரு இளைஞன் இவைகளை விசுவாசித்து, இயேசுவின் சீஷரானார். அவர் விசுவாசிகளின் மத்தியில் பந்தி விசாரிப்புக்காரனாக ஏற்படுத்தப்பட்டார். போஜனத்துக்காக காத்திருப்பவர்களுக்கு போஜனம் கொடுப்பதற்கு உதவி செய்வது பந்தி விசாரிப்புக்காரரின் வேலையாயிருந்தது. தேவனுக்காக இப்படிப்பட்ட பணி செய்வது மிக முக்கியமானதாக இருந்தது. தேவனுக்காக செய்யக்கூடிய இந்தப் பணி முக்கியமானதுதான். அவருக்காக செய்யக்கூடிய காரியங்களை நம்மால்



முடிந்தவரைக்கும் சிறப்பாகச் செய்ய வேண்டும்.

மற்ற காரியங்களிலும் தேவனை விசுவாசத்தோடு ஸ்தேவான் சேவித்துக்கொண்டு வந்தார். வாய்ப்புகள் கிடைக்கும்போதெல்லாம் இயேசுவைக்குறித்தும், இயேசுவின் வழியாக நிறைவேறக்கூடிய அற்புதமான ஆசீர்வாதங்களைக்குறித்தும் சகல ஜனங்களிடமும் அவர் அறிவித்துக் கொண்டுவந்தார். ஆகையால் இந்த மதத்தலைவர்கள், இயேசுவின் மேலும், பேதுரு மற்றும் யோவானின் மேலும் பொறமைகொண்டதுபோல, அவர்மேலும் பெறாமைகொண்டார்கள். பொறாமை என்பது ஒரு கொடூரமான காரியம்!

ஆகவே, ஸ்தேவானைப் பிடித்து அந்த மதத் தலைவர்களுக்கு முன்விசாரணைக்காக நிறுத்தினார்கள். ஸ்தேவானுக்கு பதிலளிக்க வாய்ப்பு கிடைத்தபோது தேவனுடைய வாக்குத்தத்தங்களைக்குறித்த அற்புதமான கதையையும், இயேசு தேவனுடைய வாக்குத்தத்தங்களை எவ்வாறு நிறைவேற்றப் போகிறார் என்ற உண்மைகளையும் அவர் தெளிவாக அறிவித்தார்.

ஆபிரகாமைக்குறித்தும், தேவன் ஆபிரகாமிடத்தில் செய்த அந்த வாக்குத்தத்தங்களைக்குறித்தும் ஸ்தேவான் கூறினார். அதற்குப் பின் ஈசாக், யாக்கோபு மற்றும் அவருடைய பன்னிரண்டு குமாரர்களையும்பற்றியும் கூறினார். அதற்குப் பின் யோசேப்பு எகிப்தில் அடிமையாக விற்கப்பட்டதையும், எகிப்து தேசத்திலிருந்து திரளான இஸ்ரயேல் ஜனங்களை வெளியே அழைத்துவந்த மோசேயைக் குறித்தும் அவர் நினைவுப்படுத்தினார்.

தேவனுடைய சகல ஊழியக்காரர்களையும் உபத்திரவப்படுத்தின ஜனங்களைப்போல இந்த பொறாமைக்கொண்ட மதத்தலைவர்களும் இருந்தார்கள் என்று ஸ்தேவான் கூறினார். ஸ்தேவான் சத்தியத்தைக் கூறும்பொழுது, அவர்கள் மேலும் மூர்க்க கோபமடைந்தார்கள். இப்படியாக அன்று இருந்த ஜனங்களைப்போலவே இவர்களும் செயல்பட்டார்கள்.

அவர்கள் என்ன செய்தார்கள் என்று தெரியுமா? அவர்கள் ஸ்தேவானைக் கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்று முடிவு செய்தார்கள். இயேசுவின்மேல் விசுவாசம் வைத்ததினால் மரணத்திற்குள்ளாக தீர்ப்பளிக்கப்பட்ட இந்த ஸ்தேவான் இப்படிப்பட்ட ஒரு காரணத்திற்காக மரித்தது தேவனுடைய பார்வையில் மிகவும் கனம் பெற்றதாக இருந்தது. தேவன் ஸ்தேவானைப் பாதுகாக்கவில்லை என்பது பொருளல்ல. தேவன் இயேசுவையும் பாதுகாத்தார். ஆனாலும், அவர் மரித்தார். ஏனெனில், இயேசுவின் மரணம் மற்றவர்களை உயிரோடு எழுப்புவதற்கு அவசியமாக இருந்தது.

அதுபோல, இயேசுவைப்போல் மரிப்பதற்கான வாய்ப்பைப் பெறக்கூடிய மற்றவர்களும் பாக்கியசாலிகளாக இருந்தார்கள். ஏனெனில், தேவனுடைய திட்டத்தில் இயேசுவோடுகூட தேவனுடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்கு இவர்களும் உதவி செய்யக்கூடியவர்களாக இருப்பார்கள் - அதாவது, பூமியிலுள்ள அனைத்து குடும்பங்களையும் அவர் ஆசீர்வதிப்பார் என்ற அருமையான வாக்குத்தத்தங்களாகும். இயேசுவைப்போல் மரித்த அனைவரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். இயேசு இராஜாவாக இருப்பதுப்போல அவர்களும் அவரோடுகூட இராஜாக்களாக இருந்து, இந்த பூமியை ஆட்சி புரியக்கூடிய வேலைகளில் அவரோடுகூட துணை நிற்பார்கள்.

எல்லா சீஷர்களும் கல்லெறியப்பட்டு கொல்ல வேண்டும் என்று இதன் பொருளல்ல. இயேசுவைப்போல வாழ்க்கை வாழ்ந்து, தேவனுக்கும் மற்றவர்களுக்கும் ஊழியஞ்செய்து மரிப்பவர்களும் உயிரோடு எழுப்பப்படுவார்கள் என்று வேதாகமம் கூறுகிறது.

சில விசுவாசிகள் அல்லது சீஷர்கள் தங்களுடைய முழு வாழ்க்கையை தேவனுக்குப் பணிசெய்வதில் செலவழித்து இறுதியில் மரித்திருக்கிறார்கள்.

ஸ்தேவானைப்போல சிலர் தேவனுக்குப் பணி செய்வதினால் கொல்லப்பட்டும் இருக்கிறார்கள்.

தேவனுடைய சித்தத்தை செய்து இயேசுவைப்போல வாழக்கூடிய ஒவ்வொருவரும் மீண்டும் உயிரோடு எழுப்பப்பட்டு இராஜாவாகிய இயேசுவோடுகூட ஆட்சி செய்யக்கூடிய இராஜாக்களாக இருப்பார்கள்.

**கேள்விகள்:**

1. ஸ்தேவான் என்பவர் யார்? அவர் ஒரு பந்தி விசாரிப்புக்காரர் என்று வேதாகமம் ஏன் கூறுகிறது?

2. மத ஆளுநர்கள் ஸ்தேவானை கல்லெறிய வேண்டுமென்று முடிவு செய்ததின் காரணம் என்ன?

3. ஸ்தேவான் கல்லெறியப்பட்டு மரிப்பதற்கு தேவன் ஏன் அனுமதித்தார்?



## 42. ஒரு பரிசேயன் தன்னுடைய மனதை மாற்றிக் கொண்டார்

**வேதபாரகர்,** பரிசேயர் குறித்து நான் முன்னதாகவே உங்களுக்குக் கூறியுள்ளேன். இவர்கள் இஸ்ரயேலின் மதத்தலைவர்களாக இருந்தார்கள். இவர்கள், இயேசுவின்மேலும் ஸ்தேவான்மேலும் பொறாமைகொண்டு, அவர்களுக்கு மரணத்தீர்ப்பு அளித்தார்கள். பேதுருவையும், யோவானையும் சிறையில் அடைத்தவர்கள் இவர்களே. இயேசுவைப்பற்றி பிரசங்கிக்கக்கூடாது என்று சீஷர்களை இவர்கள் கண்டித்தார்கள். ஆனால், பேதுருவும் யோவானும் தொடர்ந்து இயேசுவைக்குறித்து ஜனங்களிடம் அறிவித்துக்கொண்டு வந்தார்கள். ஏனெனில், இதுவே தேவன் விரும்பிய காரியமாக இருந்தது.

ஆனால், வேதபாரகர் மற்றும் பரிசேயர்கள் அனைவருமே, இப்படிப்பட்ட பொறாமை கொண்ட துன்மார்க்கமான மனுஷர்கள் அல்ல. சிலர், மிக நல்லவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள்மேலும், உண்மை இன்னது என்று அறியாமல் தேவனுடைய ஜனங்களை உபத்திரவப்படுத்தினார்கள். தேவன் விரும்பாத காரியத்தை இயேசுவும், அவருடைய சீஷர்களும் செய்துக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்து, அவர்களை துன்பப்படுத்தினார்கள். ஆயினும், மனதளவில் சில பரிசேயர்கள் நல்லவர்களாக இருந்தார்கள். நாமும்கூட செய்யக்கூடிய காரியங்களை நியாயமானதா என்று நிச்சயித்துக்கொண்டு செய்ய வேண்டும். ஏனெனில், நாம் சரியென்று எண்ணி செய்யும் காரியங்கள் உண்மையில் தவறாக இருக்கலாம்.

இப்படிப்பட்ட நிலையில் சவுல் என்று அழைக்கப்படும் ஒருவர் இருந்தார். சவுலின் ஊர் தர்சு பட்டணத்தில் இருந்தததினால், அவரை தர்சு பட்டணத்தானாகிய சவுல் என்று அழைத்தார்கள். ஸ்தேவான் கல்லெறியப்பட வேண்டும் என்ற ஒரு முடிவை அறிவித்தவரும் இந்த பரிசேயனாகிய சவுல். சவுல் உண்மையில் ஸ்தேவான் மீது கல்லெறியவில்லை. ஆனாலும், கல்லெறிந்தவர்களின் வஸ்திரங்களை அவர் கையில் வைத்திருந்தார். அவர் ஸ்தேவானின்மேல் பொறாமைகொண்டு இந்தக்காரியங்களை செய்யவில்லை. ஸ்தேவான் தேவனுடைய எதிராளி என்றெண்ணி, அவரை கொலை செய்வதற்கு அனுமதித்தார். ஆனாலும், அவர் செய்தது மிகப்பெரிய தவறாய் இருந்தது.

எருசலேமில் மட்டுமல்ல, மற்ற பட்டணங்களிலும் சவுலினால் அநேகர் உபத்திரவப்பட்டார்கள். சவுல் எருசலேமில் இருந்தபோது, இயேசுவின் சீஷர்களைக் கண்டமாத்திரத்தில், சிறையில் அடைப்பதற்கான அதிகாரப்பூர்வமான நிருபங்களை வாங்கும்படி,

இஸ்ரயேலின் பிரதான ஆசாரியனிடம் சென்றார். ஆகவே, தன்னால் முடிந்தவரைக்கும் இயேசுவின் சீஷர்களைக் கண்டுபிடிக்கத் துவங்கினார். தமஸ்கு என்ற பட்டணத்திற்குச் செல்லும் வழியில், திடீரென்று ஒரு வெளிச்சம் அவரை சுற்றி பிரகாசித்தது. அந்த ஒளி சூரியனைக்காட்டிலும் பிரகாசமாயிருந்தது. இது பரலோகத்திலிருந்து வந்த ஒளி என்று வேதம் நமக்குக் கூறுகின்றது.

சவுல் இந்த வெளிச்சத்தைக் கண்டபோது அவர் தரையில் விழுந்தார். நிச்சயமாக அவர் அதிகமாக பயந்திருக்கக்கூடும். அதற்குப்பின், "சவுலே சவுலே ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்" என்ற சத்தம் அவருக்குக் கேட்டது.

அவரோடு பேசின நபர் யார் என்பதை சவுலால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. ஆனால், இந்த ஒரு சத்தம் மனுஷனுடைய குரல் அல்ல என்பதை சவுல் அறிந்திருந்தார்.

ஆகவே, "ஆண்டவரே நீர் யார்" என்று கேட்டார். ஆண்டவர் என்பதற்கு வல்லமையுள்ளவர் என்று பொருள். பேசின அந்த நபர் தேவனுடைய வல்லமையுள்ள தூதர்களில் ஒருவராக இருந்திருக்க வேண்டும் என்று சவுல் சிந்தித்திருக்க வேண்டும்.

ஆனால், அந்த சத்தம் நிச்சயமாக தூதர்களைக்காட்டிலும் ஒரு முக்கியமானவருடையதாக இருக்க வேண்டும் என்று சவுல் புரிந்துகொண்டார். அந்த குரல் யாருடையதாக இருந்திருக்கக்கூடும்? இக்கேள்விக்கான பதிலை வேதாகமத்தில் காணலாம். இக்கேள்வியை சவுல் கேட்டபோது - "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்று பதிலளிக்கப்பட்டது. எவ்வளவு அற்புதமான காரியம்!

இயேசு பரலோகத்திலிருந்து சவுலிடம் பேசினார். அவன் நிச்சயமாக ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். அவர் இயேசுவின் சீஷர்களை சிறையிலடைத்து, ஸ்தேவான் இயேசுவைக்குறித்து பிரசங்கித்ததற்காக அவரைக் கல்லெறிந்து கொல்லும்படி கட்டளையிட்டிருந்தார். ஆனால், இப்பொழுது இயேசு அவரிடம் பேசின பின், அவர் செய்த எல்லா தவறுகளையும் அறிந்துகொண்டார்.

இயேசு சிலுவை மரணத்திற்குப்பின் உயிர்த்தெழுந்தவுடன், அங்குள்ள பரிசேயர்களும் சதுசேயர்களும் இயேசுவின் சரீரத்தை சீஷர்கள் திருடிச் சென்றார்கள் என்ற பொய்யான கதையைக் கூறியிருந்தார்கள். சவுல் ஒருவேளை அந்த கதையை நம்பியிருக்கலாம். ஆனால், இப்பொழுது அவரைக்குறித்த பொய்யான தகவல்களைப் பெற்றிருந்ததை உணர்ந்தார். இயேசு மீண்டும் உயிரோடு ஜீவனோடு எழுப்பப்பட்டார் என்பதை விசுவாசித்தார். ஏனெனில், அவருடைய குரலை அவர் கேட்டு, இந்த உண்மையை அவர் உறுதிப்படுத்திக்கொண்டார்.

சவுல் ஒரு நல்ல மனுஷனாக இருந்தார். ஆயினும், அவர் வஞ்சிக்கப்பட்டிருந்தார். இப்பொழுது, அவர் எவ்வாறு வஞ்சிக்கப்பட்டிருந்தார் என்பதை உணர்ந்தார். இவைகளையெல்லாம் அறிந்தபின், மிகக் கடுமையாக இயேசுவின் பணியை அல்லது ஊழியத்தைச் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார்.

ஆகவே, "ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்று சவுல் கேட்டார். அதற்கு இயேசு -"எழுந்திரு பட்டணத்திற்குச் செல், நீ செய்ய வேண்டியதை அங்கு உனக்கு அறிவிப்பேன் என்று இயேசு கூறினார்." சவுல் தரையிலிருந்து எழுந்தபோது, தான் கண் பார்வை இழந்ததை அறிந்துகொண்டார்! பரலோகத்திலிருந்து வந்த அந்த பிரகாசமான வெளிச்சத்தை அவருடைய கண் காண முடியாததினால், அவர் பார்வையை இழந்தார். சவுலோடுகூட பிரயாணித்த மற்றவர்கள் அவர் திடீரென்று பார்வை இழந்ததை அறிந்து, தமஸ்குவின் பட்டணத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

யூதாஸ் என்று பேர் கொண்ட ஒரு மனுஷனிடம் அவர் அழைத்துச் செல்லப்பட்டார். இவர் இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் அல்ல. யூதாஸ் என்ற பேரில் பலர் இருந்தார்கள். அவர் யூதாஸின் வீட்டில் மூன்று நாள் தங்கினார். அந்த மூன்று நாளும் அவர் புசிக்கவும் இல்லை குடிக்கவும் இல்லை.

அதேநேரத்தில், தமஸ்குவில் மற்றொரு இயேசுவின் சீஷனிடத்தில் தேவன் பேசினார். அவர் சவுல் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்பும் காரியங்களை விவரிக்கும்படிச் சொன்னார். அந்த சீஷனிடம் சவுல் கண்ட தரிசனத்தையும் இப்பொழுது அவர் இயேசுவை விசுவாசித்து அவரை சேவிக்க வேண்டும் என்ற அவருடைய விருப்பத்தையும் கூறினார். இந்த சீஷனுக்கு அனனியா என்று பெயர். அனனியா சவுலைப்பற்றி கேள்விப்பட்டபோது அவரை சந்திப்பதில் அச்சம் கொண்டவராக இருந்தார்.

ஆனால், சவுல் ஒரு உண்மையான விசுவாசி என்று தேவன் அனனியாவுக்கு உறுதியளித்தார். ஆகவே, அனனியா உடனடியாக யூதாஸின் வீட்டிற்குச் சென்று, பரிசேயனாகிய சவுலை சந்தித்தபோது முழுமையாக மனம் மாற்றப்பட்டிருந்ததையும் ஜனங்களை ஆசீர்வதிப்பதற்காக தேவன் வாக்குத்தத்தம் பண்ணினவர் இவரே என்று அவர் விசுவாசித்ததை அறிந்து;

"சகோதரனாகிய சவுலே என்று அழைத்து,

தேவனுடைய பணியில் என்னென்ன செய்ய வேண்டும் என்பதை அனனியா சவுலுக்கு விவரித்தான்.

ஆம், சவுல் உண்மையில் இயேசுவைக்குறித்து தன்னுடைய சிந்தனைகளை மாற்றிக்கொண்டார். அவர் இயேசுவின் சீஷர்களை சிறையில் அடைக்கும்படிக்கு தமஸ்குவுக்குச் சென்றார். ஆனால், இப்பொழுதோ அவர் சத்தியத்தை உணர்ந்தபின், இயேசுவைக்குறித்து யூதர்களிடம் பிரசங்கிக்கத் தொடங்கினார். அவர் தேவனுடைய குமாரன் என்று வலியுறுத்தினார். தேவனுடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்காக அனுப்பப்பட்டவரே இந்த இயேசு என்று பிரசங்கித்தார். அனனியா சவுலை சந்தித்தபோது, தேவன் விரும்பிய காரியங்களை சவுலுக்குக் கூறி, அவருக்காக ஜெபிக்கும்பொழுது, அவருடைய பார்வையை மீண்டும் பெற்றுக்கொண்டார். இப்பொழுதோ, சவுல் எங்குச் சென்றாலும் அங்கு இயேசுவைப்பற்றி ஜனங்களுக்கு அறிவித்துக்கொண்டிருந்தார்.

**கேள்விகள்:**

1. சவுல் என்பவர் யார்? அவர் தர்சு பட்டணத்தானாகிய சவுல் என்று ஏன் அழைக்கப்பட்டார்?

2. சவுல் எதற்காக தமஸ்குவுக்குச் சென்றார்? அங்கு செல்வதற்கு முன் என்ன நடந்தது?

3. சவுலுக்கு தேவன் என்ன வேலைகளை வைத்திருந்தார்?



## 43. பேதுருவின் விநோதமான சொப்பனம்

**தேவன்** விரும்பும் காரியங்கள் அனைத்தையும் செய்ய வேண்டும் என்று பேதுரு எப்பொழுதும் கடுமையாக உழைத்துக்கொண்டிருந்ததினால் தேவன் இவரை நேசித்தார்.

பேதுரு தேவனுக்காகவும் இயேசுவுக்காகவும் ஊழியம் செய்தார். பேதுரு ஒவ்வொரு இடமாகச் சென்று, தேவன் ஜனங்களை நேசிப்பதாகவும், இயேசு அனைவரின் மகிழ்ச்சிக்காக மரித்தார் என்றும் சொல்லிக்கொண்டு வந்தார். ஜனங்களுக்கு நற்செய்தி அறிவிப்பதற்காக பேதுரு யோப்பா என்ற ஒரு பட்டணத்திற்குச் சென்றிருந்தார். தேவனுக்காக பேதுரு ஊழியம் செய்த யோப்பா என்ற அந்த பட்டணம் இன்றைக்கு காசா என்று அழைக்கப்படுகிறது.

யோப்பா பட்டணத்தில் தொற்காள் என்று பெயர் கொண்ட நல்ல ஒரு ஸ்திரீ இருந்தாள். அவள் மிகவும் வியாதிப்பட்டு மரித்துப்போனாள். அவளுடைய நண்பர்கள் அனைவரும் இதினிமித்தமாக துக்கம்கொண்டிருந்தார்கள். அங்கிருந்தவர்கள் பேதுருவுக்கு ஆளனுப்பினார்கள். பேதுரு மரித்திருந்த தொற்காளை மீண்டும் உயிரோடு எழுப்பினார். மரித்துப்போன அனைவரையும் மீண்டும் உயிரோடு எழுப்புவது எவ்வளவு அற்புதமான காரியமாக இருக்கும்! ஆம், இது தேவன் நமக்கு வாக்களித்திருக்கிறார். தொற்காள் மீண்டும் எழுப்பப்பட்டாள் என்று யோப்பா பட்டணத்திலுள்ள ஜனங்கள் கேள்விப்பட்டபோது, அவர்களில் அநேகர் தேவனிடத்திலும், இயேசுவே தேவனுடைய குமாரன் என்றும் விசுவாசித்து, இயேசுவின் சீஷர்களானார்கள். யோப்பா பட்டணத்தில் சீமோன் என்று அழைக்கப்பட்ட ஒருவர் இயேசுவின்மேல் விசுவாசம் வைத்தார். அவர் தோலை பதனிடுகிறவராக இருந்தார். யோப்பா பட்டணத்தில் இன்னும் பல சீமோன்கள் இருந்திருக்கலாம்.

இந்த சீமோன் கடற்கரை ஓரத்தில் ஒரு வீட்டில் குடியிருந்தார். அங்கு குடியிருக்கும்படி பேதுருவை அழைப்பித்தார். அந்த அருமையான வீட்டில் குடியிருப்பதற்கு பேதுரு மகிழ்ச்சியாக இருந்திருக்க வேண்டும்.

அந்நாட்களில் பொதுவாக வீடுகளின் கூரைகள் தட்டையாக இருந்தது. சில நேரங்களில் அவ்விடங்களை ஓய்வெடுக்கும் ஸ்தலங்களாகப் பயன்படுத்தினார்கள். ஒரு மத்தியான வேளையில் பேதுரு பசியோடு, சீமோன் வீட்டு கூரையில் ஜெபிக்கும்படி சென்றார். அந்நேரத்தில் அவ்வீட்டார் உணவு ஆயத்தம் செய்துக்கொண்டிருந்தார்கள்.

சற்று நேரத்திற்குப் பின்பு, அவர் அயர்ந்து நித்திரை செய்தபோது, ஒரு விநோதமான சொப்பனம் கண்டார்.

அவருடைய சொப்பனத்தில் வானத்திலிருந்து விநோதமான ஒரு கூடைபோல வருவதைக் கண்டார். அந்தக் கூடையில் ஒரு துப்பட்டியின் நான்கு முனைகளும் ஒருமித்து கட்டப்பட்டதுபோல் தோன்றியது. அது பார்ப்பதற்கு விசித்திரமாக இருந்தபோதிலும் அதற்குள் பலவிதமான மிருக ஜீவன்கள் இருந்தது. அதில் சில பாம்புகளைப்போலவும், பல்லிகளைப்போலவும் இருந்திருக்க வேண்டும். அவைகளை ஊரும் பிராணிகள் என்று வேதாகமம் அழைக்கிறது.

அதில் அசுத்தமான பறவைகள் இருந்தது.

எவ்வளவு விநோதமான சொப்பனம்! பேதுரு அதை பார்த்துக்கொண்டிருக்கையில்; "எழுந்திரு அவைகளை அடித்துப் புசி" என்ற சத்தத்தைக் கேட்டார்.

ஆனால், பேதுரு அவைகள் அனைத்தையும் உண்ணவில்லை. ஏனெனில், தேவன் இஸ்ரயேலர்களாகிய யூத ஜனங்களுக்கு அசுத்தம் என்று விலக்கப்பட்ட மிருகங்களைப் புசிக்கக்கூடாது என்ற பிரமாணத்தைக் கொடுத்திருந்தார். அவர்கள் ஆடுகள் மற்றும் மாடுகளின் இறைச்சிகளைப் புசிக்கலாம். ஆனால், பேதுரு சொப்பனத்தில் கண்ட மிருகத்தின் இறைச்சியைப் புசிக்கக்கூடாதிருந்தது.

ஆயினும், இந்த அசுத்தமான மிருகங்கள் இரண்டாம்முறை பேதுருவினிடத்தில் கொண்டுவரப்பட்டு அதைப் புசிக்கும்படி அழைத்தது. பேதுரு மூன்றுமுறை இவைகளைக் கண்டார். மூன்று முறைகளும் அந்த மிருகங்களைப் புசிக்கும்படி அவர் துரிதப்படுத்தப்பட்டார். ஆனாலும் தொடர்ந்து பேதுரு மறுத்து விட்டார்.

இறுதியாக பேதுரு விழித்து, அந்த சொப்பனம் என்னவாக இருக்கும் என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தார்.

அந்நேரம் பேதுருவைக் காணும்படி சில ஆட்கள் வந்து, வீட்டின் வாசலில் காத்திருப்பதாக தேவன் அவருக்கு தெரிவித்தார். பேதுரு கீழே சென்று பார்த்தபோது, செசரியா என்னும் இடத்திலிருந்து சில ஆட்கள் தங்களுடைய எஜமானாகிய கொர்நேலியுவிடம் அழைத்துச் செல்லும்படி வந்திருந்தார்கள்.

பேதுரு சில முக்கியமான காரியங்களை தங்களுக்குச் சொல்லுவார் என்று ஒரு தூதன் கொர்நேலியுவிடம் சொன்னவைகளை வந்த நபர்கள் பேதுருவிடம் விவரித்தார்கள். எவ்வளவு அற்புதமான காரியம்!

ஆம், உண்மையில் இது அற்புதமான காரியம். ஏனெனில் கொர்நேலியு ஒரு புறஜாதியாயிருந்தார். இதுவரையிலும் புறஜாதிகளைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்லவில்லை. நான் சொல்லிய அனைத்து கதைகளும் ஆபிரகாம் மற்றும் அவருடைய குடும்பத்தாரைப்பற்றிய காரியங்களாக இருந்தது. சில நேரங்களில் அவர்களைப் பிள்ளைகள் என்றும், சில நேரங்களில் இஸ்ரயேலின் பிள்ளைகள் என்றும், சில நேரங்களில் எபிரெய பிள்ளைகள் என்றும் அழைக்கப்பட்டார்கள். நிச்சயமாக இந்த உலகத்தில் இவர்கள் மட்டுமே இருக்கவில்லை.

ஆபிரகாமின் குடும்பத்தைச் சேராத பிள்ளைகளையும் புறஜாதிகள் என்று வேதாகமம் அழைக்கிறது. எளிமையாகச் சொல்லப்போனால் யூத ஜனங்கள் அல்லாதவர்கள் புறஜாதிகள். இப்படியாக, நாம் அனைவரும் புறஜாதிகளாயிருக்கிறோம். தேவன் புறஜாதிகளையும் நேசித்தார். தேவன் அனைவரையும் நேசிக்கிறார். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் உண்மையில் நிறைவேறும்போது அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். ஆனால், தேவன் கொர்நேலியுவிடம் பேசுவதற்கு தம்முடைய தூதர்களில் ஒருவரை அனுப்பும்வரைக்கும் புறஜாதி ஜனங்கள் அனைவரையும் தம்முடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்வதற்கு தேவன் அனுமதிக்கவில்லை.

இதையறிந்த பேதுரு புறஜாதியாக இருந்த கொர்நேலியுவை போய் பார்க்கும்படி தேவன் விரும்புகிறார் என்பதை அறிந்தபோது அவர் மிகவும் ஆச்சரியப்பட்டார். மேலும், தேவனுடைய ஜனங்கள் என்று யூதர்கள் தங்களை அழைத்துக்கொண்டதினால் அவர்கள் மிகவும் மேன்மைபாராட்டினார்கள். உண்மையில் தேவன் புறஜாதிகளையும் நேசிக்கிறார் என்பதை அவர்கள் அறியாதிருந்தார்கள். ஆகவே, அவர்களோடுகூட சென்று புசிக்கவும் குடிக்கவும் மாட்டார்கள். ஆம், தேவன் விரும்பிய காரியம் அனைத்தையும் செய்ய வேண்டும் என்று முடிவு செய்திருந்த பேதுரு கொர்நேலியுவை சந்திக்கப் புறப்பட்டார். பேதுரு கொர்நேலியு வீட்டிற்குச்

சென்றபோது, கொர்நேலியு, பேதுருவிடம் வந்து தாழ விழுந்து வணங்கினார். அப்பொழுது பேதுரு -

"எழுந்திரு நானும் உன்னைப்போல மனுஷன்தான்" என்று கூறினார்.

கொர்நேலியு வீட்டில் முழு குடும்பமும் பேதுருவுக்காக காத்திருந்தது. அவர்களோடுகூட சில புறஜாதி நண்பர்கள் மற்றும் அயலகத்தாரும் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்பதற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

இந்த புறஜாதிகளோடு இருப்பதற்கு பேதுருவுக்கு விநோதமாய்த் தோன்றியது. அப்பொழுது, யோப்பா பட்டணத்திலுள்ள சீமோனிடம் ஆட்களை அனுப்பும்படி தேவன் தம்முடைய தூதனைக்கொண்டு கூறினார் என்று கொர்நேலியு பேதுருவிடம் விவரித்தார். அப்பொழுது பேதுரு, தான் கண்ட சொப்பனத்தில் தேவன் அசுத்தமான மிருகங்களை சுத்தமாக்கினதாகக் கூறினதை நினைவுகூர்ந்தார். இப்பொழுது அவர் கண்ட சொப்பனத்தின் அர்த்தத்தை அவர் புரிந்துகொண்டார்.

இப்பொழுது புறஜாதிகளும் தேவனுக்குப் பிரியமாக நடந்துக்கொள்வார்கள் என்று பொருள்படுத்தியது. ஆகவே, இயேசுவைக்குறித்த செய்திகளையும் இராஜ்யத்தைக்குறித்த நற்செய்திகளையும் புறஜாதிகளுக்கு அறிவிக்க வேண்டுமென்று தேவன் விரும்புவதை பேதுரு அறிந்துகொண்டார். அந்த சொப்பனத்திற்கு எவ்வளவு அற்புதமான பொருள் உள்ளது!

ஆம், பேதுரு கண்ட சொப்பனத்தின் சரியான விளக்கத்தைப் புரிந்துகொண்டு இயேசுவைப்பற்றி புறஜாதிகளுக்கு அறிவித்தார். இயேசு உயிர்த்தெழுந்த பின்பு சீஷர்கள்மேல் தேவனுடைய வல்லமை வந்ததுபோல, இவர்கள் மேலும் தேவனுடைய வல்லமை வந்தது. அந்த கதையை நீங்கள் நினைவில் கொண்டிருப்பீர்கள். இப்பொழுது புறஜாதிகளும் இயேசுவின்மேல் விசுவாசம் கொண்டிருப்பதை தேவன் பேதுருவுக்குக் காண்பித்தார். யூதர்களினிமித்தம் தேவன் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தாரோ அவ்வாறே, இயேசுவை விசுவாசித்த புறஜாதிகளின் மேலும் தேவன் மகிழ்ச்சியாய் இருப்பதை அங்கு அவர் வெளிப்படுத்தினார். இப்பொழுது யூதர்கள் மற்றும் புறஜாதிகள் தேவனுக்கு ஒரே விதமாக தோன்றக்கூடிய காலம் வந்துவிட்டது. ஏனெனில், இயேசுவின்மேல் விசுவாசமுள்ள அனைவரும் தேவனுக்குப் பிரியமாய் இருந்தார்கள்.

**கேள்விகள்:**

1. யோப்பா பட்டணத்தில் வீட்டின் கூரையின்மேல் பேதுரு நித்திரையடைந்திருந்தபோது அவர் கண்ட சொப்பனம் என்ன?

2. கொர்நேலியுவு என்பவர் யார், எதற்கு பேதுரு அவருடைய வீட்டிற்கு அனுப்பப்பட்டார்?

3. கொர்நேலியுவின் வீட்டிற்கு வந்தபின் பேதுரு கண்ட சொப்பனத்தின் பொருளை அவர் உணர்ந்துகொண்டதின் காரணம் என்ன?



## 44. மார்ஸ் மேடையில் பிரசங்கித்த பவுல்

தர்சு பட்டணத்து சவுல், இயேசுவின் சீஷராக மாறியபோது, சவுல் என்ற தன்னுடைய பெயரை, பவுல் என்று மாற்றிக்கொண்டார். சவுல் என்ற பெயருக்கு "கேட்பது" என்று பொருள். இஸ்ரயேல் தேசத்தில் தேவன் அவர்களுக்கு நியமித்த முதல் இராஜாவின் பெயரும் சவுல். ஒருவேளை இந்த மிகப்பெரிய மனுஷனுடைய பெயரை அவரின் பெற்றோர்கள் அவருக்கு வைத்திருக்கலாம். நான் சொல்லிய கதைகளில் இஸ்ரயேலின் முதல் இராஜாவாகிய சவுலை பற்றி கூறியிருக்கிறேன். இயேசுவின் சீஷர்களைக் கொடூரமாக துன்பப்படுத்தினதினிமித்தம் தர்சு பட்டணத்தானாகிய சவுல் தன்னைக்குறித்து மிகவும் வேதனைப்பட்டு அவமானப்பட்டு தன்னுடைய பெயரை பவுல் என்று மாற்றிக்கொண்டான். பவுல் என்பதற்கு "சிறியது" என்று பொருள். பவுல் காண்பதற்கும் ஒரு சிறிய மனுஷனாக இருந்தார் என்று சொல்லப்படுகிறது.

பவுலைப்போல, நம்மை நாம் அற்பமாகவும் முக்கியத்துவமற்றவர்களாகவும் எப்பொழுதும் கருதுவது ஞானமான காரியமாக இருக்கிறது. உண்மையில் பவுல் தேவனுடைய முக்கியமான ஊழியக்காரராகவும், இயேசுவின் விசுவாசமுள்ள ஒரு சீஷராகவும் இருந்தார். இயேசுவைப்பற்றியும், இந்த முழு உலகத்தையும் இயேசுவின் வழியாக தேவன் ஆசீர்வதிக்கக்கூடிய அவருடைய அற்புதமான திட்டங்களைக்குறித்தும் ஜனங்களுக்கு சொல்வதற்கான வாய்ப்பு கிடைப்பதில் பவுல் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அத்தேனே பட்டணத்திற்கு பவுல் வந்தபோது, இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு அவருக்குக்கிடைத்தது. அங்கு அவருடைய இரண்டு நண்பர்களாகிய சீலா மற்றும் தீமோத்தேயு அவருக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

அத்தேனே பட்டணம், கிரேக்க நாட்டில் இருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

பவுல் அத்தேனே பட்டணத்திற்கு வந்தபோது, அங்கு சில இஸ்ரயேலர்கள் வாழ்ந்துக்கொண்டிருந்தார்கள். ஆயினும், அங்கு பல கிரேக்கர்கள் இருந்தார்கள். பவுல் இந்த ஜனங்களுடன் கலந்துகொண்டு யூதர்களை அவர்களுடைய ஜெப ஆலயங்களில் சந்தித்து இயேசுவைக்குறித்தும், இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்தும் மீண்டும் இந்த உலகத்தின் முழு ஜனங்கள் உயிரோடு எழுப்பப்படுவதைக்குறித்த எல்லாக்காரியங்களையும் அவர்களுக்கு விவரித்தார்.

அத்தேனே பட்டணத்திலுள்ளவர்கள் இப்படிப்பட்ட காரியங்களை இதுவரைக்கும் அவர்கள் கேட்கவில்லை. ஆகவே, அவர்கள் இதைக்குறித்த அதிகமான காரியங்களை அறிந்துகொள்வதற்கு மார்ஸ் மேடை என்ற இடத்திற்கு பவுலை அழைத்துச் சென்றார்கள். "நூதனமான காரியங்களை எங்கள் காதுகள் கேட்கப்பண்ணுகிறாய்: அவைகளின் கருத்து இன்னதென்று அறிய மனதாயிருக்கிறோம் என்றார்கள்"

பவுல் அழைத்துச் செல்லப்பட்ட அந்த மார்ஸ் மேடை அரியோபேகஸ் (Areopagus) என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு மிகப்பெரிய அரங்கத்தைப் போலிருந்தது. பொதுவாக, அத்தேனே பட்டணத்திலுள்ள ஜனங்கள் முக்கியமான செய்திகளைக் கேட்பதற்கும் முக்கியமாக காரியங்களை நடத்துவதற்கும் அந்த இடத்தை பயன்படுத்திக்கொள்வார்கள். சந்தேகமின்றி அனைவரும் பவுலின் வார்த்தையைக் கேட்பதற்கு அங்கு கூடியிருந்தார்கள்.

இயேசுவைக்குறித்தும், தேவனுடைய திட்டத்தைக்குறித்த அற்புதமான காரியங்களையும் அத்தேனே பட்டணத்து ஜனங்களுக்கு பவுல் கண்டிப்பாகச் சொன்னார். இவர்கள் விக்கிரகங்களை வழிபடக்கூடிய புறஜாதியார்கள். பவுல் அங்கு அநேக விக்கிரகங்களைக் கண்டார். அங்கு ஒரு இடத்தில் அறியப்படாத தேவன் என்று எழுதப்பட்டிருந்தது.

அந்த புறஜாதி ஜனங்கள் ஒரே தேவனைக்குறித்து அறியாதிருந்தார்கள் என்பதை பவுல் அறிந்தார். அவர்களுக்கு அறியப்படாத அந்த தேவனைப்பற்றி அறிவிக்க வேண்டும் என்று பவுல் நிச்சயதித்துக்கொண்டார்.

பவுல், மார்ஸ் மேடையில் பிரசங்கிக்கத் துவங்கும்போது அந்த அறியப்படாத தேவனைக்குறித்து உங்களுக்கு அறிவிக்க வந்தேன் என்று துவங்கினார்.

ஆம், அவரே உண்மையான மெய் தேவன். இந்த உலகங்களையும் உலகத்திலுள்ள சகல காரியங்களையும் அந்த மெய்யான தேவனே சிருஷ்டித்தவர் என்று பவுல் தெளிவாக விவரித்தார். அவரே வானங்களுக்கும் பூமிக்கும் தேவனாயிருப்பவர் என்றும் அவர் கைகளால் கட்டப்பட்ட ஆலயங்களில் வாசம் செய்வதில்லை என்பதையும் தெளிவாகக் கூறினார்.

சகல தேசத்திலுள்ள ஜனங்களையும் ஒரே இரத்தத்தினால் தோன்றப்பண்ணினார் என்பதையும் பவுல் அத்தேனே பட்டணத்து ஜனங்களுக்கு அறிவித்தார். இந்த பூமியில் வாழக்கூடிய அனைவருக்கும் முதல் பெற்றோர் ஆதாம் மற்றும் ஏவாள் என்று தேவன் கூறுவதை பவுல் நன்கு அறிந்திருந்தார். ஆதாம் மற்றும் ஏவாள் தேவனிடத்திலிருந்து ஜீவனைப் பெற்றார்கள். இப்படியாக, இந்த உலகத்தில் வாழும் அனைத்து ஜனங்களும் தேவனிடத்திலிருந்து ஜீவனைப் பெற்றார்கள் என்று பொருள்படுகிறது. மேலும் பவுல், "அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்" என்று விவரித்தார்.

உண்மையான தேவனைப்பற்றி அத்தேனே பட்டணத்து ஜனங்கள் இதுவரை கேள்விப்படவில்லை. அவர்கள் இதுவரை கேள்விப்படாததினால் அவர்கள் தேவனை வழிபடாததற்கு அவர்கள்மேல் குற்றம் சுமரவில்லை. ஆனாலும், உண்மையான தேவனை எல்லாரும் தொழுதுக்கொள்ளக்கூடிய காலம் வெகு சீக்கிரத்தில் வருவதாக பவுல் கூறினார். அவரைக்குறித்து அனைவரும் அறிந்துகொள்வார்கள் என்றும் விவரித்தார். வரக்கூடிய அந்த நாளை, இந்த உலகத்தின் நியாயத்தீர்ப்பின் நாள் என்று பவுல் கூறினார். வேதாகமம் அதை நியாயத்தீர்ப்பின் நாள் என்று கூறுகிறது.

நியாயத்தீர்ப்பு என்பதற்கு "சோதனை" என்று பொருள்.

ஏதேன் தோட்டத்தில் ஆதாம் மற்றும் ஏவாள் தேவனால் சோதிக்கப்பட்டார்கள். ஆனால், அவர்கள் அந்த பரீட்சையில் ஜெயிக்கவில்லை. அவர்கள் தேவன் விரும்பும் காரியத்தை செய்யாமல் தாங்கள் விரும்பும் காரியத்தை செய்தார்கள். இதினிமித்தம் அவர்கள் மரித்தார்கள். இதன் காரணத்தினால் அவர்கள்வழியாக வந்த உலக ஜனங்களும் இந்நாள்வரைக்கும் மரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், நான் உங்களுக்கு முன்னே சொன்னதுபோல இயேசு ஆதாமுக்காகவும், இந்த முழு உலகத்தின் ஜனங்களுக்காகவும் மரித்தார். அதாவது, அவர்கள் அனைவரும் மீண்டும் ஜீவனைப்பெற்று இப்படியாக அவர்கள் நித்தியமாக ஜீவிப்பதற்கு மற்றும் ஒரு வாய்ப்பு அவர்களுக்குக்கொடுக்கப்படும்.

இப்படியாக அனைவரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

இக்காரியங்களை பவுல் மனதில் வைத்து, இந்த உலகத்தை தேவன் நியாயந்தீர்க்கக்கூடிய நாள் வருகிறது என்று அத்தேனே பட்டணத்து ஜனங்களுக்குக் கூறினார். மேலும், தேவன் இயேசுவை உயிர்ப்பித்ததினிமித்தம் வருகிற நியாயத்தீர்ப்பின் நாளை நிரூபித்திருக்கிறார் என்றும் பவுல் கூறினார். பாருங்கள், இயேசுவே இந்த உலகத்தின் மிகப்பெரிய நியாயாதிபதி. இந்த உலகத்திலுள்ள ஜனங்கள் இயேசுவை நியாயாதிபதியாகப் பெறுவதற்கு எவ்வளவு பாக்கியசாலிகளாக இருப்பார்கள்!

தேவன் இயேசுவை மீண்டும் உயிரோடு எழுப்பினதினால் அவர் ஜனங்களை நீதியாக நியாயந்தீர்ப்பார். அத்தேனே பட்டணத்தில் வாழ்ந்த ஜனங்கள் நூற்றுக்கணக்கான நபர்கள் பல வருடங்களாக மரித்திருந்தாலும், அவர்கள் ஜீவனோடு எழுந்து மீண்டும் தேவன் விரும்பும் காரியத்தைச் செய்வதற்கான ஒரு வாய்ப்பைப் பெறுவார்கள். அவர்கள் தேவனுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்திருந்தால் அவர்கள் மீண்டும் மரிக்க வேண்டிய அவசியமில்லை!

பவுல் உயிர்த்தெழுதலைப்பற்றி கூறுவதை ஜனங்கள் கேட்டபோது, சிலர் அவரை பரியாசம் செய்தார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. ஏனெனில், இதை நம்புவதற்கு அவர்களால் இயலாதிருந்தது. ஆனால், மற்றவர்களோ:
"நாங்கள் இதைக்குறித்து மீண்டும் உன்னிடத்தில் கேட்போம்" என்று கூறினார்கள்.

ஆனால், பவுல் கூறிய காரியங்களை சிலர் நம்பினார்கள். சுவிசேஷத்தை அவர்கள் நம்பினதுபோல, நாமும் விசுவாசித்துக்கொண்டிருப்பது மகிழ்ச்சியான காரியம் அல்லவா! மரித்த அனைவரும் மீண்டும் ஜீவனோடு வரக்கூடிய காலத்தை அறிந்துகொள்வது எவ்வளவு மேன்மையாக இருக்கும்!

**கேள்விகள்:**

1. மார்ஸ் மேடையில் பிரசங்கித்த பவுல் அத்தேனே பட்டணத்து ஜனங்களுக்கு என்ன கூறினார்?

2. அத்தேனே பட்டணத்து ஜனங்கள் ஆராதித்த அறியப்படாத தேவன் யார்?

3. இயேசுவைக்குறித்து பவுல் கூறிய காரியங்களை அத்தேனே பட்டணத்து ஜனங்கள் விசுவாசித்தார்களா?



## 45. எருசலேமிலிருந்து ரோமாபுரி வரைக்கும்

பவுல் தேவனுக்கு விசுவாசமுள்ள ஒரு ஊழியக்காரனாகவும், இயேசுவுக்கு உண்மையான ஒரு சீஷனாகவும் இருந்தார். இயேசு இராஜாவாக இருக்கும்போது, தேவன் செய்யக்கூடிய அற்புதமான காரியங்களைக்குறித்த திட்டங்களை, அவர் ஒவ்வொரு இடமாகச் சென்று ஜனங்களுக்கு அறிவித்தார். அதற்குப்பின், பவுல் எருசலேமுக்குச் செல்ல வேண்டும் என்பதை தேவன் அவருக்கு அறிவித்தார். தேவன் விரும்பும் காரியங்களை மட்டுமே அவர் எப்பொழுதும் செய்தார். ஆகவே, உடனடியாக எருசலேமை நோக்கிப் பயணித்தார்.

அந்நாட்களில் விமானங்களோ, இரயில் வண்டிகளோ அல்லது வாகனங்களோ இருக்கவில்லை. நாம் பயணிப்பதுபோல அன்று பவுல் பயணிக்கவில்லை. அவர் மிகவும் கஷ்டப்பட்டு பயணித்தார். சில இடங்களுக்கு அவர் நடந்தே சென்றார். சில நேரங்களில் கப்பலில் அவர் பயணித்தார்.

எருசலேமுக்குச் செல்லும் வழியில் இயேசுவின் சீஷர்கள் பலரை சந்தித்து, கூடுமான காரியங்களை அவர்களுக்குப் பிரசங்கித்தார். துரோவா (Troas) என்ற இடத்தில் இயேசுவின் சீஷர்கள் ஒருமித்துக் கூடினார்கள். அங்கு இராமுழுவதும் பவுல் பிரசங்கித்தார். ஜன்னல் ஓரமாய் அமர்ந்திருந்த ஒரு இளைஞன், பவுல் பிரசங்கித்துக்கொண்டிருக்கும்போது நித்திரையடைந்து ஜன்னலிருந்து கீழே விழுந்தான். அவனை தூக்கிப்பார்த்தபோதோ, அவன் மரித்திருந்தான். ஆனால், பவுல் தேவனுடைய வல்லமையை பயன்படுத்தி, அந்த இளைஞனை மீண்டும் ஜீவனுக்குக் கொண்டுவந்தார்.

எருசலேமுக்குச் செல்லும் வழியில், பவுல் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடமாகக் கடந்து சென்றார். அதில் அவருடைய சில நண்பர்கள் எருசலேமுக்குத் தொடர்ந்து பயணிக்க வேண்டாம் என்று ஆலோசனை கூறினார்கள். அங்கு அவர் சென்றால், அவர் சிறையில் அடைக்கப்படுவார் என்று கூறினார்கள். ஆயினும், பவுல் அவர்களின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் எருசலேமுக்குச் செல்ல வேண்டும் என்று தேவன் விரும்புவதை அவர் தெளிவாக அறிந்திருந்தததினால் அங்கு செல்வதற்குத் தயங்கவில்லை.

நான், "அங்கு கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காக மரிக்கவும் ஆயத்தமாயிருக்கிறேன்" என்று அவர் கூறினார்.

பவுலும் அவரோடுகூட வந்தவர்களும் எருசலேம் வந்து சேர்ந்தபோது, யாக்கோபின் வீட்டிற்குச் சென்றார்கள். அங்கு இயேசுவின் சீஷர்கள் பலரை சந்தித்தார்கள். பவுல் இயேசுவைக்குறித்து ஜனங்களுக்கு அறிவித்தபோது, பெற்ற அற்புதமான அனுபவங்களை அவர்களிடம் பகிர்ந்துக்கொண்டார். அதற்குப் பின், அவர் ஆலயத்திற்குச் சென்றார். பவுல் இயேசுவின் சீஷராக மாறிவிட்டார் என்று அறிந்த சில இஸ்ரயேலர்கள், அங்கு அவரை கைது செய்தார்கள்.

இயேசு மற்றும் ஸ்தேவான் மரிப்பதற்குக் காரணமாயிருந்த சில ஜனங்கள், அங்கு இருந்தார்கள். அவர்கள் பவுலையும் கொல்ல விரும்பினார்கள். அவர்களைக்குறித்து நாம் தவறாக சிந்திக்க வேண்டிய அவசியமில்லை, ஏனெனில், பவுல் தேவனுடைய ஒரு எதிரி என்று அவர்கள் தவறாக சிந்தித்திருந்தார்கள்.

ஒருக்காலத்தில், இயேசு மற்றும் ஸ்தேவானை தேவனுடைய எதிரி என்று பவுல் சிந்தித்திருந்தார். ஆனால், இப்பொழுது அவர்களைக்குறித்த தெளிவான விளக்கத்தை அறிந்திருந்தார். இப்பொழுது, இயேசுதான் தேவ ஆட்டுக்குட்டி என்பதையும், சகல ஜனங்களையும் ஜீவனோடு எழுப்புவதற்காக அவர் தன்னுடைய ஜீவனைக்கொடுத்தார் என்பதையும் பவுல் நன்கு அறிந்திருந்தார்.

நாம் முன்னதாக உங்களுக்குச் சொல்லியபடி இஸ்ரயேலர்கள் எருசலேமை உண்மையாக ஆட்சி செய்யவில்லை. அந்த பட்டணம் ரோமர்களின் ஆட்சியின் கீழ் இருந்தது. இஸ்ரயேலர்கள் பவுலை இழுத்துச் சென்று அவரை அடித்துக் கொல்லவேண்டுமென்று முயற்சித்துக்கொண்டிருப்பதை ரோம தலைமை அதிகாரிகள் கேள்விப்பட்டபோது, தங்களுடைய ரோம படைவீரர்களை அனுப்பி பவுலை மீட்டுக்கொண்டார்கள்.

பவுல் மிகப்பெரிய குற்றம் புரிந்ததாக அவர்கள் எண்ணிக்கொண்டு, பவுலை சங்கிலிகளினால் கட்டி அவரை விசாரணை செய்யும்படியாக ஒரு இடத்திற்கு அனுப்பினார்கள்.

ஜனங்கள் மிகவும் ஆர்வத்தோடு இருந்தார்கள்!

அந்த கூட்டத்திலிருந்து பவுலைப் பிரித்து தனியே வைப்பதற்காக, ரோம வீரர்கள் அவரை தனிமையான ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அவருக்கு எதிராக கூக்குரலிட்டுக்கொண்டிருக்கும் ஜனங்களிடம் பேசுவதற்காக அவர் அனுமதி கேட்டுக்கொண்டார். அவருக்கு அனுமதியும் கொடுக்கப்பட்டது. முதலாவது தன்னுடைய கைகளை அசைத்து, அனைவரையும் அமைதியாக இருக்கும்படி செய்கைக்காட்டினார். இப்படிப்பட்ட நிலையில், தான் ஒரு காலத்தில் அவர்களைப்போல் இருந்ததாக அவர்களுக்கு அறிவித்தார். ஏனெனில், இயேசு தேவனுடைய எதிரி என்பதை ஒரு காலத்தில் தான் நம்பினதாகக் கூறினார்.

இயேசுவைக்குறித்து பேசின சீஷர்களை சிறையில் அடைக்கும்படிக்கு தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் இயேசு தம்மிடத்தில் பேசின அந்த அற்புதமான அனுபவங்களை, பவுல் தன்னைக் கொல்ல முயற்சிக்கும் ஜனங்களிடம் விவரித்துக் கூறினார். அதற்குப் பின் அவர் எவ்வளவு தவறான காரியங்களை எண்ணியிருந்தார் என்பதை உணர்ந்தார். இயேசு தேவனுடைய குமாரன் என்றும் இந்த உலக ஜனங்களுக்காக அவர் மரித்தார் என்பதையும் அவர் கண்டுபிடித்தார்.

ஆம், பவுல் தம்முடைய எதிராளிகளுக்கு ஒரு அற்புதமான கதையைக் கூறினார். அது ஒரு உண்மையான கதையுமாய் இருந்தது. ஆயினும், அவர்கள் அனைவரும் பவுலைக் கொல்ல விரும்பினார்கள். இறுதியாக பவுலின் வார்த்தைகளுக்கு செவிசாய்க்காத ஜனங்கள்: "இந்த பூமியின்மேல் வாழ்வதற்கு இவன் தகுதியற்றவன் என்று கூக்குரலிட்டார்கள்."

அதற்குப் பின் ரோம அரசின் தலைமை அதிகாரி, பவுலை அந்த சிறைக்கு இழுத்துச் சென்று, அவர் குற்றம் சுமத்தப்பட்டிருந்த காரியத்தைக்குறித்த உண்மையை சொல்லும்வரைக்கும் அடிக்கக் கட்டளையிட்டார். நிச்சயமாக பவுல் எந்தத் தவறும் செய்யவில்லை. ஆனால், அந்த ரோம அதிகாரி ஒன்றும் அறியாதிருந்தான். பவுல் இயேசுவின் சீஷனாக இருந்ததினால்மட்டுமே இந்த ஜனங்கள் இவ்வளவு கோபம்கொண்டிருக்கிறார்கள் என்பதை அந்த தலைமை அதிகாரி அறியாதிருந்தான்.

நாம் விரும்பாத காரியங்களை ஒருவர் செய்யும்பட்சத்தில் அவர்கள்மேல் கோபம் கொள்வது உண்மையில் தவறாகும்.

ரோம வீரர்கள் அவரைக்கட்டி அடிக்கத் துவங்கும்போது, அவர் அருகே நின்ற ஒரு காவலாளியிடம், "ஒரு ரோமனை அடிப்பது சட்டப்படி நியாயமா" என்று கேட்டார். பவுல் ஒரு ரோமர் என்பதையறிந்து ஆச்சயரியப்பட்டு, உடனடியாக அவரை தம்முடைய தலைமை அதிகாரிக்கு அறிவித்தான். பவுல் ஒரு ரோம குடிமகன் என்பதை அவர்கள் கண்டறிந்த பின், அவரிடம் விசாரணை நடத்தும்படி சில ஒழுங்குகளை ஏற்படுத்தினார்கள்.

ஆம், பவுல் ஓரு ரோம குடிமகனாகவும், ஒரு இஸ்ரயேலனாகவும் இருந்தார். ஒரு ஆங்கில மனுஷன் அமெரிக்காவில் குடியுரிமை பெறுவது போல் இதுவும் இருக்கிறது. ஒருவருடைய பெற்றோர் ஆங்கிலேயர்களாக இருந்தாலும், அவர் அமெரிக்காவில் பிறந்தால் அமெரிக்காவில் குடியுரிமையைப் பெறுவார்.

ரோம குடியுரிமையைப் பெறுவதற்கு இவ்விரண்டு வழிகள் இருந்தது. பவுலின் பெற்றோர்கள் யூதர்களாக இருந்தபோதிலும் அவர் ரோம பட்டணத்தில் பிறந்ததினால் ரோம குடியுரிமையைப் பெற்றிருந்தார். அவர் ரோம குடியுரிமையைப் பெற்றிருந்ததினிமித்தம், அங்கிருந்த போர்ச் சேவகர்கள் அவரை மிகவும் பத்திரமாகப் பாதுகாத்தனர்.

மறுநாளில் அந்த தலைமை அதிகாரி, பவுல் தன்னுடைய பட்சத்திலுள்ள நியாயங்களை எடுத்துக் கூறும்படி இஸ்ரயேலின் ஆலோசனை சங்கத்திற்குமுன் நிறுத்துவதற்கு ஆயத்தம் செய்தான். அந்த சங்கத்தில் பரிசேயர்கள் என்று அழைக்கப்படுபவர்களும், சதுசேயர்கள் என்று அழைக்கப்படுபவர்களும் இருந்தார்கள். மரித்த ஜனங்களை தேவன் மீண்டும் எழுப்புவார் என்று பரிசேயர்கள் நம்பினார்கள். ஆனால், இப்படிப்பட்ட உயிர்த்தெழுதலை சதுசேயர்கள் நம்பவில்லை. இதை அறிந்த பவுல், அவர் உயிர்த்தெழுதலை நம்பினதால் குற்றம் சாட்டப்பட்டதாக அந்த ஆலோசனை சங்கத்தற்கு முன் கூறினார்.

ஆம், இவ்வார்த்தைகளை பவுல் கூறினபின்பு, அங்குள்ள பரிசேயர், சதுசேயருக்கும் இடையே வாக்குவாதங்கள் துவங்கியது. மேலும், பரிசேயர்கள் தேவ தூதர்கள் இருப்பதாக விசுவாசித்தார்கள். ஆகவே, பவுலிடம் ஒரு தூதன் பேசியிருக்க வேண்டும் என்று அவர்கள் எண்ணினார்கள். இது உண்யைமாக இருக்கும்பட்சத்தில் பவுலுக்கு எந்தவிதமான தீங்கும் இழைப்பதற்கு அவர்கள் மிகவும் பயந்தார்கள். ஆனால், சதுசேயர்கள் தூதர்களையும் நம்பாததினால் அவர்கள் பயப்படாமல் வாக்குவாதம் செய்துக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் வாக்குவாதம் மட்டுமல்ல கடுமையாக சண்டையிடத் துவங்கினார்கள். இதைக்கண்ட தலைமை அதிகாரி, பவுல் அதிகமாக பாதிக்கப்படுவார் என்பதை எண்ணி பயந்து, அவரை மீண்டும் பத்திரமாக அந்த காவலறைக்கு அழைத்துச் செல்லும்படி தம்முடைய சேவகர்களுக்கு கட்டளையிட்டார்.

அந்த இராத்திரியில் ஒரு அற்புதமான காரியம் நிகழ்ந்தது. "மகிழ்ச்சியாயிரு, பவுலே நீ எனக்காக எருசலேமில் சாட்சி கொடுத்ததுபோல ரோமாபுரி பட்டணத்திலும் சாட்சி கொடுக்க வேண்டும்" என்று ஆண்டவர் பவுலின் அருகே நின்று கூறினார்.

இப்பொழுது, எதை எதிர்பார்ப்பது என்று பவுல் அறிந்திருந்தார். எருசலேமிலுள்ள இஸ்ரயேலர்களிடமிருந்து விடுவிக்கப்படுவார் என்பதை நிச்சயமாக அறிந்திருந்தார். அதற்குப் பின் இத்தாலியாவிலுள்ள ரோமாபுரி பட்டணத்திற்குச் சென்று இயேசுவைக்குறித்தும், அவருடைய உயிர்த்தெழுதலைக்குறித்தும் அங்குள்ள ஜனங்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று திட்டமிட்டார். ஆனால், பவுல் ரோமாபுரி பட்டணத்திற்குப் பயணித்த காரியம் உண்மையில் ஒரு விநோதமாய் இருக்கிறது.

மறுநாளிலே, ஆண்டவர் பவுலிடம் பேசினபின், கிட்டத்தட்ட நாற்பது இஸ்ரயேலர்களைக்கொண்ட ஒரு கூட்டம் பவுலை கொல்லும்வரைக்கும் நாங்கள் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லை என்று தங்களுக்குள்ளே தீர்மானித்துக்கொண்டார்கள். இதைக்குறித்து பிரதான ஆசாரியர்களிடத்திலும் மூப்பர்களிடத்திலும் அறிவித்தார்கள். மேலும், சில கேள்விகள் கேட்கும்படியாக பவுலை அவர்களுக்கு முன் அழைக்கும்படி அந்த தலைமை அதிகாரியினிடத்தில் கேட்டுக்கொண்டார்கள். இவ்விதமாக, பவுலை அடித்துக் கொல்லுவதற்கு ஒரு வாய்ப்பாக இது இருக்கும் என்பதை விவரித்தார்கள்.

ஆனாலும், அவர்களுடைய திட்டம் செயல்படவில்லை. எருசலேமில் வாழ்ந்த பவுலின் ஒரு உறவினர் இந்த திட்டங்களை அறிந்து, அவைகளை அந்த தலைமை அதிகாரியிடம் அறிவித்தார். விசாரணைக்காக பவுல் அழைக்கப்படாமல் அவரைக் கொலை செய்யும்படியாக

இவர்கள் திட்டமிட்டதை தெளிவாகக் கூறினார். கிலவுதியு லீசியா (Claudius Lysias) என்ற பெயர் கொண்ட தலைமை அதிகாரி, செசரியாவில் உள்ள ரோம ஆளுநராகிய பேலிக்ஸிடம் பவுலை அனுப்புவதற்கு முடிவு செய்தார். பவுலை பட்டணத்திற்கு வெளியே அழைத்துச் செல்லுவதற்கு அந்த இராத்திரியில் இருநூறு போர் வீரர்களையும் எழுபது குதிரைவீரரையும் (cavalrymen) மற்றும் இருநூறு ஈட்டித் தாங்கியவர்களையும் அவர் ஆயத்தம் செய்தார்.

கிலவுதியு லீசியா, பவுலைக்குறித்து ஒரு விவரமான நிருபத்தை கனம்பொருந்திய தேசாதிபதியாகிய பேலிக்ஸ் என்பவருக்கு அனுப்பினார். பவுல் ஒரு ரோம குடிமகனாக இருப்பதினால் பேலிக்ஸிடம் அனுப்பினதாக அவர் அதில் கூறியிருந்தார். எருசலேமிலிருந்து இஸ்ரயேலர்கள் ஒரு கூட்டமாக வந்து பேலிக்ஸ்க்கு முன்பாக பவுலை குற்றம் சாட்டினார்கள்.

பேலிக்ஸ் ஒரு அறிவுள்ள மனுஷனாக இருந்தபடியினால், பவுல் எந்த தவறும் செய்யவில்லை என்பதை அவரால் புரிந்துகொள்ள முடிந்தது. ஆகவே, எருசலேமில் வந்த இஸ்ரயேலர்கள் சிலர் காரணங்களைச் சொல்லித் திருப்பி அனுப்பிவிட்டார். அதற்குப் பின் கூடுமான அளவு பவுலுக்கு சுயாதீனத்தைக் கொடுக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். மீண்டும் அவருடைய நண்பர்கள் அவரைப் பார்ப்பதற்கு அனுமதித்தார். அவ்விடத்தில் பவுல், கிட்டத்தட்ட இரண்டு வருடங்களுக்குமேல் தங்கியிருந்தார்.

பெஸ்து என்ற மற்றொரு ரோம அதிகாரி பேலிக்ஸ்க்கு பதிலாக செசரியாவில் நியமிக்கப்பட்டான். பவுல் அவருக்கு முன் விசாரணை செய்யப்பட வேண்டுமென்று ஒழுங்கு செய்யப்பட்டது. எருசலேமுக்கு வந்த பெஸ்து, செசரியாவுக்குச் செல்லும்படி கூறினான். பவுலும் ரோமாபுரி பட்டணத்திற்குச் சென்று இராயருக்கு முன் நிற்க வேண்டும் என்பதே தேவன் விரும்பும் காரியம் என்று பவுல் அறிந்துகொண்டார். இராயர், ரோம சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக இருந்தான். பவுல் ஒரு ரோம குடிமகனாக இருந்ததினால் அவர் முன்வைத்த கோரிக்கை கனப்படுத்தப்பட்டு அல்லது அவருடைய வார்த்தைகளுக்கு மதிப்பு கொடுக்கப்பட்டு ரோமாபுரி பட்டணத்திற்கு ஒரு கைதியாக அழைத்துச் செல்லப்பட்டார்.

பவுல் ரோமாபுரி பட்டணத்தை நோக்கி பயணிப்பதற்கு முன், அகிரிப்பா என்ற ரோம அரசனுக்கு முன், தன்னுடைய காரியங்களை முன்வைக்கும்படி பெஸ்து ஒழுங்கு செய்திருந்தார். பவுல் சொல்லிய காரியங்களில் இராஜாவாகிய அகிரிப்பா மிகவும் ஆர்வம்கொண்டவராக "நானும் இயேசுவின் சீஷனாக மாறிவிடுவேன் போல் இருக்கிறது" என்று அவர் கூறினார். உண்மையில் பவுல் இயேசுவைப்பற்றியும், அவருடைய உயிர்த்தெழுதலைப்பற்றியும், மரித்த அனைவரும் உயிர்பெறப்போகும் காரியங்களைக்குறித்த மிக அற்புதமான ஒரு பிரசங்கத்தை இராஜாவாகிய அகிரிப்பாவுக்குப் பிரசங்கித்தார்.


பவுலின் காரியத்தை இராயரிடம் முறையிடாமலிருந்தால் பவுலை விடுதலை செய்திருக்கலாம் என்று இராஜாவாகிய அகிரிப்பா கூறினார். ஆயினும், ரோமாபுரி பட்டணத்திலுள்ள ஜனங்களுக்கு இயேசுவை அறிவிப்பதற்காக அவர் அங்குச் செல்ல வேண்டும் என்று தேவன் அவரிடம் கூறியிருந்தார். ஆகவே, தேவன் விரும்பும் காரியத்தை செய்தவற்கு அவர் தீர்மானித்திருந்ததினால் அவரை விடுவித்தாலும் சரி விடுவிக்கா விட்டாலும் சரி, அதை பவுல் பொருட்படுத்தவில்லை.

பவுல் மற்ற சிறை கைதிகளோடு ரோமாபுரி பட்டணத்திற்கு கப்பலில் பயணம் செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டது. யூலியு என்ற அதிகாரியின் பொறுப்பில் எல்லா கைதிகளும் ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள். ரோமாபுரி பட்டணத்திற்கு நேரடியாக கப்பல்கள் செல்லவில்லை. ஆகையால் எகிப்திலுள்ள அலெக்சந்திரியா பட்டணத்தை அடையும்வரைக்கும் ஒவ்வொரு இடமாக பலமுறைகள் கப்பல்களை மாற்றிக்கொண்டு சென்றார்கள்.

இத்தாலிக்கு செல்லக்கூடிய ஒரு கப்பலில் பயணிக்க அவர்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்டது. ஆனாலும், கொடூரமான புயலின் காரணமாக அந்த கப்பல் இத்தாலியா பட்டணத்தைச் சேராமல் மெலித்தா என்ற தீவில் கரைதட்டியது.

இவைகள் சம்பவிப்பதற்கு முன் அவர்கள் நல்ல துறைமுகம் (The Fair Havens) என்ற இடத்தில் தனித்து நின்றார்கள். அந்த வருடம் முடிந்துக் கொண்டிருப்பதினால், மழைக்காலம் முழுவதும் நல்ல துறைமுகம் என்ற இடத்தில் கப்பலை நிறுத்தும்படி பவுல் தலைமை அதிகாரியிடம் ஆலோசனை கூறினார். அந்தக் கப்பலில் இருநூற்றெழுபத்தாறு நபர்கள் பயணித்திருந்தார்கள். அதில் பலர் தாங்கள் அடைய வேண்டிய இலக்கை சீக்கிரத்தில் அடைய வேண்டும் என்ற ஆவலுடன் பவுலின் ஆலோசனையை புறக்கணித்து, பயணத்தைத் துவங்கினார்கள்.

# பவுலின் பிரயாணங்கள்



ஆனால், பவுல் சொன்ன காரியம் ஏற்றதாய் இருந்தது. கடுமையான மழையினிமித்தம் புயல் எழும்பினது. அவர்கள் பயணித்த கப்பல் உடையுமளவுக்குப் புயல் அலைக்கழித்தது. கப்பலிலிருந்த நபர்கள் மிகவும் பயந்தார்கள். அப்பொழுது பவுல் மிகவும் அற்புதமான செய்தியை அவர்களிடம் அறிவித்தார். "கப்பற்சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது"

இந்தக் கப்பல் மூழ்கினாலும் கப்பலிலுள்ள ஜனங்கள் அனைவரும் நிச்சயமாக காப்பாற்றப்படுவார்கள் என்பதற்கான காரணத்தை பவுல் விவரமாக கூறினார். தேவனுடைய ஒரு தூதன் அவரிடம் பேசும்போது: "பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனேகூட யாத்திரைபண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார் என்றான்."

அதற்குப் பின் அவர்களால் முடிந்தவரைக்கும் கரையை நோக்கி கப்பலைச் செலுத்தினார்கள். நீந்தக்கூடிய சிலர், அந்தக் கப்பலிலிருந்து குதித்து நீந்திக் கரையேறினார்கள். சிலர் உடைந்த கப்பலின் துண்டுகளைப் பிடித்துக்கொண்டு பத்திரமாக கரை சேர்ந்தார்கள். சேதமடைந்த கப்பலில் பயணித்த நபர்களிடம் மெலித்தா தீவில் வாழ்ந்த ஜனங்கள் மிகவும் அன்பாய் நடந்து கொண்டார்கள். மழை காலமாக இருந்ததினால், அவர்கள் அங்கு நெருப்பை மூட்டினார்கள்.

பவுல் அந்த நெருப்பை அதிகமாக எரிய விடும்படி அந்த நெருப்பின்மேல் விறகுகளைப் போட்டுக்கொண்டிருந்தபோது ஒரு விஷப்பாம்பு அவர் கையைக் கவ்விக்கொண்டது. அந்த அணலிலிருந்து, அந்த பாம்பு வந்ததாக வேதம் கூறுகிறது. குளிர்ச்சியான சீதோஷணமாயிருந்ததினால், அங்கு மூட்டப்பட்ட அக்கினி விறகுகளுக்குள் ஒளிந்து கொண்டிருந்த பாம்பை வெளியே விரட்டியிருக்க வேண்டும்.

இந்த விஷம் நிறைந்த பாம்பு யார் ஒருவரைக் கடித்தாலும் அவர்கள் உடனடியாக மரித்துவிடுவார்கள் என்பதை அந்த தீவில் இருந்த ஜனங்களும், கப்பலில் பயணித்த பயணிகளும் நன்கு அறிந்திருந்தார்கள். ஆயினும், பவுல் எந்த வகையிலும் சேதப்படவில்லை. ரோமாபுரி பட்டணத்திலிருக்கும் ஜனங்கள் இயேசுவைப்பற்றி பவுல் அறிவிக்க வேண்டியதாக இருந்ததினால், தேவன் அவரை முழுமையாகப் பாதுகாத்தார். பவுல் பாம்புக்கடியினால் மரிக்காததைக் கண்டு, அந்தத் தீவிலுள்ள ஜனங்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு, அவரிடத்தில் மிகவும் அன்பாய் நடந்துகொண்டார்கள்.

அந்த தீவை புபிலியு (Publius) என்பவர் ஆட்சி செய்து வந்தார். அவருடைய தந்தை மிகவும் வியாதிப்பட்டிருந்தார். பவுல் அவரை சொஸ்தமாக்கினார். மேலும், அந்த தீவில் இருந்த வியாதியஸ்தரையும் பவுல் சொஸ்தமாக்கினார். பவுல் மெலித்தா தீவில், மூன்று மாதங்கள் தங்கியிருந்தார். அதற்குள் கடுமையான அந்த குளிர்காலம் முடிந்தது. அலெக்சந்திரியாவிலிருந்து மற்றொரு கப்பல் இந்த குளிர்காலத்திற்காக மெலித்தா தீவில் தங்கியிருந்தது. ஆகவே, பவுல் இத்தாலியாவுக்குத் தன்னுடைய பயணத்தை அந்த கப்பலில் தொடர்ந்தார். அதற்குப் பின் இத்தாலியாவை அடைவதற்கு இரண்டு நிறுத்தங்களே வழியில் இருந்தது. இறுதியாக பவுல் இத்தாலியாவுக்கு வந்து சேர்ந்தார்.

பவுல் எந்த தவறும் செய்யவில்லை என்று ரோம அதிகாரிகள் நன்கு அறிந்திருந்தார்கள். ஆகவே, பவுலை ஒரு சிறை கைதியைப்போல் அவர்கள் கொண்டுவராமல், ஒரு வாடகை வீட்டில் தங்கும்படி அவர்கள் அவரை அனுமதித்தார்கள். அவர் முழுமையாக விடுதலை பெறவில்லை. ஏனெனில், எப்பொழுதும் ஒரு சேவகன் அவரோடுகூட கட்டப்பட்டிருந்தார். இப்படியாக பவுலை அந்த சேவகர்கள் பாதுகாத்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படியாக, பவுல் இரண்டு வருஷங்கள் வாழ்ந்துவந்தார். இந்தக் காலங்களில் அவர் என்ன செய்து கொண்டிருக்கக்கூடும் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்?

ஆம், முதலில் ரோமாபுரி பட்டணத்திலுள்ள முக்கியமான யூதர்களுக்கு ஆளனுப்பினார். இயேசுவைப்பற்றியும், அவருடைய உயிர்த்தெழுதலைப்பற்றியும் அவர்களிடம் கூறினார். சிலர் பவுலின் வார்த்தைகளை விசுவாசித்தார்கள். சிலரோ விசவாசிக்கவில்லை.

அதற்குப் பின் பல புறஜாதிகள் அவரை சந்திக்க வந்தார்கள்.

இப்படியாக, பவுல் முழுமையான அந்த வருடங்களிலும் தன்னை சந்திக்க வந்த ஜனங்களிடம் இயேசுவைக்குறித்தும், இந்த பூமியின்மேல் இயேசு இராஜாவாக ஆட்சி

செய்யும்போது தேவன் செய்ய இருக்கும் பலவிதமான நன்மையான காரியங்களைக் குறித்தும் சொல்லிக்கொண்டே இருந்தார்.

இதற்குப் பின் பவுல் என்ன செய்தார் என்று வேதாகமம் தெளிவாக நமக்குக் கூறவில்லை. அதற்குப் பின் அவர் விடுவிக்கப்பட்டாலும், மீண்டுமாக ரோமர்களால் சிறைபிடிக்கப்பட்டு ரோமாபுரி பட்டணத்தில் கொல்லப்படும்வரைக்கும், அவர் சிறை கைதியாக வைக்கப்பட்டிருந்தார் என்று நம்பப்படுகிறது. இயேசுவைப்போல பவுலும் எந்தவிதமான தவறும் செய்யவில்லை. ஆயினும், அவரைக் கொன்றுவிட்டார்கள். அவர் இராஜாவாகிய இயேசுவைக்குறித்து ஜனங்களிடம் அறிவித்த காரியங்களை அந்த ஆளுநர்கள் விரும்பாததினால் அவருக்கு மரணதண்டனையைக் கொடுத்தார்கள். இந்த உலகத்தை இயேசு இராஜாவாக ஆட்சி செய்யக்கூடிய காலம் எவ்வளவு மேன்மையுள்ளதாக இருக்கும்?

**கேள்விகள்:**

1. பவுல் எருசலேமிலுள்ள ஆலயத்திற்குச் சென்றபோது அங்கு என்ன நடந்தது?

2. பவுல் தன்னுடைய எதிரிகள் தன்னை வெறுப்பதின் காரணத்தை விவரித்த ரோம ஆளுநர்களின் பெயர்கள் என்ன?

3. பவுல் ரோமாபுரி பட்டணத்திற்கு செல்லும் வழியில் என்ன நடந்தது? அவர் மழைகாலத்தில் மெலித்தா தீவில் தங்கியதின் காரணம் என்ன?

4. ரோமாபுரி பட்டணத்திற்கு பவுல் வந்தபோது அவர் எவ்வாறு நடத்தப்பட்டார்?



## 46. ஜீவ விருட்சங்களை யோவான் காண்கிறார்

இந்த புத்தகத்தின் இரண்டாம் தலைப்பில், நாம் ஆதாம் மற்றும் ஏவாளாகிய இந்த உலகத்தில் வாழ்ந்த முதல் மனிதர்களைக்குறித்து வாசித்தறிந்தோம். தேவன் செய்ய வேண்டாம் என்ற காரியங்களை இவர்கள் செய்ததினால் அந்த அழகான ஏதேன் தோட்டத்தில் அவர்கள் தொடர்ந்து வாழ இயலாமற்போனது.

உண்மையில், இது ஒரு பரிதாபமான காரியம். ஏனெனில், ஆதாம் மற்றும் ஏவாள் நித்தியமாக வாழ்வதற்குத் தேவையான சகல காரியங்களையும் தேவன் அந்த தோட்டத்தில் வைத்திருந்தார். அந்த தோட்டத்தில் நித்தியமாக வாழ்ந்திருப்பது எவ்வளவு அற்புதமாக இருந்திருக்கும். அங்கு அவர்கள் எந்த வியாதிகளையும் வயோதிகத்தையும் பெறாமல் நித்தியமாக எப்போதும் வாழ்ந்திருப்பார்கள்.

தேவனுடைய எதிராளியாகிய சாத்தான், தாயாகிய ஏவாளிடம் சொல்லிய அந்த பொய்யைக்குறித்து நீங்கள் வாசித்திருப்பீர்கள்.

தேவன் சொல்லிய காரியங்களை நீங்கள் கீழ்ப்படியாமற்போனாலும் நீங்கள் சாவதில்லை என்ற பொய்யை அவன் கூறினான்.

எப்பேற்பட்ட பொய்! இந்த ஒரு பொய்யை அநேக ஜனங்கள் இந்நாள்வரை விசுவாசிப்பது எவ்வளவு விநோதமாக இருக்கிறது! ஆம், சாத்தான் ஜனங்கள் அனைவரையும் வஞ்சித்துவிட்டான் என்று வேதாகமம் கூறுகிறது.

உண்மையில்லாத காரியத்தை உண்மை என்று நம்ப வைத்ததே வஞ்சகமாகும். ஆகவே, நாம் உண்மை என்று நிச்சயித்தபின், அதை நம்புவது மிக அவசியம்.

ஆதாம் மற்றும் ஏவாள் தவறு செய்ததினால், ஏதேன் தோட்டத்தைவிட்டு வெளியே அனுப்பப்பட்ட கதையைக்குறித்து உங்களுக்குத் தெரிந்திருக்கும். அதுபோல, அவர்கள் மீண்டும்

அந்த தோட்டத்தில், அதாவது, அதைக்காட்டிலும் மிகப்பெரிய ஒரு தோட்டத்தில் அனுமதிக்கப்படுவதற்கான ஒரு காலம் வருவதைக்குறித்து நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். ஏனெனில், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் உண்மையில் நிறைவேறும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

தேவன் சொல்லியிருக்கும் அநேக வாக்குத்தத்தங்களைக்குறித்து முன்னதாகவே நாம் அறிந்திருக்கிறோம். அதில் சிலவற்றைக்குறித்து மேலும் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். அப்போஸ்தலனாகிய யோவான் எழுதிய வேதாகமத்தின் கடைசி புத்தகத்தில் சிலவற்றை நாம் காணலாம்.

அப்போஸ்தலனாகிய யோவான் இயேசுவின் மிக நெருங்கிய நண்பராக இருந்தார். இயேசு தம்முடைய சீஷர்கள் அனைவரையும் நேசித்தார் - உண்மையில் அவர் அனைவரையும் நேசித்தார் - ஆனால், யோவானை விஷேசமாக நேசித்தார். நாம் அனைவரையும் நேசிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஆனால், இயேசுவைப்போல, நாமும்கூட அறியாதவர்களைக்காட்டிலும், அறிந்த நண்பர்களை அதிகமாக நேசிப்பதில்லையா! ஆம், இயேசுவும் யோவானும் ஒருவரையொருவர் நன்கு அறிந்திருந்தார்கள். ஆகவே, யோவான் எப்போதும் தன்னுடைய எஜமானுக்கு அருகாமையில் தங்கியிருந்தார். அவர் இயேசுவினிடத்தில் எல்லாக் காரியங்களையும் கற்றுக்கொள்ள விரும்பினார். மேலும், தேவைப்படும்பொழுதெல்லாம் உடனடியாக அவருக்கு உதவி செய்யும்படி யோவான் எப்பொழுதும் இயேசுவின் அண்டையில் இருந்தார். இதை நன்கு அறிந்திருந்த இயேசு யோவானை அதிகமாக நேசித்தார்.

பல வருடங்களுக்குப் பின் இயேசு சிலுவையில் அறையப்பட்டு மீண்டும் ஜீவனோடு எழுந்தார். யோவான் தொடர்ந்து அவருக்கு விசுவாசமுள்ள ஒரு சீஷராக வாழ்ந்ததினால் பத்மு என்று அழைக்கப்பட்ட ஒரு சிறிய தீவுக்கு அவர் கைதியாக அனுப்பப்பட்டார். அந்த தீவில் சிறைக்கைதியாயிருந்த யோவான் அநேக அற்புதமான அனுபவங்களைப் பெற்றார். தரிசனங்கள் என்று அழைக்கக்கூடிய காரியங்களை அவர் கண்டார்.

தரிசனம் சொப்பனத்தைப் போலிருக்கும். ஆனால், அது ஒரு சாதாரண சொப்பனமாக அல்ல. மாறாக, தேவன் தம்முடைய ஊழியர்கள் அறிய வேண்டும் என்று விரும்பும் காரியங்கள் அதில் காண்பிக்கப்படும். ஒரு தரிசனத்தில், வார்த்தைகள் கேட்கப்பட்டு, அவ்வார்த்தைகளைப் பொருள்படுத்தும் சித்திரங்கள் வெளிப்படுத்தப்படும்.

தேவனுடைய பல ஊழியக்காரர்களுக்கு, தரிசனங்கள் காண்பிக்கப்பட்டிருக்கிறது. "பேதுரு கண்ட விநோதமான தரிசனம்" என்ற கதையை நீங்கள் நினைவுகூரலாம். ஆனால், பத்மு தீவில் யோவான் கண்ட தரிசனம் அதைக்காட்டிலும் அற்புதமானதாக இருந்தது.

அந்த தரிசனத்தில், தம்முடைய ஜனங்களுக்காக இயேசு செய்யும் அற்புதமான வாக்குத்தத்தங்களை யோவான் கேட்டார். தூதர்களும் அவருடன் பேசி, அந்த தரிசனத்தில் யோவான் கண்ட குறிப்பான காரியங்களின் அர்த்தங்களை விவரித்தார்கள். ஆம், அந்த தரிசனத்தில் யோவான் பல பல விநோதமான அற்புதமான காரியங்களைக் கண்டார். உண்மையில் சகல காரியங்களையும்குறித்துப் பேசுவது இயலாததாக இருக்கும்.

ஆனாலும், "ஜீவ விருட்சங்கள்" பற்றி யோவான் கண்ட தரிசனத்தைக்குறித்து நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். எல்லா ஜனங்களும் ஏதேன் தோட்டத்திற்குத் திரும்புவார்கள் என்று யோவான் கூறும்போது, இந்த முழு உலகமும் ஏதேனைப்போல் மாற்றப்படும் என்பதை நான் சொல்ல வேண்டும். அன்று, ஆதாம் மற்றும் ஏவாள் வாழ்ந்த ஏதேன் தோட்டம் மிகச் சிறியதாக இருந்தது. அந்த சிறிய தோட்டம், இன்று இருக்கக்கூடிய ஜனத்திற்கு போதுமானதாக இருக்கும்! ஜீவ விருட்சங்களைக்குறித்து யோவான் கண்ட தரிசனத்தைப்பற்றி நீங்கள் நினைவில்கொள்ள வேண்டும். அற்புதமான நதியின் இரு கரைகளிலும், இந்த ஜீவ விருட்சங்களை அவர் கண்டதாக நமக்குக் கூறுகிறார். அந்த அற்புதமான நதி ஜீவத்ததண்ணீருள்ள சுத்தமான நதி என்று அழைக்கப்படுகிறது. இந்த நதி மிக அற்புதமாக இருக்கிறது அல்லவா! பல்வேறு வகையான கனிகளைத்தரும் விருட்சங்கள், அந்த நதியின் கரையில் வளர்ந்திருப்பதை யோவான் கண்டதாகக் கூறுகிறார். ஒவ்வொரு மாதமும் அவைகள் கனி தந்ததாகவும் கூறப்படுகிறது (வெளிப்படுத்தல் 22:1-2).

ஆகவே, ஜீவத்தண்ணீர் மற்றும் ஜீவனுக்குரிய கனிகள் அனைத்தும் ஒரே காலத்தில் இருப்பதை நீங்கள் காணலாம்!

ஏதேன் தோட்டத்தில் ஜீவ விருட்சங்கள் - அந்த விருட்சத்தின் கனிகளை ஆதாம் ஏவாள் புசித்திருந்தால் அவர்கள் மரித்திருக்கமாட்டார்கள் என்று வேதம் சொல்கிறது. அதாவது, யோவான் கண்ட தரிசனத்தில், விருட்சத்தின் கனியைப் புசிப்பவர்கள் எப்போதும்

மரிக்கமாட்டார்கள் என்று பொருள்படுகிறது. ஆகவே, இந்த ஜீவ விருட்சங்கள் நித்தியஜீவனைத் தரக்கூடியதாய் இருக்கிறது.

வியாதிகள் சொஸ்தமடைவதற்கு அந்த விருட்சத்தின் இலைகள் பயன்படுத்தப்படும் என்று யோவான் கூறுகின்றார். ஆம், ஜீவ விருட்சங்களினால் அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். இதுவே தேவனுடைய வாக்குத்தத்தமாய் இருக்கிறது. ஆம், தேவனுடைய எல்லா வாக்குத்தத்தத்தங்கள் உண்மையாக நிறைவேறும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

யோவான் உண்மையான நதியையோ, உண்மையான மரங்களையோ காணவில்லை. அவர் நதி மற்றும் கனிமரங்களை ஒரு ஓவியம்போல கண்டார். இந்த பூமியிலுள்ள சகல ஜாதிகளும் அந்த நதியின் தண்ணீரைக் குடிப்பதற்கும் அந்த நதியின் கரைகளிலிருக்கும் மரங்களிலுள்ள கனிகளைப் புசிப்பதற்கும், அந்த நதியிலுள்ள தண்ணீரைக் குடிப்பதற்கும் பூமியிலுள்ள சகல தேசத்திற்கும் போதாது! இப்படியிருக்க, யோவான் கண்ட அந்த தரிசனத்தின் பொருள் என்ன? இது தேவனுடைய மற்றொரு வாக்குத்தத்தத்தை எடுத்துக்காட்டியது. வரும் நாட்களில் இந்த உலக ஜனங்கள் அனைவரும் தங்கள் வியாதியிலிருந்து சொஸ்தப்படுத்தப்பட்டு மரணத்திலிருந்து ஜீவனுக்கு நடத்தப்படுவதைக் காண்பிக்கிறது. ஏதேன் தோட்டத்தில் ஆதாம் மற்றும் ஏவாள் நித்தியமாக வாழ்ந்திருந்தால் அவர்கள் எவ்வாறு இந்நாட்களில் வாழ்ந்திருப்பார்களோ அப்படிப்பட்ட மரணம் இல்லாத ஒரு வாழ்க்கையை இந்த உலக ஜனங்கள் வாழப்போகிறார்கள்.

யோவான் கண்ட இந்த நதியைக்குறித்து மேலும் சில காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அந்த நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவருடைய சிங்காசனத்திலிருந்து வந்தது என்று கூறப்படுகிறது. இதன் பொருள் என்னவாக இருக்கும்? அநேக நதிகள் மலைகளிலிருந்து வருவதைக் கண்டிருக்கிறோம். ஆனால், ஜீவத்தண்ணீராகிய நதியின் தோற்றம் வித்தியாசமான இடத்திலிருந்து தோன்றுகிறது. இது சிங்காசனத்திலிருந்து வரக்கூடியதாய் இருக்கிறது. சிங்காசனத்தில் இராஜாக்கள் அமருவார்கள். நாம் இராஜாக்களைக்குறித்துக் கேள்விப்பட்டிருப்போம்.

உண்மையில், "தங்களுடைய சிங்காசனத்தின் மீது எப்போதும் இராஜாக்கள் அமர்ந்திருப்பதில்லை" ஒரு புதிய இராஜா நியமிக்கப்படும்போது அவன் முடிசூட்டப்பட்டவுடன் அந்த சிங்காசனத்தில் புதிதாக அமருவது வழக்கம். சிங்காசனம் என்பது பார்ப்பதற்கு ஒரு விநோதமான நாற்காலியைப் போலிருக்கும். ஆட்சி செய்யக்கூடியவர்கள் அதில் அமருவார்கள். ஒரு தேசத்தின் இராஜா சிங்காசனத்தின் மேல் அமர்ந்தார் என்பது அந்த தேசத்து ஜனங்களை ஆட்சி செய்வதைக்குறிக்கிறது.

ஆம், தேவனுடைய சிங்காசனத்தைக்குறித்து வேதாகமம் நமக்குக் கூறுகிறது. ஒரு கற்பனையான இருக்கையில் தேவன் அமர்ந்திருக்கிறார் என்று பொருளல்ல. நிச்சயமாக அல்ல!

இதற்கு தேவன் ஆட்சி செய்கிறவர் என்று பொருள்படும். உலகம் முழுவதிலுமுள்ள ஜனங்கள் செய்ய வேண்டிய காரியங்கள் என்னவென்றும், செய்யக்கூடாத காரியங்கள் என்னவென்றும் தேவன் கூறுவதற்கு உரிமை பெற்றிருக்கிறார் என்று பொருள்படும்.

அப்பொழுது, ஆதாம் மற்றும் ஏவாள் செய்யக்கூடாத காரியங்களைக்குறித்து தேவன் சொல்வதற்கு உரிமை பெற்றிருந்தார். ஆனால், அவர்கள் தேவனைக்காட்டிலும் காரியங்களை நன்கு அறிந்தவர்கள் என்று எண்ணி தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் போனார்கள். இதன் காரணமாக, அவர்கள் தொடர்ந்து ஏதேன் தோட்டத்தில் ஜீவ விருட்சத்தின் கனிகளைப் புசித்து, என்றும் ஜீவிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை.

தேவனுடைய சிங்காசனத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதி பாய்வதை யோவான் கண்டார் - இப்பொழுது, இதன் அர்த்தத்தை நாம் புரிந்து கொண்டோம். நித்தியமாக ஒருவர் ஜீவிப்பதற்கு தேவன் செய்ய வேண்டும் என்று சொல்லிய காரியங்களைச் செய்து, அவர் செய்ய வேண்டாம் என்று சொல்லக்கூடிய காரியங்களைச் செய்யாமல் இருப்பதையே இக்காரியம் விவரிக்கிறது. ஆம், தேவன் ஆட்சி செய்வதினால் அவருக்கு அனைவரும் கீழ்ப்படிய வேண்டும்.

இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கற்பித்த ஜெபத்தில், தேவனுடைய இராஜ்யம் வருவதற்காகவும், அவருடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்பட்டதுபோல பூலோகத்திலும் செய்யப்படுவதற்கு இயேசு கற்பித்த அருமையான ஜெபத்தைக்குறித்து, நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். தேவனுடைய சித்தம் செய்வது அவருக்குப் பிரியமான

காரியங்களைச் செய்வதாகும். தேவனுடைய சித்தம் செய்யப்படுவதை யோவான் ஒரு தரிசனத்தில் அடையாளமாகக் கண்டார். ஏனெனில், அந்த ஜீவத்தண்ணீருள்ள நதியும் கனிகளைக் கொடுக்கக்கூடிய மரங்களும் ஜனங்களை நித்தியத்திற்குள் நடத்தும்.

ஆனால், நிச்சயமாக நாம் நினைவில் கொள்ளக்கூடிய மற்றொரு காரியத்தை யோவான் கூறுகிறார். அவர் கண்ட ஜீவத்தண்ணீருள்ள நதி தேவனுடைய சிங்காசனத்திலிருந்து மட்டுமல்ல அது ஆட்டுக்குட்டியானவருடைய சிங்காசனத்திலிருந்தும் வருவதாகக் கூறுகிறார்.

தேவ ஆட்டுக்குட்டியைக்குறித்து நீங்கள் நினைவில்கொண்டிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். தேவ ஆட்டுக்குட்டியைப்பற்றி அதிகமான காரியங்களை நாம் கற்றறிந்தோம். ஆதாம் மற்றும் ஏவாளின் பிள்ளைகளாகிய ஒருவரில் ஆபேல் தேவனுக்குப் பலி செலுத்தும்படியாக ஒரு ஆட்டுக்குட்டியைக்கொண்டு வந்தார். ஆபேலின் காணிக்கையில் தேவன் மகிழ்ச்சியடைந்த காரணத்தை நாம் அறிந்திருக்கிறோம். அந்த ஆடு இயேசுவை அடையாளப்படுத்தினதாலும், அவர் தேவ ஆட்டுக்குட்டி என்று வேதாகமம் கூறுவதினாலும் தேவன் மகிழ்ச்சியாக இருந்தார் என்பதை நாம் அறிவோம்.

அதற்குப் பின் தம்முடைய குமாரனாகிய ஈசாக்கை பலி செலுத்துவதற்குப்பதிலாக மற்றொரு ஆட்டை ஆபிரகாம் பலி செலுத்தினார். இந்த கதையையும் நீங்கள் நினைவில்கொண்டிருப்பீர்கள் என்று நிச்சயத்திருக்கிறோம். ஆம், இந்த ஆடு இயேசுவை அடையாளப்படுத்துகிறது.

இஸ்ரயேலர்கள் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்படும் நாளிலே ஆடு அடிக்கப்பட்டது. இது பஸ்கா ஆடு என்று அழைக்கப்பட்டது. உண்மையான பஸ்கா ஆடு ஆண்டவர் என்று வேதாகமத்தின் மூலம் நாம் கற்றறிந்தோம். அவருடைய மரணத்தினிமித்தம், இந்த உலகத்திலுள்ள மரித்தோர் அனைவரும் மீண்டும் ஜீவனைப் பெறுவார்கள்.

இப்பொழுது நாம் கற்றறிந்தபடி தேவனுக்கு ஒரு ஆட்டை பலி செலுத்தும்போது, இந்த உலக ஜனங்கள் அனைவருக்காகவும் தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசு கொல்லப்பட்டார் என்று நாம் நினைவில்கொள்ள வேண்டும். இயேசு நமக்காக மரித்தார் என்று ஒருவர் கூறும்போது, அதன் பொருளை நாம் அறிந்திருக்கிறோம். இயேசு நமக்காவும், இந்த உலகத்திற்காகவும் மரித்தததினால் அனைவரும் மீண்டும் ஜீவன் பெறுவார்கள்.

அப்பொழுது ஆயிரம் வருடங்களுக்கு இயேசு ஆட்சி செய்வார் என்று வேதம் கூறுகிறது. அவர் ஜனங்களை தேவனுடைய சித்தம் செய்வதற்கு கற்பித்து நடப்பிப்பார். அவைகளில் யோவான் கண்ட தரிசனத்தில் தேவனுடைய சிங்காசனத்தை மட்டுமல்ல, ஆட்டுக்குட்டியானவருடைய சிங்காசனம் என்று அழைக்கப்படும் ஒரு சிங்காசனத்தையும் கண்டார். அங்கு இயேசு இராஜாவாக ஆட்சிபுரிவார். மேலும், நிச்சயமாக வாழ விரும்பக்கூடிய அனைவரும் இயேசு விரும்பும் காரியத்தைச் செய்வார்கள் என்று பொருள்படுத்துகிறது.

தங்களுக்காக மரித்த தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுவினிமித்தமே ஒருவர் நித்தியமாக வாழ முடியும் என்பதையும் பொருள்படுத்துகிறது. யோவான் கண்ட தரிசனத்தின்மேலும் சில காரியங்களை நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன். அந்த நதியின் இரு கரைகளிலும் மிகுதியாக கனிதரும் மரங்கள் இருந்தது.

அப்பொழுது, "வாருங்கள் இலவசமாய் ஜீவத்தண்ணீரைப் பருகுங்கள்" என்று ஒலிக்கும் குரல் கேட்டது.

அந்த வார்த்தைகளை யார் பேசியிருக்கக் கூடும்? "ஆவியும் மணவாட்டியும்" என்று வேதாகமம் கூறுகிறது. இவர்கள் யார் என்று நினைக்கிறீர்கள்? ஆவி என்பது தேவனுடைய வல்லமை என்று வேதாகமம் கூறுகிறது. ஆனால், சில நேரங்களில் இயேசுவையும் ஆவி என்று வேதாகமம் கூறுகிறது. ஆகவே, தேவனுடைய வல்லமை, இயேசு கிறிஸ்துவின் வழியாக அனைவரும் ஜீவத்தண்ணீரைப் பருகும்படியான ஒரு அழைப்பு கொடுப்பதை பொருள்படுத்துகிறது.

இங்கு சொல்லப்படும் மணவாட்டி யார்? இயேசுவின் சீஷர்கள் - அவரையும் நேசித்து அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவருக்கு ஊழியம் செய்யும் நிமித்தமாகவே மரித்தவர்கள் - இவர்களும் இயேசுவோடுகூட ஆட்சி செய்வார்கள். இவர்களையும் இராஜாக்கள் என்று வேதாகமம் கூறுகிறது. இவர்கள் இயேசுவோடு நித்தியமாக வாழப்போவதினால் வேதாகமம் அவர்களை மணவாட்டி என்று அழைக்கிறது.

இவர்கள் யாராக இருக்கக்கூடும்? நிச்சயமாக அனைவரைப்பற்றியும் கூற முடியாது. ஆயினும், சிலரைக்குறித்து வேதாகமம் குறிப்பிடுகிறது. அதில், பேதுரு மற்றும் பவுல் மற்றும் யோவான் - அனைத்து அப்போஸ்தலர்களும் இடம் பெற்றிருப்பார்கள். நீங்கள் வளர்ந்து இயேசுவைப் பின்பற்றி அவர் விரும்பிய காரியங்களைச் செய்தால் நீங்களும் அவரோடுகூட அந்த இராஜ்யத்தில் இருப்பீர்கள். ஆகவே, அவரோடுகூட கிரியை செய்து தேவனுடைய வாக்குத்தத்தங்களை உண்மையாக நிறைவேற்றுவதில் ஒத்துழைக்கக்கூடிய அனைவரும், அவருடைய மணவாட்டிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆகவே, அவர்கள் இயேசுவோடு கூட இணைந்து - "வாருங்கள் ஜீவத்தண்ணீரை இலவசமாய் பெற்றுக்கொள்ளுங்கள்" என்ற அழைப்பைக் கொடுப்பார்கள்.

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எவ்வாறு முழுமையில் நிறைவேறும் என்பதை எப்பொழுது நாம் காணலாம்? தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த அற்புதமான அந்த வாக்குத்தத்தத்தை எண்ணிப்பாருங்கள். அவருடைய சந்ததி, இந்த பூமியிலுள்ள முழு ஜனங்களையும் ஆசீர்வதிக்கும் என்று தேவன் சொல்லியிருந்தார். ஆனால், நாம் அறிந்தபடி ஆபிரகாம் மரித்து நீண்டகாலம் ஆயிற்று. ஜனங்களும் தேவன் வாக்களித்த ஆசீவாதங்களைப் பெறாமல் தொடர்ந்து மரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆயினும், தேவன் தான்கொடுத்த வாக்குத்தத்தத்தை மறக்கவில்லை.

அந்த வாக்குத்தத்தத்தை மறப்பதற்குப்பதிலாக அவர் சொன்ன வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்கு பல வருடங்களாக ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார். அதற்காகவே தன்னுடைய குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். இந்த உலக ஜனங்களுக்காக இயேசு மரித்தார். தேவன் விரும்பியபடி எல்லாக் காரியங்களையும் இயேசு செய்து முடித்தார். எனினும், அவருடைய வேலையைத் தொடர்ந்து செய்வதற்கு யோவான், பேதுரு, பவுல், மற்ற அப்போஸ்தலர்களையும் தேர்வு செய்தார்.

இயேசு மற்றும் அவரோடுகூட இருந்து வேலை செய்த அப்போஸ்தலர்களும், சீஷர்களும், தேவன் ஆபிரகாமிடம் வாக்களித்தவர்கள் என்று வேதாகமம் கூறுகிறது. இப்படியாக, அந்த வாக்குத்தத்தம் உண்மையாக நிறைவேறுவதைக் காணலாம். இயேசு மற்றும் அவருடைய சீஷர்கள் அல்லது அவருடைய மணவாட்டி இவைகளை உண்மையில் நிறைவேற்றுவார்கள். கலாத்தியர் 3:8, 16, 27-29.

அனைவரும் மரித்தநிலையில் இருக்கும்பொழுது ஜனங்களை ஆசீர்வதிக்க முடியாது என்று நாம் உணர்ந்திருக்கிறோம். ஆகவே, மரித்த அனைவரும் உயிரோடு மீண்டும் எழுப்பப்படுவார்கள். அதற்குப் பின் "வாருங்கள் ஜீவத்தண்ணீரை இலவசமாய் பெறுங்கள்" என்று ஜீவத்தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கு அழைப்பைப்பெறுவார்கள்.

ஆம், அப்பொழுது ஆதாம், ஏவாள், காயின், ஆபேல், நோவா, ஆபிரகாம் மற்ற அனைவரும் உயிரோடு எழுந்திருப்பார்கள்.

இயேசுவின் சீஷர் முதலாவது எழுப்பப்படுவர். அவர்கள் எழுப்பப்பட்டு இயேசுவோடு பரலோகத்தில் இருப்பார்கள். இவர்கள் ஜீவத்தண்ணீரைக் குடிக்க வேண்டிய அவசியம் இராது. ஏனெனில், அவர்கள் நித்தியமாக வாழக்கூடிய பரலோக வாழ்க்கையை இயேசுவைப்போல் பெற்றிருப்பார்கள். மீதியிருக்கும் மனுக்குலத்திற்கு ஜீவனைக்கொடுப்பதில் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். அப்பொழுது இந்த பூமியில் நித்திய சமாதானமும் சந்தோஷமும் நிலவும்.

இப்படியாக, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் உண்மையில் நிறைவேறும்பொழுது, நமக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்? யோவான் கண்ட தரிசனத்தின் மற்றொரு பகுதியில் இந்த உலக ஜனங்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பதினால் அவர்களுடைய துயரமான கண்ணீர்களை தேவன் துடைப்பதாகக் கூறுகிறார். எவ்வளவு அற்புதமான காரியம்! அனைத்து ஜனங்களின் கண்ணீரையும் தேவன் எவ்வாறு துடைப்பார்? அவர்கள் ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்து என்றும் ஜீவிப்பர் என்பதை இது தெளிவுபடுத்துகிறது. "இனி மரணமில்லை" என்பதற்கான காலம் வருவதை யோவான் தரிசனத்தில் கண்டதாகக் கூறுகிறார்.

ஒருவரும் மரிக்கமாட்டார்கள் - எவ்வளவு ஆச்சரியமான காரியம்! தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தும் உண்மையில் நிறைவேறும். ஜனங்கள் இனி ஒருபோதும் வியாதிப்பட்டு மரிக்கமாட்டார்கள் அல்லது அவர்கள் வயது சென்று மரிக்கவுமாட்டார்கள்.

ஜனங்களைக் கொல்லக்கூடிய யுத்தங்களும் இனி இராது.

ஜனங்களைக் கொல்லக்கூடிய அணு ஆயுதங்களை எண்ணி இன்று அநேகர் கவலைப்படுகிறார்கள். ஆனால், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் உண்மையில் நிறைவேறும்போது, இந்த அணு ஆயுதங்கள் ஜனங்களைக் கொல்லுவதற்கு தேவன் அனுமதிக்கமாட்டார்.

தேவன், அவருடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்கு வல்லமையுள்ளவராய் இருக்கிறார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இந்த பூமியை சிருஷ்டித்து நாம் காணக்கூடிய சந்திர நட்சத்திரங்களையும் சிருஷ்டித்தவர் அவரே. இவ்வளவு அற்புதமான காரியங்களை தேவன் எவ்வாறு சிருஷ்டித்தார் என்பதை புரிந்துகொள்வதற்கு நமக்கு ஞானம் போதாது. இவ்வளவு பிரமாண்டமான பூமியையும், சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் சிருஷ்டித்த தேவன், அவர் கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்கு உண்மையில் வல்லவராய் இருக்கிறார்.

ஆகவே, தேவன்மேல் முழு நம்பிக்கையாயிருந்து அவருக்குப் பிரியமான காரியங்களைச் செய்யலாம். மேலும், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் இந்த பூமியில் நிறைவேறக்கூடிய அந்த அற்புதமான காலத்திலுள்ள நித்தியமான சமாதானம் சந்தோஷத்தைக்குறித்து நம்முடைய நண்பர்களிடம் பகிர்ந்துக்கொள்ளலாம்.


**கேள்விகள்:**

1. தரிசனம் என்றால் என்ன? இந்த அற்புதமான தரிசனத்தை தேவன் யோவானுக்கு எப்பொழுது காண்பித்தார்?

2. ஜீவ விருட்சம் மற்றும் ஜீவத்தண்ணீருள்ள நதி என்பவைகள் என்ன?

3. தேவனுடைய சிங்காசனம் மற்றும் ஆட்டுக்குட்டியானவருடைய சிங்காசனம் என்பவைகள் என்ன?

4. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் உண்மையில் எப்பொழுது நிறைவேறும்?



## தேவனுடைய புத்தகத்தின் கதை - பகுதி 2

"இந்த உலகத்தின் மிக அற்புதமான ஒரு குழந்தை" என்ற கதையைத் தொடர்ந்துவரும் எல்லா கதைகளும், வேதாகமத்திலுள்ள மற்ற பகுதியான "புதிய ஏற்பாடு" என்று அழைக்கப்படும் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. ஆம், வேதாகமத்தில் இதுவும் ஒரு பகுதி.

தேவன் சகல காரியங்களையும் சிருஷ்டிக்கத் துவங்கின விவரங்களை வேதாகமத்தின் "பழைய ஏற்பாட்டின்" பகுதி விவரிக்கிறது. மேலும், இயேசு பிறப்பதற்கு முன் வாழ்ந்த தேவனுடைய ஜனங்களை அவர் எவ்வளவு அற்புதமாகப் பராமரித்தார் என்பதையும் கூறுகிறது.

"ஏற்பாடு" என்ற வார்த்தைக்கு ஒரு ஒப்பந்தம் அல்லது ஒரு வாக்குத்தத்தம் என்று பொருள். பழைய ஏற்பாடு, தேவனுடைய பல அற்புதமான வாக்குத்தத்தங்களை தொடர்புடையதாக இருக்கிறது. புதிய ஏற்பாடு, மேலும் சில அற்புதமான வாக்குத்தத்தங்களைக் கூறுவதுமட்டுமல்ல, அவைகள் எவ்வாறு உண்மையில் நிறைவேறும் என்பதையும் தெளிவாக விவரிக்கிறது. பழைய ஏற்பாட்டைப்போல புதிய ஏற்பாடும் புத்தகங்கள் என்று அழைக்கப்படும் பல பகுதிகளால் உண்டானது. அதில், முதலில் காணப்படும் புத்தகம் மத்தேயு என்று அழைக்கப்படுகின்றது.

### மத்தேயு

"மத்தேயு எழுதின சுவிசேஷம்" என்பது இந்த புத்தகத்தின் முழு பெயராகும். சுவிசேஷம் என்பதற்கு நற்செய்தி என்று பொருள். மத்தேயு, இயேசு கிறிஸ்துவின் ஒரு சீஷன். ஆகவே, மத்தேயு எழுதின சுவிசேஷம் என்பதற்கு இயேசுவின் சீஷனாகிய மத்தேயு கூறின நற்செய்தி என்று பொருள். இதுவரை சொல்லப்படாத அற்புதமான செய்திகளை மத்தேயு மிக அருமையாக எழுதியிருக்கிறார். மேலும் இவர், இயேசுவைப் பற்றின கதையையும், தேவனுடைய

வாக்குத்தத்தங்களையும் எவ்வாறு இயேசு நிறைவேற்றுவார் என்பதைப் பற்றியும் விவரித்திருக்கிறார்.

இயேசு குழந்தையாக இருந்தபோது, அவரைக் காணவந்த மூன்று ஞானிகளைப்பற்றியும், கொடூரமான ஏரோது இராஜா இயேசுவைக் கொல்ல வேண்டும் என்று முயற்சித்த காரியங்களையும் மத்தேயுவின் புத்தகம் நமக்குக் கூறுகிறது. இயேசுவே மிக அற்புதமான இராஜா என்று வேதம் நமக்குக் கூறுகிறது. அவர் இந்த உலகம் முழுவதையும் ஆட்சி செய்வார் என்று குறிப்பிடுகிறது.

மலை பிரசங்கம் என்று அழைக்கப்படும், இயேசுவால் பிரசங்கிக்கப்பட்ட ஒரு அற்புதமான பிரசங்கத்தை மத்தேயுவின் புஸ்தகத்தில் காணலாம். வேதாகமத்திலுள்ள அதிகாரங்கள் அதற்குள் இருக்கும் வசனங்களைக்குறித்து, நான் உங்களுக்கு சொல்லிய காரியத்தை நீங்கள் நினைவில்கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஆம், மலைப்பிரசங்கம் என்ற இயேசுவின் செய்திகள், மத்தேயு புஸ்தகத்தில் 5-ம் அதிகாரத்திலிருந்து துவங்குகிறது.

இந்த அதிகாரத்தில் மூன்று முதல் பத்து வசனங்களை நீங்கள் மனப்பாடம் செய்வதற்கு முயற்சித்தால் நலமாயிருக்கும். பாக்கியவான்கள் என்ற வார்த்தையை இந்த வசனங்களில் நீங்கள் அடிக்கடி காணலாம். அதில் முதல் பாக்கியசாலிகள் என்று பார்க்கும்பொழுது, "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக இராஜ்யம் அவர்களுடையது." இப்படியாக மத்தேயு 5-ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள மற்ற பாக்கியசாலிகளைப்பற்றி வாசித்துப்பாருங்கள்.

## மாற்கு

இது, புதிய ஏற்பாட்டின் இரண்டாம் புத்தகமாகும். "மாற்கு எழுதிய சுவிசேஷம்" என்பதே இதன் முழு பெயராகும். மாற்கு, இயேசுவின் விசுவாசமுள்ள ஒரு சீஷராக இருந்தார். இயேசு கிறிஸ்து செய்த அற்புதமான வேலைகளைக்குறித்த காரியங்களை அவர் தம்முடைய புத்தகத்தில் எழுதியிருக்கிறார். இந்த கதையை ஒரு நற்செய்தி என்றும் கூறலாம். ஏனெனில், தேவனுடைய வாக்குத்தத்தங்களை இயேசு உண்மையில் நிறைவேற்றுவார் என்பதை மீண்டும் மீண்டுமாக மாற்கு நமக்கு நினைவுபடுத்துகிறார்.

மாற்கு 10-ம் அதிகாரத்தில் 13-16 வசனங்கள்வரையில் குழந்தைகளுக்குச் சொல்லக்கூடிய ஒரு அருமையான சிறுகதை உள்ளது. சிறுபிள்ளைகளை இயேசுவினிடத்திற்கு அழைத்துவந்தபோது, சீஷர்கள் அவர்களுடைய பெற்றோர்களை கடிந்துகொண்டார்கள் என்று அதில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனாலும், இயேசு அவர்களை தடுத்து -

"சிறுபிள்ளைகளை என்னிடத்தில் வருவதற்கு தடை செய்யாதிருங்கள்" என்று கூறினார்.

மேலும், தேவனுடைய இராஜ்யத்தில் உலக மக்களை ஆசீர்வதிப்பதற்கு இயேசுவோடுகூட இருக்கக்கூடிய ஜனங்கள் சிறு பிள்ளைகளைப்போல் மாறாவிட்டால் அந்த வாய்ப்பைப் பெறமாட்டார்கள் என்று இயேசு கூறினார். இயேசு இப்படிப்பட்ட காரியத்தைக்குறிப்பிடுகையில் பெற்றோருக்குக் கீழ்ப்படிதலுள்ள அருமையான பிள்ளைகளை மனதில் எண்ணிக்கொண்டிருந்தார். பிள்ளைகள் வளர்ந்துவிட்டால் சகலத்தையும் அவர்கள் அறிந்துகொண்டதாக எண்ணிக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட எண்ணங்களை தேவன் விரும்புவதில்லை. பரலோகத்திலிருக்கிற நம்முடைய பரமபிதா தம்முடைய பிள்ளைகள் எல்லாவிஷயத்திலும் தமக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்பதை விரும்புகிறார்.

## லூக்கா

புதிய ஏற்பாட்டின் மூன்றாம் புத்தகமாகிய இதில், இயேசு செய்ததும் சொல்லிய காரியங்களின் மற்றொரு கதையைக் காணலாம். "லூக்கா எழுதின சுவிசேஷம்" என்பதே இந்த புத்தகத்தின் முழு பெயராகும். இந்த புத்தகத்தில் இயேசுவின் பிறப்பைக்குறித்து தூதர்கள் மேய்ப்பர்களிடத்தில் அறிவித்த ஒரு முக்கியமான காரியம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதை லூக்கா எழுதின சுவிசேஷத்தில், 2-ம் அதிகாரத்தில் காணலாம். மேலும், அந்த தூதர்கள் மேய்ப்பர்களை நோக்கி -

"பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்."

லூக்கா 12-ம் அதிகாரத்தில் தேவன் தம்முடைய ஜனங்களுக்காக வைத்திருக்கும் விசேஷித்த பாதுகாப்பைக்குறித்த அற்புதமான வாக்குத்தத்தத்தை இயேசு சீஷர்களிடம்

கூறுகிறார். தலையிலுள்ள முடிகளும் தேவனால் எண்ணப்பட்டிருக்கிறதாக இயேசு கூறினார். ஒரு தகைவிலான் குருவிகூட தேவனால் அறியப்படாமல் தரையில் விழுவதில்லை என்பதையும் அவர் விவரித்தார். ஆகவே, தம்முடைய ஜனங்களின் எல்லா தேவைகளையும் முழுமையாக செய்வதற்கு தேவன் வல்லமையுள்ளவர் என்பதையும் விவரித்தார்.

## யோவான்

இயேசுவின் நான்கு சீஷர்கள் அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதினார்கள். அதில் யோவானும் ஒருவர். "யோவான் எழுதின நற்செய்தி" என்பதே இந்த புத்தகத்தின் முழு பெயராகும். மற்ற மூன்று சுவிசேஷங்களை எழுதி முடித்த பின், யோவான் இப்புத்தகத்தை எழுதினார். ஆகவே, மற்ற மூன்று புத்தகத்தில் காணப்படாத பல காரியங்களை யோவான் தன்னுடைய சுவிசேஷத்தில் பதிவு செய்திருக்கிறார்.

"நம்மை சிருஷ்டித்த தேவன்" என்ற கதையை நீங்கள் நினைவில்கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்த கதையில் தேவன் தம்முடைய குமாரனை அற்புதவிதமாக சிருஷ்டித்து, அவருக்கு லோகாஸ் என்று பெயரிட்டார் என்பதை நான் உங்களுக்கு முன்னதாகவே அறிவித்திருக்கிறேன். யோவான் புத்தகத்திலுள்ள முதல் அதிகாரம், லோகாஸைப்பற்றி கூறுகிறது. ஆனால், லோகாஸ் என்ற வார்த்தையை உங்களுடைய வேதாகமத்தில் காணமுடியாது. ஏனெனில், லோகோஸ் என்பது ஒரு கிரேக்கவார்த்தையாகும். ஆகவே, லோகோஸ் என்பதற்கு பதிலாக, "வார்த்தை" என்று பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, அவர் தம்முடைய சுவிசேஷத்தை துவங்கும்போது, "ஆதியிலே வார்த்தை இருந்தது" என்று துவங்குகிறார்.

தேவனுடைய வார்த்தை என்பதற்கு, தேவனுடைய லோகோஸ் என்றும் பொருள்படுகிறதாக யோவான் தெளிவாகக் கூறுகிறார். தேவன் இவரைக்கொண்டு சகலத்தையும் சிருஷ்டித்தார். இதைக்குறித்து நாம் முதலாம் கதையில் பார்த்திருக்கிறோம்.

வேதாகமத்தில் லோகோஸ் என்பவரை ஆண்டவர் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது. ஆண்டவர் என்பதற்கு வல்லமையுள்ளவர் என்று பொருள். ஆகவே, இயேசு வல்லமையுள்ளவர். ஆனால், வேதாகமம் இயேசுவை சர்வவல்லமையுள்ள தேவன் என்று ஒருபோதும் அழைப்பதில்லை. நாம் இயேசுவை சர்வவல்லமையுள்ள தேவன் என்று அழைத்து தவறு இழைத்து விடக்கூடாது. இயேசு, தேவனுடைய குமாரனாக இருக்கிறாரே தவிர அவர் தேவனாக இருக்கவில்லை! ஆனால், அவர் தேவனுடைய குமாரனாக இருக்கும்பட்சத்தில், அவரை சில இடங்களில் தேவன் என்றும் வேதாகமம் அழைக்கிறது.

## அப்போஸ்தலர்

அப்போஸ்தலர் என்ற புத்தகம் லூக்காவினால் எழுதப்பட்டது. "அப்போஸ்தலருடைய நடபடிகள்" என்பதே இந்த புத்தகத்தின் முழு பெயராகும். இயேசு பரலோகம் சென்ற பின் அப்போஸ்தலர்களுக்கு நடந்த சம்பவங்களை இது குறிப்பிடுகிறது. இந்த புத்தகத்தில் தேவனுடைய வல்லமைபற்றியும், அது இயேசுவின் சீஷர்கள் மேல் பெந்தெகொஸ்தே நாளில் வந்த விதத்தைப்பற்றியும் விவரிக்கிறது. இயேசுவின் சீஷர்களைக்குறித்து, நான் சொல்லிய அநேக கதைகளை இந்த புத்தகத்தில் காணலாம். இந்த கதைகளை வாசித்த பின்பு, அவைகள் வேதாகமத்தில் எங்குள்ளது என்பதை நீங்கள் தேடி கண்டுபிடிக்க வேண்டும். இவ்விதத்தில் நான் சொல்லிய கதைகள் அனைத்தும், உண்மை என்பதை நீங்கள் உறுதிபடுத்திக்கொள்ளலாம்.

## ரோமர்

"அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர்களுக்கு எழுதின நிருபம்" என்பது இப்புத்தகத்தின் முழு பெயராகும். இதற்கு பவுல் ரோமர்களுக்கு எழுதின நிருபம் என்று பொருள். பவுல், ரோமர் பட்டணத்தில் வாழ்ந்த எல்லா ஜனங்களுக்கும் நிருத்தை எழுதாமல் இயேசுவைப் பின்பற்றக் கூடியவர்களுக்கு மட்டுமே இவைகளை எழுதினார்.

ஆம், இந்நாளில் நாம் மற்றவர்களுக்கு நிருபங்கள் எழுதுவதுபோல, அந்நாட்களிலும் நிருபங்கள் எழுதினார்கள். ஆனால், நாம் கடிதங்களை அனுப்புவதுபோல அவர்கள் அனுப்பவில்லை. கடிதங்களை கொண்டுச்செல்வதற்கு விமானங்களோ, இரயில் வண்டிகளோ அக்காலத்தில் இருக்கவில்லை. ஆகவே, பவுல் எழுதின எல்லா நிருபங்களையும் அவருடைய நண்பர்கள் எடுத்துச்சென்று, ஒவ்வொரு பட்டணத்திற்குச் செல்லும்பொழுது அந்த நிருபங்களை விநியோகம் பண்ணினார்கள்.

நாம் படித்த ஒரு கதையில், பவுல் ரோமாபுரிக்கு ஒரு கைதியாக இழுத்துச் செல்லப்பட்டார் என்பதை நாம் அறிந்தோம். அங்கு அவர் நீண்ட காலம் சிறையில் இருந்தார். ஆனால், பவுல் ரோமாபுரிக்குச் செல்வதற்கு முன் இயேசுவின் சீஷர்கள் அநேகர் அந்த பட்டணத்தில் வாழ்ந்துக்கொண்டிருந்தார்கள். இந்த கடிதம் அவர்களுக்காக எழுதப்பட்டது. அந்த கடிதத்தில் அவர் எழுதின வரியை வாசிக்கலாம்.

"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது." ரோமர் 1:16

"சுவிசேஷம்" என்ற வார்த்தைக்கு நற்செய்தி என்பதை நாம் அறிந்திருக்கிறோம். கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தியை அறிவிப்பதற்கு நாம் யாரும் வெட்கப்படுவதில்லை! கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்திகள் அனைத்தும், இந்த உலகம் மீண்டும் ஜீவனோடு இருப்பதற்கு தேவன் கொடுத்த அற்புதமான வாக்குத்தத்தங்களாகும். இது உண்மையில் நற்செய்திதான். இந்த நற்செய்தியை நாம் அனைவருக்கும் அறிவிப்பதற்கு மிக மகிழ்ச்சியடைய வேண்டும்.

## 1 கொரிந்தியர் மற்றும் 2 கொரிந்தியர்

கிரேக்கில் உள்ள கொரிந்து பட்டணத்தில் வாழ்ந்த இயேசுவின் சீஷர்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல், இரண்டு நிருபங்களை எழுதினார். இவைகள் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபம் என்றும், கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபம் என்றும் அழைக்கப்படுகிறது. கொரிந்து பட்டணத்தில் வாழும் சீஷர்களிடத்தில் பவுல் மிக ஆர்வம் கொண்டிருந்தார். பவுலின் பிரசங்கத்தினிமித்தம் அநேகர் இயேசுவைப்பற்றி அறிந்துகொண்டார்கள். அப்போஸ்தலர்களின் புஸ்தகத்தில் 18-ம் அதிகாரத்தில் பவுல் கொரிந்து பட்டணத்திற்குச் சென்ற அந்த ஆர்வமூட்டும் கதையைப்பற்றி நாம் நன்கு அறிந்துகொள்ளலாம்.

பவுல் அத்தேனே பட்டணத்திலிருந்து கொரிந்து பட்டணத்திற்குச் சென்றார். இந்த பட்டணமும் கிரேக்க நாட்டில் இருந்தது. அவர் அங்கு சென்றபோது, ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லாள் என்ற ஒரு கணவன் மனைவியை சந்தித்தார். இவர்கள் ரோமாபுரி பட்டணத்திலிருந்து கொரிந்து பட்டணத்திற்கு வந்த யூதர்களாக இருந்தார்கள். இஸ்ரயேலர்கள் அனைவரையும் பட்டணத்தைவிட்டு வெளியேறும்படி ரோம ஆளுநர் கூறியதால் இவர்கள் கொரிந்து பட்டணத்திற்கு வந்திருந்தார்கள்.

இயேசுவைக்குறித்த நற்செய்தியை அறிவிப்பதில், அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு அற்புதமான பிரசங்கி என்பதை நாம் அறிந்திருக்கிறோம். மேலும், மற்ற காரியங்களையும் அவர் நேர்த்தியாக செய்தார். அவர் கூடாரத் தொழிலை செய்யக் கற்றறிந்தவர் என்று வேதாகமம் கூறுகிறது. அவர் இயேசுவைப்பற்றியும் அவருடைய அற்புதமான இராஜ்யத்தைப்பற்றியும் ஜனங்களிடத்தில் கூறியபோது அதற்காக அவர் எந்தவிதத்திலும் பணங்களை வசூலிக்கவில்லை என்பது சொல்லப்படுகிறது. அவருடைய உணவுக்காகவும், அவருடைய பிரயாணங்களுக்காகவும்கூட அவர் யாரிடத்திலும் பணம் வாங்கவில்லை என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது. அவருக்கு தெரிந்த தொழிலாகிய கூடாரத் தொழிலை செய்து அவர் பணம் சம்பாதித்து அதை அவர் செலவழித்தார் என்று தெளிவாக வேதத்தில் கூறப்படுகிறது.

அவர் கொரிந்து பட்டணத்திற்கு வந்தபோது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் கூடாரத் தொழில் செய்யக்கூடியவர்களாக இருப்பதைக் கண்டு அவர்களோடு அப்போஸ்தலனாகிய பவுல் சேர்ந்துகொண்டு இம்மூவரும் ஒன்றரை வருடங்கள் ஒருமித்து வேலை செய்தார்கள். மேலும், இயேசுவைப்பற்றி ஜனங்களுக்கு அறிவிப்பதற்கும் இவர்கள் இணைந்து செயல்பட்டார்கள்.

சிறிது காலம் அப்போஸ்தலனாகிய பவுல், இஸ்ரயேலர்களுக்கு மட்டுமே இயேசுவைக்குறித்து பிரசங்கித்தார். ஆனால், அவர் புறஜாதிகளுக்குப் பிரசங்கிக்கத் துவங்கினபோது, கொரிந்து பட்டணத்தில் அநேகர் இயேசுவுக்கு சீஷர்களானார்கள். ஆகவே, இந்த சீஷர்கள் அனைவரும், "கொரிந்து சபை" என்று அழைக்கப்பட்டார்கள். அதற்குப் பின் பவுல் கொரிந்து பட்டணத்தைவிட்டு சீரியாவுக்குச் சென்றார். கொரிந்து பட்டணத்தில் அவருக்கு நண்பர்கள் இருந்ததுபோல, சீரியா பட்டணத்தில் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு ஒருவரும் இல்லை. அவர் கொரிந்து பட்டணத்தைவிட்டுச் சென்றாலும், இயேசுவை விசுவாசித்த சீஷர்களை அவர் மறக்காமல் அவர்களுக்கு இரண்டு நிருபங்கள் எழுதியிருக்கிறார். அந்த நிருபங்களில் நல்ல ஆலோசனைகளையும், தேவனுடைய அநேக அற்புதமான வாக்குத்தத்தங்களையும் அவர் நினைவுகூர்ந்திருக்கிறார்.

கொரிந்து சபைக்கு எழுதின முதலாம் நிருபத்தின் 13-ம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் அன்பை குறித்தும், அது நம் ஒவ்வொருவருடைய இருதயங்களில் இருக்க வேண்டிய முக்கியத்துவத்தைக்குறித்தும் தெளிவாகக் கூறுகிறார். நாம் ஒருவரையும் பகைக்காமல் அதாவது நம்மை வெறுக்கக்கூடியவர்களையும் நாம் பகைக்காமல் இயேசுவைப்போல இருக்க வேண்டும். அவர் தம்மைக் கொன்றுப் போட்டவர்களையும் நேசித்தார். உண்மையில் இயேசு அனைவருக்காகவும் சிலுவையில் அறையப்பட்டார்.

அதிகாரம் 15-ல், தேவன் இயேசுவை மீண்டும் ஜீவனோடு எவ்வாறு எழுப்பினார்? அதாவது, இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து பவுல் எழுதுகிறார். மேலும், தேவனுடைய வல்லமையானது, மரித்த அனைவரையும் உயிர்த்து எழுப்புவார் என்பதையும் தெளிவாகக் கூறியுள்ளார். அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்து பட்டணத்திலுள்ள சீஷர்களுக்கு இந்த கடிதங்களை எழுதினதினிமித்தம் நாம் மிக மகிழ்ச்சியடைகிறோம். ஏனெனில், அந்த கடிதங்களின் வழியாக நாம் அநேக நன்மையான காரியங்களைக் கற்றுக்கொள்கிறோம்.

## கலாத்தியர்

இந்த புத்தகமும் அப்போஸ்தலர் பவுலினால் எழுதப்பட்ட ஒரு நிருபமாகும். கலாத்தியாவிலுள்ள இயேசுவின் சீஷர்களுக்கு இது எழுதப்பட்டது. கலாத்தியா ஒரு பட்டணமல்ல, ஆனாலும், அது ஒரு சிறிய மாகாணமாக இருந்தது. கலாத்தியா நாட்டுக்குள் அநேக சீஷர்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவருக்கும், பவுல் நிருபங்களை அனுப்பினார். அவர்கள் அனைவரும் ஒரேநேரத்தில் இந்த கடிதங்களை வாசிக்காமல் ஒவ்வொரு இடமாக இந்த கடிதம் அனுப்பப்பட்டது. இப்படியாக கலாத்தியா நாட்டிலுள்ள எல்லா சீஷர்களுக்கும் இந்த நிருபத்தை வாசிப்பதற்கு வாய்ப்புகிடைத்தது.

அந்த நிருபத்திலுள்ள மூன்றாம் அதிகாரத்தில் பவுல் தேவனுடைய ஒரு அற்புதமான வாக்குத்தத்தத்தைக்குறித்து எழுதுகிறார். அதாவது, இந்த முழு உலக ஜனங்களை ஆசீர்வதிப்பதற்காக தேவன் ஆபிரகாமிடம் சொல்லிய திட்டங்களை விவரிக்கிறார். இதில் இயேசுவும் அவருடைய சீஷர்களுமே தேவன் ஆபிரகாமுக்குக்கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றக்கூடியவர்கள் என்பதை தெளிவாக்குகிறார். இயேசுவும் அவருடைய சீஷர்களும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை உண்மையாக நிறைவேற்றக்கூடியவர்களா என்று ஒருவர் உங்களிடம் கேட்டால் வேதாகமத்தில் இந்த பகுதியை நீங்கள் எடுத்துக்காட்டலாம்.

## எபேசியர்

வேதாகமத்திலுள்ள இந்த புத்தகமும் பவுலினால் எழுதப்பட்ட ஒரு நிருபமாக இருக்கிறது. இது எபேசு பட்டணத்தின் சீஷர்களுக்காக பவுல் எழுதின நிருபமாகும். பலவருடங்களுக்கு முன் பவுல் எபேசு பட்டணத்தில் இயேசுவைக்குறித்து பிரசங்கித்தார். அந்த பட்டணத்தில் இயேசுவைப்போல பவுலும் வியாதியஸ்தரை சொஸ்தமாக்கினார். இதினிமித்தம் அநேகர் இயேசுவின் மேல் விசுவாசம் கொண்டார்கள்.

அந்நாட்களில் எபேசு பட்டணத்திலுள்ள அனைவரும் பொய்யான தேவதையாகிய தியானாளை வணங்கி வந்தார்கள். அங்கே தியானாள் என்ற பெண் தேவதைக்கு ஒரு மிகப்பெரிய ஆலயம் கட்டப்பட்டிருந்தது. கூடுதலாக, எபேசு பட்டணத்தில் அநேக குறிசொல்லுகிறவர்களும், பணம் சம்பாதிப்பதற்காக ஜனங்களை வஞ்சிக்கக்கூடியவர்களும் இருந்தார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு பட்டணத்தில் தங்கியிருந்து பல வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்கி இயேசுவைக்குறித்தும், தேவனுடைய அற்புதமான வாக்குத்தத்தங்களைக்குறித்தும் அவர்களுக்கு விவரித்துக் கூறினார். அநேக மாயவித்தைக்காரர்களும், குறிசொல்லக்கூடியவர்களும் தாங்கள் செய்வது தவறு என்று உணர்ந்து அவர்களுக்குரிய புத்தகங்களைப் பொதுவான இடங்களில் கொண்டுவந்து அவைகளை எரித்தார்கள். உண்மையில் இது மிக ஆச்சரியமான காரியமல்லவா!

எபேசு பட்டணத்தில் தியானாள் தேவதையின் உருவங்களைச் செய்யக்கூடிய மனிதர்கள் அநேகர் இருந்தார்கள். இவர்கள் அந்த உருவச்சிலைகளை ஜனங்களிடம் விற்றுக்கொண்டிருந்தார்கள். இன்றைய தினங்களிலும் வீடுகளில் தெய்வங்களின் உருவச்சிலைகளை வைத்திருப்பதுபோல, அக்காலத்திலும் இப்படிப்பட்ட சிலைகளை அநேக ஜனங்கள் வைத்திருப்பதாகத் தோன்றுகிறது. ஆகவே, அவர்களிடத்தில் நல்ல விலைக்கு இந்த உருவச் சிலைகள் விற்கப்பட்டது. இப்படியாக அதை ஒரு சிறந்த வியாபாரமாக செய்துகொண்டு வந்தார்கள். பவுலின் பிரசங்கத்தின் மூலமாக துவக்கத்தில் அநேகர் இயேசுவை

விசுவாசித்தார்கள். அதுபோல, அனைவரும் இயேசுவை விசுவாசித்து விடுவார்களோ என்ற பயம் அந்த ஜனங்களைப் பிடித்தது. தியானாளுக்குப்பதிலாக இயேசுவை விசுவாசித்தால் நிச்சயமாக அவர்களால் தொழில் செய்ய முடியாது என்பதை அவர்கள் நன்கு அறிந்தவர்களாக பவுலுக்கு எதிராக பேசத்துவங்கினார்கள். ஆகவே, எபேசு பட்டணத்திலுள்ள அனைவரும் விசுவாசிகளாக மாறுவதற்கு முன், பலர் தியானாவின் அந்த மிகப்பெரிய ஆலயத்திற்குள் நுழைந்து,

"எபேசு பட்டணத்திலுள்ள தியானாளே மேன்மையுள்ளவள்" என்று அனைவரும் கோஷமிட்டார்கள்.

ஆனால், எபேசு பட்டணத்திலுள்ள மாநகரத் தலைவர் ஒரு ஞானமுள்ள மனுஷாயிருந்ததினால், அவர் ஜனங்களை அமர்த்தி, ஆலயத்திலிருந்த கூட்டத்தைக் கலைத்தார். ஆனாலும், எந்த தீங்கும் நடைபெறவில்லை. ஆனாலும், எபேசு பட்டணத்தில் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு நல்லபடியாக காலம் சென்றது. ஏனெனில், அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியரிலுள்ள சீஷர்களுக்கு நிருபம் எழுதும்பொழுது அவர்களை "பிள்ளைகளே" என்று கூறினார்.

"ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி.."

## பிலிப்பியர்

பவுல் எழுதின பல நிருபங்களில் வேதாகமத்தில் காணப்படும் இப்புத்தகமும் ஒன்று. மக்கெதொனியாவிலுள்ள பிலிப்பு பட்டணத்தில் வாழ்ந்த இயேசுவின் சீஷர்களுக்கு இது அனுப்பப்பட்டது. பவுல் நீண்ட காலமாக பிரயாணம் செய்து கேட்போர்களிடம் இயேசுவைக்குறித்தும், தேவனுடைய வாக்குத்தத்தங்களைக்குறித்தும், அவர் கண்ட அற்புதமான சொப்பனங்களைக்குறித்தும் அவர் விவரித்துக் கொண்டுவந்தார். அந்த சொப்பனத்தில் - "மக்கெதொனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்யும்" என்ற குரலை அவர் கேட்டார் - (அப்போஸ்தலர் 16:9)

ஆகவே, இந்த அழைப்புக்குக் கீழ்ப்படிந்து அப்போஸ்தலனாகிய பவுலும் அவருடைய சீஷர்களும் மக்கெதொனியாவுக்குச் சென்றார்கள். அங்கு பிலிப்பு பட்டணத்தை முதலில் சந்தித்தார்கள். பவுல் கண்ட சொப்பனத்தில், தேவன் இவரை பிலிப்பு பட்டணத்திற்கு அனுப்ப விரும்புகிறார் என்பதை அறிந்துகொண்டார்.

அந்த பட்டணத்திற்கு வந்தபோது, சில நல்ல ஜனங்கள் பட்டணத்திற்கு வெளியே சென்று ஒருமித்து ஜெபிப்பதைக்குறித்து பவுல் அறிந்துகொண்டார். இயேசுவைக்குறித்து பிரசங்கிப்பதற்கு அது சரியான இடமாக இருக்கும் என்று பவுல் அறிந்து அங்குச் சென்றார்.

நற்செய்தியை சந்தோஷமாக ஏற்றுக்கொள்வதற்கு அநேக ஜனங்கள் இருப்பதை பவுல் கண்டார். அதில் அநேகர் இயேசுவை விசுவாசித்து, இயேசுவின் சீஷர்களானார்கள். அதில் லீதியாள் என்ற பெண்மணி சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டாள். அவள் இரத்தாம்பரம் விரிப்புகளை விற்கக்கூடிய ஒரு வியாபாரியாக இருந்தாள் என்று வேதாகமம் கூறுகிறது. (அப்போஸ்தலர் 16:14) ஒருவேளை அவள் இரத்தாம்பர நிறங்களை அல்லது துணிகளை விற்கக்கூடியவளாக இருந்திருக்க வேண்டும். பிலிப்பு பட்டணத்தில், லீதியாளுக்கு ஒரு அருமையான வீடு இருந்தது. அவள் இயேசுவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டபின், பவுலையும் அவரோடுகூட வேலை செய்கிறவர்களையும் தன் வீட்டுக்கு அழைத்தாள். அவளுடைய வீட்டிலும் கூட்டங்கள் நடக்கத் துவங்கியது.

ஆனால், பவுலுக்கு பிலிப்பு பட்டணத்தில் சில கடுமையான பிரச்சனைகள் எழும்பியது. அங்குள்ள மனுஷருக்காக ஒரு ஸ்திரீ குறிசொல்லிக்கொண்டிருந்தாள். பொல்லாத ஆவி அந்த ஸ்திரீயின் மீது இருந்ததாக வேதாகமம் கூறுகிறது. இனி நடக்கக்கூடிய காரியங்களைப்பற்றி ஜனங்கள் அறிவதற்கு இந்த பொல்லாத ஆவி உதவி செய்ததாகவும் சொல்லப்படுகிறது. ஆனால், அந்த ஸ்திரீயின் மீதிருந்த பொல்லாத ஆவி, பவுல், தேவனுடைய உண்மையான ஊழியக்காரன் என்றும், ஜீவனைப் பெறக்கூடிய வழியை இவர் மட்டுமே சொல்லக்கூடும் என்பதையும் அவள் கூறினாள். இது உண்மையாக இருந்தபோதிலும், சத்தியங்களை இவ்வகையில் கூறுவது தவறான காரியம் என்பதை பவுல் அறிந்திருந்தார். ஆகவே, இப்படிப்பட்ட வழியில் வரக்கூடியது, நன்மையல்ல. ஆகவே, அப்போஸ்தலனாகிய பவுல் அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து, அந்த பொல்லாத ஆவியை அந்த ஸ்திரீயை விட்டு புறப்படச் செய்தார்.

அதற்குப் பின், அவளால் குறிசொல்லி பணம் சம்பாதிக்க முடியாமல் போனதினால், அவளை வேலைக்கு வைத்திருந்த மனுஷர்கள் மிகுந்த கோபமடைந்து, "யூதர்களாகிய இந்த மனுஷர் நம்முடைய பட்டணத்தில் கலகம்பண்ணி" (அப்போஸ்தலர் 16:20) என்று பவுலைப்பற்றியும் அவரோடுகூட இருந்த சீலாவைப்பற்றியும் குற்றஞ்சாட்டினார்கள்.

பவுலையும், சீலாவையும்குறித்து அவர்கள் அந்த பட்டணத்து மனுஷரிடம் முறையிட்டபோது இருவரையும் சிறையிலடைத்தார்கள். இன்று நடப்பதுபோல, அந்நாட்களிலும் பவுலும் சீலாவும் கொடூரமாக அடிக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்கள். மேலும், இவர்கள் இருந்த சிறையை "உட்காவலறை" என்று வேதாகமம் அழைக்கிறது. இது பெரும்பாலும் குடோனைப்போன்று இருட்டாக இருந்தது. மேலும், இருவரையும் அந்த இடத்தில் கட்டிவைத்தார்கள். ஆனாலும், அவர்கள் சோர்ந்துபோகவில்லை. அவர்கள் கொடூரமாக அடிக்கப்பட்டதினால் நிச்சயமாக மிகுந்த காயங்களுடன் அங்கு கட்டப்பட்டிருந்தார்கள். அவர்கள் நிச்சயமாக உறங்குவதற்கு வாய்ப்பேயில்லை. ஆனால், இதைக்குறித்து தேவனிடத்தில் முறையிடாமல் தேவனைத் துதித்துப்பாடத் துவங்கினார்கள்.

ஒரு அற்புதமான காரியம் நிகழ்ந்தது.

அந்த சிறைச்சாலையைச் சுற்றி மிகப்பெரிய பூமியதிர்வு ஒன்று ஏற்பட்டதினால், அதின் அஸ்திபாரங்கள் அசைக்கப்பட்டது. அந்த பூமியதிர்வினால் சிறையின் கதவுகள் மாத்திரமல்ல, இவர்கள் கட்டப்பட்ட சங்கிலிகளும் சிதறியது. எவ்வளவு அற்புதமான காரியம்.

சிறையிலுள்ள காவலாளி, இந்த அதிர்வினிமித்தம் மிகவும் பயந்தான். சிறையிலுள்ள கைதிகள் அனைவரும் தப்பிச் சென்றுவிட்டால் அவன் அனைத்திற்கும் பொறுப்பாக பதில் சொல்ல வேண்டும் என்று அஞ்சினான். இந்த பூமியதிர்வு ஏற்பட்டபோது அந்த காவலாளி அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தான். அவன் விழித்துப் பார்க்கும்போது சிறையின் கதவுகள் திறந்திருப்பதைக் கண்டு அனைவரும் தப்பி இருப்பார்கள் என்று எண்ணினான். உடனடியாக அதை உணர்ந்த காவலாளி தன்னைத் தானே மாய்த்துக்கொள்வதற்கு முயற்சித்தான். ஆனால் பவுல், "மிகுந்த சத்தமிட்டு: நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்துகொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கின்றோம் என்று" (அப்போஸ்தலர் 16:28) அவனை அழைத்தார்.

பவுல் மற்றும் சீலா ஓடிவிடாமல் அங்கு தரித்திருந்ததைக் கண்ட சிறைக்காவலாளி மிகவும் ஆச்சரியப்பட்டு அவர்கள் சொல்லக்கூடிய இயேசுவைப்பற்றிய சுவிசேஷத்தைக் கேட்கத் துவங்கினான். அவர்கள் சொல்லிய ஒவ்வொரு காரியங்களையும் முழுமையாக நம்பி அவனும் இயேசுவின் சீஷனானான். அதுமட்டுமல்ல அவனுடைய முழுகுடும்பமும் இயேசுவுக்கு சீஷர்களானார்கள்.

மறுநாள் காலை அந்த பூமியதிர்வுக்குப் பின், பவுல் மற்றும் சீலா சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, அந்த பட்டணத்திலிருந்து வெளியே அனுப்பப்பட்டார்கள். அதற்கு முன் அங்குள்ள சகல சீஷர்களும் லீதியாளின் வீட்டில் கூடிவர ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அங்கு தேவன் அவர்களுக்கு செய்த மாபெரும் அற்புதமான காரியங்களை ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு இருந்தது எவ்வளவு அற்புதமாகவும், இனிமையாகவும் இருந்திருக்கும்.

பிலிப்பு பட்டணத்திலுள்ள சீஷர்களை பவுல் அதிகமாக நேசித்த காரணத்தை நாம் பார்த்தோம். பல வருடங்களுக்குப் பின் அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரி பட்டணத்தில் கைதியாக இருந்தபோது, பிலிப்பு பட்டணத்திலுள்ள தன்னுடைய அன்பான சிநேகிதர்களுக்கு இந்த கடிதம் எழுதினார். அவர்கள் தொடர்ந்து இயேசுவின் சீஷர்களாக ஊழியம் செய்துக்கொண்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அவர்கள் நிச்சயமாக கிறஸ்துவின் ஊழியத்தைத் தொடர்ந்து செய்திருக்க வேண்டும். அதில், "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்" (பிலிப்பியர் 4:4) என்ற ஒரு அருமையான காரியத்தை அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினார்.

## கொலோசெயர்

இது பவுலின் மற்றொரு நிருபம். கொலோசே பட்டணத்தில் வாழ்ந்த சீஷர்களுக்காக பவுல் இந்த நிருபத்தை அனுப்பினார். இந்த பட்டணம், சிறிய ஆசியாவில் இருந்தது. கொலோசே பட்டணத்திலுள்ள சீஷர்களைக்குறித்து வேதாகமம் அதிகப்படியாக எதுவும் கூறுவதில்லை. ஆனால், பவுல் அவர்களுக்காக அருமையான ஒரு கடிதம் எழுதினார். அதில் "பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது" (கொலோசெயர் 3:20) என்ற ஒரு முக்கியமான காரியத்தை அந்த நிருபத்தில்

அப்போஸ்தலர் பவுல் குறிப்பிட்டிருந்தார். நாம் அனைவரும் தேவனை பிரியப்படுத்த விரும்புகிறோமல்லவா!

## தெசலோனிக்கேயர் 1 மற்றும் 2

தெசலோனிக்கேயா பட்டணத்தில் வாழ்ந்த இயேசுவின் சீஷர்களை தெசலோனியர்கள் என்று அழைத்தார்கள். தெசலோனிக்கேயா என்ற நாடு மக்கெதொனியாவிலிருந்தது. புதிய ஏற்பாட்டில் இரண்டு புத்தகங்கள் தெசலோனியாவுக்கு அப்போஸ்தலர் பவுலினால் எழுதப்பட்ட நிருபங்களாக இருக்கிறது. தெசலோனிக்கேயாவில் சுவிசேஷத்தை அப்போஸ்தலனாகிய பவுலே முதன்முதலில் அறிவித்தவர். அதற்குப் பின் இயேசுவின் மற்ற இரண்டு சீஷர்கள் அவரோடுகூட பணி செய்தார்கள். இவர்கள், தீமோத்தேயு மற்றும் சீலா.

அவர்கள் முதலில் அங்கு சென்றபோது, ஒரு யூத ஆலயத்தைக் கண்டார்கள். அங்குள்ள சிலர் இயேசுவைப்பற்றி அறிந்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைந்தார்கள். இந்த யூத விசுவாசிகள்தவிர பல கிரேக்கர்கள் கிறிஸ்துவர்களாக மாறினார்கள். ஆனால், அந்நாட்களில் இயேசுவைக்குறித்து கேள்விப்பட விருப்பமில்லாத அநேகரும் இருந்தார்கள். அவர்களெல்லாம் ஒருமித்துக்கூடி பவுலுக்கு அநேக உபத்திரவங்கள் கொடுப்பதற்கு முயற்சித்தார்கள்.

யாசோன் என்ற ஒரு விசுவாசி இருந்தார். இவர்களை உபத்திரவப்படுத்தக்கூடியவர்கள் பவுலையும் சீலாவையும் தேடி யாசோன் வீட்டிற்குச் சென்றார்கள். ஆனால் அவர்களை கண்டுபிடிக்கமுடியவில்லை. பவுலை கண்டுபிடிப்பதில் அவர்கள் ஏமாற்றமடைந்தாலும், யாசோன் மற்றும் மற்ற சீஷர்களை பட்டணத்து ஆளுநர்களுக்கு முன்பாக நிறுத்தி, அவர்களை தண்டிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் பவுலையும் மற்ற சீஷர்களையும்குறித்து, "உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்" (அப்போஸ்தலர் 17:6) என்று கூறினார்கள்.

ஆயினும், சிறைபிடிக்கப்பட்ட யாசோன் மற்றும் மற்ற சீஷர்களைத் தண்டிக்க வேண்டாம் என்று அந்த பட்டணத்து ஆளுநர்கள் முடிவு செய்தார்கள். ஆனாலும், தெசலோனிக்கேயா பட்டணத்தில் பவுல் தங்கியிருப்பது நலமான காரியம் அல்லவென்று அங்குள்ள சீஷர்கள் யோசித்து அந்த பட்டணத்தை விட்டுப்புறப்படும்படி அந்த இரவு பவுலிடம் ஆலோசனை கூறினார்கள். "உடனே சகோதரர் இராத்திரிகாலத்திலே பவுலையும் சீலாவையும் பெரோயா பட்டணத்துக்கு அனுப்பிவிட்டார்கள்; அவர்கள் அங்கே சேர்ந்து, யூதருடைய ஜெபஆலயத்திற்குப் போனார்கள்"(அப்போஸ்தலர் 17:10). அங்கிருந்து அவர் சென்ற பின் இந்த இரண்டு கடிதங்களையும் எழுதினார்.

தெசலோனிக்கேயாவிலுள்ள கிறிஸ்துவர்கள், அநேக ஜனங்களுக்கு இயேசுவைக்குறித்து பிரசங்கிப்பதற்கு கடுமையான முயற்சிகள் எடுத்துக்கொண்டிருப்பதாக பவுல் கேள்விப்பட்டபோது அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். ஆகவே, தெசலோனிக்கேயா பட்டணத்திற்கு எழுதப்பட்ட இரண்டாம் நிருபத்தில் "சகோதரரே, நீங்கள் நன்மை செய்வதிலே சோர்ந்துபோகாமலிருங்கள்" (2 தெசலோனிக்கேயர் 3:13) என்று அவர் எழுதினார். இது ஒரு நல்ல ஆலோசனை.

## தீமோத்தேயு 1 மற்றும் 2

வேதாகமத்தில் காணப்படும் தீமோத்தேயு புத்தகங்கள், அப்போஸ்தலனாகிய பவுல் இயேசுவின் விசுவாசமுள்ள சீஷனாகிய தீமோத்தேயு என்பவருக்கு எழுதின நிருபங்களாகும். தீமோத்தேயு மற்றும் அவருடைய தாய் இயேசுவைப்பற்றி பவுலிடம் கற்றுக்கொண்டார்கள். தீமோத்தேயு இளைஞனாக இருந்தபோதே இயேசுவுக்கு சீஷரானார். அதற்குப் பின் அப்போஸ்தலனாகிய பவுலோடு சேர்ந்து, பல பிரயாணங்களைப் பயணித்து அவருக்கு உதவியாக இருந்தார். பவுல் இந்த இளைஞனை அதிகமாக நேசித்து தன்னுடைய குமாரன் என்று தீமோத்தேயுவை அழைத்தார். தீமோத்தேயு உண்மையில் பவுலின் குமாரனல்ல. ஆயினும், இயேசுவைப்பற்றி முதல்முதலில் தீமோத்தேயுவுக்கு அறிவித்ததினால் அவரை தன்னுடைய குமாரன் என்று அழைத்தார்.

தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபம் அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியில் ஒரு கைதியாக இருந்தபோது எழுதினது. மேலும், அவர் மரிப்பதற்கு சற்று காலத்திற்கு முன்பாகவே இது எழுதப்பட்டிருந்தது. அந்த கடிதத்தில் கொடூரமான ரோம பேரரசனாகிய நீரோ செய்த கொடுமைகளைக்குறித்து அவர் விவரித்திருக்கிறார். அந்த சோதனையின்போது தன்னோடு எந்த சீஷர்களும் நிற்கவில்லை என்பதை அவர் குறிப்பிட்டார். ஆனால், அவரோடு

லூக்கா மட்டும் இருந்ததாகவும், தேவன் மட்டும் அவருக்கு முழுமையாக உதவி செய்ததாகவும் சிங்கங்களின் வாயிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு வழிவகுத்ததாகவும் கூறுகிறார்.

அந்நாட்களில் பல ரோம கைதிகள் சிங்கங்களினால் கொல்லப்பட்டு, அதற்கு இரையாக்கப்பட்டார்கள். ஆனாலும், தேவன் இப்படிப்பட்ட அனுபவத்திலிருந்து பவுல் தப்பித்துக்கொள்வதற்கு உதவி செய்தார்.

பவுலுக்கு உதவி தேவைப்படும்போது, அன்று பல சீஷர்கள் பவுலை நிராகரித்ததினால், அவர் தீமோத்தேயுவை ரோமாபுரி பட்டணத்திற்கு வந்து தன்னை காணும்படி சொன்னார். பவுல் தீமோத்தேயுவை காண்பதற்கு ஏன் இவ்வளவு ஆர்வமுள்ளவராய் இருந்தார் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆம், தீமோத்தேயு ரோமாபுரி பட்டணத்திற்குச் சென்று அங்கு பவுலை சந்தித்திருப்பார் என்று நாம் நம்புகிறோம்!

## தீத்து

புதிய ஏற்பாட்டில் காணப்படும் இந்த புத்தகம், அப்போஸ்தலர் பவுலினால் எழுதப்பட்ட மற்றொரு நிருபமாகும். இவர் கிறிஸ்துவுக்குள் புறஜாதியான் என்பதால், இந்த பெயர் குறிப்பிடப்படுகிறது. தீத்துவும், பவுலோடு இணைந்து குறிப்பிட்ட காலங்கள் தேவனுக்கு பணி செய்தார். அவர் எருசலேமிலும் எபேசு பட்டணத்திலும் இன்னும் பல இடங்களிலும் பவுலோடு இருந்தார். பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது தீத்து கிரேத்தா தீவில் இருந்தார். அந்த தீவில் வசித்த இயேசுவின் சீஷர்கள் மத்தியில் தேவனுடைய பணியை எவ்வாறு செய்ய வேண்டும் என்று பவுல் இந்த கடிதத்தில் விவரித்தார்.

## பிலேமோன்

பிலேமோன் என்ற சீஷனுடைய நாமம் இந்த புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இயேசுவின் மீது விசுவாசம் வைத்திருந்த இந்த சீஷன், கொலோசே பட்டணத்தில் குடியிருந்தார். பட்டணத்திலுள்ள மற்ற சீஷர்கள் இவருடைய வீட்டில் கூடினார்கள். இந்த பிலோமோன் ஒரு தொழில் அதிபராகவும் இருந்தார். இவருக்குப் பல ஊழியக்காரர்கள் இருந்தார்கள். அந்நாட்களில் அவர்கள் அடிமைகள் என்று அழைக்கப்பட்டார்கள். அதில் ஒரு அடிமையின் பெயர் ஒநேசிமு. இந்த அடிமை, பிலோமோனை விட்டு ஓடினார். அந்நாட்களில் இது ஒரு தவறான வழக்கமாக இருந்தது.

தன்னுடைய எஜமானனாகிய பிலோமோனை விட்டு ஓடிய ஒநேசிமு, ரோமாபுரி பட்டணத்திற்குச் சென்றார். அப்பொழுது பவுல் சிறையில் இருந்தார். பவுல் ஒரு சிறைகைதியாக இருந்தபோதிலும் அவருடைய சொந்த வீட்டில் குடியிருப்பதற்கு அனுமதி பெற்றிருந்தார். அந்த வீட்டிற்கு ஒநேசிமு சென்று அவரை சந்தித்தார். பவுல் அவரிடம் இயேசுவைக்குறித்த நற்செய்திகளைக் கூறினார். இவ்வகையில் பிலோமோனாகிய தன்னுடைய மாஜி எஜமானைப்போல இவரும் இயேசுவின் சீஷரானார்.

இயேசுவின் மீது விசுவாசம்கொள்ளும் சீஷர்கள் அனைவரும் அவருக்கும் விசுவாசிகளானபோது, அவர்கள் செய்த தவறான காரியங்கள் அனைத்தையும் திருத்திக்கொள்ள வேண்டும். அதுபோல ஒநேசிமு, பிலேமோனை விட்டோடி மிகத் தவறான காரியம் செய்திருந்தார். இப்பொழுது இயேசுவின் சீஷராக மாறியபின் அவர் மீண்டும் பழைய எஜமானிடத்திற்குத் திரும்புவது அவருடைய கடமையாக இருந்தது. ஆனாலும், அது ஒரு மிகக் கஷ்டான காரியமும் கூட!

ஆனால், அப்போஸ்தலனாகிய பவுல் ஒநேசிமுவைக்குறித்து பிலேமோனுக்கு ஒரு கடிதம் எழுதினார். முன்னே அடிமையாயிருந்த ஒநேசிமு இயேசுவின் சீஷரானாரென்றும், தான் செய்த செயலுக்கு மனம் வருந்தினவராக அவர் திரும்பிவருவதாகவும் அந்த நிருபத்தில் குறிப்பிட்டார். ஆகவே, இந்த கடிதத்தை ஒநேசிமு பிலோமோனிடத்தில் கொண்டுவரும்போது அவரை தன்னுடைய அடிமையாக அல்ல தன்னுடைய அன்பான சகோதரனாக பாவிக்க வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் பிலேமோனைக் கேட்டுக்கொண்டார். இப்படியாக ஒநேசிமு பவுல் கொடுத்த கடிதத்தை எடுத்துக்கொண்டு பிலேமோனிடத்தில் திரும்பிச் சென்றார் - அதுவே புதிய ஏற்பாட்டின் பிலேமோன் என்று அழைக்கப்படும் புத்தகமாகும்.

## எபிரெயர்

இந்த நிருபமும் அப்போஸ்தலனாகிய பவுலால் எபிரெயருக்கு எழுதப்பட்ட ஒரு நிருபமாக இருக்கிறது. இந்த நிருபம் இஸ்ரேயலர்களாக அல்லது எபிரெயர்களாக பிறந்த கிறிஸ்துவின்

சீஷர்களுக்கு என்று பொருள்படுகிறது. பவுல் ஞானமுள்ள ஒரு மனுஷனாக இருந்தார். எபிரெயர்கள் சில காரியங்களை விசேஷமாக கற்றறிருந்திருக்க வேண்டும் என்பதை அறிந்தவராக அவர்களுக்காக இந்த நிருபத்தை எழுதினார்.

இந்த நிருபம் எபிரெய சீஷர்களுக்காக எழுதப்பட்டிருந்தாலும், இதில் நம் அனைவருக்கும் அருமையான பாடங்கள் உண்டு. இது வேதாகமத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. ஆகவே, வேதாகமத்தை நம்மால் முடிந்தளவுக்கு நாம் படித்துப்பார்க்க வேண்டும். மேலும், இந்த கடிதத்தில் அப்போஸ்தலனாகிய பவுல், "நாம் கேட்டவைகளை விட்டுவிலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்" (எபிரெயர் 2:1) என்று கூறுகிறார்.

## யாக்கோபு

"யாக்கோபு எழுதின பொதுவான நிருபம்" என்பதே இந்த புத்தகத்தின் முழு பெயராகும். யாக்கோபு என்பவர் இயேசுவின் சீஷர்கள் அனைவருக்கும் இந்த நிருபத்தை எழுதியிருக்கிறார். விசேஷமாக இஸ்ரயேலர்களாக இருப்பவர்களுக்கு அவர் எழுதின நிருபமாகும். யாக்கோபு என்பவர் இயேசுவின் மரணத்திற்கு முன்பாகவே அவரைப் பின்பற்றின ஒரு சீஷனாக இருந்தார். அவர் எருசலேமில் வாழ்ந்தபோது இந்த நிருபத்தை எழுதினார். இந்த நிருபத்தில் அநேக நன்மையான காரியங்களைக்குறித்து நாம் வாசிக்கலாம். அதில், "கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும்" (யாக்கோபு 1:19) என்ற ஒரு முக்கியமான காரியத்தை நாம் வாசிக்கலாம். குழந்தைகளுக்கும் மற்ற அனைவருக்கும் இது ஒரு நல்ல ஆலோசனையாகும். மற்ற ஜனங்கள் பேசுவதை நிதானத்தோடும் கவனத்தோடும் கேட்டு நாம் எவ்வாறு அதற்கேற்றவாறு பதிலளிக்க வேண்டும் என்பதை இது கூறுகிறது.

## பேதுரு 1 மற்றும் 2

புதிய ஏற்பாட்டில் காணப்படும் இந்த இரண்டு புத்தகங்களும் அப்போஸ்தலனாகிய பேதுருவினால் எழுதப்பட்ட பொதுவான நிருபங்கள் என்று அழைக்கப்படுகிறது. நாம் ஏற்கெனவே அறிந்திருக்கிறபடி பேதுருவும் இயேசு கிறிஸ்துவின் விசுவாசமுள்ள ஒரு சீஷராக இருந்தார். அவர் இயேசுவின் சீஷராகுவதற்கு முன் ஒரு மீன்பிடிப்பவராக இருந்தார். அவர் மீன்களைப்பிடித்து, அதை விற்று, தன்னுடைய வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருந்தார். இயேசு பேதுருவைக் கண்டு அவரை அழைத்த போது, "என்னை பின்பற்றி வா நான் உன்னை மனுஷரை பிடிப்பவராக்குவேன்" (மத்தேயு 4:19) என்று கூறினார். அதாவது, இயேசு தம்முடைய சீஷர்கள், அவருடைய இராஜ்யத்தின் நற்செய்தியைக்குறித்தும், இவரே "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான்1:29) என்று இயேசுவைக்குறித்தும் மற்றவர்களிடத்தில் அவர்களால் இயன்றமட்டும் பிரசங்கிக்க வேண்டும் என விரும்பினார். பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் நிருபங்கள் எழுதத் துவங்கும்போது, நாம் இன்று நிருபங்களைத் துவங்குவது போல அவர்கள் துவங்கவில்லை. எடுத்துக்காட்டாக, "அன்புள்ள ஐயா" அல்லது "அன்புள்ள திரு. ஜோன்ஸ் அவர்களே,"என்று எழுதவில்லை. அவர்கள் வழக்கமாக, தங்களுடைய சொந்த பெயரைக் குறிப்பிட்டே பொதுவாக நிருபங்கள் எழுதினார்கள். பேதுரு தன்னுடைய முதலாம் நிருபத்தை, "இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு, பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா தேசங்களிலே சிதறியிருக்கிறவர்களில்," என்று ஆரம்பிக்கிறார்.

இந்த கடிதத்தை அவர் அநேக ஜனங்களிடம் அனுப்பினார் அல்லவா? அவர் எழுதின இரண்டு நிருபங்களுமே இன்று வேதாகமத்தில் இடம்பெற்று, உலகெங்கும் உள்ள ஜனங்களால் வாசிக்கப்பட்டும் வருகிறது. இது எவ்வளவு அற்புதமான காரியம்?

## யோவான் 1, 2 மற்றும் 3

இயேசுவின் காரியங்களைக்குறித்தும், அவருடைய பிரசங்கங்களைக்குறித்தும் யோவான் ஒரு சுவிசேஷத்தை எழுதினார் என்பதை நாம் முன்னதாகவே பார்த்தோம். அதற்குக் கூடுதலாக மேலும் இந்த நிருபங்கள் அல்லது கடிதங்களை இயேசுவின் சீஷர்களுக்கு யோவான் எழுதினார். இயேசுவின் வாழ்க்கைக்குரிய பதிவையும், சபைக்கு உண்டான நிருபங்களையும் எழுதின ஒரே சீஷன் இந்த யோவான். தன்னுடைய மூன்று நிருபங்களிலும், நமக்குத் தேவையான மிக முக்கியமான அநேக காரியங்களை எழுதியிருக்கிறார்.

அவர் தன்னுடைய முதல் நிருபத்தில், "என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்: ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" (1 யோவான் 2:1) என்று எழுதினார்.

குழந்தைகள்போல் இராவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் ஒருவரும் பிரவேசிக்க முடியாது என்று இயேசு கூறினார். ஆகவே, வளர்ச்சியடைந்த சீஷர்களில் தேவனுக்குக் கீழ்ப்படிதல் உள்ளவர்களில் தேவன் விரும்பும் காரியங்களைச் செய்ய வேண்டும் என்று ஆர்வம் உள்ளவர்களையும் அவருடைய நிருபத்தில் சிறுபிள்ளைகளே என்று குறிப்பிடுகிறார்.

எல்லா பிள்ளைகளும் தங்களுடைய பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிதல் உள்ளவர்களாகவும், அன்புள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். பெற்றோர்கள் அதிகமாக நேசிக்கும் பிள்ளைகள், பெற்றோர் விரும்பும் காரியங்களை நிச்சயமாக செய்வார்கள். இப்படிப்பட்ட பிள்ளைகளை பெற்றோர்கள் அதிகமாக நேசிப்பார்கள். இப்படியாகவே, இயேசுவை நேசித்த சீஷர்கள், அவர் விரும்பும் காரியத்தைச் செய்தார்கள். யோவான் எழுதின கடைசி நிருபத்தில் அவர் "என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை" (3 யோவான் 4) என்று எழுதினார்.

இந்த நிருபத்தை யோவான் எழுதும்போது, அவர் கிட்டத்தட்ட 60 வயது உள்ளவராக இருந்திருக்க வேண்டும். அவர் இயேசுவுக்கு விசுவாசமுள்ள சீஷராக பல வருஷம் வாழ்ந்தார். இந்த நிருபங்களை வாசிக்கக்கூடியவர்கள் பெரும்பாலும் யோவானைக்காட்டிலும் எளியவர்களாக இருக்க வேண்டும். ஆகவே, யோவான் தம்முடைய நிருபத்தில் குழந்தைகள் என்று சீஷர்களைக் குறிப்பிடுகிறார். நல்ல தகப்பன், பிள்ளைகள் நன்மை செய்யும்போது மகிழ்ச்சியடைவதுபோல, சத்தியத்தில் நடப்பதை யோவான் கூறுகிறார்.

"சத்தியத்தை" கொடுப்பதற்காகவே தேவன் வேதாகமத்தை எழுதினார். இதில் தேவன் அற்புதமான திட்டங்களையும், நாம் செய்ய வேண்டும் என்று விரும்பும் காரியங்களைப்பற்றியும் தெளிவாகக் குறிப்பிடப்படுகிறது. இதை நாம் தேவனுடைய திட்டம் என்று அழைக்கிறோம். தேவன் அவருடைய திட்டத்தில் எழுதி வைத்திருக்கும் காரியங்களை நாம் நிறைவேற்றுவது மிக அவசியமாயிருக்கின்றது. "பிரியமானவனே, நீ தீமையானதைப் பின்பற்றாமல், நன்மையானதைப் பின்பற்று, நன்மைசெய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறான்: தீமைசெய்கிறவன் தேவனைக் காணவில்லை (3 யோவான் 11) என்று யோவான் கூறுகிறார். தேவன் தீமையை வெறுக்கிறார். நாமும் இந்தத் தீமையை வெறுத்து நன்மையை செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். ஆகவே, நன்மையான காரியங்களைமட்டுமே நாம் அனைவரும் செய்வதற்கு முயற்சிக்கலாம்!

## யூதா

"யூதா எழுதின பொதுவான நிருபம்" என்பதே இந்த புத்தகத்தினுடைய பெயராகும். இயேசுவின் சீஷர்கள் அனைவருக்கும் யூதா இந்த நிருபத்தை எழுதினார் என்று சொல்லப்படுகிறது. இந்த நிருபம் மிகப்பெரியதாக இராதபோதிலும் அநேக முக்கியமான காரியங்களை அது கொண்டுள்ளது. தேவன் விரும்பாத காரியங்களைச் செய்த பலரைக்குறித்து யூதா எழுகிறார். மேலும், அவர்கள் எவ்வாறு தண்டிக்கப்படுவார்கள் என்றும் தெளிவாகக் குறிப்பிடுகிறார். அவர் சோதோம் கொமோரா பட்டணங்கள் பற்றியும், அவர்களில் பல ஜனங்கள் துன்மார்க்கமாக இருந்ததினால் அக்கினியால் அவர்கள் அழிக்கப்பட்டதைக்குறித்தும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த பட்டணங்கள் ஆபிரகாம் வாழ்ந்த இடத்திற்கு அருகாமையில் இருந்தபோதிலும் ஆபிரகாம் உயிரோடு இருந்தார். துன்மார்க்கமான ஜனங்களை மரணத்தில் நித்திரையடையச் செய்வது நலமாய் இருக்கும் என்று தேவன் காண்கின்றார். பலநேரங்களில் தேவன் விரும்பாத காரியங்களை ஜனங்கள் செய்துகொண்டு வருகிறார்கள். ஏனெனில், நன்மையான காரியம் என்னவென்று அவர்கள் அறியாதிருக்கிறார்கள். சோதோம் கொமோராவில் வாழ்ந்த ஜனங்களும் அப்படிப்பட்டவர்களாகவே இருந்தார்கள். ஆகவே, கிறிஸ்து இந்த பூமியிலே இராஜாவாக இருக்கும்போது அவர்கள் மீண்டுமாக உயிரோடு எழுப்பப்படுவார்கள்.

அதற்குப் பின் தேவன் விரும்பும் காரியங்கள் செய்வதற்கு அவர்களுக்கு கற்றுக்கொடுக்கப்படும். அந்தமுறையில் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் அவர்கள் மீண்டும் மரிக்கமாட்டார்கள். (எசேக்கியேல் 16:46-63, 18:21-23) நாம் தேவனைப்பற்றியும், அவர் விரும்பும் காரியங்களைப்பற்றியும் அறிந்திருப்பதினால் மிக நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். அவரைப் பிரியப்படுத்தக்கூடிய காரியங்களைமட்டுமே நாம் செய்ய எப்பொழுதும் முயற்சிக்க வேண்டும். இது தேவனுடைய அன்பில் நாம் நிலைத்திருப்பது என்று யூதா அழைக்கிறார்.

## வெளிப்படுத்தல்

இது வேதாகமத்தின் கடைசி புத்தகமாகும். இது அப்போஸ்தலனாகிய யோவானால் எழுதப்பட்டுள்ளது. அவர் எழுதும்படி கற்பிக்கப்பட்டதை மாத்திரம் அவர் எழுதியிருக்கிறார். ஏனெனில், அவருடைய வெளிச்சம் அல்லது சொப்பனத்தில் காண்பிக்கப்பட்ட அற்புதமான காரியங்களை விவரித்திருக்கிறார். மேலும், இந்தக் கதையில் "ஜீவனுக்குரிய விருட்சங்களை யோவான் கண்டிருக்கிறார்." பத்மு தீவில் இருந்த அப்போஸ்தலனாகிய யோவான், சில

தரிசனங்களைக் கண்டார் என்று முன்னதாகவே நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். ஆனால், அந்தக் கதையில் யோவான் கண்ட வெகு சில காரியங்களை மட்டுமே நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்.

இந்த புத்தகத்தின் முதல் வசனமே இதை, "இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தின விசேஷம்" என்று குறிப்பிடுகிறது. ஆண்டவராகிய இயேசுவே யோவான் கண்ட தரிசனத்தில் சகல அற்புதமான காரியங்களையும் காண்பித்து அதை விவரித்திருக்கிறார். இதைக்குறித்து நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. ஏனெனில், இது மிக நீண்டமான கதையாய் இருக்கிறது. ஆயினும், யோவான் எழுதின இந்த புத்தகத்தில் பல மிருகங்களையும் குதிரைகளையும் கண்ணாடிக்கடல்போன்ற காரியங்களையும் அவர் பார்த்ததாக எழுதியிருக்கிறார். மேலும், அசுத்தமான பறவைகள்கொண்ட ஒரு மிகப்பெரிய கூட்டுக்கு ஒப்பாக ஒரு துன்மார்க்கமான பட்டணத்தைக்குறித்தும் நமக்குக் கூறுகிறார் (வெளிப்படுத்தல் 18:2). நீங்கள் வளர்ந்து பெரியவர்களாகும்போது வேதாகமத்தை நீங்களே படித்து, யோவான் தரிசனங்களாகக் கண்ட காரியங்களையும், எடுத்துக்காட்டுகளையும் குறித்து கற்றுக்கொள்ளலாம்.

நான் சொன்ன காரியங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டைக் காணலாம். ஒருவேளை, உபத்திரவங்களை மேகங்களுக்கு ஒப்பிட்டு ஜனங்கள் பேசுவதை நீங்கள் கேட்டிருக்கலாம். அந்த மேகங்களுக்குள் வெள்ளிக் கோடுகள்போல் காணப்படுவதையும் ஜனங்கள் கூறலாம். இவைகளின் பொருள் என்ன? எவ்வளவு துன்பம் வந்தாலும் அதின் வழியாக ஏதோ நன்மைகள் பிறக்கும் என்பதே பொருளாகும். இப்படியாக நம்முடைய உபத்திரவங்களை, இருளான பகுதிகளைமட்டுமே பாராமல், அதன் மறுபகுதியான வெளிச்சமான பகுதிகளையும் பார்த்து அவைகளினால் வரக்கூடிய நன்மைகளைக்குறித்தும் நாம் அறிந்துகொள்ளலாம்.

இப்படிப்பட்ட முறையில் பிதாவாகிய தேவன் வெளிப்படுத்தின இந்த புத்தகத்தின் மூலமாக நம்மிடம் பேசுகிறார். அவர் பல எடுத்துக்காட்டுகளை முன்வைத்து காரியங்களை விவரிக்கிறார். மிருகங்கள், குதிரைகள் இன்னும் பல சித்திரங்களை யோவான் தரிசனத்தில் கண்டார். மேலும், "தேவ ஆட்டுக்குட்டியையும்" பல இடங்களில் யோவான் தம்முடைய தரிசனத்தில் கண்டார். தேவ ஆட்டுக்குட்டி யார் என்பதை நாம் அறிந்திருக்கிறோமல்லவா? ஆம், இயேசுவே அந்த தேவ ஆட்டுக்குட்டி. மேலும், அவர் இந்த மனுக்குலத்திற்காக தன்னை ஜீவபலியாகக் கொடுத்ததினால் அவர் தேவ ஆட்டுக்குட்டி என்று அழைக்கப்படுகிறார்.

யோவான் கண்ட தரிசனத்தில் வேறு மிருகங்களில் ஒன்று தேவ ஆட்டுக்குட்டிக்கு எதிராக யுத்தம் செய்தது. ஆனாலும், தேவ ஆட்டுக்குட்டியே அதை மேற்கொண்டு வெற்றியடைந்ததாகக் கண்டார். இந்த முழு மனுக்குலத்தையும் ஆசீர்வதிப்பதற்காக தேவனுடைய திட்டத்தில் குறுக்கிடும் துன்மார்க்கமான ஜனங்கள் யாரானாலும் சரி அவர்கள் உயிரோடு வெற்றியடையமாட்டார்கள் என்பதை இந்த தரிசனம் பொருள்படுத்துகிறது. இந்த ஆட்டுக்குட்டியாகிய இயேசு முழு உலகத்தின்மேல் இராஜாவாக இருந்து தேவன் சொல்லிய அனைத்து வாக்குத்தத்தங்களையும் உண்மையில் நிறைவேற்றுவார். இதைத் தடுப்பதற்கு ஒருவராலும் கூடாது.

தேவன் இவ்வளவு அற்புதமான வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருப்பதினால் நாம் மகிழ்ச்சியடையலாம். மேலும், இவைகள் உண்மையாக நிறைவேறும் என்பதால் அதிகமான மகிழ்ச்சியடையலாம். ஆம், மேலும் இவைகள் உண்மையில் நிறைவேறும்போது இந்த முழு உலகமும் நித்தியமான மகிழ்ச்சிக்குள் இருப்பார்கள்!

சீயோன் மலையின்மேல் தேவ ஆட்டுக்குட்டி நிற்பதை யோவான் தன்னுடைய தரிசனத்தில் கண்டதாகவும் கூறுகிறார். சீயோன் மலை என்பது இயேசு ஆட்சி செய்யும் அற்புதமான இராஜ்யத்தைக்குறித்த ஒரு சித்திரம் என்று வேதாகமம் தெளிவாக நமக்கு கூறுகின்றது. மேலும், அந்த சீயோன் மலையில் தேவ ஆட்டுக்குட்டியோடு அநேகர் இருந்ததாகவும் யோவான் கண்டார். இவர்கள் அனைவரும் ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றி சீயோன் மலைக்குச் சென்றவர்கள். இவர்கள் யார் என்பதை நாம் நன்கு அறிந்திருக்கிறோமல்லவா? தேவன் விரும்பக்கூடிய சகல காரியங்களையும் செய்யக்கூடிய இயேசுவின் சீஷர்கள். இவர்கள் இயேசுவைப்போலவே இந்த உலகத்தில் வாழ்ந்தவர்கள். ஆகையால், அவரோடுகூட இராஜ்யத்திலும் இருப்பார்கள். அவர்களும் இந்த பூமியை இயேசுவோடுகூட இராஜாக்களாக இருந்து ஆட்சி செய்வார்கள். மரணத்திலிருந்து அவர்கள் எழுப்பப்பட்ட பின் இவைகள் சம்பவிக்கும்.

யோவான் கண்ட தரிசனத்தின் மற்றொருபகுதியில் இந்த பூமியிலுள்ள அனைவரும் பரலோகத்திலுள்ள தேவனையும் ஆட்டுக் குட்டியானவரையும் தொழுது போற்றுவதைக் கண்டார். இந்த உலகத்தில் தேவனைத் துதிக்க வேண்டும் என்று அறியாத அநேக ஜனங்கள் இருக்கின்றார்கள். ஆனால், தேவன் சொல்லிய வாக்குத்தத்தங்கள் அனைத்தும் நிறைவேறும்போது, உலகிலுள்ள அனைவரும் தேவனைக்குறித்தும் அவருடைய

அன்பைக்குறித்தும் அறிந்தவர்களாக முழுமனதோடு அவருக்கு புகழ்ச்சியையும் துதியையும் ஏறெடுப்பார்கள்.

தேவன் நமக்கு இந்த வேதாகமத்தைக் கொடுத்ததற்காகவும், வேதாகமத்தின் வழியாக இவ்வளவு அற்புதமான காரியங்களைக் கூறியிருப்பதற்காகவும் நாம் மகிழ்ச்சியாக இருக்கிறோமல்லவா? வேதாகமத்தில் சொல்லப்பட்ட அனைத்து கதைகளுக்காகவும் நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். மேலும், இந்த ஒவ்வொரு கதைகளிலும் தேவனுடைய அன்பை அதிகமதிகமாக நாம் புரிந்துகொள்கிறோம். அதற்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

நாம் மீண்டும் ஜீவனைப் பெறும்படியாக, இயேசு தம்முடைய ஜீவனை சிலுவையில் கொடுத்து நம்மை இவ்வளவாக நேசித்ததினால் மகிழ்ச்சியாக இருக்கிறோம்.

இனி வரக்கூடிய காலத்தில் யுத்தமுமில்லை, வியாதிகளுமில்லை, மரணமுமில்லை, இயேசு தாமே பூமி முழுவதிலும் இராஜாவாக ஆட்சி செய்வார் என்பதை எண்ணிக்கொண்டு நாம் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

ஆம், இவ்வனைத்து காரியங்களும் தேவனால் வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது. எல்லா வாக்குத்தத்தங்களும் உண்மையாக நிறைவேறும் நாட்களில் இந்த வேதாகமத்தில் நாம் வாசித்த கதைகளிலுள்ள அற்புதமான தேவனுடைய ஜனங்களில் பலரை நம்மால் காண முடியும்.

ஆதாம், ஏவாள், ஆபேல்... இவர்களைக் காண நமக்கு எவ்வளவு ஆச்சரியமாக இருக்கும்!

வெட்டாந்தரையில் மிகப்பெரிய கப்பலைக்கட்டிய நோவாவைப்பார்ப்பதற்கும், அவர் செய்த காரியங்களைக்குறித்தும் அவருடைய வாயின்வழியாக விவரங்களைக் கேட்பதற்கும் எவ்வளவு ஆச்சரியமாக இருக்குமல்லவா!

ஆம், இந்த கதையில் நாம் வாசித்த அனைத்து நபர்களும் மீண்டும் ஜீவனோடு எழுந்திருப்பார்கள். வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டில் நாம் பார்த்த நபர்கள் அனைவரும் இயேசுவோடுகூட இருப்பார்கள். ஆனால், பழைய ஏற்பாட்டில் நாம் கண்ட அற்புதமான ஜனங்கள் அனைவரும், மீண்டும் ஜீவனைப் பெற்று இந்த பூமியின்மேல் இருப்பார்கள்.

மோசே, யோசுவா, சாமுயேல், தானியேல், தாவீது போன்ற தேவனுடைய ஜனங்களை நீங்கள் பார்க்க விரும்புகிறீர்களா?

ஆம், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிஜமாக நிறைவேறும்போது அனைவரையும் நீங்கள் காணலாம்.

****************

For More E books and Tracks
Kindly Contact the email - victorgnanaraj01@gmail.com
Coimbatore Bible Students